இதழ் 13 - 24

ஜனவரி - ஜுன் 1971

1971

தமிழரசு

திங்கள் இருமுறை ஜூன் 16-1971 35 காசு

வலிவும் வனப்பும் வாய்ந்தது

நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது?

TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

தமிழரசு

மலர் 1 : 1971, ஏப்ரல் 16 : இதழ் 20

இந்த இதழில்









நெல்லைக்கு ஏற்ற கண்ணல்லவா
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே
குழந்தைகளைக் காப்போம்
பரிசு பெற்ற பாட்டாளிகள்
தொழில் வளர்ப்போம்
காலை வேலைக்காரன்
கரும்போ கரும்பு
கடலிலே வந்த கல்விக் கூடம்
ஓண்டவந்தவன்
வரி என்றால் என்ன?
காச நோய் நீங்க
பாலாம்பாள் பெற்ற பரிசு
பட்டதாரி உழவரானார்
பாமணி உர ஆலை
காடு வளர்ப்போம்
இளகல் நேடில்
வெண்பாப் போட்டி

முதல்வரின்
இனியவை இருபது
(பயணக் கட்டுரை)

வானொலிப் பேச்சு

தமிழ் நாட்டிற்கு
மாநிலத்
திட்டக் குழு
அமைக்கப்
பட்டுள்ளது.
தமிழ்நாட்டில்
1966-67ல் 0·85 லட்சம்
டன் அளவில் பயன்
படுத்தப்பட்ட உர
வகைகள் 1970-71-ல்
2 லட்சம் டன் அளவில்
உயரும்!
ஆளுநர் உரை தரும்
உரம்
அரசு பாங்க்
கடன் கிடையாது
அரசு பாங்க்
கடன் வழங்கப் படும்..
!!
முன்பு
விவசாயிகளுக்குக்
குறுகிய காலக் கடன்
வசதி ரூ.31·41 கோடி.
இப்பொழுது ரூபாய்
55 கோடி கடனுகத்
தரப்படுகிறது.

வேளாண்மை
வளர்ச்சிப் பணிகளைப்
பரவலாக்குவதற்கு
அரசு தொடர்ந்து
முக்கியத்துவம்
அளித்துவருகிறது.
காட்சிகள்...
காலம்
மாறிப் போச்சு!
அரசாங்கத்தில் கால
தாமதம் என்பது
இப்போதில்லை.
தற்போதைய அலுவலக
நடைமுறைகளும் நிர்வாகப்
பழக்க வழக்கங்களும்
குறைந்த செலவில்
விரைந்து செயலாற்றும்
வகையில் முற்றிலும்
மாற்றியமைக்கப்படும்.
குடிசைப் பகுதி மாற்று
வாரியத்திற்கு
1970-71ல் ரூ.1·5 கோடியும்
1971-72-ல் ரூ 3 கோடி
யுமாக அரசு
ஒதுக்கியுள்ளது.

முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

14. ஓவியத்திற்கு ஒரு 'லூவர் !'

ஜூலைத் திங்கள் எட்டாம் நாள் காலையில் '' வெர்சேல்ஸ்'' அரண்மனையைப் பார்க்கச் சென்றோம். அது இன்று ஓர் தொல் பொருட்களஞ்சியமாகத் திகழ்கிறது. பதினான்காம் லூயி 1661-ஆம் ஆண்டில் கட்டத் துவங்கிய அந்த அற்புத மாளிகை 1783 முதல் அரசர்களின் வாழ்விடமாக இருந்து வந்ததாம். அதன் பல்வேறு அறைகளில் புகுந்து வருவதற்குச் சில மணி நேரம் ஆகும் என்றால், அதன் எழிலை முற்றிலும் உற்று நோக்கி உள்ளம் மகிழ்ந்திடத் தொடங்கினால் மாளிகையைவிட்டு வெளியே வரச் சில நாட்களாவது ஆகும் எனத் தோன்றுகிறது. போர் முனைகளில் பிரான்சு குவித்த பீடுமிக்க வெற்றிகளையும், அந்நாட்டின் வீரப் புதல்வர்கள் ஆற்றிய சாகசங்களையும் ஓர் அறையில் வண்ணச் சித்திரங்களாய் வடித்துக் காட்டியிருக்கின்றனர். அரியணை அறை என்று அழைக்கப்படும் அறையில் காணுமிடமெல்லாம் கண்ணாடிகளாக இருக்கக்கண்டேன். பதினான்காம் லூயியின் படுக்கை அறையாக விளங்கிய அழகு கொஞ்சும் கூடம் ஒன்றும் அதில் உண்டு. வெளியே வண்ண ஊற்றுக்கள் எண்ணத்தில் கிளர்ச்சியை ஊட்டுகின்றன.

ஆடம்பரத்துக்குப் பெயர் போன பதினான்காம் லூயி மன்னன் பணத்தைத் தண்ணீராக இறைத்து அந்த மாபெரும் அரண்மனையை உருவாக்கியிருக்கிறான். மாளிகையின் மாடி முற்றத்தின் பரப்பு 27 ஏக்கர் என்றால் அரண்மனையின் அளவையும் கம்பீரத்தையும் நாம் புரிந்து கொள்ளலாம். அதனை எழுப்ப எவ்வளவு செலவாயிற்று என்பதனை அறிந்தால் மக்கள் எழுச்சியுறக் கூடும் என்று கலக்கமுற்ற அரசன் அது பற்றிய கணக்கு விவரங்களையெல்லாம் எரித்துவிட்டானாம்.

" வெர்சேல்ஸ் " அரண்மனை வரலாற்றுச் சிறப்பு மிக்கது. 1871-ஆம் ஆண்டில் பிரான்சைத் தோற்கடித்த வில்லியம் என்னும் பிரஷ்ஷிய அரசன் இங்குதான் ஜெர்மானிய ஏகாதிபத்தியத்தின் சக்கரவர்த்தியாகத் தன்னை அறிவித்துக் கொண்டான். முதல் உலகப்போரில் ஜெர்மானிய ஆதிக்கத்தை முறியடித்த நேசக் கட்சியைச் சேர்ந்த இருபத்தேழு நாடுகளின் அரசியல் விற்பன்னர்களும் ஜெர்மானிய அதிகாரிகளும் இங்குதான் கூடி ' வெர்சேல்ஸ் உடன்படிக்கை 'யில் கையெழுத்திட்டனர். 1783-ம் ஆண்டு அமெரிக்க உரிமைப் போர் முடிவுற்றபோது உடன்படிக்கை கையெழுத்தானதும் வெர்சேல்ஸ் அரண்மனையில்தான்.

லூவர் — அகிலமெங்கிலும் வேறு ஈடு இணை காணமுடியாத கலைப் பொருட் களஞ்சியம். அள்ள அள்ளக் குறையாத அரியதோர் கலைப்புதையல்— எண்ண எண்ண இனிக்கின்ற வண்ணக் கலைவிருந்து. எழுத்தில் வடிக்க முடியாத எழிலின் தொகுப்பு அது !

கால் கடுக்க நின்று
கண் வலிக்கக் கண்டு
காலமெல்லாம் இங்கேயே
இருந்து

சிற்பத்தேனை, சித்திரத் தெள்ளமுதை . மாந்தி மகிழமாட்டோமா என்று மனத்தினை ஏங்கவைக்கும் மகத்தான கலைக் கருவூலம் !

லூவர் !

ஆம் ! நாற்பத்தொன்பது ஏக்கர் நிலப் பரப்பில் நீண்டும் உயர்ந்தும் அமைந்துள்ள எழிற் கட்டடங்களில் நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட அறைகளிலும், உலகின் கவின்மிக்க மண்டபமான அப்பாலோ மன்றத்திலும், ' கிராண்ட் காலரி ' யிலும் காலத்தால் அழிக்க முடியாத புகழ் படைத்த சிற்பிகளின் சிற்றுளியில் பிறந்த அற்புதச்சிலைகளும், ஓவியர்களின் வண்ணத் தூரிகைகளில் வடிவம் கொண்ட அழகுச் சித்திரங்களும் காணக் கிடக்கின்றன !

உலகெங்கிலுமுள்ள கலை ரசிகர்கள் இந்த உயிரோவியங்களையும் உன்னதச் சிலைகளையும் காண்பதற்கென்றே பாரிஸ் வருகின்றனர்.

முதலாம் பிரான்சிஸ் என்ற பிரெஞ்சு மன்னன் இத்தாலி நாட்டில் போர்க் கைதியாக இருந்தபொழுது, அவன் சிந்தையில் கலைக்கனல் மூண்டது. எடுப்பிலும் எழிலிலும் இத்தாலிய நாட்டு மாளிகைகளையும் விஞ்சிடும் வகையில், தன் தாயகத்தில் கட்டடங்களை எழுப்பி அங்குக் கலைப் பொருட்களைச் சேர்க்க வேண்டும் என்று ஓர் எண்ணம் கொண்டான் அவன். விடுதலை பெற்றதும் தன் ஆசையினை விரைவாக நிறைவேற்றத் தொடங்கினான்.

லூவர் மாளிகை உருவாகியது. பதினாறாம் நூற்றாண்டின் சிறந்த ஓவியனாக விளங்கிய லியானார்டோ டா வின்சியின் ' மோனா லிசா ' என்னும் ஓவியத்தால் மாளிகையை அழகுபடுத்தினான்.

அவள் கண்களில் மிளிர்கின்ற குளுமையை

கடை இதழில் அரும்புகின்ற குறுநகையை

கரங்களில் மின்னுகின்ற உயிர்த் துடிப்பை

உள்ளதை உள்ளவாறு வரைய முயன்று, பின்னாளில் இத்தாலிய ஓவியரெல்லாம் தோற்றுப்போயினராம்.

' மோனா லிசா'வின் வரவுக்குப் பிறகு, தரணியின் தலைசிறந்த கலைப்படைப்புகளும் லூவருக்கு வருகை தந்தன. ஹென்றி, பதினான்காம் லூயி, பதினைந்தாம் லூயி ஆகியோர் மேலும் சிற்பங்களையும் ஓவியங்களையும் பெற்று மாளிகைக்கு எழில் கூட்டினர். நெப்போலியன் தான் வென்ற நாடுகளில் கிடைத்த கலைச் செல்வங்களையெல்லாம் லூவருக்குக்கொணர்ந்தான். அவனுக்குப் பின்னர் வந்த மூன்றாம் நெப்போலியன் லூவரை இணையற்றதோர் கலைப் பொருட் களஞ்சியமாக்கிப் பொது மக்கள் பார்வைக்கு அனுமதித்தான்.

அழகுத் தேவதை வீனஸ் சிலை ஈராயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் வழங்கப்பட்டது சிதைந்த நிலையிலும் சிற்பக் கலையின் சிறப்பையெல்லாம் கூறிக்கொண்டு நிற்கிறது.

' சாமத் ரேஸ் வெற்றி 'யைக் குறிக்கும் வெற்றித் தேவியின் சிலையும் அங்கு வைக்கப்பட்டுள்ளது. சிறகுகளைப் பெற்றுள்ள அவள் கடற்கரை ஓரம் நிற்கிறாள். அவள் உடை கடற்காற்றில் பறக்கிறது. சிலையைச் சற்று உற்று நோக்கும் பொழுது நாமும் கடலோரம் நிற்கின்றோமோ என்னும் உணர்வு ஏற்படுகிறது ! அத்தனை உயிர்ப்புத் துள்ளுகிறது அந்தச்சிலையில்!

கட்டழகன் ஒருவன் ! வலிவான உறுப்புகள் ! ஆனால் அவன் ஓர் அடிமை ! அடிமைத் தளையை அறுத்திட வேண்டும் என்ற உறுதி, அந்த எண்ணத்தில் ஏற்படும் வேதனை, எல்லாவற்றையும் கடந்து நிற்கும் சக்தி, அடிமைத் தளையை அறுத்தெறியும் பணியில் தனக்கு உதவாதா என்னும் ஏக்கம் எல்லாம் மிளிர அந்தச் சிலையை எழுப்பியிருக்கிறான், மைக்கேல் ஏஞ்சலோ !

'' விளக்கின் ஒளியில் அமர்ந்திருக்கும் அழகி ''—

'' இரு குழந்தைகளுடன் தாய் ''—

'' இளமைப் பொழுதில் மார்கரீடா''

என்று வரிசை வரிசையாக வாழ்க்கையின் துடிப்புகளை எல்லாம் வண்ணக் களஞ்சியங்களாக வடித்து வைத்துள்ளனர்.

வரலாற்றால் கணிக்க இயலாத காலப் பகுதியிலிருந்து இற்றைநாள்வரை கலைத்துறையில்தோன்றியுள்ள சாதனைகளையெல்லாம் வெவ்வேறு காலப் பகுதிகளாகப் பிரித்து விளக்குகிறது லூவர் கலைக் களஞ்சியம் !

எகிப்து, அசீரியன், சுமேரியன், கிரீசு, ரோம், பிரான்சு என்று பல்வேறு வகையானவையும், பல நாடுகளில் முகிழ்த்தவையுமான சிற்ப ஓவிய முறைகளை ஒருங்கே காணமுடிகிறது லூவரில் !

லூவர் ஒரு கலைச் சோலை ! அங்கு பழுத்துத் தொங்கிடும் சிற்பக் கனிகள் மூவாயிரம் !

பூத்துக் குலுங்கிடும் சித்திர மலர்கள் ஐயாயிரம் !

பார்க்குமிடமெல்லாம் தெரிகின்ற கலைப்பொருட்கள் என்னும் பசுந்தளிர்கள் இரண்டு இலட்சம்!

ராபேல், லியானார்டோ டாவின்சி, மைக்கேல் ஏஞ்சலோ, ரெம்ப்ராண்ட், திதியன் போன்ற

எண்ணற்ற கலைஞர்களின் சீரிய படைப்புகளைத் தாங்கிக் கொண்டு, "காலம் மாறினாலும் கலைஞன் புகழ் அழிவதில்லை" என்னும் மறையாத உண்மையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது லூவர்.

ஆயிரத்துத் தொண்ணூற்று இரண்டு அடி உயரத்தில் பாரிசிற்கு எழில்கூட்டிக் கம்பீரமாக நிற்பது ஐஃபல் டவர். சைன் நதிக்கரையில் நிற்கும் இந்த உருக்குக் கோபுரம், 1889-ஆம் ஆண்டு பாரிசில் நடந்த உலகக் கண்காட்சிக்காக குஸ்டாவ் ஐஃபல் என்பவரால் கட்டப்பட்டது. இரண்டரை ஏக்கர் பரப்பில் இது எழுப்பப்பட்டிருக்கிறது. இதன்மேல்தளங்களுக்குப்போகப் பெரிய "லிஃப்ட்கள்" இருக்கின்றன. இந்த உருக்குக் கோபுரத்தின் மேல்தளத்திலிருந்து பார்த்தால் பாரீஸ் நகரின் எழில் தோற்றம் தெரிகிறது. ஐஃபல் டவரைப் பார்ப்பதற்கென்றே பல நாடுகளிலிருந்து பயணிகள் பாரிசுக்கு வருகின்றனர். இதில் கலையழகு இல்லையெனினும் இதனை ஓர் பெரும் பொறியியல் சாதனையாகக் கொள்ளலாம்.

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்தவர்களும், பொறியியல் பயில்பவர்களுமான ஓர் மாணவனும் மாணவியும் ஐஃபல் டவரில் என்னிடம் உரையாடினர். என்னுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டு தங்கள் முகவரியினையும் அறிவித்து விட்டுச் சென்றனர். அந்தப் புகைப்படத்தை எடுக்க ஆன செலவு பத்து பிராங்க் தான். ஆனால் அதில் என்னுடன் நின்ற அந்த அன்புள்ளங்களின் மதிப்பு விலையற்றது.

அன்னம் போன்று அழகிய படகுகள் பல, மாலைக் கதிரவனின் பொன்னொளியில் ஆடவரும் பெண்டிரும் சிறுவர்களுமாக ஆனந்தத்தில் திளைக்கும் மனிதர்களை ஏற்றிக் கொண்டு சைன் நதியில் மிதந்து கொண்டிருந்தன.

மார்ட்டர் என்ற குன்றில் ஏறி 'ஒளி நகர்' என வழங்கப்படும் பாரிசின் ஒப்பற்ற எழிலைக் காணமுடிகிறது. ஆங்கு ஓர் அழகான மாதா கோவில் இருக்கிறது. முன்னாளில், கலைஞர்களும் கவிஞர்களும் கூடி வாழும் இடமாக இருந்த அந்த இடத்தில் கலைமணத்தை இன்னும் நுகர முடிகிறது.

மாதா கோவிலைச் சுற்றிலும் பல்வேறு ஓவியர்கள் சித்திரங்களைத் தீட்டிக் கொண்டிருக்கின்றனர். காகிதத்தில் உருவங்களை உடனே கத்தரித்துக்கொடுக்கும் அதிசயக் கலையில் கைதேர்ந்தவர்கள் அங்கு பலர் இருக்கின்றனர்.

மேலை நாடுகளில் இந்திய நாட்டு உணவு வகைகள் கிடைப்பதென்பதரிது. ஆனால் பாரிசில் "அன்னபூரணா" என்ற ஓர் உணவு விடுதியுள்ளது. பிரெஞ்சுப் பெண்கள் நடத்தும் இந்த விடுதியின் உரிமையாளர் இந்தியாவிற்கு வந்து இந்திய உணவினைச் சுவைத்து அதன் அறுசுவைக்கு அடிமையானவர்.

அந்த விடுதியில் பணியாற்றும் பெண்கள் தமிழ்நாட்டுப்பாணியில் சேலையணிந்துகொண்டிருக்கின்றனர். ஆனால் அங்கு உணவருந்தச் செல்பவர் அத்தனை பேரும் மேல்நாட்டுப் பாணியில் அணிந்துள்ளவர்களே! இரு வேறு பண்பாடுகளுக்கிடையே இப்படி ஓர் ஒருமைப்பாடு.

பாரிசில் உள்ள தொழில் அதிபர்கள் தங்களுடைய மன்ற அலுவலகத்திற்கு என்னை அழைத்து இந்தியத் தொழில் வளர்ச்சிபற்றி விவாதித்தனர். அவர்களின் வாணிப மன்றம் ஒரு வரவேற்பு அளித்தது. வரவேற்றுப் பேசிய மன்றத் தலைவர் திரு. ஈ. மெயோல், இந்தியாவில் தொழில் துவங்குவதற்கான ஆக்கக் கூறுகளைப் பற்றிய ஆராய்ச்சி நடத்தப் பிரெஞ்சுக் குழு ஒன்று இந்தியாவிற்கு விரைவில் வர இருக்கிறது என்று கூறினார். இந்தியத் துணைக் கண்டத்திற்கும் பிரான்சிற்கும் உள்ள இடையறாத தொடர்பினையும் அவர் விளக்கினார். நம்முடன் கூட்டுச் சேர்ந்து தொழில் துவங்கவும், முதலீடு செய்யவும் நமக்குத் தொழில் நுணுக்க உதவியினை வழங்கவும் அவர்கள் பேராவல் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நன்றி தெரிவித்து நான் பேசுகையில், பாண்டிச்சேரி, காரைக்கால் ஆகிய நகரங்கள் மூலம் பெறப்பட்ட பிரான்சின் பெருமை மிகு பண்பாடு இன்றும் நம்மால் பேணி வளர்க்கப்படுவதைச் சுட்டிக்காட்டினேன். தமிழகத்தில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலையில் பிரான்சுக்கு உள்ள பங்கினைக் குறிப்பிட்டு, சேலத்தில் உருக்காலை சிறப்புறவும் அவர்கள் உதவியை வேண்டினேன். உருக்கு சம்பந்தமாக மற்றைய தொழில்களை அங்குத் துவங்க உள்ள வாய்ப்புகளையும் விளக்கினேன். மேலும், தமிழகத்தில், பெட்ரோ கெமிக்கல் தொழில்களையும், உப்பு சம்பந்தமுள்ள தொழில்களையும் துவக்க உள்ள வாய்ப்புகளையும் வெளிநாடுகளின் கூட்டுறவோடு வேறு பல்விதமான தொழில்களைப் புரியவும், தமிழகத்தில் காணுகின்ற நல்வாய்ப்புகளையும் விவரித்தேன். நாட்டின் கனிவளம் நன்கு பயன்படுத்தப்படவும், அதன் மூலம் செல்வம் பெருகிப் பல்லோருக்கும் வேலைகள் கிடைத்து வறுமை தொலைவதோடு, பிரான்சு—இந்திய நட்புறவு செழிப்பதற்கும் பிரான்சுத் தொழிலதிபர்கள் உதவ வேண்டுமென்றும் கூறினேன். பிரெஞ்சுக் குழுவினர் இந்தியாவிற்கு வரும்பொழுது தமிழ் நாட்டிலுள்ள தொழில் துறைத் தேவைகளைப் பற்றி விரிவாகப் பேச விரும்புவதாகவும் குழுவினர் கோருகின்ற ஒத்துழைப்பினை இயலும் வகையெல்லாம் தர இருப்பதாகவும் அறிவித்தேன்.

லியானார்டோ டாவின்சியின் கரங்களால் தீட்டப்பட்ட "மோனா லிசா"வின் உருவப்படம்

பாரிசில் இருந்தபொழுது பிரான்சு நாட்டு நுண்கலைக் க்லாச்சார அமைச்சர் திரு. எட்மண்ட் மிஷ்லே அவர்களை இராயல் அரண்மனையில் சந்தித்து முப்பது நிமிட நேரம் உரையாடினேன். "தலை சிறந்த எழுத்தாளரும், பேச்சாளரும், கவிஞரும், அரசியல் வாதியுமாகிய உங்களை வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்" என்று அகம் மகிழக் குறிப்பிட்டார். பிரான்சு நாட்டு டிப்ளமோக்களை இந்தியப் பல்கலைக் கழகங்கள் அங்கீகரிப்பதற்காக இரு நாடுகளுக்கிடையே ஓர் உடன்பாட்டை உருவாக்க நான் இந்திய அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். என்னால் ஆன ஒத்துழைப்பினைத் தருவதாகச் சொன்னேன். இந்தியா, பிரான்சு ஆகிய இரு பெரும் நாடுகளுக்கிடையே உள்ள பண்பாடுகளை விளக்கிய அவர், மற்றுமொரு முறை பிரான்சுக்கு வந்து அதிக நாட்கள் தங்கி, பிரான்சின் கலை அழகு பரிமளிக்கும் பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளவேண்டுமென்று விரும்பினார்.

ஆர்வமும் அன்பும் மிளிர உரையாடிய அவருக்கு நன்றி தெரிவித்த நான், பிரெஞ்சுக் காலனிகளின் மூலமாக இரு நாடுகளுக்குமிடையே உள்ள பண்பாட்டு உறவு, பலப்பட்டிருப்பதையும் அதனைப் பாதுகாப்பதை நாம் பெரும் பேறாகக் கருதுவதையும் குறிப்பிட்டேன்.

ரோம் முதல் பாரிஸ் வரை நான் சந்தித்து உரையாடிய அன்புமிக்க உள்ளங்களையெல்லாம் எண்ணும்பொழுது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழ் மூதுரை என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. அன்பு என்பது இனம், மொழி, உறவு இவைகளுக்கப்பாற்பட்டதல்லவா!

அந்த நினைவுக்கு உரமூட்டுவதுபோல் பாரிசில் உள்ள ஐக்கிய நாடுகள் சங்கத்தில்

யுனெஸ்கோ தலைமையகத்தில் தலைமை இயக்குநர், டாக்டர் ஆதிசேஷையா வரவேற்பு ஒன்று அளித்தார். இந்தியத் தூதுவர், யுனெஸ்கோவிலுள்ள பிரெஞ்சுத் தூதுவர் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் பலர் வருகை தந்தனர்.

அவர்களுக்கிடையில், திரு. ஆதிசேஷையா என்னைப் பற்றிக் குறிப்பிட்ட புகழுரைகளையெல்லாம் தமிழன் ஒருவனுக்குத் தந்த மதிப்பாகவே ஏற்றுக்கொண்டு நெஞ்சில் புரண்ட கூச்ச அலைகளைச் சமன்படுத்தினேன்.

யுனெஸ்கோவின் சார்பில் தமிழகத்தில் ஒன்பது திட்டங்கள் செயல்படுகின்றன. தென்னக நூல் வெளியீட்டு டிரஸ்டின் குழந்தைகளுக்கான புத்தகவெளியீடு, விஞ்ஞானக் கருவிகள் வழங்கல், கிண்டி பொறியியற் கல்லூரியில் கட்டடக் கலை ஆராய்ச்சிக்கு உதவி, காஞ்சிபுரம், திருவரங்கம், இராமேசுவரம் ஆகிய கோயில்களைப் புதுப்பித்தல் ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை. யுனெஸ்கோ இவைகள் பற்றி எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகளை திரு. ஆதிசேஷையா அவர்கள் தெளிவாக விளக்கினார்கள். கட்டடக் கலையின் அற்புத விளக்கங்களாகவும் பண்பாட்டின் சின்னங்களாகவும் தமிழகப் பழைய கோயில்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் அதன்மூலம் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதன் முறை பற்றியும் அவர் விரித்துரைத்தார். அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம் தமிழகத்தில் நிறுவப்படுவது பற்றி விளக்கிப் பேசினார்.

அதற்குப் பதிலளிக்கையில், தஞ்சையிலும் கங்கைகொண்ட சோழபுரத்திலும் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க கோயில்களையும் தமிழ்க் கலையின் சின்னங்களாகப் பாதுகாக்க யுனெஸ்கோ முன்வரவேண்டும் என்ற விருப்பத்தினைத் தெரிவித்தேன்.

உலகத்து நாடுகளில் பண்பாடுகள் பாதுகாக்கப்படவும், பல்வேறு நாடுகளுக்கிடையில் பண்பாட்டுப் பரிவர்த்தனையை ஏற்படுத்தும் யுனெஸ்கோ தலைமையகத்தில் சுமார் மூன்று மணி நேரங்கள் மிக்கப் பயனுள்ள முறையில் கழிந்தன.

திரு. ஆதிசேஷையா யுனெஸ்கோ பதக்கம் ஒன்றை எனக்கு வழங்கினார்.

சாதி வெறி, இனவெறி, ஆதிக்க வெறி இவற்றை விடுத்துப் பண்பாடுகள் மூலம் தொடர்பு கொண்டு, மனிதர்கள் தோளோடு தோள் நின்று உழைத்தால் உலகம், எத்தனை உயர்வு பெறும் என்று நினைத்துக் கொண்டே யுனெஸ்கோ தலைமையகத்தைவிட்டு வெளியேறினேன்.

மேலை நாடுகளிலும் கீழ்த்திசையில் முன்னேற்றமடைந்த சில நாடுகளின் முக்கிய நகரங்களிலும் வேகமாகப் பரவிவரும் வழக்கம் ஒன்று உண்டு.



புகழ்பெற்ற ஐஃபல் கோபுரம்.

தாங்கள் ஈட்டிய செல்வத்தின் கணிசமான பகுதியைச் செலவழித்து இன்பத்தைத் தேடுகின்றனர். கேளிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அதற்காகப் பல மணி நேரம் இரவுக் கேளிக்கை விடுதிகளில் கண்விழிப்பது அவர்களுக்குப் பழக்கமாகி விட்டிருக்கிறது.

பாரின் பலமுனைகளிலிருந்து பாரிஸ் வரும் பலதிறத்து மாந்தர், லீடோ, மாலின்ரூஷ் போன்ற உலகப் புகழ் பெற்ற விடுதிகளில் நாடகம், நடனம் என்று கலைத் தேனை உண்டு களிக்கின்றனர்.

(தொடரும்)

"நிலச்சீர்திருத்தத்தில் புரட்சிகரமான சீர்திருத்தங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கூறப்பட்டது; நிலமற்றஉழவர்களுக்கு உழுவதற்கு 50 சென்ட் நிலமும்—வீடு கட்டுவதற்கு 10 சென்ட் வீட்டுமனையும் வழங்கத் தமிழ்நாடு அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளும்."

—சட்டமன்றத்தில் முதல்வர்



உணவு உற்பத்தியைப் பெருக்கவும், உழவர் பெருமக்களின் வாழ்வை வளமாக்கவும் அயராது உழைத்து வரும் தமிழ் நாடு அரசு, 'கருணை', 'காஞ்சி', 'காவேரி' ஆகிய புதிய உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளை வெளியிட்டது.

என்ன மகசூல் கிடைக்குமோ என்று ஏங்கிக் கொண்டிருந்த உழவர் பெருமக்கள், களத்திலே 'கருணை' கொடுத்த கண்டுமுதல் கண்டு களிப்பெய்திக் 'கருணை' வுக்கு நிகர் 'கருணை'வே என்று தீர்ப்பளித்துவிட்டனர். 'காஞ்சி' யும் 'காவேரி'யும் அதிக மகசூலை அளித்து, உழவர்களின் வருவாயைப் பெருக்கியதுடன் உவகையையும், கூட்டியுள்ளன. அவைகளைப் பின் தொடர்ந்து 'பெண்ணை'யும் வந்துவிட்டாள்! ஆமாம், 'பெண்ணை' என்ற புதிய நெல் வகையைத் தமிழ் நாடு அரசு அண்மையில் வெளியிட்டுள்ளது. 'பெண்ணை' பிறந்த இடத்தின் (நெல்லை மாவட்டத்தின்) புகழைப் பரப்பப் போகும் நல்ல பெண்ணாக இருப்பாள் என்பது திண்ணம்!

தாம்பிரபரணிப்பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளிலும் அம்பை-1 (ஏ.எஸ்.டி. 1) என்ற நெல் ரகத்தை உழவர்கள் பெரிதும் விரும்பிப் பயிரிட்டு வந்தனர். ஆனால் அந்த ரகத்திற்கு அதிக அளவு உரத்தை ஏற்று அதற்கேற்ப மகசூலைப் பெருக்கிக் கொடுக்கும் ஆற்றல் இல்லை. அத்துடன் அந்த ரகத்தில் நெல் மணிகள் உதிர்ந்து விடுவதால், சேதமும் ஏற்பட்டு வந்தது. இவ்விரு குறையும் இல்லாத ஒரு புதிய உயர் விளைச்சல் ரக நெல் கிடைக்காதா என நெல்லை மாவட்ட உழவர் பெருமக்கள் ஏங்கினர்.

தமிழ் நாடு அரசு வேளாண்மைத் துறையின் ஆராய்ச்சியாளர்கள் அம்பை-1 என்ற ரகத்தையும், வெளிநாட்டிலிருந்து நம் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட தைச்சுங் நேடிவ்-1 (டி.என். 1) என்ற ரகத்தையும் ஒட்டுச் சேர்த்து ஒரு புதிய ரகத்தை உருவாக்கினர். அப்புதிய ரகம் அதிக உரம் ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப அதிக மகசூல் அளிக்கும் ஆற்றல், அதிகமாகத் தூர் கிளைக்கும் தன்மை, பயிர்சாயாத தன்மை ஆகிய பண்புகளைக் கொண்டிருந்தது. அம்பை-1 ரகத்தைவிடத் தரமான அரிசியைக் கொண்டுள்ளது, அப்புதிய ரகத்தின் மற்றுமொரு சிறப்பாகும். எனவே அப்புதிய ரகத்திற்குப் 'பெண்ணை' (ஏ.எஸ்.டி. 14) என்ற பெயரிடப்பட்டுள்ளது.

'பெண்ணை' நெல்லின் முக்கிய சிறப்பியல்புகள்.

1. அம்பை-1 என்ற ரகம் 135 செண்டிமீட்டர் உயரம் வரை வளர்ந்து சாய்ந்து விழுந்துவிடக்கூடியது. ஆனால் 'பெண்ணை' 77·9 செண்டிமீட்டர் உயரமே வளரக் கூடியது.

2. அம்பை-1 ரகத்தில் சராசரியாக 12·8 தூர்கள் கிளைத்தால், 'பெண்ணை'யில் சராசரியாக 16·2 தூர்கள் கிளைக்கும் ஆற்றல் உள்ளது.

3. அம்பை-1 ரகம் சராசரியாக ஹெக்டருக்கு (2·47ஏக்கர்) 5,872 கிலோ மகசூலே கொடுக்கிறது. ஆனால் 'பெண்ணை' என்ற புதிய ரகம் சராசரியாக ஹெக்டருக்கு 6,845 கிலோ மகசூல் அளிக்கும் சக்தியுள்ளது.

இத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்ட 'பெண்ணை' என்ற புதிய நெல் ரகத்தைத் திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. தற்பொழுது ஏறத்தாழ 2 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படும் அம்பை-1, கட்டிச் சம்பா முதலிய ரகங்களுக்குப் பதிலாகப் 'பெண்ணை' என்ற புதிய நெல் ரகத்தைப் பயிரிட்டால் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதுடன் அந்த மாவட்ட உழவர் பெருமக்களின் வாழ்வையும் வளப்படுத்திட இயலும்.

'பெண்ணை'யின் சாகுபடிக் குறிப்புகள்.

வயது—110 முதல் 115 நாட்கள்.

பருவம்—அம்பை-1 பயிரிடும் பருவத்திலும், கட்டிச் சம்பா பயிரிடப்படும் பருவத்திலும் 'பெண்ணை'யைத் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பயிரிடலாம்.

விதையளவு—ஒரு ஏக்கர் நடவு செய்ய 15 கிலோ விதையை நாற்று விடவேண்டும்.

விதையுடன் மருந்து கலக்குதல்—ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான் அல்லது செரசான் மருந்து வீதம் கலந்து விதைக்கவேண்டும்.

நாற்றங்கால்—1. ஒரு ஏக்கர் நடவு செய்ய வேண்டுமானால் 10 சென்ட் நிலப்பரப்பில் நாற்று விட வேண்டும்.

2. பத்து சென்ட் நாற்றங்காலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது பண்படுத்தி, 2 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது ஒரு வண்டி பசுந்தாள் அல்லது தழை எரு இட வேண்டும்.

3. அதன்பின் 10 சென்ட் நாற்றங்காலையும் ஒவ்வொரு சென்ட் பரப்புள்ள (54 அடி நீளம் × 8 அடி அகலம்) 10 பாத்திகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

4. பாத்திகளை மேட்டுப் பாத்திகளாக (Raised beds) அமைக்க வேண்டும்.

5. முளைவிட்ட விதைகளை ஒவ்வொரு பாத்தியிலும் 1½ கிலோ வீதம் விதைக்கவும்.

நடவு வயல் தயாரித்தல்

1. நடவு வயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்கவும்.

2. நடவு வயலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது 5 வண்டி பசுந்தாள் எரு அல்லது பசுந்தழை எரு வீதம் இடவேண்டும்.

3. பர்மிய செட்டூன் அல்லது தழை மிதிக்கும் கருவியைப் பயன்படுத்தித், தழைகளைச் சேற்றில் அழுத்திவிட வேண்டும்.

4. நிலத்தை உழுவதற்குக் கூண்டுச் சக்கரம் (கேஜ் வீல்) இணைக்கப்பட்ட டிராக்டர் பயன்படுத்தப்பட்டால் நிலத்தில் குறுக்கும் நெடுக்குமாக இருமுறை உழுது, பின்னர் பரம்புப் பலகையால் நிலத்தினைச் சமப்படுத்த வேண்டும்.

உரமும், உரமிடுதலும்

1. 'பெண்ணை' ரகம் பயிரிட ஏக்கருக்கு 75கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச்சத்து, 35 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை இட வேண்டும்.

2. மேற்கூறிய சத்துக்களில் 45 கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். மீதமுள்ள 30 கிலோ தழைச் சத்தை மேலுரமாக இட வேண்டும்.

3. கடைசி உழவில் 35 கிலோ மணிச்சத்து அளிக்க 220 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தையும், 35 கிலோ சாம்பல் சத்து அளிக்க 60 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் இட்டு மண்ணுடன் கலக்குமாறு செய்ய வேண்டும்.

4. நாற்று நடுவதற்கு முன்பு 45 கிலோ தழைச்சத்து அளிக்க 225 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 100 கிலோ யூரியாவை இடவேண்டும்.

5. நாற்று நட்ட 30-வது நாளில் 30 கிலோ தழைச்சத்து அளிக்க 150 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 65 கிலோ யூரியாவை மேலுரமாகப் பயிர்களின் வரிசைகளுக்கு இடையில் இட வேண்டும்.

நாற்றின் வயது

நாற்று விட்ட 20 முதல் 22 நாட்களுக்குள் நாற்றைப் பறித்து நட்டுவிட வேண்டும்.

நடவு செய்தல்:

நாற்றுகளை வயலில் வரிசைக்கு வரிசை 20 செண்டிமீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 10 செண்டிமீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டுக் குழிக்கு 2 அல்லது 3 பயிர் வீதம் வைத்து நடவு செய்ய வேண்டும்;

களை எடுத்தல்

நாற்று நட்ட 15-வது நாள் முதல் முறையும், 30-வது நாள் இரண்டாம் முறையும் சுழலும் களை எடுக்கும் கருவியால் (Rotary Hoe) மண்ணைக் கிளறி விட்டுக் களை எடுக்கவும்.

பயிர்ப் பாதுகாப்பு

1. நாற்றுப்பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக பாரத்தியான் 0.05 சதம் (100 மில்லி லிட்டர் பாரத்தியானை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) மருந்தையும், டைத்தியோகார்பமேட்



மருந்தையும் [சைரம் 0.1 சதம் (112 கிராம் சைரம் மருந்தை 112 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது சினப் 0.2 சதம் (224 கிராம் சினப் மருந்தை 112 லிட்டர் தண்ணீரில் கலந்து)] தெளிக்கவும்.

2. நாற்று நட்ட 15-ஆம் நாளி லிருந்து, 15 நாட்களுக்கு ஒரு முறையாகக் கதிர் விடும் வரை மேற்கூறிய மருந்துகளைத் தெளிக் கவும்.

3. பூவில் பால் பிடிக்கும் சமயத்தில் பி.எச்.சி. 10 சதத்தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவவும்.

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்குவதுடன், உங்கள் வருவாயைப் பெருக்கி வாழ்வை வளப்படுத்திக் கொள்ளுங்கள் என்று திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்ட உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் நாட்டில் தங்கம்



சேலம் மாவட்டம், ராசிபுரம் வட்டத்தில் தங்கத் துகள் முதன் முதலாக 1946-ல் கண்டறியப்பட்டது. சிங்கிலியான்கோம்பை, ஈஸ்வர மூர்த்தி பாளையம் பகுதிகளை அடுத்த குன்றுகளிலிருந்து வரும் ஓடைகளின் மணற்பாங்கில் தங்கத் துகள் இருப்பது தெரிய வந்தது. அப்பகுதி மக்களுக்குச் சிறு அளவில் தங்கத் துகள் இருப்பது வெகுகாலமாகவே தெரியும். தங்கத் துகள் கலந்த மணல் கலவையிலிருந்து தங்கத்தைப் பிரித்தெடுக்கப் பல நூற்றாண்டுகளாகவே முயன்று வந்திருக்கிறார்கள். தொழிலாளர்கள், விவசாயப் பருவ வேலை இல்லாத போது, குறிப்பாக பலத்த மழை பெய்த பின்னர், இம் மணலை அளைந்து காய்ச்சுகிறார்கள். அரசாங்கப் புவியியல் பிரிவினர் சில இடங்களில் சோதனை முறைகளை மேற்கொண்டனர்.

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 135 கிலோ மணலிலிருந்து 0.086 கிராம் தங்கம் கிடைத்தது. மற்றோர் இடத்தில் 72 கிலோ மணலைக் காய்ச்சியதில் 0.09 கிராம் தங்கம் கிடைத்தது. இந்தத் தங்கத் துகள்களுக்கு மூலமாக உள்ள தங்கப் படிவங்கள் இருக்கும் பகுதிகளைக் கண்டறிய வேண்டியுள்ளது.



சொல்லவும் பெரிதே!

தஞ்சை மாவட்டம் கோட்டூர் வட்டாரத்தில், கடந்த மார்ச் 21 முதல் 24ஆம் தேதி வரை பல கிராமங்களில் பல்வேறு சீரணிப் பணி வேலைகள் நடைபெற்றன. எளவனூர் ஊராட்சியில் கன்னியாகுறிச்சி கிராமத்திலிருந்து எளவனூர் சிரோத்திரியம் வரை 5·6 கி.மீ.. நீளமுள்ள சாலையை அமைக்கும் வேலையில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான பொது மக்களும், தொண்டர்களும் கலந்து கொண்டு தங்களது உடல் உழைப்பினை நல்கினார்கள். இப்பணியின் மூலம் 21ஆம் தேதியன்று நடைபெற்ற வேலையின் மதிப்பு, சுமார் ரூ. 8,500 க்கும் அதிகமானது என்று கணக்கிடப் பட்டுள்ளது.

மறுநாள், மார்ச் 22ஆம் தேதியன்று சேந்தங்குடி கிராமத்திலிருந்து ஆலந்தூர் பஞ்சாயத்திலுள்ள மஞ்சவாடி கிராமம் வரை செல்லும் 8·2 கி.மீ. நீளமுள்ள சாலையைச் சீரமைக்கும் பணியில் அப்பகுதியிலும், பக்கத்துக் கிராமங்களிலிருந்தும் சுமார் 2,500க்கும் அதிகமான பொது மக்களும், தொண்டர்களும் ஈடுபட்டார்கள். அன்று நடந்து முடிந்த வேலையின் மதிப்பு ரூ. 8,000க்கும் அதிகமாகும்.

பனையூர் கிராமத்திலிருந்து ரெங்களுதபுரம் கிராமம் வரை செல்லும் 4 கி.மீ. நீளமுள்ள சாலையைச் சீரமைக்கும் சீரணிப் பணி, மார்ச் 23ஆம் தேதியன்று மேற்கொள்ளப்பட்டது. இப்பணியில் சுமார் 1500க்கும் அதிகமான பொதுமக்களும், தொண்டர்களும் கலந்து கொண்டு உழைத்தார்கள். இதன்மூலம் நடைபெற்ற வேலையின் மதிப்பு சுமார் ரூ. 5 ஆயிரத்துக்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வாட்டார் கிராமத்திலிருந்து பைங்காட்டூர் கிராமம் வரை 4·2 கி.மீ. நீளமுள்ள சாலையைச் சீரமைக்கும் பணி மார்ச் 24ஆம் தேதியன்று மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பகுதியில் நடைபெற்ற வேலைகளில் அக்கம் பக்கத்திலுள்ள 13க்கும் அதிகமான ஊராட்சி மன்றங்களிலிருந்தும் பொது மக்களும், தொண்டர்களுமாகச் சுமார்

சீரணியினரின் சீரிய பணிகளைப் பற்றிய செய்திகள் இந்தப் பகுதியில் வெளிவரும்.

1,500க்கும் அதிகமாக வந்திருந்து வேலைகளைச் செய்தார்கள். இந்தக் கிராமத்தில் சாலையைச் சீரமைப்பதில் பல சிரமங்களிருந்தும் இந்தச் சாலையை ஒரு நல்ல சாலையாக அமைத்துவிட்டனர், சீரணித் தொண்டர்கள். இந்த வேலையின் மதிப்பு சுமார் ரூ. 4,500க்கும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தாரை, தப்பட்டை முழக்கம்.

எல்லாச் சீரணிப்பணிகளிலும் தொண்டர்களை ஊக்குவிக்கும் வகையில் வழிநெடுகிலும் தாரை, தப்பட்டைகளும், கொம்பு, கிராம வாத்தியங்களும் முழங்கப் பட்டதுடன் வாண வேடிக்கைகளும் நடைபெற்றன. நான்கு நாட்களாக நடைபெற்ற இந்தச் சீரணிப்பணி வேலைகளை நல்ல முறையில் ஒழுங்குபடுத்தித் தேவையான கருவிகள், குடிதண்ணீர் வழங்குதல், மதிய உணவு வழங்குதல் போன்றவைகளைச் செய்வதில் கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும், விரிவினை அலுவலர்கள், அலுவலகப் பணியாளர்கள், ஊர்நல உதவியாளர்கள், ஆசிரியர்கள், ஆசிரியைகள் ஆகியோர் பெரும்பணியாற்றினர். கோட்டூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர், ஊராட்சி ஒன்றியக் குழுப் பெருந்தலைவர் திரு. கே. முருகையன், ஊராட்சி ஒன்றியக்குழு துணைப் பெருந்தலைவர் திரு வை. பெருமாள், கோட்டூர் கூற்றச் சீரணித் தலைவர் திரு. என். எஸ். திருஞானசம்பந்தம் மற்றும் அந்தந்தப் பகுதி ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் இப்பணிகளில் சீரிய முறையில் பங்கு பெற்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்வாய் அமைக்கும் சீரணியினர்.



திருச்சி மாவட்டத்தில் சனவரி, பிப்ரவரி திங்கள்களில் விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் வார்ப்பட்டு கிராமத்தில் சீரணி அறிவகம் ஒன்றும், 9 பாசன வாய்க்கால்களில் தூர் எடுக்கும் பணியும், ரூபாய் 6,000 மதிப்பீட்டில் சிரணித் தொண்டர்களால் மேற்கொள்ளப்பட்டன. கே. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் 2,700 ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு இணைப்புச் சாலை அமைக்கும் பணியைச் சிரணித் தொண்டர்கள் மேற்கொண்டனர். வையம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் தொப்பநாயக்கன் பட்டி கிராமத்தில் பள்ளிக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்தில் எசனை வாரியில் உள்ள கிணற்றிற்கு 10,000 ரூபாய் மதிப்பீட்டில் தடுப்புச் சுவர் கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டது. அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிரணித் தொண்டர்கள் 3500 ரூபாய் மதிப்பீட்டில் மதிய உணவு நிலையம் உருவாக்கும் பணியை மேற்கொண்டனர். கன்னிமரத்துப்பட்டி கிராமத்தில் 4,700 ரூபாய் வேலையும பசந்தமங்கலம ஊராட்சியில் சாலை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன.

மணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் வெங்காராம் வரப்பு வாய்க்கால் வேலையும் எதுமலை கிராமத்தில் ஒரு வரப்பு வாய்க்கால் வேலையும் 5,000 ரூபாய் மதிப்பீட்டில் தூர் எடுக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் 12,000 ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணியையும், தூர் எடுக்கும் பணியையும் சிரணித் தொண்டர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தில் 5,000 ரூபாய் மதிப்பீட்டில் தன்னூர் பள்ளிக் கிராமத்தில் சிரணித் தொண்டர்கள், திறந்த வெளி அரங்கு அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் கரிக்கலை கிராமத்தில் 1,500 ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டட வேலையிலும் 6,600 ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திறந்தவெளி அரங்கைக் கட்டும் வேலையிலும் சிரணித் றார்கள்.

மகளிர் மன்றக் கட்டடம்

லால்குடி ஊராட்சி ஒன்றியத்தில் சிறுமயங்குடி வாய்க்காலை 3,000 ரூபாய் மதிப்பீட்டில் தூர் எடுக்கும் பணி நடந்து வருகின்றது. தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தில் கோலக்குடி கிராமத்திலும், திருநாராயணபுரம் கிராமத்திலும் 6,000 ரூபாய் மதிப்பீட்டில் மகளிர் மன்றம் கட்டும் பணியில் அவ்வூராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிரணித் தொண்டர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள். உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் மாராடி ஏரியைத் தூர் எடுக்கும் பணியும் வெங்கடாசலபுரம், ஏரிக்கு 3,000 ரூபாய் மதிப்பீட்டில் ஒரு வாய்க்கால் வெட்டும் பணியும் நடைபெற்று வருகின்றன.

சென்ற இரண்டு மாதங்களில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிரணித் தொண்டர்கள் 60,000 ரூபாய் மதிப்பீட்டிற்கான பணிகளைச் சிறப்பான முறையில் செய்துகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath

தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்

Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். இதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கை பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்தி புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்
டாக்டர் S. காளிமுத்து, B.M.P.(IND), V.V.O.,A.M.I.H
பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி S.I.
போன்: 16 தந்தி: சித்தர்
சென்னை கிளை ஆபீஸ்:
41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1
போன்: 21448

புரதமும் இதர சத்துக்களும் அடங்கிய உணவுகள் போதிய அளவில் குழந்தைகட்குக் கிடைக்காததன் காரணமாக, அவர்களுக்கு உடல் நலக்குறைவுடன் நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட்டு, பிற்காலத்தில் அவர்களின் அறிவு வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது.

இக் குறையை, இளம் வயதில் களைவதற்கெனவே 'குழந்தைகள் காப்பகங்கள்' திட்டம் தமிழ்நாட்டில் செயற்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தினால் கருவுற்ற மகளிரும், பாலூட்டும் அன்னையரும்கூடப் பயனடைகின்றனர்.

தமிழ்நாட்டில் 1,000 உணவளிப்பு நிலையங்களை அமைத்தல், 1,000 குழந்தைகள் காப்பகங்கள் கட்டுதல், 375 மகளிர் மன்றங்களில் சிறிய சமையலறைகளைக் கட்டுதல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் அடங்குவனவாம்.

உணவளித்தல்

ஒருவருக்கு ஒரு நாளைக்கு 90 கிராம் வீதம் ஆண்டில் 200 நாட்களுக்குரிய உணவுப் பொருட்களை "கேர்" நிறுவனம் வழங்கும். இதை ஆண்டில் 300 நாட்களுக்கு உயர்த்தித் தருவதற்கும் "கேர்" நிறுவனம் இசைந்துள்ளது. அவ்வாறாயின் திங்கள் ஒன்றில் 25 நாட்களுக்கு உணவு கிடைக்கும்.

சத்தான உணவுப் பொருட்களை ஐந்தாண்டுகளுக்கு ரூ. 87·50 இலட்சம் செலவில் வழங்குவதற்குக் "கேர்" ஒத்துக் கொண்டுள்ளது. எரிபொருள், சமையல், ஊறுகாய் போன்றவற்றிற்காகும் செலவில் பாதியைத். தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளும். எஞ்சிய தொகை மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்படும்.

குழந்தைகளைக் காப்போம்!

உணவுப் பொருட்களை வழங்குதல், மேற்பார்வையிடல் போன்ற பணிகளைச் செய்யும் அலுவலர்களுக்காகும் செலவையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும். சமைக்க, உணவை வழங்கத் தேவைப்படும் பாத்திரங்கள், மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்படும்.

இவற்றிற்கெல்லாம் ஏற்படும் மொத்தச் செலவான ரூ. 24·62 இலட்சத்தில் ரூ. 13·76 இலட்சத்தை மாநில அரசு தரும். எஞ்சிய ரூ. 10·86 இலட்சம் மக்களின் நன்கொடையாக இருக்கும். தவிர, உணவுப் பொருட்களைப் பல்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லுதல், மற்றும் இதர சில்லறைச் செலவான சுமார் ரூ. 2·50 இலட்சத்தையும் தமிழ்நாடு அரசே ஏற்கும். மேலும் இத் திட்டத்தை நிறைவேற்ற "கேர்" நிறுவனத்திற்காகும் நிர்வாகச் செலவையும் மாநில அரசு அளிக்கும்.

"குழந்தைகள் காப்பகங்கள்" கட்டுதல்!

ஒரு 'குழந்தைகள் காப்பகம்' கட்ட ரூ. 7,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தொகையில் ரூ. 6,500-ஐ "கேர்" நிறு

வனம் தரும். எஞ்சிய ரூ. 500 மட்டும் மக்களிடமிருந்து நன்கொடையாகத் திரட்டப்படும். தென்ஆர்க்காடு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் இதுவரை 11 குழந்தைகள் காப்பகங்கள் கட்டப்பட்டுள்ளன.

"கேர்" நிறுவன அலுவலர்களுடன் அண்மையில் நடைபெற்ற ஆலோசனையின்படி, மேலும் 500 காப்பகங்களைக் கட்டும் பணி ஏப்ரல் 1971-ல் தொடங்கப்பட்டு, செப்டம்பர் 1971-ல் நிறைவேற்றப்படும். மேலும் 385 காப்பகங்கள் கட்டப்படும் பணி அக்டோபர் 1971-ல் தொடங்கி, மார்ச் 1972-ல் நிறைவுறும்.

மக்களின் ஆர்வம்!

முன்னிலைப் பள்ளிச் சிறார்களுக்கு உணவளிக்கும் இத் திட்டத்தை விரிவாக்க வேண்டுமென்று பல்வேறு ஊராட்சிகளிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. "குழந்தைகள் காப்பகங்கள்" கட்டுவதில் "கேர்" அளிக்கும் நிதியுதவிக்கு மேல் ஏற்படும் செலவு, பாத்திரங்களை வாங்குவதற்காகும் செலவு, மற்றும் இதர செலவினங்களைத் தாங்களே ஏற்றுக்கொள்ளப் பல்வேறு ஊராட்சிகள் முன்வந்துள்ளன.

இத் திட்டத்தின் நன்மைகள் பற்றி மக்கள் நன்கு அறிந்துள்ளனர் என்பதும், அவர்களின் ஆர்வத்தை இது நன்கு கவர்ந்துள்ளது என்பதும் ஊராட்சிகளிடமிருந்து பெறப்பட்டுள்ள இந்தக் கோரிக்கைகளிலிருந்தே நன்கு தெரிகிறது.

தமிழ்நாட்டிலுள்ள முன்னிலைப் பள்ளிச் சிறார்கள் அனைவரும் இத் திட்டத்தில் கொணரப்படுதற்கான முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுகின்றன.

பரிசு பெற்ற பாட்டாளிகள்!

ஒருமித்த செய் நேர்த்தி முறைகள் அனைத்தையும் மேற் கொண்டு, ஏக்கர் மகசூலைப் பெருக்குவது, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வழிகளுள் ஒன்றாகும். எனவே, எல்லா உழவர்களுக்கும் ஏக்கர் மகசூலைப் பெருக்கும் ஆர்வம் ஏற்படவேண்டும் என்பதற்காகத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, ஆகிய உணவு தானியப் பயிர்களில் விளைச்சல் போட்டியை கிராம,வட்டார,மாவட்ட, மாநில நிலைகளில் நடத்தி, அவைகளில் உச்ச அளவு மகசூலை உற்பத்தி செய்த உழவர்களுக்குப் பரிசு அளித்து வருகிறது.

தமிழ்நாட்டில் 1968-69-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநில விளைச்சல் போட்டியில் கீழ்க் கண்ட உழவர் பெருமக்கள் பரிசு பெற்றுள்ளார்கள் என்று வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

நெல்

முதற் பரிசு :

திரு தி. நாராயணசாமி,
த/பெ. திருமலைசாமி நாயுடு,
பூந்தோட்டம்,
வள்ளிபாளையம் ரோடு,
மேட்டுப்பாளையம்,
கோவை மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 5,551.2 கிலோ நெல் விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 2,000 பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பரிசு :

திரு ல. சுந்தரராசன்,
த/பெ. லட்சுமிபதிநாயக்கர்,
பாலகிருட்டிணபுரம்,
கோபாலபுரம் அஞ்சல்,
(வழி) தேனி,
மதுரை மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 5,152 கிலோ, 400 கிராம் நெல் விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 1,000 பரிசு அளிக்கப்படும்.

மூன்றாம் பரிசு :

திரு கே. பி. துரைசாமி,
த/பெ. பெரியசாமிக் கவுண்டர்,
புரசபாளையம்,
வாழைத்தோட்டம்அஞ்சல்,
(வழி) சிவகிரி,
ஈரோடு வட்டம்,
கோவை மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 4,998 கிலோ நெல் விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 500 பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

சோளம்

முதற் பரிசு :

திரு எம். கே, கோபால்,
த/பெ. கவிதி நாயுடு,
மணியக்காரம்பாளையம்,
கோவை மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 2,586 கிலோ சோளம் விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 2,000 பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பரிசு :

திரு ஏ. பி. சுப்பராயக் கவுண்டர்,
ஈசுவரன்கோயில் காடு,
ராசிபுரம் வட்டம்,
சேலம் மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 2,117 கிலோ சோளம் விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 1,000 பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

கேழ்வரகு

முதற் பரிசு :

திரு ஆர். சனார்த்தனன்,
மேலாண்மைப் பிரதிநிதி,
ராசலெட்சுமி மில்,
சிங்காநல்லூர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 2,367 கிலோ கேழ்வரகு விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 2,000 பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

கம்பு

முதற் பரிசு :

திரு மு. சிதம்பர ரெட்டியார்,
த/பெ. முத்துவீரம்ம ரெட்டியார்,
நக்கசேலம் அஞ்சல்,
(வழி) செட்டிக்குளம்,
பெரம்பலூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 2,204 கிலோ 900 கிராம் கம்பு விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 2,000 பரிசு அளிக்கப்படும்.

இரண்டாம் பரிசு :

திரு கி. துரைசாமி ரெட்டியார்,
த/பெ. கிருட்டிணசாமி ரெட்டியார்,
தேனூர் அஞ்சல்,
பெரம்பலூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 2,122 கிலோ, 700 கிராம் கம்பு விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 1,000 பரிசு அளிக்கப்படும்.

மூன்றாம் பரிசு :

திரு செ. சீனிவாசன்,
த/பெ. செல்லப்ப ரெட்டியார்,
நக்கசேலம் அஞ்சல்,
பெரம்பலூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 1,889 கிலோ 600 கிராம் கம்பு விளைவித்துள்ளார். இவருக்கு ரூபாய் 500 பரிசு அளிக்கப்படும்.

கரும்பு

1969-70-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநில கரும்பு மகசூல் போட்டியில் கீழ்க்கண்டவர் முதற்பரிசு பெற்றுள்ளார்.

திரு என். மதர்கான் சாஹப்,
துலுக்கானத்தம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

இவர் ஒரு ஏக்கரில் 97 மெட்ரிக் டன் 465 கிலோ கரும்பு விளைவித்துள்ளார். இவருக்கும் விரைவில் பரிசு வழங்கப்படும்.

பரிசு பெற்ற உழவர் பெருமக்களைத் 'தமிழரசு' சார்பில் வாழ்த்துகின்றோம்.

கவும், தொழில் வளத்தை மேம்படுத்தவும் உறு துணையாக விளங்குபவை சிறு தொழில்கள். விரைவான தொழில் முன்னேற்றம் காண வேண்டுமானால் கனரகத் தொழில்களும் மற்றும் சிறு தொழில்கள்—குடிசைத் தொழில்கள் ஆகியனவும் ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று உதவியாக இரண்டுமே வளர்ச்சியடைதல் அவசியம். தவிரவும் குறுகிய காலத்தில் வேலை வாய்ப்புகளையும் வருவாயையும் பெருக்கக்கூடியவை சிறு தொழில்களே என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்த மூலதன முதலீடு ரூ. 7·5 லட்சத்துக்கு மேற்படாத தொழில்கள் பொதுவாகச் சிறு தொழில்கள் என்று பாகுபடுத்தப் படுகின்றன. நிலம், கட்டடம் ஆகியவைகளின் மதிப்பு, தொழிலை நடத்துவதற்கு வேண்டிய நடைமுறை மூலதனம் இவை எல்லாம் முதலீட்டை நிர்ணயிக்கும்போது கணக்கில் சேர்க்கப்படுவதில்லை. பெருரகத் தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய உறுப்புகள், துணைக்கருவிகள் முதலியவைகளைத் தயாரித்தளிக்கும் துணைத் தொழில்களில் மொத்த மூலதன முதலீடு ரூ. 10 லட்சத்துக்கும் மேற்படாதிருந்தால் அவையும் சிறு தொழில்களாகவே கொள்ளப்படும்.

கைத்தறி, விசைத்தறி, கிராமக் கைத்தொழில்கள், கைத்திறத் தொழில்கள், கயறு, பட்டு போன்ற தொழில்கள் சிறு தொழில் வகையில் சேர்க்கப்படுவதில்லை.

சிறு தொழில்கள் சீரான முறையில் வளர்ச்சியடைவதில் உதவுவதற்காக மத்திய அரசாங்கமும் தமிழ்நாடு அரசாங்கமும், பல்வேறு உதவித் திட்டங்களைத் தொடங்கி நடத்தி வருகின்றன. அவ்வகையில் முக்கியமானசெயல் முறைகள் பின்வருமாறு :—

உதவிகள்—ஆலோசனைகள்.

சென்னை மாநகரில் கிண்டியில் மத்திய அரசினர் சிறு தொழில் சேவை நிலையம் என்ற தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றை நடத்தி வருகின்றனர். பயிற்சி பெற்ற தொழில் வினைஞர்களையும், வாணிப ஆலோசகர்களையும் அமர்த்திக்கொள்ள முடியாத நிலையில் உள்ள சிறு தொழில் அதிபர்களுக்குத் தொழில் சம்பந்தமான எல்லாவித நேரடி உதவிகளையும் ஆலோசனைகளையும் இந்த நிறுவனம் இலவசமாக அளித்து வருகிறது.

குறிப்பிட்ட ஒரு தொழிலில் விலையுயர்ந்த இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்திக் கொள்ள இயலாத தொழில் வினைஞர்கள் குழுமியுள்ள இடங்களில்தொழில் விரிவினை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தரமான பொருட்களைத்தயாரிப்பதில் உதவுவதற்கென்றே நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதோடு, தொழில் வினைஞர்களும் இந்த இயந்திரங்களில் வேலை செய்ய அனுமதிக்கப் படுகிறார்கள். இந்தப் பணிக்காக, அவர்களிடமிருந்து பெயரளவில் சிறு கட்டணமே வசூலிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் மத்திய அரசினர் இவ்வகையில் கோயம்புத்தூர், மதுரை, ஈரோடு ஆகிய இடங்களில் தொழில் விரிவினை நிலையங்கள் அமைத்து நடத்தி வருகிறார்கள். கோவையில் உள்ள நிலையம் வார்ப்பட, உலோக வேலைகளில் உதவி அளித்து வருகின்றது. மதுரையில் உள்ள நிலையம் பொதுப் பொறியியல் வேலைகள், கருமான் வேலை, மின்முலாம் பூசுதல் ஆகியவைகளில் உதவுகின்றது. ஈரோடு நிலையம், தோல்தர மேம்பாட்டுப் பணிகளில் உதவி வருகின்றது.

இயந்திரம் வாங்கக் கடன.

மாநிலத்தில் சிறு தொழில் வளர்ச்சியில் நேரடியான தொடர்பு கொண்டிருப்பது மாநிலத் தொழில் வாணிகத்துறையேயாகும். தொழிற்பேட்டைகளில் தொழிற்சாலைக் கட்டடங்களும் திருத்திய மனைகளும் ஒதுக்குதல், தொழில் நுட்ப வசதிகள் அமைத்துக் கொடுத்தல் ; மிகக்குறைந்த அளவில் கிடைக்கும் மூலப் பொருட்களைச் சிறு தொழில்களுக்குப் பகிர்ந்து அளித்தல் ; மாநில அரசாங்கத்தின் தொழில் உதவிச் சட்டத்தின் கீழ் கடன் உதவி வழங்குதல் ஆகியன இதன் முக்கிய பணிகளாகும்.

தொழிற்சாலைக்காக நிலம் வாங்குதல, தொழிற்சாலைக் கட்டடம்கட்டல், இயந்திரங்கள், கருவிகள் முதலியன வாங்குதல், ஏற்கனவே உள்ள கடனைத் தீர்ப்பது போன்றவைகளுக்குக் கடன் வழங்கப்படுகிறது. தவிர்க்க முடியாத நிலைமைகளில், புதிய தொழில்களைத் தொடங்குபவர்களில் தகுதி வாய்ந்தவர்களுக்கு நடைமுறை மூலதனத்துக்கான கடனும் அளிக்கப்படுகிறது. தொழில் நிறுவனத்தின் சொத்துக்கள் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியை மட்டுமோ, தேவை எனக் கருதுமளவிற்கு அடமானமாக ஏற்றுக் கொண்டு அதன் பேரில் கடன் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு கொடுக்கப்படக் கூடிய கடன் தொகையின் உச்ச அளவு ரூபாய் 2 லட்சமாகும். வரையறுக்கப்பட்ட கால வரம்புக்குள் வருடாந்திர சம தவணைகளில் கடனைத்திருப்பிச் செலுத்துதல் வேண்டும். கடன் தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்தும் காலம் 10 ஆண்டுகளுக்கும் மேற்படலாகாது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

பொதுவாக இந்திய ஸ்டேட் பாங்கு, சிறு தொழில்களின்

களைப் பூர்த்தி செய்வதற்கெனக் குறுகிய காலக்கடன் வசதியளிக்கிறது. மூலப்பொருள்கள், பாதி முடிந்த நிலையிலும், முழுமையாகத் தயாரித்து முடிக்கப்பட்டவையுமான பொருள்கள், உறுதிச் சீட்டுகள், இவைகளைப் பிணையாகக் கொண்டும் பாங்கு முன் பணம் வழங்குகிறது. கடன் வாங்குபவர்களைப் பொறுத்து, கணக்கில் இருப்புக்கு மேலும் கடன் வழங்க பாங்கு முன்வருகிறது.

இந்தக் குறுகிய காலக் கடன் தொகைகளை ஓராண்டுக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்தி விடவேண்டும். நிலையாய் அமைந்த சிறு தொழில்களுக்கு அவைகளது தயாரிப்பைப் பெருக்கவும், நவீன இயந்திரங்களை நிறுவி, தொழிலைச் சீரமைக்கவும் ஸ்டேட் பாங்கு இடைக் காலக் கடன் வழங்குகிறது. இக்கடன் தொகை 10 வருட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

நிலம், கட்டடம் போன்ற நிலையான சொத்துக்கள் மற்றும் இயந்திர சாதனங்கள் முதலியவற்றை வாங்குவதற்காக, தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறு தொழில்களுக்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், (150 அ, மவுண்ட் சாலை, சென்னை-2) ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட நீண்ட காலக் கடனுதவி வழங்குகிறது.

கடன் தொகையை 10 ஆண்டுகளுக்குள் திரும்பச் செலுத்தி விடவேண்டும். அதாவது, மனுதாரர் கடனைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து 2 ஆண்டுகள் முடிவுற்றதும், 8 வருடாந்திர சம தவணைகளில் திரும்பச் செலுத்துதல் வேண்டும்.

தேசிய சிறுதொழில் நிறுவனம்.

தேசிய சிறுதொழில் நிறுவனம், சென்னை-6-ல் 123, மவுண்ட்சாலையில் அமைந்துள்ளது. தமிழகம், ஆந்திரப்பிரதேசம், மைசூர், கேரளம் ஆகிய நான்கு மாநிலங்களடங்கிய தெற்குப் பிராந்தியத்திலுள்ள சிறு தொழில்களுக்கு வேண்டிய இயந்திரங்களையும் (உள்நாட்டில் செய்த இயந்திரங்கள் இல்லா இயந்திரங்களையும) தவணை முறையில் வழங்குதலே இந்த நிறுவனத்தின் முக்கிய பணியாகும்.

இயந்திரங்களைத் தவணைமுறையில் வாங்க அதற்கென உள்ள படிவங்களைப் பூர்த்தி செய்து, மாநிலத் தொழில் வாணிகத் துறை அலுவலர்கள் மூலம் அந்த நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும்.

'டயர்' புதுப்பித்தல், 'ஐஸ்' தொழில், பழங்களைப் பக்குவப் படுத்தித் தகர டப்பாக்களில் அடைக்கும் தொழில், மின் முலாம் பூசுதல், மற்றும் இரசாயனத் தொழில்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை அவற்றின் இயந்திர சாதனங்களின் மதிப்பில் 50 சதவீதத் தொகையைக் கட்டணமாக வசூலிக்கும்.

இயந்திரங்களின் விலை மதிப்பில் எஞ்சியுள்ள தொகை, தரம் பிரிக்கப்பட்ட இயந்திரங்களைப் பொறுத்தவரை 7 ஆண்டுகளுக்குள்ளும், தரம் பிரிக்கப்படாத இயந்திரங்களைப் பொறுத்தவரை 5 ஆண்டுகளுக்குள்ளும், அரையாண்டுத் தவணைகளில் வசூலிக்கப்படும். மனுதாரருக்கு இயந்திரம் வழங்கிய தேதியிலிருந்து ஓராண்டுக் காலம் முடிவுற்றதும் முதல் தவணைத் தொகையைச் செலுத்த வேண்டும்.

இந்நிறுவனம் அது வழங்கும் இயந்திரங்களின் மதிப்பில் 6 சதவீதத்தைப் பணிக்கட்டணமாகப் பெற்றுக் கொள்ளும்.

இந்நிறுவனம் சிறு தொழில் சேவை நிலையத்தின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசாங்க பொருள் வாங்கும் திட்டத்தில் பங்கு பெறுவதற்கெனத் தகுதி வாய்ந்த சிறு தொழில்களைப்பதிவு செய்து கொள்ளுகிறது. இவ்வாறு பதிவு பெற்ற சிறு தொழில்களுக்கு டெண்டர் படிவம் முதலியவைகளை இலவசமாக வழங்குகிறது.

நான்கு நிறுவனங்கள்.

தொழில் வளர்ச்சியில் விரைவான முன்னேற்றம் காணத் தமிழ் நாடு அரசாங்கம் புதிதாக அமைத்துள்ள தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி சாங்கத தொழில, ஊக்குவிப்பு நிறுவனம் ஆகியவை தமிழகத்தைத் தொழில் மயமாக்கும் பணியிலும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதிலும் அரும் பெரும் சாதனைகளைக் காணும் வகையில் பணிகளைத் தொடங்கியுள்ளன.

தவணை முறையில் பணம் கட்டி, தொழில் கூடங்களை உரிமையாக்கிக் கொள்ள வசதி செய்யும் திட்டம் தமிழகத்தில் செயல்படத் தொடங்கிவிட்டது. மாநிலத்தில் சிறு தொழில் வளர்ச்சியில் புதுத் திருப்பு முனையாக அமைந்துள்ளது இந்த ஏற்பாடு.

தொழில்களுக்குக் கச்சாப் பொருட்கள் வழங்குவதிலிருந்து, தயாரித்து முடிக்கப்பட்ட பொருட்களுக்கு விற்பனை வசதி செய்வது வரையில் பல நிலைகளிலும் உதவி அளிக்கத் தமிழக அரசு வகை செய்துள்ளது.

தமிழ்நாட்டில் சிறு தொழில் வளர்ச்சிக்கு முனைப்பான முறையில் ஊக்கமளிப்பதற்காகத் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (Tamil Nadu Small Industries Development Corporation Limited-SIDCO) 1970 மார்ச் 23-ஆம் தேதியன்று பதிவு செய்யப்பட்டது. 1970 அக்டோபர் 14-ஆம் தேதியிலிருந்து இந்த நிறுவனம் செயல்படத் தொடங்கியது. முதலாவதாகக், கைத் தொழில் வாணிபத் துறையின் மூன்று கச்சாப் பொருள் கிடங்குகள் 'சிட்கோ' வின் நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டன. சிறு தொழில்களுக்கு மிகவும் தேவைப்படுகின்ற கச்சாப் பொருள்களைக் கொள்முதல் செய்யவும், பகிர்ந்தளிக்கவும் இந்த நிறுவனம் எல்லா முயற்சிகளும் செய்து வருகிறது.

அலுவலாற்றத் தொடங்கிய 5½ மாதக்காலத்தில் இந்த நிறுவனம் ஒன்றரைக் கோடி ரூபாய் மதிப்புக்கு மேல் கச்சாப் பொருட்களைக் கொள்முதல் செய்து, 3,000 -க்கு மேற்பட்ட சிறு தொழில்களுக்குச் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கச்சாப் பொருட்களைப் பகிர்ந்தளித்துள்ளது. இந்த நிறுவனம் அமைக்கப்படுவதற்கு முன்பு

ரகிர்ந்தளிக்கப்பட்ட பொருளைப் போல இது இரண்டு மடங்கு ஆகும். அடுத்த ஆண்டில் ரூ. 4 கோடி பெறுமான கச்சாப் பொருட்களைக் கொள்முதல் செய்து வழங்க முடியும் என்று நம்பப்படுகிறது.

இந்த நிறுவனத்தின் தலைவர், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சிவகாசி ஆகியவைகளிலுள்ள தொழில் நிறுவனச் சங்கங்களுடன் பல முறை விவாதித்தார். தொழில் தேவைகள் குறித்துக் கொள்ளப்பட்டு, சிட்கோ வழங்கக் கூடிய கச்சாப் பொருள்வகைகளை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்



டுள்ளன. கச்சாப் பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் பணிகளை மேம்படுத்தச் சென்னையில் மேற்கொண்டு இரண்டு கிடங்குகள் தொடங்கப்பட்டுள்ளன. சென்னைத் துறைமுகத்திலும், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும் மேற்கொண்டு கிடங்குகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இயந்திரங்களைத் தவணை-கொள்முதல் முறையில் வழங்கவும் தவணை கொள்முதல் அடிப்படையில் தொழிலிடங்கள் கட்டித் தரவும் நிதி வசதி செய்வதற்காக, சிட்கோ நிறுவனம் பொதுமக்களிடையேயிருந்து ரூ. 50 லட்சம் கடன் எழுப்பியது. தவணை கொள்முதல் முறையில் இயந்திரங்கள் வாங்குவது குறித்துக் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 170 பேர்களுக்கு மேல் விவரங்கள் கேட்டுள்ளனர். 25 மனுக்கள் பெறப்பட்டு, ஆய்வில் உள்ளன. 11 மனுக்கள் ஏற்கப்பட்டு மொத்தம் ரூ. 7.77 லட்சம் அளவுக்கு உதவி வழங்க ஒப்புதல் தரப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இயந்திரங்கள் தவணை கொள்முத◌ வகையில் ரூ. 60 லட்சம் அளவுக்கு உதவி அளிக்க முடியும் என நம்பப்படுகிறது.

தொழிலகங்களுக்கான கொட்டகைகள் கட்டித் தர, இந்த நிறுவனம் அம்பத்தூர் தொழில் பேட்டையில் 34 ஏக்கர் பரப்புள்ள இடங்களை மேற்கொண்டுள்ளது. தொழிலகக் கொட்டகைகள் அமைத்துத் தரக்கோரும் 23 மனுக்கள் பெறப்பட்டு, அவை ஆய்வில் உள்ளன. இந்தத் திட்டத்தின் ஒரு சிறப்பு அம்சம், தொழில் முனைவர்கள் விரும்புகின்ற வரைவு அமைப்பு, அளவுகளின் படி, தொழிலகக் கட்டடம் அமைத்துத் தரப்படும் என்பதாகும். இத்திட்டம் விரைவில் திருச்சி துணைத் தொழில் பகுதிக்கும் (பாரத் கனரக மின் கருவிகள் தொழில்) நீடிக்கப்படும்.

தொழிலகங்கள் அமைக்க நாட்டமுள்ள மனுதாரர்கள் தங்கள் சொந்த இடத்தில் தொழில் கூடங்கள் அமைத்துக் கொள்வதில் நிதி உதவி வழங்கப் படும்.

மாநிலத்தில் புதிய தொழில்களைத் தொடங்குவதில் வாய்ப்புக் கூறு அறிக்கைகளைத் தயாரிக்கச் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் தொழில் நுட்ப வல்லுநர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. மிக விரைவில் சில தொழில்கள் குறித்து அறிக்கைகள் தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசினருக்குத் தேவைப்படும் சிறு தொழில் பொருட்களை 'சிட்கோ' மூலமாகவே வாங்குவதற்கும் பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கை வேலைப்பொருள்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பணியை சிட்கோவிடம் விடும் விஷயமும் ஆய்வில் உள்ளது.

சிறு தொழில்களுக்குக் கடன் வழங்கும் பணியைத், தொழில் வணிக இயக்குநர் அகம் நடத்துவதற்குப் பதிலாக 'சிட்கோ' நிறுவனமே அப்பணியை மேற்கொள்ளவும் கூடும். இந்தத் திட்டத்தின் மாவட்டக் குழுக்கள், ரூ. 25,000 வரையான கடன் தொகைகளை அனுமதிக்க அதிகாரம் பெறும்.

ரூ. 25,000-க்கு மேற்பட்ட கடன்கள் விஷயத்தில் சிட்கோ டைரக்டர்கள் போர்டு ஒப்புதல் அளிக்கும். சிறு தொழில்களுக்கு உதவிகள் விரைவில் கிடைக்க, இந்த ஏற்பாடு பெருந்துணையாக இருக்கும்.

உதவி கோரி மனுச் செய்வதைப் பொறுத்தவரை, இதற்கென உள்ள வடிவத்தில் மனு மூன்று படிகள் அனுப்ப வேண்டும். மனு வடிவத்துக்கு ரூ. 1 நேரிலோ, பண அஞ்சல் மூலமோ செலுத்தி, மனு வடிவங்களைப் பெறலாம். முகவரி: தமிழ்நாடு சிறு தொழில்வளர்ச்சி நிறுவனம்-'சிட்கோ', கண்ணம்மை கட்டடம், 122 மவுண்ட் ரோடு சென்னை-6.

காலை வேலைக்காரன்!

சேந்தி உடையநாதபுரம் சீனிவாசன்

இருட்டுப் போர்வையைச் சுருட்டி எறிந்து
கதிரவன் காலையில் கண்திறக் கின்றான் ;
கடல்நீ ராடி உடல்ஈ ரத்தைச்
சுடுகதி ராலே துடைத்துக் கொள்கிறான் ;
மலர்க்கிண் ணத்திலும் இலைஏ னத்திலும்
இருக்கும் பனியை எடுத்துப் பருகிப்பின்
ஒளியால் இந்த உலகை ஆளும்
ஆதிக்க வேலைக்(கு) ஆயத்த மாகிறான்.
ஈழம் வென்ற இராச ராசனும்
கங்கையும் இமயமும் கடாரமும் முந்நீர்ப்
பழந்தீ வான பன்னீரா யிரமும்
அடிப்படுத் தாண்ட அரசர்க் கரசன்
இராசேந் திரனும் எங்கெங்கு மிந்தச்
செங்கதிர் போலாட்சி செய்ததே இல்லை.
வெளியையும் மண்ணையும் வேறுள வற்றையும்
ஒரேநே ரத்தில் ஒளிமய மாக்கும்
உதயக் கதிரவன் ஒருபே ரரசன் ;
எங்கும் உள்ள எவையும் இவன்குடைத்
தங்கும் குடிகள் தாமே ! தனது
வெம்மையால் செம்மை விளைப்பவன் இவன் தான் ;

இருட்டுப் பகைவனை விரட்டிப் பற்றிய
கடல்சூழ் உலகில் கதிரவ னோடு
பகைபா ராட்டும் பண்பினர் இல்லை.
எனினும்

பேராற்றல் பெற்ற பெருஞ்சேர லாதன்
கைவலிக் கடங்காக் கடல்குறும் பர்கள்போல்
நிழல்கள்தாம் அவனை எதிர்த்து நிற்பவை.
எதிர்த்து நிற்பதா ? இல்லவே இல்லை !
மலைகளும் அவனால் வளர்ந்த மரங்களும்
கொடிகளும் செடிகளும் கூடகோ புரங்களும்
கொடுக்கும் நிழல்கள்—குனிந்து தரையில்
படுக்கும் நிழல்கள் பயத்தால் அல்லவா ?
இருட்டில் திரியும் திருட்டு நிலாவைப்
போலிராப் பொழுதிலா உலாவரு கின்றான் ?

உலகம்—

கண்விழித் ததுவும் கண்விழிக் கின்ற
அவனர சாட்சி அனைவ ராலும்
ஏற்றுக் கொள்ளப் பட்டதா ? இல்லையா ?



கரும்போ கரும்பு!

களை எடுத்தல்.— கரும்பு நட்ட 3 அல்லது 4 வாரங்களுக்குப் பிறகு, களைக் கொத்தினால் மண்ணைக் கொத்தி விட்டுக் களைகளையும் அகற்ற வேண்டும். கரும்பு நட்ட 6-வது வாரத்திற்கும் 7-வது வாரத்திற்கும் இடையில் இரண்டாம் முறையாகக் களையெடுத்து மண்ணைக் கொத்தி விட வேண்டும்.

தோகை பரப்புதல்.— முதல் முறை, களை எடுத்து மண்ணைக் கொத்திவிட்ட பின்பு, கரும்புப் பயிர் வரிசைக்களுக்கிடையே 4- முதல் 6 அங்குல கனத்திற்கு ஒரே சீராகக் கரும்பின் காய்ந்த தோகையைப் பரப்ப வேண்டும். இதனால் மண்ணின் ஈரம் காக்கப்படுகிறது ; நீர் பாய்ச்ச வேண்டிய தடவைகளும் குறைகின்றன. குறிப்பாகக் கோடைக் காலத்தில் மண்ணின் ஈரம் ஆவியாகிப் போய்விடாமல் தடுப்பதற்கும், தண்ணீர் பாய்ச்சுவதைச் சில நாட்கள் தாமதித்து விடவும் இம்முறை ஏற்றது. இவ்வாறு காய்ந்த தோகைகளைப் பரப்புவதால் களைகள் தோன்றுவதையும், பூச்சிகள் தாக்குவதைம் தடுக்க இயலும். பரப்பப்பட்ட தோகைகளைச் சேகரித்து கரும்புக் குத்துகளின் (Clumps) அருகில் வைத்து இரண்டாவது முறை மண் அணைக்கும் பொழுது மண்ணால் மூடி விட வேண்டும்.

மண் அணைத்தல்— முதல் முறை உரமிட்டவுடன் களைக் கொத்தினால் மண்ணை இழுத்து மூட வேண்டும். இரண்டாவது முறை உரம் வைத்து பார்களை உடைத்து அதிலுள்ள மண்ணைக் கரும்பு வரிசைகளில் அணைக்க வேண்டும்.

தோகை உரித்தல்.— இரண்டாவது முறையாக உரம் வைக்கும் முன்பு காய்ந்த தோகையையும், பூச்சி பூஞ்சாளங்களால் தாக்கிய கரும்புத் தூர்களையும் அகற்றி விடுதல் நல்லது. கரும்பு நட்ட 6 அல்லது 7 மாதத்தில் கரும்பில் உள்ள காய்ந்த தோகைகளை உரித்துவிட வேண்டும், இவ்வாறு செய்வதனால் குருத்துப் பூச்சிகளின் தாக்குதலை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தவும், கணுக் குருத்துக்கள் தோன்றுவதைத் தடுக்கவும் இயலுவதுடன், நல்ல காற்றோட்டம் ஏற்பட்டுக் கரும்பு திடமாக வளருகிறது.

விட்டம் கட்டுதல்.— கரும்பு சாய்ந்து விடுவதைத் தடுக்க ஏழாவது மாதத்தில் கரும்பின் தோகைகளை முறுக்கி விட்டம் கட்டுதல் நல்லது. இரண்டு வரிசைக் கரும்புகளைச் சேர்த்து இரட்டை விட்டம் கட்டுதல் மிகவும் சிறந்தது. இவ்வாறு செய்வதால் கரும்பு சாய்ந்து, ஒடிந்து, காய்ந்து சேதமாவதைத் தடுத்திட இயலும்.

செந்தமிழைத் தேன் கரும்பென்று சிறப்பித்துச் சொல்கிறார்கள் புலவர்கள். வளமான தமிழை மாற்றாரிடமிருந்து பாதுகாப்பதைப் போலவே, வலுவான கரும்பையும் நோய்நொடியிடமிருந்து பாதுகாக்க வேண்டியுள்ளதை இந்தக் கட்டுரை எடுத்துக் கூறுகிறது.

நீர்ப்பாசனம்.— உறுதியான நீர்ப்பாசனம் உள்ள இடங்களிலேயே கரும்பு பயிர் செய்தல் வேண்டும். கரும்பு நட்ட 7 நாள் கழித்து முளை நீர் விட வேண்டும். சரணைகளில் உள்ள பருக்களிலிருந்து பயிர் குருத்து வரும்போது 7 முதல் 10 நாட்கள் இடைவெளியில் இலேசாக நீர்ப்பாசனம் செய்தல் நல்லது. தூர் கிளைக்கும் சமயத்தில் 10 நாட்களுக்கு ஒரு முறையும், வளர்ச்சிப் பருவத்தில் 7 நாட்களுக்கு ஒரு முறையும் நீர் பாய்ச்சுதல் வேண்டும். கரும்பின் முதிர்ச்சிக் காலத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சுவதே பலன் தரக்கூடியது. மழைக் காலங்களில் அதிகமாகத் தண்ணீர் தேங்கிவிடாமல் வடிகால்கள் மூலம் வடித்து விட வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு

கரும்பை இளங்குருத்துப் புழு, இடைத் தண்டுப் புழு, நுனித்தண்டுப் புழு, செதில், மற்றும் மாப்பூச்சி, இலைதத்துப் பூச்சி, கரையான் ஆகிய பூச்சிகளும், கரணை அழுகல், கரிப் பூட்டை ஆகிய நோய்களும் தாக்குகின்றன.

இளங்குருத்துப் புழு.—இது இளங் கரும்புகளின் குருத்தைத் துளைத்து அதிகமாகச் சேதப்படுத்தும். இப்புழுக்கள் சாம்பல் நிறமாகவும், பழுப்புப் புள்ளிகளுடனும் தோன்றும். இப் புழுக்கள், பயிர்கள் முளைக்கத் தொடங்கியது முதல் சுமார் 90 நாட்கள் வரை கரும்பின் குருத்துக்களைத் தாக்கிச் சேதப்படுத்துகின்றன. இப்புழுக்களைத் தடுக்கக் கரும்பு நட்ட 3-வது வாரம் முதல் 21 நாட்களுக்கு ஒரு முறையாக 3 தடவை 0·1 சத என்ட்ரின் (500 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும் ; அல்லது லின்டேன் 10 சத குருணைகளைத் தூவ வேண்டும். இளங் குருத்துப் புழுக்களைத் தடுக்க, லின்டேன் 10சத குருணை

பங்கு லின்டேன் குருணைகளுக்கு 3 பங்கு மணல் வீதம் கலந்து அவைகளைப் பயிர்களின் குருத்துக்களில் இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 4·8 கிலோ லின்டேன் 10 சத குருணைகளைத் தூவ வேண்டும். குருத்திலும், தோகைகளின் இடையிலும் தங்கிய குருணைகள் போகக் கீழே விழும் குருணைகளை மண்ணால் மூடி விடுதல் வேண்டும், பிறகு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

இடைத் தண்டுப் புழு.—தோற்றத்தில் இவைகளும் இளங்குருத்

திருந்திய சாகுபடியால் கிடைத்துள்ள நிறைந்த விளைச்சல்

துப் புழுக்களைப் போலவே காணப்படினும், இப்புழுக்களில் உள்ள புள்ளிகள், கறுப்பு நிறமாகக் காணப்படும். இவை கரும்பின் கணுக்களைத் தாக்கிச் சேதம் விளைகின்றன. இவ்வாறு தாக்கப்பட்ட கரும்புகளைப் பிடுங்கிஅழிப்பதே,மேற்கொண்டு இப்புழுக்களினால் ஏற்படும் சேதத்தைத்தடுக்கும் வழியாகும்.

நுனித் தண்டுப் புழு.—இப்புழு மஞ்சள் கலந்த வெண்மை நிறமான மெல்லிய நீண்ட புழுவாகும். இது கரும்பின் தலைக் படுத்துகின்றது. இப்புழுக்களைக் கட்டுப்படுத்த 0·1சத என்ட்ரின் (500 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) கரும்பு நட்ட 150-வது நாளும், 180-வது நாளும் தெளிக்க வேண்டும். இப்புழுக்களின் முட்டைகள் காணப்படும் தோகைகளையும், தாக்கப்பட்ட குருத்துக்களையும் அவ்வப்போது அகற்றி விட வேண்டும்.

செதில் மற்றும் மாப்பூச்சி.—இவைகள் தோகைகளின் அடிப் பாகத்தில் இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சுவதால், பயிரின் வளம் குன்றி விடுகிறது. இப்பூச்சிகளின் தாக்குதலைத் தடுத்திட 0·1 சத மாலத்தியான் (200 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

இலைத்தத்துப் பூச்சி.—இப்பூச்சிகள் மிகவும் தோகைகளிலிருந்து சாற்றை உறிஞ்சிவிடுவதால் தோகைகள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இவைகளின் சேதத்தைத் தவிர்க்க மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும். அல்லது ஏக்கருக்கு 15 முதல் 20 கிலோ பி.எச்.சி 5 சதத் தூளைத் தூவ வேண்டும்.

கரையான்.— இவைகள் விதைக் கரணைகளின் இளங் குருத்துகளைத் தின்று விடுவதால் விதைக் கரணைகள் முளைக்காமல் அழுகி விடுகின்றன. இவைகளைக் கட்டுப்படுத்த ஆரம்பத்தில் கூறியபடி பி. எச்.சி. அல்லது ஹெப்டோ குளோர் தூள் தூவலாம்.

கரையான்களைத் தடுப்பதற்கு 2 கிலோ காமா பி.எச்.சி. 20 சத இ.சி. அல்லது 2 கிலோ ஹெப்டோ குளோர் 20 சத இ. சி. தூளைத் தண்ணீரில் கரைத்துக் கரணைகளின் மேலும், சால்களிலும் தெளித்துக் கரும்பு நடவு செய்தல் நல்லது. இவ்வாறு செய்தால், இளங் குருத்துப் புழுக்களையும் கட்டுப்படுத்த இயலும்.

கரணை அழுகல் நோய். — இந் நோய் தாக்குவதனால், கரணைகள் நட்ட சில நாட்களில் அழுகிப் போய் முளைக்காமல் கெட்டு விடுகின்றன. இந் நோயை முன்பே கூறியுள்ள படி, அரிட்டான் அல்லது அகலால் கரைசலில் கரும்புக் கரணைகளை நனைத்து நடுவதால் கட்டுப்படுத்தலாம்.

கரிப்பூட்டை. — இந் நோய் தாக்கிய தூர்களின் நுனியில் குருத்திற்குப் பதிலாகக் கருப்பு நிறமான சாட்டை போன்ற பொருள் தோன்றும். முதலில் இச்சாட்டையின் மேல், மெல்லிய தோல் மூடியிருக்கும். விரைவில் தோல் கிழிந்து உள்ளிருக்கும் பூசண வித்துக்கள் பரவும். இந் நோயினால் தாக்கப்பட்ட பயிர்களின் வளர்ச்சி குன்றி விடுகிறது. விதைக் கரணைகளின் மூலமாக இந்நோய் பரவுகின்றது. எனவே, விதைக்கரணைகளை அரிட்டான் அல்லது அகலால் மருந்துக் கரைசலில் நனைத்து நடுதல் நல்லது. கரிப்பூட்டை தாக்கிய

கரும்பில் காணப்படும் சாட்டைகளைக் கவனமாக நீக்கி, அடர்த்தியாக நெய்த சாக்குகளில் சேகரித்து நெருப்பிலிட்டு அழிக்க வேண்டும். அல்லது கொதி நீரில் அமிழ்த்திப் பூசணங்களை அழிக்க வேண்டும். கரிப்பூட்டை தாக்கிய கரும்புத் தூர்களை வேருடன் வெட்டி அப்புறப்படுத்தி, நெருப்பிலிட்டு அழித்தல் நல்லது. கரிப்பூட்டை பெரும்பாலும் மறுதாம்பு எனப்படும் கட்டைப் பயிரிலேயே அதிக அளவில் காணப்படுகிறது. கூடுமான வரை கட்டைப்பயிர் விடுவதைத் தடுக்க வேண்டும். கட்டைப் பயிரிலிருந்து விதைக் கரணைகளைத் தயாரிக்கவே கூடாது. கோ. 449, கோ. 527 ஆகிய கரும்புத் தினுசுகளுக்குக் கரிப்பூட்டை நோயை எதிர்க்கும் சக்தி உள்ளதால் தொடர்ந்து கரிப்பூட்டை நோய் காணப்படும் இடங்களில் இத் தினுசுகளைப் பயிரிடுதல் சிறந்தது.

அறுவடை

கரும்பு நன்கு முதிர்ந்து விட்டதா என்பதை நிர்ணயித்துக் கொண்ட பிறகு அறுவடை செய்வதே சிறந்த முறையாகும். "ரெப்ராக்டரோ மீட்டர்'' என்ற கருவியால் கரும்பின் முதிர்ச்சியைத் தெரிந்துகொள்ளலாம். இக்கருவி சர்க்கரைச் சத்தின் இளக்கத்தைக் காட்டும். அல்லது பசுந்தழை நீர் சுண்டுதல் மூலமாகவும் கரும்பின் முதிர்ச்சியை அறியலாம்.

கரும்பை அறுவடை செய்யும் போது அடிப்பாகத்தில் வெட்டி, வேர், காய்ந்த தோகைகள் ஆகியவைகளை நீக்கி விட வேண்டும். கரும்பின் நுனிப் பாகத்தில் முதல் 5 தோகைகளுடன் கூடிய கணுவுடன் அகற்றிவிட வேண்டும். இவ்வாறு செய்யப்பட்ட கரும்புகளை வெல்லம் காய்ச்சவோ அல்லது சர்க்கரை ஆலையில் சர்க்கரை உற்பத்தி செய்யவோ பயன் படுத்தலாம்.

கரும்பு அறுவடையான உடனேயே வயலிலிருந்து காய்ந்த தோகைகளை உடனே நீக்கி விட வேண்டும். அல்லது அவைகளை வயலிலேயே எரித்து விட வேண்டும். மண் வெட்டியால் பழைய பார்களில் உள்ள கரும்பின் அடிக் கட்டைகளைச் சீவி விட்டு உடனே நீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு செய்வதால், அடிப்பாகத்திலுள்ள பருக்கள் குருத்து கரும்புப் பயிராக மண்ணுக்குள்ளிருந்து வெளி வருகின்றன. ஒரு மாதத்திற்குப் பிறகு பழைய பார்களை வெட்டி, கட்டிகளை உடைத்துவிட வேண்டும். இதனால் அதிகத் தூர்கள் கிளைக்கும்.

கட்டைப்பயிர், நடவு செய்த பயிரைவிட அதிகமாகத் தூர் விடுவதால், கட்டைப் பயிருக்கு அதிக அளவு உரம் தேவைப் படுகிறது. எனவே, கட்டைப் பயிருக்கு 25 கிலோ தழைச் சத்து அதிகமாக இட வேண்டும். மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவைகளை நடவுப் பயிருக்கு இடும் அளவிலேயே இட்டால் போதுமானது.

குறைந்த செலவு !

ஒருமுறைக்குமேல் கட்டைப் பயிர் விடுவதால், அவைகள் அதிகப் பூச்சி, நோய்களால் தாக்கப் படலாம். எனவே, கூடுமானவரை ஒரே ஒரு முறை கட்டைப் பயிர் விடுவதுடன் நிறுத்திக் கொள்வதே நல்லது. கட்டைப்பயிர் நடவுப் பயிரைக் காட்டிலும் ஒரு மாதம் முன்னதாகவே முதிர்ச்சியடைந்து விடுகின்றது. கட்டைப் பயிரைச் சிறந்த முறையில் சாகுபடி செய்தால் கரும்பின் மகசூலும் சர்க்கரைச் றது என்பது சோதனைகளின் மூலம் தெரிய வருகிறது. குறைந்த செலவில், நிறைந்த இலாபம் பெறக் கட்டைப் பயிர் துணை புரியும்.

வேண்டுகோள்

சர்க்கரையின் தேவையை ஈடு செய்யவும், பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், கரும்பு உற்பத்தியில் கவனம் செலுத்துமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். இதனால் உழவர் பெருமக்களின் வருவாய் பெருகுவதுடன், சர்க்கரைத் தொழிலும் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கும். எனவே கரும்பு உற்பத்தியைப் பெருக்க மேற்கூறிய திருந்திய சாகுபடி முறைகளை மேற் கொள்ளுமாறு உழவர் பெருமக்களை மீண்டும் மீண்டும் வேண்டுகிறோம்.

கரும்பு முற்றிவிட்டதா என்று சோதனை இடப்படுகிறது.

கடலிலே வந்த கல்விக் கூடம்

19-ஆம் நாள் வெள்ளிக்கிழமை சீர்மிகு சென்னைத் துறைமுகத்திலே வந்து நங்கூரம் பாய்ச்சியது ஒரு கப்பல்.

கப்பலிலிருந்து இறங்கியவர்களை நாதசுரம் இன்னிசை எழுப்ப, மேள தாளத்துடன் பன்னீர் தெளித்து, சந்தனம் கொடுத்து வரவேற்றனர் சென்னைக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர், சமுதாயப் பணிக் கழகங்களின் பிரதிநிதிகள்.

சென்னை மாநகரத் தந்தை திரு சா. கணேசன், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு நெ. து. சுந்தரவடிவேலு ஆகியோரும் அவர்களை வரவேற்றனர்.

புகழ்மிக்க அந்த விருந்தாளிகள் யார்? அந்தக் கப்பலின் சிறப்புத்தான் என்ன?

சில ஆண்டுகளுக்கு முன் சென்னைத் துறைமுகத்தை நாடி வந்தது, உழைப்பின் திருவுருவான ஜப்பானியரின் மிதக்கும் பொருட்காட்சி. கப்பலிலேயே ஓர் அரும்பெருங் காட்சிச் சாலையை அமைத்து அனைவரையும் கவர்ந்தது அந்தக் கப்பல்.

இங்கிலாந்து நாட்டின் போர்க் கப்பலான 'சென்டார்' இந்தியப் போர்க்கப்பல் 'விக்கிராந்த்' போன்றவையும் விருந்தினராகத் தமிழகத் தலைநகராம் சென்னை வந்ததுண்டு!

ஆனால் இப்போது வந்த இந்தக் கப்பலோ முற்றிலும் மாறுபட்டது. அனைத்துலகத்திலும் வேறு எங்குமில்லாத புதுமையான, புரட்சிகரமான கப்பல். அது வெறுங் கப்பல் அல்ல. மிதந்து செல்லும் பல்கலைக் கழகம். "வேர்ல்டு காம்பஸ் ஆஃப் ப்ளோட்" என்ற மிதவைப் பல்கலைக்கழகம் அது. கப்பலின் பெயர் 'ரிண்டாம்.'

உலகிலேயே கப்பலில் கல்வியளிக்கப்படும் கல்லூரிப் பாடத் திட்டம் இது ஒன்றுதான். 1965-ல் ஏற்படுத்தப்பட்ட இந்தக் கப்பல் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்துள்ளது. சென்னை நகருக்கு இது உலா வருவது இது இரண்டாவது முறையாகும். முன்பு ஒருமுறை 1966-ல் சென்னைக்குவந்துள்ளது.

இந்தக் கப்பலில் ஏறத்தாழ 450 மாணவ-மாணவியர் கல்வி பயிலுகின்றனர். அமெரிக்காவிலுள்ள 200 கல்லூரிகள், பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்கள்

இந்த அரசின் பொறுப்பு

"அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்" என்பதுபோல், கோரிக்கைகளை விடுத்தால்தான் சர்க்காரில் சலுகை கிடைக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அழாத பிள்ளைக்கும் பால் தரும் பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு.

சில நேரங்களில் அழுத பிள்ளைக்குக்கூடப் பால் தரக்கூடாது என்று டாக்டர்கள் கூறுவார்கள். தாய்க்குக் காய்ச்சலிருந்தால் குழந்தைக்குப் பால் தரக்கூடாது. அப்படித் தந்தால் தாய்க்குள்ள காய்ச்சல் பிள்ளைக்கும் வந்து விடும் என்பார்கள் டாக்டர்கள்.

இன்று அரசாங்கமே காய்ச்சலில் இருக்கிறது. அழுகிற குழந்தையைப் பார்த்துக், 'கொஞ்சம் இரு! பால் குடித்தால் உனக்கும் காய்ச்சல் வரும்!' என்று சொல்லும் நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

தாய் ஆரோக்கியமாக இருந்தால், தூங்கிக்கொண்டிருக்கிற பிள்ளையைத் தட்டி எழுப்பிப் பால் தருவாள். அந்த அளவுக்குப் பரிவு மிக்க தாய்தான் இந்த அரசாங்கம்.

ஆகவே, நீங்கள் தந்த கோரிக்கையை இந்த அரசாங்கம் புறக்கணிக்காது!"—மன்னார்குடியில் 11—4—71 அன்று நடைபெற்ற தமிழ் நாட்டுத் தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பாக தஞ்சை மாவட்டக் கிளையின் நான்காவது மாநாட்டில் தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறியுள்ளார்.



இவர்களில் 279 பேர் பெண்கள். கலிபோர்னியாவில் ஆரஞ்சு நகரிலுள்ள சாப்மன் கல்லூரியினர் இந்தப் பாடத் திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இப்போதையத் திட்டம் நான்கு மாதக் கல்விப் பயணமாகும்.

12 வகுப்பு அறைகளும், கடல் வாழ் உயிரினங்களின் ஆய்வுக் கூடம் ஒன்றும், 280 இருக்கைகள் வசதியுள்ள அரங்கு ஒன்றும், 9,000 புத்தகங்கள் கொண்ட நூலகமும், எல்லா வசதிகளுமுள்ள மருத்துவ மனையும் உள்ளது. இது தவிர மாணவ மாணவியர், பேராசிரியர்கள் தங்கத் தனித்தனி அறைகள் உள்ளன. மாணவர்கள் இருவராகவும் தனித்தனியாகவும் தங்குகின்றனர்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களையும், கல்லூரிகளையும் சேர்ந்த 35 பேராசிரியர்கள் மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கின்றனர்.

ஆங்காங்கே தங்குமிடங்களில், அந்த நாட்டைச் சேர்ந்த பேராசிரியர்கள் சிலரையும் கப்பலுக்கு வந்து ஓரிரு நாட்கள் கல்வி கற்பிக்க அழைக்கிறார்கள்.

மலேசியாவிலிருந்து சென்னைக்கு வரும்போது பம்பாய் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ராமு பண்டிட் என்ற பேராசிரியர் 4 நாட்கள் இதுபோன்று அழைக்கப்பட்டு, மாணவர்களுக்குக் கல்வி போதித்தார்.

சென்னையில் சென்னைப் பல்கலைக் கழகத்துத் தொல்பொருளியல் பேராசிரியர் டாக்டர் டி. வி. மகாலிங்கம் இம்மாணவர்களுக்கு விரிவுரையாற்றினார். பொருளியல் பேராசிரியர் டாக்டர் வி. சண்முகசுந்தரம், துணைப் பேராசிரியர் டாக்டர் கே. ராஜரத்தினம், ஆகியோரும் மாணவர். தத்துவத்துறைத் தலைவர் டாக்டர் டி. எம். வி. மகாதேவன் தலைமையில் தத்துவம் பற்றிய விவாதமும் நடந்தது.

பிப்ரவரித் திங்கள் முதல்நாள், லாஸ்ஏஞ்செல்ஸ் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட இந்தக் கப்பல் மலேசியாவழியாகச் சென்னை வந்து, இங்கிருந்து இலங்கைக்குச் சென்றது.

பல்வேறு நாடுகளைச் சுற்றிப் பார்ப்பதுடன் நேரில் நாட்டின் மக்களைச் சந்திக்கவும், கலை, பண்பாடு முதலியவைகளை நேரில் கண்டறியவும் இந்தப் பல்கலைக் கழகம் வகை செய்கிறது.

ஆங்காங்கே துறைமுகங்களில் தங்கும்போது மாணவ-மாணவியர் அந்த நாட்டினைச் சுற்றிப் பார்க்க அனுமதிக்கப்படுகின்றனர்.

சென்னைத் துறைமுகத்தில் தங்கிய நாட்களில் மாணவ-மாணவியர் தனித்தனிக் குழுவினராக சென்னை நகரம் தவிர, மதுரை, புதுச்சேரி, பெங்களூர் ஆகிய நகரங்களுக்கும் சென்று வந்தனர்.

தமிழ் மக்களின் இனிய பண்பு, தன்னைப் பெரிதும் கவர்ந்ததாக மாணவர் ஜான் குறிப்பிட்டார்.

''நெற்றியில் சிவப்பாக வைக்கிறார்களே அது என்ன? பூக்களை ஏன் தலையில் வைக்கிறார்கள்?' என்று ஆவலோடு கேட்டார் ஒரு பெண்மணி.

சென்னை மாநகரத் தந்தை சா. கணேசன் வரவேற்கிறார்.

பல வர்ணச் சேலைகளில், மயங்கிய மாணவி ஒருவர் சேலை கட்டி தலையில் பூச்சூடித் தன்னை அலங்கரித்துக் கொண்டார். உடுப்பணிந்த தனது சக மாணவிக்கும் தலையில் பூச்சூடி மகிழ்ந்தார்.

'' ஒவ்வொரு நாட்டில் எங்களுக்குப் புதுப்புது அனுபவங்கள் கிடைக்கின்றன, புதிய மக்களைச் சந்திப்பதிலுள்ள ஆனந்தம் வேறு எதிலுமே கிடையாது'' என்று மனமகிழ்ந்தார் மற்றொரு மாணவர். கண்ணில் தென்பட்டவற்றையெல்லாம் தங்கள் காமிராவில் படமாகச் சுருட்டினர் பலர்.

சின்னாள் தங்கலுக்குப் பின் இந்தப் புகழ் மிக்க கப்பல் சென்னைத் துறைமுகத்திலிருந்து இலங்கைக்குப் பயணமானது.

புதிய கலங்கரை விளக்கங்கள்

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது ஆறு புதிய கலங்கரை விளக்கங்கள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கின்றன. இவற்றில் இரண்டு கலங்கரை விளக்கங்கள் அந்தமான் பகுதியிலும், காம்பே வளைகுடா, கட்ச் வளைகுடா ஆகிய பகுதிகளில் இரண்டு இரண்டு கலங்கரை விளக்கங்களும் அமைக்கப்படும். இவற்றுடன் கூட அந்தமான் பகுதியில் ஆறு கப்பல் எச்சரிக்கை விளக்குகளும் அமைக்கப்படும். கட்ச் வளைகுடாவில் ஏழு ரேடியோ கலங்கரை விளக்கங்கள் நிறுவப்படும். இந்தத் திட்டங்களுக்கு 1·37 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது. கலங்கரை விளக்கங்கள் பற்றிய மத்திய ஆலோசனைக் குழுவின் 50-வது கூட்டம் அண்மையில் டில்லியில் நடைபெற்றபோது இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

'டிப்தீரியா'

ஒரு வகைத் தொண்டை நோய்

தொண்டை நோய். இந்த நோய் மக்களிடையே வெகு காலமாக இருந்து வந்ததற்குச் சான்றுகள் உள்ளன. இரண்டாம் நூற்றாண்டில் எகிப்திய கிரியாக் புண் என்று குறிப்பிடப்பட்ட நோய் இது தான் என்று மருத்துவ சரித்திர வல்லுநர் ஒப்புக்கொள்ளுகின்றனர். Malignant Angina' என்றும் "Croup" என்றும் இந்த நோய் வெகு காலமாகக் கூறப்பட்டு வந்துள்ளது. 1826-ல் பியர் ப்ரிட்டனென "Pierre Bretonneao'. என்னும் ப்ரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மருத்துவர் "டிப்திரிட்" என்னும் பெயரால் இந்நோயை வர்ணித்திருக்கிறார். இதையே ஆங்கிலத்தில் "டிப்தீரியா" என்று கருதுகிறோம். இவர் இதை மற்ற தொண்டை நோய்களிலிருந்து பிரித்து அறிய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். ஆனபோதிலும் வெகுநாட்களுக்குச் சந்தேகப்பட்டதெல்லாம் டிப்தீரியா என்றே மருத்துவர்களால் வழங்கப்பட்டது. 1883-ல் Klebs என்பவரும், 1884-ல் Loefeler என்பவரும் இந்த நோய்க்குக் காரணமான டிப்தீரியாக்கிருமியைக் கண்டுபிடித்தனர். 1888-ல் Roux, Yersin என்ற இருவர் இக்கிருமி உண்டாக்கும் விஷச் சத்தை (exotoxin) கண்டுபிடித்தனர். 1890-ல் Von Behring, Kitasato என்ற இருவர் இந்த விஷச் சத்தை எதிர்ப்பதற்கு வேண்டிய antitoxin கண்டுபிடித்தனர். இவர்களின் சேவையின் பலனாக இப்பொழுது இந்த நோயே வராமல் தடுப்பதற்கும், வந்த பொழுது உடனே கண்டுபிடித்துச் சிகிச்சை செய்வதற்கும் வேண்டிய வசதிகள் ஏற்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் பல பாகங்களில் இந்த நோய் "தொண்டை அடைப்பான்" என்று கூறப்பட்டு வருகின்றது.

குழந்தைகளுக்கு ஏற்படுவது என்றாலும் மற்ற வயதினரையும் பாதிக்கக்கூடியது. இந்த நோய் உலகில் எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது. இந்த நோய் கண்டவர்கள் 5-லிருந்து 10 சதவிகிதம் வரை இறந்து விடுகின்றனர். நம் தமிழ் நாட்டில் மட்டும் நகரங்களில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 3200 பேர் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இவருள் 500 பேர் ஒரு வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள். 2,680 பேர் ஒன்றிலிருந்து 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள். இந்த விவரமானது நகர்ப்புறங்களில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களின் வைத்தியம் செய்யப்பட்ட புள்ளி விவரங்கள். நம் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் நாட்டுப்புறங்களில் இருப்பதையும் நம் மக்கள் அநேகர் நவீன மருத்துவ வசதிகளைப் பயன்படுத்தாததையும் எண்ணிப் பார்க்கும் பொழுது இந்த நோய் நம்மிடையே பெரும் அளவிற்குப் பரவி இருக்கவேண்டும் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

இந்த நோய் ஒரு தொற்று நோய். இது டிப்தீரியா கிருமியால் ஏற்படுகிறது. இந்த நோய் மனிதர்களிடையே பரவுகின்றது. நோயுற்ற குழந்தை அல்லது பெரியவர்களின், தொண்டை, மூக்கு அல்லது தோல் மீதுள்ள புள்ளிகளிலிருந்து வரும் நீரில் இக்கிருமிகள் உள்ளன.

நோயுற்ற ஒருவரிடம் நெருங்கிப் பழகும்பொழுது அவர்களுடைய எச்சிலைச் சுவாசிக்க நேரிடுகின்றது. அப்பொழுது இக்கிருமிகள் பரவும். நோயாளிகள் உபயோகித்த பொருள்களை நாம் சரியாகச் சுத்தம் செய்யாமல் உபயோகித்தால் இந்நோய் நமக்குப் பரவும். இந்த நோய் பாலைக் கொதிக்கவைக்காமல் அருந்தினாலும், பால் மூலம் பரவும். சில சமயம் பசுவின் மடுக்காம்புகளில் இந்நோய் ஏற்படுகின்றது. சில சமயம் பால்காரர் இந்நோயினால் பீடிக்கப்பட்டவராகஇருக்கலாம்.

தொற்று ஏற்படுவதற்கும் நோய் வெளிப்படையாகத் தெரிவதற்கும் உள்ள இடைவேளை, இதை நோய் வளர் காலம் என்றும் சொல்லுகிறோம்—2-லிருந்து 5 நாட்கள் வரையாகும்.

இந்த நோய் கண்டு குணம் அடைந்தோ அல்லது தடுப்பு ஊசி போட்டுக்கொண்டோ உள்ள தாய்க்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் பிறந்த சில மாதங்களுக்கு இந்நோய் தடுக்கும் சக்தியிருக்கிறது.

இந்த நோய் தொண்டையில் வலியில்லாமலும் மிகக் குறைந்த காய்ச்சலுடனே அல்லது காய்ச்சல் இல்லாமலும் ஆரம்பிக்கிறது. நோயாளி வைத்தியரைக் காண வரும்பொழுது சில நாட்களாகிவிடுகிறது. இது தொண்டையில் உண்டாகிறது. இதைத் தவிர மூக்கின் உட்பாகத்திலும் ஏற்படலாம். நம் தோலில் ஏற்பட்டுள்ள புள்ளிகளிலும் இந்நோய் ஏற்படலாம். டிப்தீரியா கிருமி தொண்டையில் இருந்து கொண்டு உற்பத்தி செய்யும் இரத்தத்தில் கலந்து உடலில் பரவுவதால் இந்த நோய் உண்டாகிறது. இந்நோய்க்கு முக்கிய அறிகுறி—மேல் சாம்பல் நிறமான தாள் போன்று ஏற்படுவது. இதை ஒரு பஞ்சு எடுத்துப் பரிசோதித்துப் பார்த்தால் இந்தக் கிருமியைக் காணலாம். இந்நோய் இருதயத்தையும் பாதிக்கிறது. அதனால் சில சமயம் மரணம் உண்டாகிறது. சில சமயம்குணமடைந்து, சில வாரங்கள் கழிந்த பிறகும் இத்தகைய திடீர் மரணம் ஏற்படலாம். இதைத் தவிர இது நரம்புகளையும் பாதிக்கிறது. இதனால் வாதம் ஏற்படுகிறது. சாதாரணமாக வாயின் மேல் பாகம் பாதிக்கப்படுவதால் உண்ணும் உணவை விழுங்க முடியாமல் மூக்கு வழியாகவும் வாய் வழியாகவும் உணவு வெளிப்படும். இது கண்ணையும் பாதிக்கும், கால், கைகளையும் ஓரளவு பாதிக்கும்.

களுக்கு, கழுத்தில் வீக்கம் ஏற்பட்டுத் தலை மிக நிமிர்ந்து பின்புறம் சாய்வாக இருக்கும். இந்த நிலையில் அடைபட்டு மூச்சுத் திணறி இறக்க நேரும். இவ்வகை நோயாளிகளுக்குத் தொண்டையில் வெளிப்புறமிருந்து கீறி, குழாய் பொருத்தி சுவாசிக்கச் செய்தல்—என்னும் சிகிச்சை உடனே செய்யாவிட்டால் மரணம் ஏற்படும்.

இந்த நோய் பற்றிய சந்தேகம் உண்டானால் கிருமிப் பரிசோதனை பண்ணிப் பதில் வரும்வரை காத்திராமல் உடனே சிகிச்சை செய்ய வேண்டியது மிக அவசியம். சிகிச்சை தொடங்கத் தாமதம் கூடாது. தாமதம் ஏற்பட்டால் குணமடைவது கஷ்டம்.

நோய் கண்டால் செய்ய வேண்டியது.

1. நோயாளியைத் தனி அறையில் வைத்துச் சிகிச்சை செய்ய வேண்டும். நோயாளி உபயோகித்த பொருள்களைக் கிருமிநாசினியால் சுத்தம் செய்ய வேண்டும். பாத்திரங்களைக் கொதிக்க வைக்கலாம். கைக்குட்டை போன்றவற்றைக் கொளுத்திவிடலாம் அல்லது கிருமிநாசினி லோஷன் போட்டு வைத்துப் பிறகு துவைத்துவிடலாம். இவ்விதம் தனியாக 14 நாட்கள் வைத்திருக்க வேண்டும்.
2. வீட்டில் பெரியவர்கள் உணவுப் பொருள்கள் உற்பத்தி அல்லது பரிமாறும் தொழிலிலோ அல்லது குழந்தைகளுடன் நெருங்கிப் பழகும் தொழிலிலோ இருந்திருந்தால் அவர்களைக் கிருமிப் பரிசோதனை செய்த பிறகே வேலைக்குப் போக அனுமதிக்கவேண்டும்.
3. குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி குத்தவேண்டும். இந்த நோய் கண்ட செய்தியை

காரிகளுக்கு உடனே தெரிவிக்க வேண்டியது அவசியம். அவர் மேற்கொண்டு இந்நோய் மற்றவர்களுக்குப் பரவாமல் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்.

டிப்தீரியா, கக்குவான் இருமல், டெடனஸ் ஆகிய இம்மூன்று நோய்களையும் தடுப்பதற்கு உரிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மூன்று ஊசிகள் போட்டு இந்நோய் வராமல் தடுக்கலாம். இந்த ஊசிகளுக்கு மத்தியில் இடைவேளை 4-லிருந்து 6 வாரக் காலம். இம்மூன்று ஊசிகள் போட்ட ஒரு வருடம் கழிந்தபின் ஒரு முறை போடவேண்டும்.

இந்நோய் தடுப்பதின் முக்கியத்துவத்தை உணர்ந்து நம் அரசானது தமிழ்நாட்டில் எல்லா மருத்துவமனைகளிலும் மகப்பேறு மருத்துவமனைகளிலும் கிராமப்புறங்களிலும் (ஆரம்ப சுகாதார நிலையங்களிலும்) இத்தடுப்பு ஊசி போட்டுக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். இதுவரை கிராமங்களில் 1964-லிருந்து 1970 வரை 3½ லட்சம் குழந்தைகளுக்கும், 1970-71 ஆண்டில் மட்டும் 89,000 குழந்தைகளுக்கும் இந்த தடுப்பு ஊசி குத்தப்பட்டுள்ளது.

ஆகையால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இந்தத் தடுப்பு ஊசி போட்டுக்கொண்டு இம் மூன்று பயங்கர நோய்கள் ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். நாம் இரண்டு குழந்தைகள் போதுமென்றும் இரண்டுக்கு மேல் எப்பொழுதும் வேண்டாமென்றும் சொல்லும்போது, அவ்விரு குழந்தைகள் இவ்வித பயங்கர ஆனால் தடுக்கக்கூடிய நோயினால் பாதிக்கப்படாமல் பாதுகாப்பது பெற்றோரின் முக்கிய கடமையாகும்.

றுவதில்லை; பிற இனத்தையும் வாழவிடுவதில்லை. ஆனால், மான், முயல் போன்ற தீமையற்ற உயிர்கள் கூட்டங் கூட்டமாகக் கூடி இனமாக வாழ்கின்றன. இனத்தோடு இணைந்து வாழ்கின்றன.

மனிதன் தன் இனத்தோடு கூடிவாழும் இயல்பினன்; மனித வரலாறே இதற்குச் சான்று. தொடக்கக் காலத்திலே மனிதன் விலங்கினங்களில் ஒன்றென வாழ்ந்தான். அன்றும் அவன் கூட்டங் கூட்டமாகக் கூடி வாழ்ந்தான். குகைகளிலே குடியிருந்தான். நாகரிகம் சிறந்து விளங்கும் இன்றும் மனிதன் தனித்து வாழ்வதில்லை; கூடி வாழ்கிறான்,

வைக்கின்றான்.

கண்ணோட்டம் என்னும்
கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ்வுலகு'
என்றார் திருவள்ளுவர்.

பணப் பொருளாதாரம்

மனிதன், சமூகம் எனக் கூடி வாழ்வதால், சமூகத்தில் பொதுப் பணிகளைக் கண்காணிக்க அரசாங்கம் அமைகின்றது. சமூகத்தில் உறுப்பெனத் திகழும் மனிதன் தன்னையும் பேண வேண்டும்; தன்னைச் சார்ந்த தன் சமூகத்தையும் பேணவேண்டும்; சமூகத்தைப் பேணும் பொறுப்பை மக்களின் சார்பில் அரசாங்கம் ஏற்றுக் கொள்கின்றது. அரசாங்கம்

வரி என்றால் என்ன?

டாக்டர். ஓ. இராமகிருட்டிணசாமி.

சமூகம் என்ற அமைப்போடு. குடும்பத்தில் கூட்டு வாழ்க்கை; குடும்பங்கள் பல சேர்ந்து சமுதாயக் கூட்டு வாழ்க்கை; சமூகங்கள் இணைந்து நாடு நயம் பெறுகின்றது. மனிதனைத் தன் இனத்தோடு இணைந்து வாழச்செய்யும் சக்திதான் யாது?

பழகியவர்களிடத்தில் நெகிழ்ந்து அன்புடன் ஒழுகும் பண்பாகிய கண்ணோட்டமே மனிதர்களை இனமென இணைக்கும் இணையற்ற கவினுறு கயிறாகும். கண்ணோட்டம் மக்கள் வாழ்க்கைக்கு அடிப்படை. அது மட்டுமன்று, அஃது சீரிய அழகையும் நல்குகின்றது. அப்பண்பால்தான் உலகியல் நடைபெறுகின்றது! மனித சமுதாயம் அமைகின்றது; மனித இனம் மடியாமல் நிலைத்து வாழ்

தன் பொறுப்பை நிறைவேற்றப் பணத்தின் துணையை நாடுகின்றது. பணப் பொருளாதாரம் நிலவும் இற்றை நாளிலே, பணம் மக்களிடமிருந்து பல வகைகளில் பெறப்படுகிறது. அவ்வகைகளில் ஒன்றுதான் வரி. வரியானது அரசாங்கத்தின் வருமானத்தில் முக்கியப் பகுதி; அரசாங்கம் அதிகப் பொறுப்பை ஏற்று நடத்தும் இற்றை நாளில் வரியானது அதன் வரவு செலவுப் பட்டியலில் (Budget) தலைமை இடத்தைப் பெற்றுள்ளது இயற்கையே ஆகும். இன்று, அரசாங்கம் சமூகத்தின் அமைதியை நிலைநாட்டும் காவல் (Police) அரசாங்கம் மட்டுமன்று; மக்களின் பொது நலனைப் பேணும் பொதுநல அரசாங்கமுமாகும். (Welfare State). பொது நலத்தைப்

சாங்கம்.

வரியின் விளக்கம்

வரி என்றால் என்ன? வரி என்பது மனிதன் சமூகத்தில் இணைந்து வாழ்வதற்காகச் செலுத்தும் விலை. வரி எங்கே தொடங்கி எங்கே முடிவடைகின்றது என்பதைக் கண்டறிதல் கடினம். பேராசிரியர் எட்ச்வொர்க் என்பவர் கூறியபடி, வரி என்ற சொல்லே விளக்கங் காணமுடியாத புதிர். எனினும் வரி இருவகை இயல்புகளை உடைத்தாயுள்ளது. அது அரசாங்கத்திற்குக் கட்டாயமாகச் செலுத்தப்படுவது என்பது ஓர் இயல்பு; வரி செலுத்துபவனுக்கும், அரசாங்கம் அவனுக்கு அளிக்கும் நலத்திற்கும் நேரடியான உடனடியான தொடர்பு இல்லாமை அடுத்த இயல்பு. ஆகவே, வரி என்பது ஆட்சிக் கழகத்தின் பொதுச் செலவிற்கென மக்கள் செலுத்தும் கட்டாயக் கட்டணமாகும். நிலவரி, வீட்டுவரி, வருமானவரி சொத்து வரி போன்றன இதற்கு எடுத்துக்காட்டு. அஞ்சல் கட்டணம், இரயில் கட்டணம் முதலியன வரியெனப்படா. அவை வெறும் கட்டணமே. ஏனெனில் அவைகளைச் செலுத்துபவருக்கும் அரசாங்கம் அளிக்கும் நன்மைக்கும் உடனடியான நேரடியான தொடர்பு உண்டு. கட்டணம் குறிப்பிட்ட தொண்டிற்குக்

> வரி என்பது, மனிதன் சமூகத்தில் இணைந்து வாழ்வதற்காகச் செலுத்தும் விலை; ஆட்சிக் கழகத்தின் பொதுச் செலவிற்கென மக்கள் செலுத்தும் கட்டாயக் கட்டணம் என்பதை விளக்குகிறது இக் கட்டுரை. எத்தகைய வரிமுறை நாட்டுக்கு ஏற்றது என்பதும் இதில் விளக்கப்படுகிறது.

என்பது பொதுவான வாழ்க்கை வசதிக்காகக் கொடுக்கும் விலையாகும்.

வரியின் வகைகள்

வரிகளில் இருவகை உண்டு: ஒன்று நேரடியான வரி; இரண்டாவது மறைமுகமான வரி. நேரடியான வரி என்பது, வரியின் சுமையைத் தாங்குபவராலேயே செலுத்தப்படுவதாகும். அவ்வரியில் வரி செலுத்துபவரும் வரியைத் தாங்குபவரும் ஒருவரே. மறைமுகமான வரியென்பது செலுத்துபவரை விட்டுக் கைமாறி வேறு ஒருவரைச் சார்வதாகும். அவ்வரியில் வரி செலுத்துபவர் ஒருவர். வரியால் இறுதியாகப் பாதிக்கப்படுபவர் வேறொருவர். வருமான வரி, சொத்து வரி (Wealth Tax) போன்றவை முதல் வகையைச் சார்ந்தவை. விற்பனை வரி போன்றவை இரண்டாம் வகையைச் சார்ந்தவை.

வரிகள் பல்வகைகளில் விதிக்கப்படுகின்றன. சில வருமானத்தின் பேரிலும், சில முதலின் பேரிலும்; சில பொருள்களின் பேரிலும், சில சொத்துக்களின் பேரிலும், விதிக்கப்படுகின்றன. வரி எதன் பேரில் செலுத்தப்பட்டாலும் செலுத்துபவன் மனிதனே.

வரியின் விளைவு

வரி விதிப்பால் சமூகத்தில் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. முதற்கண், மக்களது வாங்கும் சக்தி (Purchasing power) அரசாங்கத்திற்கு மாற்றப்படுகிறது. அரசாங்கச் செலவின் மூலம், மீண்டும் அச்சக்தி மக்களிடம் திரும்பி வந்து சேருகின்றது. இதனால் வரி என்பது நாட்டின் உற்பத்தி அளவிலும் வருமானப் பகிர்விலும் தொடர்பு கொள்ளுகின்றது. இத்தொடர்பினால் நாட்டுக்குப் பொதுவான நன்மையது சிறந்ததாகக் கருதப்படும். சிறந்த வரி முறையின் அறிகுறி, நாட்டின் பொருளாதார நலனும். பொருளாதார நலன் உற்பத்திப் பெருக்க முன்னேற்றத்தாலும் நியாயமான பகிர்வாலும் (distribution) ஏற்படும். குறைந்த சக்தியால் நிறைந்த பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலமும், உற்பத்தி அமைப்பைச் சீர்திருத்திக் கழிவைக் (waste) குறைப்பதன் மூலமும், உற்பத்திப் பெருக்கம் நிகழும்; பகிர்வுத் துறையில் வருமான ஏற்றத்தாழ்வைக் குறைத்தல், வருமான வேறுபாட்டைக் குறைத்தல் ஆகியவைகளால் சமுதாய முன்னேற்றம் ஏற்படும். மேலும் ஒருவனது வருமானம் அவனது தேவைக்கும் பயன்படுத்தும் சக்திக்கு மேற்ப அமையற்பாலது. இத்தகைய நன்மைகளை விளைவிக்கக் கூடிய வரிமுறையே நன்முறையெனப்படும்.

அரசாங்கத்தின் செயல் மக்களின் நலனைப் பேணுதலாகும். உற்பத்தியைப் பெருக்கி, அதன் பயனை நியாயமான அடிப்படையில் மக்களிடையே பகிர்ந்தளித்தால் மக்களின் வாழ்க்கை நிலை உயரும். வரி முறை, நியாயமான பகிர்வுக்குக் கருவியாகப் பயன்பட வேண்டும்.

வரிவிதிப்பு விதிகள்

வரி விதிப்பு விதிகள் பலதிறத்தன. அவை முறையே நியாய விதி, நிச்சய விதி, வசதி விதி, சிக்கன விதி, நெகிழ்ச்சி விதி, உற்பத்தி விதி எனப்படுவன. நியாய விதியின்படி நாட்டின் மக்கள் அரசாங்கத்தை நடத்துவதற்கு அவரவர் செலுத்தும் சக்திக்கேற்ப வரி செலுத்தக் கடவர். இதன்படி, செலுத்தும் சக்தி (ability to pay) மிகுந்தவர் அதிக வரி செலுத்துவர்; அது குறைந்தவர் குறைந்த வரி செலுத்துவர்.

சாங்கம், வரி செலுத்தும் மக்கள் ஆகிய இரு பாலருக்கும் பொதுவான விதியாகும். இதன்படி, ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய வரியானது நிச்சயமானதாக இருக்கவேண்டும். செலுத்தும் காலம், செலுத்தும் முறை, செலுத்த வேண்டிய தொகை-ஆகிய ஒவ்வொன்றும் திட்டமாக, வெளிப்படையாக வரிசெலுத்தும் மக்களுக்கும் மற்றையோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அமெரிக்க நாட்டுப் பொருளியலாளர்கள் இவ்விதிக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றனர். அவர்களின் கருத்துப்படி நிச்சயம் என்பது அடிப்படையான விதி. அது நீங்கிய எம்முயற்சியும் வீண் முயற்சிதான்.

வசதி விதியின்படி, வரியானது அதைச் செலுத்தக்கூடிய மக்களின் வசதிக்கேற்ற காலத்திலும், வகையிலும் விதிக்கப்பட வேண்டும். வசதிக்கொவ்வாத முறையிலோ காலத்திலோ வரி விதிக்கப்பட்டால், வரியின் சுமை அதிகமாகத் தெரியும். அதனால் பல இடையூறுகளும் நிகழக் கூடும். சான்றாக, நிலவரி அறுவடைக் காலத்தில் வசூல் செய்யப்படாவிட்டால் உழவன் பெரும் துன்பத்திற்குஆளாவான். வசதி விதி வருமான வரி விதிப்பு முறையில் காணப்படுகிறது. வருமானத்தில் தோற்றுவாயிலேயே (Source) வரி வசூலிக்கப்படுகிறது. சான்றாகச் சம்பளத்தின் பேரில் விதிக்கும் வருமான வரி, சம்பளம் கொடுக்கும் அலுவலகத்திலேயே பிடித்துக் கொள்ளப்படுகிறது.

சிக்கன விதி

சிக்கன விதியின்படி, வரியானது எவ்வளவுக்கெவ்வளவு குறைக்கப்பட வேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு குறைவாக வசூலிக்கப்பட வேண்டும். வசூலிக்கப்படும் தொகை வீண் கழி

பல அலுவலாளர்கள் நியமிக்கப்பட்டால், வரியின் பெரும் பகுதி அவர்களின் சம்பளத்திற்கே ஈடாகப் போய்விடும். ஆதலின், வரியானது மக்களுக்கு அதிகக் துன்பம் அளிக்காத நிலையில் குறைந்த செலவில் வசூலிக்கப்படற்பாலது.

நெகிழ்ச்சி விதியின்படி, வரியானது அரசாங்கத்தில் சூழ்நிலைக்கும் தேவைக்குமேற்ப ஏறவும் இறங்கவும் வல்லதாகஇருக்க வேண்டும். தேவைக்கேற்பச் சுருங்கி விரியும் தன்மை இன்றிமையாததாகும். அதிலாப வரி இதற்குச் சான்று. வரி விகிதத்தை உயர்த்தினல் தொகை அதிகமாகச் கிடைக்கும். குறைந்தால் அரசாங்கத்தில் வரவும் குறையும்.

இறுதியாக, வரிமுறையானது அரசாங்கத்திற்குத் தேவையான வருமானத்தை நல்குவதாக இருக்கவேண்டும். தற்காலத்தில் குறைந்த வரவைக் கொடுக்கும் பல வரிகளைவிட, நிறைந்த வரவைக் கொடுக்கும் சில வரிகளே பெரும்பாலும் வேண்டப்படுகின்றன.

எத்தகைய வரிமுறை ஏற்றது?

பொதுவாகக் கூறுமிடத்து, வரி முறையானது, மக்களின் நலத்தைப் பேணுவதாக அமையற்பாலது. வரி அரசாங்கத்திற்கு வருமானத்தை நல்கும் வெறும் வழி வகையாக மட்டும் கருதப்படாது. வரியானது நாட்டில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்குக் கருவியாக அமையற்பாலது ; அரசியல் முன்னேற்றம் பொருளாதார முன்னேற்றம், சமூகச்சீரமைப்பு முதலியவைகளை ஏற்படுத்தப்பாலது. குறிப்பாக வரி முறையானது நாட்டு மக்களிடையே நிலவும் சொத்து, வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதாக இருக்கற்பாற்று. உள்ளவர்களிடமிருந்து அதிக வரி வசூலிக்கப்பட்டு ஏழைகளின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றத்தாழ்வைக் குறைக்கலாம்.

மேலும் அரசாங்கமானது காவல்துறை, படை முதலியவைகளைப் பேணுவதற்குரிய செலவைக்குறைத்து, ஏழைகள் பயன்பெறத்தக்க கல்வி, சுகாதாரம், போன்ற பொதுநலத் துறைகளில் அதிகமாக முதலீடு செய்ய வேண்டும். அழிவுச் செலவு குறைந்து, ஆக்கச் செலவு மிகற்பாலது. வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு, உடை, எண்ணெய் முதலிய பொருள்களின் பேரில் வரியைக் குறைத்து ஆடம்பரப் பொருள்களின் மேல் வரியை உயர்த்தலாம். அதனால் ஏழைகளின் வரிச் சுமை குறையும். வருமான வரி முற்போக்கானதாக அமைதல் அவசியம். அதாவது வருமானம் உயர உயர வரி விகிதமும் உயர்ந்து கொண்டேபோகவேண்டும். சொத்து வரி (Wealth Tax) மக்களிடையே நிலவும் சொத்து

குறைந்த வரி நிறைவான வசதி

ஏழைகளின்பால் வரிச்சுமை குறைய வேண்டும். அதே சமயத்தில் அரசாங்கத்தின் பொதுப்பணி அவர்களுக்கே பெரிதும் பயன்படுவதாக அமைய வேண்டும். ஒரே விதமான வரித்தொகை ஏழைக்கு அதிகச் சுமையாகும், பணக்காரனுக்குக் குறைந்த சுமையாகும். எடுத்துக்காட்டாக, ரூ. 10 வருமானம் உள்ளவனிடமிருந்து ஒரு ரூபாயை எடுத்துக் கொண்டால், அது அவனுக்குப் பெரிய இழப்பாகும். ரூ. 100 வருமானம் உள்ளவன் ஒரு ரூபாய் கைவிட்டுப் போவதை அதிகமாக உணரமாட்டான். வரி விதிப்பதில் இந்நுட்பம் மறக்கப்படலாகாது. ஆகவே. வரியானது மக்களிடம் வெறுப்பை ஏற்படுத்தும் சுரண்டலாக இல்லாமல், மக்களே விருப்பத்துடன் நல்கும் அன்பளிப்பெனத் திகழ்ந்து, எல்லோருடைய பொது நலனைப் பேணுவதாக அமைதல் அவசியம்.

ஊமைகள் தேர்தலில் போட்டியிட முடியுமா?

அரசியல் சட்டத்திற்கு ஒப்புதல் தெரிவிக்கும் உறுதிமொழியை, வேட்பாளர்கள் முதலில் தெரிவிக்க வேண்டும்; அதனைச் சொல்லாதவர்கள்—சொல்ல முடியாதவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது. ஆகவே ஊமையர் கலந்து கொள்ளமுடியாது.

வசந்தம் வந்தது!

தமிழ்ப் புத்தாண்டு தினம் வசந்தத்தின் முதல்நாள்
வாழ்க்கையில் இனிமையூட்டி, வளம் கொழிக்கச் செய்வது வசந்தம்

மதராஸ் ரி:ஃபைனரீஸ்

எல்லா காலங்களிலும் உங்கள் வாழ்வில் வசந்தம் பரப்ப உறுதியளிக்கிறது.
எம் ஆர் எல்லின் தரமிக்க பதினேரு தயாரிப்புகள் வாழ்க்கையை இனிமையானதாகவும் வசதியுள்ளதாகவும் மாற்றுகின்றன.
தொழில், போக்குவரத்து, வேளாண்மை ஆகிய துறைகளில் எம் ஆர் எல்லின் தயாரிப்புகள் சேவை புரிவதுடன் இல்லங்களிலும் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோட உதவுகின்றன.
அது மட்டுமா? ஐந்நூறு கோடி ரூபாய் மூலதனத்துடன் கூடிய துணைத் தொழில்கள் பல உருவாகவும் எம் ஆர் எல் வழி வகுக்கிறது.
வாழ்வில் வசந்தம் — எம் ஆர் எல்லின் குறிக்கோள் அதுதான்.



உரங்களை அதிகமாகப் பயன்படுத்துகிறார்களோ, அந்த நாட்டில்தான் சராசரி ஹெக்டேர் மகசூல் அதிகமாக உள்ளது. நெதர்லாந்தில் சராசரியாக ஒரு ஹெக்டேர் (2.47 ஏக்கர்) நிலத்தில் 4,360 கிலோ கோதுமை அல்லது 26,200 கிலோ உருளைக்கிழங்கு விளைகிறது. ஜப்பானில் சராசரியாக ஒரு ஹெக்டேரில் 4,950 கிலோ அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. அதே போல் தைவானில் சராசரியாக ஒரு ஹெக்டேரில் 3,780 கிலோ அரிசி கிடைக்கிறது. ஆனால் இந்தியாவில் சராசரியாக ஒரு ஹெக்டேரில் 910 கிலோ கோதுமை அல்லது 1,310 கிலோஅரிசி அல்லது 8,500 கிலோ உருளைக்கிழங்கு மட்டுமே உற்பத்தியாகிறது. இவ்வாறு



குறைந்த மகசூல் இந்தியாவில் கிடைப்பதற்குக் காரணமென்ன?

சராசரியாக ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு நெதர்லாந்தில் 580.79 கிலோ, ஜப்பானில் 321.12 கிலோ, தைவானில் 255.84 கிலோ சத்துக்களை (தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து ஆகிய மூன்றும் சேர்ந்தது) அளிக்கும் பொழுது, நம் இந்தியாவில் சராசரியாக ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு 4.97 கிலோ சத்துக்களையே அளித்துள்ளோம். உலகத்திலேயே இந்தியாவில்தான் மிகவும் குறைந்த அளவில் இரசாயன உரச் சத்துக்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். இதனாலேயே இந்தியாவில் குறைந்த மகசூல் கிடைக்கிறது என்பது தெளிவாகி

உற்பத்தியில் அந்த நாடுகளுக்கும், நம் நாட்டிற்கும் உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ளதாகக் காணப்படுகிறது.

தமிழ் நாட்டில் சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 20·42 கிலோ சத்துக்களை அளித்து வருகிறோம். இது மற்ற மாநிலங்களைவிட அதிகம். தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சை மாவட்டத்தில்தான், இந்தியாவிலேயே மிகவும் அதிக அளவில் இரசாயன உரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன என்பது பெருமைக்குரியது. ஆனால், பயிர்களின் தேவைக்கேற்பவும், மண்ணின் வளத்திற்கேற்பவும் கணக்கிட்டால் பொதுவாகத் தமிழ் நாட்டிலும் சிறப்பாகத்

தஞ்சை மாவட்டத்திலும் இன்னும் உர உபயோகம் பெருக வேண்டியுள்ளது.

விளைச்சலில் 40 சத அளவை இரசாயன உரமும், மண்ணின் வளமுமே கொடுக்கின்றன என்பது ஆராய்ச்சியின் முடிவாகும். எனவே வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும் மண்ணின் வளம் குன்றாமல் காக்கவும் இரசாயன உரமிடுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

நம் உடல் வளர்ச்சிக்கும், நல் வாழ்விற்கும் நாம் எப்படி (Balanced diet) எனப்படும் சமசீர் உணவுகளை உட்கொள்ளுகிறோமோ, அது போல் பயிர்களின் வளர்ச்சிக்கும், அவைகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கும் தழைச்சத்து, மணிச்சத்து,

கிய பயிருணவுகளையும அளககவேண்டும். தழைச்சத்து உரத்தை மட்டும் போட்டுவிட்டால் போதாது ; மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவைகளையும், பயிர்களுக்குத் தேவையான அளவில் போட்டால் தான் பயிர் வளர்ச்சியும் உற்பத்தியும் பெருகும். தழைச்சத்து உரங்களான அமோனியம் சல்பேட், யூரியா போன்றவைகளை இட்டால், பயிரில் ஒரு பசுமையான மாற்றம் தோன்றுகிறது. ஆனால் மணிச்சத்து உரங்களான சூப்பர் பாஸ்பேட், 'ட்ரிபிள் சூப்பர்பாஸ்பேட் ' போன்றவைகளையும், சாம்பல் சத்து உரங்களான மூரியேட் ஆப் பொட்டாஷ், சல்பேட் ஆப் பொட்டாஷ் போன்றவைகளையும் இட்டால், அவைகள்

பயிருனுள்ளே பணி புரிந்து இறுதியிலே மகசூலில் தான் அவைகளின் பயன் தெரியும். எனவே, உழவர்கள் பெரும்பாலும் தழைச்சத்து உரங்களை இடவே முன் வருகின்றனர். பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, ஆகியவைகளைத் தகுந்த அளவில் கலந்து இடுவதும் உழவர்களுக்கு ஒரு பிரச்சனையாக உள்ளது. இந்நிலையை மாற்றிச் சமசீர் உரமிடுவதை ஊக்குவிப்பதற்காகவே பல்வேறு பயிர்களின் தேவைக் கேற்பக் கலப்பு உரங்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தன. தற்பொழுது தமிழ் நாடு அரசு வேளாண்மைத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட 13 கலப்பு உரங்கள் விற்பனைக்குக் கிடைத்து வருகின்றன.

ஆனால இந்தக் கலப்பு உரங்களில் சில குறைபாடுகள் உள்ளன. கலப்பு உரங்கள் தூள் வடிவில் (Powder form) இருப்பதால் தண்ணீராலும், காற்றாலும் அடித்துச் செல்லப்பட்டு விடுகின்றன. கலப்பு உரம் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் தனி உரங்கள் பல்வேறு வடிவில் உள்ளதால், பெரும் துணுக்குகளாக உள்ளவைகள் மூட்டைகளின் அடியில் ஒன்று சேர்ந்து விடுகின்றன. அந்த மூட்டையைப் பிரித்து ஒரு வயலில் இடும் பொழுது, ஒரு பகுதியில் ஒரு வகைச் சத்து மிகுந்தும், மறு பகுதியில் வேறு ஒரு சத்து மிகுந்தும் காணப்படுகிறது. உரமிடும் இயந்திரக் கருவிகளைப் பயன் படுத்தும் பொழுது கலப்பு உரங்கள் பொடியாக இருப்பதால், அக் கருவிகளில் ஒட்டிக் கொள்வதுடன், அடைத்துக் கொள்கின்றன. விரைவாகக் காற்றிலிருந்து ஈரத்தை உறிஞ்சிக் கொள்ளும் தன்மையுடைய தனி உரங்கள் கலப்பு உரங்களைத் தயாரிக்கப் பயன்பட்டிருந்தால், சில சமயங்களில் இவ்வகைக் கலப்பு உரங்கள் கட்டியாகிவிடும் அல்லது பிசுபிசுத்துவிடும். கலப்பு உரங்களில் கலப்படம் செய்து விடுவதும் சுலபமாக இருக்கிறது. கலப்பு உரங்களில் தரக் கட்டுப்பாட்டை நிர்ணயிப்பதும் ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. இத்தகைய குறைபாடுகள் அனைத்தையும் நீக்கி, குறுணை வடிவில் (Granular form) கலப்பு உரங்களைத் தயாரிக்கும் முறை அண்மையில் பழக்கத்திற்கு வந்துள்ளது.

குறுணை வடிவக் கலப்பு உரங்களின் ஒவ்வொரு மணியிலும் குறிப்பிட்ட அளவில் தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து அடங்கியுள்ளது. இக் குறுணை வடிவ உரங்களில் கலப்படம் செய்ய முடியாது. மற்றும் தூள் வடிவக் கலப்பு உரங்களில் உள்ள மேற் கூறிய குறைபாடுகள் அனைத்தும் குறுணை வடிவக்கலப்பு உரங்களில் இல்லை. எனவே தற்பொழுது குறுணை வடிவக் கலப்பு உரங்களின் உபயோகம் உலகெங்கும் பெருகி வருகிறது.

உழவர்களுக்கு உதவி செய்வதையே தன் குறிக் கோளாகக் கொண்ட தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம், குறுணை வடிவக் கலப்பு உரங்களைத் தயாரித்து உழவர்களுக்கு வழங்க முன்வந்தது. தஞ்சைத் தரணியில் மன்னார்குடியைச் சார்ந்த பாமணி கிராமத்தில் சுமார் 27 இலட்சம் மதிப்பீட்டில் குறுணை வடிவ உரத் தொழிற்சாலையைத் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் தொடங்கியது. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவேண்டும்; வேளாண்பெருங்குடி மக்களின் வாழ்வை வளப்படுத்த வேண்டும் என்ற உயரிய குறிக்கோள்களுடன் பணியாற்றும் தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கழகத் தலைவர் திரு. மன்னை நாராயணசாமி, எம்.எல்.சி. அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் 1969 டிசம்பரில் இப்பணியைத் துவக்கினார். அவருடைய அயராத முயற்சியின் காரணமாக உருவாகிய பாமணி உர ஆலையின் தோற்றமே அட்டைப் படத்தில் மிளிருகிறது.

அட்டை சொல்லும் கட்டுரை

பாமணி உர ஆலை நிறுவுவதற்குத் தமிழ் நாடு அரசும், தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனமும் பேருதவி புரிந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளன. மாபெரும் தொழிற்சாலைக் கட்டடமும், வட்ட வடிவமான கிடங்குகளும் கொண்ட இந்தத் தொழிற் சாலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இயந்திரங்கள் அனைத்தும் இந்தியாவிலேயே தயார் செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

பாமணி உர ஆலை ஒரு நாளைக்கு 150 டன் குறுணை வடிவ உரங்களை உற்பத்தி

செய்ய வல்லது. பாமணி உரங்கள் பவுடர் தன்மையில் இருக்காது; ஆனால் ஜவ்வரிசி போன்று சிறு சிறு குறுணைகளாக இருக்கும்; தண்ணீரில் எளிதில் கரையக் கூடியது ; கலப்படம் செய்ய இயலாதது; காற்று அடித்துச் செல்லவும் முடியாது; கட்டியாகவும் மாறாது ; சத்துக்களையும் இழக்காது ; தரத்தில் சிறந்தது; உயர் விளைச்சல் ரகங்களுக்கு ஏற்றது.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட பாமணி உரத் தொழிற்சாலையை தமிழ் நாடு கூட்டுறவு அமைச்சர் திரு சி.பா. ஆதித்தனார்அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் திரு மு. கருணாநிதி அவர்கள் 11—4—1971 அன்று திறந்து வைத்துள்ளார்கள்.

தமிழ் நாட்டிலேயே முதன் முதலாக, பெரிய அளவில் துவக்கப்பட்டுள்ள பாமணி உரத் தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றுக்கு 45,000 மெட்ரிக் டன் குறுணை வடிவ உரங்கள் உற்பத்தி செய்யப்படும். கூட்டுறவு இயக்கத்தின் சாதனைக்கு ஒரு சின்னமாக அமைந்துள்ள இந்த உரத் தொழிற்சாலையில் நெல், கரும்பு, சோளம், நிலக்கடலை, வாழை, பருத்தி ஆகிய பயிர்களுக்கும் தேவையான அளவில் 14 : 21 : 14, 15 : 12½: 12 என்ற இரு விகிதத்தில் உரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

பாமணி உரத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும்குறுணை வடிவ உரங்களைத் தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கழகம் 3000-க்கும் மேற்பட்டுள்ள கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உழவர்களுக்கு எளிய முறையில் கிடைக்க வகை செய்திருக்கிறது.

தமிழ் நாட்டில் ' பசுமைப் புரட்சி ' பரவவும், சிறப்பாக உணவு உற்பத்தியும் பொதுவாக வேளாண்மை உற்பத்தியும் பெருகவும், உழவர்களின் வாழ்வு உயரவும், பொன் விளையும் புதிய பூமியை உருவாக்கவும் பாமணி உர. ஆலை, வழி கோலியுள்ளது. பாமணி உர ஆலையின் துவக்கம், தமிழ் நாட்டின் மறுமலர்ச்சிக்கு மேலும் ஒரு படியாக அமைந்துள்ளது.

வண்ணப் படங்களில்

39-ஆம் பக்கம்.

மேலே : ஆளுநர் அவர்கள், தமிழ் நாடு சட்டப்பேரவையில் உரையாற்றுகிறார்கள்.

கீழே : தமிழ் நாடு முதல்வர் கலைஞர் இடைக்கால நிதிநிலை அறிக்கையை வழங்குகிறார்கள்.

40-ஆம் பக்கம்.

(1) தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தவணை முறைத் திட்டத்தைத் தொழில் அமைச்சர் திரு மாதவன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

(2) தமிழ் நாட்டில் போலந்து நாட்டின் ஒத்துழைப்புடன் வேளாண்மை சம்பந்தப்பட்ட தொழில்கள் துவங்குவது பற்றிப் போலந்து நாட்டின் வணிகப் பிரதிநிதி, தமிழக வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம் அவர்களிடம் உரையாடுகிறார்.

(3) தமிழ் நாடு-பிற்பட்டோர் நல அமைச்சர் திரு க. இராசாராம், அவர்களுக்கு 2—4—71 அன்று வள்ளுவர் கலை மன்றத்தார் வரவேற்பு வழங்கினர். சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு சுந்தரவடிவேலு அவர்கள் உரையாற்றுகிறார்கள்.

(4) பணியிலிருந்தபோது விபத்தில் உயிரிழந்த போக்குவரத்து இன்ஸ்பெக்டரின் பெண் மக்களுக்குச் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 3,000 வழங்கினார்.

41-ஆம் பக்கம்.

(1) சட்டப்பேரவையின் தற்காலிக அவைத்தலைவராக திரு சண்முகம் அவர்கள் 16—3—71 அன்று பதவி ஏற்றார்.

(2) தமிழில் சிறந்த முறையில் குறிப்புகள் எழுதிய அரசு அலுவலர்களுக்கு ஆட்சிமொழிக் குழு, பரிசுகள் வழங்கியது. அந்தப் பரிசினை, தமிழ் நாடு கல்வி அமைச்சர் நாவலர் அவர்களிடமிருந்து வேளாண்மைத் துறையைச் சேர்ந்த அலுவலர் திரு என். ராமலிங்கம் பெறுகிறார்.

(3) குடும்பநல இருவார விழா வேலூரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதனையொட்டி அமைக்கப்பட்ட பொருட்காட்சியினை, நல்வாழ்வுத்துறை அமைச்சர், திரு க. அன்பழகன் அவர்கள் பார்வையிடுகிறார்கள்.

(4) பொதுப்பணித் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களுக்கும், போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களுக்கும் சென்னை எழும்பூரில் உள்ள அசோகா உணவு விடுதியில் வரவேற்பு வழங்கப்பட்டது. அப்போது, பொதுப் பணி அமைச்சருக்கு, மாதிரிப் பேருந்து ஒன்றைப் பரிசு வழங்கினார் போக்குவரத்துத் துறை அமைச்சர்.

42-ஆம் பக்கம்.

1 — 2 மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடு கோட்டையிலுள்ள அண்ணா கலையரங்கில் 7—4—71 அன்று நடைபெற்றது. முதல்வர் கலைஞர் உரையாற்றுகின்றார்.

3. தமிழ் நாடு சட்டப் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு கே. ஏ. மதியழகன் அவர்களை, கல்வி அமைச்சர் நாவலர் அவர்களும், தமிழ் நாடு சட்டமன்ற நிஜலிங்கப்பா காங்கிரஸ் தலைவர் திரு பொன்னப்ப நாடார் அவர்களும், முறைப்படி இருக்கைக்கு அழைத்து வருகின்றனர்.

4. பத்திரிகையாளர்களுடன். தமிழ் நாடு முதல்வர்.

வெண்பாப் போட்டி-8

ஈற்றடி : ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து

முடிவு நாள் : 3—5—1971

பரிசு ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா !





2

3

4

1

2

3



4



அடுத்த இதழ்
தமிழரசு

மதுரைச்
சிறப்பிதழ் மட்டுமல்ல!
உற்பத்தித்திறன் பெருக்கச்
சிறப்பிதழாகவும் வெளிவரும்!!

காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கன்னிமிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த காலே' ஆராய்ச்சிப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB



FDS SPB 177 TMA

காடு வளர்ப்போம்

ஒரு நாட்டின் வேளாண்மை, தொழில், பொருளாதாரம், முன்னேற்றம், நல்வாழ்வு ஆகிய அனைத்தையும் செழிக்க வைக்கும் ஆற்றல் காடுகளுக்கு உண்டு. மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு பொருள்களைக் காடுகள் வழங்குகின்றன. உண்ண உணவு உடுக்க உடை, உறங்க வீடு அளித்து மனித இனத்திற்குச் சேவை செய்வது காடுகளே, மனித இனத்திற்கு மட்டுமன்றி, ஊர்வன, பரப்பன, ஒளிந்து வாழும் கொடிய விலங்குகள் ஆகிய அனைத்திற்கும் வாழ்வளிப்பது காடுகளே என்றால் மிகையல்ல !

பாதுகாப்பு, உற்பத்தி, வாழ்க்கை முறை ஆகிய மும்முனைகளில் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் காடுகள் உதவுகின்றன. காடுகள் செய்யும் பாதுகாப்புப் பணியே முதன்மையானதும் முக்கியமானதுமாகும்.

காடுகளே வான மண்டலத்தின் வெப்ப நிலையைக் குறைத்து, நாலா பக்கங்களிலுமிருக்கும் மேகங்களை ஈர்த்து மழை பெய்வதற்கு மூலகாரணமாக விளங்குகிறது. வான் வளம் சுரக்க, கான் வளம் பெருக்க வேண்டியது நம் கடமையல்லவா ?

ஆறுகளில் கலந்து நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும், மின்சாரத் திட்டங்களுக்கும் உயிர்நாடியாக அமைகிறது. காடுகளின் வடிவில் நிலையான தாவரங்கள் நிலைத்திருக்க நில நீர் மிகவும் முக்கியமாகும். நீர் மட்டம் குறையாதிருக்கக் காடுகளே உதவுகின்றன. மிதமான காலநிலை அமைவதற்கு நாடு நெடுகிலும் பரவலாக உள்ள காடுகளே காரணமாகும். இவ்வாறு பல்வேறு முறைகளில், காடுகள், பாதுகாக்கும் பணி செய்து வருகின்றன.

காடுகள் செய்யும் இரண்டாவது பணி உற்பத்திப் பணியாகும். இப்பணியில் காடுகள் ஆற்றும் பங்கு மிகவும் பாராட்டுதற்குரியதாக அமைந்துள்ளது. மனித இனத்தின் நல்வாழ்வுக்குத் தேவையான பலவகைப்பட்ட பயன்மிகு பொருள்களைக் காடுகள் வழங்குகின்றன. வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் தேவையான விறகு கால்நடைகளுக்கு வேண்டிய புல், வீடுகள் கட்ட, உழவுக் கருவிகள் மற்றும் தட்டு முட்டுச் சாமான்கள் செய்வதற்கு இன்றியமையாத மரங்கள், உரத்திற்கான தழைகள், உண்ணக்கூடிய கனி வகைகள், தோல் பதனிடுவதற்குத் தேவையான பொருள்கள், விலங்குகள் வசிக்க இருப்பிடம், மருந்துச் செடிகள் மற்றும் கொடிகள், மணமுள்ள எண்ணெய்கள், ஆகிய அனைத்தையும் அள்ளி அள்ளி வழங்குவது காடுகளே.

மூன்றாவதாக, காடுகள், நமது வாழ்க்கையை மகிழ்ச்சியுடையதாக ஆக்கிக் கொள்ளவும் வழி செய்கின்றன. நில அமைப்புக்குக் காடுகளே அழகு செய்கின்றன. நம் கண்களுக்குக் குளிர்ச்சியும், மனத்திற்கு மகிழ்ச்சியும் அளித்து, பொழுது போக்கவும், மனமகிழ்வு பெறவும் வாய்ப்பளிப்பது காடுகளே ! நமது காட்டில் உள்ள பல்வேறு சிறந்த விலங்குகள் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் வரும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ளன.

இவ்வாறு மும்முனைகளிலும், முக்கியத்துவம் பெறும் காடுகளின் பராமரிப்பும், பாதுபுற மக்களுக்கும் மலைச்சாதியினருக்கும் குறிப்பிடத்தகுந்த அளவு வேலைவாய்ப்புக்களை அளிக்கின்றன. நம் நாட்டின் காடுகளிலிருந்து கிடைக்கும் பல்வேறு பொருள்கள் உலக வாணிகத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளதுடன், அந்நியச் செலவாணியை ஈட்டித்தருவதாகவும் அமைந்துள்ளன. திட்டமிட்டுக் காட்டுவளத்தைப் பாதுகாப்போமேயானால், உலக வாணிகத்தில் நமது மாநிலக் காட்டுப் பொருள்களுக்கு ஒரு நிலையான இடம் பெறவும், நமது மாநிலத்திற்குத் தேவையான மரம், விறகு, தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் ஆகியவைகளைப் பெறவும், சிக்கனமாகவும், திறமையாகவும் காட்டுப் பொருள்களைப் பயன்படுத்தவும் முடியும்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், அந்நாட்டின் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதியாவது—அதாவது 33.3 சதவிகிதப் பரப்பாவது—காடுகளாக இருக்க வேண்டும் என்று தாவர நிபுணர்கள் கருதுகிறார்கள். அவர்களது கருத்தையே, தன் தேசீய வனக் கொள்கையாக இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழ் நாட்டின் மொத்த நிலப் பரப்பு 1,29,90,100 ஹெக்டேர்களாகும். ஆனால் தமிழ் நாட்டில் உள்ள காடுகளின் பரப்பு 19,25,000 ஹெக்டேர்களேயாகும். இது, தமிழ் நாட்டின் மொத்தப் பரப்பில் 14·8 சத அளவேயாகும். எனவே, இந்தியாவின் தேசீய வனக் கொள்கை அடிப்படையில் ஆராய்ந்தால் தமிழ்நாட்டில் தற்பொழுது உள்ள காடுகளின் பரப்பு மிகவும் குறைவேயாகும்.

காட்டு வளம் பெருக்கி, நாட்டின் வளம் பெருக்குவதையே குறிக்கோளாகக் கொண்ட தமிழ் நாடு அரசின் வனத்துறை பல மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ் நாட்டில் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத் தொடக்கத்திலிருந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவு வரை பல்வேறு திட்டங்களுக்கும் ரூபாய் 54·849 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், காடுகள் வளர்ச்சியில் ஒரு புதுமை புகுத்தப்பட்டது. பாதுகாக்கப்பட்ட காடுகளின் எல்லைக்கு வெளியே பண்ணைக்காடுகள்-கிராமக் காடுகள் வளர்க்கும் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டம் அமைக்கும் திட்டம் ஆகியவைகளின் கீழ், காடுகள் வளர்ப்பு விரிவுபடுத்தப்பட்டதே அந்தப் புதுமையாகும். அதுவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் காடுகள் வளர்ச்சியில் ஏற்பட்ட சிறப்பு நிகழ்ச்சியாகும்.

தமிழ்நாடு அரசு 1967-68 ஆம் ஆண்டு முதல் காடுகள் வளர்ச்சிக்கும், காட்டு வளப் பாதுகாப்புக்கும் மேலும் மிகுந்த முக்கியத்துவம்அளித்து வருகிறது என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்களால் அறிந்து கொள்ளலாம்.

ஆண்டு.		காடுகள் வளர்ச்சிக்காகச் செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்.)
1967-68	..	93·93
1968-69	..	96·84
1969-70	..	74·88
1970-71 (நவம்பர் வரை).		42·72
மொத்தம்	..	308·37

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அதாவது 15 ஆண்டுகளில், காடுகள் வளர்ச்சிக்காகத் தமிழ்நாட்டில் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 549·84 இலட்சமே, ஆனால் இன்றைய தமிழ் நாடு அரசு சுமார் 3 ஆண்டு 8 மாத காலத்தில் ரூபாய் 308·37 இலட்சம் செலவில் காடுகள் வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றியுள்ளது என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாடு அரசின் வனத்துறை 1967-68-ஆம் ஆண்டு முதல் 1970-ஆம் ஆண்டு நவம்பர் வரை கீழ்க்கண்ட சாதனைகளை நிறைவேற்றியுள்ளது.

1. பண்ணைக் காடுகள்—கிராமக் காடுகள் வளர்க்கும் திட்டம்.

கிராம புறம்போக்கு நிலங்களிலும், சிறு பாசன ஏரி அல்லது குளங்களின் நீர் பிடிப்பு (Tank bed) பகுதிகளிலும் காடுகள் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின் கீழ் ரூபாய் 19.63 இலட்சம் செலவில் 8,103 ஹெக்டேரில் பண்ணைக் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன.

2. விறகுக்கான மரங்கள் வளர்க்கும் திட்டம்.

நகர மக்களின் விறகுத் தேவையை ஈடு செய்வதற்காக மக்கட் தொகை அதிகமாக உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு அருகில் உள்ள காடுகளில் விறகுக்கான மரங்களை வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின் கீழ் 3,336 ஹெக்டேரில் ரூபாய் 21.14 இலட்சம் செலவில் விறகுக்கேற்ற மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

3. பொருளாதார முக்கியத்துவம் மிக்க மரங்கள் வளர்க்கும் திட்டம்.

(1) தேக்கு மரம் வளர்த்தல்.—கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், செங்கற்பட்டு, நீலகிரி மாவட்டங்களில் உள்ள தகுதியான இடங்களில் தேக்கு, மற்றும் இதர உறுதிமிக்க மரவகைகளை வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். சென்ற மூன்று ஆண்டு எட்டு மாதக் காலத்தில் 1,683 ஹெக்டேர் நிலப் பரப்பில் ரூபாய் 4·28 இலட்சம் செலவில் தேக்கு மற்றும் இதர உறுதி மிக்க மர வகைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

வகைகளை வளர்த்தல்.—தீப்பெட்டி மற்றும் 'பிளைவுட்' தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களை வழங்கத் தகுதியான இடங்களில் மென்மை வாய்ந்த மர வகைகளை உற்பத்தி செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும் இத்தகைய மரங்கள் ரூபாய் 1.90 இலட்சம் செலவில் 1,074 ஏக்கரில் வளர்க்கப்பட்டுள்ளன.

(3) சவுக்கு வளர்க்கும் திட்டம்.—தமிழ்நாட்டிற்குத் தேவையான விறகுக் கட்டைகளை வழங்குவதற்காக, படுகை நிலங்களிலும், கடற்கரை ஓரங்களிலும், சவுக்கு மரங்களை வளர்ப்பதே இத் திட்டத்தின் குறிக்கோளாகும். இத் திட்டத்தின் கீழ் 1,072 ஹெக்டேரில் ரூபாய் 5.86 இலட்சம் செலவில் சவுக்கு மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

(4) வாட்டில் மரம் வளர்த்தல்.—மரக்கூழ் தயாரித்தல், தோல் பதனிடுதல் போன்ற காடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு, வாட்டில் மரக்கட்டைகளும், வாட்டில் மரப்பட்டைகளும் மதிப்பு வாய்ந்த மூலப் பொருள்களாகத் திகழ்வதால், நீலகிரி மற்றும் மேல்பழனிப் பகுதிகளில் வாட்டில் மரங்களை வளர்ப்பதே இத் திட்டத்தின் இலட்சியமாகும். வாட்டில் மரத்திலிருந்து 'ரயான்' என்னும் செயற்கைப் பட்டு தயாரிக்கப்படுகிறது. இதன் முக்கியத்துவத்தைக் கருதியே, ரூபாய் 18.19 இலட்சம் செலவில் 2,872 ஹெக்டேர் பரப்பில் வாட்டில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

(5) சந்தன மரங்கள் வளர்க்கும் திட்டம்.—சந்தன மரக் கட்டைகள் தமிழ்நாட்டிற்குக் குறிப்பிடத் தகுந்த வருவாயை அளிக்கின்றன. டிசம்பர் 1970 முடிய உள்ள அரை ஆண்டில் மட்டும் தமிழ்நாடு வனத் துறையால் 650 மெட்ரிக் டன் சந்தனக் கட்டைகளை ரூபாய் 56,21,953—50-க்கு விற்கப்பட்டுள்ளது என்றால், சந்தனக் கட்டைகளின் முக்கியத்துவம் புலனாகிறதல்லவா ? எனவேதான் தமிழ்நாடு அரசு நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூபாய் 10 இலட்சம் செலவில் மரங்களை வளர்க்க முடிவு செய்து, இதுவரை 587 ஹெக்டேரில் ரூபாய் 1.96 இலட்சம் செலவில் சந்தன மரங்களை வளர்த்துள்ளது.

(6) விரைந்து வளரும் மரங்களை வளர்க்கும் திட்டம்.—காகிதம், ரயான், 'சிப்போர்டு' போன்ற மர அடிப்படையான தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களைத் தொடர்ந்து வழங்குவதற்காக விரைந்து வளரும் மர வகைகளை உற்பத்தி செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதாவது 5 ஆண்டுக் காலத்தில் ரூபாய் 75 இலட்சம் செலவில் 12,000 ஹெக்டேரில் விரைந்து வளரும் மரவகைகளைத் தமிழ்நாட்டில் வளர்க்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், மூன்று ஆண்டு எட்டு மாதக் காலத்திலேயே 10,097 ஹெக்டேரில் ரூபாய் 59.74 இலட்சம் செலவில் விரைந்து வளரும் மர வகைகளை வளர்த்துள்ளது தமிழ்நாடு அரசு. இது வனத் துறையின் சாதனைக்கு ஓர் சான்றாகும் என்றால் மிகையாகாது.

(7) ஆற்றங்கரை, வாய்க்கால்கரை, ஏரிக்கரை ஆகியவைகளில் காடுவளர்த்தல்.—மரங்களின் தேவையை ஈடு செய்யவும், மண்ணரிப்பைத் தடுக்கவும், தேக்கு முதலிய பொருளாதார முக்கியத்துவம் உள்ள மரங்களை ஆறு, வாய்க்கால், ஏரி ஆகியவைகளின் கரைகளில் வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின் கீழ் 1,915 ஹெக்டேரில் ரூபாய் 6.40 இலட்சம் செலவில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

(8) ரப்பர் மரம் வளர்க்கும் திட்டம்.—ரப்பர் பல்வேறு வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் மரங்களை வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு அரசு வனத்துறை நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூபாய் 100 இலட்சம் செலவில் 800 ஹெக்டேரில் ரப்பர் வளர்க்கத் திட்டமிட்டு, இதுவரை ரூபாய் 54.30 இலட்சம் செலவில் 726 ஹெக்டேரில் என்பதும் குறிப்பிடத் தகுந்த சாதனையாகும்.

4. வனவிலங்குகளைப் பாதுகாக்கும் திட்டம்.

தமிழ்நாட்டில் வனவிலங்குகளைப் பாதுகாப்பதும், அவைகளின் நிலையை உயர்த்துவதுமே இத்திட்டத்தின் குறிக்கோள்களாகும். இத்திட்டங்களின்கீழ் சரணாலயங்களை மேம்படுத்தும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன; கிண்டி பூங்காவில் மனமகிழ் மன்றம் ஏற்படுத்தப்பட்டது; நான்கு மறைவிடங்களும், சாலைகளும் அமைக்கப்பட்டன; முதுமலை சரணாலயத்தில் 'சில்வான் லாட்ஜ்' அமைக்கப்பட்டது; முதுமலை விலங்குகள் சரணாலயம் வேடந்தாங்கல், பறவைகள் சரணாலயம், மான் பூங்கா, சிறுவர் பூங்கா, ஆகியவைகள் மேம்படுத்தப்பட்டன.

5. வேளாண்மை உற்பத்தித் திட்டம்.

அந்நியச் செலாவணியை அள்ளித் தந்திடும் முந்திரி உற்பத்தியைப் பெருக்க, தகுந்த இடங்களில் முந்திரி மரங்களை வளர்ப்பதும், ஏற்கனவே வளர்க்கப்பட்டுள்ள முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் இதுவரை ரூபாய் 21.28 இலட்சம் செலவில் 4,310 ஹெக்டேரில் முந்திரி மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

6. அரக்கு உற்பத்தித் திட்டம்.

அரக்கு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் அரக்கு ஊன் வழங்கி (Lac host trees) மரங்கள் ரூபாய் 1·10 இலட்சம் செலவில் 143 ஹெக்டேரில் வளர்க்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்திலுள்ள அரக்குத் தொழிற்சாலை மேம்படுத்தப்பட்டு வருகிறது.

சாஸ்திரி-சிரிமாவோ உடன்பாட்டின்படி 5,25,000 பேர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகத் திருப்பி அனுப்பப்படுவார்கள். அவ்வாறு அகதிகளாக வருபவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டங்களில் ஒன்றாக நீலகிரி மாவட்டத்தில் 1,500 ஹெக்டேரில் தேயிலைத் தோட்டம் அமைக்கப்படும். அத்

தேயிலைத் தோட்டங்களில் 5,000 அகதிகள் குடியமர்த்தப்படுவார்கள். இத் திட்டத்தின் கீழ் 1969-70-ஆம் ஆண்டில் 25 ஏக்கரிலும் 1970-71 (நவம்பர் வரை) 103 ஏக்கரிலும் தேயிலைத் தோட்டம் அமைக்கப்பட்டு 116 அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் 800 ஹெக்டேரில் ரப்பர் தோட்டம் அமைத்து மர்த்தும் திட்டம் உருவாகியிருக்கிறது. இதுவரை 100 ஹெக்டேரில் ரப்பர் தோட்டம் அமைக்கப்பட்டு 16 அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பல்வேறு பயன்மிகு திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசு வனத் துறை, மண்ணரிப்பைத் தடுக்கும் வேலைகளிலும், அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும், காடுகளைப் பாதுகாப்பதிலும், காடுகள் பற்றிய ஆராய்ச்சி செய்வதிலும் ஈடுபட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு வனத் துறையின் சாதனை காரணமாகச் சென்ற 3 ஆண்டு 8 மாதக் காலத்தில் ரூபாய் 12,38,26,925 வருவாய் கிடைத்துள்ளது. இதில் செலவு ரூபாய் 9,51,01,246 போக ரூபாய் 2,87,25,679 எஞ்சி (surplus) உள்ளது. இது உண்மையிலேயே பாராட்டிற்குரிய செயலாகும்.

இவ்வாறு நாட்டு வளம் செழிக்க, காட்டு வளம் பெருக்கி வரும் தமிழ்நாடு அரசு வனத் துறையினருக்குப் பொதுமக்கள் அனைவரும் தங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.





"**வ**ணக்கம் சாமி" என்று கூறிக்கொண்டே இரு கைகளையும் உயரே தூக்கி, குனிந்து, பணிவுடன்கும்பிட்டான் வேலன்.

"வணக்கம்" என்று கூறிவிட்டு "உட்காருங்கள்" என்று நாற்காலியைக் காட்டினார் மண்டல மக்கள் தொடர்பு அலுவலர்.

"பரவாயில்லைங்க சாமி நான் நின்றுகொண்டே பேசுறேனுங்க சாமி" என்றான் வேலன்.

"முதலில் நாற்காலியில் உட்காருங்கள் பிறகு பேசிக்கொள்ளலாம்" என்றார் மக்கள் தொடர்பு அலுவலர்.

"என்னைவிட வயதில் மூத்தவர் நீங்கள். அப்படியிருந்தும் நீங்கள் என்னை சாமி, சாமி என்று கூப்பிடுவது முறையல்ல. சாமி சாமி என்று சொல்லக் கூடாது என்று நான் உங்கள் ஊருக்கு வந்தபோதே சொல்லியுள்ளேன். நீங்கள் இன்னும் அப்பழக்கத்தை விடவில்லை போலிருக்கிறதே" என்றார் மக்கள் தொடர்பு அலுவலர்.

"அதெப்படிங்க முடியும்? நீங்க உயர்ந்த சாதி. நான் தாழ்ந்த சாதி. நீங்க நிறையப் படித்து பெரிய வேலைக்கு வந்திருக்கீங்க! நான் இன்னும் கூலி வேலை செய்பவன் தானே! நீண்ட காலமாக வந்துள்ள பழக்கத்தைத் திடீரென்று நிறுத்திக் கொள்ள முடியுங்களா?" என்றான் வேலன்.

"முயற்சி செய்தால் முடியாதது என்று ஒன்றும் இல்லிங்க. ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமே! தாழ்த்தப்பட்ட மக்களெல்லாம் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்பதற்காகவே தமிழ்நாடு அரசு உங்களுக்கெல்லாம் பாடுபட நிலமும் குடியிருக்க வீட்டு மனையும் கொடுத்து பல சலுகைகளை அளித்து உதவுகிறது. உங்கள் குழந்தைகளெல்லாம் கல்வி கற்றுப் பெரிய வேலைக்கு வந்து, சமுதாய உயர்வு பெறவேண்டும் என்பதற்காகவே பல சலுகைகளை வழங்கி வருகிறது. அச்சலுகைகளையெல்லாம் பயன்படுத்திப் பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும் மேம்பாடு அடைந்து விடுவீர்களேயானால், சமுதாயத்திலே ஏற்றத் தாழ்வு அகன்றுவிடும். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற நிலைமாறி 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற நிலை மலரும்" என்றார் மக்கள் தொடர்பு அலுவலர்.

"நீங்கள் சொல்வது கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில் எவ்வளவு சங்கடங்கள் உள்ளன தெரியுங்களா? நான் இப்படிக் கேட்டுவிட்டேனே என்று கோபிச்சுக்காதிங்க" என்றான் வேலன்.

வற்ற நிலைமையை ஏற்படுத்துவதில் பல சங்கடங்கள் உள்ளன. அதற்காக நாம் சும்மா இருந்துவிடுவதா? சங்கடங்களை எல்லாம் எதிர்த்துப் போராடினால்தான் வெற்றி கிடைக்கும்" என்றார் மக்கள் தொடர்பு அலுவலர்.

"நீங்கள் சொல்வது சரிதான் உங்களைப் போலவே எல்லோரும் இருந்துவிட்டால் பரவாயில்லை. ஆனால், பெரும்பாலோர் தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் தாழ்த்தப்பட்டவர்களாகவே தான் இருக்க வேண்டும் என்றல்லவா எண்ணுகிறார்கள்! இது பெரிய விஷயமுங்க. நான் வந்த காரியம்......" என்றி கூறி தயங்கினான் வேலன்.

"சரி! என்ன காரியமா வந்தீங்க! அதைச் சொல்லுங்க" என்றார்.

"என் பையனுக்கு, வேலைக்காக ஒரு சிபாரிசுக். கடிதம் கொடுத்தீர்களே, அது முடியலிங்க" என்றான் வேலன்.

"ஆமாங்க. இன்று காலையில் தான் என் நண்பர் அது பற்றி எழுதியிருந்தார். உங்க பையன் 'எஸ்.எஸ்.எல்.சி.' பாஸ் செய்திருக்கானே தவிர, அவனுக்கு தட்டெழுத்தோ, அல்லது 'சுருக்கெழுத்தோ' தெரியாது. அது தெரிந்திருந்தால் தான் வேலை கொடுப்பார்களாம். அப்படித் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் அனுப்புமாறு எழுதியுள்ளார்" என்றார்.

"தட்டெழுத்துக் கத்துக்கணும், கத்துக்கணும் என்று பல தடவை சொன்னானுங்க. நான் கேட்கவில்லைங்க. இப்ப வேறு என்ன செய்யலாமுன்னு சொன்னீங்கன்னா நல்லா இருக்கும்' என்றான் வேலன்.

"தட்டெழுத்துக் கத்துக்கச் சொல்லுங்களேன்"

"அதுக்கெல்லாம் பண வசதி இல்லிங்களே"

ளர் தட்டெழுத்து அல்லது சுருக்கெழுத்துப் பயிற்சி பெற அரசாங்கம் உதவி செய்யுதுங்க."

"அதுபற்றி! விவரத்தைச் சொல்லுங்க எனக்கு."

"நமது தமிழ்நாட்டில் தற்பொழுது தாழ்த்தப்பட்ட வகுப்பிலும், மலைசாதி வகுப்பிலும் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி பெற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பு, மலைசாதி வகுப்புகளைச் சேர்ந்தவர்களுக்கெனப் பல்வேறு துறைகளிலும் பல வேலைகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், பயிற்சி பெற்றவர்கள் கிடைக்காத காரணத்தால், அவ் வேலைகள் காலியாக வைக்கப்பட்டுள்ளன. அல்லது பயிற்சி பெற்ற உயர்ந்த சாதியினருக்குக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந் நிலையைப் போக்க நமது தமிழ் நாடு அரசு ஒரு புதிய திட்டத்தைக் கொண்டுவந்துள்ளது".

"அதைப் பற்றிக் கொஞ்சம் விவரமாச் சொல்லுங்க".

"தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும், மலைசாதி வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் **1971-72**-ஆம் ஆண்டில் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவற்றில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் மட்டும் பயிற்சி அளிக்கப்படும்."

"எவ்வளவு பேருக்கு இந்த ஆண்டில் பயிற்சி அளிக்கப்படுமுங்க?"

"சென்னையில் 100 பேர்களுக்குத் தட்டெழுத்துப் பயிற்சியும், 50 பேர்களுக்குச் சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படும். மதுரை, திருச்சி, கோவை ஆகிய மூன்று இடங்களிலும், ஒவ்வொரு களுக்குத் தட்டெழுத்துப் பயிற்சியும் 25 பேர்களுக்கு சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படும். ஆக மொத்தம் இந்த ஆண்டில் 250 பேர்களுக்குத் தட்டெழுத்துப் பயிற்சியும், 125 பேர்களுக்குச் சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படும். இந்த எண்ணிக்கையில் கீழ்நிலை மற்றும் மேல்நிலை (Lower and Higher) ஆகிய இரண்டும் அடங்கும்.

"பயிற்சி பெற வேண்டிய காலம் எவ்வளவுங்க?"

"தட்டெழுத்து கீழ்நிலைத் தேர்வுக்கு 10 மாத காலமும், தட்டெழுத்து மேல்நிலைத் தேர்வுக்கு (தட்டெழுத்து கீழ்நிலைத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள்) 6 மாத காலமும், சுருக்கெழுத்துத் தேர்வுக்குச் செல்ல ஒவ்வொரு நிலையிலும் ஒரு ஆண்டுக் காலமும் பயிற்சிபெற வேண்டும்"

"இந்தப் பயிற்சி பெற இன்ன நிறுவனத்தில்தான் சேர வேண்டும் என்று ஏதேனும் விதிமுறை உள்ளதுங்களா?"

"சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய 4 நகரங்களில் உள்ள அரசினர் அங்கீகாரம் பெற்ற தனியார் வாணிபக் கல்வி நிறுவனங்களில் மட்டுமே சேரலாம்."

"இப் பயிற்சிக்கு ஆகும் செலவைப் பயிற்சியாளர்களின் பெற்றோர்கள் தான் கொடுக்க வேண்டுங்களா?"

"தேவையில்லை! இப்பயிற்சிக்கு ஆகும் எல்லா வகைச் செலவுகளையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும்.."

"என்னுடைய ஊர் திருச்சியிலிருந்து 60 மைலுக்கு அப்பால் உள்ளது. என் பையன் திருச்சியில் தங்கி இப் பயிற்சி பெற வேண்டுமானால், சாப்பாட்டுச் செலவு, ரூம் வாடகை என்றால் பணம் கட்ட முடியுங்களா?"

"அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம். அதற்கும் அரசாங்கமே வழி செய்கிறது. பயிற்சி பெறும் நகருக்கு ஐந்து மைலுக்கு அப்பால் உள்ள ஊரிலிருந்து வந்து அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட வணிகக் கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கு அரிசன நல விடுதியில் இலவசமாகத் தங்கும் வசதியும், உணவு வசதியும் அளிக்கப்படும்.'

"இது மிகவும் நல்ல திட்டம் என்று நினைக்கிறேனுங்க. இப்பயிற்சி பெறுபவர்களின் பெற்றோர்களுக்கு ஆண்டு வருமானம் இவ்வளவு தான் இருக்க வேண்டும் என்று ஏதேனும் வரம்பு உள்ளதுங்களா?"

"வழக்கமாகப் பின்பற்றப்படும் ஆண்டு வருமான எல்லை வரம்பு இத்திட்டத்தைப் பொறுத்தவரை வற்புறுத்தப்படக்கூடாது என்று அரசு வலியுறுத்தியுள்ளது."

"அப்போ என் பையனையும் இப்பயிற்சிக்கு அனுப்பிவைக்கிறேனுங்க."

அப்பொழுது தட்டெழுத்து, சுருக்கெழுத்துப்பயிற்சி நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் நல்லதம்பி என்பவர் வருகிறார். அவரையும் வேலனின் அருகில் அமரச் சொல்லிவிட்டு, வேலனை நல்லதம்பிக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார்.

"தாழ்த்தப்பட்ட வகுப்பு, மலைச்சாதி வகுப்பு ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கு தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி அளிப்பது பற்றிக் கொஞ்சம் தெளிவாக தெரிந்து செல்லலாம் என்று வந்தேனுங்க" என்றார் நல்லதம்பி.

"நாங்கள் இதுவரை அத்திட்டம் பற்றித் தான் பேசிக்கொண்டிருந்தோம். நல்ல வேளை நீங்களும் வந்து சேர்ந்தீர்கள்.

நிறுவனத்தில் சேர்த்துப் பயிற்சி அளிக்கணும். இந்த உதவியை அவசியம் எனக்கு செய்யணும்'' என்றார் மக்கள் தொடர்பு அலுவலர்.

''ஐயா சொல்லிவிட்ட பின்பு நான் மறுப்பேனுங்களா? நம்ப நிறுவனத்திலேயே அவருடைய பையனைச் சேர்த்து பாஸ் பண்ண வைத்து விடுகிறேன். அப்பையனைப் பற்றிய கவலையே இனிமேல் வேண்டாம் உங்களுக்கு. மாதக் கட்டணம், தேர்வுக் கட்டணம் முதலியவைகளை எப்படி பெறுவது என்பது பற்றி கொஞ்சம் சொல்லுங்க ஐயா'' என்றார் நல்லதம்பி.

''பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் பெயர், சாதி (தாழ்த்தப்பட்டவர்கள் அல்லது மலை சாதியினர்), பயிற்சிக்காக எடுத்துக் கொண்ட பாடம், பயிற்சிக் காலம், பயிற்சிக்காக ஆகக்கூடிய செலவு விவரங்கள் முதலியவற்றை மாவட்ட நல அலுவலர் (District Welfare Officer) அவர்களுக்குப் பயிற்சி நிலையத் தலைவராகிய நீங்கள் அனுப்பி வைக்க வேண்டும். இந்த விவரங்கள் கிடைத்த உடனே, மாவட்ட நல அலுவலர் அவர்கள் பயிற்சி பெறும் மாணவர்களுக்குரிய முதல் மாதக் கட்டணத் தொகையை ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள் உங்களுக்கு கிடைக்குமாறு அனுப்பிவைக்க ஆவன செய்வார்.''

''அடுத்து வரும் மாதங்களுக்கு என்ன செய்யறது சார்?''

''இரண்டாவது மாதத்திலிருந்து பயிற்சி நிலையத்தலைவர்கள் பயிற்சி பெறும் மாணவர்களின் முன்னேற்றம், அம் மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி நிலையத்தில் பயின்று வருதல் பற்றிய ஒரு சான்றிதழை களுக்கு அனுப்பிவைத்து, அம் மாணவர்களுக்குரிய கட்டணத் தொகையை வழங்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். மாவட்ட நல அலுவலரால் அக்கட்டணத் தொகை ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள் வழங்கப்படும்."

''பயிற்சியாளர்களுக்கு வேண்டிய பென்சில், பேப்பர் முதலிய எழுது பொருள்களையும், சுருக்கெழுத்து புத்தகங்களையும் வாங்கிக் கொடுக்க ஆகும் செலவுக்கு என்ன செய்வதுங்க?''

''பயிற்சி பெறும் மாணவர்களின் உபயோகத்திற்காக வாங்க வேண்டிய எழுது பொருள்கள் சுருக்கெழுத்துப் புத்தகங்கள் ஆகியவற்றிற்குரிய தொகையை மாவட்ட நல அலுவலரிடமிருந்து பயிற்சி நிலையத் தலைவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் கீழ்நிலை அல்லது மேல் நிலைத் தேர்வுக்குச் செல்லும் பயிற்சியாளர்கள் கட்ட வேண்டிய தேர்வுக் கட்டணத்தையும் மாவட்ட நல அலுவலரிடமிருந்து பயிற்சி நிலையத் தலைவர்கள் தகுந்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்."

''தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சி பெறும் ஒவ்வொரு பயிற்சியாளருக்காகவும், அரசு நிதியிலிருந்து வழங்கப் பெறும் மாதக் கட்டணம், சிறப்புக் கட்டணம், அரசினர் தேர்வுக் கட்டணம் ஆகியவைகளின் மொத்தம் எவ்வளவு என்பதையும் சொல்லுங்க சார்?''

''தட்டெழுத்து கீழ்நிலைத்தேர்வுக்குச் செல்லும் ஒருவருக்கு ரூபாய் 175-00 வீதமும், தட்டெழுத்து மேல்நிலைத் தேர்வுக்கு செல்லும் ஒருவருக்கு ரூபாய் 151-00 வீதமும், சுருக்கெழுத்து கீழ்நிலைத் தேர்வுக்குச் செல்லும் ஒருவருக்கு ரூபாய் கெழுத்து மேல்நிலைத் தேர்வுக்குச் செல்லும் ஒருவருக்கு ரூபாய் 231-00 வீதமும் மாதக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம், எழுது பொருள் செலவு ஆகியவைகளுக்காக அரசு செலவிடுகிறது."

''இத்திட்டம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மலைசாதியினருக்கும் வேலை வாய்ப்பளிக்கும் நல்ல திட்டம் என்றே நினைக்கின்றேன்'' என்றார் நல்லதம்பி.

''ஒரு தடவையில் பாஸ் செய்யவில்லையானால் இந்த உதவி நிறுத்தப்பட்டு விடுங்களா?'' என்றான் வேலன்.

''கீழ்நிலைத் தேர்வில் ஒரு முறையும், மேல்நிலைத் தேர்வில் இருமுறையும் தவறிவிடுவதை அரசாங்கம் அனுமதித்து உள்ளது. முதல் தடவையிலேயே தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகையும் வழங்கப்பட விருப்பதால் எல்லா மாணவர்களும் ஊக்கத்துடன் பயிற்சி பெறுவார்கள் என நம்புகின்றேன்."

''இந்த நல்ல திட்டத்தைச் செயல்படுத்த முன் வந்த தமிழ் நாடு அரசுக்கு தாழ்த்தப்பட்டவர்கள் சார்பாக நான் நன்றி செலுத்திக் கொள்கின்றேன்'' என்றான் வேலன்.

இன்னும் பல திட்டங்கள் வரவிருக்கிறது. விரைவில் தாழ்த்தப்பட்டவர்கள் மேம்பாடு அடைவார்கள் என்பது திண்ணம்'' என்றார் மக்கள் தொடர்பு அலுவலர்.

''உடனே என் பையனைக் கொண்டுவந்து பயிற்சி தரும் நிறுவனத்தில் சேர்த்துவிடுகின்றேன் சார், மிகவும் நன்றி சார்! '' என்று சொல்லிவிட்டு வேலன் புதிய தெம்புடன் வெளியே சென்றான்.

இந்தியாவிலுள்ள பல்வேறு பகுதிகளில் வழக்கத்திலுள்ள உணவு முறைகள், சிற்றுண்டிகள் இந்தப் பகுதியில் தரப்படுகின்றன. அதனால்தான் உணவு வகைகளின் பெயர்கள் புரியாதனவாக உள்ளன. வாசகர்கள் சிலர் உணவு வகைகளின் பெயர்கள் நம் மொழிப் பெயர்களாக இல்லையே என்று எழுதுகிறார்கள். இது குறித்து முன்பே ஒரு முறை எழுதியிருந்தாலும் நிலைமையை விளக்க மீண்டும் இங்குக் குறிப்பிட்டுள்ளோம்.

நாளுக்கு நாள் மாறி வரும் உலகத்தில் நாவுக்குச் சுவையாகவும், உடல் நலத்துக்கு வலிவூட்டுவதாகவும் அமைந்துள்ள உணவு வகைகள் பல்வேறு மாநிலங்களில் வழக்கத்திலுள்ள முறையில் இங்கு விவரிக்கப்படுகின்றன.

பக்கிரி

குஜராத் மாநிலம், மராட்டிய மாநிலம் முதலிய இடங்களிலுள்ள உணவு வகையாகும்.

தேவையான பொருள்கள்.

கோதுமை மாவு.	400 கிராம்.
பட்டாணி மாவு	100 கிராம்.
மஞ்சள் பொடி	5 கிராம்.
மிளகாய்ப் பொடி	15 கிராம்.
பொருங்காயம்	சுவைக்கு ஏற்றபடி.
உப்பு	50 கிராம்.
எண்ணெய்	100 கிராம்.

செய்யும் முறை.

1. கோதுமை மாவையும், பட்டாணி மாவையும் சலித்துக் கொள்ளவும். உப்பு, மிளகாய்ப் பொடி, மஞ்சள் பொடி, பெருங்காயம் இவைகளைப் போடவும்.
2. எண்ணெய்யை விட்டுப் பிசைந்து கொள்ளவும்.
3. நன்றாகப் பிசைந்து ஒரு மணி நேரம் வைக்கவும்.
4. மீண்டும் பிசைந்து சிறு சிறு உருண்டையாக உருட்டிக் கொள்ளவும். உருண்டையை ரொட்டி மாதிரி இட்டுக் கொள்ளவும்.
5. பரோட்டா மாதிரிச் சுடவும்.

இந்த அளவு செய்தால் நான்கு பேர்கள் சாப்பிடலாம்.

காதி

இதுவும் குஜராத் மாநிலத்தில் வழங்கும் உணவு வகைதான்.

தேவையான பொருள்கள்.

தயிர்	225 கிராம்.
கடலை மாவு	20 கிராம்.
கறிவேப்பிலை	ஒரு கொத்து.
மஞ்சள் பொடி	ஒரு சிட்டிகை
சீரகம், வெந்தயம்	10 கிராம்.
எண்ணெய்	10 கிராம்.
இஞ்சி	5 கிராம்.
பூண்டு	5 கிராம்.
பச்சைமிளகாய்.	5 கிராம்.
உப்பு	10 கிராம்.

செய்யும் முறை.

தயிருடன் போதுமான அளவு தண்ணீர் சேர்த்துக் கடைந்து கொள்ளவும்.

மோரையும், கடலை மாவையும் கலந்து மாவாகச் செய்து கொள்ளவும்.

மீதி மோரில் உப்பைப் போட்டுக் கொதிக்க விடவும்.

கடலைமாவுக் கலவையைப் போட்டுக் கலக்கிக்கொண்டே இருக்கவும்.

கறிவேப்பிலை மசாலாவைச் சேர்த்துச் சமைக்கவும்.

சீரகத்தையும், வெந்தயத்தையும் தாளிக்கவும்.

கறி கூப்தாவும் உருளைக் கிழங்கு கூப்தாவும்

வட இந்தியாவில் வழங்கும் அசைவ உணவு முறை இது.

கறி கூப்தா

கறி	500 கிராம்.
கிராம்பு	8 கிராம்.
முட்டை	இரண்டு.
கடலைப் பருப்பு.	55 கிராம்.
இஞ்சி	1 கிராம்.
பச்சைமிளகாய்	5 கிராம்.
உப்பு	சுவைக்கு ஏற்றபடி.
பச்சைக் கொத்த மல்லி	கால் கொத்து.
எண்ணெய்	30 கிராம்.
இலவங்கப்பட்டை	சிறிதளவு.

உருளைக் கிழங்கு கூப்தா

உருளைக்கிழங்கு	450 கிராம்.
பச்சைமிளகாய்	10 கிராம்.
வெங்காயம்	115 கிராம்.
பச்சைக் கொத்த மல்லி.	சிறிதளவு.
உப்பு	சுவைக்கு ஏற்றபடி.
கடலை மாவு	10 கிராம்.

கறி கூப்தா செய்யும் முறை.

கறியைக் கழுவி வெட்டிக் கொள்ளவும். பருப்பைக் கழுவி வேக வைக்கவும். வெந்த பருப்பு, கிராம்பு, இஞ்சி, பச்சைமிளகாய் முதலியவற்றுடன் கறியை அரைக்கவும்.

உப்பு, வெட்டிய கொத்த மல்லி இலை முதலியவற்றுடன் உடைத்த முட்டையைச் சேர்க்கவும்.

பந்து மாதிரி மெதுவாக வதக்கவும்.

உருளைக்கிழங்கு கூப்தாவுக்கு.

உருளைக் கிழங்கை வேக வைத்து நசுக்கிக் கொள்ளவும்.

வெங்காயம், பச்சைமிளகாய், கொத்தமல்லி இலையை நறுக்கிக் கொள்ளவும்.

கலவைப் பொருள்களையும், உருளைக்கிழங்கு, உப்பையும் கலக்கவும். சிறு சிறு உருண்டையாகச் செய்து கொள்ளவும்.

கடலைமாவுடன் தண்ணீர் கலந்து குழம்பாக்கிக் கொள்ளவும்.

உருளைக் கிழங்கைக் கடலை மாவுடன் நனைத்து எண்ணெய்யில் போட்டுப் பொரித்து எடுக்கவும்.

கறி செய்ய.

கொத்தமல்லித் தூள்.	15 கிராம்
விதையில்லாத மிளகாய் வற்றல்	5 கிராம்.
மஞ்சள் பொடி	ஒரு சிட்டி
கொப்பரை ..	30 கிராம்.
பூண்டு ..	சிறிதளவு.
பச்சை மிளகாய்	சில.
தக்காளி ..	115 கிராம்.
எலுமிச்சம் பழம்	பாதி.
உப்பு	சுவைக்குத் தகுந்தபடி
வெங்காயம் ..	55 கிராம்.
நெய் ..	115 கிராம்.

வெங்காயத்தை நறுக்கிக் கொள்ளவும். மசாலாவை அரைத்துக் கொள்ளவும். தக்காளியை நறுக்கிக்கொள்ளவும்.

வெங்காயத்தைக நெய்யில் வதக்கவும்.

மசாலாவைச் சேர்த்து வதக்கவும். தக்காளியையும் நறுக்கிக் கொள்ளவும். மசாலாவையும், தக்காளியையும் சேர்த்துச் சமைக்கவும்.

கறி கூப்தாவுக்கு முன்பு முதலில் செய்து வைத்திருந்த கறி கூப்தாவைச் சேர்த்துச் சமைக்கவும்.

உருளைக்கிழங்கு கூப்தாவுக்கு முன்பு தயார் செய்து வைத்திருந்த உருளைக்கிழங்கு கூப்தாவுடன் எலுமிச்சம் பழச் சாற்றையும் சேர்த்துச் சமைக்கவும்.

அடுப்பிலிருந்து எடுத்தவுடன் சூடாகச் சாப்பிட்டால் சுவை மிகுதியாக இருக்கும்.

மேலே குறிப்பிட்ட . அளவு சமைத்தால் எட்டுப் பேர் தாராளமாகச் சாப்பிடலாம்.

—அஞ்சனா.

புதிய தொழிற் பேட்டைகள்.

கிராமப்புறங்களில் கூடுதலான அளவு வேலை வாய்ப்பு வசதிகளைச் செய்துதரும் நோக்குடன், கிராமங்களில் புதிய தொழில்பேட்டைகளை அமைக்க கதர்-கிராமத் தொழில் வாரியம் திட்டமிட்டுள்ளது.

அந்தத் தொழிற் பேட்டைகள், நெல்லை மாவட்டம், வள்ளியூரிலும், திருப்பூர் வட்டாரத்தில் திருப்பூர், பெருமாநல்லூர், கண்மலையம்பட்டி ஆகிய இடங்களிலும், ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் செம்பரம்பாக்கத்தில் ஒன்றும் ஈக்காடு, திருவள்ளூர் ஆகியவற்றிற்கிடையே ஒன்றும், ஓமலூர் பகுதியில் விசைத் தறிகளுக்காகச் சலகண்டபுரத்திலும் கைத்தறிக்காக தாரமங்கலத்திலும் இரு தொழிற்பேட்டைகளும் நிறுவப்படும்.

கதர்-கைத்தொழில் பொருட்களை விற்பனை செய்யத் தற்போது சென்னையில் குறளகமும், திருச்சியிலும் விற்பனை நிலையங்கள் உள்ளன. இதே போன்ற பெரிய விற்பனை நிலையம் ஒன்று கோவையில் நிறுவப்படுகிறது. புதிய நிலையங்களுக்காக மதுரை, சேலம் ஆகிய இடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.



ஆழம் தெரியாமல் காலை விடக்கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது நூற்றுக்கு நூறு உண்மைதான்! எந்தக் காரியத்திலும் ஆழம் தெரியாமல் இறங்குவதால் ஆபத்துகளைத் தேடிக்கொள்ள நேருகிறது. அதிலும், கிணற்றுக்குள்ளே, இறங்கும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் இறங்கவேண்டும். சில விஷயங்களை ஆராய்ந்து பார்த்து கிணற்றுக்குள் இறங்க வேண்டும். இல்லாவிட்டால், ஆபத்துக்களை வரவேற்க வேண்டியது மட்டுமல்ல ஆவியையே இழக்கக் கூட நேரிடுகிறது.

நமது தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில், கிணற்றுக்குள் இறங்க முயன்றவர்களில் பலர் பரிதாபமாகச் செத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு ஜூன்-ஜூலை மாதங்களில், நான்குபேர் கிணற்றுக்குள் இறங்கியபோது தங்களது சாவைச் சந்தித்துக்கொண்டார்கள். கிணற்றைச் சுத்தப்படுத்த வேண்டும் என்ற தூய எண்ணத்துடன் உள்ளே இறங்கியவர்களுக்குக் கிடைத்த பரிசு சாவு என்பதனை எண்ணும்போது வேதனையாகத்தான் இருக்கிறது. ஆனால், வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்திலே சில அடிப்படையான விஞ்ஞான உண்மைகளை, தெரிந்தோ தெரியாமலோ அசட்டை செய்து ஆபத்துக்கு ஆளாவதை எண்ணும்போது, ஆபத்துக்கு ஆளாகின்றவர்கள் மீது ஓரளவு கோபமும் ஏற்படுகிறது. ஆகவே கிணற்றுக்குள் இறங்குவோர், சில விஞ்ஞான ரீதியான உண்மைகளை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

கிணற்றுக்குள் இறங்குவோர் கேளுங்கள் சில சொற்கள்!

சில சமயங்களில், கிணறுக்குள்ளே உயிர் வாழ்வதற்குப் போதுமான பிராணவாயு இல்லாமலிருக்கலாம். அதனால்தான் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. இதுபோன்ற அநியாயமான ஆபத்து ஏற்படாமலிருக்கச் சில சோதனைகளைச் செய்து பார்த்துக் கொள்ளவேண்டும்.

கிணற்றுக்குள் இறங்கு முன், எரியும் விளக்கு ஒன்றினை நீர் மட்டம் வரையில் இறக்கி அது அணைகிறதா, நன்கு எரிகிறதா, என்று பார்க்க வேண்டும். விளக்கு அணைந்து விட்டால், அங்கே போதுமான பிராணவாயு இல்லை என்பது பொருள். உயிர் வாழத்தக்க சூழ்நிலை கிணற்றில் இல்லை என்பது தெளிவு.

விளக்கை விட்டுப் பார்க்கும் போது, விளக்கு அணையவில்லை என்று கொள்வோம். இந்த ஒரு சோதனையே முடிவாகி விடாது. அடுத்தாற்போல் ஒரு கோழிக்குஞ்சை நீர்மட்டம் வரை விட்டுப் பார்க்க வேண்டும். அந்தக் கோழிக்குஞ்சு எந்த ஆபத்தும் இல்லாமல் உயிரோடு இருந்தால், கிணற்றுக்குள் இறங்கலாம்.

அடுத்து, மேற்சொன்ன இரண்டு சோதனைகள் செய்து பார்த்த பின்னர், கிணற்றுக்குள் இறங்கும்போது கூட, உள்ளே இருந்து விரைவில் ஏறி வருவதற்கான கயிறு முதலியன ஏற்பாடு செய்துகொண்டு கிணற்றில் இறங்க வேண்டும். உதவிக்குத் தேவையான ஆட்களையும் வைத்துக்கொள்ளவேண்டும்.

கிணற்றுக்கு அருகில் எருக்குழி, குப்பை, கழிவுப்பொருள், சாக்கடை முதலியன இருக்கக் கூடாது. சுற்றுப் புறமும், கிணறும் சுகாதார முறையில் அமைந்திருக்க வேண்டும். கிணற்றைச் சுற்றியுள்ள அசுத்த நீர் ஊறி, கிணற்று நீரில் கலக்காதவாறு, கிணற்றின் உட்புறமும் பூச்சு வேலை செய்திருக்க வேண்டும்.

இத்தகைய பாதுகாப்பு முறைகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

கிணற்றில் ஆபத்தான நிலையில் இருப்பவர்களை மீட்பதற்கும், இந்தப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றிய பின்னரே இறங்க வேண்டும். இல்லாவிட்டால் காப்பாற்றச் செல்பவர்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுவிடும்.

முன்மாதிரி கிராமம்

** பல்வேறு பல்கலைக் கழகங்களையும், பல்வேறு தொழிலையும் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் அந்த ஊரில் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் பலர் அரசாங்கத்திலும், தனியார் நிறுவனங்களிலும் பணி புரிந்துள்ளனர். அவர்கள் அனைவரும் தங்கள் வேலையை விட்டுவிட்டு (ராஜினமா செய்துவிட்டு) வேளாண்மையை விரும்பி ஏற்றுக் கொண்டுள்ளனர். விஞ்ஞான வேளாண்மைச் சாகுபடி முறைகளையே அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

** தமிழ் நாட்டிலேயே நீர்ப்பாசனத்திற்காக மின்சக்தியை அதிக அளவு பயன்படுத்தும் கிராமமும் அதுதான்.

** ஊராட்சி நிர்வாகம் தோன்றியதிலிருந்து அந்த ஊரில் ஊராட்சி உறுப்பினர்களுக்கான தேர்தலோ அல்லது ஊராட்சித் தலைவருக்கான தேர்தலோ நடைபெறவில்லை. ஏகமனதாகவே உறுப்பினர்களும் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர்.

** அந்த ஊரில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குழாய்களின் மூலம் பாதுகாக்கப்பட்டத் தண்ணீர் இரவு பகல் எந்த நேரமும் கிடைக்கிறது.

** சாதி வேற்றுமை அந்த ஊரில் நிலவவில்லை. ஏனெனில் அந்த ஊரில் ஒரே ஒரு சாதிதான் உண்டு.

** மக்களிடையே ஒற்றுமை காணப்படுவதால், பொது நன்மைகளுக்கென அந்த ஊரில் ரூபாய் 20,000-க்கு மேல் பொது நிதி சேர்த்து வைத்துள்ளனர்.

** வேளாண்மையே அந்த ஊர் மக்கள் அனைவருக்கும் முக்கியத் தொழிலாகவும், பொழுதுபோக்காகவும் உள்ளது.

** ஆயிரத்து எண்ணூறு பேர்களே உள்ள அந்த ஊரில் ஓர் உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடமும் உள்ளது. அதில் 400 குழந்தைகளும் படிக்கின்றனர்கள்.

** கால்நடை முதல் உதவி நிலையமும், தல நூல் நிலையமும் அந்த ஊரில் உள்ளன.

** முக்கியப் பயிர்களான நெல், பருத்தி, நிலக்கடலை, மிளகாய், வெங்காயம், கேழ்வரகு, சோளம் ஆகியவைகளை அந்த ஊர் மக்கள் மொத்தம் 5,000 ஏக்கரில் பயிரிட்டு வருகின்றனர்.

இப்படிப் பல்வேறு வகைகளில் முன் மாதிரியாக விளங்கும் அந்தக் கிராமம் எது என்பதை அறிந்துகொள்ள ஆர்வமுடன் உள்ள உங்களை இனியும் சோதிக்க விரும்பவில்லை.

அந்தக் கிராமத்தின் பெயர் கோவிந்த நகரம் மதுரை மாவட்டம், தேனி வட்டத்தில் உள்ளது.

ஒண்ட வந்தவள்!

அ. மறைமலையான்

இரவு நெடுநேரம் ஆகிவிட்டது. எங்குமே இடுகாட்டின் பேரமைதி. உலகம் முழுவதுமே உறக்கத்தைத் தழுவிக் கொஞ்சி, 'சாக்காடு இப்படித்தானோ?' என்று ஒத்திகை பார்த்திடும் வெறுமை சூழ்ந்த வேளையில்—

அந்த வீட்டு மேல்மாடியில் மட்டும் இன்னும் குயிலோசை ஓயவில்லை; 'சல்...சல்...சல்...'—என்னும் சதங்கை மணிகளின் சதிராட்டமும் அடங்கவில்லை.

செவிகளைப் பிளந்திடும் அந்த ஒலிகளைக் கேட்டு மருண்டதாலோ என்னவோ, மீனாட்சியம்மாளின் இமைக்கூடுகளை அழுத்திய தூக்கம், உள்ளே விழி மணிகளைத் தொடமுடியாது தவியாய்த் தவித்தது! ஆம்; சரியானபடி உறக்கம் வராமல் கூடத்தில் கிடந்த கட்டிலில் புரண்டு புரண்டு நெளிந்த வண்ணம் இருந்தாள் அந்த முதியவள்.

மணி பன்னிரண்டும் அடித்து விட்டது.

அப்படியும், செங்குட்டுவன் இன்னும் மாடியைவிட்டுக் கீழே இறங்கி வரவில்லை.

மீனாட்சி அம்மாளுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. கண்களை நன்றாகக் கசக்கித் தேய்த்து விட்டவாறே கட்டிலை விட்டுக் கீழே இறங்கினாள்.

முழுநிலவு தன் பாலொளியால் வெண்பட்டு ஆடையினை விரித்திருந்தது முற்றத்தில்.

அங்கேபோய் நின்று தலையை அண்ணாந்தி,

"அடே, செங்குட்டுவா! நீ இப்போ கீழே வந்து படுக்கப் போகிறயா இல்லையா?"

–என்று உயிரைக் கொடுத்துக் கத்தினாள் அவள்.

மேலே மாடிப்பகுதியையே கிடு கிடுக்க வைத்துக்கொண்டிருந்த ஆட்டபாட்டங்களின் ஆர்ப்பரிப்புகள் சட்டென்று அடங்கிப்போயின.

"என்னடா நான் அழைக்கிறேன்; நீ பேசாமல் இருக்கிறே? நாளைக்கு நீ காலா காலத்திலே வேலைக்குப் போகவேண்டாமா? இவ்வளவு நேரம் கண் விழிச்சுக் கும்மாளம் அடிச்சா உன் உடம்பு தான் என்னத்துக்கு ஆகும்?"

—மீண்டும் கூக்குரலிட்டாள் மீனாட்சி அம்மாள்.

அதற்கும் செங்குட்டுவனிடமிருந்து மறுமொழி வரவில்லை. ஏதோ ஓர் ஐயப்பாடு எழுந்தது அந்த முதியவளின் நெஞ்சில். எனவே, முற்றத்தை விட்டு மேலே வந்து மாடிப்படிகளில் ஏறிச் சென்று உள்தாழ் போடப்பட்டிருந்த கதவினைத் தடதடவென்று இடித்தாள்.

"ஏம்மா இப்படிக் கதவை இடிக்கிறே? உனக்கு என்ன வேணும்?"

—என்று அலட்சியமாக—அதே சமயம் அனலைக் கக்கியவளாகக் கேட்டாள் மேல்தளத்தில் குடியிருக்கும் அந்த ஆட்டக்காரி.

"எனக்கு இப்போ என் மகன் தான் வேணும்; உடனே கதவைத் திற."

"உன் மகனை யாரும் இங்கே கடிச்சுத் தின்னுடலே! அவர் ரொம்ப நேரமா தூங்கிண்டு தான் இருக்கார். பொழுது விடிஞ்சதும் எழுந்திரிச்சு வருவார். நீ போய் நிம்மதியாத் தூங்கு."

"அவனை உன்கிட்டே விட்டு விட்டு, நான் எங்கே நிம்மதியாத் தூங்கிறது? அவன் உண்மையிலேயே தூங்குகிறனா, இல்லே, செத்தே தொலைஞ்சிட்டானா என்று, நான் என் கண்ணாலே பார்க்கணும்! உடனே நீ கதவைத் திறக்கப் போகிறயா இல்லையா?"

"திறக்க முடியாது."

"திறக்க முடியாதா? உனக்கு அவ்வளவு அழுத்தமா? என் வீட்டிலே வாடகைக்குக் குடியிருந்து கொண்டு என்னையே அவமதிக்கிறயா? என் வீட்டையும் நாசப் படுத்துகிறயா? என் மகனைக் கைக்குள்ளே போட்டுக் கொண்ட தைரியந்தானே உன்னை அப்படிப் பேசச் சொல்லுது? இரு, இரு; இப்போவே தெருவாரையெல்லாம் கூட்டிவந்து உன்னை என்ன பாடு படுத்துகிறேன், பார்!"

—அறைகூவல் விடுத்த மீனாட்சியம்மாள் மாடிப்படிகளில் ஏறிய வேகத்திலேயே இறங்க முற்பட்டாள்.

அதற்குள்—அந்தக் கதவைப் படீரென்று திறந்து கொண்டு வாட்ட சாட்டமான ஆடவன் ஒருவன் கீழே ஓடிவந்து அவளுக்குக் குறுக்கே வழிமறித்தான்.

"பெரியம்மா, பெரியம்மா! தயவு பண்ணி எங்களையெல்லாம் மன்னிச்சிடுங்க! அந்தப் பெண் தெரியாத்தனமாத்தான் ஏதேதோ முறைகேடாப் பேசிட்டா. அவ சார்பிலேயும் நான் உங்ககிட்டே மன்னிப்புக் கேட்டுக்கிறேன். நீங்க வெளியே போய் யாரையாவது கூட்டி வந்தீங்கன்னா அப்புறம் எங்க பாடு அதோ கதிதான்; எல்லோருமே சிறைக்குப் போக வேண்டியதுதான்."

—அழாத குறையாகக் கெஞ்சியதோடு நிற்கவில்லை அந்த ஆடவன்; கீழே குனிந்து அவளுடைய தாள்கள் இரண்டையும் பற்றிக் கொண்டுவிட்டான் கெட்டியாக!

மீனாட்சியம்மாளின் ஆத்திரம், அடுத்த கணமே அவனுடைய செய்கையினால் தண்ணீர் விழுந்த தணலாக அவிந்தது; வழக்கமான அவளுடைய இரக்க உணர்வே மேலோங்கியது.

''சரி, சரி; காலை விடு; நீ இவ்வளவு தூரம் கெஞ்சுகிறதாலே, போனால் போகிறது என்று நான் விட்டுத் தொலைக்கிறேன். ஆனா, நாளையே அவள் இந்த வீட்டைக் காலி செய்து விடணும்; இல்லையோ, நான் பொல்லாதவளா மாறிடுவேன். இப்போ, மேலே போய் என் மகன் எப்படி இருக்கிறான் என்று பார்த்துவிட்டுத் தான் திரும்புவேன்.''

—என்று அழுத்தமாக மொழிந்தவாறே மீண்டும் மாடிப் பகுதி நோக்கி விரைந்து ஏறினாள் அவள்.

அங்கோ..?

அவள் கண்ட காட்சி, அவளுடைய நெஞ்சிலே 'திகீர்'— என்று நெருப்பை அள்ளிக் கொட்டியது.!

நந்தினி.

அவள்தான், அந்த ஆட்டக்காரி —இந்த மண்ணுக்குச் சொந்தக்காரி அல்லள். வடபுலத்திலுள்ள மத்தியப் பிரதேசம் என்னும் மாநிலத்தைச் சார்ந்தவள். அவளுடைய தந்தை ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்திலேயே 'ஐ.சி.எஸ்.' தேர்ச்சி பெற்ற அதிகாரியாக உலா வந்தவர். பெரும்பாலும் தென்னக மாநிலங்களிலேயே அலுவல் நிமித்தமாக அவர் குடும்பத்துடன் சுற்றிக் கொண்டிருந்ததால், நந்தினியும், தன் பிஞ்சுப் பருவம் முதல் தமிழ்க் காற்றினையே நுகர்ந்து தமிழகப் பள்ளிகளிலேயே பயின்று, தமிழ்க் கனிகளையே சுவைத்திடும் பேற்றினைப் பெற்றவளாகவே வளரலானாள். என்றாலும்கூட தன் மூதாதையர் வாழ்ந்த வடபுலத்தின் மீதுள்ள பற்றினையோ அந்தப் பக்கத்துப் பழக்க, வழக்க, நடை, உடை, பாவனைகளையோ தங்களுடைய ஒரே பெண் கைவிட்டுவிடாதபடிப் பேணிக் காப்பதில் குறியாகவே இருந்தனர் அவளுடைய பெற்றோர்கள்.

தன் தாய்-தந்தையரின் கட்டுதிட்டங்களுக்கெல்லாம் உட்பட்டவளாகவே நடந்து வந்த போதிலும், விவரந் தெரிந்த நாள் முதலாக நந்தினியின் உள்மனத்தில் ஓர் ஆசை வெறி அலை மோதிக்கொண்டே இருந்தது. திரை வானிலே எல்லோரும் கொண்டாடும் விண்மீனாக எப்படியாவது மின்னிட வேண்டும் என்பதே அவளுடைய அந்த ஆசை. ஆனால், அது நிறைவேறவில்லை. காரணம், நேரில் பார்க்கும் பொழுது எவ்வளவோ அழகாக இருந்தபோதிலும், ஒளிப் பதிவுக்கு (போட்டோகிராபிக்கு) அவளது முகம் உகந்ததாக இல்லையாம்.

இவ்வாறு, நடிப்பதற்குத் துடித்த அவளது வேட்கை வேரறுந்த செடியானாலும், நந்தினி உள்ளம் ஒடிந்து உட்கார்ந்து விடவில்லை. தனக்கு இளமையிலிருந்தே இயற்கையாகக் கைவந்த இசை-நடனக் கலைகளில் முழுக் கவனத்தையும் செலுத்தினாள்; அவற்றை நாலு பேருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கும் அளவுக்குத் தன்னை ஆசிரியையாகவும் உயர்த்திக் கொண்டாள். அத்துடன் மொழிமாற்றுப் படங்களில் நடிக-நடிகையர்க்குப் பின்னணிப் பேச்சுக் குரல் கொடுக்கும் வாய்ப்பினையும் பெற்றாள். இந்தச் சமயத்தில் தான் அவளுக்கு முதன் முதலாகக் காதல் அரும்பிற்று: ஒரு துணை நடிகரிடம்.

இதற்குள், அவளுடைய தந்தையார் அலுவலிலிருந்து மட்டுமின்றி, உலகத்தைவிட்டே ஓய்வு பெற்றுவிட்டார். சில திங்கள்களில், தாயும் தன் கணவனைத் தேடிக் காற்றுப் பெருவெளியில் கலந்து போனாள்.

எங்கிருந்தோ வந்திட்ட நந்தினி தன் பழைய தாயகத்தை நோக்கித் தன் நடையைக் கட்ட வேண்டியதுதானே ? ஆனால் அவள் அவ்வாறு செல்லவில்லை. எப்படிச் செல்வாள் ?

முப்புறமும் கடல் சூழ்ந்து, வறுமையைப் புடைத்தெறியும் முறம்போல விளங்குவது அல்லவா, இந்த முதுபெரும் முத்தமிழ்நாடு? இங்கே ஒருமுறை வந்து வளங்கொஞ்சும் வயல்களை —வான்முட்டும் மலைகளை— ஆடிப்பாடும் அருவிகளை—அழகு சிரிக்கும் பொழில்களை—கண்டு, களித்துத் துய்த்துப் பயன்பெற்ற எந்த இனந்தான் இந்த மண்ணை வெறுத்துவிட்டு வெளியேறியிருக்கிறது ?

எனவே, நந்தினி இங்கேயே தங்கிவிட்டதில் வியப்பேதும் இல்லை. போதாததற்கு அவளுடைய காதலனின் அன்புப் பிணைப்பும் தமிழகத்தைவிட்டுத் தாண்ட முடியாமல் அவளைத் தடுத்துவிட்டது.

ஆனால்—

காலச் சக்கரம் உருள, உருள, அவளது காதல் சக்கரத்தின் கட்டு அவிழ்ந்தது; 'சந்தேகம்'-என்னும் படுபாதாளத்தில் குடைசாய்ந்து விழுந்து அது உடைந்து நொறுங்கிற்று !

:: :: ::

தன்னைவிடக் கிண்டியில் பறக்கும் குதிரைகளிடமே மிகுதியான காதல்கொண்டு தந்தை வழியாக வந்த தன் சொத்துக்களையெல்லாம் சாம்பலாக்கியதோடு நில்லாமல், இதயமொட்டையே சந்தேகக் குறடு கொண்டு நெரிக்கிறானே என்று ஆத்திரமுற்ற நந்தினி விரைவிலேயே அவனிடமிருந்து மணவிலக்குப் பெற்றாள்.

தான் முன்பே சிறந்த முறையில் ஈடுபாடு கொண்டிருந்த இசை-நடனக்கலைகளைச்சொல்லித் தரும் தொழிலும் திரையுலகில் பின்னணிப் பேச்சுக் குரல் கொடுப்பதும் தன் வாழ்க்கைப் படகினைக் கவலையின்றிச் செலுத்துவதற்கு அவளுக்குக் கைகொடுத்தன.

எனினும், கலையுலகிலே, கனியொன்று உலவுகிறதென்றால் ஆடவர் அணில்களால் வேடிக்கை பார்ப்பதோடு பேசாமல் இருக்க முடியுமோ? எனவே, நந்தினிக்குப் பல சோதனைகள் ஏற்படலாயின. அப்படி ஒருமுறை இரு முரடர்களிடம் சிக்க நேர்ந்தபொழுது தான் ஒரு நள்ளிரவு மீனாட்சியம்மாளின் வீட்டில் புகலிடம் தேடி ஓடோடி வந்தாள் அவள்.

மீனாட்சியம்மாளுக்கு எப்போதுமே இரக்கம் மிகுதி; வந்தவரையெல்லாம் வாழ வைத்துவிட்டுப் பிறகு நொந்து நொந்து சாவது அவளுக்கு வேலை ? நந்தினி என்பவள் யார், எப்படிப் பட்டவள், எங்கிருந்து வருகிறாள் என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்கவில்லை ; உடனே அடைக்கலம் அளித்துவிட்டாள்.

அவளுடைய கருணைக்குத் தகுந்தமாதிரி, அந்தச் சமயம் மாடிப்பகுதியும் சும்மாதான் கிடந்தது. சில நாட்களுக்கு முன்னர்தான் அதிலே குடியிருந்தவர்கள் காலிசெய்துவிட்டுப் போயிருந்தார்கள். அங்கேயே நந்தினி நிலையாகத் தங்கிக் கொள்ளலாம் என்று இடங் கொடுத்துவிட்டாள் மீனாட்சி அம்மாள்.

தொடக்கத்தில் நந்தினியும் நல்ல பெண்ணாகவே நடந்து கொண்டாள். ஒரு வீட்டுச் சொந்தக்காரியிடம், வாடகைக்குக் குடிவந்துள்ள ஒருத்தி எவ்வளவு பணிவோடு பண்போடு அடக்கமாகப் பழக வேண்டுமோ அவ்வாறெல்லாம் அவள் பழகிக் கொண்டுதான் வந்தாள்.

:: :: ::

ஒரு வாரம் ஆயிற்று. நந்தினி, படப்பிடிப்பு நிலையம் ஒன்றுக்குப் பின்னணிக்குரல் கொடுக்கப் போயிருந்தாள்.

அப்போது எதிர்வீட்டு ஏகாம்பரம் 'சர்ச்சில் சுருட்டை' உற்சாகமாக இழுத்துப் புகை விட்டவாறே மீனாட்சி அம்மாளிடம் வந்தார். தாழ்வாரப் பகுதியில் உள்ள மேடையில் வாகாகச் சாய்ந்துக்கொண்ட அவர்,

'' அம்மா, மீனாட்சி அம்மா, இப்போ உன் மாடியிலே புதிதாக வந்திருக்காளே ஒரு இளசு, அவளைப்பற்றி நன்கு விசாரித்துத் தான் குடிவைத்தாயா ?'' என்று நீட்டி முழக்கிக்கேட்டார்.

''ஏன் ? அவளைப்பற்றி விசாரிக்கறதாலே நமக்கு என்ன ஆகப்போகிறது ? என்னைப் பொறுத்தவரையிலே நான் சொன்ன கட்டுப்பாட்டுக்கெல்லாம் இணங்கி என்கிட்டே நல்ல விதமாகப் பேசுகிறாள் ; பழகுகிறாள். நமக்கு வேண்டியது அவ்வளவுதானே ?''

''அதுக்கில்லே ; எங்கேயோ வடக்கே இருந்து வந்தவள் என்று கேள்விப்பட்டேன். ஏதாவது இடக்குப் பண்ணி விடப்போகிறாள் !''

'' முகத்தைப் பார்த்தால் அப்படியெல்லாம் தோணலையே''

'' முகம் அழகாக இருப்பவர்களுக்கெல்லாம் அகமும் அழகாக இருக்கும் என்று என்ன உறுதி? சரி ; நீ சொல்லுகிறபடி அவள் நல்லவள்தானா என்பதற்கு ஒரு சிறு சோதனை செய்து பார்ப்போமா ?''

" என்ன சோதனை, பெரியய்யா ?"

''அவள்தான் ஆட்டக்காரியாக மட்டும் இல்லாமல் சிறந்த பாட்டுக்காரி என்றும் சொல்லுகிறார்களே ! அவளைத் திருவருட்பா, தேவாரத்திலிருந்து ஒரே ஒரு தமிழ்ப்பாட்டைப் பாடச் சொல் ; அட, அதுகூட வேண்டாம் ; பாரதிதாசன் அல்லது பாரதியார் பாட்டையாவது பாடச்சொல் ? ''

'' ப்பூ. . . இவ்வளவுதானா ? அவள் கண்டிப்பாகப் பாடுவாள். ''

'' அம்மா, மீனாட்சி அம்மா, நீ போடுகிற கணக்கே தப்பு ! வடக்கே இருந்துவந்து இங்கே குடியேறிய ஆட்களுக்கு, இந்தத் தென்னாட்டு மண்ணிடமோ, இந்த மண்ணுக்குரிய மொழியிடமோ இந்த மொழியைப் பேசும் இனத்திடமோ, எந்தக்காலத்திலும் மதிப்பு — அக்கறை — எதுவுமே கிடையவே கிடையாது. நம்மையும் நம் மொழியையும் எவ்வளவு அலட்சியப் படுத்த முடியுமோ அவ்வளவும் செய்வார்கள் ! நீ வேண்டுமானால் நாளைக்கே உன் வீட்டு மாடியிலே அவளைப் பாடச் சொல்லிக் கேளேன் ?''.—என்று அறைகூவல் விடுத்தார் ஏகாம்பரம்.

'' சரி ; பெரியய்யா. நாளைக்கு வேண்டாம் ; இன்னும் பத்து நாட்களில் செங்குட்டுவனுக்குப் பிறந்தநாள் வருகிறது. அந்த விழாவிலே அவளைப் பாடச் சொல்லிக் கேட்டால் போகிறது'' —என்று அவரது அறைகூவலை ஏற்றுக்கொண்டாள் மீனாட்சியம்மாள்.

அவள் கூறியவாறே செங்குட்டுவனின் இருபத்தைந்தாவது பிறந்த நாள் விழா கோலாகலமாகக் கொண்டாடப் பெற்றது. அன்று வீட்டுச் சொந்தக்காரியின் பேச்சினைத் தட்ட விரும்பாதவளைப் போல் பாடுவதற்கு இசைந்தாள் நந்தினி.

உழவர்களுக்குப் பயிற்சி நிலையம் உருவாக்கியது தமிழக அரசு!

நவீன சாகுபடி முறைகளில் உழவர்களுக்குப் பயிற்சி அளிக்க மூன்று, உழவர் பயிற்சி நிலையங்களைத் தமிழக அரசே அமைத்தது. அவைகள் தற்பொழுது 'நவலாக்', பவானிசாகர், ஆடுதுறை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது கோவில்பட்டியில் மேலும் ஒரு பயிற்சி நிலையத்தை அமைக்கத் தமிழ் நாடுஅரசு அனுமதி அளித்துள்ளது. இன்னும் ஓர் உழவர் பயிற்சி நிலையத்தை அமைக்கலாமா என்றும் தமிழ் நாடு அரசு ஆலோசித்து வருகிறது.

அவளுடைய குயிலினும் மென்மையான குரலிலே குளுமையான இசை வெள்ளம் பொங்கிப் பெருக்கெடுத்தது. ஆனால் அவள் பாடிய பாடல்கள் பெரும்பாலும் இந்திப் பாடல்களும், ஆங்கில 'நோட்டு' களும், ஒரு சில தெலுங்குக் கீர்த்தனைகளுமாகவே இருந்தன. ஒரு தமிழ்ப்பாட்டுக் கூட இல்லை.

மீனாட்சியம்மாள் இடைமறித்தாள்.

'' ஏம்மா, நந்தினி, ஏதாவது ஒரு தமிழ்ப்பாட்டுப் பாடேன்!''

'' தமிழ்ப் பாட்டா ? ஓ! பாடுகிறேனே ! ''—என்றவள், சில நாட்களுக்கு முன்னர் வெளியான திரைப்படப்பாடல் ஒன்றைப் பாடினாள்.

'' மீனாட்சியம்மா பாடச் சொன்னது இந்தமாதிரிப் பாட்டை இல்லை. புரந்தரதாசர், தியாகய்யர்— இவர்களுடைய கீர்த்தனைகளைச் சங்கீத ஞானத்தோடு பாடினாயே அப்படி இராமலிங்க அடிகளின் திருவருட்பா, வேதநாயகம் பிள்ளையின் சமரசக் கீர்த்தனைகள், கோபால கிருஷ்ண பாரதியின் பாடல்கள் அல்லது தேவாரம்—இவைகளில் ஏதாவது ஒரு தமிழ்ப்பாட்டாகப் பாடேன்!''

—என்று கூறியவாறே தம்முடைய ' சர்ச்சில் சுருட்டை, ஓர் இழுப்பு இழுத்தார் ஏகாம்பரம்.

'' அந்தப் பாடல்களைப் பற்றி எனக்குத் தெரியவே தெரியாதே ! அவைகளெல்லாம் அவ்வளவு உயர்ந்தவைகளா என்ன ?''

—நந்தினி இப்படி ஓர் அசட்டுத்தனமான கேள்வியை எழுப்பியதும், விழாவுக்கு வந்திருந்த அத்தனை பேர் முகத்திலும், விளக்கெண்ணெய் குடித்த மாதிரி அசடுதான் வழிந்தது.

ஏகாம்பரம் மட்டும் தம் வாயிலிருந்த சுருட்டை எடுத்து முகத்துக்கு நேரே வைத்து அதனை நோக்கியவாறே கடகடவென்று நகைத்தார்.

'' பார்த்தாயா, மீனாட்சி நான் என்ன சொன்னேன்? ம் இனிமேலாவது உலகத்தைப் புரிந்து கொள். யாரையும் எளிதில் நம்பி ஏமாறாதே ?''

—என்று எச்சரித்து விட்டுக் கைப் பிரம்பைத் தட்டியவாறே தம் வீட்டுக்குப் போய்விட்டார் அவர்.

அதற்குப் பிறகு நந்தினியிடம் ஒருவித அருவருப்புத்தான் உண்டாயிற்று மீனாட்சியம்மாளுக்கு. பட்டும் படாமலே பழகுவது என்கிற முடிவுக்கே வந்து விட்டாள் அவள்.

நாட்கள் நகர்ந்தன.

நந்தினியின் போக்கிலும் பெருத்த மாறுதல்கள் ஏற்படலாயின. அவள் குடியிருந்த மாடிப் பகுதி, ஒரே ஆட்டமும் பாட்டும் கூத்தும், கும்மாளமுமாக எதிரொலிகளை எழுப்பியது ; மீனாட்சியம்மாளின் உறக்கத்தையும் கெடுத்தது. அது மட்டுமா ?

நந்தினி என்னும் பலாச்சுளையினை மொய்ப்பதற்கு எத்தனை எத்தனையோ ஈக்களும் எறும்புகளும் சாரை சாரையாக வரத் தலைப்பட்டன.

அவளிடம் நெருங்கிப் பழகாமல் ஒதுங்க முற்பட்டதால் அவளுடைய நடவடிக்கைகளைத் தடுக்கவோ குறை கூறவோ உரிமை இழந்து விட்ட ஒரு விதத் தாழ்வு மனப்பான்மைக்கு இலக்காகி விட்டாள் மீனாட்சியம்மாள்.

இதே நேரத்தில் அவளுடைய மகன் செங்குட்டுவனை கலைப்பித்துப் பிடித்தவனைகத் தன் தாய்க்குத் தெரிந்தும் தெரியாமலும், நந்தினியின் பின்னால் சுற்றத் தொடங்கி விட்டான்.

பசித்த பார்வையாலும், பருவப் பூரிப்பாலும், இசையாலும், நடனத்தாலும் தன் மகனின் இதய உணர்வுகளையெல்லாம் தன் வசமே இழுத்துக் கொண்டு விட்ட அந்த இள மங்கையிடமிருந்து தன் மகனை எப்படி விடுவிக்கப் போகிறோம் என்கிற திகைப்பு சில

நாட்களாகவே மீனாட்சியம்மாளின் நெஞ்சைக் குடைந்து கொண்டேயிருந்தது.

இந்த நிலையில்தான் நந்தினி ஏற்பாடு செய்த ஒரு விருந்தில் கலந்து கொள்வதற்காக மாடிக்குச் சென்ற தன் மகன், அங்கே அலங்கோலமாகக் கிடக்கக் கண்டு அதிர்ச்சியுற்றாள் அந்தத் தாய் !

• • •

மீனாட்சியம்மாளின் ஆத்திரம் சட்டென்று அழுகையாக மாறிற்று. அவளுக்குப் பேசவே நா எழவில்லை. நந்தினியின் அனுமதி எதையும் எதிர்பார்க்காதவளாய் உள்ளே அண்டாவில் இருந்த தண்ணீரை வாளியினால் மொண்டு வந்து. செங்குட்டுவனின் தலையிலே கொட்டினாள்.

பிறகு தன்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்ட ஆடவனை நோக்கினாள்.

'' என் மகனை எப்படிக் கெடுத்து வைத்திருக்கிறாள் பார்த்தாயா ? இதற்குத்தானா அன்று இரவு இவளுக்கு அடைக்கலம் கொடுத்தேன் ? நான் செய்த உதவிக்கு இவள் காட்டக்

பாவம், இவருடைய பயிர் முழுவதும் நோய்க்கு இரையாகி விட்டது!

டைத்தேன் Z-78 உபயோகித்து விளைவைப் பெருக்குங்கள்.



ரு. 30 மட்டும் செலவழித்து இந்த மாபெரும் நஷ்டத்தைத் தவிர்த்திருக்கலாம்!

சொற்ப செலவில் டைதேன் Z-78 வாங்கி உபயோகித்தால் உங்கள் விலைமதிப்பற்ற பயிருக்குப் பாதுகாப்பளிக்க முடியும். டைதேன் Z-78 பயிர்களின் நோய்களைக் கட்டுப்படுத்துவதில் அதிசய சக்தி வாய்ந்தது. இது செடிகளின் இலைகளுக்கோ, பூக்களுக்கோ, காய்களுக்கோ ஒருவித தீங்கும் விளைவிக்காது. விளைச்சலைப் பெருக்க உதவுவதுடன் இது பயிரின் தரத்தையும் உயர்த்துகிறது.

இண்டோ:பில் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பம்பாய்-25, இந்தியா

DITHANE என்ற பெயரும் :ப்ளாஸ்க் சின்னமும் ரோம் அண்ட் ஹாஸ் கோ/ பிலாடெல்பியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு. எஸ். ஏ. யிலும் இதர நாடுகளிலும் ரெஜிஸ்டர் செய்யப் பட்டுள்ளன.

கூடிய நன்றிக் கடன் இதுதானு? இதற்கு மேலும் இவள் இங்கே இருக்க நான் அனுமதிக்கலாமா? நீங்களே நியாயத்தைச் சொல்லுங்கள்! நாளைக் காலையே இவள் இந்த இடத்தைவிட்டுக் காலி செய்யாவிட்டால் நான் சும்மா விடமாட்டேன்.''

அதுவரை வாயைத் திறக்காமல் இருந்த நந்தினி,

'' நான் ஏன் காலி செய்யணும் ? வாடகை பாக்கி வைத்தால்தானே என்னைப் போகச் சொல்ல முடியும் ? ''— என்று அழுத்தமாகப் பகர்ந்தாள்.

'' வாடகையை ஒழுங்காகக் கொடுத்து விட்டதாலேயே அந்த வீடு உனக்கு உரிமையாகி விடுமா ? அப்படித்தான் என்ன இந்த மாடிப்பகுதியைக் கூட்டிப் பெருக்கித் துப்புரவாக வைத்திருக்கிருய் ? எங்கே பார்த்தாலும் குப்பையும், கூளமும், அழுக்கும், புகையுமாக எவ்வளவு அசிங்கப்படுத்திவிட்டாய் வீட்டை ? இப்படியெல்லாம் என் வீட்டை நாசப்படுத்தி— என் மகனைக் கெடுத்து—என் குடும்பப் பெருமையையே குட்டிச் சுவர் ஆக்கத்தான் இங்கே குடியிருக்க வந்தாயா ? கண்டிப்பாச் சொல்றேன் ! நீ உடனே காலி செய்யத்தான் வேணும்.''

'' காலி செய்து விட்டு நான் வேறே எங்கே போறதாம் ?''

'' ஏன், உன் தாய் நாட்டுக்கே திரும்பிப் போய் உற்ருர் உறவினரோடு சேர்ந்து இருக்கிறது ?''

'' அப்படியெல்லாம் நீ எனக்குப் புத்தி சொல்லத் தேவையில்லை, வேணுமானு செங்குட்டுவன் போகச் சொல்லட்டும் !''

'' ஓகோ ! அந்த அளவுக்கு அவன் மனத்தை நீ கெடுத்து விட்டாயா ? எப்போ அவன் உன் அழகிலே மயங்கி, அறிவையே இழந்தானே அன்றைய தினமே அவன் இந்த மண்ணுக்கு நன்றி இல்லாதவன் ஆகி விட்டான். ஆனு, அவனுடைய மயக்கம் நெடுநாள் நீடிக்கும் என்று மனப்பால் குடிக்காதே ! அப்படியே அவன் திருந்தாமல் போனுலும் அதற்காக, வாடகைக்குக் குடியிருக்க வந்துவிட்டு வீட்டுச் சொந்தக்காரியையே, விரட்டி அடிக்க அஞ்சாத உன் கொட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைக்காமல் விடவே மாட்டேன். உன் இச்சைப் படியெல்லாம், என் தலைக்கு மேலே நீ மானங்கெட்ட பிழைப்புப் பிழைக்கவும் இடங் கொடுக்க மாட்டேன்.''

'' என்ன சொன்னே? நானு மானங்கெட்ட பிழைப்புப் பிழைக்கிறேன்?''

—என்று ஆத்திரத்துடன் கேட்ட நந்தினி சட்டென்று ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து மீனுட்சியம்மாளின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்தாள்.

அந்த ஒரே அறையிலேயே தடுமாறிப்போய்ச் சுருண்டு விழுந்து விட்டாள் மீனுட்சியம்மாள்.

'' இந்தக் கழுதையைக் கொண்டு போய்க் கீழே தள்ளுங்கள். எவ்வளவு திமிர் இருந்தால் என்னை இப்படி அவமானமாகப் பேசுவாள் ?''— என்று கொக்கரித்தாள் நந்தினி.

தலையிலே தண்ணீர் கொட்டப்பட்டதால் மது தந்த மயக்கம் தெளிந்து விட்டது போலும் செங்குட்டுவனுக்கு !

தன் தாய் அடிபட்டதைக் கண்டதும், அவனுடைய குருதி கொதிக்கத் தொடங்கிவிட்டது. அவன் ஆங்காரத்துடன் மேலே எழுந்தான்.

அடுத்த கணமே நந்தினியின் முகம், முதுகு, ஏன் அவளது உடம்பு முழுவதிலுமே, 'நீடாமங்கலம் தட்சிணுமூர்த்திப் பிள்ளையின் தவில் ஆவர்த்தனம் '— சடசடவென்று நடந்து முடிந்து விட்டது ! ஆம் ! மயக்கந் தெளிந்துவிட்ட செங்குட்டுவன் நந்தினியைச் சக்கை சக்கையாகப் பிய்த்து எடுத்து விட்டான்.

விருந்துக்கு வந்திருந்த மற்ற ஆடவர்கள் எல்லோரும் மூச்சுப் பேச்சு இல்லாமல் திகைத்து நின்று விட்டார்கள். உறங்கும் புலியை இடறி விட்டு விட்டால் பிறகு என்ன கதி ஏற்படுமோ என்கிற அச்சம் அவர்களுடைய முகத்தை இருளடையச் செய்து விட்டது.

'' ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டிய கதையாக என் தாயை அறைகிற அளவுக்கு உனக்கு அவ்வளவு கொழுப்பு வந்து விட்டதா'' என்று எரிமலையைக் கக்கியவாறே, நந்தினியின் கழுத்தைப் பிடித்து, நெட்டித் தள்ளி அந்தக் கும்மிருட்டில் தெருவுக்கே கொண்டுபோய்ச் சுழற்றிப் போட்டு விட்டான் செங்குட்டுவன்.

* * * *

அதற்குப் பிறகு . . . .

அந்த மாடி வீட்டில், பண்டையத் தமிழகம் போல் அமைதியே தவழ்ந்தது!

செங்குட்டுவனின் மயக்கமும் நன்ருகத் தெளிந்துவிட்டது.

இன்று இரசாயன உரம் உபயோகிக்காத விவசாயியே இல்லை. இந்தியாவிலேயே, இரசாயன உரம் உபயோகித்தலில் தஞ்சாவூர் மாவட்டம்தான் முதலிடம் வகிக்கிறது. அதற்கு அடுத்த படியாக வருவது கேரளா.

ஆக்குவதும் அழிப்பதும் உங்கள் கையில்





வெண்பாப் போட்டி

7. எங்கும் நலமே இனி

தாயை மதித்தல் தரக்குறைவோ? தண்டமிழைப்
பேயைப்போல் எண்ணிப் பிதற்றுவதேன்?—வாய்மையது
பொங்கும் புதுக்கல்விப் பொன்னூறு பாய்ந்தோட
எங்கும் நலமே இனி.

—சாந்தா வெங்கடேசன், நெய்வேலி.

திங்களின்மேல் ஊர்தி செலுத்தியவர் கற்றதெதில்?
தங்களுயிர்த் தாய்மொழியில் தானறிவாய்!—தங்கமே,
தங்குதடை யின்றுணரத் தாய்மொழியே செம்மொழியாம்.
எங்கும் நலமே இனி.

—சத்திரமனை சித்திரகவி, மேட்டுப்பாளையம்.

மூவேந்தர் காத்ததுபோல் முத்தமிழைக் காப்பதற்குப்
பாவேந்தர் ஆட்சிப் பறைசாற்றத்—தேவையற்றோர்
இங்கே எழுப்பும் எதிர்வாதம் வென்றுள
எங்கும் நலமே இனி.

—மேலூர் அருச்சுனன், சென்னை-19.

விஞ்ஞானம் தன்னொடு விந்தைமிகு சிந்தனையும்
எஞ்ஞான்றும் நாட்டில் இருந்திடவே—இஞ்ஞான்று
தங்கும் அறிவுக்குத் தாய்மொழியால் கற்றாலே
எங்கும் நலமே இனி.

—திருப்பனந்தாள் வீ. மணி, தஞ்சை மாவட்டம்.

எல்லாக் கலைகளிலும் ஏற்றமிகுங் கோயிலிலும்
நல்லதொரு நீதிமுறை நிர்வாகம்—பல்துறையும்
பொங்கும் தமிழ்நாடு புத்துணர்வு பெற்றொளிர
எங்கும் நலமே இனி.

—புலவர் வே. சுப்பிரமணியன், திருச்சி மாவட்டம்.

செத்தபின்பும் சாம்பல் தமிழ்மணக்கும் என்றறைந்த
வித்தகனே, நீயா விலங்கிடுவாய்—முத்தமிழ்க்கு?
சங்கம் வளர்த்திட்ட தங்கத் திருநாட்டில்
எங்கும் நலமே இனி.

—காவியன், உரத்தநாடு.

கன்னித் தமிழ்கற்றே கல்லணையைக் கட்டுவித்தார்
முன்னைப் பெருவாழ்வும் முத்தமிழால்,—என்னஇலை
தங்கத் தமிழினிலே? தாயகத்தை மேம்படுத்தின்
எங்கும் நலமே இனி.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

அங்கமெல்லாம் வெட்டி அணுஅணுவாய்ப் போக்கிடினும்
சங்கத் தமிழ்காக்கச் சாதலேற்பேன்—சிங்கம்போல்
பொங்கி யெழுந்திடுவீர்; போர்முரசு கொட்டிடுவீர்;
எங்கும் நலமே இனி.

—டி. வை. தமிழடியான், இரட்டணை.

தாய்மொழியில் கற்பதுபோல் சால எளிதிலையால்
தாய்மொழியில் கற்கத் தயங்குவதேன்?—தாய்மொழியில்
எங்கும் உளகலைகள் எல்லாம் படைப்போமேல்
எங்கும் நலமே இனி.

—புலவர் ப. ப. இராமசாமி, எலுகாம்வலசு.

கன்னிமொழி கற்றே கடல்கடந்து சென்றந்நாள்
நன்னிலையில் வாழ்ந்தனர்காண் நம்முன்னோர்—என்றிந்நாள்
சங்கத் தமிழுணர்வைத் தட்டி எடுத்துரைப்போம்
எங்கும் நலமே இனி.

—பூ. அ. துரைராஜா, இராஜபாளையம்.

ஓங்கு தமிழர் உயர்கலைக ளத்தனையும்
பாங்குறவே தாய்மொழியில் பண்புறுவார்-ஆங்கிலர் போல்
சங்கே முழங்குகவே சங்கே முழங்குகவே
எங்கும் நலமே இனி.

—புலவர் சி. இரத்தினவேலனார், சென்னை-19.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திருமதி சாந்தா வெங்கடேசன், மே/பா. இராசாராமன்,
எம். 140/2, எம். கே. காலனி, நெய்வேலி-2.

53

முச்சங்கம் தந்திட்ட மூவாத் தமிழினுக்கு
இச்சகத்தில் எங்கணும் ஈடுண்டோ?—இச்சையுடன்
மங்காத் தமிழ்த்தொண்டை மாணவர்கள் செய்துவிடின்
எங்கும் நலமே இனி.

—செ. பெரியசாமி, மதுரை.

வேம்பென்று கூறி வெறுத்தோர்க்கும் எட்டிக்காய்க்
காம்பென் றுனேயிகழ்ந்து காய்வார்க்கும் தீம்பழமாய்
பொங்கியெழும் தேன்குடத்துள் போட்டெடுத்த
கற்கண்டாய்
எங்கும் நலமே இனி.

—சி. சௌ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

கொவ்வை இதழ்சிந்தும் கோலஞ்சேர் முத்தெல்லாம்
ஔவைத் தமிழின் அமுதாமே—இவ்வுலகில்
மங்காத் தமிழ்காக்கும் மாக்கலேஞர் வாழ்நாளில்
எங்கும் நலமே இனி.

—செ. அமரசிங், சின்னமனூர்.

பாலூட்டி லுந்துயிற்றுந் தாலாட்டி லும்பயிற்றும்
நூலேட்டி லும்மரசின் நிர்வகிப்பில்—மாலூட்டு
மங்கை யரவணேப்பில் மட்டின்றி மாநிலத்தே
எங்கும் நலமே இனி.

—புலவர் ந. பக்கிரிசாமி, சிமிளிமேடு.

விண்ணியலில், செல்வ, விளேவியலில் வேத்தியலில்
மண்ணியலில் உள்ள மனவியலில்—எண்ணியலில்
மங்காக் கலேயியலில் வையவர லாற்றியலில்
எங்கும் நலமே இனி.

—சுப. மணி. திண்டுக்கல்.

ஆட்சித் தவிசில் அறிவியலில் ஆலயத்தில்
மாட்சியுடன் நீதி மலர்மன்றில்—காட்சிபல
பொங்கும் கலேமன்றில் புத்தறிவுச் சாலேகளில்
எங்கும் நலமே இனி.

—மு. விசுவபாரதி, திருமயம்.

கல்விக் கழகங்கள் கல்லூரி மன்றங்கள்
செல்வத் தமிழ்மணக்கச் செய்திடுவோம்—வில்நுதலே!
செங்குருதி கொப்பளிக்கச் செய்வோர்க்கும் அஞ்சோமே
எங்கும் நலமே இனி.

—பாவாணன், திருமயம்.

வீட்டில் வெளியில் விளக்கந் தருங்கல்வி
ஏட்டில் எழுத்தில் இடம்பெற்று—நாட்டினிலே
பொங்குந் தமிழ்க்கல்வி போற்றும் முறைகண்டோம்
எங்கும் நலமே இனி.

—சடையப்பன், திருவெண்ணெய்நல்லூர்.

தன்மதிப்பு, தன்மானம் தன்னுரிமை பேணுதற்கு
மன்பதைக்கு மாண்புரைத்த மாத்தமிழன்—இன்புறற்குத்
தங்குதடை யின்றித் தருமறிவு மிக்கெய்த
எங்கும் நலமே இனி.

—எழில்மாறன், நரிக்கல்பட்டி.

நாடு தமிழ்நாடு, நாமெல்லாம் நற்றமிழர்,
பாடு படுவதுடன் பாரினிலே,—ஈடின்றித்
துங்கமுடன் வாழத் துறைதோறும் காண்போமே
எங்கும் நலமே இனி.

—சுப்பராயலு, பி. ஏ., பெரியகுளம்.

சிங்கம் 'அறிஞர்'; சிறுத்தை 'கலேஞர்';
தங்கம்நம் 'நாவலர்'; தண்டமிழை—எங்குமிவர்
தங்க,வழி செய்தார்; தமிழன்னே சீர்பெற்ருள்
எங்கும் நலமே இனி.

—அ. சு. இளங்கோவன், திண்டுக்கல்.

கலேத்துறையில், புள்ளிக் கணக்கியலில், நீதி
நலத்துறையில், விஞ்ஞானம், நாள்,கோள்,—வளர்
துறையில்
செங்கோல் அரசியலில், செப்பும் தமிழாக
எங்கும் நலமே இனி.

—பூ. அண்ணுமலே, மேலச்சேரி.

முத்துக்கு வித்தூற்ருய் மூதறிஞர் சீர்பாட
தித்திக்குந் தொல்வீரத் தேனருவி—புத்தமுதாய்
பொங்கிச் சுவையூட்டும் பூமடந்தை தன்னுட்டில்
எங்கும் நலமே இனி.

—எழிற்கோவன், ஒசூர்.

நல்லபல திட்டங்கள் நாட்டில் செயற்படுத்தி
வல்லதமிழ் வாழ வழிவகுத்த—நல்லவரே
எங்கள் தமிழ்நாட்டை ஏற்றமுடன் ஆளுகின்ருர்
எங்கும் நலமே இனி.

—புலவர் சே. சேகரராசா, எம்.ஏ., பி.டி., மதுரை.

ஏற்றிடவும் வான்வெளியில் ஏவுகணே ஆழ்கடலில்
ஆற்றலுடன் சுற்ற அருங்கலமும்—தேற்றமுடன்
மங்கா அறிவியலில் மாக்கல்வி கொள்ளுதலால்
எங்கும் நலமே இனி.

—புலவர் ந. சுப்பிரமணியன், மடத்துக்குளம்.

அண்ணன் அடிச்சுவட்டில் ஆண்டுவரும் ஆரூரான்
கண்ணின் மணிபோன்ற காராளன்—திண்ணமுடன்
சங்கத் தமிழ்வாழத் திட்டங்கள் தந்திடுவான்
எங்கும் நலமே இனி.

—வை. மறைமணி, புதுக்கோட்டை.

கல்லிருக்கும் மண்ணிருக்கும் காலம் வரையிருக்கும்
சொல்லிருக்கும் நாவுடையார் சோர்ந்திருக்கும்—புல்லிய
நாள்
இங்கிருக்கக் காணுர் இருக்கும் தமிழரசால்
எங்கும் நலமே இனி.

—சி. பெ. முத்துக்குமாரன், பெங்களூர்-3.

ஆட்சிமுறை, வீதி, அரசுந்து வண்டி, கடை,
மாட்சிபெறு கல்வி,பெயர், மைதானம்—நீட்சிமிகப்
பொங்குநிலே யப்பேர் பொருந்தும் தமிழரசால்
எங்கும் நலமே இனி.

—மாதையூரான், திருவாமாத்தூர்.

மான்பெற்ற மைவிழியே! மின்பெற்ற கார்குழலே!
தேன்பெற்ற வாய்மொழியே! தீந்தமிழே!—வான்நிலவு
பொங்கி வழிந்தோடும் பூ முகமே! நம் நாட்டில்
எங்கும் நலமே இனி.

—சொ. பெருளகச் செல்வன், பட்டுக்கோட்டை.

அன்னேத் தமிழாள் அகம்மகிழ அன்னவளின்
தொண்டு புரிவோர் தொகைசிறக்க—தென்றலுடன்
வங்கக் கடலேயும் வாழ்த்தோ(டு)—இசைபாட
எங்கும் நலமே இனி.

—தமிழ்க்கோவன், சென்னே-6.

தேன்போலுந் தித்திக்கும் தீந்தமிழ் நாட்டினில்
வான்போற்றுங் கம்பனும் வள்ளுவனும்—தேன்றமிழில்
பொங்கும் கருத்தைப் பொழிந்த தமிழ்நாட்டில்
எங்கும் நலமே இனி.

—என். அமலன், தோவாளே.

நீதிமன்றம் சட்டமன்றம் நேராளும் ஆட்சிமன்றம்
ஓதுகல்விக் கூடம் உயர்வணிக—வீதிமுதல்
இங்கங் கெனுதபடி இன்பத் தமிழ்நாட்டில்
எங்கும் நலமே இனி.

—அறிஞரடியான், அரிக்காரன்வலசு.

பொறியியலும் நல்ல பொருளியலும் ஓங்கும்
அறிவியலும் மேவும் அழகால்—நறுநுதலாய்!
தங்கத் தமிழகத்தின் கல்வித் துறையதனில்
எங்கும் நலமே இனி.

—கே. பாலசுப்பிரமணியன், பி.ஏ., குளித்தலே.

வலிவான,

பொலிவான,

விலே மலிவான

நவீன பட்டு, நூல்,

மில் ஜவுளிகளுக்கு

நம்பிக்கையான ஸ்தாபனம்

மு. ரா. சன்ஸ்

122, ஆசாத் ரோடு,

விஜயபுரம்-T.V.R.

தொலே பேசி எண் : 306.



காச நோய் என்றுமே தீராத நோய், தீர்க்க முடியாத நோய் என்று கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது.அந்தப்பயங்கரநிலைமை இப்போது மாறி விட்டது. காச நோயை ஒழிக்க வல்ல அரிய சக்தி வாய்ந்த வியத்தகு மருந்துகளை விஞ்ஞானம் இப்போது வழங்கியுள்ளது. நோயாளியின் ஒத்துழைப்புக் கிடைக்குமேயானால் எந்தநிலையில் நோய்இருந்தாலும் அவரை மீட்க முடியும் என்ற நம்பிக்கையும் தெளிவும் இன்று ஏற்பட்டிருக்கிறது.

எனினும் இந்த நோயை அறவே ஒழிப்பதும், நோய் வராமல் பாதுகாப்புப் பெறுவதென்பதும் மிகப் பெரிய பிரச்சனையேயாகும். நாடு முழுவதையும் எடுத்துக் கொண்டால் காச நோய் பெருமளவில் பரவியுள்ள நோயாக இருக்கிறது. மக்கள் தொகையில் ஏறக்குறைய 2 சதவிகிதத்தினர் காச நோயால் அவதிப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.. நாடு முழுதிலுமுள்ள காச நோயாளிகளின் எண்ணிக்கை சுமார் 20 லட்சம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 6 லட்சம் காச நோயாளிகள் இருக்கலாம் என்றால், அதில் சுமார் 2 லட்சம் பேர் பிறருக்கு நோயைப் பரப்பும் அளவில் நோய் முற்றிய நிலையில் இருப்பவர்கள் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தப் பொல்லாத நோய் நாட்டுப் புறங்களைப் போலவே நகர்ப் புறங்களிலும் பரவி நிற்கிறது.

நுரையீரலில் நுழையும்!

காச நோய்த் தடுப்பு இயக்கம் மக்கள் சமுதாயத்தைச் சேர்ந்த அனைவருமே பங்கேற்றுப் பணியாற்ற வேண்டிய இயக்கமாகும். தங்களது சொந்த வாழ்விலும் சமூகக் கூட்டு வாழ்விலும் காச நோயை முறியடிக்கும் முயற்சியில் மக்கள் மிகுந்த ஈடுபாடு கொள்ளவேண்டியிருக்கிறது.

மானிடர் வழி பரவும் நுண்ணிய கிருமிகளால் காச நோய் ஏற்படுகிறது. இக் கிருமிகள் உடலுக்குள் புகுந்து பெரும்பாலும் நுரையீரலில் தங்குகின்றன. மக்கள் பெருக்கம், குடியிருப்பு வசதிக் குறைவு, சுகாதாரக் குறைபாடுகள் முதலியன, இப் பூச்சிகள் பெருகிப் பரவ பெரிதும் துணை செய்கின்றன. காச நோயாளிஒருவர் துப்பும்போதும், தும்மும் போதும், இருமும் போதும், பேசும்போதும், மூச்சு விடும் போதும் இப் பூச்சிகள் கோடிக்கணக்கில் வெளிப்படுகின்றன. இக்கிருமிகள் யாரும் உணராத நிலையில் அக்கம்பக்கத்தில் இருப்போர் உடலுக்குள் நுழைகின்றன. நோய் மிக மெதுவாகப் பரவித் தாக்குதலைத் தொடங்கிய பின்பே காச நோயின் கொடுமை தெரிய வருகிறது. அதற்கிடையில் அவருடன் நெருங்கிப் பழகும் பலருக்கும் நோய் தொத்துவதற்கு ஏதுவரகிறது. ஆரோக்கியமான உடல், இந்த நோய்ப் பூச்சிகளை எதிர்த்துப் போராடி முறியடித்து விடுகிறது. நோய் வராமல் பாதுகாக்கும் தடுப்பு முறைகளை மேற்கொள்ளல், நோயால் நலிவோரை நாடி அறிந்து தக்கபடி மருத்துவம் செய்தல் ஆகிய பணிகளை முக்கியமாகக் கொண்டதே காச நோய்த் தடுப்பு இயக்கமாகும்.

ரூ. 150 கோடி செலவிட இயலுமா?

தமிழகத்திலுள்ள சுமார் 6 லட்சம் காச நோயாளிகளையும் மருத்துவ விடுதியில் சேர்த்து, தங்கவைத்து, முழுச் சிகிச்சையும் அளித்துக் குணப்படுத்துவதென்பது இன்றைய நிலையில் இயலாத செயலே! காச நோயாளிகளுக்கென இப்போது தமிழக மருத்துவ மனைகளில் 3,358 படுக்கைகள் உள்ளன. மருத்துவ விடுதியில் ஒரு நோயாளியைத் தங்க வைத்து மருத்துவ உதவி தருவதென்றால் ஓராண்டுக்கு ஆகும் செலவு சுமார் ரூ. 3,000 ஆகும். ஆறு லட்சம் நோயாளிகளுக்கும் இத்தகைய சிகிச்சை அளிப்பதென்றால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 150 கோடிக்கு மேல் செலவாகும். நடைமுறையில் முழு அளவில் நிறைவேற்றப்படக்கூடியது அல்ல.

இத்தகைய நிலையில் விஞ்ஞானம் தந்துள்ள அரிய மருந்துகளின் வியத்தகு சக்தி, நமக்குப் பெருந்துணை புரிகின்றது. வீட்டிலிருந்தபடியே, மருந்துகளைப் பயன்படுத்தி நோயிலிருந்து விடுதலை பெறலாம் என்றும் சிகிச்சை விடுதிகளில் மாதக் கணக்கில் படுத்திருந்து பெறும் சிகிச்சைக்கும் வீட்டிலிருந்தபடியே பெற்றுக்கொள்ளும் சிகிச்சைக்கும் பெரிய வேறுபாடு இல்லை என்றும் ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தியுள்ளன. உயர்தரமான உணவுகளும் இன்றியமையா ஓய்வும் இருந்தே தீர வேண்டும் என்ற கட்டாயம் இனி இல்லை. காச நோயினால் பீடிக்கப்பட்டவர், பயிற்சி பெற்ற மருத்துவர் ஒருவரின் ஆய்வுரைப்படி, குறிப்பிட்ட மருந்துகளை இடைவிடாது தொடர்ந்து உட்கொண்டு வருவாரானால், ஓராண்டு அல்லது ஒன்றரையாண்டுக் காலத்துக்குள் நல்ல குணம் காணலாம். வழக்கமான எளிதில் கிடைக்கக்கூடிய உணவுகளே போதுமானவை. அவசியமிருந்தாலொழிய, படுக்கையிலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதும் இல்லை.

வீட்டுச் சிகிச்சை முறையால் விளையும் பயன்

காச நோய்த் தடுப்பு இயக்கத்தின் திட்டத்தையும் குறிக்கோள்



களையும் நூற்றுக்கு நூறு நிறைவேற்றும் வகையில் இன்று தமிழக அரசு எல்லா மாவட்டங்களிலும் முறையாக, பயனுள்ள வகையில் நடத்தி வருகின்றது. உலக சுகாதார அமைப்பும் அனைத்துலக நிறுவனங்களும் நல்லமுறையில் ஒத்துழைப்பும் ஆதரவும் அளிக்கின்றன. இந்திய நாட்டிலேயே காச நோய்த் தடுப்பு இயக்கம் சிறப்பாகச் செயல்படுவது தமிழகத்தில்தான். நோய் வருமுன் காக்க பி.சி.ஜி. ஊசி மருந்தை வகையாகச் செலுத்தி, நல்ல வழிகளை நாட்டினருக்குணர்த்தி, காச நோயைக் கடிதில் விரட்ட முனைந்துவிட்டது தமிழகம்!

காச நோய் நீங்க, வீட்டுச் சிகிச்சை முறை நடைமுறைக்கு வந்த பின்பு, தமிழக மருத்துவ விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை பெரிதும் குறைந்துவிட்டது. முன்பெல்லாம் படுக்கை கிடைக்க வேண்டுமென்றால், நோயாளி இரண்டாண்டுக் காலம்வரை காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. ஆனால் இப்போது காச நோய் மருத்துவர்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், இதர மருத்துவ மனைகள் மூலமாக வீட்டுச்சிகிச்சை முறையை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

நோய் நீக்கும் மருந்துகளை, நோயாளியின் கையிலேயே கொடுத்து, அந்த நோயாளி வீட்டிலேயே இருந்து மருத்துவம் பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்வதே இத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் எல்லா மருத்துவ நிலையங்கள் மூலமாகவும் காச நோய் நீக்க மருந்துகள் அளிக்கப்படுவதால், நோயாளிகள் தங்கள் வீட்டுக்கு மிக அருகாமையில் உள்ள மருத்துவ நிலையத்திலிருந்தே மருந்துகள் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு தடவையிலும் ஒரு மாதத் தேவைக்கான மருந்து, மொத்தமாகக் கொடுக்கப்படுகிறது.

வருமுன் காப்போம்!

இத் திட்டத்தை முறையாக நடத்தி வரவும் காச நோய் மருந்தகங்களை மேற்பார்வையிடவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட காச நோய் நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் மாவட்ட காச நோய் மருத்துவ அலுவலர், ஒரு துணை மருத்துவ அலுவலர், ஒரு மருத்துவ அமைப்பாளர், ஒரு எக்ஸ்ரே வல்லுநர், ஒரு ஆய்வுக் கூட உதவியாளர், ஒரு புள்ளி விவர உதவியாளர் ஆகியோர் உள்ளனர். காச நோய்த் தடுப்புக்காக பி. சி. ஜி. ஊசி குத்தும் குழுவும் இந்த நிலையத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. பிறந்த குழந்தைகள் முதல் 20 வயதுக்கு உட்பட்ட அனைவருக்கும் பி.சி.ஜி. ஊசி மூலம் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

நோயாளியொருவர் தனது வீட்டிற்கு அருகேயுள்ள மருத்துவ நிலையம் அல்லது மருந்தகத்துக்குச் சென்றால்—அங்கேயே கோழையைச் சோதிப்பதற்கு வசதியிருந்தால்— அதன் மூலம் நோயிருப்பதுதெரிந்தால், சோதிப்பவர்கள் உடனே மருத்துவமும் தொடங்கிவிடுவார்கள். அப்படி

100

வசதியில்லையென்றால் கோழையை எடுத்து, உரிய முறையில் மாவட்ட நிலையத்துக்கோ, அருகிலுள்ள வசதியுள்ள மருத்துவ மனைக்கோ, அனுப்பி வைப்பார்கள். இத்துடன் அவசியத்துக்கேற்ப எக்ஸ்ரே எடுத்துக்கொள்ளவும் வசதி செய்யப்படும்.

ஒரு துளி போதும்!

காசநோய்க்குச் சிகிச்சைஅளிப்பதைவிட அந்த நோய் வராமல் தடுப்பது மிகவும் உத்தமம். அந் நோய்வராது தடுக்கவே பி.சி.ஜி. தடுப்பு மருந்து அளிக்கப்படுகிறது. இதற்கெனத் தனிப்பட்ட பயிற்சி பெற்ற குழுவினர் எல்லா மாவட்டங்களிலும் பணியாற்றுகின்றனர். பிறந்த குழந்தை முதல் 20 வயதிற்கு உட்பட்டோருக்கு பி. சி. ஜி. அளிக்கலாம். குழுவினர் எல்லா ஊர்களுக்கும் ஒழுங்கான முறையில் வீடு வீடாகச் சென்று, மேற்குறிப்பிட்ட வயதினருக்கு பி.சி. ஜி. அளிக்கின்றனர். பி.சி.ஜியினால் காய்ச்சலோ வேறு தொல்லைகளோ வராது. இடது தோளில், தோலின் கீழ் ஒரு துளி மருந்துதான் செலுத்துவார்கள். ஒரு துளி மருந்து போதும், நோயைத் தவிர்க்க!

ஆகவே, காசநோயைக் கட்டுப்படுத்த மக்கள் தக்க முறையில் ஒத்துழைப்பது மிகவும் அவசியம். நோயுள்ளவர் இலவசச் சிகிச்சை பெற்று, தொடர்ந்து மருந்துகள் அருந்திக் குணமடைய வேண்டும். இருபது வயதிற்குட்பட்டவர்கள், வாய்ப்புக் கிட்டும்போது பி.சி.ஜி. தடுப்பு மருந்து போட்டுக்கொள்ள வேண்டும். இம்முறை இப்போது நிகழ்ந்தேறி வருகிறது. இம் முயற்சி முழு அளவிற்கும் வெற்றி பெறப் பொதுமக்கள் இத்திட்டத்தின் தன்மைகளை உணர்ந்து-நன்மைகளைப் பெற்றிட வேண்டும்.

மரக்கடிகாரம்.

கடிகாரத்தின் கருவிகள் முகப்பு, சங்கிலி முதலியவற்றை, புன்னைமரக்கட்டையைக் கொண்டும், கடிகார முட்களை ஒருவகைக் கொடியைக் கொண்டும் செய்யப்பட்ட கடிகாரம் உள்ளது.

ரஷியப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிகாரத்தைச் செய்தவர்கள் வியாத்கா என்னும் பண்டைய, ரஷ்ய நகரைச் சேர்ந்த புரோன்னிக்கோவ் சகோதரர்களாகும்.

இந்தச் சகோதர்கள் தமது சில கடிகாரங்களில் மர 'ஸ்பிரிங்கு' களைக் கூடப் பயன்படுத்தியுள்ளனர். அந்தக் கடிகாரங்கள் சிறிதும் பிழையின்றி நேரம் காட்டுவதில் புகழ் பெற்றவை.



பாலாம்பாள் பெற்ற பரிசு!

செல்வி பாலாம்பாள், கடலூர் திரு. சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பி.எஸ்.சி. படிக்கும் மாணவி. ஆர்ப்பாட்டமோ படாடோபமோ இல்லாத உருவம்.

இந்தப் பாலாம்பாளின் திறமையால் சென்னைப் பல்கலைக் கழக மகளிர் விளையாட்டுக் குழுவிற்கு அனைத்திந்தியாவிலும்பெரும்புகழ்—அனைத்துப் பல்கலைக் கழக மகளிர் குழுவில் முதலிடம் பெற்று குழுவல்லாளர் பட்டம் (Team Championship) கிடைத்துள்ளது, என்று சொன்னால், பார்த்தவர்கள் யாரும் நம்பமாட்டார்கள். ஆனால், அதுதான் உண்மை.

எல்லா மாநிலங்களிலிருந்தும் வந்திருந்த 71 பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மகளிர் குழுக்களுக்குநடந்த31-வது அனைத்துப் பல்கலைக் கழகப் போட்டியில் சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எழுவர் குழு வெற்றி பல குவித்தது. அந்தக் குழுவைச் சேர்ந்த பாலாம்பாள் வீராங்கனை என்ற விருது பெற்று வந்துள்ளார்.

விளையாட்டு நடந்த இடம் ஒரிசா மாநிலத்தில் கட்டாக் நகரிலுள்ள புகழ்பெற்ற பாரபட்டி விளையாட்டரங்கம். பரிசு பெற்றது சென்ற டிசம்பர் திங்கள் 28-ஆம் நாள். பரிசு வழங்கியவர் உட்கல் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் சதாசிவமிஷ்ரா. பரிசு, சுமார் 4 அடி உயரமும் 3 அடி அகலமும் உள்ள மிகப் பெரிய கேடயம்.

பாலாம்பாள் பெற்ற வெற்றிகள் நான்கு (1) பென்டாதிலான் என்று ஐந்து போட்டியில் (100 மீட்டர் தூர தடங்கல் (Hurdles) ஓட்டம், குண்டு வீசுதல், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், 200 மீட்டர் ஓட்டம்) முதல் பரிசு பெற்றது. இந்தப் பந்தயங்களில் இவருக்குக் கிடைத்தது 3,487 புள்ளிகள். இரண்டாவதாக வந்த குசாம் சட்டூர்வால் என்ற குவாலியர் பெண்ணைவிட 139 புள்ளிகள் அதிகம் பெற்றார். (2) குண்டு வீசுவதில் முதலாவது பரிசு. குண்டு வீசிய தூரம் 9.78 மீட்டர், (3) 100 மீட்டர் தடங்கல் ஓட்டத்தில் இரண்டாவது பரிசு. (4) உயரம் தாண்டுவதில் இரண்டாவது பரிசு.

அமைதியாகவுள்ள பாலாம்பாளுக்கு இந்த விளையாட்டுப்பயிற்சி எப்படி வந்தது?

''சிறு வயதிலேயே எனக்கு இந்த விளையாட்டுப்போட்டிகளில் ஆர்வமுண்டு. உயர்நிலைப்பள்ளி வரை நானே அக்கறை எடுத்துப் போட்டிகளில் கலந்து விளையாடி வந்தேன்.

"கல்லூரி வந்தபின் பயிற்சியாளர் திரு. வி.பி. சண்முகம் (தென்னார்க்காடு மாவட்ட விளையாட்டு மன்றப் பயிற்சியாளர்)எனது திறமையைக் கண்டு எனக்கு முறையான பயிற்சிகள் அளித்தார். கல்லூரியில் படிக்கும் போது பல பரிசுகள் பெற்றிருக்கிறேன். 1969 அக்டோபரில் திருச்சியில் நடந்த இரு போட்டிகளிலும் நவம்பர் 1969-ல் கோவையில் நடந்தபொதுஒலிம்பிக் விளையாட்டிலும் சாம்பியன் பட்டம் பெற்றேன். 1970-ல் கோவை, சென்னை ஆகிய பகுதிகளில் நடந்த போட்டிகளில் பங்கு பெற்று சாம்பியன் ஆனேன்.

என்னை மிகவும் ஊக்கப்படுத்தியதில் என் அண்ணனுக்குப் பெரும் பங்குண்டு. தினமும் காலையில் நான் ஓட்டப்பயிற்சியும் வேறு பயிற்சிகளும் பெற மிகுந்த அக்கறை காட்டினார். தினமும் ஓடிப்பழகினேன். பளு தூக்கிப் பழகினேன்.

''அதோடு கட்டாக் செல்லும் முன், மாநிலப் பயிற்சியாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி எங்கள் அனைவருக்கும் ஒரு வாரம் நல்ல பயிற்சி தந்தார். அது எனக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் உபயோகமாயிருந்தது. கட்டாக்கில் மிகவும் குளிராக இருக்குமோ—எப்படி ஓடப் போகிறோமோ என்று பயந்து போயிருந்தேன். ஆனால் அங்கு நமது தமிழ் நாட்டைப் போல்தான் பருவ நிலையிருந்தது. எனவே, நன்றாக விளையாட முடிந்தது.

"இனி, அடுத்து, அனைத்துப் பல்கலைக் கழகச் சார்பில் நாங்கள் பஞ்சாபில் குர்தாஸ்பூரில் நடைபெறவிருக்கும் பொதுப் போட்டியில்(மாணவமாணவியருக்கு மட்டுமின்றி, எல்லாவிளையாட்டுக்காரர்களுக்கும்சேர்ந்து நடக்கும் போட்டியில்) கலந்து கொள்ள விருக்கிறோம். அதிலும் வெற்றி பெற்றுத் திரும்புவோம் என்ற நம்பிக்கை யிருக்கிறது."

—ஆர்வத்தோடு சொன்னார் பாலாம்பாள்.

இந்த மகளிர் குழுவில் சென்ற மற்ற 6 பெண்கள் திருமதி எலிசபத்ஜான், செல்வியர் ரோசினி ஜார்ஜ், கண்ணம்மா, அனுசூயா பாய், சாந்தா, பாத்திமா அந்தோணி ஆகியோர். இவர்களில் சென்னை மகளிர் கிறித்துவக் கல்லூரியைச்சேர்ந்த ரோசினிஜார்ஜ் நீளம் தாண்டுதலில் முதல் பரிசு பெற்றவர். தாண்டிய தூரம் 5.18 மீட்டர். கூட்டு (ரிலே) ஓட்டத்திலும் பங்குபெற்ற ரோசினிக்குப் பிடித்தமான மற்றொரு விளையாட்டு, கூடைப்பந்தாட்டம்.

பாலாம்பாள், தோழியருடனும் பரிசுடனும்.

சைதாப்பேட்டை ஒய். எம்.சி ஏ. உடற்பயிற்சிக் கல்லூரியில் பயிலும் திருமதிஎலிசபெத் ஜான் ஈட்டி வீசுதலில் இரண்டாவதாக வந்தார். அவர் எறிந்த தூரம் 29.09 மீட்டர் ஆகும். இவருக்குப்பிடித்தமான பிற விளையாட்டுகள் கூடைப் பந்தாட்டம், கைப் பந்தாட்டம் (வாலிபால்) ஆகியவை.

இந்த ஏழு பெண்கள் அணியுடன் 15 மாணவர்கள் குழுவும் கட்டாக் போட்டியில் கலந்து கொண்டது. மாநிலக் கல்லூரி உடற்பயிற்சி இயக்குநர் திரு. சி. ராம்தாஸ் தலைமையில் இந்தக் குழுவினர் சென்றனர். பெண்கள் குழுவிற்கு மேலாளராகச் செல்வி நளினியும், பயிற்சியாளராக திரு. கிருஷ்ணமூர்த்தியும் உடன் சென்றனர். டிசம்பர் 26, 27, 28 மூன்று நாட்கள் கட்டாக் நகரில் இந்தப்போட்டிகள்நடந்தன. பிற மாநிலங்களிலிருந்து வந்தவர்களுடன் சேர்ந்து விளையாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை : மாணவர் 617 பேர், மாணவியர் 152 பேர்.

மாணவர்களில் தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் எம். எஸ்சி. படிக்கும் திரு. கணேசன் 100 மீட்டர் ஓட்டத்தில் முதலாவதாகவும் (10.8 விநாடி) 200 மீட்டர் ஓட்டத்தில் இரண்டாவதாகவும் வந்தார்.

கோவில்பட்டியைச் சேர்ந்த கணேசன், சென்ற ஆண்டு மதுரை பல்கலைக் கழக ஆக்கி குழுவிற்குத் தலைவராக இருந்திருக்கிறார். இந்த ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகக் குழுவில் ஆடியிருக்கிறார்.

இந்த ஓட்டப்போட்டிகள்தவிர சென்னைப் பல்கலைக் கழக விளையாட்டுக் குழுவினர், வேறு பல விருதுகளைக் குவித்துள்ளனர்.

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் டென்னிஸ்ஆட்டத்தில் முதல் பரிசு, அனைத்துப் பல்கலைக் கழகக் கைப்பந்தாட்டப் போட்டியில் முதல் பரிசு, தென் மண்டல கூடைப் பந்தாட்டத்தில் (மாணவர்களுக்கானது) முதல் பரிசு, மற்றும் டேபிள்டென்னிஸ், பளு தூக்குதல், சொக்கட்டான் ஆட்டம் ஆகியவற்றில் பரிசுகள் பெற்றுள்ளனர்.

''விளையாட்டுப் பந்தயங்களில் மாணவ-மாணவியர் தீவிரமாக ஈடுபடுவதால் உடல் வலுப்பெறுவதோடு, ஒழுங்கும் நட்பு மனப் பான்மையும், பண்பும் வளரும்" என்று பெருமையுடன் குறிப்பிட்டார் குழுவின் தலைவர் திரு. ராம்தாஸ்.

இளகல் நெடில்

இலையலை இடையே நுரைப்பூப் பூக்கும்
வேரிலாக் கொடி! ஓர் விதையிலாத் தாவரம்!
குஞ்சு பொரிக்காக் குமிழி முட்டைகள்
இட்டு நடக்கும் இறகிலாப் பறவை!
நிலத்தில் நெளியும் திரவ மின்னல்!
தறியில் நெய்யாத் தண்ணீர்ப் புடவை!
மண்ணின் நரம்பு! மலையின் நாக்கு!
வெப்பமும் புகையும் விடாமல் எரியும்
சோலை மாளிகைச் சுடர்விளக் கினுக்குத்
தன்சாரங் கொடுக்கும் மின்சாரக் கம்பி!
மீட்டுவார் இன்றிப் பாடும் வீணை!
குன்றின் செய்தியை மலைக்குக் கொடுக்கத்
தரையில் பதித்த தந்திக் கம்பி!
கல்லெலும் புடைய கட்டுடல் பூமியின்
இரத்தக் குழாய் குளிர்! இதயக் கசிவு!
குறிஞ்சிக் குமரி எழுது கின்ற
ஈர வாக்கியம்! நீண்ட இலக்கியம்!
ஒடியிடை குலுங்க நடக்கும் ஓவியம்!
ஊற்றின் நெஞ்சில் உற்பத்தி யான
கனவுப் பவனி! வறட்சிக் கவசம்!
புழுதி எழும்பாப் புதுமலர் வீதி!
மீன்கள் திரியும் மேய்ச்சல் காடு!
தரைக்கீறல் மறைக்கும் தண்ணீர்த் தாவணி!
நாட்டு வளத்தை நமக்கறி விக்கும்
ஈர இரேகை! இளகல் நெடிலே!

ஈரோடு தமிழன்பன்



உவகை பொங்கியது !

பொங்கல் மலரில் கவிதைகள் பொங்கின! கட்டுரைகள் பொங்கின! குறுநாவலும் பொங்கியது! அவற்றைப் படித்த எங்கள் உள்ளங்களிலெல்லாம் உவகைத்தேன் பொங்கியது!

—சி. கணபதி, சி. வேலவன்-
நெல்லை.

அன்பளிப்புக்கு ஆயிரம் நன்றிகள்!

அரசு ஊழியர் அனைவருக்கும் உயர்த்தப்பட்ட ஊதிய முழு விவரப் பட்டியலை இலவச இணைப்பாக்கினீர்களே.. உங்களுக்கு ஆயிரம் நன்றி !

—இரா. தாமோதரராஜ்,
சென்னை-12.

பாவம் செய்யேன் !

என் கணவர் தான் வாங்கும் சம்பளத்தை என்னிடம் சொல்வதே கிடையாது. இப்போது அவர் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்பதை எனக்கு ஓரளவுக்கு எடுத்துச் சொல்லியிருக்கும் 'தமிழரசை'ப் பாராட்டாவிட்டால் பாவம் செய்தவளாகி விடுவேன்.

—அமுதா சந்திரன்,
கடலூர்.

யாரோ .... ஓவியர்...யாரோ !

வள்ளுவர், புத்தர், ஏசு, காந்தி, அண்ணா ஐவரையும் ஒரே சித்திரத்தில் வடித்துக் கொடுத்த திறமைமிகு ஓவியரின் பெயர் குறிப்பிடப்படவில்லையே.

—கிருட்டிணன், மாயவரம்.

மீண்டும் படித்தேன் !

'இன்று என்ன செய்தி' பயனுள்ள கட்டுரை. நாளிதழ்கள், வார இதழ்கள் உருவான செய்தியைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். சுவைமிக்க கட்டுரையை மீண்டும் மீண்டும் படித்தேன்!

—தினகரசாமி, கொடைக்
கானல்.

என்றும் நிறைந்திருக்கும் குறு நாவல் !

"என்றும் நிறைந்திருப்பாள்" —குறுநாவல் என் நெஞ்சில் என்றும் நிறைந்திருக்கும். அடேயப்பா! நாகம்மாப்பாட்டி எவ்வளவு துணிச்சல் உள்ளவர்! பாட்டியின் துணிவு எவருக்கும் வராது!

—சொக்கலிங்கம், மதுரை.

பாட்டிக்கே வாக்கு !

எனது வாக்கு நாகம்மாப் பாட்டிக்கே!

—கண்ணம்மா, காஞ்சிபுரம்.

எங்கள் கடமை !

கன்னிமரா நூல் நிலையத்தின் சரியான படப்பிடிப்பைத் தந்திருக்கிறீர்கள்! பயனுள்ள செய்திக்குப் பாராட்டுக் கூறுவது எங்கள் கடமை.

—சீனுவும் நண்பர்களும்,
சென்னை-7.

மலைக்கவைத்த மலர் !

அடேயப்பா! நான்காண்டுக் காலத்தில் இவ்வளவு சாதனைகளா? மலைக்க வைத்துவிட்டது சாதனை மலர்!

—ராஜமன்னார், தாராபுரம்.

மயக்கம் தந்த மலர் !

நீங்கள் நம்பினால் நம்புங்கள், நம்பாவிட்டால் போங்கள்! சாதனைப் பட்டியலைப் படித்தவுடன் என் நண்பர் ஒருவர் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார்!

—கோவிந்தன்,
சங்கரன்கோவில்.

தரம் காக்க !

சாதனை மலர் கண்டேன். சுவையான தமிழில், தெளிவான விதத்தில், கவர்ச்சியான வகையில் வெளியிடப்பட்டுள்ள மலரைக் கண்டபோது, இது அரசாங்க ஏடுதான் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை! இந்தத் தரத்தினை அப்படியே தொடர்ந்து தரவேண்டும்;

—பரமசிவம், ஓட்டப்பிடாரம்.

நூல் வடிவில் வெளியிடுக!

திங்களிருமுறை தீந்தமிழாய்த் திகழ்ந்து வரும் 'தமிழரசு' மறுமலர்ச்சி மலராய் இதழுக்கு இதழ் நறுமணம் வீசுகிறது.

தமிழக முதல்வரின் முத்தான 'இனியவை இருபது' பயணக் கட்டுரையைப் படிக்குந்தோறும் நேரில் பார்ப்பது போன்ற உணர்வு தோன்றுகிறது. பயணக் கட்டுரைத் தொடர் முடிந்ததும் நூலாக வெளியிட்டால் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும். வெண்பாப் போட்டிக்குக் கூடுதலாக இரண்டு பக்கங்கள் ஒதுக்கினால் இன்னும் பல வெண்பாக்களைச் சுவைத்து இன்புறுவோம். மேலேகண்ட கோரிக்கையை முடிந்த அளவு நிறைவேற்ற வேண்டுகிறேன்.

—புலவர் எ. பார்த்தசாரதி,
கரூர்.

வாக்குரிமை—சில விதிகள்

பல நாடுகளில், மக்கள் போராடிப் பெற்றிருக்கிற பேருரிமை வாக்குரிமையாகும்; நமது நாட்டில் அது எளிதாகக் கிடைத்திருக்கிறது. இந்திய மண்ணில் வயதுவந்த எல்லா மக்களும் வாக்குரிமைபெற்றிருக்கிறார்கள். ஆகவே வாக்குரிமைக்குத் தகுதி அற்றவர்கள் என்று எவரையும் ஒதுக்க முடியாது, அவர்கள் 21 வயதை அடைந்திருந்தால்! என்றாலும் ஒரு சிலர் வாக்குரிமை யற்றவர்களாகி இருக்கிறார்கள். அவர்கள் யார் தெரியுமா? மனக் கோளாறு (பைத்தியம்) உள்ளவர்கள்தான்! இது அரசியல் சாசனம் தெரிவிக்கும் விதிமுறையாகும்.

* * *

பொதுத் தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் வாக்குச் சாவடிக்கு நேரில் சென்று தங்களது வாக்குகளைப் பயன்படுத்துகிறார்கள். கண் தெரியாதவர்கள், கால் முடமானவர்கள்கூட, வாக்குச்சாவடிக்கு வரத்தான் செய்கிறார்கள். ஆனாலும் ஒரு சிலர் நேரில் வராமல் தபால் மூலமாக, தங்களின் வாக்குகளை அனுப்புகிறார்கள். அவ்வாறு அனுப்பப்படும் வாக்குகள் தபால் வாக்குகள் என்று பெயர் பெறுகின்றன.

இந்தத்தபால் வாக்குகளை யார் யார் பயன்படுத்தலாம் என்பதற்குத் தனி விதியே இருக்கிறது. நான்கு வகையினர் மட்டும் தான் அந்த உரிமையைப் பெற்றிருக்கிறார்கள்!

1. சிறப்பு வாக்காளர்களும், அவர்களது மனைவியரும்.

2. இராணுவத்தினரும், அவர்களது மனைவியரும்.

3. தேர்தல் அலுவலில் உள்ளவர்கள்.

(வேட்பாளரின் பிரதிநிதிகள், வாக்குப் பதிவு அதிகாரிகள், வாக்குப் பதிவு நிலையத்தின் தலைமை அதிகாரிகள், ஊழியர்கள், தேர்தல் அலுவலுக்காகச் செல்லும் காவலர்கள்.)

4. தடுப்புக் காவலில் உள்ளவர்கள்.

சிறப்பு வாக்காளர்கள் என்று தேர்தல் விதிகளில் குறிப்பிடப் பட்டிருப்பவர்கள் யார் தெரியுமா?

இந்தியக் குடியரசுத் தலைவர், துணைத்தலைவர், மாநில ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள், யூனியன் பிரதேச அமைச்சர்கள், திட்டக்குழுத் துணைத்தலைவர், உறுப்பினர், பாராளுமன்ற, மாநில மன்றங்களின் அவைத் தலைவர்கள் ஆகியோர்!

இந்தச் சிறப்பு வாக்காளர்கள், தாங்கள் எந்தத் தொகுதியில் வாக்காளர்களாக இருக்கிறார்களோ, அந்தத் தொகுதித் தேர்தல் அதிகாரிக்கு-வாக்குப் பதிவு நாளுக்குப் பத்து நாட்களுக்கு முன்னதாகவே, விண்ணப்பம் செய்ய வேண்டும். அதை ஏற்றுக் கொண்டு தேர்தல் அதிகாரி, தபால் வாக்குச் சீட்டு அனுப்பிவைப்பார்.

பட்டதாரி உழவரானர்!

பொறி இயல் பட்டதாரி ஒருவர், பொறி இயல் பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்காத நிலைமை ஏற்படுவதற்கு முன்பே வேளாண்மையைத் தொழிலாக ஏற்றுக்கொண்டு விட்டார். அவர் மூன்றே ஆண்டுக் காலத்தில் தன்னுடைய 100 ஏக்கர் புன்செய் நிலங்களை எல்லாம் நன்செய் நிலங்களாக மாற்றி விட்டார். அதன் பயனாய் அவர் தற்பொழுது ஆண்டு வருமானமாக ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் பெற்று வருகிருர். முப்பத்தி இரண்டே வயதாகிய அப்பொறி இயல் பட்டதாரி மேற்கொள்ளும் சாகுபடி முறைகளைப் பல இளைஞர்களும், முன்னேறும் உழவர்களும் பின்பற்றி வருகின்றனர்.

மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாகவும், முன்னேடியாகவும் விளங்கும் அவர் மதுரை மாவட்டம், தேனி வட்டம், கோவிந்த [illegible] என்ற கிராமத்தில் உள்ளார். அவருடைய பெயர் திரு [illegible] கிருட்டிணசாமி.

அவர் தன்னுடைய நிலங்களில் உள்ள மண்ணை, வேளாண்மைத்துறையில் பரிசோதனை செய்து, முடிவில் கண்ட பரிந்துரையின்படி நெல், பருத்தி, நிலக்கடலை ஆகியவைகளைப் பயிரிட்டு வருகின்ருர். அவருடைய நிலங்களுக்குக் கிணறே பாசன ஆதாரமாக உள்ளது.

நீர்ப்பாசன முறையில் அவர் புதிய முறையை மேற்கொண்டு உள்ளார். ஒரே கிணற்றில் 3 மோட்டார்களை (5 எச்.பி., 1·5 எச். பி, 10 எச்.பி) பொருத்தியுள்ளார். தண்ணீர்த் தொட்டி ஒன்றை 15 அடி உயரத்தில் கட்டியுள்ளார்.

தன்னுடைய 100 ஏக்கர் நிலத்திற்கும் நீர்ப்பாசனம் செய்ய 2½ மைல் நீளத்திற்கு 9 அங்குல குறுக்களவு உள்ள சிமெண்டுக் குழாய்களை வயல்களைச் சுற்றி அமைத்துள்ளார். அவ்வாறு குழாய்களை அமைக்க ரூபாய் 1½ லட்சம் செலவு செய்துள்ளார். அவ்வேலை முடிய ஓராண்டுக்காலத்திற்கு மேலாகிய [illegible]

சிமெண்டுக் குழாய்களை அமைத்து நீர்ப்பாசனம் செய்வதன் காரணமாக, அவருடைய 100 ஏக்கர் நிலம் முழுமைக்கும் 2 கிணறுகளே போதிய அளவு தண்ணீரை வழங்குகிறது. அவ்வேலைகளுக்காக அவர் ரூபாய் 75,000-ஐ, வங்கியில் கடனாக வாங்கியுள்ளார்.

அவருடைய நிலத்தில் சென்ற ஆண்டு ஐ.ஆர்.-8 நெல், ஏக்கர் ஒன்றுக்கு 75 மூட்டையும், பருத்தி, ஏக்கருக்கு 20 குவிண்டாலும், மக்காச்சோளம், ஏக்கருக்கு 25 குவிண்டாலும் மகசூல் கொடுத்துள்ளது.

'' நீர்ப்பாசனம் செய்வதற்கு, நிரந்தரமாகக்குழாய்களை அமைப்பதற்கு ஆகிய முழுச் செலவையும், 5 ஆண்டுக்குள் விளையும் மகசூலில் இருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டே சரிக்கட்டிவிடலாம் '' என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

குழாய்களை அமைப்பதற்கு முன்பு, திரு கிருட்டிணசாமி அவர்களுக்கு ரூபாய் 15,000 மட்டுமே ஆண்டு வருமானம் கிடைத்து வந்ததாம். இப்பொழுது அவருக்கு ரூபாய் ஒரு லட்சத்திற்குமேல் ஆண்டு வருமானமாகக் கிடைக்கிறது.

'' வேளாண்மைத் துறையின் ஆலோசனைகளைப் பின்பற்றி வருவதே என்னுடைய வெற்றியின் ரகசியமாகும் '' என்று திரு கே. வி. ஆர். கிருட்டிணசாமி குறிப்பிடுகிருர்.

இந்தியா முழுவதிலும் சுமார் 30 லட்சம் கைத்தறிகள் உள்ளன.

இதில் பருத்தி ஆடைகள் நெய்யப் பயன்படும் தறிகளின் எண்ணிக்கை சுமார் 28 லட்சம். பட்டாடைகள், கம்பளி ஆடைகள் முதலியன சுமார் 2 லட்சத்துக்கு இருக்கும்.

தமிழ்நாட்டில் மட்டும் சுமார் ஐந்தரை லட்சம் கைத்தறிகள் உள்ளன. இவற்றில் 1967-68-ல் ஐம்பத்து மூன்றரைக்கோடி மீட்டர் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அந்த ஓராண்டு நெசவு செய்த துணிகளின் விலைமதிப்பு 60 கோடி ரூபாய்க்கும் மேல். இந்தியாவிலேயே கைத்தறித் துணி உற்பத்தியில் தமிழகம் தான் முதலிடம் வகிக்கிறது.

செய்திகள்!

செய்திகள்! செய்திகள்!

முற்றுப்புள்ளி.

வங்காளத்திலுள்ள சித்தரஞ்சன் பணிமனையில் புகைவண்டிகளுக்கான நீராவி எஞ்சின்கள் தயாரிப்பது இந்த ஆண்டுடன் நிறுத்தப்படுகிறது. அடுத்த ஆண்டு முதல் மின்சாரத்தினுல் இயங்கும் எஞ்சின்கள் தான் தயாரிக்கப்படும்.

அகலப்பாதைக் (பிராட்கேஜ்) கான கடைசி எஞ்சின் தயாரித்தல் கடந்த ஜூன் திங்களுடன் முடிவடைந்தது. மீட்டர் அளவுப் பாதைக் (மீட்டர்கேஜ்)கான எஞ்சின்கள் 70 தயாரிப்பதற்குத் தற்சமயம் ஆணைகள் உள்ளன. அதில் 20 ஏற்கனவே முடிவடைந்து விட்டன. இந்த ஆணைகளுக்கான தயாரிப்புகள் 71-ல் முடிவடைந்ததும் நீராவி எஞ்சின் தயாரிப்பு நிறுத்தப்படும்.

சித்தரஞ்சனில் 1950 முதல் தயாரிக்கப்பட்டுள்ள எஞ்சின்கள் விவரம் (அகலப் பாதைக்கானது) 1,913. பிற எஞ்சின்கள் சுமார் 400.

நீரிழிவு நோய்க்குக் காரணம்!

தமிழ்நாட்டின் மக்கட் தொகையில் சற்றேறக்குறைய ஒரு சதவீத மக்களும், சென்னை மாநகரின் மக்கட் தொகையில் 1.5 சதவீத மக்களும் நீரிழிவு நோயினுல் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்பொழுது தமிழ்நாட்டில் ஏறத்தாழ 3.8 இலட்சம் மக்களும், சென்னை மாநகரில் மட்டும் சுமார் 30,000 மக்களும் நீரிழிவு நோயினுல் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மூளை மற்றும் உடல் உழைப்புக்கு அடிக்கடி ஆளாகின்ற, எப்பொழுதும் உட்கார்ந்தபடியே வேலைபார்க்கின்றவர்களைத்தான். இந்நோய் அதிகமாக 5 சதவீத அளவுக்குத் தாக்கியுள்ளது.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 75 சதவீதத்தினர் 40 வயதுக்கு மேற்பட்டவர்களாகவே உள்ளனர். நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் நீரிழிவு நோய் தாக்கியுள்ளதா என்பதை அறிந்துகொள்ள அடிக்கடி மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

இத்தகவல்களைக் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் உள்ள நீரிழிவு ஆராய்ச்சிப் பகுதியைச் சார்ந்த டாக்டர் கிசார் அகமத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

உலக நலக் கழகத்தின் (W.H.O.) கூற்றுப்படி, வாழ்க்கைத் தரத்தின் உயர்வே நீரிழிவு நோய்த்தாக்குதல் பெருகுவதற்குக் காரணமாயுள்ளது என்று தெரியவருகிறது. சில நாடுகளில் நீரிழிவு நோயினுல் இறப்பவர்களின் விகிதம், 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட 2 அல்லது 3 பங்கு அதிகமாகி உள்ளது என்றும் உலக நலக்கழகம் தெரிவித்துள்ளது.

வாழை, உண்பதற்கு; வழித்தெடுத்துக் கூழாக்கி வண்ணத்தாள் ஒட்டுதற்கா ?

கரும்பு சாறு பெற; அடுப்பிலிட்டு எரிப்பதற்கா ?

சந்தனம் மார்புக்கு; சாணம் போல் வீடு மெழுகுதற்கா?

எதெதனை எம் முறையில் பயன்படுத்திக் கொள்கிறேமோ அதைப் பொறுத்து, அப்பொருளினுல் நாம் அடைகின்ற முழுப் பயனும் அமைகிறது.

வேலைவாய்ப்பு.

கதர் திட்டத்தில், நாட்டு இராட்டைகள் 70,255 பேருக்கும், அம்பர் இராட்டைகள் 12,890 பேருக்கும், டெக்ஸ்டூல் இராட்டைகள் 1,304 பேருக்கும் வேலைவாய்ப்பளித்து வருகிறது.

1968-69 ஆம் ஆண்டில் இந்த நூற்பாளர்கள் ஈட்டிய ஊதியம் சுமார் 52.34 இலட்சம் ரூபாய். 1969-70-ல் 58·75 இலட்சம் ரூபாயும், 1970-71-ல் 61 இலட்சம் ரூபாயுமாகும்.

இவர்கள் தவிர 3,377 நெசவாளர்களும் இத்துறையில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் 1968-69-ல் ரூ. 40.46 இலட்சமும், 1969-70-ல் 51 இலட்சம் ரூபாயும் ஈட்டியுள்ளனர்.

பழைய முறை இராட்டையில் நூற்பவர்களுக்குச் சராசரி மாத ஊதியம் ரூ. 50 கிடைக்கும். அம்பர் இராட்டையில் நூற்பவர் ரூ. 71 பெறுவார்.

இவற்றிற்குப் பதிலாகச் செயல் திறமிக்க புதிய இராட்டைகளைச் செயலுக்குக் கொணரக் கதர் வாரியம் கடந்த மூன்ருண்டுகளில் முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆறு கதிர்கள் கொண்ட 'டெக்ஸ்டூல்' இராட்டையில் நூற்பவர் சராசரியாக மாத ஊதியம் ரூ. 211 பெறுவார். 12 கதிர்கள் இராட்டை மூலம் நூற்ருல் ரூ. 343 ஊதியம் பெறக்கூடும்.

ஓய்ந்தது புயல்!

தமிழக அரசினை நடத்திச் செல்லும் பொறுப்பை மீண்டும் எங்கள் எளிய தோள்களின் மீது சுமத்தியிருக்கிறீர்கள்.

உங்களுக்காக உழைப்பதற்கு எங்களுக்கு உத்தரவிடுங்கள் என்று விடுத்த வேண்டுகோளை ஒரு பொருட்டாக மதித்து உங்கள் தொண்டர்களைக், கோட்டைக்கு அனுப்பி இருக்கிறீர்கள்!

கோட்டையில் நாங்கள் இருந்திட்டாலும், குடிசைப் பகுதிகளிலும், குக்கிராமங்களிலும் வாழ்கின்ற இலட்சோப இலட்சம் மக்களின் பிரச்சினைகள், உழைக்கும் தொழிலாளர்களின் உணர்ச்சிகள், அவர் தம் தேவைகள், நடுத்தர மக்களின் எதிர்கால நலன்கள், இவைகளைப் பற்றியே எங்கள் சிந்தனைகள் சுழன்று கொண்டிருக்கும்! அவைகளைச் செயல்வடிவமாக்கத் துடித்துக் கொண்டிருப்போம்.

சமுதாயச் சீர்த்திருத்தத் தொண்டு—கலாச்சார வளர்ச்சிப் பணி—சமதர்ம நோக்கு ஆகிய பல்லாண்டு காலப் பின்னணியோடு, 1949-ஆம் ஆண்டு தொண்டாற்றப் புறப்பட்டு, எதிர்க்கட்சியாக இருந்தபோது ஏற்ற கொள்கைகளுக்காகத் தீரமிக்க போராட்டங்களை நடத்தி, தமிழகப் பொதுமக்களால் தங்களுக்குப் பாதுகாப்பான ஓர் ஆயுதமாக இந்த இயக்கம் கருதப்பட்டு, சென்ற 67 பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ஆளுங்கட்சியாக அமைந்து, ஏற்றுக் கொண்ட இலட்சியங்களைச் செயல்படுத்தும் நிலைமைக்கு மக்கள் சக்தியினால் மாற்றப்பட்டது, தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க மகத்தான நிகழ்ச்சியாகும்.

எந்தத் தேர்தல் அறிக்கையை மக்களின் முன் வைத்து அவர்களின் அன்பான கட்டளையை ஏற்று 1967-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோமோ, அந்தத் தேர்தல் அறிக்கையின் பெரும் பகுதியினை நிறைவு செய்திருக்கிறோம் என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழும் ஆங்கிலமும் இணைந்து பயன்தரும் வகையில் எமது கொள்கை இருக்கும் என்று கூறிய தற்கேற்பச் சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம், தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக்கொள்கை அமுலாக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மொழியின் ஆக்கத்திற்கு ஏற்பப் பாடுபடுவோம் என அறிவித்ததற்கு இணங்க, எங்கும் தமிழ் மணம் கமழச் செய்யும் முயற்சியில் அரசு இந்த வெற்றி பெற்று வருகிறது.

சேலம் இரும்பாலை—கிழக்குக் கடற்கரை நெடுஞ்சாலை—கல்பாக்கம் திட்டம்—சென்னை குடிநீர் திட்டம்—தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம்—மற்றும் பல்வேறு தொழில் வளங்களைப் பெற்றிடப் பணியாற்றுவோம் என அளித்த வாக்குறுதி வீண்போகாமல் அனைவரும் மகிழத்தக்க வண்ணம் அவைகளை இந்த அரசு பெற்றுத் தந்துள்ளது.

தாங்கக்கூடியவர்களுக்கே வரி போட வேண்டுமென்ற அடிப்படையில் கொள்கை வகுத்துச், செயல்பட்டு வருகிறது இந்த அரசு!

ஏற்கனவே புன்செய் நிலங்களுக்கு வரி விலக்கும், ஐந்து ஏக்கரா வரையுள்ள நன்செய் நிலங்களுக்கு வரிவிலக்கும் இந்தஅரசு எடுத்த முடிவுகளாகும்.

நில உச்ச வரம்புச் சட்டம் திருத்தப்பட்டது இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு!

பின்தங்கிய மக்களின் நலன்களைக் கவனிக்கத் தனி அரசாங்கப் பிரிவு மட்டுமல்லாமல், அந்தத் துறைக்கென ஓர் அமைச்சரும், பின்தங்கிய மக்கள் நலன்களுக்காக ஒரு குழுவும் அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எண்ணற்ற சலுகைகள்அளித்தது மட்டுமல்ல, தீண்டாமை ஒழிப்பிற்கு மனமாற்றம் தேவையென்ற அடிப்படையில் கலப்பு மணத் தம்பதிகளுக்கு அரசின் சார்பில் பரிசளிப்புப் பாராட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன.

குடிசை வாழ் மக்களுக்கு நிரந்தரமாக இடமும் நிம்மதியான வாழ்வும் அளிக்க உறுதி பூண்டு, குடிசைகளை மாற்றி நல்ல வீடுகளாக மாற்றும் குடிசை மாற்று வாரியத் திட்டம்—7 ஆண்டுக் காலத்திற்குள் அந்தப் பணியை, சென்னையிலும் படிப்படியாகத் தமிழகம் முழுமையிலும் நிறைவேற்ற வேண்டி அமைக்கப்பட்டுள்ளது.

குடிநீர், கழிவுநீர்த் திட்டம் பற்றிய ஆர்வம். தேர்தல் அறிக்கைகளோடு நின்றுவிடாமல் 1973-க்குள் தமிழ்நாடு முழுதும் அந்தத் திட்டம் நிறைவேறச்செயல்முறைகள் வகுக்கப்பட்டு, அதற்கெனத் தனியாக ஒரு தண்ணீர் வாரியம் உருவாக்கப்பட்டுப் பணி நடைபெற்றுவருகிறது.

72-ஆம் ஆண்டிற்குள் தமிழகத்தில் மின் ஒளி இல்லாத கிராமங்களே இருத்தல் ஆகாது என்ற நன்னோக்குடன் அரசு செயல்பட்டு வருகிறது.

ஊதியக் குழு சிபாரிசுக்கு ஏற்பத் தமிழக வரலாற்றிலே இல்லாத அளவுக்கு, மற்ற மாநிலங்களைப் பல வகையிலும் விஞ்சுகிற நிலையில் அரசு ஊழியர்களுக்கு 22 கோடி ரூபாய்க்கு மேல் சம்பள உயர்வு தரப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி, இலவச மருத்துவ வசதி போன்றவை புதிதாகத் தரப்பட்டுள்ளன.

பி.யு.சி. வகுப்பு வரையில் மாணவர்களுக்கு இலவசக் கல்வி என்பது இந்த அரசின் சாதனை!

நிலமும், வீடும் அற்ற ஏழைகளுக்கு இலட்சக்கணக்கில் பட்டாக்கள் வழங்கி அவர் தம் புன்னகை கண்டு பூரித்தது இந்த அரசு!

தமிழகத்தில் அரிசிப் பஞ்சம் போக்கியது மாத்திரமல்லாமல், பசுமைப் புரட்சி ஓங்கிட நிலவள வங்கிகளை மாநிலம் முழுவதும் அமைத்து, நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகத்தின் மூலம் ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு முறையில் கடன்வசதி பெற்று, தங்கள் நிலங்களை வளப்படுத்த வழி கண்டு செயல்படுவது இந்த அரசு!

மனு நீதித் திட்டம் கண்டு, மாதந்தோறும் 5-ஆம் தேதி அன்று அரசு அதிகாரிகள் கிராமம் கிராமமாகச் சென்று, மனுக்களைப்பெற்று, உடனடியாக அதில் முடிவு காண ஏற்பாடு; எல்லாப் புறம்போக்கு நிலங்களையும், காடுகள் என்ற பெயரால் உள்ள—உண்மையில் காடுகள் அல்லாத—இடங்களையும் ஏழைகளுக்கு வழங்க வகுத்துள்ள முறை, பிச்சைக்காரர் பிரச்சனை போக்க அவர்களுக்கு விடுதிகள்கட்டி மறுவாழ்வளிக்கச் செயல்படுத்தும் திட்டம்; இப்படி எண்ணிறைந்த அரும் சாதனைகள் ஏழையெளிய நடுத்தர மக்களின்வாழ்க்கையை மையமாகக் கொண்டு இந்த நாலாண்டுக் காலத்தில் தீட்டப்பட்டதைப் போலவே, தொடர்ந்து, நாடாளும் எங்களால் போற்றிக் கடைப்பிடிக்கப்படும் என்ற உறுதியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசினைத் தங்களுக்குப் பாதுகாப்பான மெய்க்காப்பாளனாகவும்—தங்களுக்குப் பணியாற்றும் ஊழியனாகவும்—தங்கள் வீட்டில் ஏற்றிவைக்கப்பட்ட விளக்காகவும், தமிழ்ப் பெருங்குடி மக்கள் நம்பிக் கொண்டிருப்பதை உணர்ந்து அதற்கேற்றவாறு உழைப்பதற்கு நாங்கள் சூளுரை மேற்கொண்டிருக்கிறோம்.

ஏழையெளிய மக்கள் வாழ்வு ஒளிபெற—சாதி பேதமற்ற சமூக நீதி நிலைத்திட—சமதர்மம் நடைமுறைக்கு வந்திட—தனி மனிதனின் வாழ்வுக்கான அடிப்படை, சொத்துரிமைகளைச் சீர்குலைக்காமல் இந்த அரசு சீரிய பணியாற்றும்.

இத்தகைய இலட்சியம், உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்குவதால் மட்டும் நிறைவேறி விடாது.

ஒரு சிலரின் இரும்புப் பெட்டியை நிரப்பும் உற்பத்திப் பெருக்கத்தால் நாட்டோருக்கு நல்வாழ்வு கிடைத்திடாது. உற்பத்திப்பெருக்கம் தனி நபர் ஊக்கத்திற்கு ஊறு நேரிடாத வகையில் அமைந்திட வேண்டும், அனைவருக்கும் பங்கிருக்கும் வகையில் சமுதாய நீதி கிடைத்திட வேண்டும்; இலாப வேட்டை தவிர்த்த தனியார் துறையின் சில சிறப்பியல்புகளையும் நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சில பெரிய நடுத்தரத் தொழில் அமைப்புக்குக் கூட்டுத்துறை முறையை அமுல்படுத்த விரும்புகிறோம்.

இதன் மூலம் உருவாகும் தொழில் அமைப்புகளில் தனியார் துறையில் காணக்கிடைக்கும் நற்பலன்களைத் தொழில்வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடிகிறது. பொதுமக்களது நலன்களையும் அரசு பாதுகாத்திட முடிகிறது.

மாநிலங்களின் வேகமான வளர்ச்சியே இந்தியாவின் வேகமான வளர்ச்சியாவதால் திட்டமிடுவதன் துவக்கம் மாநிலத்திலிருந்து ஆரம்பமாக வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டாக வேண்டும்.

பெரிய தொழில்களோடு, சிறு தொழில் வளர்ச்சி கிராமப்புறவேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க உதவும் என்று கருதுகிறேன்.

சிறு தொழில்களை அமைக்கச் சிறந்தவாய்ப்புகள் இருப்பினும் போதிய நிதி வசதி இன்மையால் பலர் இதற்கு முன்வரவில்லை. இக்குறையைத் தீர்க்கத்தான் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி வாரியத்தை உருவாக்கியிருக்கிறோம். இதன் பணியைத் தீவிரப்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் குழுக்கள் அமைந்திடும்.

உலகமே [illegible]!

நியாயங்களுக்குத் தலைவணங்குவோம்!

விஞ்ஞான யுகத்துக்கு ஏற்பச் சமதர்ம, சமுதாய அமைப்பில் நமது கவனத்தைக் கவருகிறவர்கள், சமுதாயத்தின் அடித்தளத்திலே வாய்ப்பு வசதிகளின்றி இருக்கிற பின்தங்கிய சமூகத்தவரும், தாழ்த்தப்பட்ட மக்களும் ஆவர். அவர்களைக் கைதூக்கிவிட இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகள் மேலும் தீவிரப்படுத்தப்படும்.

''சுதந்தரமாக இயங்கும் ஒரு சமுதாயம், தொகையில் பலராக உள்ள வசதியற்றவர்களுக்கு உதவ முடியவில்லை என்றால் அந்தச் சமுதாயத்தால் தொகையில் சிலராக இருக்கும் வசதி உள்ளவர்களையும் காப்பாற்ற இயலாது'' என்று குடியரசுத் தலைவர் பதவியேற்ற நாளில் ஜான் கென்னடி கூறியதைச் சமுதாயத்தின் மேல்தளத்தில் இருப்பவர்களும் ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

ஆகவே, நாட்டில் பெரும்பங்கு இடம்பெறும் குடிசைகளிலும், கிராமங்களிலும் துன்பத்தில் ஆழ்ந்து வருந்தும் மக்களுக்கு எத்தனை ஆண்டுக் காலத்திற்குத் தேவைப்பட்டாலும் உதவிபுரிவோம் என்ற உறுதியை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

வியர்வை சொட்டப் பாடுபடும் விவசாயிகள், தொழிலாளர்கள், வசதி அற்ற நிலையில் தங்கள் வாழ்வை நடத்தும் முடிதிருத்துவோர், சலவையாளர் இன்னோரன்ன பாட்டாளி மக்களுக்கும், சமுதாயத்தின் அடித்தளத்தில் அவதிப்படுவோருக்கும், நடுத்தர வர்க்கத்தினருக்கும், படிப்படியாக வசதிகளை அளிக்க இந்த அரசு சபதம் ஏற்றுக்கொள்கிறது.

தொழிலாளர் கிளர்ச்சியானாலும், மாணவர் எழுச்சியானாலும், விவசாயிகள் கிளர்ச்சியானாலும், கிளர்ச்சி நடத்துவோரைப் பற்றிச் சிந்திக்காமல் கிளர்ச்சியின் காரணத்தை உணர்ந்து, அவைகளில் கௌரவப் பிரச்னை பார்க்காமல், அவர்தம் முறையீடுகளுக்குச் செவிசாய்த்து, நியாயமெனப் பட்டதைச் செய்வதற்குத் தயக்கம் காட்டத் தேவையில்லை என்பதே அரசு தொடர்ந்து கடைப்பிடிக்க விரும்பும் பண்பாகும்.

எந்த நியாயமான கோரிக்கைகளுக்காகவும், போராடுகிறவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொள்ளாமல் எச்சரிக்கையோடு கண்காணித்துத் தமிழகத்தில் தவழ்ந்து வருகின்ற அமைதி கட்டிக்காக்கப்பட்டு, சட்டமும் ஒழுங்கும் பாரபட்சமற்ற முறையில் பாதுகாக்கப்படும் என்ற உறுதியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சிக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்துவதுதான் அரசு!

அதுபோல அனைவரையும் சேர்த்து நடத்துவதுதான் நல்லரசு!

அந்த நல்லரசாக இந்த அரசு தொடர்ந்து நடந்திட நாங்கள் நாளும் பணியாற்றுவோம்!

ஆகவே, இவர்கள் ஆளுகிறார்களே என்று எண்ணாமல், இவர்கள் ஆளுவதற்கும் இனிய அறிவுரைகளைக் கூறுவோம் என்ற நல்லிதயம் கொண்டு எங்களை வாழ்த்துமாறு, கருத்து மாறுபாடு—கொள்கை மாறுபாடு கொண்டவர்களையும் வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

சாதாரணமானவர்கள் நாங்கள்!

சாதாரண மக்களுக்காக உழைப்பதற்கு முன் வந்திருப்பவர்கள்!

எங்களை ஆளாக்கிய எங்கள் அண்ணன் எதையும் தாங்கும் இதயம் கொண்டு, கடமை போற்றி, கண்ணியம் வளர்த்து, கட்டுப்பாடு குலையாமல் நடப்பதற்கு எங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

அந்த அண்ணனின் வழிநின்று அயராது உழைப்போம்!

குறை இருந்தால் சுட்டிக் காட்டுங்கள்!

காழ்ப்புணர்ச்சியின்றி நடுநிலையோடு கருத்துக்களை எடுத்துக் கூறுங்கள்!

தமிழகத்தின் அரசியல் பண்பாடும், நாகரிகமும் அணுவளவும் குறையாத வகையில் உண்மை விமர்சனங்களைச் செய்திடுங்கள்!

நியாயங்களுக்குத் தலைவணங்குகிறோம்!

தொடர்ந்து நேர்மை வழி நடக்க உறுதி பூணுகிறோம்!

உங்கள் அரசு இது! உங்கள் வீட்டுப் பிள்ளைகள் நாங்கள்! குறை இருந்தால் கண்டியுங்கள்! குற்றம் இருந்தால் தண்டியுங்கள்! தேர்தல் முடிந்து விட்டது—புயல் ஓய்ந்து விட்டது—இனி தென்றல் வீசட்டும்! நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்! இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்! இந்தப் புதிய உணர்வோடு என் உடன் பிறப்புக்களே! பேரன்பு கொண்டோரே! பெரியோரே! பெற்ற தாய்மாரே! தமிழகத்தின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க அனைவரும் ஒன்றுசேர்ந்து உழைத்திடுவோம், வாரீர்! வாரீர் !!

வணக்கம்!

[தமிழ் நாடு முதல்வர், 16–3–71-ல் வானொலியில் பேசியது]

நம் நல்வாழ்வுக்காக நம் தேவைகளை உணர்ந்து, உணர்த்திட இந்தியாவிலேயே முதன்முறையாக **மாநிலத் திட்டக்குழு** அமைக்கப்பட்டுள்ளது.

நம் ஒத்துழைப்பைக் காட்டும் ஒரே வழி—



அளவான குடும்பம் அதுவே

நாட்டுக்கும் நல்லது!
வீட்டுக்கும் நல்லது!!

Registered No. M. 8657

வெற்றி மேல் வெற்றி!

தமிழ்ப் புத்தாண்டு சிறப்புப் பரிசுகளைப் பெற
மற்றும் ஒரு வெற்றி வாய்ப்பு!

மொத்தப் பரிசுத் தொகை:
ரூ. 45 லட்சம்

சிறப்புப் பரிசுகள் ரூ. 10 லட்சம்

முதல் பரிசு	ரூ. 5 லட்சம்
இரண்டாவது பரிசு	ரூ. 3 லட்சம்
மூன்றாவது பரிசு	ரூ. 2 லட்சம்

(எல்லா வரிசைகளுக்கும் பொதுவாக)

வழக்கமான பரிசுகள் ரூ. 35 லட்சம்

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்.

குலுக்கல் நாள்: 6-5-1971

இதுவரை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
உருவாக்கிய லட்சாதிபதிகள் எண்ணிக்கை: 232

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் கல்வி, மருத்துவம், வீட்டு வசதி போன்ற சமுதாய முன்னேற்றத்துக்கான பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்ப் புத்தாண்டுப் பரிசுகளாக அளிக்கப்படும் பெருந் தொகையைப் பெற்று வெற்றிவாகை சூடுங்கள்.

சிறப்புப் பரிசுகளின் மீது 10 சதவிகித போனஸ் ஏஜண்டுகளுக்கு அளிக்கப்படும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி விளம்பரத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9.

கடிதப் போக்கு வரத்து அனைத்தும்,
இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்,
சென்னை-2 என்ற முகவரிக்கே அனுப்பப்படவேண்டும்.

10 வரிசைகள் வெளியீட்டுக்கு உட்பட்டது.

செலவு ஒரு ரூபாய்



வரவோ ஐந்து லட்ச ரூபாய்

அரசு சிமெண்ட்

வலிவும் வனப்பும் வாய்ந்தது



நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப்படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது?

TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

தமிழரசு

மலர் 1 இதழ் 21

இந்த இதழ்

மதுரைச் சிறப்பிதழ்

உற்பத்திப் பெருக்கச் சிறப்பிதழ்

மற்றும்

முதல்வர் பயணக் கட்டுரை

வழக்கமான எல்லாப் பகுதிகளும் உண்டு!


பெண் ஊர்ப்பணியாளர்
களுக்கு சைக்கிள்கள்
வழங்க தமிழக அரசு
முடிவு செய்துள்ளது.
அண்மையில்
பிச்சைக்காரர்
மறுவாழ்வு நிதிக்கு
ரூ.40 லட்சத்தில் திட்டம்
நிதியில் ஒரு பகுதி உண்டியல்
திரைப்படம், பட அட்டைகள்
மூலம் வசூலிக்கப்படும்.
வந்த
அரிசன-மலைசாதி
மாணவர்களுக்கு
இலவசமாகத் தட்டெழுத்
துப் பயிற்சியும், தங்குமிட
வசதியும் அளிக்க
அரசு திட்டம் தீட்டி
உள்ளது!

சிறந்த தமிழ்
நூல்களுக்கு முதல்
பரிசு ரூ.1000 என்று
இருப்பதை அடுத்த
ஆண்டு முதல் ரூ.2000
ஆக உயர்த்தப்படும்
ரூ. 2000
இது என்ன உரமுங்க?
இது பாமணியில் தயாராகும் உரமணி!
ரூ.27 லட்சம் முதலீட்டில்
தமிழ்நாடு கூட்டுறவு
விற்பனைக் கழகம்,
தஞ்சை மாவட்டம்
பாமணியில் புதிய
உரமணி ஆலையைத்
துவக்கியுள்ளது.
அறிவிப்புகள்
வருகிற ஜூன்
திங்களில் கோவை
யில் வேளாண்மைப்
பல்கலைக் கழகம்
துவக்கப்படுகிறது!
வேளாண்மைப் பல்கலைக் கழகம்

15. மீண்டெழுந்த மேற்கு ஜெர்மனி

ஜூலைத் திங்கள் ஏழாம் நாள் பாரிஸ் நகரிலிருந்து விடை பெற்றுப் பவேரியாவின் தலை நகராகிய மூனிக் நகர் வந்து சேர்ந்தோம். பவேரியா மேற்கு ஜெர்மானியக் கூட்டரசின் ஒரு மாநிலமாகும்.

விமான நிலையத்தில் பவேரிய வேளாண்மைத் துறை அமைச்சர் ஹான்ஸ் ஐசென்மனும், மூனிக் நகரத் தந்தை ஹான்ஸ் ஜோசென்னும் பவேரிய அரசின் அதிகாரிகளும் இந்திய தூதரக அதிகாரி திருமதி பெல்லா முதலிய பலரும் அன்பு கனிய ஆசையுடன் வரவேற்றனர்.

ஆற்றலில் அரிமாவை நிகர்த்தவன் என்று வரலாற்றாசிரியர்களால் வர்ணிக்கப்படும் ஹென்றி என்பவனால் 1918-ஆம் ஆண்டில் அடிகோலப்பட்டதுதான் மூனிக் நகரமாகும். 'துறவிகளின் உறைவிடம்' என்னும் பொருளைக் குறிக்கும் ஜெர்மானியச் சொல்லிலிருந்துதான் 'மூனிக்' என்ற பெயர் பிறந்ததாம். இன்று 'மூனிக்' உல்லாசப் பயணிகள் உகந்து செல்லும் நகரமாகத் திகழ்கிறது, தொழில் துறையில் மிக்க முன்னேற்றம் அடைந்து நவநாகரிகத்தின் எழில் நகரமாகிய இதற்குத் 'துறவிகளின் உறைவிடம் என ஏன்தான் பெயரிட்டனரோ! அழகற்றவளுக்குச் சுந்தரி என்றும் கருப்பனுக்கு வெள்ளைச்சாமி என்றும் பெயரிடுவது போன்றிருக்கிறது. பத்து இலட்சம் மக்கள் வாழ்கின்ற மூனிக், ஜெர்மானியக் குடியரசுக் கூட்டரசியின் மூன்றாவது பெரிய நகரமாகும்.

இந்நகரத்திலிருந்து முப்பது மைலுக்கு அப்பால் மேகத் திரையில் முகத்தை நீட்டி மறைக்கும் ஆல்ப்ஸ் மலை தெரிகிறது. ஐரோப்பாவின் வடக்கும் தெற்கும் கூடும் மைய இடமாக மூனிக் விளங்குகிறது. இசார் நதிக் கரையில் ஓரமாகச் செல்லும்பொழுது தெள்ளிய ஓடைகளும், தேன் மலர்க் சோலைகளும் சின்னஞ்சிறிய ஏரிகளும் சீறிவரும் அருவிகளும் காட்சி தருகின்றன.

கண்ணாடித் தொழிலிலும் பீர் எனப்படும் வாற்கோதுமைகள் உற்பத்தியிலும் சிறந்துவிளங்குகிறது மூனிக். ஆலயமணிகளை உருவாக்குவதிலும் அழியாப் புகழ் பெற்றது. அகிலமெங்கும் உள்ள பெரும்பாலான கிருத்துவ ஆலயங்களில் மூனிக் நகரத்தில் உருவான மணிகளே இன்று ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

ஜெர்மானியத் தலைநகராக பான் விளங்கினாலும், கலைத் துறையிலும், களியாட்டங்களிலும், கல்வி வளர்ச்சியிலும் மூனிக் நகரம் முன்னணியில் நிற்கிறது.

கடந்த இரண்டாம் உலகப் போரின் இடையறாத குண்டு வீச்சின்போது தகர்ந்து, அழிந்த கலைக்கூடங்களும், தொல்பொருட் களஞ்சியங்களும் மாளிகைகளும் மீண்டும் புத்துயிர் பெற்றுப் புதுவடிவங்கள் கொண்டு விளங்குகின்றன. எல்லா அழிவுச் சக்திகளின் சோதனைகளையும் தாங்கிக் கொண்டு நிமிர்ந்து நிற்கும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு என்பதனையும், மனிதனின் வளமான மூளையும் வலுவான கரங்களும் துன்பங்களை இன்பங்களாக மாற்றும் வல்லமை படைத்தவை என்பதனையும் ஜப்பானைப் போல் ஜெர்மானியக் குடியரசும் விளக்கிக் கொண்டிருக்கின்றது.

ஜெர்மனியின் வளர்ச்சிக்கு, ஜெர்மானிய மக்களின் அயராத உழைப்பே காரணம்.

முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

"ஆக்கம் அதர்வினாய்ச்
செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கு இலக்காக விளங்குகின்றனர் ஜெர்மானிய மக்கள்.

பவேரிய மாநிலத்தை ஆளும் கட்சியாக வலதுசாரிக் கட்சி இருந்தாலும், மூனிக் நகரம் சமூக உடைமைக் கட்சியின் ஆளுகையில் இருக்கிறது. மாநில அளவில் ஒரு கட்சியும் மாநகர அளவில் ஒரு கட்சியும் ஆட்சி புரிந்தாலும் பாரபட்சமோ நிர்வாகச் சிக்கலோ எதுவும் கிடையாது என்று அந்நகராட்சியின் மேயர் டாக்டர் வோகல் கூறினார். நகர மேயராக வருபவர்கள் முழுநேர ஊழியர்கள். அவர்களுக்கு நல்ல ஊதியம் தரப்படுகிறது. டாக்டர் வோகல் அவர்கள் மூனிக் நகராட்சியின் நிர்வாகம் பற்றியும் அதற்குள்ள வருவாய் வாய்ப்புகள் பற்றியும் அந்நகரில் அமைக்கப்படவிருக்கும் சுரங்கப் பாதை பற்றியும் 1972-ஆம் ஆண்டில் மூனிக் நகரில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் பந்தயத்திற்கான ஏற்பாடுகள் பற்றியும் நீண்டநேரம் விவரித்தார்.

மூனிக் நகரம் ஆபெரா (opera) என்று அழைக்கப்பெறும் இசை நாடகங்களுக்குப் பெயர்போன இடம். கலைஞர்கள் போற்றப் படுகின்றனர்; மக்களாலும் அரசாலும் ஆதரிக்கப்படுகின்றனர். ஓர் இசைநாடகத்தைப் பார்க்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. நாடகம் ஆரம்பித்தபிறகு தாமதமாக வரும் எவரும் நாடகம் நடக்கும்பொழுது உள்ளே வரக்கூடாது. ஒரு காட்சி முடிந்து அடுத்த காட்சி ஆரம்பமாவதற்கு முன்புதான் வரவேண்டும். நாடகத்தைத் தொடர்ந்து காண்பதில் தொல்லைகள் இருக்கக் கூடாது என்பதற்காக அப்படி ஒரு மரபு ஜெர்மனி நாட்டில்.

இட்லர் ஒரு சாதாரண சிப்பாயாகவும் தேசீய சோஷலிஸ்ட் இயக்கத்தின் தலைவராகவும் அரசியல் அதிபராகவும் வாழ்ந்த நாட்களில் மூனிக் நகருக்கும் அவருக்கும் இருந்த தொடர்பைக் குறிக்கும் சுவையான சம்பவங்களை இன்னும் மூனிக் நகர மக்கள் மறந்துவிடவில்லை.

பிரான்சு நாட்டில் பிறக்காமல் கார்சிகா என்ற தீவில் பிறந்து பிரெஞ்சு மக்களின் தலைவனாகத் தன்னை ஆக்கிக்கொண்ட நெப்போலியன் போலவே, ஆஸ்திரிய நாட்டில் பிறந்து ஜெர்மன் நாட்டின் குடியுரிமை கூட இல்லாத இட்லர், ஜெர்மனியின் சர்வாதிகாரியாகத் தன்னை ஆக்கிக் கொண்டான்.

மண்ணில் உள்ள எல்லா இனங்களையும்விட உயர்ந்தஇனம் ஜெர்மனியில் உள்ள நார்டிக் இனம். எல்லா உயரிய குணங்களும் நிரம்பியுள்ள இனமும் இதுதான். போர்த்திறன் படைத்த ஒரே இனமும் அதுவேயாகும். அதனால் உலகாளும் தகுதி அதற்கே அதிகம். தேசிய சோஷலிசத்தின் முதல் வேலை எல்லா ஜெர்மானியரையும் இந்த ஒரே இனத்தின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரவேண்டுமென்பதேயாகும். இந்த சுத்தமான நார்டிக் இனம் பரவுவதற்குப் போதிய நாடுகள் கிடைத்தாக வேண்டும். நார்டிக் இனம் உலக நாகரிகத்திற்கு வழிகாட்டும் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும். இது அந்த இனத்தின் கடமையாகும், என்ற கொள்கைகள் பரப்பப்பட்டன. இட்லர் சொல்வதுதான் வேதவாக்கு. அதற்கு மறுமொழி கிடையாது என்று நம்பினர்.

யூதர்களும் மற்றைய ஐரோப்பிய நாட்டு மக்களும் ஜெர்மனியில் வந்து குடியேறி ஜெர்மனியின் பொருளாதாரத்தைக் கைப்பற்றி அந்த நாட்டு மக்களையே வாழவிடாமல் அடிமைகளாக்கி விட்டனர். ஆளப் பிறந்தவர்கள் அடிமைகள்போல் சோர்ந்து கிடக்கின்றனர். எங்கிருந்தோ வந்தவர்கள் இந்நாட்டில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். ஐரோப்பாவிலேயே, ஏன் உலகிலேயே, ஜெர்மனி ஒரு சாம்ராஜ்யமாக விளங்க வேண்டுமானால் யூதர்களின் ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டுமென்று முழங்கினான் இட்லர். தேசிய சோஷலிஸ்ட் கட்சி (National Sozialist Party) என்ற ஒரு தொழிலாளர் கட்சியை உருவாக்கினான். அதுவே பின்னால், நேஷனல் (National) என்ற வார்த்தையிலிருந்த Na என்ற முதல் இரண்டு எழுத்துக்களையும் சோஷலிஸ்டு என்ற வார்த்தையிலுள்ள zi மூன்றாவது நான்காவது எழுத்துக்களையும் சேர்த்து (Nazi) 'நாசி'க் கட்சி என்று சுருக்கமாக அழைக்கப்பட்டது.

பெரும்பாலான அடித்தளத்திலுள்ள மக்களின் ஆதரவைப் பெறுவதுதான் முக்கியம் என்றும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற பலமான ராணுவத்தை அமைக்கவேண்டுமென்றும் இட்லர் விரும்பினான். அவனது கட்சியில் 7 பேர்களே ஆரம்பத்தில் அங்கத்தினர்களாக இருந்தனர் என்றால் அது எவருக்கும் வியப்பைத் தராமல் இருக்க முடியாது. அந்த 7 பேர்கள் எழுப்பிய சப்தசுரங்களிலிருந்துதான் இட்லரின் நாசிச கனராகம் ஜெர்மனி எங்கிலும் ஒலித்தது. 1923-ல் அரசைக் கைப்பற்ற அவன் செய்த முயற்சி தோல்வியுற்றது. 1931-ல் அவனது செல்வாக்கும் கட்சியின் பலமும் உயர்ந்தன. தேசிய சோஷலிஸ்ட் கட்சியின் அங்கத்தினர்களின் தொகை 10 இலட்சத்திற்கு மேல் உயர்ந்து விட்டது. இட்லரின் சூறாவளிப் பட்டாளம் (Storm Army) பலம் வாய்ந்த ராணுவமாக மாறி விட்டது. 1933-ல் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு ஜெர்மன் ஜனாதிபதி ஹிண்டன்பர்க் தேசிய சோஷலிஸ்ட் கட்சியின் தலைவரான இட்லரிடம் ஜெர்மன் தேசத்தின் விமோசனத்திற்கு வழிகாணும் பொறுப்பை ஒப்படைத்தார்.

1934-ம் ஆண்டு வான் ஹிண்டன்பர்க் இறந்ததும், இட்லர் பிரதமரும் ஜனாதிபதியுமாகப் பதவி ஏற்றார். மக்கள் இன்னல் தீரத் தனியார் நடத்தும் விடுதிகள் நாடு பூராவிலும் அமைக்கப்பட்டன. கட்டாய வேலை முகாம்கள் துவக்கப்பட்டன. ஜெர்மனி போருக்கும் தயார் ஆனது. 1935-ல் 'சார்' மாநிலம் ஜெர்மனியோடு சேர்ந்தது. ஆங்கில அரசு ஜெர்மனியோடு புதிய கடல் ஒப்பந்தம் செய்துகொண்டது. 1938-ஆம் ஆண்டு இட்லர் ஆஸ்திரியா மேல் படை எடுத்தார். ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் இணைக்கப்பட்டன.

1938-ல் ஜெர்மனி, செக்கோஸ்லோவாக்கியா நாட்டின் மீது நாட்டங்கொண்டது. போரை

விரும்பாத 'மூனிக்கில்' நடந்த ஒப்பந்தத்தில் இங்கிலாந்தும் பிரான்சும், இத்தாலியிடம் ஜெர்மனியின் பயமுறுத்தலுக்கு அடிபணிந்து செக்கோஸ்லோவிய நாட்டின் சுதந்திரத்தை விட்டுக் கொடுத்துக் கையெழுத்திட்டனர். இதனுல் ஜெர்மனி 'சடட்டன் பிரதேசத்தைத்' தன் வசமாக்கியது. செப்டம்பர் 29, 1938-ஆம் ஆண்டு முதல், ஜெர்மனி ஐரோப்பாவில் முதன்மையான நாடாகவும், இங்கிலாந்தும் பிரான்சும் இரண்டாந்தர நாடுகளாகவும் மாறின. இட்லர் ஐரோப்பாவின் சிம்மசொப்பனமாக விளங்கினுர்.

இந்தியாவிலிருந்து வெள்ளையர் ஆதிக்கம் ஒழிந்தால்தான் இங்கிலாந்தின் பலம் குன்றும் என்று எண்ணிய இட்லர், இந்திய விவகாரங்களில் பல முயற்சிகள் மேற்கொண்டார். ஜெர்மனிக்குச் சென்ற சுடாஷ்போசுக்குப் பலத்த வரவேற்பளித்தார். நேத்தாஜிக்கு இட்லர் 'பியூரர்' என்றும் 'எக்ஸலன்ஸி' என்றும் பட்டம் வழங்கினுர். அவரைப் பத்திரிகை நிருபர்களுக்கு நல்ல முறையில் அறிமுகம் செய்துவைத்தார். ஓர் அயல்நாட்டுத் தூதுவருக்குரிய அந்தஸ்து நேத்தாஜிக்கு அளிக்கப்பட்டது.

சாதாரண சிப்பாயாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கி ஜெர்மன் நாட்டின் சர்வாதிகாரியாக மாறி, உலகத்து வல்லரசுகளை எல்லாம் கலங்கவைத்த இட்லரின் வாழ்க்கைக் குறிப்புகள் எல்லாம் என் நினைவிற்கு வந்தன. அக்கிரமமும் சர்வாதிகாரமும் நீண்டநாட்கள் நிலைத்திருந்ததாக வரலாறு கிடையாது. அதற்கு இட்லரும் விதிவிலக்கல்லவே!

மறுநாள் காலை மூனிக் நகரை விட்டுப் புறப்பட்டுக் கொலோன் நகரை அடைந்தோம். ரைன் நதிக்கரையில் அமைந்துள்ள கொலோன், கொடுங்கோலன் நீரோவின் தாய் அக்ரிப்பினுவால் தோற்றுவிக்கப்பட்டது. இந்த நகரம் 'அக்ரிப்பினுவின் காலனி' என்று ஆரம்பத்தில் அழைக்கப்பட்டதாம். அதுவே 'காலனியா' என்று மாறிப் பின்னர் கொலோன் என்று மருவியதாகும். 'யூடிகொலோன்' என்னும் நறுமணப் பொருளை உலகுக்கு வழங்கிய இந்நகரமும், இரண்டாம் உலகப் போரில் குண்டு வீச்சுக்கு இரையாகி, இன்று அழிவின் அடிச்சுவடுகள் மறைந்து, செல்வம் கொழிக்கும் திருநகராகக் காட்சியளிக்கிறது.

மூனிக் நகர மேயர் வோகலுடன்



கொலோன் நகருக்குத் தெற்கே ரைன் நதிக்கரையில் வடபுறத்தில் 12 மைல்களுக்கு அப்பால் அமைந்திருக்கும் பான் நகர் போய்ச் சேர்ந்தோம். பான், ஜெர்மானியக் கூட்டரசின் தலைநகர். குன்றுகள் நடுவே பழமை மணம் வீசும் சிறிய நகரமாக இருந்த பான் 1949-ல் கூட்டரசின் தலைநகராகியதும் புதிய பொலிவினைப் பெற்று வேகமாக வளர்ந்துள்ளது. அதன் விளைவாகப் பழைமையும் புதுமையும் கலந்து காணும் கட்டடங்களையும் பழக்க வழக்கங்களையும், பல்வேறு வகையான மனிதர்களையும் இன்று பான் நகரில் காணமுடிகிறது. ஈடு இணையற்ற பண்ணமைப்பாளரான பீத்ஹோவன் பிறந்த மண் இது.

ஜெர்மானியப் பொருளாதார ஒத்துழைப்பு அமைச்சர் எர்ஹார்டு எப்ளர் அகமும் முகமும் மலர என்னை வரவேற்ருர். விருந்தோம்பல் தமிழகத்தில் தனிப் பண்பு-தமிழகக் கலாச்சாரத்தின் அடிப்படை. ஜெர்மானியர்களும் இந்தப் பண்பை நிரம்பப் பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் வேளாண்மை வளர்ச்சி, நீலகிரித் திட்டம், நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டம் இவைகளில் ஜெர்மானியக் கூட்டுறவு பற்றியும், தமிழகத்திற்கு ஜெர்மனியின் உதவி பற்றியும் கலந்துரையாடினேம். "நீங்கள் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களும் பேசும்படக் கதை வசனங்களும் எழுதி, நல்ல படங்களும் தயாரித்திருக்கிறீர்களாமே? நல்ல படம் தயாரிப்பது எப்படி என்பதை எங்களுக்குச் சொல்லித் தரக்கூடாதா?" என்று கேட்டார் அவர். பதிலுக்கு, "உங்கள் தொழில் நுட்ப உதவியைத் தருவீர்களா?" என்றேன் வேடிக்கையாக.

ஜெர்மானியப் பாராளுமன்றத்தின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டேன். பின்னர் இந்திய ஜெர்மன் சங்கத்தலைவர்



மூனிக் நகரில் சிறுவர்கள் விளையாடுமிடம்

டாக்டர் அலெக்சாண்டர் வெர்த் வரவேற்பு விருந்தொன்று அளித்தார். பான் நகரில் உள்ள முக்கியத் தொழில் அதிபர்களும், கூட்டாட்சிக் குடியரசின் பெரிய அதிகாரிகளும் இந்தியத் தூதுவரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டில் நடைபெறும் நிலையான நிர்வாகத்தை, நிம்மதியான ஆட்சியை டாக்டர் அலெக்சாண்டர் வெர்த் பெரிதும் பாராட்டினுர். இந்தியாவினைத் தொழில் மயமாக்கிட ஜெர்மனி சாத்தியமான எல்லா உதவிகளையும் வழங்கும் என்று உறுதி கூறினுர்.

அன்று மாலை ஜெர்மன் வானெலியினர் (Deutsche Welle) என்னைப் பேட்டி கண்டு சரமாரியான கேள்விகளைக் கேட்டனர். பேட்டியில் கேட்கப்பட்ட கேள்விகள், இந்தியாவின், குறிப்பாகத் தமிழகத்தின், அரசியல், சமுதாயப் பொருளாதாரப் பிரச்சினைகளில் ஜெர்மானியர்கள் காட்டும் ஆர்வத்தினுக்கோர் விளக்கமாக இருந்தது.

அவர்கள் கேட்ட கேள்விகளும் நான் தந்த பதிலும்:

கேள்வி: தாங்கள் மேற்கு ஜெர்மனிக்கு வருகை தந்துள்ளதன் நோக்கம் என்ன?

பதில்: இரண்டாவது உலகப் பெரும்போர் ஏற்படுத்திய படுநாசத்திலிருந்து ஜெர்மனியின் பொருளாதாரம் வியக்கத்தக்க முறையில் உயிர் பெற்றெழுந்திருக்கிறது. அதனைக் கண்டு பயன் பெறவே இங்கு நான் வந்துள்ளேன்.

கே.: நீங்கள் இங்கு பார்த்த இடங்கள், தொழிற்சாலைகள் இன்னும் மற்றவைகளில் இருந்து எது உங்கள் மாநிலத்துக்குப் பயன்படுவதாக இருக்கும் என்று கருதுகிறீர்கள்?

ப.: எத்தனையோ இருப்பினும் வீட்டு வசதித் துறையில் ஜெர்மனி அடைந்துள்ள முன்னேற்றம் குறிப்பிடத் தக்கது. அத்துறையில் இங்குக் கடைப்பிடிக்கப்படும் முறை பரிசீலிக்கப்பட்டு எங்கள் மாநிலத்திலும் கடைப்பிடிக்கப்படுவதற்கான முயற்சிகளை நான் மேற்கொள்வேன்.

கே.: இந்தியாவிலும் ஜெர்மனியிலும் நிலவுகிற மத்திய-மாநில உறவு முறைகளை ஒப்பு நோக்கி விளக்க இயலுமா?

ப.: மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயும், மாநில அரசுக்கும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் இடையேயுமுள்ள உறவு முறைகள், அந்தந்த நாடுகளில் உள்ள அரசியல் அமைப்பு-ஜனநாயக பாரம்பரியம் ஆகியவற்றிற்கேற்ப நாட்டுக்கு நாடு மாறுபடும். இதுபற்றிய விவரங்களை உன்னிப்பாகப் பார்க்காமல் மேலெழுந்தவாரியாக இதனைக் கூறுகிறேன்.

கே.: திருமதி இந்திரா காந்தியின் தலைமையில் அமைந்துள்ள மத்திய அரசைத் தங்கள் கட்சி ஆதரிப்பது ஏன்?

ப.: இந்தியாவில் இப்போது இரண்டு காங்கிரஸ் கட்சிகள் இருக்கின்றன. இந்த இரண்டு கட்சிகளிலும் இந்திரா காங்கிரஸ் நாங்கள் எதிர்பார்த்த அளவுக்குத் திகழவில்லை என்ருலும் மற்றதைக் காட்டிலும் இந்திரா காங்கிரஸ் முற்போக்கானதாக இருக்கிறது. ஆகவேதான் நாங்கள் இந்திரா அரசை ஆதரித்து வருகிறோம்.

கே. : தமிழைப் பயிற்சி மொழி யாக்குவதற்குத் தாங்கள் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள்?

ப. : நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே, எங்கள் கட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு முன்பாகவே, எல்லாக் கட்டங்களிலும் தமிழே பயிற்றுமொழியாக இருக்கவேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை.

எங்கள் மாநிலத்தில் முன்பிருந்த காங்கிரஸ் கட்சியினர் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்குச் சிலநடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். தமிழ்ப் பயிற்சிமொழித் திட்டத்தை அமல் நடத்துவதற்குத் தீவிரமான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தமிழே போதும் எனவும், பிற மாநிலங்களுடனும், பிற நாடுகளுடனும் தொடர்பு கொள்ள ஆங்கிலம் போதும் என்றும் நாங்கள் கருதுகிறோம். - தமிழைப் பாடமொழியாகக் கொண்டு படித்தவர்களுக்கும் சம அளவு வேலை வாய்ப்பு உண்டென்று நாங்கள் உறுதி கூறியுள்ளோம் என்றாலும் இணக்கமான முறையில் படிப்படியாக இந்த மாறுதல் நிகழ வேண்டுமென, அதற்கேற்ப நாங்கள் விழிப்புடன் செயல்பட்டு வருகிறோம்.

வானொலியினரைத்தொடர்ந்து பத்திரிகை நிருபர்கள் என்னைப் பேட்டி கண்டனர். அவர்கள் கேட்ட கேள்விகள் இந்திய அரசியலை எந்த அளவுக்கு அவர்கள் புரிந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகளாக விளங்கின.

பான் நகரத் தெருவில் ஒரு நாட்டியக் குழு; பின்னால் இருப்பது பீத்தோவன் சிலை.

கேள்வி : பாரிஸ் நகரில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்துவதன் நோக்கம் என்ன?

பதில் : உலகம் முழுவதும் தமிழர்கள் பரவிக் கிடக்கிறார்கள். அத்தகையோரின் தொகை மிகப் பெரிய அளவில் இல்லாமல் இருக்கலாம். இது போன்ற மாநாடுகள் தமிழர்களுக்கிடையேயும், தமிழருக்கும் பிற உலகத்தாருக்குமிடையேயும் இன்னும் நெருக்கமான உறவை ஏற்படுத்தி, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு உதவும்.

இம்மாநாடு பழம் தமிழ்ப் பேரிலக்கியங்களுக்குக் கீர்த்தி சேர்க்கும். தமிழில் புத்தம் புதிய அறிவுச் செல்வத்தையும் கருத்துக் கருவூலங்களையும் கொண்டு வந்து சேர்க்கும்.

கே. : இந்த மாநாடு அரசியல் அடிப்படையில் நடத்தப்படுகிறதா?

ப. : மொழி வளர்ச்சி என்பது அரசியலில் இறங்கி விடுவது என்று பொருள் அல்ல !

கே. : இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்குத் தமிழர்கள் குடியேறத் துவங்கிவிட்டனரா?

ப. : ஏற்கனவே கையெழுத்தான சாஸ்திரி-பண்டார நாயகா ஒப்பந்தத்தின் தொடர்பாகத் தமிழர்கள் குடிபெயர்ந்து வந்துகொண்டிருக்கின்றனர்.

கே. : இலங்கையில் முன்பிருந்த அரசாங்கம் உங்களிடம் நட்புணர்வுடன் இருந்ததாமே !

ப. : முன்பிருந்த அரசு எங்களுடன் நட்புறவு கொண்டிருந்தது என்பதற்காகவே இப்போதைய புதிய அரசு நட்புறவு இல்லாமல் இருக்கும் என நாம் கொள்ள வேண்டியதில்லை.

கே. : ஜெர்மனியில் நீங்கள் யார் யாரைச் சந்தித்தீர்கள்? அவர்களுடன் எவை பற்றி விவாதித்தீர்கள்?

ப. ; நான் மூனிக் நகர மேயர் டாக்டர் வோகல் அவர்களை நேற்றுச் சந்தித்தேன். உள்ளாட்சி நிர்வாகம் பற்றிய பிரச்சினைகளைக் குறித்து விவரித்தேன். ஜெர்மனியின் பொருளாதாரக் கூட்டுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எப்ளரை இன்று சந்தித்தேன். நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாட்டிற்கு ஜெர்மனி எவ்விதமான உதவியைத் தர இயலும் என்பது பற்றிப் பேசினேன். இந்திய அரசாங்கத்தின் மூலம் குறிப்பிட்ட சமயத்தில் குறிப்பிட்ட வேண்டுகோள்களை விடுப்போம்.

கே. : உங்களது கட்சியின் விரிவான கொள்கை என்ன?

ப. : தமிழகத்தில், திருச்சிநகரில் நடைபெற்ற கழக மாநாட்டில் எங்களது விரிவான கொள்கைகளைப் பற்றி விளக்கமளித்துள்ளேன். எங்களது முக்கியக் கொள்கைகளில் ஒன்று மாநில சுயாட்சி ; மத்தியில் கூட்டாட்சி.

கே. : கூட்டாட்சி என்பது என்ன ? ஸ்விட்சர்லாந்து நாட்டின் சமஷ்டி அரசைப் போன்றதா ?

ப. : இந்தியா மிகப் பெரிய பரந்த நாடு. மக்கள் தொகை அதிகமுள்ள நாடு. எந்த நாட்டையும் நான் இந்தியாவுடன் ஒப்பிட விரும்பவில்லை. மாநில அரசின் பிரதிநிதிகள் மத்திய அரசில் இருக்கவேண்டும். சரியான வாய்ப்பு ஏற்படுகிறபோது அதுபற்றிய வரன்முறைகளை வரையறுத்துக் கொள்ளலாம். இப்போது நாங்கள் மாநில-மத்திய அரசுகளின் உறவு குறித்து ஆராய நிபுணர்கள் கமிட்டி ஒன்றை நியமித்துள்ளோம்.

கே. : ''எல்லோருக்குமாக ஒருவர் ஒருவருக்காக எல்லோரும் ''—என்ற தத்துவத்தை ஒப்புக் கொள்கிறீர்களா?

ப. : ஒருவருக்குக் கிட்டுவது அனைவருக்கும் கிட்டுவதாக இருக்கவேண்டும். அனைவருக்கும் கிட்டுவது அந்த ஒருவருக்கும் கிட்டுவதாக இருக்க வேண்டும் என்பதுதான் சரியாக இருக்கமுடியும். ஆனால், பிறருக்குக் கிடைக்காதது எல்லாம் அந்த ஒருவருக்கே கிட்டக் கூடாது.

கே. : மத்திய மாநில உறவுகள் பற்றிய ஆய்வுக் குழுவை யார் நியமித்தது ?

ப : நாங்கள்தான் நியமித்தோம். மத்திய அரசிடமிருந்து எந்தெந்த அதிகாரங்களை மாநிலங்களுக்குத் தரலாம் என்று ஆராய்வது சரியாக இருக்கும் என்று எனது யோசனையைக் கூற விரும்புகிறேன். எங்களது நோக்கம் மத்திய அரசுடன் போர் புரிவது அல்ல. எனினும், அதிகாரங்களைப் பங்கிட்டுத் தரும் முறை மத்திய அரசையே வலிவுடையதாக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

கே. : மத்திய அரசுடன் உங்கள் கட்சிக்குள்ள கண்ணோட்டம் என்ன?

ப. : மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்ற கொள்கையில் கருத்து வேறுபாடு இருக்கிறது என்று நான் முன்பே கூறியிருக்கிறேன்.

ஆயினும் நாங்கள் மத்திய அரசை ஆதரிப்பதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. சில மாநிலங்களில் உள்ளது போல் நிலையற்ற அரசு மத்திய அரசில் இருக்கக் கூடாது.
2. அடிக்கடி மக்கள் பொதுத் தேர்தல்களைச் சந்திக்கக் கூடாது.

(இதனால்தான் 1972-ல் நடைபெற வேண்டிய சட்டமன்றத் தேர்தலை 1971-ல் வைத்துக் கொண்டோம்.)

3. திருமதி இந்திரா காந்தி தமது கொள்கைகளில் சிறிது முற்போக்கு எண்ணம் கொண்டவராக இருக்கிறார்.

கே. : கம்யூனிஸ்டுகள் பற்றி உங்கள் நிலை என்ன?

ப. : கம்யூனிஸ்டுக் கட்சியினர் மட்டுமின்றி எல்லாக் கட்சியினரும் ஜனநாயகமுறைகளைப் பின்பற்ற வேண்டும். எந்த நோக்கத்திற்காகவும் எவரும் வன்முறையில் இறங்கலாகாது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கம்யூனிஸ்டுக்கட்சியினர் எங்களோடு நேசத்துடன் இருந்து வருகின்றனர்.

கே. : காங்கிரசில் ஏற்பட்ட பிளவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப. : ஒரு கட்சியின் தலைவர் என்ற முறையில் அவர்கள் தமது கட்சியின் பிளவை நீக்கிக் கொள்ளவேண்டும் என்று வெளிப்படையாகவே சொன்னேன். எதிரியின் பலவீனத்தை நம்பிக் கிடப்பவனல்ல நான்!

கே. : எந்தக் காங்கிரசுக்கு நீங்கள் முதன்மை தருகிறீர்கள்?

ப. : மாநிலங்களுக்குச் சுயாட்சி என்ற கோரிக்கையையும் எங்களது மொழிக் கொள்கையையும் இன்னும் எங்களது முக்கிய கொள்கைகளையும் எந்தக் கட்சி மதிக்கிறதோ அந்தக் கட்சியை நாங்கள் ஆதரிப்போம்.

பத்திரிகையாளர்களைச் சந்தித்த பின்னர் பான் நகரைச் சுற்றிப் பார்க்கச் சென்றோம். ரைன் நதியை விசைப்படகில் கடந்தோம். கார்களை எல்லாம் கப்பலில் ஏற்றுவதுபோலப் படகுகளில் ஏற்றி மறுகரையை அடைந்தோம். இது உல்லாசப் பயணிகளை மிகவும் கவர்கிறது.

ஐரோப்பாவில் போர்கள் நிகழ்ந்த காலத்தில் இந்த ரைன் நதி வெற்றிக்கு வாய்ப்புத்தரும் கருவியாக ஒருதரத்தாருக்கும், தோல்வி நிலைக்குத் துரத்தும் தடையாக மற்ற தரத்தாருக்கும் இருந்து வந்தது. ரைன் நதியை வென்றவர்களே ஐரோப்பாவை ஆளும் தகுதியையும் பெற்றனர். ரைன் நதியைக் கடப்பதற்காக பானுக்குச் சற்று தூரத்தில் பாலம் ஒன்றை முதன்முதல் கட்டியவன் ஜூலியஸ் சீசர். இன்று பொழுது போக்குவதற்குகந்த பொன்னுலகமாக ரைன் நதியின் இருமருங்குகளும் திகழ்கின்றன. இருபுறமும் தெரியும் பசிய காட்சிகளைப் பார்த்துக் கொண்டும், இனிய காற்றினை நுகர்ந்துகொண்டும், நதியில் படகுகளில் ஏறிச் செல்வதை உடலுக்கும் உள்ளத்திற்கும் தரும் அரிய பயிற்சியாக இங்குள்ளவர்கள் கருதுகின்றனர்.

அன்று இரவு திரு. தாண்டன் அவர்கள் சிறப்பான விருந்து அளித்தார். கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த திருமதி தாண்டனின் விருந்தோம்பல் நம் நாட்டுப் பெண்களின் சீரிய பண்புகளை நினைவூட்டின. அந்த அம்மையார் என்னுடன் வந்த எனது துணைவியுடன் இதயங்கலந்து பழகினார். விருந்தின்பொழுது பல்வேறு பொருள்களைத் தொட்டு வந்த உரையாடல் மெள்ள அரசியலுக்கும் திரும்பியது.

''சோஷலிஸம் பற்றி ஆளுக்கு ஒரு விளக்கம் தருகிறார்களே!'' என்றார், விருந்தில் கலந்து கொண்ட திருமதி பெல்லா.

''ஆமாம்! கடவுளைப்பற்றி ஆளுக்கு ஒரு விளக்கம் தருவதைப்போல'' என்று முடித்தேன் நான்.

(தொடரும்)



1866 ஆம் ஆண்டு மதுரை நகரவை யாகியது. அப்போது மக்கள் தொகை 41 ஆயிரம்.

1971 ஆம் ஆண்டு மே திங்கள் முதலாம் நாளில் மதுரை, மாநகராட்சி ஆகிறது. இன்று, மதுரையின் மக்கள் தொகை 5·5 இலட்சம்.

நாட்டு விடுதலைக்குப் பின்னர் பல்கலைக் கழகம் ஒன்றினை உருவாக்கிப் பெருமை தேடிக் கொண்டுள்ள மதுரை, இன்று புதிய மாநகராட்சியையும் உருவாக்கிப் பெருமையை விரிவு படுத்திக் கொண்டுள்ளது. தற்பொழுது நகராட்சித் தலைவராக இருக்கும் திரு. எஸ். முத்து அவர்கள் மாநகராட்சியின் தலைவர் (நகரத் தந்தை) ஆகிறார்.

தமிழ் நாட்டின் அணியெனத் திகழும் அந்த நகரத்தின் பல சிறப்பியல்புகள்—பழைய வ ர லா ற் று க் குறிப்புகள் இந்தச் சிறப்பிதழில் தொகுத்துக் கூறப் பட்டுள்ளன.

மதுரைப் புலவர்கள்

மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மன்னனார்
மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம்மன்னனார்.
மதுரை அறுவை வாணிகன் இளவெட்டனார்.
மதுரை ஆசிரியர் நல்லந்துவனார்.
மதுரை ஆசிரியன் கோடங் கொற்றன்.
மதுரை ஆலருவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார்.
மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்.
மதுரை இளங்கௌசிகனார்.
மதுரை இளம் பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்.
மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்.
மதுரை எழுத்தாளன்.
மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன்,
மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்த ராயத்தனார்.
மதுரை ஓலைக் கடையத்தார் நல்வெள்ளையார்.
மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகன்
மதுரைக் கண்டரதத்தன்.
மதுரைக் கண்ணத்தனார்.
மதுரைக் கண்ணனார்.
மதுரைக் கணக்காயனார்.
மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்
மதுரைக் கதக் கண்ணன்.
மதுரைச் சுந்தரதத்தன்.
மதுரைக் கவுணியன் பூதத்தனார்.
மதுரைக் கள்ளம் போதனார்.
மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார்.
மதுரைக்காஞ்சிப் புலவர்.
மதுரைக் காமக்கனி நப்பாலத்தனார்.
மதுரைக் காருலவியங் கூத்தனார்.
மதுரைக் குமரன்.
மதுரைக் கூத்தனார்.
மதுரைக் கூலவாணிகன் சாத்தன்.
மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.
மதுரைக் கொல்லன்புல்லன்.
மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்.
மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணாகனார்.
மதுரைச் சீத்தலைச்சாத்தன்.
மதுரைச் செய்கண்ணனார்.
மதுரைச் தத்தங்கண்ணனார்.
மதுரைத் தமிழ்க் கூத்தன் நாகன் தேவனார்.
மதுரைத் தமிழ்க் கூத்தனார்.
மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மன்னனார்.
மதுரை நக்கீரர்.
மதுரை நக்கீரனார்.
மதுரை நல்வெள்ளியார்.
மதுரைப் படை மங்கமன்னியார்.
மதுரைப் படைவாணிகன் இளந்தேவனார்.
மதுரைப்பள்ளி மருதங்கிழார் மகனார் சோகுத்தனார்.
மதுரைப் பாலாசிரியன் நற்றாமனார்.
மதுரைப் பாலாசிரியன் நப்பாலனார்.
மதுரைப் பாலாசிரியன் சேந்தன் கொற்றனார்.
மதுரைப் புல்லங் கண்ணனார்.
மதுரைப் பூதன் இளநாகனார்.
மதுரைப் பூவண்ட நாகன் வேட்டனார்.
மதுரைப் பெருங்கொல்லன்.
மதுரைப் பெருமருதனார்.
மதுரைப் பெரு மருதிள நாகனார்.
மதுரைப் பேராலவாயார்.
மதுரைப் போத்தனார்.
மதுரை மருதங்கிழார் மகன் இளம் போத்தன்.
மதுரை மருதங்கிழார் மகனார் கோகுத்தனார்
மதுரை மருதங்கிழார் மகனார் பெருங் கண்ணனார்.
மதுரை மருதனிள நாகனார்.
மதுரை வேளாசான்.
மதுரை வேளாதத்தார்.

மதுரைமீது படையெடுப்பு

1 மாலிக்காபூர் (கி.பி. 1311)
2 அல்லாவுதீன் (கி.பி. 1312)
3 குஸ்ருகான் (கி.பி. 1317)
4 உலூ கான் (கி.பி. 1323)
5 முகமது-பின்-துக்ளக்கு

மதுரை சுல்தான்கள்

ஜலாலுதீன்
அல்லாவுதீன் உடௌஜி
குத்புதீன்
கியாஸ்-உத்தீன் தம்கானி
நாசிர் உத்தின் (கி.பி. 1344)
அடில்ஷா (கி.பி. 1356—57).
பக்ருதீன் முபாரக்ஷா (கி.பி. 1368)
அல்லாவுத்தீன் சிக்கந்தர் (மதுரையை ஆண்ட கடைசிச் சுல்தான்) (கி.பி. 1372—78)



இரண்டு நாள் ஓடும் திரைப்படம்

ஜப்பான் நாட்டில் நடந்த எக்ஸ்போ 70-ஐ திரைப் படமாக எடுத்து இருக்கிறார்கள். இந்தப் படம் மொத்தம் 55 மணி நேரம் ஓடக் கூடியது.

ஐம்பத்தைந்து மணி நேரம் ஓடினால் படத்தை யார் பார்ப்பது? மண்டையைப் போட்டுக் குடைந்தனர் தயாரிப்பாளர்

ஜப்பான் நாட்டு அரசு, பொருட்காட்சி நடத்தியவர்கள், திரைப்படத் துறையினர் ஆகியோரைக் கலந்து கொண்டு ஒரு தீர்மானத்திற்கு வந்தது. அதன்படி பல அரங்குகளையும் தேவையற்ற காட்சியையும் நீக்கி, அதனை 3 மணி நேரப் படமாக மாற்றியிருக்கிறார்கள்.



மதுரை வரலாற்றில் சில இதழ்கள்

மதுரையம்பதியின் அமைப்பு, அலர்ந்த தாமரை மலரை ஒத்திருந்தது என்றும், அதன் அரண், வலிமிகுந்ததாயிருந்தது என்றும், ஏராளமான பொறிகள் அமைக்கப்பட்டும், முதலைகள் நிரம்பிய அகழி சூழ்ந்திருந்தது என்றும், மதுரையின் அரண்வாயிலைச் சிறந்த காவலர் காத்து நின்றனர் என்றும், அழகிய மாடமாளிகைகளும், தேரூரும் நெடுந்தெருக்களும், பல்தொழில்புரிவோர் இருக்கைகளும் நிறைந்து விளங்கியது என்றும் மதுரையின் சிறப்பைச் சங்க இலக்கியங்களும், சிலப்பதிகாரம் முதலிய பெருங் காப்பியங்களும் எடுத்துரைப்பது அனைவரும் அறிந்ததே. வரலாற்றின் அடிப்படையிலும் மதுரையின் தொன்மையைத் தெளிவாகவும், சிறப்பாகவும் அறியலாம்.

தொன்மையான கல் வெட்டுகள்

மதுரைக்கு அருகில் உள்ள அழகர்மலையில் பண்டு சமணப் பெரியார்கள் வாழ்ந்த தடையங்கள் இருக்கின்றன. அவர்களுக்குப் பாழி அமைத்துக் கொடுத்தவர்களில் பலர் மதுரையைச் சேர்ந்த வணிகர் என்று அங்குள்ள கல்வெட்டுகள் குறிக்கின்றன. மதுரை உப்பு வணிகர், மதுரை அறுவை வணிகர் எனப் பலபெயர்கள் பொறித்திருக்கும் அக் கல்வெட்டு கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதுவே இதுகாறும் கிடைத்துள்ள மதுரையைக் குறிக்கும் தொன்மையான கல்வெட்டாகும். மதுரை மாநகரிலே வைகைக்கரையில் 7-ஆம் நூற்றாண்டில் ஆண்ட சேந்தன் என்ற மன்னனின் கல்வெட்டு கிடைத்திருக்கிறது. இது இப்போது மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் உள்ளது.

சங்கம் வைத்துத் தமிழாய்ந்த தனிப் பெரும் நகர் என்று இதைப் பாண்டிய மன்னன் இரண்டாம் இராசசிம்மனின் சின்னமனூர் பெரிய செப்பேடுகள் ' மாபாரதம் தமிழ்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் ' என்று குறிக்கின்றன.

சித்தன்னவாசல் ஓவியம் !

சித்தன்னவாசல் குகைக் கோயிலைத் தோற்றுவித்தவன் மஹேந்திரவர்ம பல்லவன் என இதுகாறும் ஆராய்ச்சியாளர் கருதினர். ஆனால் அங்கு இருந்த குகையைத் திருப்பணி செய்வித்து இன்று உலகமே வியக்கும் ஓவியங்களைத் தோற்றுவித்தவர் மதுரையைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் என்று அங்குள்ள கல்வெட்டுகள் நிரூபிக்கின்றன. அவ்வாசிரியரின் பெயர் மதுரை ஆசிரியர் இளம் கௌதமன் என்பது. அவர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு 9-ஆம் நூற்றாண்டில் ஆண்ட அவனீப சேகர ஸ்ரீவல்லபன் என்ற மன்னன் காலத்தில் சித்தன்ன வாசல் குகையைப் புதுப்பித்தார் என்னும் செய்தி அழகிய தமிழ்ப் பாவில் அங்குப் பொறிக்கப் பட்டுள்ளது.

'திருந்திய பெரும்புகழ் தேவ
தரிசனத்து
அருந்தவ முனைவனைப் பொருட்
செல்வன்
அறன்கிளர் நிலைமை இளம்
கௌதமன் எனும்
வளங்கெழு திருநகர் மதுரை
ஆசிரியர்
அவனீப சேகர சீர்கெழு
செங்கோல் சிரீவல்லவன்

—என்று கல்வெட்டுக் கூறுகிறது.

மதுரை நகரில் சிறந்த அரண்மனைகள் இருந்திருக்கின்றன. அவை அவ்வப்போது நடந்த போர்களில் அழிந்து பட்டன. அவற்றில் சிலவற்றைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. சோழப்பேரரசன் கங்கைகொண்ட இராசேந்திரன் தன் மகனுக்கு மதுரையில் சுந்தரசோழபாண்டியன் என முடிசூட்டினான். இராசேந்திரனின் பெயரால் ஒருபுரம் நிறுவப்பட்டு அங்கு அரண்மனையும் எழுப்பப்பட்டது. அதில் பல சாலைகளும், மண்டபங்களும் இருந்தன.

மதுரை அரண்மனைகள்

சுந்தரசோழ பாண்டியர் இராசேந்திர சோழபுரத்துக் கோயிலிலுள்ளால் ஆட்டத்து வெளி, மேலை மண்டபத்தில் எழுந்தருளியிருந்து ஓர் ஆணை இட்டதாக ஒரு கல்வெட்டில் காண்கிறோம். மற்றொரு கல்வெட்டில் அதே மாளிகையில் திருமஞ்சனசாலை இருந்தது என்றும், அதில் பள்ளிக்கட்டில் இருந்தது என்றும் அறிகிறோம். மதுரையின் வடபுறத்தில் மன்னன் பகலில் தங்கும் நந்த

இரா. நாகசாமி

வம் ஒன்று இருந்தது. அதன் பெயர் புத்தன் என்பது. அதன் மத்தியில் ஓவியம் நிறைந்த சித்திரக்கூடம் ஒன்றிருந்தது. அதில் சுந்தரசோழ பாண்டியன் உண்டு தங்கியிருந்தார் என அறிகிறோம். இது கி.பி. 11-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தது. மாறவர்மன் சுந்தர பாண்டியர் காலத்தில் மாடக்குளக்கீழ் மதுரைக்கோயில் (அரண்மனை) இருந்தது என்றும், அதில் பள்ளியறைக் கூடத்தில் மழவ ராயன் என்னும் பெயர்பெற்ற பள்ளிக்கட்டில் இருந்தது என்றும் அறிகிறோம்.

பாண்டியர் ஸ்ரீவல்லவரின் காலத்தில் தான் பாண்டிய அரண்மனை பற்றிய சிறந்த குறிப்புகள் கிடைக்கின்றன. அரண்மனை மாடக்குளக் கீழ் இருந்தது. கி.பி. 11-ஆம் நூற்றுண்டில் சோழ பாண்டியர் மாளிகை எழுப்பிய இராசேந்திர சோழபுரத்திலேயே அரண்மனை இருந்தது. இதைக் கோயில் என்று கல்வெட்டுக்கள் குறிக்கும். இக்கோயிலில் உள்ளாலை ஒன்றிருந்தது. இதில் அழகிய பாண்டியன் என்று பெயர் பெற்ற கூடம் ஒன்றும், பெரிய மாளிகை ஒன்றும், தெற்கில் பள்ளியறைக்கூடமும், நாடக சாலை ஒன்றும் இருந்தன என்று அறிகிறோம். இவற்றில் அழகிய பாண்டியன் கூடத்தில் இருந்த கட்டிலின் பெயர் 'பாண்டிய ராசன்' என்பது. பள்ளியறைக் கூடத்துக் கட்டிலின் பெயர் 'கலிங்கத்தரையன்' என்பது. நாடகசாலையில் இருந்த கட்டிலின் பெயரும் 'பாண்டிய ராசன்' என்பதே.

இது போன்று விளங்கிய அரண்மனைகள் மறைந்து பட்டன. ஆனால் திருமலை நாயக்கரால் தோற்றுவிக்கப்பட்ட மாளிகை மட்டும், காலம் என்னும் காலனை யும் வென்று இன்றுவரை நிற்கிறது.

திருமலை நாயக்கர் அரண்மனை

கி. பி. 1623-லிருந்து 1659 வரை மதுரையைத் தலைநகராகக் கொண்டு சீரும் சிறப்புமாக ஆண்ட திருமலை நாயக்கரால் இவ்வரண்மனை கட்டப்பட்டது. தென்னிந்தியாவில் எஞ்சியுள்ள பண்டைய அரண்மனைகளில் மிக வும் எழில் வாய்ந்தது இதுவே. இவ்வரண்மனையைத் திருமலை மன்னர் 1636-ல் கட்டி முடித் தார். இதில் தம் 75-ஆம் வயது வரை மனைவியருடன் வசித்தார்.

திருமலை மன்னர் கட்டிய போது இப்போது எஞ்சியுள் ளதைக் காட்டிலும் நான்கு மடங்கு பெரியதாக இவ்வரண் மனை திகழ்ந்தது. இவ்வரண் மனையில் பல பகுதிகள் பற்றிய பண்டையக் குறிப்புகள் உள்ளன. இங்கு ரங்க விலாசம், சொர்க்க விலாசம் என்ற இரண்டு முக்கிய பகுதிகள் இருந்தன. தவிர, பதி னெட்டு வித இசைக் கருவிகள் இசைக்கும் இடம், பல்லக்கு முதலியன வைக்கும் இடம், படைக்கலன் வைக்கும் இடம், பூசை செய்யும் இடம், தேவி யரின் அந்தப்புரம், நாடகசாலை, உறவினர்களும் பணி செய்வார் களும் வசிக்கும் இடங்கள், வசந்த வாவி, மலர் வனங்கள் முதலியன இருந்தன.

ஆண்டு தோறும் சித்திரை மாதம் மீனாட்சி அம்மன் ஆலயத் தில் சிறப்பு வழிபாடுகள் நடக் கும். திருமலை நாயக்கர் கோயி லுக்குச் சென்று அம்மனை வழி பட்டு மீனாட்சி அம்மனிட மிருந்து செங்கோல் பெறுவார். செங்கோலை உலாவாக எடுத்து வந்து இவ்வரண்மனையில் சிறப் பாக அலங்கரிக்கப்பட்ட சிம்மா சனத்தில் வைத்து அதன் அருகில் கீழே அமர்வார். செங்கோ லுக்குச் சிறப்பு வழிபாடு நடக் கும். மறுநாள் மறுபடியும் செங் கோலுக்கு வழிபாடு செய்து கோயிலுக்கு எடுத்துச் செல்லப் படும். திருமலை நாயக்கர், மீனாட்சி அம்மனின் பிரதிநிதி யாகவே இந்நாட்டை ஆள்வதாக எண்ணி இவ்வாறு செங்கோ லுக்கு இங்கு வழிபாடு செய்வது வழக்கம்.

இவ்வெழில் அரண்மனையின் பல பகுதிகள் திருமலை மன்ன ருக்குப் பிறகு அவர் பெயரன் சொக்கநாத நாயக்கரால் இடிக் கப்பட்டன. காலப்போக்கில் இன்னும் சிலபகுதிகள் அழிந்தன.

1868-ல் சென்னையின் கவர்ன ராயிருந்த லார்டு நேபியர் என் பவர் இவ்வரண்மனையின் அழ கைக் கண்டு வியந்து இது அழிந்துவிடாமல் காக்க வழி செய்தார். 1870-ல் பழு தடைந்த பகுதிகளும், சுதை வேலைப்பாடுகளும், வண்ண ஓவி யங்களும் பழுது பார்க்கப் பட்டன. பல ஆண்டுகளாக நீதிமன்றங்கள் இங்குப் பணி புரிந்தன. இப்பொழுது தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இவ்வரண்மனை யின் தொன்மையையும், எழிலை யும் பாதுகாத்து வருகிறது.

மதுரை அதிசயம்!

மதுரை நகரில் டவுன்ஹால் என்று சொல்லப்படும் கட்டடம் பகலெல்லாம் நூலகமாகப் பணி புரிகிறது. மாலை 5 மணிக்குப் பிறகு, அது திரைப்பட அரங்க மாக மாறிவிடுகிறது.



மதுரையின் பிறபெயர்கள்

அங்கண் மூதூர்
ஆலவாய்
உயர்மதிற்கூடல்
கடம்ப வனம்
கன்னிபுரம்
கூடற்பதி
கூடல்
கூடல் மாநகரம்
கூடலம் பெரும்பதி
சிவராசதானி
சிவன் முத்தித் தலம்
தக்கண மதுரை
தமிழ் கெழுகூடல்
திறல் மதுரை
திருமதுரை
திருமலிமூதூர்
திருமாமதுரை
திருவாலவாய்
துவாதசாந்தத்தலம்
தெய்வத் தமிழ்க் கூடல்
தெளி தமிழ்க் கூடல்
தென்மதுரை
தென்மதுராபுரம் (தளவாய்புரச் செப்பேடு).
தொன் மதுரை
நான்மாடக்கூடல்
பூலோக கயிலாயம்
பூலோக சிவலோகம்
பெரும்பெயர் மதுரை
பொற்கூடல்
மதுரை (அழகர்மலைக் கல்வெட்டு)
மதுராபுரி
மதுராநகர்
மதுரை மூதூர்
மதுரைப்பதி
மருதை (குலோத்துங்கன் III
ஸ்ரீரங்கம் கல்வெட்டு)
மல்லல் மூதூர்
மலிபுகழ்க் கூடல்
மாடமதுரை
மாமதுரை
மும்மைத் தமிழ்க் கூடல்
வழுதிக் கூடல்
வெள்ளியம்பலம்



"குட்டம் கடிசூலை கொல்லும் விடபாசந்
துட்ட மகோதரஞ் சோகையொடு—கிட்டிமெயில்
தாவுகரப் பான்கிரந்தி தண்மேகம் போக்கிவிடும்
பூவரசங் காய்பட்டை பூ"—என்று பேசுகிறது.

இவ்வாறு பூவரசம் பட்டைச்சாறு புழுத்த புண்ணை ஆற்றி, காணுக் கடிநஞ்சை மாற்றி, பெரு வயிற்றைத் தேற்றி, பெருநோய்களைத் தூற்றிப் பயன் நல்குவது போன்று, மாறனது வீரத்தினுல் விளைந்த செல்வமும் மன்னனது பழுத்த பழியை ஆற்றி, உட்பகையை மாற்றி, மக்களச்சத்தைத் தேற்றி, கோழைகளைத் தூற்றித் திகழ்ந்தது என்று உணர முடிகிறது.

நாவல்

நாவல்பட்டையின் சாறு இரும்பைச் செந்தூர மாக்கும் வல்லமை கொண்டது. நாவல் கனியின் சாற்றில் உருவாகும் உலோகப் பொன் சிறந்தது. அதைச் சாம்பூந்தம்—நாவற்பொன் எனத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பாகக் குறிக்கின்றன.

நீண்டநாள் இருமல், ஈளை இவற்றிற்கு இதன் சாற்றைப் பாலுடன் கலந்து ஒரு மண்டிலம் கொடுத்துவர மிகுபயன் விளையும். குழந்தைகளுக் குண்டாகும் புட்குற்றப் பிணிகளுக்கு இதன் சாற்றைத் தேனுடன் கலந்து ஒரு சங்களவு நாளுக் கொருவேளை 15 நாள்கள் கொடுக்கலாம். எவ் வகைப் பிணியும் அறும்.

நாவற்பட்டை நாட்பட்ட நோயைத் தகைத்து, குழந்தைப் பிணியைப் பகைத்துத் தீர்ப்பது போன்று மாறனது விழுப் புண்கள் சாற்றின் விளைவும் பழம்பகையைத் தகைத்து, தொடக்கப் பகையையும் தோற்றத்திலேயே பகைத்ததெனக் கொள்ளலாம்.

இலந்தை

"இலந்தையின் பட்டை யிடித்தறுகுபா லிலரைத்
துலர்ந்ததே கத்தினுக் குண்"

என்னும் மருத்துவக் குறளின்படி இலந்தைப் பட்டையின் சாறெடுத்து அறுகம்புல் சேர்த்து ஆவின் பாலில் அரைத்து ஒருமண்டிலம் கொடுத்து வர என்புருக்கி நோய் போகும். மெலிந்த உடல் மெருகேறும்.

இதுபோன்று மாறனது தோற்குருதியின் விளைவு களால் நாட்டு எளியமக்களின் என்புருக்கியாம் இல்லாமைப் பிணி இல்லாமற் போயிற்று என அறியலாம்:

மா

மாமரத்தின் பட்டைச்சாறு ஓர் ஊட்ட மருந்து. நான்கு வாய் ஆவின் பாலுடன் அதிற் பாதி அளவு சாறு கலந்து இரண்டு திங்கள் அருந்த உடல் வலுப்பெறும். பட்டையை வேறு மருந்துப் பொருள்களுடன் கூட்டித் தைலமாக்கி நீராடக் கொள்ளலாம். வேரின் பட்டைச் சாற்றை வாந்திக்குக் கொடுக்க வாந்தி நிற்கும். வயிற்றுக் கடுப்பும் போகும்.

இதுபோன்று மாறனது வீரம் நாட்டு வீரர்க்கு ஊட்டமளித்தது என்றும், பல வீரருடன் ஒத்து நின்றமையால் பெரும்படைக்கு வெற்றி விளைந்தது என்றும், அவனது தாருன்றிய முயற்சியால் வறிஞரது தளர்ச்சிகள் நீங்கின என்றும் காண முடிகிறது.

வேம்பு

வேப்பம்பட்டையின் சதைப்பகுதி 5 பலம் எடுத்து 1 படி நீர் விட்டு அரைப்படியாகச் சுண்ட வைத்து வடிகட்டி இளஞ்சூட்டோடு மூன்று வாய் அளவு கொடுக்க, பரவும் வெப்பசுரம் வராது. அந்நோய் கண்டு நீங்கிய அயர்ச்சிக்கும் இவ்வாறு கொடுக்கலாம். 20 ஆண்டுகள் முதிர்ந்த மரத்தின் பட்டையைக் காயவைத்துப் பொடிசெய்து 2 வராகன் எடை தேனில் குழைத்துக் கொடுக்கத் தொடர்ந்து இருந்துவரும் நீர்வேட்கை தணியும்; நாச்சுவையின்மை போய்ச் சுவையூறும். மேலும் பயன்கள் பலவாம்.

வேப்பம்பட்டை போன்ற மாறனது வடுவால் வடிந்தயாக்கையைக் காணும்போதெல்லாம்பொது மக்களிடம் பரவியிருந்த பகையச்சம் பறந்தது. மீண்டுவரினும் அவனை நினைந்தாலே ஓடி ஒளிந்தது. மக்களது சோர்வு எண்ணம் மாறி நாட்டுப்பற்று ஊறியது என்று கொள்ளலாம்.

இலுப்பை, புன்னை, அகத்தி

இலுப்பைப் பட்டையின் கறுக்குக் குடிநீர் வளி நோயைப் போக்குவது. புன்னைப் பட்டைச் சாற்றைக் கொடுக்க வயிற்றுப்புழு சாகும்.

தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்



Dr. S, K.

கலந்து சாப்பிடுங்கள். இதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கை பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்தி புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்

டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.C., A.M.I.H

பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி S.I.

போன்: 16 தந்தி: சித்தர்

சென்னை கிளை ஆபீஸ்:

41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1

போன்: 21448

மாமதுரைப் பட்டணத்தின் மாண்பதற்கோர் எல்லையுண்டோ
தேமதுரச் சங்கம் திகழ்ந்த நகரமன்றோ!
காலத்தால் மாயாது கருத்தாலே மாறாது
ஞாலத்தார் போற்றிவரும் ஞானத் திருக்குறளை
வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிகளெல்லாம்
உய்ய மனிதகுலம் உரைத்த பெருநூலைச்
சங்கப் புலவரெல்லாம் சாற்றுகவி பாடிடவே
அங்கந்நாள் தந்த அரிய மதுரையன்றோ!
வீசி எறிசிலம்பின் மேலெழுந்த மாணிக்கக்
கூசுமொளி காணவுள்ளம் குலைந்து நடுநடுங்கி
ஆவி துறந்தே அறத்தைப் புரந்திட்ட
கோவேந்தன் வாழ்ந்த கொடியாடு மாமதுரை;
சிறைச்சாலை சென்றங்கே தீயநிலை மாற்றுவித்தே
அறச்சாலை யாக்குவித்த அன்னைமணி மேகலையின்
ஞான மொழிதவழும் நான்மாடக் கூடலன்றோ!
நீறு தவழ்நெற்றி நெருப்புக்கண் காட்டிடினும்
கூறு முமதுசெய்யுள் குற்ற முடைத்தென்றே
அஞ்சா துரைசெய்த அரும்புலவன் நக்கீரன்
செஞ்சொற் கவிமாலை திகழ்ந்தபெரும் மாமதுரை
பிட்டுக்கு மண்சுமந்து பிரம்பால் அடிமுதுகில்
பட்டுமந்த ஏழைக்கே பரிந்தே பணிசெய்த
கூடல் மதுரைக் குழகன் அடியவர்க்காய்
ஆடல், பலபுரிந்த அழகார் மதுரையன்றோ!
மாறா வளங்கொழித்தே வையையெனும் பூங்கொடியாள்
ஆறாகப் பாய்ந்தே அருள்சுரக்கு மாமதுரை!
உள்ளமெனும் ஆலயத்தில் உவந்தே மகிழ்ந்தாடும்
வெள்ளிமன்ற வாணன் வீற்றிருக்கும் கூடல்நகர்!
பண்டை மதுரைப் பெருமை பலவுணரத்
தண்டமிழில் நூல்கள் சாலப் பலவுளவாம்
இந்நாள் மதுரை இயல்பு சிலவிங்கே
செந்நாப் புலவர்முன் செப்புதலும் ஏற்றிடுமோ!
ஆலைபல உண்டு அழகாய் மணம்கமழும்
சோலை பலவுண்டு; தூயதமிழ்க் கல்விச்
சாலை பலவுண்டு; சான்றோர் பணிபுரிபல்
கலைக்கழகம் காணக் கண்கள்பல வேண்டாவோ!
மருத்துவக் கல்லூரியும் மாண்பாரும் வேளாண்மை
பொருத்தமுறப் போதிக்கும் பொறியியற்கல் லூரியுமே
ஓங்கு மதுரைக்கிங் கொப்பாக வேறுண்டோ!
பாங்காய் உயர்நீதி பகர்ந்தே முறைசெய்யும்
நீதிமன்றம் கண்டிடலாம்; நீதிநெறி விளக்கம்போல்
ஓதுபல நூல்களெலாம் ஓர்ந்திருந்த அறிவுமகன்
காய்சினம் அற்றமகன் காலமெலாம் அன்புதரும்
தாய்மனம் கொண்டமகன் தண்ணருவிச் சொல்லுதிர்க்கும்
பல்லவத்துப் பாவலனும் பாங்குடைய நம்அண்ணு
கல்லார்க்கும் கற்றவர்க்கும் கண்ணுல் களிப்பருளும்
சிலையாக நிற்கின்றான்; சிந்தனையில் தேனிசையை
அலையாட வைக்கின்றான்; அகிலமெலாம் பாராட்டும்
அண்ணன் மனையபோல வானத்தை முத்தமிடும்
மன்னன் திருமலையான மண்டபமும் இங்குளதால்
முத்தமிழும் முத்தும் மொய்க்கும் மதுரைக்கே
இத்தரையில் ஈடாக எந்நகரும் இல்லையம்மா!

மதுரை நாயக்கர்கள் பட்டியல்

(1) விசுவநாத நாயக்கர்
(1529—1564)

(2) முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர்
(1564—1572)

(3) வீரப்ப நாயக்கர்
(1572—1595)

- (4) இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1595—1601)
- விசுவப்ப நாயக்கர்
- கஸ்தூரி ரங்கப்ப நாயக்கர்

(5) முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர்
(1601—1609)

- (6) முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் (1609—1623)
- (7) திருமலை நாயக்கர் (1623—1659)
- குமாரமுத்து நாயக்கர்

(8) இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர்
(1659)

(9) சொக்கநாத நாயக்கர்
(1659—1682)
(மனைவி மங்கம்மாள்)

(10) மூன்றும் முத்துவீரப்ப நாயக்கர்
(1682—1689)
(மனைவி முத்தம்மாள்)

(11) மங்கம்மாள்
(1689—1706)

(12) விஜயரங்க சொக்கநாத நாயக்கர்
(1706—1732)

(13) மீனாட்சி அரசி
(1732—1736)
(விஜயரங்க சொக்கநாதர் மனைவி)

மருந்தில் மலர்ந்த இலக்கியம்

கோவை இளஞ்சேரன்

குமார்

கொங்கு நாட்டில் ஈர்ந்தூர் என்றோர் ஊர் உண்டு. ஈரோட்டிற்கு அண்மையில் அமைந்த ஊர். இந்நாளில் ஈஞ்சூர் என வழங்கப்படுகின்றது. சங்க காலத்தில் அவ்வூர்த் தலைவன் ஒருவன் சிறந்து விளங்கினான். அவன் பெயர் தோயன்மாறன். அவனுக்கு அரியணை இல்லை. ஆனால், மக்களின் மன அணை உண்டு. பெருஞ் செல்வனும் அல்லன். ஆயினும் 'இல்லை' என வந்தோரை 'இல்லை' என விடுக்காதவன். கட்டான உடலுரமும், முட்டாத நெஞ்சுரமும் கொண்டவன்.

தன் மன்னனுக்குப் பகையால் இடையூறு நேரின் உடன் விரைந்து சென்று அவ்விடையூற்றைத் தன் இடையூறாக ஏற்று மன்னனது துன்பத்தினைத் தீர்த்தவன். தன் மன்னனுக்குத் துணையாக நாடு காவலுக்குச் செல்வான். நேரும் போர்களில் முன்னணித் தலைவனாக நின்று வெற்றி தேடித் தருவான். அவன் பங்கு பெறாத போர் இல்லை. அவன் உடலில் வேல் குத்தாத இடம் இல்லை. வாள் வெட்டாத இடம் இல்லை. அம்பு குத்தாத பகுதி இல்லை. இவையெல்லாம் அவன் முதுகைப் பதம் பார்த்தன அல்ல. இவ்வகையில் அவன் உடம்பினைச் சுவை காணா இரும்பு இல்லை. போர்க் காயங்களால் வடுவில்லாத தோல் பகுதியும் அவன் உடலில் இல்லை.

"தனிப்போரில் ஏற்றிடுங் காயம் (வெற்றித் திருமகள்) முத்தமிட்ட ளித்த முத்திரை"— என்றார் மனோன்மணீயம் ஆசிரியர். இவன் அத்தகைய முத்திரை வீரன். குழியும் கோடும் வாரும் கூறுமாகக் கண்டபடி அமைந்த அவ்வடுக்கள் அவ்வீர உடலுக்குத் தனி அழகாக விளங்கின. வடுக்களினால் "வடிந்த யாக்கையன்" என்று புகழப்பட்டான்.

நாடு காவலுக்குத் துணைநின்று உதவியமைக்காக மன்னன் செல்வம் வழங்குவான். போரில் தீரங்காட்டி வெற்றி ஈட்டித் தந்தமைக்காகப் பெரும் பரிசுகள் நல்குவான். அவ்வாறு பெற்றவற்றைக் கொண்டு வறிஞர்க்கும், புலவர்க்கும் பாணர்க்கும் வேண்டியன வழங்கியும், பசி நீக்கியும் "பாண் பசிப் பகைஞன்" என்று போற்றப்பட்டான்.

ஈகைத்துறையில் இவன் ஒரு படி மேலே சென்றவன். புலவர் முதலியோரது வறுமைப் பிணியைக் காணின் அதைத் தீர்க்கச் செல்வம் தேட முனைவான். வேலை வடிக்கும் கொல்லனிடம் ஓடுவான். "கொல்லனே! வறுமைப் பிணியாளர்க்கு உதவ வேண்டும்; வேலை வடித்துக் கொடு" என வேண்டுவான். பெற்ற வேலொடு நாடு காவலை நாடிச்சென்று பணிபுரிந்து செல்வம் பெற்று வந்து வறிஞர்தம் வறுமைப்பிணியைப் போக்குவான். இவன் பிறர்க்கென்றே முயன்று செல்வம் ஈட்டினான். இவன்பால் அடைந்த செல்வம் ஒப்புரவிற்கே பயன்பட்டது.

திருவள்ளுவப் பெருந்தகை இத்தகையோனைப் (ஒப்புரவு ஆற்றும் பெருந்தகவான எண்ணங் கொண்டவன்) பெருந்தகையாளன் என்றார்.

மரங்களில், மருந்து மரங்கள் உண்டு. அவை தம் வேர், பட்டை, இலை, பூ, காய், கனி, பால், பிசின் முதலியன மக்கள்தம் பிணிக்கு மருந்தாகப் பயன்படும். அத்தகு மரங்கள் மக்கள் காண முடியாத இடத்தில்—செல்ல முடியாத காட்டில் அமைந்தால் பயனில்லை. வேண்டுங்கால் விரைவாக உடன் பெறத்தக்க எளிதான இடத்தில்-ஊரின் நடுவே அமைதலே நலம். அத்தகு மரம் மக்களுக்குப் பயன்படுவதைத் திருவள்ளுவர் ஒப்புரவாளனும் பெருந்தகையாளனது செல்வத்திற்கு உவமையாக்கி

"மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்"—என்றார்.

இக் குறளின் கண்கண்ட இலக்கியமாய் விளங்கினான் ஈர்ந்தூர்த் தலைவன் தோயன்மாறன். இக் குறளில் கூறப்பட்ட உவமையின் கருத்தில் மட்டுமன்றிக் காட்சியிலும் இலக்கியமானவன் இவன்.

மரம் பிணிக்கு மருந்தாய் உதவுவது போன்று ஏழையர்க்கு உதவினான் என்ற கருத்தோடு, தோற்றத்திலும் மருந்து மரம் போன்று காட்சியளித்தான்.

மரத்தின் பாலை மருந்தாக்கக் கருவியால் குத்துவர். பால் வழிந்து பின் காய்ந்த இடம் குழியாக வடுப்பெறும். அதுபோன்று போரில் வேலால் குத்துண்ட தோயன்மாறன் உடலிலும் குழி வடுக்கள் காட்சியளித்தன. மரத்தின் பட்டையை மருந்தாக்கக் கருவியால் வெட்டிச் சீவி எடுத்த பின் அவ்விடம் காய்ந்து வடுப்பெறும். அதுபோன்று, போரில் வாளால் வெட்டுண்டு புண்பட்டுக் காயம் ஆறி, வார் வாரான வடுக்கள் மாறன் உடலில் காட்சியளித்தன. மருந்தெடுக்கப்படும் மரங்கள் பின்னர் சாறு பாலோ வடிவதால் காய்ந்து பிசினுக முடிச்சு முடிச்சாகத் தொங்கும். அதுபோன்று, மாறனது உடலிலும் வாள்வீச்சில் சரிந்த தோல்புண் ஆறி முண்டும் முடிச்சுமாகத் தொங்கிக் காட்சியளித்தது.

இவ்வாறுக ஈர்ந்தூர்க்கிழான் தோயன்மாறன் போர்ப்புண்களின் வடுக்களால் மருந்துகொள்ளப் பட்ட மரம்போலக் காட்சியளித்தான்.

மருந்து மரத்தில் குத்தி, சீவி, சரித்து, வெட்டக் கையாண்ட இரும்புக் கருவிகள் அம்மரச்சாற்றின் சுவை காணும். மாறன் உடலில் புண்ணை உண்டாக்கிய வேலும், வாளும், அம்பும் ஆகிய இரும்பு அவனது குருதிச் சுவை கண்டவை. அவ்வாறு இரும்புச் சுவைகண்ட விழுப்புண், நோய் தீர்ந்து ஆறி ஆறி வடுக்களாகக் காட்சியளித்தன. அப்புண்களை அவன் ஏற்றது ஒப்புரவு செய்வதற்காக. இவற்றோடு அவன் வடுக்களை நோக்குங்கால் அவை அவன் உடலுக்கு அழகாகத் தோன்றின. இந்நோக்கொடு பார்த்தார் மதுரைப் புலவர் குமரனார் என்பார். திருவள்ளுவர் கூறிய ''மருந்தாகித் தப்பா மரம்'' அவர் தம் நினைவில் ஓடிவந்தது. பாடினார் :

"இரும்புசுவைக் கொண்ட விழுப்புண் நோய்தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன், கொடையெதிர்ந்து
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்"

—என்று பாராட்டினார்.

வீரர், போரில் முகத்திலும், மார்பிலும், தோளிலும் பெறும் புண் விழுப்புண் எனப்படும். அப்புண்ணை நாள்தோறும் பெறுவதில் வீரருக்கு ஓர் உவப்பு. விழுப்புண் பெறும் நாள்தான் வாழ்நாள் எனக் கருதினர். விழுப்புண் படாத நாள் வழுக்கி வீணான நாள் என்று அந்நாளை எடுத்து வாழ்நாள்களில் ஒன்றாகக் கணக்கிடாமல் ஒதுக்கி விடுவாராம். இதனைத் திருவள்ளுவர்.

"விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து"—என்றார்.

வாழ்நாளுக்கு அழகு செய்யும் அவ்விழுப்புண்ணின் முத்திரைகளாம் வடுக்கள் வீரர் உடலுக்கு அழகு ஊட்டுவன.

ஒரு வீரன் பேசினான் :

'என் உடலைப் பார்; என் பாட்டன், தந்தை, தமையன், மாமன், மைத்துனன், தனயன், மருகன் முதலிய என் உறவினரது உடல்களைப் பார். போர்ப் புண்களின் வடுப்பெற்றவர் அவர் ;'

''பால்கொண்ட அத்தி எனவே உடல்வடுப் பட்ட எமர்''—என்று அவனைப் பேசவைத்தது திருவெங்கைக்கோவை என்னும் நூல்.

பொதுவாக மருந்து கொள்ளப்பட்ட மரத்தை உவமையாகக் காட்டியதை முன்னர்க் கண்டோம். இங்குச் சிறப்பாக அத்திமரத்தைக் குறித்து, அதனினும் குத்தியெடுத்த பாலைக் குறித்து, காய்ந்த வடுவைக் குறித்து விளக்கமாக்கி உவமை காட்டியதைக் காண்கிறோம்.

ஒரு பொருளின் தொழில், பயன், வடிவம், நிறம் ஆகியவற்றை விளக்கமாகக் காட்ட, ஒத்த மற்றொரு உயர்ந்த பொருளை உவமையாகக் கூறுதல் மரபு. உவமை காட்டுவது செய்யுள் அழகுக்கு மட்டுமன்று. உவமிக்கப்படும் பொருளின் உள் தன்மை, உணவு, சிறப்பு விளைவு முதலியவற்றின் விரிவுகளையெல்லாம் வெளிப்படுத்திக் காட்டவே உவமை பயன்படும். உவமையாகக் கூறப்படும் பொருளின் தன்மைகள் எல்லாம் உவமிக்கப்படும் பொருளிலும் பொருந்திக் காண வேண்டும் என்பதில்லை. காணுவதற்கு இடம் இருப்பின் இடம் கொடுக்கும் வழியெல்லாம் காணுவதே சிறப்பு.

பவளம் போன்ற இதழ் என்றால் பவளத்தின் செம்மை நிறம் மட்டில் இதழுக்குப் பொருந்தும். முள்முருக்கை மலர் போன்ற இதழ் என்றால் அம்மலரின் செம்மை நிறமும், மென்மையும் பொருந்தும். கொவ்வைக் கனி போன்ற இதழ் என்றால் அக்கனியின் செம்மை நிறமும், மென்மையும், வடிவும், திரட்சியும், உள் நரம்போட்டமும் பொருந்தும். மேலும் பொருத்தம் காண எண்ணி இதழைப் பிளந்து விதை இருக்குமோ எனக் காணுவதோ?

எனவே, உவமையில் உற்ற தன்மைகளை விரிவாக உணர்ந்து அத்தன்மைகள் எவ்வளவில் உவமிக்கப்படும் பொருளுக்கும் உற்றனவாக ஒத்து வருகின்றனவோ அவ்வளவில் பொருளின் சிறப்பு

இயல்புகளை உணரலாம். இதற்குத் தொல்காப்பியம்,

''உவமைப் பொருளின் உற்ற துணரும்
தெளிமருங் கிலவே திறத்திய லான''—என இடம் வகிக்கின்றது. இதனை விளக்கும் பேராசியர் என்னும் உரையாசிரியர், உவமை கூறுவோர் உவமையின் ''பகுதி பலவும் உணராமற் சொல்லிய வழியும் அ·து உணரவரும் என்பது கருத்து'' என்று உரை வகுத்தார். எனவே, விரிவாக உணர விரும்புவோர் உவமை கூறியவர் கருதிக் கூறாத கருத்துக்களும் பொருந்திவருமாயின் கொள்ளலாம். அவ்வழியில் இங்கு அத்திமர உவமையைக் காணலாம்.

அத்திமரம்—வீரர் உடல்.
குத்திய ஆணி—பாய்ந்த வேல்.
வடிந்த பால்—வழிந்த குருதி.
மரச்சிதைவு—குழிப்புண்.
காய்ந்த இடம்—ஆறித் தோன்றிய வடு.

இவ்வாறு நேருக்கு நேர் உவமையை விரித்துப் பொருத்திக் காண்பது போன்று நேருக்கு நேர் அன்றி, உள்ளீடான கருத்துக்களையும் விரித்துப் பொருத்தலாம்.

அத்திமரத்துப் பாலால் பாதரசத்தைச் சாம்பல் தூள்போன்று ஆக்கலாம். வேல் பாய்ந்து குருதியால் கிளர்ந்தெழுந்த வீரனது வீர உணர்வு பகைவரது தாக்குதலாம் பாதரசத்தைத் தூசித் தூளாய் முறியடித்ததாக விரிவாக்கலாம். இங்கே அத்திப்பால் நேரே பாதரசத்தோடு கலந்து தூசி யாக்கியமை போன்று குருதி நேரே பகைவருடன் கலந்து தாக்கியதாகக் கொள்ள முடியாது. இது நேர் பொருத்தமன்று. குருதி வெளிப்பாட்டின் விளைவால் நேர்ந்த விளைவுப் பொருத்தம்.

அத்திப்பால் பலவகைப் பிணிகளைப் போக்க வல்லது. இதனை மருத்துவ நூல்கள் குறிக்கின்றன. அதுபோன்று குருதி வெளிப்பாட்டில் வீரம் பொங்கி விளைந்து, வெற்றி தந்து அவ்வெற்றியால் மன்னனது மனக்கவலையாம் பிணியைப் போக்கும் ; மக்கள்தம் அடிமையாம் பிணியைப் போக்கும்.

இவ்வழியில் தோயன்மாறன் விழுப்புண் வடுக்களைக் கொண்ட உடம்பிற்குக் காட்டப்பட்ட உவமையாகிய மருந்து கொள்ளப்பட்ட மரத்தின் தன்மைகளை விரிவாகக் காணலாம். கண்டு, மாறனது சிறப்பியல்புகளின் பயன்களை விரிவாக உணரலாம்.

இதனால் இரண்டு பயன்கள் விளையும். ஒன்று மருத்துவப் பயன்; மற்றொன்று இலக்கியப் பயன்.

மருந்துக்குப் பயன்படும் மரங்கள் பல. அவை மக்களுக்குத் தப்பாமல் எளிதாகக் கிடைத்தலே நலம். இந்நாளிலும் எளிதாகக் கிடைக்கும் மரங்கள் ஒதி, பூவரசு, நாவல், இலந்தை, மா, வேம்பு, இலுப்பை, புன்னை, அகத்தி முதலியன.

முற்காலத்தில் இம்மரங்கள் தனியாரது உடைமைகளாக இல்லை. பொதுப்பொருள்களாக இருந்தன. நோய் யாவருக்கும் பொதுவுடைமையாக இருப்பது போன்று மருந்துகளும் பொதுவுடைமைப் பொருள்களாக இருந்தன.

6ள

இந்நாளிலும் இவற்றில் சில மரங்கள் பொதுமக்கள் பயன்கொள்ளும் பொதுவுடைமைகளாக உள்ளன. இவற்றின் உறுப்புகள் பலவும் மருந்துக்குப் பயன்படுவன. ஆயினும், அவை ஒவ்வொன்றையும் விரித்துப் பயன் காண்பது மிக அகலமாகிவிடும்.

எனவே, இவற்றினது உறுப்புக்களில் மிகுதியும் பயன் நல்கும் பட்டைகளின் தன்மைகளை விரித்துக் காணலாம். அப்பட்டைகளின் எல்லாவகைப் பயன்களையும் முற்றக் காண இயலாது. பட்டையை மட்டும் தனித்துப் பயன்கொள்ளும் முறைகளை மட்டும் விரிவாக்கலாம். அவ்விரிவை மாறனுடன் பொருத்தி அவனது சிறப்பியல்புகளால் விளைந்தவற்றையும் உணரலாம். அவ்வுணர்வால் பல பொதுமைக் கருத்துக்கள் வெளியாகும்.

ஒதிய மரம்

'ஒதி பருத்தால் உத்திரத்திற்கும் உதவாது' என்பர். ஆனால், மரம் பருத்துப் பலகையாக்கினால் அப்பலகையில் படுத்தல் உடலுக்கு நலம் தரும்.

ஒதியம்பட்டையை இடித்து அப்படியே பெரிய வீக்கத்திற்குக் கட்டினால் கெட்டநீரை வாங்கி வீக்கத்தை வடியச் செய்யும். இதனை 'மருத்துவக் குறள்' என்னும் நூல்,

''ஒதியம்பட்டை யிடித்து வீக்கத்திற் கட்டித்
திதிசெய் வதாற்கடி வார்''—என்று குறிக்கிறது. பட்டையின் சாற்றைப் பாலில் அளவோடு அருந்திவரப் 'பெரும்பாடு' என்னும் நோய் அரும்பாடுபட்டு அழியும். ஆண்களுக்கு விந்து கசிவதைத் தடுத்துவீரியத்தை உண்டாக்கும்.

ஒதிய வேரின் பட்டையை எடுத்து நீரிலிட்டுக் கறுக்கு நீராக்கி அந்நீரால் புரையோடிய புண்களைக் கழுவக் கழுவுநீராகப் (Lotion) பயன் கொள்ளின் புண் அழுகலைப் போக்கும். அந்நீரால் பல்வலி, வாய்ப்புண், நாப்புண் ஆகியவற்றிற்குக் கொப்பளிக்கப் புண் ஆறும்.

இவ்வாறு ஒதியம்பட்டைச் சாற்றின் விளைவு, வீக்கம் போக்கி பெரும்பாட்டை நூக்கி, விந்தைத் தேக்கி, புரையோட்டத்தைத் தாக்கி, புண்களை நீக்குவது போன்ற, மாறனது வடுக்களின் வீர விளைவும், விளைவால் நேர்ந்த செல்வமும் வறுமை வீக்கத்தைப் போக்கி பகைவரின் பெரும் படையை நூக்கி, வீரத்தைத் தேக்கி, துன்பமாம் ஊடுருவலைத் தாக்கி மனப்புண்களை நீக்கினவாகக் கொள்ளலாம்.

பூவரசு

நூறாண்டு முற்றிய பூவரசின் பட்டை, பெரும் பயன் நல்கும் மருந்து. இப்பட்டையின் சாற்றால் பழுத்த புண்ணைக் கழுவப் புண் ஆறும். காணாக் கடிநஞ்சுக்கு ஒருவாய் ஒருவாயாக மூன்று வாய்ச் சாறு கொடுக்க நஞ்சுக்கொடுமை தீரும். சோகையால் பெருவயிறு வீக்கத்திற்குத் தொடர்ந்து ஒரு வாரம் ஒவ்வொரு வாய் கொடுத்துவர நோய் நொடியும். இம்மரப்பட்டையின் பயன்பற்றி அகத்தியர் குணபாடம்,

மதுரையைக் குறிக்கும் அறிஞர்களும் நூல்களும்

அல்பருனியின் குறிப்பு (அரேபியர்)	மகாவமிசம் (இலங்கை வரலாற்று நூல்)
கால்டுவெல் குறிப்பு	மதுராவிஜயம் (வடமொழி)
கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரம்	மார்கோ போலா குறிப்புகள்
சியாமளா தண்டகம் (வடமொழி)	மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா
தாலமியின் பூகோளநூல் (கி.பி. 140)	வாசப் எழுதிய குறிப்பு (முகமதிய பயணி)
பாரசிக-சீனப் பயணிகளின் குறிப்பு	வியாசரின் மகாபாரதம்
பிளினியின் குறிப்பு (கி.பி. 77)	ஸ்ட்ராபோவின் குறிப்பு (கி.பி. 20)
புரொன்யசா பாதிரியார் கடிதங்கள்	ஸ்காந்த புராண அகத்திய சம்ஹிதை
பெரிப்ளஸ் எழுதிய எரித்ரியன் கடல்	ஹாலாஸ்ய மகாத்மியம்

காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கலைமிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அவைகளுடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாசுவதம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது கலைமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரிக்கைக்குரிய 'அச்சு ஏடு' ஆராய்ச்சியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா



அகத்திப்பட்டையால் கறுக்கு நீரிட்டுக் குடிக்க அம்மைக் காய்ச்சல் குறையும்; நச்சுக்காய்ச்சல் பரவாது.

இவைபோன்று, மாறனது சிறப்பியல்புகள் பொதுமக்களது பல்வகைத் துன்பத்திற்கும் துணையாய்ப் பூசற்புழுக்களைக் கொல்லுவதாய், நற்பாதுகாப்பாக விளங்கின எனக் கருத முடிகிறது.

இத்தகைய பெரும்பயன் நல்கும் மருந்து மரங்களைப் பொதுமக்களும், மன்னரும், பகைவருங்கூடப் பாதுகாத்தனர். அளவோடு அவற்றைப் பயன்படுத்தினர். பட்டையை மரத்தின் அளவிற்கேற்பச் செதுக்கி எடுத்தனர். அதிகம் வேண்டுமென்று பட்டையை அடியோடு உரிக்கமாட்டார்கள். நன்கு தழைத்து வளருமாறு போற்றினர்.

அறிவுடையார் அப்போதைய நலன் கருதி, எப்போதும் நலம்பயக்கும் ஆக்கங்களை அழிக்கமாட்டார் என்பனவற்றைப் பட்டியலிட்டார் கணியன் பூங்குன்றனர். பட்டியலில் "உயிரைக் காக்கவேண்டிய இன்றியமையாத நிலையில் பயன்படும் மருந்தாயினும் அம்மருந்தைக்கொண்ட மரம் பட்டுப்போகும்படி அதன் உறுப்புகளைக் கொள்ள மாட்டார்கள் மக்கள்" என்று முதலில் குறித்துத் தொடர்ந்து "உடல் உரம் கெடும் அளவில் உயர்ந்த தவமானலும் செய்யார்" என்றும், "மக்களது வளங்கெடும் அளவில் இறைக்கடனுகப் பொன்னை மன்னர் கொள்ளார்" என்றும் எழுதினர்.

"மரஞ்சாம் மருந்துங் கொள்ளார் மாந்தர்;
உரஞ்சாச் செய்யார் உயர்தவம்; வளங்கெடப்
பொன்னுங் கொள்ளார் மன்னர்...."

என்னும் இப்பாடல் நற்றிணையில் உளது.

"ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்"

என்கிறது திருக்குறள்.

ஒரு சிறு நன்மைக்காக மற்றொரு பெரு நன்மையை அழித்த ஒரு செய்திக்கு உவமை கூற எழுந்தை பெருங்கதை ஆசிரியர் கொங்குவேளிர் என்பார்.

"மரமுதல் சாய மருந்து கொண்டாங்கு"— என்று மரத்தின் வேர் மருந்துக்கு வேண்டுமென்று அடியோடு தோண்டி அடிமரத்தையே சாய்ப்பதாகிய திமையைக் காட்டினர்.

இவ்வகையிலும் மருந்துமர உவமையைப் பொருத்தி விரித்தால் மாறன், மக்களாலும் மன்னராலும் ஏன் பகைவராலும் போற்றப்பட்டமை வெளிப்படும். அவன் மன்னர்க்கும் மக்கட்கும் நிலைத்த பாதுகாப்பானவன். அதனல் அவனுக்கு இடையூறு— துன்பம் நேராமல் போற்றினர். பகைவர்களும் இவனுடன் போர் செய்வதிற் பெருமை கொண்டவராய் அவனுக்கு வீணை இடையூறுகளை ஏற்படுத்தாமற் போயிருப்பர் என்ற கருத்தையும் காணலாம்.

தோயன்மாறனைக் கொண்டு விளக்கியமை அவனை ஒரு சான்ருகக் கொண்டு அக்கால நன்மக்களது தன்மைகளையும் அவர்கள் ஒப்புரவு ஆற்றுவதில் வாழ்க்கையை ஊன்றியிருந்ததையும் எடுத்துக்காட்டும் நோக்கைக் கொண்டதே இக் கட்டுரை.

இவ்விளக்கக் கட்டுரையால்,

1. இயற்கை மூலிகை மருந்துகள் அந்நாளில் பெரிதும் நடைமுறையில் இருந்தன;

2. அம் மருந்துகளும் பொதுவுடைமைகளாக அமைந்திருந்தன;

3. மக்களும் தம் கடமையறிந்து பயன் கொண்டு ஒழுகினர்;

4. வீரர் பெரும் இடையூற்றையும் ஏற்று மக்களுக்கு உதவினர்:

5. ஒப்புரவினலேயே உலகம் மிளிர்ந்தது;

6. தமக்கென முயலா நோன்ருள் பிறர்க்கென முயலுநர் உண்மையான் உலகம் உண்டு என்பனவற்றை அறியலாம்.

மருந்து மர உவமையால் இத்துணை கருத்துக்களும் இலக்கியப் பாங்கில் மலர்ந்தமை கொண்டு மருந்து மரத்தில் மலர்ந்த இலக்கியமாக இதனைக் கொள்ளலாம்.

அதனல், மருந்தில் மலர்ந்த இலக்கியம் இது.

மூன்று சங்கங்களிலும் மொத்தம் நூற்றுத் தொண்ணூற்றேழு பாண்டிய மன்னர்கள் இருந்ததாக 'இறையனர் அகப்பொருள் உரை' குறிக்கிறது. ஆனல் இதுகாறும் கீழ்க்கண்ட மன்னர்களின் பெயர்களே தெரியவருகின்றன.

சங்ககாலப் பாண்டிய மன்னர்கள்

அண்டர் மகன் குறுவழுதியார்
அறிவுடை நம்பி
ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன்
ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி
கடுங்கோன்
கருங்கை யொள்வாட் பெரும் பெயர் வழுதி
காய்சின வழுதி
கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெரு வழுதி
கீரஞ்சாத்தன்
குறுவழுதியார்
கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி
சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்
தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
நிலந்தரு திருவிற் பாண்டியன்
நெடுஞ்செழியன்
பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி
பன்னாடு தந்த பாண்டியன்
பூதப்பாண்டியன்
முடத்திருமாறன்

ன்ற பாண்டியன்
வெண்டேர்ச் செழியன்
வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி
வெற்றிவேற் செழியன்

முற்காலப் பாண்டியர்கள்

கடுங்கோன், 590—620
மாறவர்மன் அவனி சூளாமணி, 620—645
சடையவர்மன் செழியன் சேந்தன், 645—670
அரிகேசரி மாறவர்மன், 670—700
கோச்சடையன் இரணதீரன் 700—730
முதலாம் மாறவர்மன் இராசசிம்மன், 730—765
பராந்தக நெடுஞ்சடையன், 756—815
சீமாறன் சீவல்லபன் 815—862
இரண்டாம் வரகுண வர்மன் 862—865
பராந்தக வீரநாராயணன் 860—905

கி.பி. 900 முதல் கி.பி. 1190 வரையில் ஆண்ட பாண்டியர்கள்

மூன்றும் இராசசிம்ம பாண்டியன், 900—920
வீரபாண்டியன்
அமர புயங்கன்
மானுபரணன்
வீர கேரள பாண்டியன்
சுந்தர பாண்டியன்
விக்கிரம பாண்டியன்
சீவல்லப பாண்டியன்
பாண்டியன் வீரகேசரி
சடையவர்மன் சீவல்லபன்
மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியன்
சடையவர்மன் பராந்தக பாண்டியன்
மாறவர்மன் சீவல்லபன் 1132—1162
சடையவர்மன் குலசேகரபாண்டியன் 1162—1175
சடையவர்மன் வீரபாண்டியன், 1175—1180
மாறவர்மன் விக்கிரம பாண்டியன், 1180—1190

கி.பி. 1190 முதல் கி.பி.1310 முடிய ஆட்சி புரிந்த பாண்டியர்கள்

முதல் சடையவர்மன் குலசேகரபாண்டியன், கி.பி.1190—1218
முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன், 1216—1238
இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன், 1238—1245

1239—1251

முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன், 1251—1270

சடையவர்மன் வீரபாண்டியன், 1253—1276

சடையவர்மன் விக்கிரம பாண்டியன்

முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன், 1268—1312

சடையவர்மன் சுந்தர பாண்டியன் 1276—1293

மாறவர்மன் விக்கிரமபாண்டியன், 1268—1281

ஜடாவர்மன் வீரபாண்டியன், 1296

கி.பி. 1310-ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆட்சி புரிந்த பாண்டியர்கள்

சடையவர்மன் வீரபாண்டியன், கி.பி. 1296—1342

சடையவர்மன் சுந்தரபாண்டியன், கி.பி. 1303—1319

மாறவர்மன் குலசேகர பாண்டியன், கி.பி. 1314—1346

சடையவர்மன், கி.பி. 1323

பராக்கிரம பாண்டியன், கி.பி. 1315—1347

மாறவர்மன் வீரபாண்டியன், கி.பி. 1334—1380

மாறவர்மன் பராக்கிரம பாண்டியன், கி.பி. 1335—1352

பிற்காலப் பாண்டியர்கள்

பராக்கிரம பாண்டியன் (திருக்குற்றாலத்தில் திருப்பணி புரிந்தவன்), கி.பி. 1387

பராக்கிரம பாண்டியன், கி.பி. 1384—1415

பராக்கிரம பாண்டியன், கி.பி. 1401—1434

சடையவர்மன் குலசேகரன், கி.பி. 1395

சடையவர்மன் விக்கிரம பாண்டியன், 1401—1422

சடையவர்மன் பராக்கிரம பாண்டியன், கி.பி. 1411—1463

சடையவர்மன் குலசேகர பாண்டியன், கி.பி. 1429—1473

அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன், கி.பி. 1473—1506

சடையவர்மன் சீவல்லப பாண்டியன், கி.பி. 1534—1543

சடையவர்மன் பராக்கிரம குலசேகர பாண்டியன், கி.பி. 1543—1552

நெல்வேலி மாறன், கி.பி. 1552—1564

சடையவர்மன் அதிவீரராம பாண்டியன்; கி.பி. 1564—1604

வரதுங்கராம பாண்டியன், கி.பி. 1588

வரகுணராம குலசேகர பாண்டியன், கி.பி. 1613

இருதய நோய் வராமலிருப்பதற்கு வழி என்ன ?

"இருபத்திரண்டு வயதுக்குப் பின் உடம்பு ஒரு பவுண்டு கூடப் பருமனாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

"புகை பிடிக்கக்கூடாது.

"வாழ்க்கை முழுவதும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்."

இவைதான் உலகப் புகழ் பெற்ற இருதய நிபுணர் டாக்டர் டட்லி ஒயிட் கூறும் யோசனைகள்.

எண்பத்து நாலு வயதுடைய இந்த டாக்டருக்கும் ஒரு முறை மாரடைப்பு ஏற்பட்டு, சுகமடைந்துள்ளார். ஆயினும் இந்தத் தள்ளாத வயதில் கூட இவர் சைக்கிள் விடுகிறார்.

"உடலுக்கு நாள் தோறும் தேகப் பயிற்சி தேவை. காலாற நடக்கலாம். மாடிக்குப் போக வேண்டுமானால் படி ஏறிச் செல்லுங்கள். மின் தூக்கியைப் (லிப்ட்) பயன்படுத்த வேண்டாம்" — என்கிறார் டாக்டர் ஒயிட்.

"உடல் நலமுள்ள மனிதனை எந்தக் கடினமான உழைப்பும் கொல்லுவதில்லை" என்பதுதான் இவரது மருத்துவ சித்தாந்தம்.

மதுரையைக் குறிக்கும் தமிழ் இலக்கியங்கள்

அகநானூறு
அழகர் அந்தாதி
அழகர் கிள்ளைவிடுதூது
இறையனார் அகப்பொருள் உரை
ஔவையார் தனிப்பாடல்கள்
கல்லாடம்
கலித்தொகை
கலிங்கத்துப்பரணி
கந்தபுராணம்
கந்தர் கலி வெண்பா
கம்பர் தனிப்பாடல்கள்
காளமேகப்புலவர் பாடல்கள்
கூடற்பள்ளு
கோடீச்சுரக் கோவை
சங்கர சோழனுலா
சிலப்பதிகாரம்
சிறுபாணாற்றுப்படை
சொக்கநாத வெண்பா
தக்கயாகப் பரணி
தமிழ்ச்சங்க மான்மியம்
தமிழ்விடு தூது
திருக்குற்றாலக் குறவஞ்சி
திருக்கோவையார்
திருமுகப் பாசுரம்
திருமுருகாற்றுப்படை
திருவாலவாயுடையார் கோயில் திருப்பணிமாலை
திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
திருவாசகம்
தேவாரம்
தேவையுலா
பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணம்
பரிபாடல்
பரிபாடல் திரட்டு
பாண்டிக் கோவை
பாண்டிமண்டல சதகம்
புகழேந்திப்புலவர் பாடல்கள்
புறநானூறு
புறத்திரட்டு (ஆசிரிய மாலை)
பெரிய புராணம்
நற்றிணை
நந்திக் கலம்பகம்
நாரைவிடுதூது (காளிமுத்துப் புலவர் பாடியது)
நாலாயிரத் திவ்ய பிரபந்தம்
நெடுநல் வாடை
மதுரைக்கலம்பகம்
மதுரைக் கா
மதுரைத் தலபுராணம்
மதுரைத் திருப்பணி மாலை
மதுரைத் தேவாரம்
மதுரை மான்மியம்
மதுரை மும்மணிக்கோவை
மதுரை யமக அந்தாதி
மணிமேகலை
முக்கூடற்பள்ளு
முத்தொள்ளாயிரம்
மூவருலா
மீனாட்சியம்மை இரட்டை மணி மாலை
மீனாட்சியம்மை குறம்
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
யாப்பருங்கலக் காரிகை
யாப்பருங் கல விருத்தி
வண்டுவிடு தூது (கடிகைமுத்துப் புலவர்)

கேளுங்கள் கொடுக்கப்படும்!

அரைக் காணி நிலத்தில் கார்த்திகைச் சம்பா நெல் பயிரிட்டு அதற்கு பாரி உரம் 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை போட்டேன். சோலைகள் அதிகமாக வளர்ந்து நெல்மணிகள் சலசல வென இருந்தன. அறுவடை செய்ததில் 8 மூட்டைகள் தான் கிடைத்தன. மகசூலை அதிகரிக்க வழி என்ன ?

—கா. பொ. இளங்கோ,
நெடிமோழியனூர்.

சோலைகள் அதிகமாக வளர்ந்து நெல்மணிகள் சலசலவென இருந்தாலே, தங்கள் நிலத்திற்குத் தேவையான அளவு மணிச்சத்தையும், சாம்பல் சத்தையும் அளிக்கவில்லை என்பது புலனுகிறது. தழைச்சத்து மிகுதியாக இருக்கும்போதுதான் சோலைகள் அதிகமாக வளர்ந்து நெல் மணிகள் சலசலவென இருப்பதுடன், மகசூலும் மிகவும் குறைந்துவிடும். பொதுவாகக் கார்த்திகைச் சம்பா நெல்லிற்கு 13 கிலோ தழைச் சத்து 14 கிலோ மணிச்சத்து, 7 கிலோ சாம்பல் சத்துகளை அடி உரமாக இடவேண்டும். அந்தச் சத்துக்கள் கிடைக்க 65 கிலோ அமோனியம் சல்பேட், அல்லது 28 கிலோ யூரியா, 90 கிலோ சூப்பர் பாஸ்பேட் 11 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களை அடி உரமாக அளித்திருக்க வேண்டும். அதன் பின் நடவு நட்ட 30-வது நாள் 8 கிலோ தழைச் சத்தை மேலுரமாக இடவேண்டும். அச்சத்துக் கிடைப்பதற்கு 40 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 17கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். ஆனல் நீங்கள் 100 கிலோ பாரி உரம் மட்டுமே அளித்துள்ளீர்கள். தாங்கள் கார்த்திகைச் சம்பாவிற்குத் தேவையான அளவு சத்துக்களை அளிக்கவில்லை. எனவே தான் உங்கள் மகசூல் குறைந்துவிட்டது.

உங்கள் நிலத்தின் மண் மாதிரி எடுத்துப் பரிசோதனை செய்து அதன் முடிவில் கண்டபடி தங்கள் வயலுக்கு உரமிடுவதே மகசூலை அதிகரிப்பதற்கு உள்ள வழியாகும். மண் மாதிரி எடுத்துப் பரிசோதனை செய்ய உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரை அணுகுங்கள்

நான் 1934-ஆம் ஆண்டிலிருந்து எனக்குச் சொந்தமான பூமியை அனுபவித்து வருகிறேன். அது கண்டிசன் பட்டா. நிலவள வங்கியில் பம்பு செட் வைக்கக் கடன் கேட்டேன். கொடுக்க மறுக்கிறார்கள். காரணம் கண்டிசன் பட்டா என்று. கண்டிசன் பட்டாவை சுதந்திரப் பட்டாவாக மாற்ற முடியாதா ? நான் ஒரு அரிசனன். நான் பம்பு செட் வைக்க முடியாதா ? யாரை அணுகுவது ?

—சின்னப்பன், கோபி.

பொதுவாக கண்டிசன்பட்டாவுக்கு எந்தவிதக் கடனும் கொடுக்கமாட்டார்கள். கண்டிசன் பட்டாவைச் சுதந்திர பட்டாவாக மாற்ற உங்கள் மாவட்ட நல அலுவலருக்கு(D.W.O.) விண்ணப்பித்துப் பார்க்கவும். வேறு ஏதேனும் பட்டா நிலம் இருந்தால் அதை ஈடுகாட்டிக் கடன் வாங்க முடியும்.

எனது தோட்டத்தில் தென்னை மரங்கள் இருக்கின்றன. சரியான காய்ப்பு இல்லை. மரம் 50 அடி உயரம் இருக்கின்றது. ஒரு மரத்திற்கு எவ்வளவு உரம் இடவேண்டும் ? என்னென்ன உரம் இட வேண்டும் ? மரம் நட்டு 25 வருட காலம் ஆகிறது. சில மரங்கள் அடி பெருத்து நுனி சிறுத்துப் போகிறது. பசுமையாக இருக்கிறது. 20 அடி உயரம் இருக்கிறது. பாளை சிறுத்துக் காணப்படுகிறது. குரும்பை இருக்கிறது. ஆனல் கொட்டி விடுகிறது. காய்ப்பு இல்லை. இதற்கு எந்த எரு இட வேண்டும் ?

—எம். ஹாஜி முகம்மது,
அரங்கக்குடி.

தென்னை மரங்களில் சரியான காய்ப்பு இல்லாமலிருப்பதற்கும், பாளை சிறுத்து இருப்பதற்கும், குரும்பைகள் கொட்டி விடுவதற்கும் சரியான உரமிடாமையே முக்கிய காரணமாகும். அதிகமான காய்கள் காய்ப்பதற்கும் சிறு பிஞ்சுகள் உதிரா வண்ணம் இருப்பதற்கும் தென்னை மரங்களுக்குத் தேவையான அளவு இரசாயன உரமும், தண்ணீரும் அளிக்க வேண்டும். 10 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு தென்னை மரத்திற்கும் ஓர் ஆண்டுக்கு 3 கிலோ அமோனிய சல்பேட், 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ், ஆகியவைகளை இட வேண்டும். அல்லது 3-ஆம் எண் கலப்பு உரம் (6 : 6 : 12) வாங்கி ஒவ்வொரு மரத்திற்கும் 5 கிலோ வீதம் இடவேண்டும். தென்னை மரத்திலிருந்து 4 அடி தூரம் தள்ளி மரத்தைச் சுற்றி அரைவட்டமாக 1 அடி ஆழமும், 1 அடி அகலமும் உள்ள கிடங்கு தோண்டி, அதில் மேற்படி இரசாயன உரங்களையும் 50 கிலோ பசுந்தழை அல்லது கம்போஸ்ட் எருவையும் கலந்து போட்டு மூடிவிட வேண்டும். உரமிடுவதை அதிக மழைக்குப் பின்னிடுவது சிறந்தது. உரமிடச் சிறப்பாக ஐப்பசி-கார்த்திகை மாதம் ஏற்றது. இவ்வாறு ஆண்டிற்கு ஒரு முறை இரசாயன உரமிட்டு வந்தால், தென்னை மரங்கள் நன்கு காய்க்கும். கோடைக் காலங்களில் தென்னை மரங்களுக்கு நீர் பாய்ச்சினல் உரமிடுவதின் பலன் பெருகும்.

கோதுமை பயிர் செய்ய நான் விரும்புகின்றேன். விதை எங்கிருந்து பெற்றுக்கொள்ளலாம் ?

—டி. எம். செல்லப்பன், தக்கலை.

உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரைக் கேட்டால் அவர் தங்கள் பகுதிக்கு ஏற்ற கோதுமை [redacted] வழைத்துக் கொடுக்க ஆவன செய்வார். அல்லது சமவெளிப் பகுதியில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற கட்டைக்கோதுமை ரகங்களை கோவை வேளாண்மைக் கல்லூரியில் உள்ள சிறு தானிய நிபுணர் அவர்களுக்கு எழுதியும் பெற்றுக் கொள்ளலாம். ஆனல் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதுமை பயிரிடலாமா அதற்குரிய கால நிலை என்ன என்பதையெல்லாம் தெரிந்து கொண்ட பின் கோதுமைச் சாகுபடி செய்ய முயலுங்கள். இதுபற்றி உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரைக் கலந்தாலோசித்த பின்பு, கோதுமைச் சாகுபடியில் ஈடுபட முயலுவதே நல்லது.

எங்களுடைய, கல்லூரியைச் சுற்றியுள்ள இடத்தில் சுமார் ஒரு ஏக்கர் அளவில் சில காய்கறி வகைகள், சில புன்செய் பயிர்கள் செய்ய முயற்சிக்கிறோம். எங்களுடைய இம்முயற்சியில் பொறுக்கு விதை, மருந்து, பூச்சிக் கொல்லி முதலியவைகளில் அரசு எங்களுக்கு ஏதாவது உதவி, சலுகை தருகிறதா ?

—மாணவர்கள், திரு இருதயக்
கிருத்துவக் கல்லூரி, பூவை.

தமிழ்நாடு அரசு காய்கறி விதைகளைப் பாதி விலையிலும், பூச்சி பூஞ்சாள மருந்துகளை 15 சத தள்ளுபடி விலையிலும் வழங்கி வருகிறது. பொறுக்கு விதைகளையும் பூச்சி பூஞ்சாள மருந்துகளையும் கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

'' துணைவேளாண்மை இயக்குநர் (காய்கறி) 5/13, எல்டாம்ஸ் ரோடு, சென்னை -6

நில அடமானத்தின் பேரில் நிலங்களைச் சீர்திருத்தவும், வேளாண்மை அபிவிருத்திக்கும் உழவருக்கு உதவும பொருட்டும் நில அடமான வங்கிகள் கொடுத்து வந்த கடன் இப்போது நிறுத்தப்பட்டது என்று சிலர் கூறுகிறார்கள். அது கொடுக்கப்பட்டால் கடன் தொல்லையால் அவதிப்படும் உழவர் பெருமக்களுக்கு நன்மையாக இருக்கும். ஆதலால் தற்பொழுது அது கொடுக்கப்படுகிறதா என்ற முழு விவரத்தையும் தெரிவிக்கவும்.

—பெ. வேளாண்மை நம்பி,
எடமேலையூர்.

நில அடமான வங்கிகளை நில வள வங்கிகளாகமாற்றி நிலங்களை மேம்படுத்துவதற்குப் பெருமளவில் உதவி செய்து வருகிறது தமிழ்நாடு அரசு. தற்பொழுது நிலவள வங்கிகள் புதிய கிணறுகள் தோண்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும், பம்புசெட்டுகள் அமைக்கவும், நிலத் திருத்தம் செய்யவும் டிராக்டர் போன்ற இயந்திரங்களை வாங்கவும் கடன்கொடுத்து வருகின்றது.

பழைய கடன்களை அடைப்பதற்கு நில அடமான வங்கிகள் கடன் கொடுத்து வந்ததை, நில வள வங்கிகள் நிறுத்தி விட்டன.

கேளுங்கள் கொடுக்கப்படும் பகுதியில், விசைத்துளைக் கருவி என்ற பயனுள்ள செய்தி வெளியாகியிருந்ததைக் கண்டேன். விசைத்துளைக் கருவி வாடகைக்குப் பெற இராமநாதபுரம் மாவட்டத்தில் யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்?

—எஸ். சங்கையா,
ஜமீன் நத்தம்பட்டி.

இராமநாதபுரம் மாவட்ட உழவர் பெருமக்கள் விசைத்துளைக் கருவியை வாடகைக்குப் பெற, கீழ்க்கண்ட அலுவலருக்கு மனுச்செய்துகொள்ள வேண்டும்.

'' துணை வேளாண்மைப் பொறியாளர் (பார்வை), சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டம்

நான், வருகிற ஜூன் மாதத்தில் கத்திரி பயிரிட விரும்புகிறேன். எந்த ரகத்தைப் பயிரிட்டால் மகசூல் அதிகமாகக் கிடைக்கும் ? அதற்கு எவ்வளவு உரமிட வேண்டும் ?

—முருகேசன், விருத்தாசலம்.

வருகிற ஜூன் மாதத்தில் கத்திரி பயிரிட கிளஸ்டர் ஒயிட் (எஸ். எம். 62), நீண்ட ஊதா (எஸ். எம். 60) வரிகத்திரி (எஸ். எம். 68) ஆகிய ரகங்கள் ஏற்றவை. அந்த ரகத்தின் விதைகளை வேளாண்மைத் துறை மூலம் பெற்றுக் கொள்ளலாம். கத்தரி பயிரிட ஒரு ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எரு, 100 கிலோ அமோனியம்சல்பேட், 120 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவற்றை அடியுரமாகப் போட வேண்டும். கத்திரி நட்ட 3-வது வாரத்தில் 50 கிலோ அமோனியம் சல்பேட்டையும், 6-வது வாரத்தில் மேலும் 50 கிலோ அமோனியம் சல்பேட்டையும் மேலுரமாக இட்டு மண் அணைக்க வேண்டும்.



நெற்பயிரையும் களேயையும் வேற்பிரித்தறிவது கடினமானதால், நாங்கள் களேயை மட்டும் ஒழிக்கும் ஸ்டாம் F-34 தயாரித்திருக்கிருேம்

களையைப் பிய்த்தெடுக்கும்போது நிறைய நெற்பயிர்களும் பிய்ந்து வருகின்றன அல்லவா? மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைகொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும்.

ஸ்டாம் F-34 — குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைகொல்லி!



இன்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பம்பாய் 25, இந்தியா
STAM F-34 என்ற பெயரும், ஃப்ளாஸ்கின் சின்னமும், ரோம் அண்ட் ஹாஸ் கோ., ஃபிலடெல்ஃபியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு.எஸ்.ஏ. மற்றும் இதர நாடுகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.

IF.9868

கடந்த ஏப்ரல்மாதம் 18ஆம் நாள்! மாலை ஆறுமணி! தமிழ் ஆர்வம் மிக்க பொதுமக்கள் பலர் ராஜாஜி மண்டபத்தின் மிக உயர்ந்த படிகளில் ஏறிச்சென்று கொண்டிருந்தார்கள். மண்டபத்தின் வாயிலில், அந்நாள் பாண்டிய மன்னர்களைப் போன்று நிமிர்ந்த நெஞ்சும், நேர் கொண்ட பார்வையும், வீங்கு தோளும் வெள்ளைச் சிரிப்பும் படைத்த ஒருவர், இருபதாம் நூற்ருண்டின் நாகரிக ஆடைக்குள் புகுந்தபடி, இரு கரங்களையும் கூப்பி 'வருக வருக' என்று அனைவரையும் அன்புடன் வரவேற்றுக் கொண்டிருந்தார். அவர்தான் தமிழ் வளர்ச்சித் துறையின் தலைவர் திரு. முத்துராசாக் கண்ணனர். தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் சார்பிலேதான் அவர் வரவேற்றுக்கொண்டிருந்தார். அந்த வரவேற்புக்குக் காரணம் அன்னைத் தமிழ் தான் என்ருல் அது பொய்யல்ல! சிறந்த தமிழ் நூல்களுக்குத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் பரிசளிக்கும் விழாதான் அது.

தமிழன்பர்களும் எழுத்தாளர்களும் பெருமகிழ்வுடன் உள்ளே சென்றமர்ந்தனர். ஒருவரையொருவர் கண்டு உவகையுடன் உரையாடிக் கொண்டனர். மண்டபத்தினுள்ளே பதிவு நாடாவிலிருந்து ஒலித்த நாதசுர இசை, பலரையும் கிறுக்காக்கிக் கொண்டிருந்தது.

தமிழ்நாடு அரசு கல்வித்துறைச் செயலாளர் திரு. க. திரவியம் (ஐ. ஏ. எஸ்.) அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். அவரது வரவேற்புரையில் தமிழ் வரலாறு தெளிவாய்த் தெரிந்தது.

'' ஆழ்வார்களும் தமிழை வளர்த்தார்கள் ; அறிஞர் அண்ணவும் தமிழை வளர்த்தார்கள் . நாயன்மார்களும் தமிழை வளர்த்தார்கள் ; நாவலர் அவர்களும் தமிழை வளர்க்கிருர்கள். கம்பனும் தமிழ் வளர்த்தான் ; கலைஞர் கருணநிதி அவர்களும் தமிழை வளர்க்கிருர்கள் ''— கல்வித் துறைச் செயலாளரின் இந்த வாசகங்கள் அன்னைத் தமிழுக்கு அரசியல்வாதி, ஆன்மீகவாதி என்று வேற்றுமை கிடையாது என்பதைத் தெளிவாக்கின.

விழாவுக்குத் தலைமை தாங்கிய கல்வி அமைச்சர் நாவலர் அவர்களின் உரை, தமிழ் நாட்டு வாசகர்களுக்கு வேண்டுகோளாக அமைந்தது.

'' மாலைகள் போட வேண்டாம், நூல்களாக வாங்கிக் கொடுங்கள் ; பயனுள்ளதாக இருக்கும்''— என்ருர்.

அடுத்துப் பேசிய முதல்வர், ''மாலை கழுத்தில் விழுந்தால்தான் சிலருக்குப் பேச்சே வருகிறது. ஆதலினல் மாலை அவசியம்தான். நாவலர் அவர்கள் சொல்லியதற்கேற்ப நூல்களை (புத்தகங்களை) நூலால் கோத்து மாலையாகப் போட்டுவிடுங்கள் '' என்று சொன்ன போது, அந்த மன்றமே அதிர்ந்தது — கூடியிருந்தோரின் கர ஒலியினல்!

பரிசுபெற்ற நூலாசிரியர்களுக்குப் பரிசுகளையும், வெளியீட்டார்களுக்குச் சான்றிதழ்களையும் வழங்கிய முதல்வர், அளித்த பேருரை பெரு விருந்தாக அமைந்தது.

''முதற்பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசும், இரண்டாவது பரிசு பெற்றவர்களுக்குச் சான்றிதழும் கொடுக்கப்படுகின்றன. பொதுவாக எழுத்தாளர்களின் எழுத்தோவியங்களுக்குஆயிரம் ரூபாய்தான் பரிசா என்று கேட்டால் அது பரிசாகாது. அவர்களின் எழுத்துக்கள் விலை மதிப்பற்றவை ! என்ருலும் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் தருவதற்காகவே இந்தப் பரிசு ; ஆனலும் இந்த ஆயிரம் ரூபாய் அவ்வளவு தகுந்ததாகத் தெரியவில்லை. நானும் ஒரு எழுத்தாளன் என்பதால் எழுத்தாளர்களின் நிலையை உணர்ந்து, இனி அடுத்த ஆண்டு முதல், முதற்பரிசு ரூ. 2,000 என்றும் இரண்டாம் பரிசு ரூ. 1,000 என்றும் கொடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்!''

—முதல்வர் அவர்கள் இவ்வாறு தெரிவித்ததும் எழுத்தாளர்களின் கரங்கள் மட்டுமல்ல இதயங்களும் உற்சாகக்குரல் எழுப்பின.

தமது உரையை முடித்துவிட்டு அமர்ந்தார் முதல்வர். தமிழ் வளர்ச்சித் துறைத்தலைவர், அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டிருந்தார். அப்போது திடீரென்று முதல்வர் எழுந்தார்.

'' நண்பர்களே ! இந்த ஆண்டு இரண்டாவது பரிசு பெற்றிருப்பவர்களுக்கு 500 ரூபாய்க்குரிய 'செக்' நாளை அனுப்பி வைக்கப்படும் ''—என்று தமக்கே உரிய பாணியில் தெரிவித்தார்.

"இந்த ஆண்டு இரண்டாவது பரிசாக வெறும் சான்றிதழை மட்டும் தானே அடைந்திருக்கிருேம்; அடுத்த ஆண்டு இரண்டாவது பரிசுக்காரர்கள் ஆயிரம்ரூபாயைத்தட்டிக்கொள்ளப்போகிருர்களே" என்று எண்ணி ஏங்கிக்கொண்டிருந்த இரண்டாம் பரிசுக்காரர்களின் இதயக்குரலின் ஒலியை முதல்வ தெரிந்துகொண்டுவிட்டார்போலும்! காற்றின்

குரலுக்கும் கவிதை விளக்கம் காணும் கலைஞர் எழுத்தாளர்களின் இதயக் குரலின் பொருளையா உணர்ந்து கொள்ளமாட்டார்? அதனால்தான் உடனே எழுந்து அறிவித்தார்.

" கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதுபோல் எழுத்தாளரை எழுத்தாளரே அறிவார் " என்று ஒரு முதியவர் தன் அருகில் அமர்ந்திருந்த நண்பரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

" தூய உள்ளத்தோடு—பரிசுத்தொகையை அதிகப்படுத்திய முதல்வர் வாழ்த்துக்கு உரியவர் "—இரண்டாமவர் சொன்னார்.

இந்த விழாவிலே குறிப்பிடத்தக்க செய்தி ஒன்று உண்டு; கவிதை என்ற தலைப்பில் முதல் பரிசு பெற்ற கவிஞர் ஆனந்தம் அவர்கள் தமக்குக் கிடைத்துள்ள பரிசு ரூ. ஆயிரத்தை அண்ணா அறக் கட்டளைக்கு அளித்துவிட்டார் என்ற செய்திதான் அது!

பரிசுபெற்ற நூல்களும் நூலாசிரியர்கள் பெயர்களும் இங்கே வெளியிடப்பட்டுள்ளன.

முதல் பரிசு (ரூபாய் ஆயிரமும், சான்றிதழும்) பெறும் நூல்கள்

சிறு கதைகள்

கதவு—திரு இ. ராஜநாராயணன்.

கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுயசரிதைகள்

தமிழர் பண்பாட்டில் தாமரை—திரு அ. இராகவன்.

வரலாறு தொல்பொருளியல்

1. சிந்தனை வகுத்த வழி—திரு. ர. சு, நல்ல பெருமாள்.

2. தமிழ்நாட்டுத் திருவிளக்குகள்—திரு அ. இராகவன்

(இருவருக்கும் ரூ. 500 ஆகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது)

கவிதை

பூக்காடு—திரு கவிஞர் ஆனந்தம்.

நாவல்

சிந்து நதிக் கரையினிலே—திரு ஹசன்.

மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி

கம்பர்—டாக்டர் வ. சுப. மாணிக்கம்.

மானிட இயல், சமூக இயல், பூகோளம், அரசியல் சட்டம்

காட்டில் என் பிரயாணம்—பிலோ இருதய நாத்.

பிற மொழிகளில் தமிழ்

சங்கம் பாலிட்டி—திரு என். சுப்பிரமணியன்.

பொருளாதாரம் வணிக இயல்

புதுமை பொருளாதார இயல்—திரு ஒய் டபிள். பிளசர்ட் சிங்

பொறியியல் தொழில் நுட்ப இயல்

டிரான்சிஸ்டர் ரிப்பேரிங்—திரு வ. அருணசலம்.

மருத்துவம், உடல்இயல், உணவு இயல், ஆரோக்கிய சுகாதாரம்

நினைவுகள்—டாக்டர் கே. எஸ். சஞ்சீவி.

தத்துவம், சமயம், அறிவியல்

தித்திக்கும் திருமறை—திரு எம். அப்துல் வகாப்.

இரண்டாவது பரிசு (சான்றிதழ்) பெறும் நூல்கள்

கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுய சரிதைகள்

எழுத்தாளர் தருமம்—திரு பி. கோதண்டராமன்

வரலாறு தொல்பொருளியல்

இந்திய வரலாறு—திரு ம. சுப்பிரமணியம்.

கவிதை

மூன்றும் ஆறும்—கவிஞர் மே. இராசேந்திரன்.

மொழி இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி

சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்—திரு பி. எல். சாமி.

மானிடஇயல், சமூகஇயல், பூகோளம், அரசியல், சட்டம்

கொங்குமலைவாசிகள்—திரு பிலோ இருதயநாத்.

பொறியியல் தொழில் நுட்பஇயல்

இதுதான் சினிமா—திரு எம். எஸ். சந்தானம்.

மருத்துவம், உடல்இயல், உணவுஇயல் ஆரோக்கியம், சுகாதாரம்

நமது உடல்—வித்துவான் திரு நா. சுப்புரெட்டியார்

தத்துவம், சமயம், அறிவியல்

திருத்தொண்டர் புராணம்—திரு கார்த்திகேயன்.





அகல் விளக்கை வைத்துக் கொண்டு அன்றுட வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த மனித இனம், மின் ஆற்றலைக் கொண்டு வாழ்க்கை நடத்துகின்ற அளவுக்குப் பெரும் முன்னேற்றம் கண்டுவிட்டது. விஞ்ஞானத்தின் விளைவு இது !

மின் ஆற்றலையும் மின் விளக்கு களையும் கண்டுபிடித்த அறிவியல் தொண்டர்களுக்கு இந்த அகிலம் எந்த நாளும் நன்றி சொல்லித் தான் ஆக வேண்டும்.

நமது தமிழகத்தில் 18 மின் நிலையங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பான்மை, நீர் மின் நிலையங்கள்—நீர் அணைக்கட்டுகள் மூலம் மின் ஆற்றலை உற்பத்தி செய்யும் நிலையங்கள்! ஆனால், பேசின் பிரிட்ஜ், நெய்வேலி, எண்ணூர் ஆகிய மூன்று மட்டும் அனல் மின் நிலையங்கள்.

மின் ஆற்றல் உற்பத்தியாகும் அணைகளில் நீர் வற்றியிருக்கும் காலத்தில் நீர்ப்பாசன வசதி குறைந்துவிடும். அதனுல் சமுதாய வாழ்க்கையில் மக்களுக்கு எவ்வளவோ தொல்லைகள் வந்து குவிந்து விடும். வளம் நிறைந்த பகுதிகள் கூட, பஞ்சத்தில் வாட நேரலாம். அதுபோன்ற சமயத்தில் நமக்கு மிகுந்த பயன்தருவது—சிறந்த பணி புரிவது அனல் மின் நிலையங்கள்தாம் ! இதனுல்தான், அனல் மின் நிலையங்களை நாம் விரிவாக்க வேண்டியுள்ளது. அந்த அடிப்படையில் தான் எண்ணூர் அனல் மின் நிலையம் விரிவாக்கப்படுகிறது. ஏனைய இரண்டு அனல் மின் நிலையங்களை விட, எண்ணூர் நிலையத்திற்கே விரிவாகும் வாய்ப்பு மிகுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த அனல் மின்சார நிலையம் ரூ. 75 கோடி செலவில் அமைக்கப் பட இருக்கும் திட்டமாகும். முதல் கட்ட வேலையாக 2 மின் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை அமைக்க ரூ. 50 கோடி செலவாகி இருக்கிறது.

அனல் மின் நிலையத்துக்கான நிலக்கரி ஐதராபாத்தில் உள்ள சிங்கரேணியில் கிடைக்கிறது. இவ்விடம் எண்ணூருக்கு அருகில் இருக்கிறது. எண்ணூர் மின் நிலையத்துக்கருகே உள்ள கொட்டாளியாறு கடலில் சென்று விழுவதால் குளிர்பதனப் படுத்துவதற்குக் கடல் நீரைப் பயன்படுத்த முடிகிறது. கொதிகலன்களுக்குத் தேவையான தண்ணீர் எண்ணூருக்கு அருகில் உள்ள மீஞ்சூரில் கிடைக்கிறது. சென்னையைச் சுற்றி உள்ள தொழிற்சாலை உள்ள நகரங்கள் எண்ணூருக்கருகே உள்ளன—என்பன போன்ற பல காரணங்களினுல் எண்ணூர் அனல் மின் நிலையம் விரிவாக்கப்படுகிறது.

எண்ணூரில் உற்பத்தியாகும் மின் சாரம் 450 மெ. வாட்.. ஆகும். 60 மெ. வாட் உள்ள இரு யூனிட்டுகளும் 110 மெ. வாட் உள்ள மூன்று யூனிட்டுகளும் உள்ளன. 60 மெ. வாட் யூனிட்களில் கொதிகலன் கொள்திறன் 260 டன்னுகும். நீராவி அழுத்தம் ஒரு சதுர செ. மீட்டருக்கு 96 கி. கி.—நீராவியின் உஷ்ணம் 540 செ. கிரேடு என்ற அளவிலும் 110 மெ. வாட் யூனிட்டுகளில் கொதிகலன் சக்தி 370 டன்னுகவும், நீராவி அழுத்தம் 139 கி. கிராமாகவும், நீராவிச் சக்தி 570 டிகிரி செ. கிரேடாகவும் (உலகிலேயே அதிகம்) இருக்கிறது.

கொதி கலன்களுக்குத் தூளாக்கப் பட்ட நிலக்கரி பயன்படுத்தப்படுகிறது.

எலக்ட்ரானிக் முறையில் கொதி கலன்கள் இயக்கப்படுகின்றன. டர்பைன் சிலிண்டர்கள் பயன்படுத்தப் படுகின்றன. ஜெனரேட்டர்கள் குளிர் சாதனம் பொருத்தப்பட்டவை. ஜெனரேட்டர்களில் மிகவும் சக்திவாய்ந்த டிரான்ஸ்பார்மர்கள் பயன்படுகின்றன. டிரான்ஸ்பார்மர்கள் அனைத்தும் பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸில் தயாரானவை.

டர்பைன் சிலிண்டர்களைக் குளிர வைக்கக் கடல் நீர் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு வேண்டிய பம்பிங் நிலையம் கொட்டாளியாற்றின் கரையில் அமைக்கப் பட்டிருக்கிறது. இப்பகுதியில், அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் மணல் திட்டு மூடிக் காணப்படுகிறது. வட கிழக்குப் பருவங்களில் இது திறந்துகொள்கிறது. டர்பைன் சிலிண்டர்களைக் குளிரவைக்கக் கடல் நீர் பயன்படுத்தப்பட்டுப்பிறகு திரும்பக் கடலுக்கே வெளியேற்றப்பட்டு விடுகிறது.

எண்ணூரில் உபயோகப்படுத்தப் படும் நிலக்கரி 500 டன்னுகும். இதற்குத் தேவையான நிலக் கரியை ஆந்திராவில் உள்ள சிங்கரேணியிலிருந்து கொண்டு வருவதற்குத் தேவையான ரயில் போக்குவரத்து வசதியும் இங்கு அமைக்கப் பட்டிருக்கிறது.

எண்ணூரில் ஒரு நாளைக்கு 1,500 டன் சாம்பல் கிடைக்கிறது. இதில் 300 டன் கட்டியாகவும் 1,200 டன் தூள் சாம்பலாகவும் கிடைக் கிறது. இந்த சாம்பல்கள் குழாய்கள் மூலமாகக் கடல் நீரில் கரைக்கப்பட்டு விடுகின்றன.

இப்போது உற்பத்தியாகும் 1,200 டன் தூள் சாம்பலில் 300 டன் சாம்பல் தமிழக அரசு வீட்டு வசதி வாரியத்தாரால் எண்ணூரில் கட்டப்பட்டுள்ள செல்லுலார் செங்கல் திட்டத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. மீதி 900 டன், கடலில் கரைக்கப்படுகிறது.

இரண்டு பெல்ட் கன்வேயர்களுடன், 350 டன் கொள்திறன் உள்ள, நிலக் கரி பயன்படுத்தும் பிளான்ட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

55 டன் அளவுள்ள உலோகக் கலவையில்லாத நீர்க்கொதி கலன்கள் கெமிக்கல் வாட்டர் ட்ரீட்மெண்டுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த எண்ணூர் அனல் மின் நிலையம் மணல் பாங்கான இடத்தில் அமைக்கப்பட்டிருப்பதால் கட்டடங்கள் யாவும் கான்கிரீட் அடுக்குகளை அடிக்கல்லாகப் பயன்படுத்தப்பட்டுக், கட்டப்பட்டிருக்கின்றன.

எனவே எண்ணூர் அனல் மின்நிலையம் மின் சக்திக்கு மிகவும்பயன்படும்.



637



மாநகராட்சி
ஆகியுள்ள
மதுரையில்
சில காட்சிகள்
தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை
மதுரை பால் வழங்கும் திட்டம்
வேளாண்மைக் கல்லூரி
வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ள
குடியிருப்புகள்
மீன் வளர்ச்சித் துறைக் கட்டடம்



உற்பத்தித்திறன் பெருக்கச்



தொழிலாளர்,
நிர்வாகம், பொதுமக்கள்
இந்த மூன்று அங்கங்களும்
இணைந்தால்தான் உற்பத்தித்
திறன் பெருக முடியும்; இந்த
அங்கங்கள் ஒன்றுக்கொன்று
எவ்வாறு இணைந்துள்ளன
என்பதை உற்பத்தித்
திறன் சிறப்புப்
பகுதி இங்கே
தெரிவிக்
கிறது.

தொழிலாளர் கல்வி

தொழிலாளர் நல அமைச்சர்
திரு. என். வி. நடராசன்

தமிழ் நாட்டில் தொழிலாளர் கல்வித் திட்டம் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகவே செயல்பட்டு வருகிறது. இந்தப் பணித்திட்டம் சிறப்புற நிறைவேற்றப்படுமாயின், தொழிலாளர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் ஏற்படுவதற்கு வழிகோலும் என்ற கருத்தை இவ்வரசு கொண்டுள்ளது. எனவே நாம் இதில் மிகுந்த அக்கறை கொள்ள வேண்டியவர்களாயிருக்கிரோம். இந்தப் பணித்திட்டத்தின் கீழ்க்காணும் தலையாய நோக்கங்களை நிறைவேற்றுவதில், இத்திட்டம் தொடங்கிப் பத்தாண்டுக் காலத்திற்குள்ளாகவே ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை நினைவு கூர்கையில் நான் பெருமகிழ்வு எய்துகிறேன்.

(1) சிறப்பாகத் தேர்ச்சி பெற்ற தொழிற்சங்க அலுவலர்கள், ஆற்றல் மிக்க உறுப்பினர்கள் இவர்கள் உதவியால் வலுவான தொழிற் சங்கங்களை மேம்படுத்துதல்.

(2) தொழிலாளர்களுக்குள்ளேயே சிறந்த தலைவரை உருவாக்குதல்.

(3) தொழிலாளர்களின் 'பொருளாதாரச் சுழல்கள்' குறித்த பிரச்சினைகள் பற்றியும், தொழிற்சங்க உறுப்பினர்களாகவும், அலுவலர்களாகவும் குடிமக்கள் என்ற முறையிலும் தொழிலாளர்களுக்குள்ள கடமைகள், உரிமைகள் குறித்தும் தொழிலாளரிடையே நல்லுணர்வை வளர்த்தல்.

அன்றுட வாழ்க்கையில் தங்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் ஆக்க முறையில் அணுகுவதற்குத் தொழிலாளர் கல்வி இம்மாநிலத்தில் பெரிதும் உறுதுணையாக இருப்பதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். இக்கல்வி முறையானது தொழிலாளர்கள் தங்களுக்குள்ள உரிமைகள், பொறுப்புகள், சிறப்புரிமைகள், கடமைகள் இவற்றைப் புரிந்து கொள்ள உதவியுள்ளது. இதனால் தொழிலாளி, தாம் வேலை செய்யும் தொழிற்சாலையில் தமக்குரிய வேலை என்ன என்பதை அறிந்து திறமையாகச் செயல்படவும், தமது தொழிற்சங்கம் செவ்வியமுறையில் பணியாற்றத் தாம் செய்ய வேண்டிய தொண்டு பற்றியும் அவருக்கு உணர்த்தப்படுகிறது. இது மட்டுமல்லாமல், தொழிலாளரிடம் சமூக உணர்வும், நாட்டுப்பற்றும் ஏற்படுத்துவதற்கும் வழிவகைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களின் சிந்தனையில் முற்றிலும் புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்தவும், ஒரு தொழிலாளியாக, தனிப்பட்ட நபராக, ஒரு குடிமகனாகத் தன்னை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளைக் குறித்தும் புதிய கருத்தை வளர்க்கவும் ஏற்ற வகையில் இக்கல்வியின் பாடமுறைத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களே சனநாயக முறையில் அமைந்து நடத்துகின்ற தொழிற்சங்க இயக்கத்தால் மட்டுமே நாட்டை வளமானதாக ஆக்க முடியும். ஆனால், ஏனோ நம் நாட்டில் மட்டும் தொழிற்சங்க நிலைமை எவ்வாறு அமைய வேண்டுமோ அவ்வாறு முழுமையாக இன்னும் அமையவில்லை; தொழிற்சங்க இயக்கத்தில் சில குறைகள் மலிந்திருப்பது எல்லோரும் அறிந்ததே. சோஷலிச சமுதாயப் பாதையில் உள்ள தடைகள் நீக்கப்பட்டாலன்றியும், தொழிலாளர்கள் தங்களுடைய நலத்துக்காக மட்டுமல்லாமல், தாங்கள் பணியாற்றும் தொழிலின் வளர்ச்சிக்காகவும், சமூக வளர்ச்சிக்காகவும் தங்க...

....ஆயன்றதைச் செய்ய வேண்டுமென்று அவர்களை உணரச்செய்தாலன்றி சோஷலிச சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்கிற எண்ணம் பகற்கனவுதான். தொழிலாளர்களின் ஒத்துழைப்பினால்தான் வலிமை பொருந்திய நாட்டை உருவாக்கமுடியும் என்பதில் திடநம்பிக்கை உடையவன் நான். ஏனெனில் நமது நாட்டின் செல்வத்தைப் பெருக்குவோர் தொழிலாளர்கள்தான். நாட்டின் எதிர்காலமே அவர்களது உழைப்பின் சக்தியில் தான் உள்ளது.

ஆனால், இத்தகைய அறைகூவல்களை ஏற்கக்கூடிய சக்தி படைத்தவர்களாகத் தொழிலாளர்கள் உள்ளனரா, தொழிற்சங்கங்களும், தொழில் நிர்வாகங்களும் இதை உணர்ந்துள்ளனரா, என்பது, விவாதத்திற்குரியதாய் இருக்கிறது. எனினும் நமது மாநிலத்தில், குறிப்பாக, தொழிற் கல்வித் திட்டம் வேரூன்றிவிட்டது. நிர்வாகங்களிடமிருந்தும், தொழில் சங்கங்களிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பு போற்றத்தக்க அளவில் இல்லாவிட்டாலும் ஓரளவு மன நிறைவு தருவதாகவே உள்ளது. என்றாலும் இம்மாநகரிலும், நகர்க்குப் புறத்தேயும் அமைந்துள்ள பிரபல தொழில் நிறுவனங்களில் சிலவற்றைத் தொழிலாளர் கல்வி வட்டார இயக்குநர் அலுவலக அதிகாரிகள், அணுகியபோது இத்திட்டத்தைச் செயல்படுத்த அந்நிறுவனங்கள் ஆர்வம் காட்டாதது வருத்தத்தை யளிக்கிறது.

வட்டார இயக்குநர்கள் தொடர்ந்து முயற்சிகள் எடுத்துக் கொண்ட போதிலும், ரயில்வே துறையினர், தொழிலாளர் கல்வி சம்பந்தமான அவ்வப்பிரிவிற்குரிய வகுப்புகளை நடத்துவதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்க இது வரை முன்வரவில்லை. ரயில்வே போன்ற பெருவாரியாக வேலை வாய்ப்பளிக்கும் பெரிய அமைச்சகம், இந்திய அரசின் அறிவார்ந்த இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் பின்னடையக்கூடாது. தொழிலாளர்துறை ஆணையாளர் மூலமாக இதுபற்றி அரசுக்குத் தெரிய வந்துள்ளதால் உயர்மட்டத்தில் பேச்சு நடத்தவும் நமது அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை முனைப்பாக நிறைவேற்றுவதில் தலைப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பேற்ற 1967-ஆம்ஆண்டிலிருந்தே, தொழிலாளர் கல்வித் திட்டங்கள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இம்மாநிலத்துப் பொதுத்துறை நிறுவனங்களிலும், தமிழ்நாடு மின்சார வாரியத்திலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்நிறுவனங்களின் துறைத் தலைவர்கள் வட்டார இயக்குநர்களுக்கு முழு அளவில் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று பொருத்தமான, திட்டவட்டமான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் துறையில் அடி எடுத்து வைத்த முதல் மாநிலம் தமிழ்

நாடு என்பதில் நாம் பெருமை அடையலாம். இவ்வகையில் நமது தமிழக அரசு மேற்கொண்ட சிறந்த வழியை முன்மாதிரியாகக் கொண்டு பிறமாநில அரசுகளும் பின்பற்றுகின்றன.

தொழிலாளர்துறை ஆணையாளரே, தொழிலாளர் கல்வி வட்டாரக் குழுவின் தலைவருமாவார். இவர் வட்டார இயக்குநர்களின் பணியை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுவதில் அவர்களுக்கு உதவி புரிந்து வருகிறார். தொழிலாளர் துறை ஆணையாளரின் வேண்டுகோளிற்கிணங்கி உதகையில் கடந்த மே திங்களில் நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டத்தில் இந்தத் திட்டத்தை முன்னினும் சிறந்த வகையில் நிறைவேற்றுவது பற்றி முதல் முதலாக விவாதிக்கப்பட்டது. தொழிற்சாலைஅளவில் வகுப்புகள் நடத்தக் குறைந்த அளவு வசதிகளேனும் செய்து கொடுக்குமாறும், இத்திட்டம் பற்றி இது வரை எதுவுமே தெரிந்திராத பெருவாரியான நிறுவனங்களில் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறும், வட்டார இயக்குநர்கள் செய்து கொண்ட வேண்டுகோள்களைப் பரிவுடன் ஆலோசனைக்குழு எடுத்துக் கொள்வதாகத் தொழிலதிபர்கள் ஒப்புக்கொண்டனர்.

இம்மாநிலத்தில் மற்றத் தொழிற்சாலைகளில் தொழிலாளர் கல்விக்காகப் பகுதி நேர வகுப்புகள் நடத்துவது போலன்றி, நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிக் கழக நிர்வாகத்தினர் தொழிலாளர்துறை ஆணையாளரது பரிந்துரையை ஏற்றுத் தொழிற்சாலை அளவில் மூன்று வகை வகுப்புகள் (Plant level Classes) நடத்திய வகையில் அந்நிறுவனம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவது பாராட்டுக்குரியது. மாநிலப் பொதுத்துறை நிறுவனங்

களிலும், மின்சார வாரியத்திலும் நடத்தப்படுகிற தொழிற்சாலை வகுப்புகளில் பயிற்சியாளர்களுக்கு மாநில அரசு அளிக்கும் வசதிகளையே ஏற்று அவற்றைத் தொழிலதிபர்களும் பின் பற்ற வேண்டும். வகுப்புகள் நடத்துவதற்கு அளிக்கப்படுகிற வசதிகள் ஒரே சீராக அமையவும் வழி ஏற்படுவதுடன், முக்கியமான இத்திட்டம் தடையின்றி நிறைவேறவும் இது துணைபுரியும்.

இப்பயிற்சி வகுப்புகள் முடிவடைந்ததும், தொழிலாளர்கள் குறுகிய கால ஆய்வுச் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்படுகிறது. இவற்றின் வாயிலாகச் சுமார் 20 ஆண்டுக்குறுகிய கால அளவில் நாடு அடைந்துள்ள மகத்தான முன்னேற்றத்தைத் தொழிலாளர் நேரில் கண்டு களிக்க முடிகிறது. நாடெங்கிலும் பரவலாக அமைந்துள்ள பல்வேறு தொழிலாளர் கல்வி நிலையங்களில் பயின்ற தொழிலாளர்கள் ஒருவரையொருவர் சந்தித்து அளவளாவுவதற்கு வாய்ப்பளிக்கப்படுவதையும், வீட்டு உபசரிப்புத் திட்டங்கள் நடத்தப்படுவதையும் பார்க்கும்போது அவை நமக்குப் பெருமிதம் அளிக்கின்றன. பரந்த இந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் தொழிலாளரிடையே தேசீய ஒருமைப்பாட்டுணர்வையும், பாசப் பிணைப்பையும் வளர்க்கின்றது என்ற கருத்தில் இது உண்மையிலேயே வரவேற்கத்தக்கதோர் அம்சமாகும்.

தொழிலாளர் கல்வியால் தொழிற்சங்க இயக்கம் மேம்பாடடைய வழி வகை ஏற்பட்டுள்ளது. ஆகவே, தொழிலாளர்—ஆசிரியர் பயிற்சி வகுப்புகளுக்குத் தேவையான வேட்பாளர்களைத் திரட்டுவதில் தயக்கம் எதுவும் காட்டக்கூடாது, என்று தொழிற்சங்கத்துறையில் உள்ள தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டம் முன்னிலும் சிறந்த வகையில் நிறைவேற்றப்படுவதற்கு வட்டார இயக்குநர் அலுவலகங்களுக்கு இத்தகைய சங்கங்கள் தொடர்ந்து ஒத்துழைப்புத் தருவதில் பிற காரணங்கள் எதுவும் தடையிரா.

பயிற்சி பெற்ற தொழிலாளரிடையே தொழிலாளர் கல்வியினால் ஏற்படும் பலன்களைப் பற்றி அறுதியிடுவதற்காக அண்மையில், தொழிலாளர் துறை ஆணையாளர் தலைமையில் தொழிலாளர் கல்வி சென்னை வட்டாரக் குழுவின் துணைக் குழு, ஆய்வு நடத்தியது. இத்திட்டம் தொழிற்சாலையைச் சேர்ந்த எல்லாப் பிரிவினருக்கும் ஏற்புடையதாக அமைந்துள்ளது. தொழிற்சங்கம் விழிப்புணர்ச்சியை வளர்த்துள்ளது. எனினும், தொழிற்சங்கங்கள் தங்களுக்குள் சிறந்த தலைவர்களை உருவாக்கிக் கொள்ள உதவியாயிருப்பதுடன் ஒரு தொழில் நிறுவனத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இருப்பதால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள் குறித்தும் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் முற்றும் உணர்ந்துள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

இத்திட்டம் சிறப்புறச் செயல்படுத்தப்படுமாயின் தொழிலாளர்களுக்கு மேலும் பல நன்மைகள் ஏற்படும். இப்பணியில் இம்மாநிலத்துத் தொழில் நிர்வாகங்களும், தொழிற்சங்கங்களும் பங்கு கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறேன். தமிழ்நாடு தொழில் நிருவாகங்கள் முற்போக்கு எண்ணமும், பகுத்தறிவுக் கருத்தும் உடையவை என்னும் புகழ் பெற்றவையாகும். நம் நாட்டில் வளத்தைப் பெருக்குவதில் பெரும் பங்கு தாங்கி நிற்கும் தொழிலாளர்கள் இப்பணியை ஏற்று நடத்திச் செல்வதில் ஒருபோதும் பின்னடையமாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். சிறு துளி பெருவெள்ளம் என்பது போல இத்துறையில் நமது முயற்சி சிறியதேயாயினும், இதனால் தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல் சமுதாயத்திற்கே மகத்தான வசதியும் வாய்ப்பும் உண்டாகும் என்பது உறுதி.

வெண்பாப் போட்டி-9

ஈற்றடி: நீறிலே பூத்த நெருப்பு

முடிவு நாள்: 17—5—1971

பரிசு ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு: நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா



உற்பத்தித் திறன் வளர்ச்சியில் தொழிற் சங்கங்களின் பங்கு

—காட்டூர் கோபால்

தொழிலாளர்களது வாழ்வு வளம் பெறச் செய்திடுகிற வகையில், பாட்டாளிகள் ஏற்கனவே பெற்றுள்ள உரிமைகள் பேணிக் காப்பாற்றப்படவும் பெறவேண்டிய உரிமைகளை—சலுகைகளைப் பெற்றுத் தருகிற வகையிலுமான பணிகளையும், தொழிலியல் தொடர்பில் அவ்வப்போது தொழிலாளர்களுக்கு எழுகிற தொல்லைகள் போக்கப்படவும்; தொழிலாளர்களுக்கு ஏற்படுகிற பாதிப்பு நீக்கப்படவுமான முயற்சிகளைத் தொழிற்சங்க இயக்கங்கள் மேற்கொள்கின்றன.

உழைப்பாளிப் பெருமக்கள் தேவைக்குரிய ஊதியம் பெற்றிட வேண்டுவதும்; அதன் நிமித்தம் அவர்களுக்கு ஏற்படுகிற மன நிறைவும்—நல் வாழ்வும் நாட்டு முன்னேற்றத்திற்கு மிக அவசியப்பட்டதாகும். நாடு முன்னேறுவதற்குத் தொழில் வளம் பெருகிடவேண்டுவது முக்கியமானதாகும். தொழில் வளம் பெருகிட "தொழிலாளர் நலம்" நன்கு காக்கப்பட வேண்டுவது பெரிதும் அவசியமானதாகும். தொழிலாளர் நலம் அவரவர்கள் செய்து வரும் தொழிற்சாலைகளில் அடையும் பொருளாதார வளத்தையொட்டியே பெரிதும் அமைகிறது. ஒவ்வொரு தொழிலும் வளர்ச்சி ஓங்கிப் பெருக வேண்டுமானால் ஆங்காங்குத் தொழிற்சாலைகள் தோறும் "உற்பத்தித் திறன்" பெருகிட வேண்டும்.

எனவே உற்பத்தித் திறன் உயர்ந்திடுவதற்கு உழைப்பாளிகளின் பங்கு மேலோங்கிடச் செய்ய வேண்டிய பாங்கினைப் பெருக்குவதில் தொழிற்சங்க இயக்கங்கள் பெரிதும் அக்கறை காட்டிப் பணியாற்றிட வேண்டுவது அவசியமாகும். உற்பத்தித் திறன் பெருகுவதால் தொழிலாளர்கள் சம்பள உயர்வு பெற்றிடச் சாத்தியமான வழிகள் நிச்சயம் அமையும். உழைப்பாளிகளுக்கு உபரி வருவாய்க்கான அடிப்படையே "உற்பத்தித்திறனும்"; தொழில் வாய்ப்புப் பெருகுவதும் தான் என்பதனைத் தொழிலாளர்கள் நினைவுறுத்திக் கொள்ள வேண்டும்.

தொழிலாளர்கள் மேலும் சிரமத்தை ஏற்றுக்கொண்டு அதிகமான வேலைப் பளுவினைச் சுமப்பது தான் "உற்பத்தித் திறன்" என்றும் அதன் நிமித்தம்—உற்பத்தியாளர்கள் — அதிபர்கள்— மட்டுமே பலன் பெறுவார்கள் என்றும் தவறுதலான கருத்துப் பரவலாகப் பலரிடையேயும் நிலவி வருகிறது. இவ்விதம் தொழிலாளர்கள் எவரேனும் கருதியிருந்தால் அதனைப் போக்கிடச் செய்ய வேண்டுவது தொழிற் சங்கங்களது முக்கிய வேலைகளில் ஒன்றாகும்.

உற்பத்தித் திறன் பெருகுவதால் உற்பத்திப் பொருள் தயாரிப்பாளர்கள் — உழைப்பாளர்கள்—உபயோகிப்போர் — ஆகிய அனைவரையும் உள்ளடக்கிய மக்கள் சமுதாய முழுமைக்கும்— நாட்டு அரசுக்கும் நற்பலன்களைத் தரக்கூடியதாகும். உற்பத்தித் திறன் வளர வளர உற்பத்திச் செலவினம் குறையும். உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைகளில் நமது உற்பத்திப் பொருளுக்கு நல்ல கிராக்கி இருக்கும். இதன் நிமித்தம் தொழில் வளம் பெருகும். தொழில்கள் வளருவதால் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். வேலை இல்லாத் திண்டாட்டம் குறையும். மொத்தத்தில் பொருளாதார வளம் பெருகும். வறுமைநீங்கும். வாழ்வு மலரும். தொழிலாளர்கள்—நேரிடை நிர்வாகிகள்—அதிபர்கள்—தொழிற்சங்க நிர்வாகிகள்— அனைவரும் நன்கு உணர்ந்து உற்பத்தித் திறன் வளர்ச்சியில் தத்தமது பங்குபற்றிச் சிந்தித்துத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டுவது மிக அவசியமானதாகும்.

உற்பத்தி உயர்வு என்பது வேறு—உற்பத்தித் திறன் என்பது வேறு. உற்பத்தித் திறன் வளருவதால் உற்பத்திச் செலவினம் குறையும். உழைப்புத்தன்மை எளிதாக்கப்படும். உழைப்பவர்களுக்குச் சோர்வு குறையும். உபரி வருவாய்க்கான அடிப்படை உருவாகும். உற்பத்தி உயரும்.

இவ்வித உற்பத்தி உயர்வினால் தயாரிப்பாளர்களுக்கு — தனிப்பட்ட அதிபர்களுக்கு மட்டுமே அதிக பலன் என்கிற நிலை மாற வேண்டும். உற்பத்தி உயர்வதால் சமுதாய முழுமைக்கும் நலன். நாட்டின் மொத்த நலனுக்கே தவிர, தனிப்பட்டவர்கள் ஆதாயத்திற்கு அல்ல என்கிற நிலைமை தெளிவாக்கப்பட வேண்டும்.

மூலப்பொருட்கள்—இயந்திரச் சாதனங்கள்— மனித சக்தி —இவைகளைச் சரியான அளவில்—சரியான தரத்தில்—பயன்படுத்திக் கொள்கிற பாங்கினைப் பெறுகிற திறமைத் தேர்ச்சியே "உற்பத்தித் திறன்" என்பதாகும். சிறந்த தொழில் அமைப்பு— சிறந்த நிர்வாகம்— உழைப்பாளர்களை முழுமையாகப் பயன்படுத்துவது—உழைப்புச் சக்திக்கு ஊக்கம் தருவது —சேதாரத்தைத் தவிர்ப்பது—

திறனின் பிரதுபலிப்பாகும்.

உற்பத்தித் திறன் தொழில் துறையில் மட்டுமன்றி—மூலப் பொருள் உற்பத்தித் திறன்—மனித சக்தி உற்பத்தித் திறன்—நிலத்தின் உற்பத்தித் திறன்—போன்ற அனைவற்றிலும் வளர்ந்தாக வேண்டும்.

விவசாயத் துறையில் நூதனக் கருவிகளையும்—முறைகளையும் கையாண்டு உற்பத்தித் திறன் பெருகுகிற வழி வகைகளைக் கண்டாக வேண்டும். விவசாயத் துறையில் உற்பத்தித் திறன் வளர்ந்திட நிலத்தைச் சீராகப் பயன் படுத்துதல்—தக்க உரவகை ஏற்பாடுகள்—விவசாயிகளுக்கான உபகரணங்கள்—உரவகைகள்—கிணறு வெட்டுதல் ஆகியவற்றிற்குச் செய்திடுகிற உதவி—விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை நிரந்தரம்—வேலை இல்லாத காலத்திற்கான இழப்பு ஈடு ஏற்பாடு—பூச்சி அரிப்புத் தடுப்பு-பயிர் பாதுகாப்பு—மற்றும் நில-நீர்வள பாதுகாப்பு—பயிர் இன்சூரன்ஸ்—விதைப் பொருளின் சீரான விநியோகம்—கொள்முதல் விற்பனை ஏற்பாட்டு அமைப்புகள்—இவைகளில் முறைப்படுத்தித் தொகுத்துத் தக்க முயற்சிகளை மேற்கொண்டாக வேண்டும்.

ஏனைய தொழிற்சாலைகளில் உற்பத்தித்திறன் பெருகுவதற்குத் தரமுள்ள கச்சாப்பொருள் உபயோகம்—சிறந்த இயந்திரங்களைப் பயன்படுத்துவது—இயந்திரங்களைத் தொடர்ந்து சரியான வகையில் பராமரிப்பது—கழிவுப் பொருள்களைக் கட்டுப்படுத்துவது—திட்டமிட்டுச் செயல்படுதல்—வேலைப் பகிர்வு—வேலைக் கட்டுப்பாடு—திறமையான மேற்பார்வை—ஒழுங்காக வேலைக்குச் செல்வது—சீரான வேலைமுறைகள்—முறைப்படுத்தப்பட்ட வேலைப் பளு—தொழிலாளி முதலாளி நல்லுணர்வு — தொழிலாளி — நேரிடை நிர்வாகிகள் பரஸ்பர நல்லுணர்வு—சீரான உபகரணங்கள் விநியோகம்—ஆகியவைகள் அவசியப்பட்டவைகளாகும்.

உற்பத்தித் திறனுக்குத் தொழிலியல் ஈடுபாட்டில் உள்ள அனைவரது முழு முயற்சியும் அவசியமான தேவைகளாகும். உற்பத்தித் திறனால் பரிணமிக்கிற செலவினச் சிக்கனத்தால் வரும் இலாபம்—தயாரிப்பாளர்களுக்கும் — தொழிலாளர்களுக்கும்—உபயோகிப்போருக்கும் — சமமான பங்குகளாக்கிக் கிடைக்கப்பெறுகிற ஏற்பாடுகள் அமைந்தாக வேண்டும்.

உற்பத்தித் திறனில் ஊக்கம் காட்டுகிற உழைப்பாளிகளைச் சிறப்பித்தல்—உயர்ந்தவர் என்று எடுத்துக் காட்டி தனிக் கவனம் செலுத்தி ஊக்கமளித்தல்—ஆகிய ஏற்பாடுகளைத் தொழிற்சாலை அதிபர்கள் செய்தாக வேண்டும்.

தொழிற்சாலைகளில் மோசமான நிலைமை—இலாபகரமற்ற அமைப்புமுறை— நிர்வாகத்தினரின் ஒழுங்கற்ற நடவடிக்கை—நீண்டநேர வேலைக்கால அளவு—தொடர்ந்து உபரிநேர உழைப்புத்தருதல்—பற்றாத ஊதியம் தருதல்—இவைகளை நீக்குவதுடன், அன்றாட அவசியத் தேவைகளான — குடிநீர் — கழிவிட சுகாதாரவசதி — உணவிடம்—ஓய்வுபெறும் இடம்—தக்க உபகரணங்கள் அளித்தல்—மனிதாபிமான உணர்வுகளுடன் பழகுதல்—இவைகளைச் சீர்படுத்திச் செய்கிற ஏற்பாடுகளிலும் தொழிற்சாலை அதிபர்கள் கவனம் செலுத்தி ஆவன செய்திட வேண்டும்.

தொழிலாளர்களும் ஒழுங்காக வேலைக்குச் செல்லுதல்—முயற்சியுடனும் நல்ல பற்றுதலுடனும் வேலைகளை மேற்கொள்ளுதல்—ஒழுங்குவிதிமுறைகளுக்கு மதிப்பளித்துச் செயல்படல்—அவரவர்கள் செய்து வருகிற வேலை கொடுபடுகிற

> ஜனநாயகம் என்பது ஒரு அமைப்பு மட்டுமல்ல; ஜனநாயகமென்பது உயிரற்ற பொருளல்ல; ஜனநாயகத்தின் பயன் குறித்து எவருக்கும் எவ்வித ஐயப்பாடும் இருக்கத் தேவை இல்லை. அந்த அமைப்பு எத்தனை சீரியதோ-நற்றிறம் கொண்டதோ-அத்தனை நற்றிறம் கொண்டவனாக அதனைச் செயல்படுத்தும் மனிதனும் இருந்திட வேண்டும்!
>
> —பேரறிஞர் அண்ணா

தரப்படுகிற கடன் என்கிற ரீதியில் அல்லாமல் சமுதாயத்தின் தேவைக்காகவும்—வளர்ச்சிக்காகவும் உழைக்கிறோம் என்கிற பாங்கினைப் பெறவேண்டும். கருத்தாலும், கரத்தாலும் உழைக்கிற வெறும் சக்திக்கேற்ப உழைத்தால் தேவைக்கேற்ப வசதிகளைப் பெற்றிடத் தக்க முறையில் தொழிலியல் தொடர்பான சட்டங்களை வகுத்திடவும்; நடைமுறைச் சாத்தியத்திற்குக் கொண்டுவரவுமான நிலைமைகளை உருவாக்கிடவும் அரசாங்கத்தரப்பினர் ஆவன செய்திடல் வேண்டும்.

உற்பத்தித் திறனில் தொழிற்சங்கங்களின் நேரிடையான பங்கினைச் செலுத்துவதில் சில தடங்கல்களும் உள்ளன. நமது நாட்டில் அமைந்துவிட்ட தொழிற்சங்கங்கள் விருப்பப்பட்டோ அல்லாமலோ அரசியல் கட்சி அடிப்படையில் இயங்கி வருவதை நாம் மறந்து விடுவதற்கில்லை. தொழிற்சங்கங்கள் சுயமாகவும், முழுமையாகத் தொழிலாளர் சேவைக்கே என்கிற ரீதியிலும் இயங்கிவர முடியவில்லை.

கண்கண்ட நடைமுறை நிலைமைகளில் தொழிற்சங்கங்கள் உற்பத்தித்திறன் பெருகிடத் தக்க முழுமையான முயற்சிகளையும் மேற்கொள்வதில் உள்ள சிரமத்தையும் கணக்கிலெடுத்துக் கொண்டு காரியமாற்றிட வேண்டியுள்ளது. " ஒரு தொழிற்சாலைக்கு ஒரே தொழிற்சங்கம் " என்கிற நிலைமையாவது உருவாகிட வேண்டும். குறைந்தபட்சமாக, தற்போதைக்குச் சங்கங்கள் எண்ணிக்கையில் பலவாக இருந்தாலும் உற்பத்தித்திறன்பெருக்க வேண்டுமென்கிற எண்ணத்தில் ஒன்றுபட்டுச் செயல்படுகிற நிலைமை ஏற்பட்டாக வேண்டும்.

தொழில் வளர்ந்தாலொழிய தொழிலாளர்கள் வாழ்வு மலராது. அதுபோலவே தொழிலாளர்கள் வாழ்வு வளம் பெறத் தக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளாத பட்சத்தில் தொழில்கள் வளரா. தொழிலாளர்களைத் தத்தமது கடமைகளை முறைப்படுத்திச் செய்விக்கவும் அவர்களது உரிமைகளைக் கேட்டுப் பெறவுமான பணிகளைத் தொழிற்சங்கங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தொழிலாளர்களது வேலை முறைகள்—வேலைநிலை — வேலை அளவு—இவைகளைத் தொழிலாளர்களுக்கு விளக்கிக் கூறியும்; தொழிற் சங்கங்களுடன் கலந்து பேசியும் முறைப்படுத்தியும் செயல்படுத்திட வேண்டும். தொழிற்சாலைகளின் நிர்வாக அலுவல்களைக் கூட, (i) தொழிற் சங்கங்களைக் கலந்துகொண்டு செய்யப்படுபவைகள், (ii) தொழிற் சங்கங்களின் கவனத்திற்கு அறிவித்துவிட்டுச் செய்யப்படுபவைகள் (iii) தொழிற்சங்கங்கள்—தொழிலாளர்கள் விருப்பத்திற்கே விடப்பட்டு அதன்படி செய்யப்படுபவைகள் — என்று மூன்று வகையாகப் பிரித்துப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உற்பத்தித் திறன் வளர்ச்சிக்கு தொழிற்சங்கத்தினரது நடவடிக்கைகள்—முயற்சிகள் தவிர்க்க முடியாத அவசியம் என்பதனை உணர்ந்து அதற்கொப்பத் தொழிற்சாலை நிர்வாகத்தினர் செயல்பட்டாக வேண்டும். தொழிலாளர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறபோது தொழிலாளர்களுக்கும் நேரிடை நிர்வாகிகளுக்கும் நல்லுறவு கெட்டிருக்கிற வகையிலும், தொழில் அமைதி தொடர்ந்து நீடிக்கிற வகையிலும் தொழிற் சங்க நடவடிக்கைகள் முறைப் படுத்தப்படவேண்டும். தொழிற் சாலையின் வளர்ச்சிக்குத் தொழிற்சங்கமும் மூலகாரணங்களிலே ஒன்றாக இருந்து செயல்பட்டு; அதன் மூலம் அந்தத் தொழிற்சாலை பெறுகிற பலாபலன்களில் பெரும்பங்கைத் தொழிலாளர்களுக்குக் கோரிப் பெறுவதில் தவறிருக்க முடியாது. " ஒரு புல் முளைக்கிற இடத்தில் இரண்டு புல் முளைத்திட வேண்டும் ". இதுதான் உற்பத்தித்திறன் என்பார்கள். அதுபோலவே ஒரு தொழிலாளியின் மனிதசக்தி உபயோகத்தினால் தற்போது கிடைக்கிற உற்பத்தியைவிடக் கூடுதலாக—அதே நேரத்தில் எளிதாக—செய்திடுவதற்கு என்னென்ன உபாயங்களைக் கையாள வேண்டுமென்பதனைத் தொழிலாளர்களும்—தொழிற்சங்கங்களும் சிந்தித்தாக வேண்டியது அவசர அவசியமானவைகளாகும்.

உற்பத்தித்திறன் என்கிற பெயரில் கடுமையான விளைவுகளைத் தரத்தக்க " ஆட்டோமேசன் " போன்ற இயந்திரங்கள் தற்போதைக்கு நம் நாட்டிற்கான உடனடித் தேவைகளாக அமைந்திட முடியாது. என்றாலும் நூதனக் கருவிகள்—புதிய முறைகள் இவைகளைக் கடைப்பிடித்துத் தொழில்களை வளர்த்தாக வேண்டும். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அதன் உற்பத்திப் பணிகளில் எவ்வித மாறுதல் செய்திடுகிற போதும் தொழிற்சங்கங்கள் மூலம் தொழிலாளர்களது கருத்துக்களையும் கேட்டுச் செயல் படுத்துவதில் தவறில்லை. உற்பத்தித்திறன் பெருகுவதில் கிடைக்கப் பெறுகிற பலன் தொழிலாளர்களுக்கும் கிடைக்கும் என்கிற நம்பிக்கையைத் தொழிலாளர்கள் மத்தியில் பெருக்க செய்திடுகிற பணி தொழிற்சங்கங்களின் தலையாய கடமைகளில் ஒன்றாகக் கருதிச் செயலாற்றிட வேண்டும்.

வாழ்க தொழிலாளர்கள்!
வளர்க தொழில்கள்!

போக்குவரத்தில் உண்மையான லாபம் சம்பாதிக்க
"லாபம் தரும் வண்டி" தேவை



7½ டன்
பார்கோ

முற்றிலும் புதிதாய் அமைக்கப்பெற்றது- முன்னர் இருந்ததைக் காட்டிலும் அதிக வலுவுள்ளது பார்கோ. இது உண்மையிலேயே நடைமுறைச் செலவைக் குறைக்கிறது. நடைமுறைச் செலவைப் பொறுத்ததுதான் லாபம் அல்லது நஷ்டம். GVW 26,000 பவுண்டு எடை உள்ள பார்கோ 7½ டன் சுமையை 120 hp பலத்துடன் லாகவமாக இழுத்துச் செல்கிறது. எவ்வளவு தூரம் வேண்டுமானாலும், எத்தனை முறை வேண்டுமானாலும் சளைக்காமல் இழுத்துச் செல்லும்.

எனவே பார்கோ உண்மையிலேயே 'லாபம் தரும் வண்டி' என்பதைக் காண்பீர்கள்.

120 bhp 6.354 டீசல் என்ஜின் — அபிவிருத்தி செய்யப்பெற்ற ஹெவி டியூட்டி புல் புளோட்டிங் ஹைபாய்ட் டிரைவ் ரியர் ஆக்ஸில் — உறுதியுள்ள சஸ்பென்ஷன் — அபிவிருத்தி செய்யப் பெற்ற தொந்தரவு இல்லாத 5 ஸ்பீட் கியர்பாக்ஸ்.

ஒவ்வொரு பார்கோவுக்கும் டிவிஎஸ்ஸின் சிறந்த பணி உண்டு.

சுலபமான தவணைகளில் பணம் செலுத்துதல், இன்ஷ்யூரன்ஸ், பாடி கட்டுதல், நியாயவிலையில் ஸ்பேர் உறுப்புகள், டயர்கள், ரீடிரெடிங் செய்தல் தேய்ந்து போன சாமான்களைப் புதுப்பித்தல், விரைவான நம்பகமுள்ள சர்வீஸ், அனைத்தையும் டிவிஎஸ் உங்களுக்கு ஒருசேர அளிக்கிறது.

டிவி சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ்
பிரைவேட் லிமிடெட் மதுரை
திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்-எர்ணாகுளம்.

சுந்தரம் மோட்டார்ஸ்
(உரிமையாளர்கள்: டிவி சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை)
மதராஸ்-பெங்களூர்-செகந்திராபாத்-விசாகபட்டினம்

TVS
உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

TVS-6450

ஒளி மயமான எதிர்காலத்தை உருவாக்குகிறது மதராஸ் ரிபைனரீஸ்!

நாடு முன்னேற்றமடைகிறது.

அந்நிய ஒத்துழைப்புடன் செயல் புரியும் தேசிய நிறுவனமான மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் பொருளாதாரத் தன்னிறைவு, மக்களின் வளமான வாழ்வு ஆகியவற்றிற்கு மகத்தான சாதனை புரிகிறது.

மக்களுக்கும், வர்த்தக, தொழில் துறைகளுக்கும் மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட், அநேக விதங்களில் சேவை செய்கிறது. முன்பு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல பொருள்களை உள்நாட்டிலேயே தயாரித்து, நாட்டின் முக்கியத் தேவையான அந்நியச் செலாவணியில் சேமிப்பு ஏற்படுத்துகிறது. குடும்பத் தலைவிகளுக்கு வீட்டு சமையலுக்கு எரிபொருள், மற்றும் மண்ணெண்ணெய், ஆகாய விமானங்களுக்கும், மோட்டார் கார்களுக்கும் பெட்ரோல், டீசல், மற்றும் கிரீஸ்போன்ற எண்ணெய்ச் சத்துப்பொருள்கள். உரத் தயாரிப்பிற்கு ''நேஃப்தா'' பெட்ரோ கெமிக்கல்களுக்கு ரசாயனப் பொருள்கள். இவற்றுடன், ''நேஃப்தா'' மற்றும் ''பர்னஸ் ஆயில்'' ஏற்றுமதி மூலம் நாட்டிற்கு இன்றியமையாத அந்நியச்செலாவணியையும் சம்பாதிக்கிறது.

தொழிற்துறையில்—ஒரு உர உற்பத்திச்சாலை, ட்ரான்ஸ்பார்மர் ஆயில் உற்பத்திச்சாலை மற்றும் மணலியில் உருவாகும் பெட்ரோகெமிக்கல் தொழிற்சாலை ஆகியவற்றிற்கு மதராஸ்ரிபைனரீஸ் லிமிடெட் ஒரு தாய் நிறுவனமாகத் திகழ்கிறது. இந்நிறுவனங்களால் அநேகருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. நாட்டுவளம் பெருகுகிறது.



மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட் 122-D, மவுண்ட் ரோடு, சென்னை-6.

12 NOV 1973
GOVERNMENT OF TAMIL NADU

உற்பத்தித் திறன்

எஸ். வேதமுத்து

பொருள் இன்றேல் வாழ்க்கை இருள் நிறைந்தது என்பதனை வள்ளுவர் ' பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு ' என்கிறார். பொருளினால் விளைவது செல்வம். ஒரு நாட்டிற்கு இன்றியமையாத அணிகளில் செல்வம் ஒன்று என்பதை

பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து

எனக் குறள் கூறுகிறது.

பொருளை ஆதாரமாகக் கொண்ட இயலே பொருளாதாரம் ஆகும். அது பொருள்களின் உற்பத்தி, பண்டமாற்று, பங்கீடு, நுகர்வு ஆகிய நான்கினையும் பற்றி ஆராய்கின்றது. இப்பொருளாதார இலக்கணத்தை அன்றே தம் சிறு பொருள் பதிந்த குறளில் பொய்யாமொழி நன்கு வகுத்து வைத்துள்ளார்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

உற்பத்தியின் மூலக் கூறுகளான இடம், மூலப் பொருள், உழைப்பு, முதலீடு, துணிவு ஆகியவற்றுள் உழைப்பின் பங்கு சிறப்பானது. பொருளாதார மதிப்பினை உருவாக்கக் கூடிய உணர்வுள்ள மானிட சக்தியையே உழைப்பு என்கிறோம். மனிதன் தன் கரத்தாலும் கருத்தாலும் கருவிகளைக் கையாண்டு பல்வேறு பொருள்களைப் பயனுறும் வகையில் கவினுற மாற்றியமைக்கும் செயலையே உற்பத்தி என்கிறோம். உற்பத்தியனைத்துமே நுகர்தற் பொருட்டேயாகும்.

மக்கட்தொகை பெருகப்பெருகப் பொருட்களின் தேவையும் அதிகரிக்கின்றது. நாகரிகமும் அறிவியலும் வளர வளரப் புதிய தேவைகள் தோன்றிய வண்ணம் உள்ளன. தேவைகள் நிறைவேற, வசதிகள் வாய்க்கப்பெற உற்பத்தியின் அளவை உயர்த்துவதன்றி வேறு வழியில்லை. உற்பத்தி உயர்வினால் விளையும் செல்வமே உண்மைச் செல்வமாகும். உற்பத்தி பெருகிட இரு வழிகளே உண்டு.

ஒன்று.—உற்பத்திப் பொருட்கள், சேவைகள் இவற்றிற்கான மூலப் பொருள்களின் அளவை அதிகப்படுத்துதல்—அதாவது புதிய தொழில்களை நிறுவுதல் அல்லது உள்ள தொழில்களை விரிவுபடுத்தல்.

இதற்கு அதிக முதலீடும், தேர்ந்த தொழிலாளரும் தேவைப்படும். வளர்ந்து வரும் நாடுகளில் இது உடனடியாகச் சாத்தியமில்லை. மேலும் இதனால் உற்பத்திச் செலவு குறையாது.

இரண்டாவது—இருக்கும் பொருட்களை, வளங்களை, கருவிகளைச் சிறப்புறப் பயன்படுத்தித் தற்போது ஆகும் செலவிலேயே அதிக உற்பத்தியினைக் காணுதல்.

இதற்குத் தொழிலாளர், தொழிலதிபர், அரசு இவர்களின் ஒத்துழைப்பே போதுமானது. இம்முறையினால் உற்பத்திச் செலவு குறைந்து ஆக்க விலை கட்டுப்படுத்தப்பட முடியும். வாழ்க்கைத் தரமும் உயர வழி இருக்கிறது.

கூர்ந்து நோக்குமிடத்து நம்நாட்டிற்கு இன்றைய நிலையில் இருப்பதைக் கொண்டு எந்த அளவு சிறப்புற உயர முடியும் என்ற எண்ணப்பாங்கு இன்றியமையாதது. இங்ஙனம் சேதாரம் தவிர்த்து, சிக்கனத்தை மேற்கொண்டு, ஒரு தொழிலைத் தரமுள்ளதாக, எளிதாக, மலிவாக, திறமையாக, சாமர்த்தியமாக, சீக்கிரமாக, சிரமம் இல்லாத சிறந்த முறையில், செவ்வனே செய்து முடிக்கும் திறனையே உற்பத்தித்திறன் என்ற சொல்லால் குறிக்கின்றோம்.

தொலைவில் ஒரு வண்டி சென்று கொண்டிருப்பதைக் கண்ணுற்ற மன்னன் ஒருவன், தன் பணியாட்களில் ஒருவனை ஏவி, அவ்வண்டியில் உள்ளது யாது என அறிந்து வரப் பணித்தான். அவனும் அவண் சென்று வினவி அவ்வண்டியிலே அரிசி மூட்டையிருப்பதாகப் பதிலிறுத்தான். அதைத் தொடர்ந்து 'அவ்வண்டியில் எத்தனை மூட்டைகள் உள்ளன, அவ்வண்டி எங்கிருந்து வருகிறது, எங்கு நோக்கிச் செல்கிறது, யாருடைய வண்டி அது. என்ற அரசனின் ஒவ்வொரு வினவிற்கும் அவன் திரும்பத் திரும்ப ஓடிப்போய் விசாரித்து வந்தான். இதனையே அரசனின் அமைச்சர் ஒரே முறையிலேயே சென்று எல்லா விவரங்களையும் அறிந்து வந்து அரசன் கேட்ட அத்தனை வினாக்களுக்கும் சரியான விடையிறுத்தார். அமைச்சர் காலத்தை மட்டுமின்றி வீண் சிரமத்தையும் தவிர்த்தார்.

இது போன்றே தொழில்களிலும் அன்றாட வாழ்விலும் வீண் முயற்சிகளைத் தவிர்த்து குறுகிய காலத்தில் குறைந்த உழைப்பில் அதிகப் பலன்களைக் காணும் திறனுக்கு உற்பத்தித் திறன் என்று பெயர்.

சிரமப்பட்டு மரமேறுவதை விடுத்து ஏணியைப் பயன்படுத்துவது, மூச்சு வாங்கப் பல படிகளை ஏறிக் கட்டடத்தின் உயரே செல்வதற்குப் பதில் லிப்டுகளை அமைத்துக்கொள்வது, நடந்து நெடுந்தூரம் செல்வதற்குப் பதில் ஊர்திகளை உபயோகிப்பது போன்ற புதிய அறிவியல் முறைகள், படைப்புகள் அனைத்துமே உற்பத்தித் திறன் என்ற உன்னதத் தத்துவத்தின் அடிப்படையில் தோன்றியவையே.

உற்பத்தித் திறன் என்பது புதியதோர் தத்துவமன்று, நம்மிடையே ஊறிப்போன, பழகிப் போன வாழ்க்கை முறைகளில் அதுவும் ஒன்று. ஆனால் இன்றையப் பொருளாதாரப் பின்னணியில் அதனைத் தனித்துச் சிறப்பித்து வலியுறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது உணரத்தக்கது.

செய்வினத்தை மட்டும் பெருக்குவதை உற்பத்திப் பெருக்கம் எனலாம். ஆனால் செலவினத்திற்கும் செய்வினத்திற்கும் உள்ள விகிதத்தினை உயர்த்துவதையே உற்பத்தித் திறன் உயர்வு எனக் கூறலாம்.

100 பேர் ஓர் இயந்திரத்தில் 100 பொருட்கள் செய்தால் தனி நபர் உற்பத்தித் திறன்—1.

அதே 100 பேர் அதே இயந்திரத்தில் 150 பொருட்கள் செய்தால் உற்பத்தித் திறன் 1.5 ஆக உயர்ந்து விடும்.

150 பேர் அதே இயந்திரத்தில் 150 பொருட்கள் செய்தால் உற்பத்தி அளவு 50 அதிகமாகலாம். ஆனால் உற்பத்தித் திறன் உயராமல் ஒன்றாகத்தான் இருக்கும்.

உற்பத்தித் திறனைப் பெருக்க இரு முறைகளைக் கையாளலாம்.

இரண்டுமணி நேரத்தில் இருபது பொருட்களைச் செய்வதை ஒரு மணி நேரத்தில் இருபது பொருட்களைச் செய்யலாம்,

அல்லது

இரண்டு மணிநேரத்தில் முப்பது பொருட்களைச் செய்யலாம்.

பத்து ஆட்கள் 100 பொருட்களைச் செய்வதை எட்டு ஆட்களைக் கொண்டே நூறு பொருட்களைச் செய்யலாம்.

அல்லது

பத்து ஆட்களைக் கொண்டு 150 பொருட்களைச் செய்யலாம்.

உற்பத்தித் திறனைப் பெருக்கப் பொருட்கள், கருவிகள், காலம், செய்முறை, பணம், ஆட்கள் இவையனைத்தையும் சீர்படுத்திச் செம்மையாகப் பயன்படுத்தல் அவசியம் என்பதனைத் தமிழ்மறை மிகத் தெளிவாக விளக்கியுள்ளது இக்குறளில்.

பொருள்கருவி காலம் வினைஇடனோ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

IN THE SERVICE OF
THE INDIAN AUTOMOBILE
INDUSTRY AND ROAD TRANSPORT

RANE (MADRAS) LIMITED

47, VELACHERI ROAD,
MADRAS-32.

MANUFACTURERS OF :—STEERING LINKAGES
TIE ROD ENDS
DRAG LINK ENDS
SUSPENSION JOINTS
TIE ROD & DRAG LINK
REPAIR KITS
SUSPENSION KITS AND
CLUTCH PLATES

அறிவியல் முறைப்படி உற்பத்தித் திறனைப் பெருக்க மூன்று முறைகள் வகுக்கப்பட்டுள்ளன வல்லுநர்களால். அவையாவன—

1. வேலை ஆராய்ச்சி (Work Study)
2. தகுதி ஆய்வு (Merit Rating)
3. வேலை மதிப்பீடு (JobE valuation)

இம்மூன்றினையும் நறுக்குத் தெறித்தாற்போல் தன் சிறு குறட்பாவில் வள்ளுவர் அறுதியிட்டுக் கூறுகிறார்—

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

'இதனை' என்பதன் மூலம் வேலை மதிப்பீட்டினையும்

'இதனால்' என்பதன் மூலம் வேலை ஆராய்ச்சியையும்

'இவன்' என்பதன் மூலம் தகுதி ஆய்வினையும் குறிப்பிடுகிறார்.

ஒரு வேலையைச் செய்யும் செயல்முறையைச் சீராக ஆராய்ந்து புது முறை வகுப்பது அவசியம். அதற்கு எந்த ஒரு வேலையையும் 'என்ன? எப்படி? எங்கே? எப்பொழுது?, யாரால்? என்ற கேள்விக் குறியுடன் அணுகி அதற்கான விடை காண முயல வேண்டும்.

வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம், ஆதலின் தக்காரைத் தொழிலில் அமர்த்துவதைத் திருவள்ளுவரும்

செய்வினை நாடி வினை நாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.

எனக் குறிப்பிடுகின்றார்.

உற்பத்தித் திறன் உயர்ந்தால்—

1. பங்குதாரர்களுக்கு—அதிக வருவாய் கிடைக்கும். சேமிப்பை மீண்டும் புதிய முதலீடுகளாக மாற்றலாம்.
2. நிருவாகத்திற்கு—தரமுள்ள பொருட்களைத் தயார் செய்து நுகர்வோரைத் திருப்தி செய்யலாம்; புதிய தொழில்களைத் தோற்றுவித்து வேலை வாய்ப்பினைப் பெருக்கலாம்.
3. நுகர்வோருக்கு—தரமான பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும். வாங்கும் சக்தி பெருகுவதால் வாழ்க்கைத்தரம் உயரும்.
4. அரசுக்கு—வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிக வருவாய் கிடைக்கும். மக்களுக்குப் பல நலப் பணிகள் செய்யலாம். அந்நியச் செலாவணியின் தேவை குறையும்; ஏற்றுமதியைப் பெருக்கி வெளிநாட்டு வாணிபத்தைப் பெருக்கலாம்.
5. தொழிலாளிக்கு—ஊதிய உயர்வு கிடைக்கும். வேலை நேரம் குறையும். அதிக ஓய்வு கிடைக்கும். வேலைப்பளுவும், விபத்துக்கான சூழ்நிலையும் குறையும். வேலையில் பல முன்னேற்றங்கள் கிடைக்கும். வேலை எளிதாகும். நல்ல வேலை நிலைகளும் வாழ்க்கை நிலைகளும் அமையும்.

இதனால்தான் உற்பத்தித் திறன் வளமையின் வாயில் எனக் குறிப்பிடப்படுகிறது. உற்பத்தித் திறன் என்பது ஓர் இலக்கம். கூட்டு முயற்சி, தனித்த ஒரு சாராரின் முயற்சியினால் மட்டுமே விளையமுடியாது. அதற்குத் தொழிலாளியின் மனப்பூர்வமான ஆக்க பூர்வமான ஒத்துழைப்புத் தேவை. புதிய முறைகளையும், சிக்கனச் சீரமைப்பினையும் தொழிலாளர்கள் விரும்பி வரவேற்ற போதிலும் அதில் ஈடுபடத் தயங்குவதற்கும் அஞ்சுவதற்கும் மூன்று முக்கிய காரணங்கள் உண்டு.

1. ஆட்குறைப்பு.—உற்பத்தியைப் பெருக்க ஓரளவு தானியங்கிகள் சில இடங்களில் தேவைப்படுவது உண்மையே, வரவேற்கத்தக்கதே. ஆனால்

'ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்'—என்ற குறளின்படி புதிய கருவிகளால் தம் வேலை வாய்ப்புக்கள் பாதிக்கப்படுமோ எனவும், புதிய வேலை வாய்ப்புக்கள் தோன்றாதோ எனவும் தொழிலாளர்கள் அஞ்சுகின்றனர். திட்டமிட்ட முறையில் வழி முறையோடு தொழிலாளரைக் கலந்து எடுக்கும் புதிய முயற்சிகள் நிச்சயம் பலனளிக்கும்.

2. வேலைப் பளு அதிகரிப்பு.—புதிய முறைகளால் தங்கள் வேலைப்பளு பெருகி விடுமோ என்ற ஐயம் எழுவது இயற்கையே. இதற்கான தக்க சூழ்நிலைகளை உருவாக்கி ஊக்குவிக்கும் திட்டங்கள் மூலமும், உற்பத்தித்திறனின் தேவையை உணர்த்துவதன் மூலமும் தொழிலாளர்களின் ஒத்துழைப்பை நாடிப் பெற முடியும்.

3. உற்பத்திப் பெருக்கின் விளைவில் பங்கு.—உற்பத்தியைப் பெருக்கினால் அதனால் வரும் விளைவில் தமக்கு உரிய பங்கு கிடைப்பதில்லை என்று உழைப்பவர் கருதும்போது இதற்கான திட்டவட்டமான சில கொள்கைகளை வகுப்பதன் மூலமும் அரசின் ஆதரவின் மூலமும் தொழிலாளர் கல்வி, தொழிலாளர்க்கு நிர்வாகத்தில் பங்கு அளிப்பதன் மூலமும் இப்பிரச்னைக்குநல்ல தீர்வுகாண இயலும்.
வினை செய்வான் கோடாமை கோடாதுலகு என்ற தமிழ்மறைப்படி, தொழில் செய்பவன் கோணாதிருக்க உலகத்தார் இயல்பு மாறாதிருக்கும். ஆகவே தொழிலில் வளமும் நலமும் அமைதியும் ஆக்கமும் விழையும் ஒவ்வொருவரும் நினைவிற் கொள்ள வேண்டிய குறள் ஒன்று உளது.

ஒல்லும் வாய்எல்லாம் வினைநன்றே, ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

உற்பத்தித் திறனே வளமையின் வாயில்!
உற்பத்திக்கூடமே இறைவனின் கோயில்!

வளர்க உற்பத்தித் திறன்!



உற்பத்தித் திறன் இயக்கமும் தொழில் உறவுகளும்

—இச்சிரோ ஷியோஜி (ஜப்பான்)—

எனக்குப் பேச அளிக்கப்பட்டிருக்கின்ற தலைப்பு 'ஜப்பானில் உற்பத்தித் திறன் இயக்கமும், தொழில் உறவுகளும்' என்பதாகும். முதன்மையாக, கடந்த 15 ஆண்டுகளாக, உற்பத்தித் திறன் ஜப்பானிய தொழிலாளர் இயக்கத்தால் எப்படிக் கையாளப்பட்டது என்பதை ஆராய விரும்புகிறேன். ஆனாலும், ஒவ்வொரு நாட்டிலும் நிலவுகின்ற தொழிலாளர் நிர்வாக உறவுகள் வெவ்வேறானது. இருப்பினும், நாம் ஜப்பானில் அடைந்துள்ள வரலாறு, புகழ் அனுபவம் ஆகிய உற்பத்திக் கழகத்தின் இதர உறுப்பு நாடுகளுக்கு மிகுந்த உதவியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

ஜப்பானில் 1955 முதல் தான் ''உற்பத்தித் திறன்'' என்ற சொல் தொழிலாளர்களாலும், நிர்வாகத்தினராலும், பயன்படுத்தப்பட்டது. இந்தச் சொல் அடிக்கடி விவாதத்திற்கு வருகிறது. இது ஜப்பானிய உற்பத்தித் திறன் கழகத்துடன் (JPC) ஒத்துப்போகிறது.

கடந்த 15 ஆண்டுகளில் ஜே. பி.சி. ஜப்பானிய பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரும் பங்கினைத் தந்துள்ளது. ஆகையால் இக்கழகம், ஜப்பானிய எல்லாப் பிரிவினராலும் பெரிதும் மதிக்கப்படுகிறது. இதனுடைய பெயரைத் தெரியாத சில மனிதர்களும் உண்டு. ஆனாலும் ஜப்பானில் 5 ஆண்டுகளுக்கு முன்பு 'உற்பத்தித் திறன்' என்ற சொல் பழக்கமில்லாத புதுச் சொல்லாக இருந்தது. இந்தச் சொல்லினுடைய அர்த்தமும், அதற்குப் பின்னால் அடங்கியுள்ள கருத்தும் சரிவரப் புரிந்துகொள்ளாத நிலையில் இருந்தபோதிலும், தொழிலாளர்களும் நிர்வாகத்தினரும் உற்பத்தித் திறனுடைய ஏற்றத் தாழ்வுகளை விவாதித்தனர்.

தொழிலாளர், நிர்வாகத் துறை வட்டாரங்களில் அத்தகைய தவறாகப் புரிந்துகொள்ளும் நிலை இருப்பினும் இன்றைக்குப் புரிந்துகொண்டிருக்கும் நிலையைவிட உற்பத்தித் திறன், அன்று வெவ்வேறு கோணங்களில் காணப்பட்டது.

உதாரணத்திற்கு, தொடக்கத்தில் தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் ஆகிய இரு பிரிவினர்களிடையே, ஒரு சிலரே ஜே. பி. சி-யை ஏற்றுக்கொண்டனர்.

''உற்பத்தித் திறனைப் பெருக்குவது நல்லது. ஆனால் அது நிர்வாகத்தினரின் உரிமையைப் பொறுத்தது. நாங்கள் தொழிற் சங்கங்களுடன் செயல்படுத்துவதை விரும்பவில்லை. அதிலும் பெரும்பான்மையான தொழிற் சங்கங்கள், உற்பத்தித் திறனைப் பெருக்குவதை விரும்பவில்லை'' என்று பெரும்பாலான மேலாளர்கள் கூறினர்.

ஆனாலும் இந்தப் பத்து ஆண்டுக் காலத்தில், பெரும்பாலான தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் ஆகிய இரு பிரிவினரும் தங்களுடைய எண்ணத்தைப் பெரிதும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது 1955-க்குப் பிறகு, தொழிலாளர், நிர்வாகத்தினர் ஆகிய இரு பிரிவினரும், தொழில் உறவுகளுக்கும், பொருளாதார—அரசியல் பிரச்சினைகளுக்கும் இதனுடைய முக்கியத்துவத்தைக் கற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்தப் பொருளாதாரச் சூழ்நிலையில், 1955-லிருந்து 1965 வரை தொழில் உறவுகளை, அரசியல் அளவுகோலால் அளந்து வந்தனர். இன்று சில அரசியல் சூழ்நிலைகள் இருப்பினும், பொருளாதாரச் சூழ்நிலைகளே, பிரச்சினைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

அமெரிக்காவுடன் செய்து கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கை ஒக்கினால் திட்ட தோல்வி ஒருமித்த கருத்துள்ள அரசியல் கட்சிகளின் ஒருங்கிணைப்பு ஆகிய விஷயங்களில் இன்னும் நாம் கவலை கொண்டுள்ளோம். இருப்பினும், வலுவான பொருளாதாரத்தையும் முக்கிய தொழில்களையும் நிறுவி உற்பத்தித் திறனை அதிகரித்து உலகச் சந்தையில் நமது பொருள்கள் போட்டியிடுகின்ற அளவிற்கு விரிந்த வலுவான பொருளாதார அடிப்படையினை உருவாக்குவது தலையாய கடமையாகும்.

தொழிற்சங்க அமைப்புகளில் கண்டுள்ள, நிலையான வளர்ச்சியின் காரணமாக இந்த மாற்றத்தை நாம் பெற முடிந்தது. அதனுடைய முக்கிய இரு அம்சங்கள் பின்வருமாறு :

முதலாவதாகப் புதிய சங்கங்களையோ அல்லது குழுக்களையோ அமைக்கும் இயக்கம் இருக்கிறது. அவ்விதம் ஏற்படுவதால் தற்போதைய தேசிய அமைப்புகளும் அரசியல் அல்லது இலட்சியம் சம்பந்தப்பட்ட வேறுபாடுகளும் மறைக்கப்படுகின்றன.

இரண்டாவதாக, ஜப்பானின் தொழிற்சங்கப் பொதுக் குழுவான சோகியோவின் வளர்ச்சி குன்றியுள்ளது. இக்கழகம் உற்பத்தித் திறன் இயக்கத்தை எதிர்த்தது. அதே நேரத்தில் சோமி என்னும் ஜப்பானிய தொழிலாளர் கூட்டுக் கழகத்தின் வளர்ச்சி பாராட்டுக்குரியதாகும். இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும்.

இத்தகைய சூழ்நிலையின் உண்மையான காரணமென்ன? தொழில் வாணிபத்தில் முதலீடு செய்யும் வரையில் தாராளமான மனப்பான்மை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் தொழில் நுட்ப அறிவும் புதிய கண்டுபிடிப்புகளும் தொழில் வளர்ச்சியில் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. அத்தோடு வேலைகளுக்கான தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.



ஆதலால், தொழிற் சங்கங்களுடைய நிலையான வளர்ச்சி உருவானது. வெளியேயும் உள்ளேயும் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளை மாற்றி, தொழிற் சங்கமும், தொழிற் சங்க இயக்கமும், தொழிலாளர் நல அமைப்புகளும் மாற்றி வைக்கப்பட வேண்டும் என்பதுதான், இந்த வளர்ச்சிக்குக் காரணம்.

அதாவது இயக்கத்தின் தன்மையை மாற்றி அமைக்கும் நிலையில் உள்ளது. இந்த அடிப்படையில் தொழில் உறவு நிலைகளை வளமாக்குவது இன்றியமையாததாகும்.

அதிலிருந்து ஜப்பானில் தொழிலாளருக்கும் நிர்வாகத்தினருக்கும், உற்பத்தித் திறனைப் பெருக்கவேண்டும் என்ற எண்ணம் முக்கியத்துவம் பெற்றது. தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே கருத்துப் பரிமாறிக் கொள்ள அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தற்சமயம் இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதாவது உற்பத்தித் திறன் முன்னேற்றத்திற்குக் கூட்டு ஆலோசனைத் திட்ட முறை அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. இம்முறையின்கீழ், முதன் முதலில், இக்கூட்டு ஆலோசனைத் திட்டமும் அதன் குறிக்கோளும் சந்தேகத்துடன் பார்க்கப்பட்டன. எனவே, நிர்வாகம் தனது விருப்பத்தைத் தொழிற் சங்கங்களுக்குத் தெரிவித்தது. ஆனால் தொழிற் சங்கங்கள் அரசியல் மற்றும் கொள்கைக் காரணங்களுக்காக அதை எதிர்த்தது. மேலும் இக்கூட்டு ஆலோசனைத் திட்டம் நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபட்டிருந்தது. எனினும் மொத்தத்தில் இரு பிரிவினர்களுக்கிடையே தொழில் அடிப்படையில் கருத்துப் பரிமாற முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

அண்மையில் நடைபெற்ற கணக்கெடுப்பில் 81 சதவிகிதம் தொழில் நிறுவனங்களில் இக்கூட்டு ஆலோசனை முறை கொண்டுவரப்பட்டுள்ளது. உற்பத்தித் தொழிற்சாலைகளில் 88 சதவிகிதமாக உள்ளது. டோமியைச் சேர்ந்த நிறுவனங்களில் 95 சதவிகிதமாக உள்ளது. அதே நேரத்தில் சோகியோ சங்கத்தில் 75 சதவிகிதமாக உள்ளது.

ஜப்பானில் கூட்டு சமரசத் திட்டத்துடன், தொழிலாளர்-நிர்வாக உறவு வரையறைக்குள் கூட்டு ஆலோசனைத் திட்டமும் உள்ளது. எனினும் அன்னிய நாடுகளின் நிலவரங்களில் அமெரிக்காவில் சமரச முறை (Bargaining) மட்டும் தான் உள்ளது. ஐரோப்பாவில் தொழிலாளர், நிர்வாகத்தினரிடையே தொழில் நிலையில் கூட்டு ஆலோசனை முறை நிலவுகிறது. மேற்கிலுள்ள தொழிற் சங்கங்கள், தொழிற்சாலைச் சங்கங்கள் அல்லது கைத்தொழில் தொழிற் சங்கங்களாகவே உள்ளன.

அவர்களுடைய நடவடிக்கைகளுக்கு வரையறுக்கப்பட்ட நிலை நாடு அல்லது தொழில் ஆகும். அந்த நிலையில் அவர்கள் உரத்த குரலில் பேசுகிறார்கள். ஆனால் தொழில் நிலையில் அத்தகைய குரலில் பேச முடியவில்லை.

ஆனால், ஜப்பானில், தொழிற் சங்கங்கள், தொழில்களுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளன. சாதாரண தொழிற்சங்கங்கள் இருந்த போதிலும், அவற்றின் செயல்கள் நாட்டின் நிலையிலோ அல்லது தொழிலின் வழியிலோ காணப்படவில்லை. ஆனால் அதே சமயம் ஜப்பானியத் தொழிற்சங்கங்கள் அவற்றின் செயல்களை நிறுவனங்களின் நிலையில் (Enterprise Level) நடத்தி வருகின்றன. அலுவலக ஊழியர்களும் இந்தச் சங்கங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், தொழிற் சங்கங்களுக்கு வியாபார நிலவரங்களும் தொழில் நிலைகளும் அவ்வப்பொழுது தெரிகிறது.

ஆகையால் அச்சங்கங்கள் தங்களது உறுப்பினர்களுக்கு உதவ நல்ல நிலையில் இருக்கின்றன.

ஐரோப்பிய தொழில் இயக்கத்தின் பெரிய குறையும் அதற்குக் காரணமும் என்னவென்றால், அதிகச் சக்தி பெற்றிருந்த போதிலும், அதிகச் சரித்திரப் புகழ் அடைந்தபோதிலும், அத்தொழிற் சங்கங்களுக்கு, அத்தொழிற்சாலையில் அவற்றிற்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. இதற்கு மாறாக, ஜப்பானில், தொழிற்சங்க்ங்கள், எல்லாப் பிரச்சினைகள் குறித்தும் தற்போதைய தகுதி, எதிர்கால வரவுகள் குறித்தும், வேளாண்மை, உற்பத்தி, தொழில் நுட்பம், வியாபாரம் போன்ற பிரச்சினைகளில் நிர்வாகத்துடன் சம உரிமையுடன் கலந்து உரையாடலாம். இந்த விஷயத்தில் ஜப்பானிய தொழிற் சங்கங்கள் மேற்கின் தொழிற் சங்கங்களைவிடப் பெரிதும் முன்னேற்றம் அடைந்துள்ளன என நினைக்கிறேன்.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் தேசீய அளவில், பேச்சுவார்த்தைகளும், சமரச முயற்சிகளும் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் அத்தகைய பழக்கத்தை ஜப்பானில் காணமுடியவில்லை. இது எங்களைப் போன்ற ஜப்பானியருக்குச் சிந்தனைக்குரிய பிரச்சினையாகும். தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரங்களையும், தங்களது நிறுவனங்களையும், அபிவிருத்தி செய்ய விரும்பினால், அவர்களுடைய தொழிலின் அமைப்பையும் உருவத்தையும் புதுப்பிக்க வேண்டும். மற்றும், ஒருங்கமைந்த தேசீய பொருளாதாரத்தை விரிவு படுத்த, வலுவடையச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதாவது ஜப்பானியத் தொழிற் சங்கங்களுக்கும், மேற்கு நாடுகளின் தொழிற் சங்கங்களுக்கும் உள்ள பெரிய வேறுபாடு என்னவென்றால், ஜப்பானிய தொழிற்சங்கங்கள், சிறிய அளவில் வலுவானவை அதாவது நிறுவன அளவில் — பெரிய அளவில் வலுவற்றவை — அதாவது தேசீய அளவில். இந்த முறைக்கு மாறுபட்டவை மேற்கு நாடுகளின் தொழிற்சங்கங்கள்.

எனவே, வலுவான தொழில் உறவுகளையும், கூட்டுறவு உறவுகளையும் உருவாக்குவதில், இரண்டு நிபந்தனைகளின் ஏற்றங்களை நன்கு தேர்ந்தெடுப்பதும் தாழ்வுகளை அப்புறப்படுத்துவதும் விரும்பத்தக்க செயல்களாகும்.

ஜப்பானில் கடந்த சில ஆண்டுகளாக, தொழிற் சங்கங்கள் தங்களுக்கெனத் தனித் தொழில் கொள்கைகளை வைத்துக் கொள்வதா அல்லது வேண்டாமா என்ற பிரச்சினை இருந்தது. இதைப்பற்றி இப்போது ஆராயப்படுகிறது. இந்த ஆராய்ச்சிக்கான காரணங்கள் பல உள்ளன. முதலாவதாகத் தொழிலாளியின் வாழ்க்கை நிலை,

அவன் வேலைபார்க்கும் தொழிலின் வளர்ச்சியிலோ அல்லது வீழ்ச்சியுடனோ இணைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அனுபவம் மூலமாகப் பெற்றுக் கொண்டுள்ளோம். முன்பு இடதுசாரித் தொழிற் சங்கங்களை சேர்ந்த குழப்பமடைந்த தொழிலாளர்கள், நிறுவனங்கள் தோல்வி அடைந்தாலும் எங்களது அமைப்புகள் செயல்படும் என்றார்கள். ஆகையால், பெரிய குழப்பங்களும், வேலை நிறுத்தங்களும் அடிக்கடி நடத்தப்படுகின்றன.

இரண்டாவதாக, தொழிலாளர்கள் மத்தியில், எதிர்காலத்தில் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளால் தங்களது எதிர்காலத்தைப் பற்றிக் கேள்விக் குறிகள் எழும்பிய வண்ணம் இருந்தன. அதாவது தொழிற்சாலையினுடைய கொள்கை பற்றியும், அதனை நடத்தும் முறையையும் நிர்வாகத்தினருக்கு விட்டுவிட்டு தங்களின் ஊதிய உயர்வுக்கும், தங்களது வாழ்க்கைநிலைகளை உயர்த்திக் கொள்வதற்கும் ஈடுபடுத்திக் கொள்வது.

ஜப்பானில், தொழிலாளர் நிர்வாகக் கூட்டுஆலோசனையைஎதிர்காலத்தில் எல்லா நிறுவனங்களுக்கும் தொழில்களுக்கும் விரிவுபடுத்துவது. தற்சமயம் இதற்கான ஆக்கவேலை, வாகனம், கப்பல் கட்டுதல், இரும்பு,எஃகு மற்றும் முதலிய தொழில்களில் நடந்து கொண்டிருக்கிறது.

இது குறித்து இந்த ஆண்டுத் தொடக்கத்தில் ஜப்பானிய உற்பத்தித் திறன் கழகத்தினர் எடுத்துரைத்த அறிக்கையின் ஒரு பகுதியை இங்கு வெளியிட விரும்புகிறேன்.

தொழிலாளர் நிர்வாகத்தினரின் செயல்களில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களின் விளைவாக, இரு பிரிவினருக்கும் தேவைப்படும் சமூகத் தேவைகளுக்காகத் தொழிலை நோக்கியிருக்கும் பிரச்சினைகளைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொள்கின்றனர்.

தேசிய வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்துள்ள தொழில்களை மாற்றி அமைக்கும் முயற்சியிலும் தொழில் கொள்கைகளிலும் தொழுற சங்கங்கள் பங்கு கொள்வதிலிருந்து அத்தகைய வேண்டுகோளை ஒத்துக்கொள்வதை அறிந்துகொள்ளலாம்.

இப்போது தொழிலாளர்களும் தொழில் நிர்வாகத்தினரும் கூட்டு ஆலோசனை முறையில் வெற்றி கண்டுள்ளனர். தொழில் அளவில் இப்போது இம்முறையை அனுசரிக்கும் முயற்சியின் அவசியத்தைச் செயல்படும் கட்டத்தில் உள்ளனர்.

தொழில் உறவு முறைகளும் உற்பத்தித் திறனும் ஒன்றோடு ஒன்றாய் இணைந்துள்ளன. உற்பத்தித் திறன் உயர்வில் தொழில் உறவு முறைக்கு முக்கிய இடமுண்டு.

பிரான்சு நாட்டு அறிஞர் ஜீன் புராஸ்டி ''உற்பத்தி உயர்வு உள்ளத்தின் உணர்வினைப் பொறுத்தது'' என்கிறார். எனவே, நாம் இந்த வாசகத்தை அடிக்கடி நினைவில் கொள்ள வேண்டும். அப்போதும் கூடத் தொழிலாளரும், தொழில் உற்பத்தித் திறனும் ஒருங்கிணைக்கப்பட்ட நிலையில் உள்ளனர் என்பதை மறந்திடலாகாது.

அயர்ஸ்மெல்டிங் பிரைவேட் லிமிடெட்

21/22, ஆலந்தூர் சாலை, சென்னை—32

தந்தி : 'இண்டெல்லாய்ஸ்'

தொலைபேசி : 801101 (2 லைன்கள்)

தயாரிப்புகள் :

'டாண்டம்' பேரிங் உலோகக் கலவை
'அயர்' வெள்ளீயக் கலவை
வெள்ளீயப் பூச்சு
'கோர்' செய்யப்பட்ட வெள்ளீயக் கம்பி
அலுமினியம் உலோகக் கலவைகள்
துத்தநாகக் கலவை—வார்ப்பட உருக்கு
செப்பு உலோகக் கலவைகள்
உலோக இணைப்பு ஃப்ளக்ஸ்
கால்வனைஸ்ட் உப்புக்கள்

தலைமை அலுவலகம் : கல்கத்தா
கிளை : புது டெல்லி

லண்டன் உறுப்பினர்: ஃப்ரைஸ் மெடல்ஸ் லிமிடெட்

உற்பத்தித் திறன் வளர்ச்சியும் பொதுக் கொள்கையும்

டாக்டர் சார்லஸ் உல்ப் (அமெரிக்க ஐக்கிய நாடுகள்)

உற்பத்தித் திறன், அதை எப்படி உயர்த்துவது என்பன பற்றிய விவாதத்தில் மூன்று வெவ்வேறு உற்பத்தித் திறன் கொள்கைகளையும் பாகுபடுத்திப் பார்க்க வேண்டும். அம்மூன்று கொள்கைகளும் முக்கியமானவைகள்தான். மூன்று கொள்கைகளுமே அடிக்கடி குழப்பத்தை விளைவிக்கின்றன.

உழைப்பு உற்பத்தித் திறனே அம்மூன்றினுள் முதன்மையானதாகும். மூலதன உற்பத்தித் திறன் இரண்டாவதாகும். மூலதனத்தின் ஒவ்வொரு குறிப்பிட்ட மூல அளவுக்கும் கிடைக்கும், வெளியீடே (Out Put) மூலதன உற்பத்தித் திறன் எனப்படுகிறது. (மூலதனத்தைப் பற்றிய வரையறுப்பில், விலை மதிப்புக் குறைவை எப்படிக் கருதுவது, ஒருவர் மூலதன இருப்பைவிட மூலதனத்தின் சேவையிலேயே கருத்தைச் செலுத்த வேண்டுமா என்பன போன்ற சிக்கல்களை நான் பொருட்படுத்தவில்லை.) மூன்றாவது கொள்கை மொத்த காரணி உற்பத்தித் திறன் (Total factor Productivity) எனப்படுகிறது.

ஒருங்கிணைந்த உள்ளீடுகளின் (In Puts) மூல அளவுக்குக் கிடைக்கும் வெளியீடே (Out Put), மொத்த காரணி உற்பத்தித் திறன் எனப்படுகிறது. சில கொள்கைகளின்படி, உள்ளீடுகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் உழைப்பு மற்றும் மூலதனச் சொந்தக்காரர்கள் பெறும் வருவாய்ப் பங்கீடாகவே உள்ளது.

ஒருவர் பொருளாதார வளர்ச்சியிலும், அதை எவ்வாறு துரிதப்படுத்துவது என்பதிலும் அக்கறை கொண்டிருந்தால், இந்த வெவ்வேறு உற்பத்தித் திறன் அளவுகளில் உள்ள வேறுபாடுகளை நாம் கண்டறிய வேண்டியது அவசியமாகும். வளர்ச்சி முறையில் மூன்றுமே ஆர்வம் ஊட்டுவதாகவும், முக்கியத்துவம் வாய்ந்ததாகவும்அமைந்துள்ளன.

உழைப்பு உற்பத்தித் திறனில் காணப்படும் உயர்வு மதிப்பு வாய்ந்தது. இதுவே, வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் உயர்வைக் காட்டும் கருவியாக அமைந்துள்ளது. இக்கருவி காட்டும் உயர்வு, நாட்டின் பொருளாதார நல்வாழ்வைப் பொறுத்தவரையில், ஈடுபடுத்தப்பட்டுள்ள உழைப்புச் சக்தியின் அளவுக்கே இருக்கும்.

உயர்த்த முழுக் கவனம் செலுத்தினாலும், மற்றுமொரு வரையறைக்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டியுள்ளது. அந்த வரையறை மூலதனச் சொந்தக்காரர்களுக்குக் கிடைக்கும் பயன்களின் வளர்ச்சியைக் குறைக்கக் கூடும்.

உற்பத்தித் திறன் உயர்வில் மூன்றாவது அளவான மொத்த காரணி உற்பத்தித்திறனே அம்மூன்றினுள் பலவகையிலும் பரந்து விரிந்ததும் பயனுள்ளதுமாகும். ஒருவகையில் திறமையின் வளர்ச்சிக்கு அதுவே தூய்மையான முறையாகும். எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால், உழைப்பு உற்பத்தித் திறன் உயர்வு, அதிக மூலதனச் செறிவின் காரண

டாக்டர் உல்ப் ஆசிய உற்பத்தித் திறன் மாநாட்டுத் தொடரில் 19-8-1970 அன்று ஆற்றிய உரையிலிருந்து எடுத்துத் தொகுத்துக் கட்டுரையாக வெளியிடப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் அவருடைய சொந்தக் கருத்துக்களேயாகும்.

வியாபாரக் குறைபாடு, மற்றும் சில இதர சூழ்நிலைகள் ஆகியவைகளுக்குக்கேற்பவே, வேலையில் அமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளியின் சராசரி உற்பத்தியளவும் அதிகரிக்கும். இது வேலைவாய்ப்பின்மையின் விகித உயர்வையோ அல்லது வளர்ச்சியையோ பொருட்படுத்தாது.

மூலதன உற்பத்தித் திறன் உயர்வும் மிகவும் முக்கியமானதாகும். இதுவே உள்ளீடுகளின் திறமையான உபயோகத்தைக்காட்டும் கருவியாக உள்ளது. குறிப்பாக, வளரும் நாடுகளில் உள்ளீடுகளின் திறமையான உபயோகம் மிக மிகக் குறைவாகவே உள்ளது. ஆனால், மூலதன உற்பத்தித் திறனை

மாகவே இருக்கலாம் ; ஆனால் மூலதன உற்பத்தித் திறன் உயர்வு, சாதாரணமாக அதிக உழைப்புச் சக்தியின் காரணமாகவே இருக்கலாம். இதற்கு மாறாக, மொத்த காரணி உற்பத்தித் திறன் உயரவேண்டுமானால், ஒருங்கிணைந்த உள்ளீடுகளின் மூல அளவுக்கு வெளியீடு அளவு உயர்ந்து இருக்க வேண்டும். எனவே இதைத் திறமையின் உயர்வு எனலாம்.

திறமையின் உயர்வு உற்பத்தி முறைகளிலும், உற்பத்திப் பொருள்களிலும் புதுமையைத் தோற்றுவிப்பதுடன், உள்ளீட்டுப் பொருள்களின் தரத்திலும் முன்னேற்றம் ஏற்படச் செய்கிறது. எந்தெந்தக் குணங்கள் முக்கிய

மானவைகளாகக் கருதப்படுகின்றனவோ அவைகளிலெல்லாம் சரியான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதும், ஒரு பொருள் தொடர்ந்து நிலைபெற்று இருக்கச் செய்வதுமே (Raisond'etre) ஆசிய உற்பத்தித் திறன் கழகத்தின் கொள்கையாகும்.

2

மூலதன உள்ளீட்டை உயர்த்துவதும், அதன் மூலம் மூலதன உழைப்பு விகிதத்தை உயர்த்துவதுமே வளர்ந்து வரும் நாடுகளில் வாழ்க்கைத் தரத்தையும், உழைப்பு உற்பத்தித் திறனையும் விரைவாகப் பெருக்குவதற்குள்ள வழி என்று பெரும்பாலான பொருளாதார நிபுணர்கள் எண்ணி வந்தார்கள் என்பதை நான் ஈண்டுக்குறிப்பிடுவது பொருத்தமுடையது என்றே எண்ணுகின்றேன். இது முக்கியமானது என்பதில் ஐயமில்லை. ஒருவர் உலகைச் சுற்றிலும் உள்ள நாடுகளிலெல்லாம் கண்ணோட்டம் செலுத்தப் பார்த்தால், ஒருசில நாடுகளில் மட்டுமே வியக்கத்தக்க விரைவான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது தெரியும் ; அந்நாடுகளில் மட்டுமே ஆண்டிற்கு 8 அல்லது 9 சத அளவுக்கு மேல் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும், மூலதன உள்ளீடு அந்நாடுகளில் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என்றும் சொல்லலாம். ஆயினும் திறமையின் உயர்வு, மொத்த காரணி உற்பத்தித் திறன். ஆகியவைகளை வற்புறுத்துவதற்கு வலிவுள்ள காரணங்கள் இன்னும் உள.

மூலதன உள்ளீடு உயர்வு, துரிதமான வளர்ச்சியிலிருந்தே ஏற்படுவதாகவும், மூலதன உள்ளீடு உயர்விலிருந்தே துரிதமான வளர்ச்சி ஏற்படுவதாகவும் தோன்றுவது ஒரு காரணமாகும். லெய்பென்ஸ்பீன் அவர்களால் சமீபத்தில் தோற்றுவிக்கப்பட்ட கொள்கை மூலதன-வெளியீடு விகிதம் வளர்ச்சி விகிதத்திற்குத் தலைகீழாக மாறுபடுவதாக உள்ளது. அவரது புதிய கண்டுபிடிப்பு, காரணத்திற்கான செயல் வளர்ச்சியிலிருந்து மூலதனத்தை நோக்கியும், மூலதனம் அதற்கு எதிரிடையாகவும் செல்கிறது என்ற கொள்கைக்கு ஒத்ததாகவே உள்ளது. வளர்ந்து வரும் நாடுகளில் உள்நாட்டு வெளி நாட்டு ஆதாரங்களிலிருந்து மூலதனம் கிடைப்பது மிகவும் அரிதாக இருப்பதே திறமையை வற்புறுத்துவதற்குள்ள மற்றுமொரு காரணமாகும். திறமையை மேலும் வலியுறுத்துவதற்குள்ள மற்றொரு காரணம், வளரும் நாடுகளில் வேலைவாய்ப்பை விரிவு படுத்தும் குறிக்கோளுடன் தொடர்புடையதாகவும், மூலதன—உழைப்பு விகித உயர்வு என்னும் சாதனைக்குப் பாடுபடுவதாகவும் இருப்பதேயாகும்.

நீண்ட கால அடிப்படையில் விரைவாக வளரும் அல்லது நடுத்தரமாக வளரும் நாடுகளே திறமை உயர்வு பெறுகிறது. அல்லது அந்த நாடுகளிலேயே மொத்த காரணி உற்பத்தித் திறன் அதிகமாக உள்ளதாகத் தெரியவருகிறது.

இக்காரணங்களினால் மொத்த காரணி உற்பத்தித் திறனில் அத்தகைய உயர்வை எவ்வாறு ஏற்படுத்த முடிந்தது ? அத்தகைய உயர்வுக்குரிய மாறுபடும் கொள்கைகள் அல்லது செயல்கள் என்ன ? அவைகள் எவ்வாறு ஒத்துழைக்கின்றன ? அத்தகைய மாறுபட்ட செயல்களுடன் நெருங்கிய தொடர்புள்ளவைகள் எவை ? என்பன போன்ற கேள்விகளைக் கேட்கத் தோன்றும்.

இக் கேள்விகளுக்குரிய பதில் முழுஅளவில் நமக்குத் தெரியாது. மொத்த-காரணி உற்பத்தித் திறன் விரைவான வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடையதாகத் தெரிய வருகிறது என்பதை அனுபவ அடிப்படையான கணக்குகள் குறிப்பிடுகின்றன. இதற்கு எதிரிடையாக மெதுவாக வளரும் பொருளாதாரத்தில் ஏற்படும் வளர்ச்சி உயர்ந்த திறமையினாலன்றி முழுக்க முழுக்க உள்ளீடுகளின் உயர்வு காரணமாகவே அமைந்துள்ளதாகத் தெரிகிறது. வளர்ச்சி முறைக்குத் திறமை உயர்வு ஒரு காரணமாக அல்லது சக்தி வாய்ந்ததாக இயங்குகிறதா என்பது நமக்கு உண்மையிலேயே தெரியாது ; அல்லது எந்த அளவுக்கு அது காரணமாக உள்ளது என்பதும் நமக்குத் தெரியாது.

இவ்விளக்கங்கள் சம்பந்தமாகப் பலவகைக் கொள்கைகள் உள்ளன. அவை, குறைந்த அளவிலிருந்து உயர்ந்த உற்பத்தித்திறன் உபயோகத்திற்காக மூலதனத்தையும் உழைப்பையும் குவித்தல் (எடுத்துக் காட்டாக கிராம வேளாண்மைத் தொழிலிலிருந்து வெளியேறி நகர்ப்புறத் தொழிற்சாலை வேலைகளுக்குச் செல்லுதல்) ; திறமையையும் உள்ளீடுகளின் தரத்தையும்—அதுவும் குறிப்பாக மனித உள்ளீடுகளைக் கல்வி, பயிற்சி ஆகியவற்றின் மூலமாக மேம்படுத்தி-பெருமளவில் இயங்கச் செய்து அதிக வருவாயை ஏற்படுத்தல் ; புதிய முறைகள், உற்பத்திப் பொருள்கள், தொழிற்சாலைகள் ஆகியவைகளைத் தோற்றுவித்தல் ; நிருவாகமுறைகளில் சீர்திருத்தம் செய்தல் ஆகியவைகளாகும். இவ்விளக்கங்களெல்லாம் உண்மையிலேயே முக்கிய அங்கம் வகிக்கின்றன ; அடிக்கடி அவைகள் ஒன்றுக்கொன்று பலப்படுத்திக்கொள்வதாகவும் தெரிய வருகிறது. எது எப்படியிருந்தாலும் ஒவ்வொரு விளக்கமும் ஒருவகையில் வேறுபட்ட கொள்கை நடைமுறையை நோக்கி அழைத்துச் செல்வதாக இருந்தாலும், வெவ்வேறு விளக்கங்களுக்கிடையில் உள்ள தொடர்பு முக்கியத்துவத்தை அறிந்துகொள்வது மதிப்பு வாய்ந்ததாக இருக்கும்.

3

தற்பொழுது பொருளாதார வளர்ச்சியைப் புரிந்துகொள்வதிலும், அவைகளைப் பகுத்தாராய்வதிலும் பொருளாதார நிபுணர்களிடையேயும், தொடர்புடைய மற்றவர்களிடையேயும் தீவிர கருத்து மாறுபாடு நிலவுகிறது. உள்ளீடுகளின் தரமேம்பாட்டிற்கு மொத்த-காரணி உற்பத்தித் திறன் உயர்வு எந்த அளவுக்குத் தொடர்பு கொண்டுள்ளது என்பதிலே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. உள்ளீடுகளின் தர மேம்பாட்டில் உழைப்பு மூலதனம் ஆகிய இரண்டுமே அடங்கும். ஆனால் அவைகள் உள்ளீடுகளை அளப்பதற்கு நாம் பயன்படுத்தும் மூல அளவில் முழுமையாகப் பிரதிபலிப்பதில்லை. உள்ளீடு

காரணியில் அடங்காத புதிய கருத்துக்கள், அறிவு, தொழில் நுணுக்கம் ஆகியவைகளின் காரணமாக எந்த அளவுக்கு மொத்த காரணி உற்பத்தித் திறன் உயருகிறது என்பதிலும் கருத்து மாறுபாடு உள்ளது.

" உருக்கொடுக்கும் " அனுமானம் (" Embodiment " Hypothesis) எனப்படும் முதல் விளக்கம், உள்ளீடு தரமேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டால், மொத்த காரணி உற்பத்தித்திறனின் பெரும்பகுதி உயர்வுக்கும் முழு அளவில் விளக்கமளிக்க முடியும் என்று விவாதிக்கிறது. உண்மையிலேயே அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இக்கருத்து ஜோர்ஜென்சன், கிரிலிச்சிஸ் என்பவர்களால் விவரங்களுடன் விளக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்கு மாறுபட்ட கருத்தும் நிலவுகிறது. பின் உள்ளீடுகளின் திறமை—சமநிலையை உயர்த்துவதற்குத் தேவையான ஈடுகொடுக்கப்பட்டால் பின்பு—உற்பத்தியளவின் மூல அளவு, திறன் அடிப்படையில் உயரும் என்ற தத்துவப்படி—உற்பத்தியளவிலும் அதற்கேற்ற ஈடு சொடுக்கப்பட வேண்டும். இப்புதிய கருத்தை உருக்கொடுக்காத அனுமானம் ('' Disembodiment hypothesis '') என்று கூறப்படுகிறது. இக்கருத்து, சமீபத்திய பொருளாதார அளவை வேலைகளிலும் பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாக மூலதனம், உழைப்பு ஆகிய உள்ளீடுகளில் முழு அளவில் அடங்காத புதிய கருத்துக்கள், புதிய தொழில் நுணுக்கங்கள், புதிய நிருவாக முறைகள் மற்றும் இதரமுறைகளின் முக்கியத்துவம் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

'' உருக்கொடுக்காத '' அனுமானத்தின் அடிப்படையில் பேராசிரியர் பெல்நர் என்ற பொருளாதார நிபுணர் அமெரிக்க ஐக்கியநாடுகளின் விவரங்களை வைத்து அனைவரது கவனத்தையும் கவரும் வண்ணம் விளக்கியுள்ளார். அவர் '' முன்னேற்றம் ஏற்படுத்தும் ''. செலவுகளுக்கு ('' Progress generating expenditure '') ஏற்பவே உற்பத்தித்திறன் உயரும் என்று கூறியுள்ளார். தனியார் துறையில் தோன்றும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு ஆகும் செலவு, தொழில் நுணுக்க அறிவு வளர்ச்சியையும் மேம்பாட்டையும் [illegible] அரசாங்கத்தின் முதலீடுகளில் செலவிடப்படும் அதிகத்தொகை ஆகியவையே முன்னேற்றம் உண்டாகும் செலவில் முக்கியமானவைகளாகும். அறிவு—கருத்து தோற்றுவிக்கும் இத்தகைய செலவுகளுக்கேற்பவே உற்பத்தித்திறன் உயர்ந்துள்ளதாகவும், 1953-ஆம் ஆண்டில் 13 சதமாக இருந்த ஆண்டு உற்பத்தித்திறன் 1966-ஆம் ஆண்டில் 60 சதமாக உயர்ந்துள்ளது என்றும் பெல்நெர் அவர்கள் கண்டு பிடித்துள்ளார்.

இக்கருத்தில் மேலும் விரிவாகச் செல்லவேண்டுமானால், அதிக நேரம் ஆகும் என அஞ்சி, விரிவாகச் செல்ல நான் விரும்பவில்லை. பெல்நெர் அவர்களின் முடிவுகள் ஆர்வம் தரத்தக்கதாகவும், ஜப்பானின் எதிர்கால வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தகுந்த பொருத்தமுடையதாகவும் இருக்கும் என எண்ணுகின்றேன். அதே நேரத்தில் அவரது முடிவுகள் குறைந்த அளவு வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளின் வளர்ச்சிப் பிரச்சினைக்குக் குறைந்த அளவு பொருத்தமுடையதாகவே இருக்கும் என்றும் ஐயப்படுகின்றேன். தகுந்த மாற்றங்களுடன் அவரது முடிவுகளைக் குறைந்த அளவு வளர்ச்சி பெற்ற நாடுகளில் பயன்படுத்தினால்தான், பயன் தரக்கூடியதாக இருக்கும்.

> தாங்கள் பெருததை மற்றவர்களாகிலும் பெற வேண்டும் என்ற எண்ணம்தான் தமிழ் நாட்டுக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பாக உள்ளது. நாம் பெற்றதைக் காட்டிலும் மற்றவர்கள் அதிகம் பெறவேண்டும் என்ற நினைப்பே சமுதாயம் வளர்ந்து செல்லக் காரணமாகவும் உள்ளது.
>
> பேரறிஞர்—அண்ணா

இறுதியாக, உற்பத்தித்திறன் பற்றிய கருத்து மாறுபாட்டில் சிலமுக்கியமான படிப்பினைகள் கிடைத்துள்ளதாகவும், குறைந்த அளவு [illegible] கொள்வதற்காக வேண்டிச் சிறப்பாக அப்படிப்பினைகளை வலியுறுத்த வேண்டும் என்றும் நான் கருதுகின்றேன்.

(1) திறமையிலும், மூலதனம் உழைப்பு ஆகிய உள்ளீடுகளின் உயர்விலும் மேம்பாடு ஏற்படுத்துவது, விரைவான வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவைகளாகும்.

(2) அத்தகைய மேம்பாடு உற்பத்தி முறைகள், உற்பத்திப் பொருள்கள், நிருவாக அமைப்பு, நிருவாக முறைகள் ஆகியவற்றில் விரிவான அளவிலும் தொடர்ந்த முறையிலும் புதுமையைத் தோற்றுவிப்பதற்குத் தேவைப்படுகிறது.

(3) புதுமைகள் மலர தகவல்களைப் (தொழில் நுட்பக்கல்வி உற்பத்திப் பொருள்கள், விற்பனைக் கூடங்கள், செய்முறைகள் ஆகியவற்றில்) பெறுவதற்குரிய திருந்திய வழி தேவைப்படுகிறது. அதேபோல் வலிவுள்ள விற்பனைக் கூடங்களும் திறமை, புதிய கண்டுபிடிப்பு, அதிக உற்பத்தித் திறன் ஆகியவைகளுக்குக் காரணமாயிருந்தவர்களுக்கு மதிப்பளித்தல், வெகுமதி அளித்தல் ஆகிய தூண்டுதல்களும் தேவைப்படுகின்றன.

(4) மிகவும் வளர்ச்சிபெற்ற நாடுகளிலிருந்து எப்படிச் செய்வது என்ற நுணுக்கங்களை அறிந்து அவைகளை அப்படியே மேற்கொள்ளுவதை விடத், தகுந்த மாற்றங்களைச் செய்து கொள்வதும் அவசியமாகும்.

இத்தகைய கடமைகளைச் செய்யவே, ஆசிய உற்பத்தித் திறன் கழகம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளதாக நான் நம்புகின்றேன். வளர்ந்து வரும் நாடுகளில் அடுத்துவரும் பத்தாண்டுகளிலும் இத்தகைய கடமைகளைச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். இத்தகைய வழிமுறைகளில் நாம் செல்வதையே ''உற்பத்தித் திறன் உயர்வு மூலமே முன்னேற்றம்'' என்ற இம்மாநாட்டின் குறிக்கோள் வலியுறுத்துகிறது.

நிறுவிய ஆண்டு 1936. தொலைபேசி எண் : 108.

எங்கள் நல் வாழ்த்துக்கள்

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடையது !

தினசரி உபயோகத்திற்குச் சிறந்து விளங்குவது !

எண்ணெய்க் குளிப்பிற்குச் சிறந்தது!

நறுமண சீயக்காய் தூள் REGD No. 13817

வெண்சங்கு

சீயக்காய்த்தூள் எங்கும் கிடைக்கும்

3 காசு, 100 கிராம், 200 கிராம் பாக்கெட்டுகள்
தனிச் சிறப்புடையவைகள்

நறுமலர் நறுமணம் கமழ்வது



செல்வம் ராணி & சன்ஸ்
ஸ்பெஷல்
ஊதுபத்திகள்

வெண்சங்கு மார்க் சேமியா உருசியில் சிறந்தது

தயாரிப்பாளர்கள் :

எஸ். பெத்தண்ண நாடார் & சன்ஸ்
வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை
தஞ்சாவூர்



தொழில்களில் உற்பத்திச் செலவைக் குறைக்க...

வேகமான மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலம் இது. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வளர்ந்தபடி இருக்கின்றன. அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காக மட்டுமின்றி, ஏற்கனவே கண்டு பிடிக்கப்பட்ட அறிவியல் நுணுக்கங்களைக் கொண்டு வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் மனிதன் தன் படைப்புத் திறனைப் பயன் படுத்திக்கொண்டு வருகின்றான். உற்பத்தியைப் பெருக்குவதன் வாயிலாகவும், உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதன் மூலமும் தான் வளம் பெருக முடியும் என்பதை மக்கள் உணர்ந்து வருகிறார்கள். கடந்த பத்தாண்டுக் காலத்தில் தொழில் உற்பத்தி சில நாடுகளில், குறிப்பாக ஜப்பான், ஜெர்மனி, ஆகியவைகளில் அற்புதம் என்று சொல்லத் தக்க அளவில் பெருகியிருக்கிறது. இந்த நாடுகளில் இவ்வெற்றிக்குக் காரணமாக இருந்த அம்சங்கள் பல. அவற்றில் குறிப்பிடத் தக்கவை இரண்டு. தொழிலாளர் உற்பத்தித்திறன் பெருகியிருப்பதும், வெளிநாட்டுச் சந்தைகளில் போட்டி போடத் தக்க அளவில் பொருள்களின் உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதில் எல்லாப் பிரிவினரிடையேயும் தோன்றியுள்ள உணர்வும் இந்த முக்கியமான காரணங்கள் ஆகும்.

இந்தியாவின் நிலை

ஆனால் இந்தியாவில் போதுமான அளவில் இயற்கை வளங்கள், ஆள் பலம் எல்லாம் இருந்தும், யாது காரணம் பற்றியோ, பொருளாதாரத் துறையில் நமது முன்னேற்றம் குறிப்பிடத் தக்க அளவில் இல்லை. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் ஓரளவு வெற்றி கண்டிருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. ஆனால், நுண்மையான அளவிலும் சரி, பரந்த முறையிலும் சரி, உற்பத்தியைப் பெருக்குவதற்கு, நமது இயற்கை வளங்களையும் ஆள் பலத்தையும் நாம் முழுமையாகப் பயன்படுத்தாத நிலை இருந்து வருகின்றது. இந்தப் பின்னடைந்த நிலைமைக்கு முக்கியமான காரணங்கள் பின் வருமாறு :—

(அ) பொருள் வாங்கி உபயோகிப்பவர்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையில் தரமான பொருட்களை உற்பத்தி செய்வதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. இதனால் காப்பு முறை கோரும்படியான நிலைமையும், குறைந்த விற்பனையுமே இருந்து வருகின்றது. திறமைக் குறைவையும், உற்பத்திச் செலவு மிகுதியாக இருக்கும் நிலையையும் ஈடு செய்ய விலையைத் தூக்கும் போக்கே இருந்து வந்திருக்கிறது. இதனால் சர்வ தேசச் சந்தைகளில் நமது பொருட்களுக்கு அதிக விலை குறிப்பிடும் படியான நிலைமை ஏற்பட்டது.

(ஆ) நிர்வாகத் திறன் கலையிலும் நாம் பின்னடைந்தவர்களாக இருக்கிறோம். பொருள் உற்பத்தியைப் பெருக்கவும் உற்பத்திச் செலவுகளைக் குறைக்கவும் உதவும் முறையில் நிர்வாக முறை நுட்பங்கள் ஏற்ற முறையில் கையாளப்படவோ, பயன் படுத்தப்படவோ இல்லை.

உற்பத்தித் திறனும் செலவுக் குறைப்பும்

உற்பத்திப் பலனுக்கும் உற்பத்திச் செலவுக்குமிடையே உள்ள விகிதாச்சாரம்தான் உற்பத்தித் திறன் என்று சொல்லத் தக்கது ஆகும். உற்பத்தி ஆதாரங்களையும் செலவுகளையும் அதிகபட்ச அளவுக்குப் பயன் படுத்திக் கொள்வது மூலமே பொருள் உற்பத்தி பெருக முடியும். உற்பத்திச் செலவுகளைக் குறைப்பது என்பதிலும் இதே காரணங்கள் பொருந்தும். தொழில் உற்பத்திச் செலவுகளைக் குறைப்பது என்னும் போது, எல்லா விதமான சேதாரங்களையும் குறைத்து, ஆள் பலம், பொருட்கள், இயந்திரங்கள், பணம் ஆகிய நான்கினையும் இன்னும் மேம்பட்ட முறையில் பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தல் அவசியம். சுருக்கமாகச் சொல்வதானால், எந்தத் தொழிலிலும், எந்த நிறுவனத்திலும், உற்பத்தி அளவைப் பெருக்குவதற்குச் செலவுகளைத் திட்டமாகக் குறைப்பது இன்றியமையாதது.

செலவுக் குறைப்பு என்றால் என்ன?

விற்பனைச் சந்தையில் இன்னின்ன பொருள்தான் கிடைக்கும் என்ற நிலைமாறி, எந்தப் பொருள் வேண்டுமானாலும் கிடைக்கும் என்ற நிலையைக் காண்பதற்கான மாற்றம் படிப்படியாக நிகழ்ந்து வருகின்றது. இத்தகைய நிலையில் கடந்த பத்தாண்டுகளாகப் பொருள் உற்பத்திச் செலவுக் குறைப்பு என்ற சொல் இந்தியா எங்கும் அடிபட்டு வருகின்றது. இதன் விளைவாகப் பல்வேறு நிறுவனங்களின் கண்ணோட்டத்திலும் போக்கிலும் ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளது. பல்வேறு பகுதிகளிலும், உற்பத்தித் திறனைப் பெருக்குவதிலும் செலவுகளைக் குறைப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

செலவுக் குறைப்பு என்று சொல்லும் போது ஒரு பொருளின் உற்பத்திக்காக அல்லது ஒரு வேலையை முடிப்பதற்காக ஏற்படும் பல்வேறு செலவுகளையும் பகுத்து ஒரு முறை வழி மூலம் ஆய்ந்து, பொருளின் தரமோ, வேறு பாதகமோ ஏற்படாத வகையில் தவிர்க்கப் படக்கூடிய மிகு செலவினங்களை அல்லது மறைமுகச் செலவினங்களைக் குறைக்க வழி காண்பதேயாகும்.

எஸ். என். லால்

செலவுக் குறைப்பு என்பது எல்லோராலும் கையாளப்படக் கூடிய மாய மந்திரம் அல்ல.

இடைவிடாத முயற்சி, ஆக்கரீதியான சிந்தனை, கடுமையான உழைப்பு, எல்லாப் பிரிவிலிருந்தும் ஒத்துழைப்பு இவை அனைத்தும் இதற்குத் தேவை. இப்படிச் செய்துவிட்டால் பலன் மிக அருமையானதாக இருக்கும். முறையான செலவுக் குறைப்புத் திட்டங்களின் விளைவாக இந்தியாவில் சில முன்னேற்றமடைந்த தொழில் நிறுவனங்கள் சிறப்பான பலன் கண்டுள்ளன. சான்றாக, ஒன்றைக் குறிப்பிடுவதென்றால், ஒரு குறிப்பிட்ட நிறுவனம், தனது ஊழியர் ஒவ்வொருவர் அளவிலும் ஐந்தே ஆண்டுகளில் விற்பனையை ஏறக்குறைய இருமடங்காகப் பெருக்கியிருக்கின்றது. இது ஆண்டு ஒன்றுக்கு 20 சதவிகித வளர்ச்சி என்று கணக்காகின்றது. எந்த அளவு கோலை வைத்துப் பார்த்தாலும் இது சிறப்பான சாதனையே!

செலவுக் குறைப்புத் திட்டத்தின் வெற்றிக்கு அடிப்படையான அம்சங்கள் வருமாறு—

(அ) செலவுக் குறைப்புக்கு முறையான திட்டமிட்டு, அத்திட்டமானது, உற்பத்தி முறை, ஆராய்ச்சி, அபிவிருத்தி, விற்பனை வசதி ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். நிர்வாகத்தின் எல்லாப் பிரிவினரின் ஒத்துழைப்பையும் பெற வேண்டும்.

(ஆ) செலவுக் குறைப்புத் திட்டம் தொடர் திட்டமாகவும், ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து மேம்பாடுகள் செய்யும் வகையிலும் இருத்தல் அவசியம். ஆண்டுக்கு ஆண்டு முன்னேற்றத்தை அளவிட்டுப் பார்க்கப் போதிய புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.

(இ) செலவுக் குறைப்புச் செயல் திட்டங்களைச் செயல்படுத்த அலுவல் குழு ஒன்று இருப்பது அவசியம். பல்வேறு பிரிவுகளில் இருப்பவர்களும் குழுவாக இணைந்து செயல்பட்டால் திட்டத்தின் வெற்றி உறுதியாகும். செயல் முறைப் பணிகள் வேகமும் பெறும். ஒருமுகப்பட்ட முயற்சி என்று வரும்போது கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளவும் வசதி ஏற்படும். ஒரு முகப்பட்டுச் செயலாற்றும் குழு எந்த அளவில் எவ்வளவு பேர்களுடன் இருக்கவேண்டும் என்பது தொழில் நிறுவனத்தின் அளவு, சுற்றுச் சூழ்நிலைகள், குறிக்கோள் ஆகியவைகளைப் பொறுத்து அமைய வேண்டும்.

அதிகச் செலவாகும் வேலைப் பிரிவுகள்

எந்தெந்த வேலைப் பிரிவுகளில் செலவு அதிகமாக ஏற்பட்டு வருகின்றது என்பதை இனம் பிரித்துக் கண்டறிவதும், செலவுக் குறைப்பு முறைகளைச் செயல்படுத்த அவைகளில் வசதி இருக்கிறது என்பதைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு உணர்த்துவதும் தான், செலவுக் குறைப்பு வேலைத் திட்டத்தில் மிகச் சங்கடமான பிரச்சினைகள். சிலபல சமயங்களில் அந்தந்தத் துறைகள், செலவுக் குறைப்புக்கான நவீன உத்திகளில் நாட்டம் கொள்ளாமல், ஏற்கனவே இருக்கும் முறையே நீடிக்கவேண்டும் என்று விரும்புவது உண்டு. மற்றும் சில சமயங்களில் பழகிப் போன பழைய முறைகள், வழக்கங்கள், புதிய முறையை மேற்கொண்டால் என்ன சிக்கல் நேருமோ என்ற திகில் இவை எல்லாம், செலவுக் குறைப்பில் இடையூறுகளாக வரும்.

இந்தியாவில் தொழில் நிறுவனங்கள் பொதுவாக—சில விதிவிலக்குகள் நீங்கலாக—செலவுக் குறைப்பு முறைகளை உள்ளபடி கடைப் பிடிக்கவில்லை. சிக்கன முறைகள் பலவற்றுக்கு விரிந்த அளவில் புள்ளி விவரச் சேகரிப்போ, துல்லியமாகப் பகுத்து ஆயவேண்டிய தேவைகளோ அதிகமில்லாதிருந்தும் கூட, செலவுக் குறைப்பு முறைகளை அவை கைக்கொள்ளவில்லை. பல இடங்களில் இயற்கை அறிவுக் கண்ணோட்டத்தையும், முனைப்பையும், ஆய்ந்து பார்க்கும் நோக்கினையும் கைக்கொண்டு செலவுகளைக் குறிப்பிடத் தக்க அளவில் குறைக்க இயலும். அதிகச் செலவு ஆகின்ற வேலைப் பகுதிகள் எவை என்று கண்டறியக் கையாளப்படும் சில முறைகள் பின்வருமாறு :—

(அ) துறைச் செலவுகளைப் பகுத்து ஆய்தல்;

(ஆ) மற்ற தொழிற்சாலைகளுக்கு மற்ற வேலைத் துறைகளுக்குச் சென்று பார்த்து அல்லது அவைகளிடமிருந்து தகவல் பெற்று ஒப்பு நோக்கல் ;

(இ) ஒத்த நிறுவனங்களின் ஆண்டு வரவு-செலவு அறிக்கைகளை ஆய்தல். அப்படி ஆய்ந்து பார்ப்பதால் பொருள் கலவை, இயந்திரங்கள்பயன்பாடு, திறமையாகப் டணியாற்றும் முறை, கச்சாப் பொருள் செலவுகள் முதலியன குறித்துப் பயனுள்ள தகவல்கள் கிடைக்கும். எந்த வேலைப் பிரிவுகளில் செலவு அதிகமாக ஆகிறது என்பதைக் கண்டறிய அந்த ஆய்வு பயன்படும்.

செலவுக் குறைப்புக்கான உத்திகள்

செலவுக் குறைப்புக்கான உத்திகள் என்பவை, பகுத்தாய்தல், மதிப்பீடு ஆகியன மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கவும், முடிவுகள் காணவும் உதவும் நடைமுறையே ஆகும். சுருங்கச் சொல்வோமானால், நிலைமையைச் சீர்திருத்தி அமைக்கும் நோக்கில் சிந்தனையும் ஒழுங்கு முறையும் இருத்தல் வேண்டும்.

செலவுக் குறைப்புக்கான சில வழிமுறைகள் பின் வருமாறு:—

(அ) வேலை முறை ஆய்வு; வேலை அளவீடு;

(ஆ) ஒருங்கிணைந்த முறையில் திட்டமிடல் ;

(இ) மதிப்பு ஆய்வு ;

(ஈ) இயங்கு முறை குறித்த ஆராய்ச்சி ;

(உ) பொருள் வகைக் கண்காணிப்பு;

(ஊ) தரக் கண்காணிப்பு முதலியன.

இந்த முறைகளைச்செயல்படுத்துவதில் அடிப்படையான நடவடிக்கைகள் வருமாறு :—

(அ) பல்வேறு நிலைகளிலும் சரியான புள்ளி விவரங்களைத் திரட்ட வேண்டும். அவற்றைச் சோதித்துச் சரிபார்க்க வேண்டும். இந்த விவரங்களைத் தக்க வரை படங்கள், அட்டவணைக் குறிப்புகளில் அமைத்துக் கொள்ளலாம்.

(ஆ) பிரச்சினை விளக்கப்பட்டு, கிடைக்கக்கூடிய தகவல்கள் அனைத்தும் திரட்டப்பட்ட பின்பு, செலவு அதிகமாவது "ஏன்" என்று ஊடுருவி நுணுகி ஆராயும் கட்டம் வருகின்றது. ஊடுருவிப் பார்த்து, நுணுகிக் கேள்விகள் போடும் போதே, பழக்கத்திலுள்ள பல நடைமுறைகள் சரியில்லை என்பது உணரப்பட்டு, திருந்திய முறைகளுக்கு, செலவுக் குறைப்பு முறைகளுக்கு விதித்துறைகள் தெரியவரும்.

(இ) பல்வேறு மாற்று யோசனைகளையும் வைத்து, தொழில் நுட்பம், பொருளாதார நிலை, ஆள் பலம் ஆகியவைகளின் கண்ணோட்டத்தில் வைத்து ஆராய்ந்து, செயல் முறைச் சாத்தியமானது எது என்பதை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

செலவுக் குறைப்பு, செயல் முறைகளின் அடிப்படை ஒரே தன்மையானவைதான் என்றாலும், படைப்பு முறை அல்லது உற்பத்தி முறை உத்திகளில் மாறுபாடு இருக்கும். சான்றாக:—

(அ) செயல் முறையை எளிமையாக்கி ஆள்பலத்தையும் இயந்திரங்களையும் அதிகப்பட்ச அளவுக்குப் பயன்படுத்துவது என்ற முறை.

(ஆ) ஒரு பொருளை உற்பத்தி செய்து முடிப்பதில் கால நேரத்தைக் குறைப்பது என்ற முறை, அதிகப்படியான உற்பத்திக்கு விற்பனைக்கு, வழிவகை காணும் முறை.

(இ) பொருளின் செயல் முறை அல்லது வேலை நடைமுறையை ஆய்ந்து, அதே பொருளை அல்லது வேலையை இன்னும் குறைந்த செலவில் முடிக்கும் வகையில் படைப்பு முறைச் சிந்தனையும் பயன் தரத் தக்கது.

முதன்முதலாக, இரண்டாவது உலகப் போரின் போது அமெரிக்க ஜெனரல் எலெக்ட்ரிக் கம்பெனியில் இந்த வகையில் பரிசோதனை மேற்கொண்டார்கள். சில வகைப் பொருள் உற்பத்திக்குத் தேவைப்படும் சிலவகை மூலப் பொருட்கள் கிடைக்காமல் இருந்த நேரம் அது. அப்படிக் கிடைக்காத பொருட்களுக்கு மாற்றுப் பொருட்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. அந்த நிகழ்முறையின் போது, பழைய பரம்பரை முறைகள் சிலவற்றைக் கைவிட்டுப் புதிய முறைகளைக் கைக் கொள்ளுவதால், பொருளின் தரம், வேலையின் தரம் மேம்படுவதாகத் தெரியவந்தது. அதிலிருந்து இப்புதிய உத்தி, முக்கியத்துவம் பெற்றது. இன்று வடிவமைப்பு, கொள்முதல், சிப்பம் கட்டுவதற்கான மாற்றுப் பொருட்கள் முதலியவைகளில் எல்லாம் புதிய உத்திகள் கையாளப் படுகின்றன.

(ஈ) அடுத்ததாக, செயல் முறை குறித்து ஆராய்ச்சி. பல்வேறு பிரச்சினைகளிலும் கணிதக் கண்ணோட்டத்தோடு அணுகுமுறை என்று இதனைக் குறிப்பிடலாம். குறிப்பிட்ட தொழிலின் செயல் முறையை அல்லது நிறுவன முறையை ஒருங்கிணைந்த முறையில் ஆராய்ந்து சிக்கல்களைத் தீர்க்க வழிவகை காண்பதும், இறுதி முடிவுக்கு வரும் பொறுப்பை நிர்வாகத்திடம் விட்டு விடுவதும் இதன் நோக்கமாகும். தொழில் இயங்கு முறையின் உள் நுணுக்கங்கள் அனைத்தையும் அறிந்திருப்பது இதில் முக்கியம்.

செலவுக் குறைப்பு உணர்வு

"உற்பத்திச் செலவுக் குறைப்பு உணர்வின்" அவசியத்தை இன்று எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். சிறு தொழிலோ, பெருந்தொழிலோ அல்லது நடுத்தரத் தொழிலோ எதுவானாலும், உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்காகச்செலவுக் குறைப்பைக் கருத்தில் கொண்டாகவே வேண்டியிருக்கிறது. உற்பத்திச் செலவுக் குறைப்பு என்பது ஓர் ஒழுங்கு முறை; பகுத்தறிவு வழி. மேலே குறிப்பிடப்பட்ட, உற்பத்திச் செலவுக் குறைப்பு முறைகளில் பெரும்பாலானவைகளுக்கு, மிக விரிந்த அளவில் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதோ, மிக நவீனப்பகுப்பு ஆய்வு முறைகளை மேற்கொள்வதோ அவசியமில்லை. பிரச்சினை முழுவதையும் குறித்துத் தெளிந்த கண்ணோட்டம், முனைவு ஒன்றுபட்டுப் பணியாற்றும் செயல்திறன் ஆகியவைதான் இதில் முக்கியத் தேவை. இந்த முறைகளை மேற்கொண்டால் நல்ல முன்னேற்றத்தைக் காணலாம்.

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

Sarath

Criterion CO 2490

ஆதாயத்தைப் பங்கிடுதல்

1970-ம ஆண்டு ஆசிய உற்பத்தித் திறன் ஆண்டாகக் கொண்டாடப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, ஆசிய நாடுகளில் கொண்டாடப்பட்டது. ஆசிய உற்பத்தித் திறன் நிறுவனம் 1969 முதல் 1973-ஆம் ஆண்டு வரை அதன் ஐந்தாண்டுத்திட்டத்தை அமுலாக்குகிறது. தமிழ்நாடு இவ்வைந்தாண்டுத் திட்டக் காலத்தில் மையமான 1971-ஆம் ஆண்டில், ஆசிய உற்பத்தித் திறன் விழாவைத் தொடர்ந்து கொண்டாடுகிறது. ஆசிய உற்பத்தித்திறன் ஆண்டுக்கான பிரதான இலட்சியம் உற்பத்தித் திறன் மூலம் செழிப்படைதல்.

நம்நாடு செழிப்படைய வேண்டுமானுல், நம் நாட்டுத் தொழில்களில் உற்பத்தித் திறன் அதிகரிக்க வேண்டும். உற்பத்தித் திறன் அதிகரிக்க வேண்டுமானுல் இயந்திரங்கள் உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய வகையில் நவீனமயமாக்கப்பட வேண்டும். உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் மூலப் பொருள்களின் தரம் சிறந்ததாக இருக்க வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாகத், தொழிலாளர்களது உற்பத்தித் திறன் அதிகரிக்க வேண்டும். தொழிலாளர்கள், தங்கள் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு அவர்களுக்குப் போதுமான ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். உற்பத்தித் திறன் அபிவிருத்தியினுல் கிடைக்கக் கூடிய ஆதாயத்தைஎப்படிப்பங்கிடுவதென்பது மிகவும் முக்கியமானது. தொழிலாளர்களுக்கு உற்பத்தித் திறன் ஆதாயத்தில் நியாயமான பங்கு கிடைக்கும் என்ற உத்தரவாதம் இருந்தால், அவர்கள் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் பாடுபட்டு, உற்பத்தித் திறனை அதிகரிப்பர். உற்பத்திச் சரக்குகளின் தரத்திலும் கண்ணும் கருத்துமாய் இருப்பர். தொழில்கள் வளமடையும். நாடு செழிப்புறும். இதை உத்தேசித்துத் தான், உற்பத்தித் திறன் அதிகரிப்பின் ஆதாயத்தைப் பங்கிடுவதைப் பற்றித் தேசிய உற்பத்திக் கவுன்சில் கீழ்க்கண்ட முறையை நாணயித்திருக்கிறது. அந்த முறையை,தேசீயத் தொழிலாளர் கமிஷனும் சிபாரிசு செய்துள்ளது.

அவசியமான இடங்களில் சரக்குகளை வாங்கி உபயோகிக்கும் பொதுமக்களின் நன்மைக்காக 20 சத விகிதத்திற்கு மேற்படாமல் ஏற்பாடு செய்தபிறகு உற்பத்தி அதிகரிப்பின் ஆதாயத்தில் மிச்சமுள்ள தொகையை நியாயமான அல்லது வாழ்க்கைக்குரிய ஊதியத்திற்குச் சமமான ஊதியம் கொடுக்கப்படும். தொழில்களில் தொழிலாளிகள் பாதியைப் பெறுவர். விதிவிலக்கு—

(அ). அந்த ஊதியம் நியாய ஊதியத்திற்கோ அல்லது தேவைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியத்திற்கோ, குறைந்தஅளவில் இருந்தால், தொழிலாளர்களது பங்கு அதிகமாக இருக்க வேண்டும். அதை,இருதரத்தினரின் சம்மதத்தின் பேரில் முடித்துக் கொள்ள வேண்டும்.

(ஆ). தொழிலானது பெரிய அளவில் கட்டுப்படுத்தப்படாத ரிசர்வ்நிதியைத்தெளிவாக நிறுவியிருந்தால், தொழிலாளர்களின் பங்கு மேலே குறிப்பிட்ட 50 சத விகிதத்திற்கு மேல் அதிகமாக இருக்கும். பொதுமக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பாடு செய்த பிறகு விநியோகிப்பதற்காக இருக்கும் பங்கில் ஒருபகுதி தொழிலின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும். மீதித் தொகை முதலுக்கு வருமானம் அளிப்பதற்காகக் கிடைக்கும்.

பி. ஏ. கன்னையா

குறிப்பு—பொது மக்களுக்கு உண்மையாக எவ்வித ஏற்பாடும் செய்யப்படாவிட்டால், அந்தத் தொகையானது தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் விநியோகிக்கப்படுவதற்காகக் கிடைக்கும்.

சாதாரணமாக உற்பத்தி அதிகரிப்பின் ஆதாயம் விலைக்குறைப்பில் பிரதிபலிப்பதில்லை. பொதுவாக, பொதுமக்கள் நன்மையடைவதில்லை. அவர்களது பங்கும் முதலாளிகளினுல் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆகையினுல் தான் பொதுமக்களுக்கென எந்த ஏற்பாடும் செய்யப்படாவிட்டால், அந்தத் தொகையானது தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் விநியோகிப்பதற்காகக் கிடைக்கும் என்று இச் சூத்திரம் குறிப்பிடுகிறது.

தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம், தேவை அடிப்படையிலான குறைந்தபட்ச ஊதியத்தை விடக் குறைவாக இருக்கிறது. இந்திய தொழிலாளர்கள் மாநாடு அனுசரித்துள்ள முறையின்படி, தேவை அடிப்படையில் ஒரு திறமையில்லாத தொழிலாளிக்குக் கொடுக்கப்பட வேண்டியுள்ள குறைந்தபட்ச ஊதியம் 325 ரூபாய். [பஞ்சாலைத் தொழிலுக்கான இரண்டாவது மத்திய ஊதிய போர்டின் கேள்வித்தாளுக்குப் பதில் அளிக்கையில் மூன்றுபேர் அடங்கிய ஒரு குடும்பத்திற்கு மாதம் ஊதிய போர்டு குறிப்பிட்டிருந்த அளவின்படி 240 ரூபாய் தேவைப்பட்டது. அப்போது சென்னை நகர வாழ்க்கைச் செலவுப்புள்ளி 605. இப்போது 819. 605 புள்ளிக்கு 240 ரூபாய் ஆனுல் 819 புள்ளிக்கு 325 ரூபாய் ஆகிறது.]

ஆனுல் எந்தத் தொழிலிலும் பெரும்பான்மையான தொழிலாளர்கள் அதைவிடக்குறைந்த ஊதியமே பெறுகின்றனர். உதாரணமாகப் பஞ்சாலைத் தொழிலாளியின் குறைந்த பட்ச ஊதியம் 212 ரூபாய் தான். ஆகையால்

மேற்படி சூத்திரத்தின் பிரகாரம் தொழிலாளர்களின் ஊதியம் தேவைக்கேற்ற குறைந்த பட்ச ஊதியத்திற்கு, குறைந்த அளவில் இருப்பதால், தொழிலாளர்களது பங்கு 50 சத விகிதத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். தொழிலாளர்கள் உற்பத்தித் திறனை. அதிகரிப்பதற்காக, உற்பத்தித் திறன் அதிகரிப்பினுல் ஏற்படும் ஆதாயத்தில் 60 சத விகிதம் அவர்களுக்குக் கொடுக்கலாம்.

தேசியத் தொழிலாளர் கமிஷன் 50 சத விகிதத்திற்கு மேல் என்று கூறியிருப்பதை 60 சத விகிதம் என்று நிர்ணயிக்கலாம். நாடு வளம்பெறத் தொழில் உற்பத்தி அதிகரிக்க வேண்டும். உற்பத்திச் சரக்குகளின் தரமும் உயர வேண்டும். அப்படியானுல், உற்பத்திக்கு மூலகாரணமாக உள்ள தொழிலாளி உற்சாகத்துடன் உழைக்க வேண்டும். தமது உழைப்பின் பயனுல், உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது ; அது நாட்டிற்கும், தொழிலுக்கும் நல்லது, என்பதோடு தமக்கும், குறிப்பாக தமது வாழ்க்கைத் திறத்தை உயர்த்துவதற்கும் அது அவசியமாகிறது என்பதை அவர் உணரும்படிச் செய்ய வேண்டும். இருதரத்தினரின் சம்மதத்தின் பேரில் அதை முடித்துக் கொள்ள வேண்டும் என்பது இடையருத சர்ச்சையை உண்டு பண்ணும். மேற்படி முடிவு, இடத்திற்கு இடம் மாறுபடும். தொழிலாளர்களுக்குப்பலம் பொருந்திய சங்கங்கள் இல்லாத இடங்களில் அவர்களது பங்கு குறையும். அது தொழில் அமைதியைப் பாதிக்கும். ஆகையால் மத்திய மாநில அரசுகள் இந்த ஆசிய உற்பத்தித் திறன் ஆண்டில் தேசிய தொழிலாளர் கமிஷன் சிபாரிசை ஏற்று உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஆதாயத்தில் தொழிலாளர்களுக்கு 60 சத விகிதத்தைப் பங்கிடுவதற்கான சட்டத்தை இயற்றுவார்கள் என நம்புகிறேன்.

உற்பத்தித் திறன் ஓங்குக!

எகிப்து நாட்டின் தலைநகரம் கெய்ரோ. அங்கு ஒரு புதுமையான கல்விக்கூடம்! களவு—அதாவது பிறரது பைக்குள் கைவிட்டு பிக் பாக்கெட் அடிப்பது என்பது பற்றிய பள்ளி ஒன்று அண்மைக் காலம்வரை இயங்கி வந்தது.

பிற கல்லூரிகள் போல் இதற்கு ' பிரின்சிபால் ' உண்டு. இந்த பிரின்ஸ்பாலுக்கு வேண்டிய திறமை—தகுதி என்ன? சிறை சென்ற அனுபவம்தான்! முப்பது ஆண்டுகள் சிறையில் கழித்த அனுபவமிக்க வீர தீர (!) பிக் பாக்கெட் கலையில் புகழ் பெற்ற பெண்மணியான சாயிதா என்பவள்தான் இந்தக் களவுக் கல்லூரியின் தலைவி.

இக் கல்லூரியில் சேருபவர்களுக்கு முதல் இரு மாதங்கள் '' திருடுவது எப்படி '' என்று சொல்லித்தரப்படும். பயிற்சி பெற்ற மாணவர்கள் திருடிக்கொண்டு வரும் பொருட்களுக்குத் தக்கபடி அவர்களுக்குத் தினக்கூலி தரப்படும்.

இந்தக் கல்லூரிக்குச் சட்ட திட்டம் உண்டு. அதனைச் செயல்படுத்தச் செயலாளரும் உண்டு.

இப்படிப் பேரும் புகழுமாக இருந்த இக் கல்லூரியில் ஒரு புதிய மாணவர் வந்து சேர்ந்தார். அவர்காலடி எடுத்து வைத்த ' வேளை ', கல்லூரியின் ' தலை விதி ' மாறிவிட்டது!

வந்து சேர்ந்தவர் வேறு யாருமில்லை; துப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவர்தான்! அவர், மாணவர் வேடத்தில் வந்து சேர்ந்து, இக் கல்லூரியின் ரகசியங்கள் அனைத்தையும் கற்று வெளியேறினுர். கல்லூரிக்கு மூடு விழா ஏற்படுத்தினுர். கல்லூரித் தலைவியையும், செயலாளரையும் கம்பி எண்ண வைத்து விட்டார். காவல் துறையினரின் கடமையைத் தவருமல் செய்து, பெருமை தேடிக் கொண்டார் அந்த அதிகாரி. நியாயத்தை நிலை நாட்டுவதற்காக....களவையும் கற்ருர் அவர்!

உற்பத்தித் திறனைப் பெருக்குவோம்!

—கே. எஸ். நாராயணன்—

உற்பத்தித் திறனைப் பெருக்கு! ஏழ்மையை விலக்கு! உற்பத்தித் திறனே வளமையின் வழிகாட்டி! என்கிற முழக்கங்களை நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேம். வளரும் சமுதாயத்தின் மேலும் மேலும் அதிகமாகும் தேவைகளை நிறைவு செய்ய, உற்பத்தித் திறனைப் பெருக்குவதுதான் சிறந்த வழி என்றும் வலியுறுத்தப்படுகிறது. ஆகவே, உற்பத்தித் திறன் என்ருல் என்ன என்பதை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்வது அவசியமாகிறது.

உற்பத்தித் திறன் (Productivity) என்பது உற்பத்தி (Production) என்றே பெரும்பாலோர் நினைக்கிருர்கள். இது சரியல்ல. உற்பத்தித் திறனென்பது, செலவினங்களைக் குறைத்து, எவ்வகையிலும் எதுவும் வீணுவதைத் தடுத்து, அதிக அளவில் பொருள்களை உற்பத்தி செய்வதேயாகும்.

கால விரயத்தைத் தவிர்த்து, பொருள் சேதத்தைக் குறைத்து, இயந்திர உபகரணங்களின் உற்பத்தி நேரத்தைப் பெருக்கி, மனிதசக்தி வீணுவதைத் தவிர்த்து, உற்பத்திப் பெருக்கம் ஏற்படுவது, உற்பத்தித் திறனுல்தான்.

நடைமுறையில், உற்பத்திச் செலவுகளைக் குறைத்து, மிகக் குறைவான சாதனங்களைக் கொண்டு, குறைந்த அளவு ஆக்கப் பொருள்களை உபயோகித்து, எல்லாப் பொருள்களையும் கிடைக்கச் செய்வதே, உற்பத்தித் திறனின் குறிக்கோளாகும்.

உற்பத்தித் திறனின் நோக்கம், நிர்வாகமும் தொழிலாளிகளும் ஒத்துழைத்து, திறமையை மேலும் மேலும் பெருக்கிக்கொண்டு, சமுதாய நலனுக்குப் பாடுபடுவதாகும்.

உற்பத்தித் திறனுல், உபயோகிப்போருக்குக் குறைந்த விலையில் தரமான பொருள்களும், தொழிலாளிக்கு அதிக ஊதியமும், நிர்வாகத்தினருக்கு அதிக முதலீடும், அரசினருக்கு அதிக வருமானமும் கிடைக்கின்றன.

உற்பத்தித் திறனைப் பெருக்கும் முயற்சியில் தொழிலாளர்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் முக்கிய பங்குண்டு. அவர்களுடைய பரிபூரண ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. உற்பத்தித் திறன் முறையை உண்மையாகவும், மனப்பூர்வமாகவும் செயல்படுத்தும்படியும் தொழிலாளிகளைத் தொழிற் சங்கங்கள்தான் ஊக்குவிக்க வேண்டும். வேலைநிறுத்தங்கள் வேண்டுமென்றே மெதுவாக வேலைசெய்தல் முதலியவழிகளைப் பின்பற்றுவது, உற்பத்தித் திறன்முறைக்கு முரணுனது. உற்பத்தியைப் பாதிக்கும் இவ்வித செய்கைகளை எப்பாடுபட்டும் தடுக்கவேண்டும். பலதொழிற் சாலைகளில் செயற்குழு (Works Committee) உற்பத்திக்குழு (Production Committee) பாதுகாப்புக்குழு (Safety Committee) ஆகியவை இயங்கி வருகின்றன. இக்குழுக்களில் முதலாளி, தொழிலாளிகளின் பிரதிநிதிகள் கூட்டாகச் செயல்படுகின்றனர். இக்குழுக்களின் செயல்பாட்டின் மூலம் தொழிலாளிகளின் சந்தேகங்களைப் போக்கி, அவர்களின் பூரண ஒத்துழைப்பைக் கோரலாம். தொழிலாளர் ஆசிரியர் பயிற்சித் திட்டம் (Workers Education Scheme) நாடெங்கும் பரவிவருகிறது. பயிற்சிபெற்ற ஆசிரியத் தொழிலாளர்கள் சக தொழிலாளர்களுக்குத் தாங்கள் கற்ற உற்பத்தித் திறன் முறைகளைத் தெளிவாகப் போதிக்க வேண்டும், தேசிய உற்பத்தித் திறன் குழு (National Productivity Council), மாநில உற்பத்தித் திறன் குழுக்கள் (Regional Productivity Councils) ஆகியவர்கள் அவ்வப்போது கூறும் ஆலோசனைகளை, தொழிலாளிகளுக்குத் தெளிவுபட எடுத்துரைத்து, அமுலுக்குக் கொண்டு வரலாம். தொழிலாளர் ஆலோசனைத் திட்டம் ஏற்படுத்தி நல்ல ஆலோசனைகளுக்குப் பரிசு கொடுப்பதன் மூலம், உற்பத்தித் திறன் வழிகளைத் தொழிலாளர் மனத்தில் பதிய வைக்கலாம். உற்பத்தித் திறன் முறைகளை ஒழுங்காகக் கையாளும் தொழிலாளர்களை ஊக்குவிக்கப் பரிசுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தலாம். தொழிற்சாலைகளில் பணிபுரியும் அதிகாரிகள், மேற்பார்வையாளர்கள் முதலியவர்கள், உற்பத்தித் திறன் குழுக்களால் நடத்தப்படும் பயிற்சி பெற்று, உற்பத்தித் திறனைப்பற்றித்தாங்கள் கற்றவைகளை, தொழிலாளிகளுக்கு எடுத்துரைத்து, அவர்கள் ஒத்துழைப்பைக் கொண்டு, செயலாக்க வழி செய்யலாம்.

நம் நாட்டின் சூழ்நிலைக்குத் தக்கபடி உற்பத்தித் திறன் முறைகள், பொருளாதார, சமூக சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளிலும், முக்கியமாக விவசாயத் துறையிலும், கையாளப்பட வேண்டும். பொருட்களின் சேதத்தைக் குறைத்து, அந்நியச் செலாவணியைத் தவிர்த்து, பொருளின் அடக்க விலையைக் குறைத்து, அந்நிய நாட்டுப் பொருள்களுக்கு ஈடாக நம் நாட்டுச் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும். கணிசமான அளவில், நம் நாட்டுப் பொருள்களை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, நம் நாட்டுக்குத் தேவையான அந்நியச் செலாவணியைப் பெறவேண்டும்.

உற்பத்தித் திறன் நாட்டிற்கு இன்றியமையாதது என்பது உறுதி.

பொருளாதார வளர்ச்சி

உற்பத்தித் திறன் பெருக்கம், தனி மனிதனின் வளர்ச்சிக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் எவ்விதம் வழிவகுக்கும் என்பது உழைப்பாளிகள் எல்லாருக்கும் ஆர்வமூட்டும் ஒரு விஷயமாகும்.

உற்பத்தித்திறன், குறைந்த உள்ளீடுகளை உற்பத்தி செய்வதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

$$\text{உற்பத்தித் திறன்} = \frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$$

தொழில் முயற்சி நிலையில் இதனை, பண மதிப்பால் அளவிடலாம்.

$$\text{தொழில் முயற்சி உற்பத்தித்திறன்.} = \frac{\text{வெளியீட்டு மதிப்பு}}{\text{உள்ளீட்டு மதிப்பு}}$$

உள்ளீடு என்பது இயந்திரங்கள், கச்சாப் பொருள்கள், மனிதர்கள் முதலியன.

வெளியீடு என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும், பணிகளும்.

தேசிய நிலையில் அனைத்து மக்கள் தொகையை உள்ளீடாகவும், அவர்களால் படைக்கப்பட்ட பொருள்கள், செய்யப்பட்ட பணிகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினை வெளியீடாகவும் கொண்டு இதனை அளவிடலாம்.

$$\text{தேசிய உற்பத்தித் திறன்} = \frac{\text{தேசிய மொத்த உற்பத்தி}}{\text{மக்கள் தொகை}}$$

தொழில் முயற்சி நிலையில் உற்பத்தித்திறன் பெருக்கம் மூன்று நிலைகளில் தோன்றும்.

முதலாவதாக, எல்லாவித சேதாரங்களையும் கழிவுகளையும் நீக்கி உள்ளீடுகளைக் குறைப்பதன் மூலம் இது தோன்றும்.

அடுத்து, உள்ளீடுகளை நன்கு பயன்படுத்துவதாலும், நிருவகிப்பதாலும் அதன் அளவினை அதிகரிக்காமல் வெளியீடுகளின் தரத்தையும், எண்ணிக்கையையும் உயர்த்துவதன் மூலம் உற்பத்தித் திறன் பெருகும்.

மூன்றாவதாக, உற்பத்தியைப் பெருக்கவும் உள்ள வளங்களை நன்கு பயன்படுத்தவும் உள்ளீட்டைச் சிறிது அதிகரிக்க வேண்டும் இதனால் உற்பத்தித்திறன் உயரும்.

தொழில் முயற்சி நிலையில் உற்பத்தித் திறனை உயர்த்துதல்

கழிவுகளைக் களைந்து, உள்ளீடுகளைத் திறமையாகக் கையாளுவதால் வெளியீடுகளின் மதிப்பு உயரும், இதனால் உற்பத்தித்திறன் பெருகும்.

நிருவாக, தொழில் நுணுக்க அபிவிருத்தி அவசியம்.

1. நிருவாக வளர்ச்சி

நிருவாகத்தை வளர்ச்சி செய்வதால் உற்பத்தித் திறனை எல்லாத் தொழில்களிலும் எல்லா இடங்களிலும் அதிகரிக்கலாம். திட்டமிடவும், அதைச் செயல்படுத்தவும் கட்டுப்படுத்தவும், உழைப்பாளிகளை ஊக்குவிக்கவும் அலுவலர்க்குப் பயிற்சிதர வேண்டும். பயிற்சி தர ஆகும் செலவைவிடப் பன்மடங்கு லாபத்தை நல்ல நிருவாகம் வழங்கும்.

இயந்திரங்கள், கருவிகள், கச்சாப் பொருள்கள் முதலிய பொருள் சார் உள்ளீடுகளைக் கையாளுவதில் நல்ல நிருவாகம் வேண்டும். வளருகின்ற நாடுகளில் மூலதனத்தில் பெரும் பகுதி (80—90 சதவிகிதம்) இவைகளுக்கே போய்விடுகின்றன. இயந்திரங்கள், கருவிகள், துணைக்கருவிகள், கச்சாப் பொருள்கள் முதலியன வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதால் இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டு அவைகளை மாற்றி அமைக்கவோ, சரி செய்யவோ வேண்டுமென்றால் வீண்கால தாமதம் ஏற்படும். இதனால் உற்பத்தித் திறன் பாதிக்கப்படும்.

பொருள் சார் நிருவாகத்தோடு தொழில் நுணுக்க நிருவாகத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். தரக்கட்டுப்பாடு, தர அமைப்பு, நல்ல [illegible] பொருள் தேர்வு, வருமுன் காக்கும் நடவடிக்கை, இயந்திரத் தொழில் நுட்பம், அமைப்பு, நிர்ணயப் பொறியியல் நுட்பம் முதலான தொழில் நுணுக்க நிருவாக அபிவிருத்தியினால் உற்பத்தித் திறனைப் பெருக்கலாம்.

பொருள்சார் உள்ளீடுகளை நன்கு நிருவகிப்பதோடு மனித சக்தியையும் திறமையையும் உயர்த்த வேண்டும். அவ்விதம் உயர்த்துவதன் மூலம் சிறுரக நடுத்தர ரகத் தொழில் துறையில் உற்பத்தித் திறனை 34 முதல் 90 விழுக்காடுகள் வரை உயர்த்த முடியும் என்று ஓர் ஆராய்ச்சி காட்டுகிறது.

2. தொழில் நுட்ப வளர்ச்சி

தொழில் நுட்ப வளர்ச்சியின் துணையால், வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளை விட வெகுதூரம் முன்னேறியுள்ளன. வளரும் நாடுகளில் நவீன தொழில் நுட்பங்களுக்கு எதிர்ப்பும், பூர்வீகத் தொழில் நுட்பங்களுக்கு ஆதரவும் காணப்படுகின்றன. பூர்வீகத் தொழில் நுட்பத்தால் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் பரிகாரம் காணாத போதிலும் அதனால் வேலை வாய்ப்பு ஏற்படும் என்பதற்காக அதை ஆதரிப்பர். சமுதாயக் கண்ணோட்டத்தோடு பார்க்குங்கால் அனாதைகள், அங்க ஈனர்கள் உட்படப் பலருக்குப் பூர்வீகத் தொழில் நுட்ப முறையால் வேலைவாய்ப்பு ஏற்படும் என்பதனால், அதற்காக ஆகும் செலவு நியாயமானதாகப்படுகிறது. ஆனால் தன்னிறைவும், வளர்ச்சி வேகமும் பொருளாதாரத்தின் முடிந்த முடிவாக இருக்கும்போது எந்தத் தொழில் நுட்ப முறையானது மித உற்பத்தியை ஏற்படுத்தி மூலதனத்தைப் பெருக்கி அதிக வேலை வாய்ப்புகளை வழங்குகிறது என்று அறிதல் வேண்டும்.

முன்னேறிய தொழில் நுட்பங்களை மேற்கொள்வதன் மூலம் மனித சக்தியையும், பொருள்கள் வளங்களையும் நன்கு பயன்படுத்திப் பொருளாதார நடவடிக்கைகளைத் துரிதமாக்கி அதிகப்படியான முன்னேற்றத்திற்கு வழி வகை செய்து வேலை வாய்ப்பினைப் பெருக்க முடியும்.

உயர்ந்த தொழில் நுட்பங்களைப் பற்றிச் சிந்திக்குங்கால், உற்பத்திப் பெருக்கத்துக்கும், உற்பத்தித் திறன் பெருக்கத்துக்கும் உள்ள வேற்றுமையை அறிதல் அவசியம். ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள உள்ளீடுகளைக் கொண்டு ஆயிரத்து இருநூறு ரூபாய் மதிப்புள்ள பொருள்களை உற்பத்தி செய்தால், உள்ளீடு, வெளியீடு ஆகியவற்றின் விகிதம் 1200: 1000. இந்த விகிதாசாரம் மாறாமல் உற்பத்தி பெருகினால் அஃது உற்பத்திப் பெருக்கம் ஆகும். உற்பத்தித் திறன் பெருக்கமானது விகிதாசாரத்தில் சாதகமான மாற்றத்தைப் பெற்றிருக்கும். நல்ல தொழில் நுட்ப நிருவாக முறைகளைக் கையாளுவதன் மூலம் உள்ளீட்டை ஆயிரம் ரூபாயிலிருந்து எண்ணூறு ரூபாயாகக் குறைத்தும் அல்லது உற்பத்திப் பொருளின் தரத்தையோ எண்ணிக்கையையோ உயர்த்தி அல்லது இவ்விரண்டினையும் மேற்கொண்டும் உள்ளீட்டைவிட வெளியீடு அதிக உபரி காட்டும்படிச் செய்யலாம். இதனால் உற்பத்தித்திறன் உயரும்.

உயர்ந்த தொழில் நுட்பங்கள் அதிக உபரியை ஏற்படுத்துவதனால் அதனை வரவேற்க வேண்டும். இதற்கு மாறாகப் புறக்கணித்தோமானால் பொருளாதார மந்தமும், தேக்கமும் ஏற்பட்டுப் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்.

காலம்-அளவு கோட்பாடு

உற்பத்தித் திறன் இயக்கத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று, நாட்டின் எல்லாத்துறைகளிலும் உற்பத்தித் திறன் மனப்பான்மையைத் தோற்றுவிப்பதாகும். இதற்கு, காலம், அளவு என்ற கருத்துக்கள் பயன்படும். அதாவது உற்பத்தி செய்ய ஆகும் காலத்தைக் குறைப்பதும் குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி அளவை (உற்பத்திப் பொருள்களின் எண்ணிக்கையை) அதிகரிப்பதும் ஆகும். உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கான திட்டங்களைத் தீட்டவும், செயல்படுத்தவும் இக்கருத்துக்கள் துணையாக இருக்கும்.

தேசிய உற்பத்தித்திறனைப் பெருக்குதல்

தேசிய முறையில் உற்பத்தித் திறனைத் தலா வருமானம் மூலம் குறிப்பிடலாம். அதாவது மொத்த தேசீய உற்பத்தியை மொத்த மக்கள் தொகையால் வகுத்துச் சொல்லலாம். உற்பத்தித் திறன் வளர்ச்சியை வழங்கும் காரணிகள் பல. அவற்றுள் வளரும் நாடுகளுக்குப் பொதுவாக விளங்கும் சில இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. மனித சக்தி வளர்ச்சி

சீரான பொருளாதார வளர்ச்சியைக்காண மக்களை அதிக அளவு உற்பத்தி செய்யக் கூடியவர்களாக ஆக்குவதில் நாட்டினுடைய பல அமைப்புகள் கண்ணுங் கருத்துமாக உள்ளன. மனித சக்திகளைச் சரியாகவோ, முழுமையாகவோ பயன்படுத்தாவிடில் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும். வேலையின்மை, சோம்பல், பயிற்சியின்மை, சமுதாயத் தடைகள், முழுமையாகப் பயன்படுத்தாமை முதலியன உற்பத்தித் திறனைத் தொடர்ந்து சீர்குலைக்கும்.

ஜப்பானிலுள்ள இயற்கைச் செல்வங்கள் குறைவுதான். என்றாலும் மனித சக்தியின் திறனைப் பெருக்குவதில் காட்டப்படும் இடைவிடாக் கவனிப்பால், அது வியத்தகு அளவு வளர்ச்சி விகிதத்தை அடைந்துள்ளது. எனவே வளர்ச்சிக்கான திட்டங்களில் மனிதச் சக்தியைப் பெருக்கக் கூடிய திட்டங்களுக்கு முதலிடம் வழங்க வேண்டும்.

திட்டங்கள் வெற்றிபெற, குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் கல்வி வசதிகள் வேண்டும். ஏனென்றால் படிப்பில்லாக் குறையால் பலருக்கு வேலை கிடைக்காமலும் வேலைவாய்ப்புக்கான தகுதிகள் இல்லாமலும் போய்விடுகின்றன.

2. வேளாண்மைக்கு மனித சக்தி வளர்ச்சி

பெரும்பாலான வளரும் நாடுகள் விவசாயத்தையே நம்பியுள்ளன. தேசிய உற்பத்தித் திறனை உயர்த்துவதில் விவசாயத்தின் பங்கு அதிகம். எனவே இந்நாடுகளில் விவசாயத் துறையில் மனிதச் சக்திகளை விரிவாக்கம் செய்வது அவசியம்.

பயிற்சி பெற்ற மனித சக்தி, பொருள்கள் உள்ளீடு, பொறியியல் உள்ளீடு ஆகியவற்றின் மூலம் விவசாயத்துறையில் உற்பத்தித்திறன் பெருமளவு பெருகியுள்ளதைப் பல நாடுகளில் காண்கிறோம். உழவு, நடவு, அறுவடை பற்றியும், விதை, நீர்ப்பாசன வசதி, பூச்சி மருந்து, விவசாய இயந்திரக் கருவிகள் முதலியவற்றைச் சரியாகப் பயன்படும் முறைபற்றியும் போதிய அளவு கல்வி இல்லாததன் காரணமாக நவீன விவசாய உள்ளீடுகள் வீணாவது வருந்தத்தக்கது.

3. இயற்கைவள வளர்ச்சி

வளரும் நாடுகள் பலவற்றில் இயற்கை வளங்கள் உண்டு. ஆனால் அவைகள் பயன்படுத்தப்படாமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பாதகமான ஏற்றுமதியால் வறுமைதான் மிஞ்சும்.

பயிற்சி பெற்ற நிருவாகிகளும் தொழில் விற்பன்னர்களும் வேண்டிய அளவு இல்லாமல் இருப்பது ஒரு புறமிருக்க, போதிய அளவு மூலதனமின்மையே இந்நிலைமைக்கு முக்கிய காரணம். செல்வர்கள் இன்னும் பழமையில் மூழ்கியிருப்பதால் தொழில் முயற்சியில் முதல்போட முன்வருவதில்லை.

சில சமுதாய, பொருளாதார கட்டாயத்தின் காரணமாகவும் மேற்கொள்ளப்படும் தொழில் முயற்சிகளைக் கைவிட்டு, வளர்ச்சிக்கு வேண்டிய உபரியைத் தரக்கூடிய தொழில் முயற்சிகளில் இயற்கை வளங்களையும் மனித சக்தியையும் பயன்படுத்த வேண்டும்.

4. சிறுரக நடுத்தர ரகத் தொழில் அபிவிருத்தி

வளரும் நாடுகளின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் சிறு ரக, நடுத்தர ரகத் தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

குறைந்த செலவில் பரவலாக இத்தொழில்களைத் தோற்றுவித்து வேலைவாய்ப்புகளைப் பெருக்கி இயற்கை வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும். பெரிய தொழில்களால் பயன்படுத்தப்பட இயலாத

மேற்கொண்டு, வளர்ச்சியைப பரவலாக்கி வாங்கும் சக்தியை உயர்த்தி, தொழில் துறையில் புதிய புதிய கண்டுபிடிப்புகளையும், புதிய முறைகளையும் மேற்கொள்வதையும் பெருக்க வேண்டும். ஆராய்ச்சிக் கழகங்கள் பலவற்றை ஏற்படுத்தி அவை வழங்கும் அறிவினைக் கொண்டு தொழில் துறையைச் சிறப்பாக்க வேண்டும்.

உர்பத்திக்கும் உற்பத்தித் திறனுக்கும் இடையே உள்ள உறவு

உற்பத்தித் திறன் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் கூடுதல் உற்பத்தி ஏற்பட்டு, ஏற்கனவே கிடைத்த உபரி கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். அவ்வாறு கிடைக்கும் உபரியைச் சரியான முறையில் பங்கிடுவதன் மூலம் தனி மனிதன் நன்மைக்கும், நாட்டின் நன்மைக்கும், வழி வகுக்க முடியும். கூடுதல் உற்பத்தியைப் பங்கிடுகின்ற போது, இன்னும் அதிக அளவு உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டும் என்ற ஆர்வமும், தூண்டுதலும் ஊக்கமும் இருக்கும்படி நியாயமான பங்கீட்டினை மேற்கொள்ளவேண்டும். நேர்மையான பங்கீடு முறையை மேற்கொள்ளாவிடில் உற்பத்தித் திறனும் நன்மையும் பாதிக்கப்படும்.

(அ) உற்பத்தித் திறன் பலன்களின் பங்கீடு

உற்பத்தித் திறனின் பலாபலன்கள் இன்று சீரான முறையில் பங்கிடப்படவில்லை. உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு அதிக அளவு பங்கு வேண்டுமென்று போட்டியிடுகின்றனர். தொழிலாளர்கள், தொழிலதிபர்கள், விற்பனையாளர்கள் நுகர்வோர் ஆகியோர் சச்சரவுகளைக் கைவிட்டுப் பொது நன்மையை மனத்தில் கொண்டு பங்கீட்டை நிர்ணயிக்க வேண்டும். தம்முள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு உற்பத்தித் திறனைப் பெருக்குவதில் ஈடுபடவேண்டும்.

(ஆ) கூலி, விலை, வாங்கும் சக்தி

ஊதியம் உயர்வதை எல்லாரும் விரும்புகின்றனர். ஊதியம் உயர்வதால் அதிக அளவு பொருள்களை வாங்கலாம். இதனால் உழைப்பாளிகளிடையே ஆர்வம் பெருகி அதிக அளவு உழைக்க முன்வருவர். உற்பத்தித் திறனை உயர்த்தாமல் ஊதியத்தை மட்டும் உயர்த்தினால் பண வீக்கம் ஏற்படும். பணவீக்கத்தால் மக்களிடையே பணப் புழக்கம் மட்டும்தான் உயருமே ஒழிய, அங்காடியில் கிடைக்கும் பண்டங்கள், பணிகள் ஆகியவை பெருக மாட்டா.

ஊதியத்தை உயர்த்தாமல் உற்பத்தித் திறனைப் பெருக்கினால் உழைப்பாளிகளிடையே ஊக்கமும் ஆர்வமும் குன்றி, தீய விளைவுகள் தோன்றும். மேலும் பணிகளும், பண்டங்களும் அங்காடியில் அதிக அளவு கிடைத்த போதிலும் அவற்றை வாங்கக் கூடிய அளவிற்கு மக்கள் கையில் பணம் இருக்காது. பணவீக்கம், பண்டங்களை வாங்க முடியாமை ஆகிய இரண்டும் உற்பத்தித்திறனுக்கும் முட்டுக்கட்டையாக இருக்கும். எனவே, உற்பத்தித் திறன் பெருக்கத்தை விலைவாசிகளின் நிலையோடு இணைந்து மக்களுக்கு உயிர் வாழத் தேவையான வகையில் கூலியை நிர்ணயிக்க வேண்டும். சுருங்கச் சொன்னால் பொருள்களை வாங்கக் கூடிய அளவு பண வசதி-அதாவது வாங்கும் சக்தி மக்களிடையே இருக்க வேண்டும். இதனால் பொருள்களின் தேவை பெருகி உற்பத்தித் திறன் உயரும்.

உற்பத்தித் திறனும் உயர்வும்

உற்பத்தித் திறன் உயர்வைத் தருவதால், உற்பத்தித் திறனுக்கும் உயர்வு என்று பொருள் கொள்ளலாம். ஏனெனில்,

(அ) உற்பத்தித் திறன் பெருக்கத்தால், ஏற்பட்ட மிகுதியில் தொழிலாளிகட்கு நியாயமான பங்கு இருக்கும். இந்தப் பங்கினைக் கூலி உயர்வாகவும் ஊக்குவிப்பதற்கான தொகையாகவும், சுகாதார வசதிகளாகவும் பிற வாய்ப்புகளாகவும் வழங்கி வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தலாம்.

(ஆ) உபரியில் நியாயமான ஒருபங்கு தொழிலாளிகளின் பயிற்சிக்காகச் செலவிடப்படும். இதனால் அதிக வேலை வாய்ப்புகள் ஏற்படும்.

(இ) ஊதிய உயர்வாலும், வாழ்க்கைத் தர உயர்வாலும் பொருள்களை வாங்கும் சக்தி பெருகும். இதனால் தேவை பெருகி பொருள்களின் அங்காடி நிலை உயரும். இந்த உயர்வே உற்பத்தித்திறன் பெருக்கத்திற்கு அடிப்படை. இவ்விதம் உற்பத்தித்திறனால் உயர்வும், உயர்வினால் உற்பத்தித் திறனும் உயரும்.

(ஈ) இவ்விதம் ஏற்படும் உயர்வால், எல்லா வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் தீட்டப்படும். இத்திட்டங்களைத் திறமையாகச் செயல் படுத்தி, பசி, பிணி, எழுத்தறிவின்மை, வேலையின்மை மக்கட்பெருக்கம் முதலான பிரச்சினைகளைத் தீர்த்து மக்களின் வளமான வாழ்க்கையில் கவனம் செலுத்தலாம்.

(உ) எந்த அளவிற்கு உற்பத்தித் திறன் பெருகுகிறதோ அந்த அளவிற்குப் பொருளாதார நடவடிக்கைகள் பெருகும். இதனால் நாட்டின் செல்வம் உயரும். வெளிநாட்டுச் செலாவணியில் சாதகமான கொடுக்கல் சமநிலை ஏற்படும். நாடுகளிடையே தொழில், நுட்ப, பொருளாதார, வாணிப, கலாச்சார உறவுகள் சமநிலையில் அமைந்து ஒன்றை ஒன்று சுரண்டாமல் ஒன்றுடன் ஒன்று தம்முள் உயர்வைப் பெருக்கிக் கொள்ளலாம்.

ஆசிய மக்கள் முன்னிலையில் உள்ள சவாலை எதிர்த்துப் போரிட வேண்டுமானால், உற்பத்தித் திறனைப் பெருக்குவதில் அம்மக்கள் அயராது உழைத்துத் தங்களையே அர்ப்பணிக்க முன்வரவேண்டும். வருங்கால வரலாற்று ஆசிரியர்கள் இனி ஆசியாவைப் பற்றி எழுதுங்கால் அந்நாட்டுத் தலைவர்கள் ஆசியாவின் பழம்பெரும் கலாச்சாரத்தில் மூழ்கித் தனிமனித அகவாழ்வில் அமைதி காண்பதிலேயே தங்கள் நாட்டத்தைச் செலுத்தினர் என்று பழிக்காமல் புற வாழ்வின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபட்டு உற்பத்தித் திறனைப் பெருக்கி வளமான வாழ்வு காண மக்களை ஊக்குவித்தனர் என்று புகழட்டும்!

தரமும் தொழிலாளர்களும்

தரம் என்றால் என்ன? நாம் ஒரு பொருளை வாங்குகின்ற போது அதன் அளவுகள் சரியாகவும், குறைபாடுகள் இல்லாமலும், கவர்ச்சியாகவும் இருந்தால் அதைத் தரமான பொருள் என்று சொல்லுகிறோம். இது மட்டுமல்லாமல் விலையும் சற்று மலிவாக இருந்தால் அது நீண்ட காலத்திற்கு உழைத்தால் நல்ல தரமான பொருளை வாங்கியிருக்கிறோம் என்ற மன நிறைவு நமக்கு உண்டாகிறது.

தரம் ஏன் வேண்டும்?

உதாரணமாக ஒரு சட்டை வாங்குவதாக வைத்துக் கொள்வோம். ' கவர்ச்சியான தோற்றமுடையதா என்று பார்க்கிறோம் துணி நெய்யப்பட்ட நூல் மொத்தமாகவும் சன்னமாகவும் இல்லாமல் ஒரே சீராக இருக்கிறதா என்று கவனிக்கிறோம். குறைகள் எதுவுமில்லாமல் நெய்யப்பட்டிருக்கிறதா, தைக்கப்பட்டிருக்கிறதா என்று சோதிக்கிறோம். இத்தனையும் இருந்துவிட்டால் மட்டும் போதாது; விலையும் மலிவாக இருக்க வேண்டும். அப்படி வாங்கப்பட்ட சட்டை நீண்ட நாள் உழைத்தால், அச்சட்டையை உற்பத்தி செய்த ஆலையைப் பற்றி நமக்கு நல்ல எண்ணம் உண்டாகிறது. மீண்டும் துணி வாங்கும்போது அதே ஆலையில் தயாரானதை வாங்கவேண்டும் என்று முடிவு செய்கிறோம். அதோடல்லாமல் உற்றோருக்கும் உறவினருக்கும் அந்த ஆலையின் துணியை, சட்டையை வாங்கும்படிச் சொல்லுகிறோம். ஆனால் அந்தச் சட்டை ஓரிரு மாதங்களிலேயே கிழிந்துவிட்டால் இந்த ஆலைத் துணியை இனி வாங்கவே கூடாது என்று முடிவு செய்கிறோம். மற்றவர்களுக்கும் அதையே சொல்லுகிறோம் நாம் ஒரு பொருளை வாங்கும்போது எப்படி இப்படிப்பட்ட தரத்தை எதிர்பார்க்கிறோமோ அது போன்றே நாம் உற்பத்தி செய்கின்ற பொருள்களிலும் அவைகளை வாங்கிப் பயன்படுத்துகிறவர்களும் நிச்சயம் எதிர்பார்க்கின்றார்கள்.

எனவே, நாம் தயாரிக்கின்ற உருப்படிகளில் தரம் தேவை. தரமான பொருட்கள் தான் இன்று நிலவிவரும் போட்டி அங்காடியில் விற்பனையாகும். தரமான பொருளைத் தயாரிக்கின்றபோது விலையும் உயர்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். எனவே, குறைந்த விலையில் தரமிக்க பொருள்களை உற்பத்தி செய்கின்ற பெரும் பொறுப்பு தொழிலாள நண்பர்களுடையதாகிறது.

தொழிலாளர்களின் குறிக்கோள்

வேலைக்கென ஆலைக்கு வந்துவிட்ட தொழிலாளர்களுக்குக் கீழ்க்கண்ட நான்கு முக்கிய குறிக்கோள்கள் இருக்க வேண்டும்.

1. உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

2. சேதாரத்தையும், கழிவையும் மறு வேலையையும் குறைக்கவேண்டும்.

3. தரத்தை உயர்த்த வேண்டும்.

4. உற்பத்தி விலையைக் குறைக்க வேண்டும்.

குறிக்கோள் ஈடேற என்ன செய்ய வேண்டும்?

மேலே குறிப்பிட்ட நான்கு முக்கிய குறிக்கோள்களும் ஈடேறுவதற்குத் தொழிலாளர்கள் செய்ய வேண்டுவனவற்றை இரு பெருங் கூறுகப் பிரிக்கலாம். ஒன்று மூலப் பொருள்களிலிருந்து உற்பத்திப் பொருள்களை விற்பனைக்கு அனுப்புகிறவரை உள்ள ஒவ்வொரு செயல் நிலையிலும் தொழிலாளர்கள் கவனிக்க வேண்டியது. இரண்டாவது, தொழிலகத்தில் தொழிலாளர்கள் தலைமை தொழிலாளி, கண்காணிப்பாளர், மேலாளர் ஆகியோர் கடைப்பிடிக்க வேண்டிய உறவு முறைகள் ஆகும்.

செயல் நிலையில் கவனிக்கவேண்டிய சில!

செய்ய வேண்டியவை

1. உற்பத்தி செய்ய வேண்டிய பொருள் என்ன, அது எப்படிப் பயன்படுத்தப்படுகிறது, என்ன குறை எந்தத் தொல்லையைக் கொடுக்கும், எந்த இயந்திரத்தில் எந்த வேலையைச் செய்ய வேண்டும் என்பனவற்றைத் தவறு தெரிந்து கொள்ளவேண்டும்.

2. வேலைக்கேற்ற கருவிகளைக் கேட்டு வாங்கி இயந்திரத்தைச் சரியான நிலையில் பொருத்த வேண்டும். இயந்திரத்தைப் பொருத்தியபின் முதல் நான்கைந்து உருப்படிகளைச் சோதனையாளரிடம் காட்டி, அவை சரியாக உள்ளனவா என்று தெரிந்து கொண்ட பின்னரே உற்பத்தியைத் தொடங்கவேண்டும்.

3. தரக் குழுவினல் நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளிப்படி உற்பத்தியின் மாதிரி உருப்படிகளை எடுத்துப் பார்த்துக் கட்டுப்பாட்டு வரைபடத்தில் குறிப்பதைக் கவனித்துச் செயல்படுதல் நலம்.

4. இயந்திரத்தையும் அதன் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்வது அவசியம்.

5. உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும், தரத்தை உயர்த்துவதற்கும் தங்கள் ஆலோசனைகளை எடுத்துச் சொல்லவேண்டும்.

6. எந்த வேலையையும் ஊக்கத்தோடும், அறிவாற்றலோடும் செய்தல் நலம்.

செய்யக்கூடாதவை

1. வேலையின் நிர்ணயப் படத்தைப் பார்க்காமல், இது எந்த அளவு, இதற்கு நிர்ணய அளவுகள் இவ்வளவு என்று ஊகித்து எந்த வேலையையும் செய்யக்கூடாது.

2. கருவிகளின் வெளித் தோற்றத்தைப் பார்த்து ஏமாறக்கூடாது. நிர்ணயிக்கப்பட்ட முறையை விட்டு விட்டுக் குறுக்கு வழியில் உற்பத்தி செய்ய ஆரம்பித்தால் அது சேதாரத்தை—கழிவை அதிகரிக்கும் அல்லது உற்பத்தியைக் குறைக்கும்.

3. எத்தனை உருப்படிகள் என்பதுதான் கணக்கே தவிர எப்படிப்பட்ட உருப்படிகள் என்ற கவலை சோதனை, தரக்குழுவிற்கே என்று எண்ண வேண்டாம்.

4. எந்தக் காரணத்தைக் கொண்டும் உற்பத்திப் பொருள்களை ஒன்றோடொன்று கலக்க விடக் கூடாது.

5. சேதாரத்திற்கும் மறு வேலைக்குமான பழியைப் பரிசோதனைக் குழுவின் மேல் போட வேண்டாம்.

6. அவசியமற்ற வேலைக்குக் கடினமான உடல் உழைப்பை அளிப்பதில் எவ்வித பயனுமில்லை.

தொழிலகத்தில் உறவு முறைகள்:

தொழிலகத்தில் பணிபுரிகின்ற அத்தனை பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என நினைத்துச் செயல்பட வேண்டும்; ஆளுக்கு ஆள் நம்பிக்கையும் நல்ல எண்ணமும் ஓங்கியிருக்க வேண்டும். ஒருவர் மீது ஒருவர் அவ நம்பிக்கை கொள்ளவோ, ஐயப்படவோ கூடாது. நல்ல சூழ்நிலையில்தான் ஒவ்வொருவரும் ஆக்கத்தோடும் ஊக்கத்தோடும், ஆர்வத்தோடும் ஆசையோடும் வேலை செய்ய முடியும்.



பாராட்டத் தெரியவில்லை

தமிழரசு மார்ச் இதழ் எங்கள் கருத்தில் நிலைத்துவிட்டது. நான்கு பொதுத் தேர்தல்களின் முடிவுகளையும் ஒரு சேரக் கொடுத்த உங்களை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை!

—ஆர். வடிவேலு,
ராணிப்பேட்டை.

சாதனைப் பட்டியல்

ஏறக்குறைய 210 பக்கங்களுக்கு மேல்..........உயர்ந்த காகிதத்தில்......சிறந்த வகையில் நான்கு பொதுத் தேர்தல்களின் முடிவுகளையும் தொகுத்துக் குறைந்த விலையில் (70 காசுகளில்) கொடுத்திருக்கிறீர்களே .... தமிழக அரசின் சாதனைப் பட்டியலில் இதையும் சேர்த்துக்கொள்வதுதான் நியாயம்!

—மோகனசுந்தரம்,
மேலைச்சிவபுரி.

நியாயம் இதுதானு?

'வெண்பாப்போட்டிக்கு' வழக்கமாக நான்கு பக்கங்கள் ஒதுக்கி வந்தீர்கள். ஏப்ரல் 16-ஆம் நாள் இதழில் திடீரென்று 2½ பக்கமாகக் குறைத்துவிட்டீர்களே! இது உங்களுக்கே நியாயமா? தர்மமா? அடுக்குமா?

—என் சீனிவாசன்,
தாம்பரம்.

செப்பவும் பெரிதே!

சீரணித் தொண்டர்கள் செய்து வரும் சேவையைத் 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்று தலைப்பிட்டு வெளியிட்டிருக்கும் தமிழரசின் பெருமை செப்பவும் பெரிதே!

—மருதப்பன், குனியமுத்தூர்

கவிதை வேலைக்காரன்!

நாள் தவறுமல் உதயம் செய்து, நாட்டு மக்களுக்குச் சேவை செய்கின்ற கதிரவனை, காலை வேலைக்காரன் என்று வருணிக்கும் கவிதை சுவை மிகுந்திருந்தது. அதை எழுதியவர்க்கு இதய பூர்வமான பாராட்டு!

—சங்கரலிங்கம், நெல்லை.

பருவம் தவறிய கரும்பு

கரும்போ கரும்பு, சுவையாக இருந்தது. என்றுலும், மாம்பழம் வருகின்ற பருவத்தில் பொங்கல் கரும்பை வெளியிட்டிருக்கிறீர்களே!

—கே. எல். கிருட்டிணன்,
தஞ்சை.

ஏக்கம் தந்த கல்விக்கூடம்

'கடலிலே' வந்த 'கல்விக் கூடம்' எங்கள் உள்ளங்களில் எல்லாம் ஏக்கப் பெருமூச்சை வரவழைத்துவிட்டது. அந்தக் கல்விக் கூடத்தைப் பார்க்கத் தவறிய நாங்கள் இப்போது படித்துத் தெரிந்துகொண்டோம்

—லதா, கலா, விமலா,
சென்னை-17.

நன்றி!

தொண்டை நோயாம் டிப்தீரியாவைப் பற்றிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதியிருந்த உங்களுக்கு நன்றி!

—எம். எஸ். பாலு,
தாராபுரம்.

பயன் தந்த வரி

'வரி என்றால் என்ன' என்று தெரிந்துகொண்டோம். மிகமிகப் பயனுள்ள கட்டுரை.

—மெய்யப்பன்,
காரைக்குடி.

அட்டைக் கட்டுரை

பாமணி உர ஆலை—அட்டை சொல்லும் கட்டுரை படித்தேன். நமது தமிழகம் முன்னேற்றம் அடைந்து வருவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன. ஆமாம் .... அட்டை சொல்லும் கட்டுரை என்ற பகுதியை வாடிக்கையாக்கினுல் என்ன?

—செந்தாமரை,
கன்னிவாக்கம்.

பாலாம்பாளுக்குப் பாராட்டு

விளையாட்டுகளில் ஆடவர்கள் தான் வெற்றிபெற முடியும் என்று நான் நம்பிக் கொண்டிருந்தேன். கடலூரைச் சேர்ந்த சகோதரி பாலாம்பாள் விளையாட்டுப் போட்டிகளில் பெற்ற வெற்றி பற்றிப் படிக்கும் போது பெண் இனத்துக்கே பெருமை வந்துவிட்டதாக நான் எண்ணுகிறேன். நானும் ஒரு பெண்ணுகப் பிறந்ததை எண்ணி மகிழ்கிறேன்.

—ஏ. சுலோசனு,
புரசை.

வாளும் தாளும்

மக்கள் அரசாட்சி
 மலர்வகை தொடுத்துத்
தக்க வகைதரும்
 ''தமிழரசு'' ஏற்றனன்!
''செய்தி-தகவலைத்''
 திணிப்பதைத் தவிர்த்துக்
கொய்த பூக்களைக்
 கோத்துச் சூட்டல்போல்
நாட்டு நடப்பை
 நடந்த வரலாற்றை
ஏட்டில் அடக்கி
 வடித்தல் அருங்கலை!
வாளின் வீச்சினும்
 'தாளிகை' விசையதாம்!
ஆளுகை அறிந்தவர்
 ஆள்வினை போற்றுவோம்!
செந்தமிழ் வாழிய!
 தென்புலம் செழிக்க!!
நந்''தமிழ் அரசு''
 நாளும் வெல்கவே!!!

—நாவுக்கரசன், காரைக்குடி

அவதிகள் நீங்க வேண்டும்!

''நல்ல குடும்பம் பல்கலைக்கழக''மென்றார் பாரதிதாசன். பல்கலைக் கழகத்து மாணவர் எண்ணிக்கைபோல் குடும்பத்தில் பிள்ளைகள் தொகை கூடிட வேண்டும் என்பதல்ல அதற்குப் பொருள். அறிவும், திறனும் செறிந்த அழகோவியச் செல்வங்கள் ஒன்று இரண்டு பெற்று, மனைத் தலைவனும், இல்லத் தரசியும் இன்புற்று வாழ்வதையே பல்கலைக் கழகத்திற்குப் பாவேந்தர் ஒப்பிட்டார் என்ற உண்மையை, அனைவரும் உணர்ந்திட வேண்டும்.

குறிப்பிட்ட வருமானமுடைய ஒரு குடும்பத்தில், ஆண்டுக்கொரு குழந்தை வருமானமும் பெருகிடுமானால், வசதிகளும் வாய்ப்புகளும் எல்லாக் குழந்தைகளுக்கும் பங்கிடப்பட்டேயாக வேண்டும். எட்டு ரொட்டித் துண்டுகளை இரண்டு குழந்தை களுக்கு நாலு நாலாகப் பிரித்துக் கொடுத்து, அவைகள் மனநிறைவோடு உண்டது கண்டு உளங்களிக்கும் தாயும் தந்தையும், அதே எட்டு ரொட்டித் துண்டுகளை ஆறு குழந்தை களுக்குப் பங்கிட்டு, அவர்களும் ஆறுதல் பெறுமல், குழந்தைகளும் களிப்படையாமல் அவதிப்படும் காட்சிகள் தவிர்க்கப்பட வேண்டாமா?

வீட்டின் நிலையே இதுவெனில் நாட்டின் நிலையைச் சிந்திப்பது இன்றியமையாத ஒன்றல்லவோ? கோடி கோடியாகச் செல வழித்துத் திட்டங்கள்—கோபுர உயரத்தில் உணவு தானியக் குவியல்கள்—கோலமிகு சாலைகள்—குளிர் தரும் சோலைகள்—கல்விச் சலுகையா?—கணக்கின்றி வழங்குவோம்—மருத்துவ வசதியா? தடையின்றித் தருகின் ரோம்—பின்தங்கியோர் நலனா? விரைந்து நிறைவேற்றுவோம்—தாழ்த்தப்பட்டோருக்கு உயர்வா? தடை யில்லை அளிப்பதற்கு—

எல்லாம் சரி; எட்டு ரொட்டித் துண்டு—இரண்டு குழந்தைகள் என்றால் வழங்குபவ ருக்கும் மகிழ்ச்சி—பெறுபவர்க்கும் பேரா னந்தம்—ரொட்டித் துண்டு எட்டுத்தான், குழந்தைகள் ஆறு எனில் ரொட்டியும் எட்டியாகுமே, தேவைக்கேற்பக் கிடைக்காத காரணத்தால்!

கடல்களை மூன்று பக்கமும் எல்லையாகக் கொண்டிராமல், கடலின் மீது மிதக்கும் ஒரு தெப்பமாக இந்தியா இருந்திருந்தால், இந்நேரம் கடலுக்குள் மூழ்கியிருக்கும் மக்கள் தொகை தாங்காமல்!

அந்த அளவுக்கு ஆண்டுக்கு ஆண்டு, ஆண்டவன் மீது பழியைப் போட்டுவிட்டு, ''அவன் கொடுத்தான் நாமென்ன செய்ய'' என்று குடும்பத்தைப் பெருக்கிக் கொண் டிருக்கிறார்கள், இந்திய நாட்டில். ஆண்டவர் களிலேகூட சிவனுக்கு இரண்டு பிள்ளைகள் தான். இருபத்தேழு பிள்ளைகளைப் பெற்ற குசேலர் தந்த அவலுக்குப் பதிலாக மாளிகை, கூட கோபுரங்களைப் பரிசாக அளிக்க ஒரு கண்ணன் இருந்தான். அந்தக் கண்ணன்கூட எல்லோருக்கும் அருள முடியுமா? எப்போ தும் அருள முடியுமா?

குழந்தைகளை மலர்கள் என்கிறோம்—மாணிக்கப் பரல்கள் என்கிறோம்—அதன் கண்கள் நீலோற்பலம்; இதழ்கள் ரோஜா; சிரிப்பு பிறை நிலா; அசைவு தென்றல்—வடிவு தங்கப்பதுமை இப்படியெல்லாம் கொஞ்சு தமிழில் குழந்தைகளை வர்ணிக்கும் கவிதை உள்ளங்கொண்டோரே, கொஞ்சம் என்னுடன் இந்தக் குடிசைப் பகுதிக்கு வாருங்கள்.

அதோ கிழிந்த சாக்குப் படுதா தொங்கு கிறதே—அதுதான் அந்த மாளிகையின் மரகதக் கதவு; சேறும் சகதியும் வழிந் தோடுகிறதல்லவா வளைந்து வளைந்து, அதுதான் அந்த அரண்மனையைச் சுற்றி யுள்ள அகழ். அந்த அகழ்மீது துள்ளி விளையாடுகிறதே தொப்பை சுருங்கிய ஒரு

ஆண்டவன் மீது பழி கூற வேண்டாம்!

குழந்தை அதுதான் அந்த வீட்டு மகாராணி யின் முதல் இளவரசன்—அடுத்து ஒன்று சூம்பிய கால்கைகளுடன் தள்ளாடித் தள்ளாடி ராகம் பாடுகிறதே, அது இளவரசி— மகா ராணியின் தோள்மீது ஒன்றும் மடிமீது ஒன்றும் எலும்புக் குச்சிகளாய்த் தேரைகள் போல் ஒட்டிக்கொண்டு சிணுங்கி அழுவதற் கும் ஜீவனில்லாமல் கிடக்கின்றனவே, அவை தான், மலர்க் கொத்துக்கள்—மாணிக்கப் பரல்கள்—இப்படியொரு உலகம், இந்தியா முழுமையும் அழகு முகத்தின் குறு மருக்கள் போல் பரவிக் கிடக்கிறது.

திட்டங்களின் பயன்கள் அந்த "நரகலோக" வாசிகளைச், சென்று சேரவேண்டாமா? பறவைகளும் விலங்குகளும் வாழ்கின்றன. மனிதன் வாழ்க்கை நடத்துகிறான். இதைச் சொல்லச் சுவையாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில் விலங்குகளைவிட மனித சமு தாயத்தின் பெரும் பிரிவு, வேதனையை அதிகம் அனுபவித்துக்கொண்டு இருக்கிறது.

அந்த வேதனை நீங்கிட, நல்லரசு திட் டங்களை உருவாக்குகின்றது. திட்டங்கள் பயன் விளைக்க, மக்கள் பெருக்கம் தடுக்கப் பட்டாக வேண்டும். பிறந்த குழந்தைகளைப் பேணி வளர்க்க இனியும் குழந்தைகள் பிறக்காமல் தடுத்திடல் வேண்டும். இந்தக் குடும்பக் கட்டுப்பாடு பாவ காரியமா?

அளவுக்குமீறிக் குழந்தைகளைப் பெற்றுவிட்டு அவைகள் சரியான வசதி வாய்ப்புகளற்று அலாய்ப் பறக்கின்ற கொடுமைதான் கடைந் தெடுத்த பாவ காரியமாகும். பாவ புண்ணி யத்தின் உண்மையான பொருளை உணர்ந்து கொண்டு நடப்பவர்களே சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நல்ல தொண்டாற்றுகிறார்கள் என்று போற்றிட முடியும்.

இந்தியாவில் வேலை வாய்ப்புத் தருதல் என்பது இன்று விண் முட்ட எழுந்து நிற்கும் மிகப்பெரிய பிரச்சினையாகும். அதனைத் தவிர்ப்பதற்கு இதுவரை எடுத்துள்ள முயற்சி கள், யானைப் பசிக்கு சோளப் பொரி அளித் தது போலத்தான் என்று சொல்லிக்கொள்ள யாரும் வெட்கப்படத் தேவையில்லை. யானைப் பசிக்கேற்ற உணவினைத் தயாரித்து முடித் திடும்போது, யானை, பெரும் சேனையாகிவிடக் கூடாதல்லவா? அதற்குத்தான் குடும்ப நலத் திட்டத்தில் அனைவரும் ஆர்வத்துடன் அக்கறை காட்டிடவேண்டும்.

பிறந்துவிட்ட குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம் மட்டுமன்றி சத்துணவுத் திட்டம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டுக் குடிசைப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் வலிவோடும் பொலிவோடும் வளர்வதற்கு அரசு, முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எந்தத் தீவிர முயற்சிகளானாலும் அவைகளின் பயன்கள் எத்தனை பேருக்குச் சென்றடைய வேண்டும் என்ற அளவுகளைப் பொறுத்தே வெற்றிகளை ஈட்டிட முடியும்.

அந்த வெற்றிகளை உருவாக்க அரசு—ஆடவர்—பெண்டிர்—இந்த மூன்று தரப்பின ரின் ஒத்துழைப்பும் இருந்து குடும்ப நலத் திட்டம் நல்ல வகையில் பரவிட வேண் டும். இந்த மூன்று சாராரின் ஒத்துழைப்பைக் குறிக்கும் வகையில் அமைந்ததுதான் சிவப்பு முக்கோண அடையாளமாகும்.

குடும்ப நலத் திட்டம் பரவிட அரசாங்கம் அதிகாரிகளை நியமிக்கலாம்—ஆலோசனைகள் பலவற்றை விவரித்துச் சொல்லலாம். அறுவைச் சிகிச்சைக்கெனத் தனித் தொகை ஒதுக்கலாம்—இவைகளுக்கெல்லாம் மேலாக அவரவரும் குழந்தைப் பெருக்கத்தால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் நெருக்கடியையும்—முன்னேற்றத் திட்டங்க ளில் ஏற்படும் முட்டுக் கட்டையையும் புரிந்து நடந்திட முனைந்திட வேண்டும்.

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என வாழ்த்திடுவர் முன்னோர். பெறுவது என்றாலே

குழந்தைகள் தான் எனப் பொருள் கொண்டு பதினறு என்னும் குறிக்கோளை அடையத் தவங்கூட இருந்தவர்கள் உண்டு! பதினறு பேறுகளைத் தான் பெறச் சொன்ஞர்கள் பெரியோர்—பதினறு பேர்களை அல்ல. படித்தோர் பாமரர்க்கு விளக்கிட வேண்டும் —பக்கத்து வீட்டார் இதுபற்றிப் பேசித் தெளிவடைய வேண்டும். அரசு இதில் அக்கறை எடுத்திருக்கிறது· எல்லாமே அரசே கவனித்துக் கொள்ளும் என்று இல்லாமல் அவரவரும் தங்கள் கடமையை - பிறர்க்கு எடுத்துச் சொல்வதன் மூலமும்; சொன்னதைத் தாங்களும் செயலில் காட்டுவதன் மூலமும் நாட்டுக்குச் செய்திட வேண்டும்.

மிகப் பொறுப்புமிக்க பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ள இந்தத் துறை அதிகாரிகளும்— மிக்க நேர்மையுடனும், தொண்டாற்றும் தூய உள்ளத்துடனும் இந்தப் பிரச்சாரத்தைச் செய்து வெற்றி கண்டிட வேண்டும்.

குடும்பக்கட்டுப்பாடு பாவச் செயலன்று!

வெறும் ஏட்டுக் கணக்கு மட்டும் காட்டிஞல் போதாது—எடுத்த காரியத்தில் ஒழுங்கான முன்னேற்றத்தைக் கண் எதிரே காண முனைந்திட வேண்டும்.

படித்த ஆடவர்க்கும், பெண்டிர்க்கும் அதிகம் சொல்லத் தேவையில்லை. பட்டிக் காட்டில் வாழ்வோர், பாமரர், படிப்பறிவு எட்டிப் பார்க்காத பகுதிகளில் உழல்வோர் இவர்களிடத்தில் எல்லாம் இந்த சமூகப் பணியை விரைந்து செய்திடல் வேண்டும். அம்மை, காலரா போன்ற தொத்து நோய்களைப் பரவாமல் தடுக்க அதிகாரிகள் எப்படி முடுக்கி விடப்படுகிருர்களோ அதுபோல இந்திய நாடு முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் குடும்ப நலத்திட்டப் பிரச்சாரப் பணி தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

இது அழிவு வேலையல்ல—
ஆக்க பூர்வமான பணி.

"திட்டமிட்ட குடும்பம்
தெவிட்டாத இன்பம்.

அளவோடு பெற்று
வளமோடு வாழ்க.

நாம் இருவர்—
நாம் பெறுவதும் இருவர்." இது, தனித் தனிக் குடும்பங்களுக்கான அறிவுரை மட்டு மல்ல. நாளைய நாட்டின் ஒளிமிகுந்த வருங் காலத்திற்கு வழி காட்டும் தத்துவமுமாகும்.

அரசின் சார்பில் ஆண்டு தோறும் நடைபெறும் இதுபோன்ற வாரவிழாக்களில் மட்டுமல்லாமல், நாள்தோறும் இந்தப் பிரச் சாரத்தை அனைவரும் செய்திடல் வேண்டும். ஏனெனில் இது நாள் தோறும் நினைவு படுத்திட வேண்டிய விவகாரம்.

ஏடுகளில், இதழ் நடத்துவோர் அவர்களாகவே இதுபற்றிய எடுப்பான விளம்பரங்களைச் செய்யலாம். கட்டணத்திற்காக அன்றிக் கடமைக்காகச் செய்யப்பட வேண்டிய விளம்பரம் இது என்பதால், வாஞெலியில், ஒவ்வொரு நாளும் இரண்டு தடவைக்குக் குறையாமல் குடும்ப நலத் திட்டம் பற்றி மிகச் சுருக்கமாக நாலைந்து வரிகளில் விளம்பரம் செய்யலாம். அனைத்துக்கும் குடும்ப நலத் திட்டத் துறையை எதிர்பார்க்காமல் ஆர்வமுடையோர் அனைவரும் முன்வந்து செய்திட வேண்டிய சிறந்த செயல் இது என்பதை எடுத்துக் கூறுவது என் கடமையாகும்.

இந்தத் திட்டத்தின் வெற்றியே நாட்டின் வெற்றியாகும். ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையின் வெற்றியுமாகும். வெற்றிமேல் வெற்றி குவித்திட இந்த வெற்றியே அடிப் படையுமாகும். அதனைத் தெளிந்து செயலாற்ற அனைவரையும் வேண்டுகிறேன். வணக்கம்.

(தமிழக முதல்வர் கலைஞர் 28-3-71-ல்
சென்னை வாஞெலியில் பேசியது)

ஆசிரியர்; வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு; அச்சிடுபவர்; அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.



வெற்றி மேல் வெற்றி !

தமிழ்ப் புத்தாண்டு சிறப்புப் பரிசுகளைப் பெற
மற்றும் ஒரு வெற்றி வாய்ப்பு!

மொத்தப் பரிசுத் தொகை:
ரூ. 45 லட்சம்

சிறப்புப் பரிசுகள் ரூ. 10 லட்சம்

முதல் பரிசு	ரூ. 5 லட்சம்
இரண்டாவது பரிசு	ரூ. 3 லட்சம்
மூன்றாவது பரிசு	ரூ. 2 லட்சம்

(எல்லா வரிசைகளுக்கும் பொதுவாக)

வழக்கமான பரிசுகள் ரூ. 35 லட்சம்

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்.

குலுக்கல் நாள்: 6-5-1971

இதுவரை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
உருவாக்கிய லட்சாதிபதிகள் எண்ணிக்கை: 232

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் கல்வி, மருத்துவம், வீட்டு வசதி போன்ற சமுதாய முன்னேற்றத்துக்கான பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்ப் புத்தாண்டுப் பரிசுகளாக அளிக்கப்படும் பெருந் தொகையைப் பெற்று வெற்றிவாகை சூடுங்கள்.

றப்புப் பரிசுகளின் மீது 10 சதவிகித போனஸ் ஏஜண்டுகளுக்கு அளிக்கப்படும்.

வெளியீடு : இயக்குநர், செய்தி விளம்பரத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9.

கடிதப் போக்கு வரத்து அனைத்தும்,
இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்,
சென்னை-2 என்ற முகவரிக்கே அனுப்பப்படவேண்டும்.

0 வரிசைகள் வெளியீட்டுக்கு உட்பட்டது.

செலவு ஒரு ரூபாய்

வரவோ ஐந்து லட்ச ரூபாய்



தமிழரசு

மலர் 1 : 1971, மே 16 : இதழ் 22

இந்த இதழில்

குழந்தைப் பாதுகாப்பு
கைத்தறிக்கு ஓர் மாளிகை
அஞ்ச வேண்டாம்
கைத்தறியே அணிவோம்!
வீடு உண்டு! வேறு என்ன வேண்டும்?
கற்பது எப்படி?
குற்றவாளிகளைத் திருத்த அறிவியல் சீர்திருத்த முறை
இரசாயனத் தொழில்கள் தொடங்க...
காஞ்சியும் காவேரியும்
வெண்பாப் போட்டி
முதல்வர் எழுதும்
இனியவை இருபது

அட்டையில்
சபையர் அரங்கில் நடைபெற்ற
கைத்தறி விழாப் போட்டியில்
பங்குபெற்ற அணங்குகள்



16. லூத்தரும் பிஸ்மார்க்கும்.

ஜூலைத் திங்கள் பதினேராம் நாள் காலை கொலோன் நகருக்குப் புறப்பட்டோம். வையகத்தில் வெடிகுண்டு மணத்தைப் பரப்பிய ஜெர்மானிய பூமியில், இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக 'யூடிகோலோனை' உலகிற்கு வழங்கிக்கொண்டிருக்கும் நகரம் அது.

கோலோன் நகரில் இன்றும் கலையரசி கோலோச்சி வருகிறுள். ரைன் நதிக் கரையில் அரைவட்ட வடிவில் அமைந்திருக்கும் இந்த அழகிய நகர் இரண்டாம் உலகப் போரினுல் ஏற்பட்ட அழிவிலிருந்து மீண்டும் புத்துயிர் பெற்று எழுந்துள்ளது. பண்டைக் காலம் தொட்டு, ஜெர்மானியக் கலை, கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு பெற்று வரும் கோலோன் நகரில் ஒரு வேடிக்கையான அனுபவத்தை நான் பெற்றேன்.

இங்குள்ள "சர்ச்" ஒன்று மிகவும் எழிலுடனும், கம்பீரத்துடனும் தோற்றமளிக்கிறது. அதை மீண்டும் புதுப்பிக்கும் பணிக்குப் பொருள் சேர்க்கப் பரிசுச் சீட்டுக்களை விற்றுக்கொண்டிருந்தார்கள். அந்தப் பணிக்கு உதவிட வேண்டும் என்ற ஆவல் உள்ளத்தை உந்த, இரண்டு சீட்டுக்களை வாங்கினேன். ஒரு சீட்டுக்குப் 'பரிசு இல்லை' என்றிருந்தது. அடுத்த சீட்டுக்கு 'மேலும் இரண்டு சீட்டுக்களைக் கட்டணமின்றி வாங்கலாம்' என்றிருந்தது. மறுபடியும் இரண்டு சீட்டுக்களை வாங்கியதில் 'இன்னும் நான்கு சீட்டுக்களை இலவசமாகப் பெறலாம்' என்று எழுதியிருந்தது. இந்த நான்கு சீட்டுக்களில் கட்டாயம் ஒன்றிற்காவது பரிசு கிடைக்கும் என்ற ஆவல் என் நெஞ்சில் அலைமோதியது. அமைச்சர்களோ, அவர்கள் குடும்பத்தினரோ ; ஊக அரசின் பரிசுச் சீட்டுக் வாங்கிப் பரிசு பெறுவார்க(யானுல், அது பாமர மக்க மனத்தில் சரியாகவோ, த ருகவோ காழ்ப்புணர்ச்சிக்கு வி திடும். ஆகவே, அமைச்ச களும் அவர்கள் குடும்பத்தி ரும் பரிசுச் சீட்டுக்கள் வாங்கிட கூடாது என அன்புக் கட்டளை பிறப்பித்தார் அண்ணு. அந்தக் கட்டளை ஜெர்மானிய நாட்டிற்குப் பொருந்தாது என்ற எண்ணத்தில் பரிசுச் சீட்டுகளை ஆர்வத்தோடு வாங்கிக் கொண்டு இருந்தேன். அந்த நான்கு சீட்டுக்களுக்கும் பரிசு கிடைக்கவில்லை. ஆனுல், ஆலயத் திருப்பணிக்கு நம்மால் ஒரு சிறு உதவியாவது செய்ய முடிந்ததே என்ற மன நிறைவுடன் அங்கிருந்து புறப்பட்டோம்.

அந்த ஆலயத்தின் அழகிய சித்திர வேலைப்பாடுகளைப் பார்த்துக்கொண்டிருந்த போது மார்ட்டின் லூத்தரைப் பற்றிய சிந்தனை என் மனத்தில் எழாமல் இல்லை. பதினைந்தாம் நூற்றுண்டின் முற்பகுதியில் போப்பிற்குப் பயங்கரக் கனவாக விளங்கினுன் லூத்தர்! "என்னுடைய பகுத்தறிவு ஏற்றுலன்றி, பழைய சமயச் சுவடிகளிலிருந்து சான்றுகள் தந்தாலன்றி, மதத்தின் எந்தத் தலைவர் கூறும் எவ்வித ஆணையையும் ஏற்க மாட்டேன்" என்றவன் லூத்தர். "கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக" என்று முழங்கியவன். "பாவங்கள் புரிபவன் ஆலயங்களுக்குப் பணத்தை அளிப்பதன் மூலம் பிராயச்சித்தம் தேட முடியாது" என்று அறைகூவல் விட்டவன். 1517-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் மார்ட்டின் லூத்தர், ரோமன் சர்ச்சுக்கு எதிராகத் தான் தயாரித்த 95 கருத்துக் குவியல்களை விட்டன்பார்க் ஆலயத்தின் கதவுகளில் ஆணியால் அறைந்து தொங்க விட்டான். அந்தக் கருத்துக்கள் மக்கள் மனத்திலும் பசுமரத்தாணி போல் பதிந்து பரவின.

மார்ட்டின் லூத்தர்
1483-1546

மருண்ட மதகுரு, மதத்துரோகி என்று அவனைக் குற்றம் சாட்டி, மதத்திற்குப் புறம்பானவன் என்று அறிக்கை விட்டார். அந்த ஆணையை ஆலயத்தின் முன்னுலேயே எதிர்த்தான் அஞ்சா நெஞ்சன் மார்ட்டின் லூத்தர். அவனுக்குப் பிறகு முப்பதுஆண்டுகளாகத் தொடர்ந்த போரினுலும் லூத்தரின் கருத்துக்கள் பரவுவதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

லூத்தரின் நினைவுகள் நெஞ்சை அழுத்திடக் கோலோன் நகரைச் சுற்றிப் பார்த்தேன். துணி உற்பத்தி, வங்கி, வாணிபத் தொழிலில் சிறந்து விளங்கும் நகரம் அது. சாக்லெட், சிறந்த கண்ணுடிச் சாமான்கள் தயாரிப்பதிலும் கோலோன் இணையற்று விளங்குகிறது.

மாலை இரண்டு மணிக்கு எஸ்ஸன் நகரம் சென்ருேம். எஸ்ஸன் ஏற்றமிக்கதோர் தொழில் நகர். ரேடியக் கதிரியக்க ஐஸ்டோப்புகள் முதல், சாதாரண இரும்புச் சாமான்கள் வரை இங்கு பெருமளவு உற்பத்தி செய்யப்படுகின்றன.

எஸ்ஸன் நகரில் உள்ள "அசோரா" விடுதியில் சிறிது இளைப்பாறிவிட்டு ரெஸ்லிங்ஹாஸன் நகருக்குச் சென்ருேம். எஸ்ஸன் நகரில் தொழிற்சாலைகள் எழுப்பும் ஓசையில் மூழ்கிக் கிடந்திட்ட செவிகளில் இந்திய நாட்டியக் கலை தரும் சலங்கை ஒலி தேனெனப் பாய்ந்தது. ஆசிய-தென் கிழக்காசியக் கலாச்சார விழா ஒன்று அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் அது.

அங்கு நவீன முறையில் அமைந்த போற்றத் தக்க அரங்கொன்றில், மறைந்த தமிழகத் திரைப்பட இயக்குநர் திரு. சுப்பிரமணியத்தின் மகள் செல்வி பத்மா சுப்பிரபணியம் அவர்கள் கவின்மிகு பரதநாட்டிய நிகழ்ச்சி ஒன்றினை வழங்கிக் கொண்டிருந்தார். கேரளத்துக் கதக்களிக் கலைஞர்களும் தங்கள் திறனைக் காட்டிடும் நிகழ்ச்சியொன்று நடத்தினர். தமிழகத்திலிருந்து நான் வந்திருப்பது தெரிந்ததும் பார்வையாளர்களும் கலைஞர்களும் பெருத்த மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்; நான் கலை மணக்கும் தமிழகத்தின் முதல்வன் என்பதாலோ—அன்றி நானும் ஒரு கலைஞன் என்பதாலோ—அறியேன்!

முத்தமிழில், இசைக்கும் கூத்துக்கும் இரு பகுதிகளை ஒதுக்கி விட்ட இன்பத் தமிழ் மண்ணில் தோன்றிய பத்மா, உச்சியிலே மின்னுகின்ற சுட்டி முதல், உள்ளங்காலில் விளங்குகின்ற செவ்விய சித்திரம் வரை, கலையழகே வடிவமாக ஆடிடும் காட்சியினைக் கண்ட ஜெர்மானிய ரசிகர்கள் பரதக் கலையின் சிறப்பினை உணர்ந்து ரசித்திட்டனர். அந்த பரதக் கலை பெரிதும் பயிலப்பட்டு வரும் பழந் தமிழ் நாட்டின் பண்பாட்டை அவர்கள் மெத்த வியந்திருக்க வேண்டும்; ஆட்டக் கலையின் அணு ஒவ்வொன்றையும் அழகாக விளக்குகின்ற இந்த நாட்டியத்தினைப் பயில்கின்ற நாட்டு மக்கள் எத்தகைய நவீ நாகரீகராக விளங்குதல் வேண்டும் என்று அவர்கள் எண்ணியிருக்கக் கூடும்.

ஆட்டக் கலைக்கு உயிர்தந்த ஆட்டன் அத்தி, மாதவி ஆகியோர் வளர்த்த கலையல்லவா பரதக் கலை!

கன்னலோடு கனிச்சாறு கலந்தாற்போல, பொன் மலருக்கு மணம் கூட்டியது போல, நாட்டியத்துடன் நாடகத்தினையும் பின்னவிட்டுக் கதை சொல்லும் கலையான கதக்களியையும் அங்கு ஜெர்மன் மக்கள் கண்டு களித்தனர். கலைஞர்களின் உடையும், ஒப்பனையும், இசைக் கருவிகளின் ஓசைக்கேற்ப அசைவுகளை நிகழ்த்துவதில் அவர்கள் காட்டிடும் ஒப்பற்ற திறனும் ஜெர்மானிய ரசிகர்களை உற்சாகத்தின் உச்ச நிலைக்கே இட்டுச் சென்றன. ஒவ்வொரு காட்சி முடிவடையும்போதும் அவர்கள் எழுப்பிய கையொலி அதற்குச் சான்று கூறியது.

கலை நிகழ்ச்சிகளைப் பார்த்து விட்டு இரவு பத்து மணிக்கு டஸ்ஸல்டார்ஃப் (Dusseldorf) நகருக்குச் சென்ருேம். இட்லரின் காலத்தில் "சூருவளிப் பட்டாளத்"தின் காலணிகளின் ஒலி எப்பொழுதும் அங்குக் கேட்டுக் கொண்டிருக்குமாம். இன்று வேகமாக விரைந்து செல்லும் விதவிதமான கார்களின் ஓசைதான்

முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை

நகரில் அந்நாளில் சிறுவர்கள் கூடப் போர் உடையுடன் காணப்படுவார்களாம். ஏழு இலட்சம் பேருக்கு மேல் வாழும் இந்நகரில் மலர்ந்த முகத்துடன் இன்று மக்கள் வாழ்வதைக் கண்டேன். ரைன் நதிக்கரைத் துறைமுகங்களாக விளங்கும் டஸ்ஸல்டார்ஃப், கோலோன் நகர்களின் மூலம், ஜெர்மானிய மக்களால் எஸ்ஸன் நகரில் ஏராளமாகத் தயாரிக்கப்படும் நேர்த்தியான பொருள்கள் உலகமெங்கும் விற்பனைக்குச் செல்கின்றன.

டஸ்ஸல்டார்ஃப் விமான நிலையம் உலகத்தின் பல்வேறு நகரங்களுடன் தொடர்பு கொண்டுள்ள சிறந்த விமான நிலையம். ஜெர்மனி, '' ஆட்டோபான் '' என்று அழைக்கப்படும் நெடுஞ்சாலைகளுக்குப் பெயர்பெற்ற நாடுகளில் ஒன்ருகும். ஜெர்மனிக்குச் செல்லும் எவரும் அந்த நாட்டின் நெடுஞ்சாலைகளின் நேர்த்தியையும், தரத்தையும் மறக்க மாட்டார்கள்.

சாலைகள் இந்நகரைத் தொட்டுச் செல்லுகின்றன. இரவையும் பகலாக்கும் வண்ண விளக்குகள் இந்நகரினிடையே செல்லும் ஆற்றின் கால்வாய்க்கு எழில்தனைக் கூட்டுகின்றன. மேற்கு ஜெர்மனியில் உள்ள நகரங்களிலேயே எழில் மிக்க நகரம் டஸ்ஸல்டார்ஃப்தான். முக்கிய வங்கிகளின் தலைநகராகவும், உலகின் தலைசிறந்த வியாபாரிகளின் இருப்பிடமாகவும் ஐரோப்பாவின் கலைகளுக்கு நடுநாயகமாகவும் விளங்குகிறது. இங்குள்ள வண்ண ஓவியப்பள்ளி மிகவும் சிறப்பு வாய்ந்தது. கலைக் கழகமும், கலைக் கண்காட்சியும் பார்க்கத் தக்கவை.

இந்நகரில் 1899-ஆம் ஆண்டில் பிஸ்மார்க்குக்குச் சிலை ஒன்று நிறுவி உள்ளார்கள். ஐரோப்பாவின் மத்தியில் அமைந்திருக்கிறது ஜெர்மனி. இது ஐரோப்பாவின் இதயம் என்று போற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனல் எறும்புகளுக்கு இடை

டஸ்ஸல்டார்.'.ப்பிலுள்ள தொடர்வண்டி

தேனீக்களுக்கு இடையில் மலர்ந்த மலராகவோதான் இது இருந்து வந்திருக்கிறது. ' இது தான் ஜெர்மனி ' என்று வரையறுத்த இயற்கை எல்லைகளோடு அந்த நாடு என்றுமே இருந்ததில்லை. நாற்புறத்திலும் சூழ்ந்திருக்கும் நாடுகளின் எதேச்சாதிகார ஆசைகளுக்கேற்ப, அதன் எல்லைகள் மாறிக் கொண்டே வந்திருக்கின்றன. '' எந்த நேரத்தில் எந்தப் பக்கமிருந்து எந்த எதிரி தாக்குவானே?'' என்ற அச்சம் ஜெர்மானிய மக்களுக்கு என்றும் இருந்து வந்தது.

அந்த அச்சத்தை விழிப்புணர்ச்சியாக்கி, அந்த விழிப்புணர்ச்சியில் வீரமறவர்களை உருவாக்கியவன்தான் ஒட்டோ வான் பிஸ்மார்க். 1862-ஆம் ஆண்டு பிஸ்மார்க் தலைமை அமைச்சர் ஆனபொழுது பாராளுமன்றத்தில் பகிரங்கமாகவே சொன்ஞன். '' இது நாள் வரை நீங்கள் பேசிப் பேசிச் சாதித்தது என்ன ? கொலைவாளினை எடுங்கள் ; மிகு கொடியோர் செயல் அறுப்போம் ! '' என்ருன். படைகளைச் சீர்திருத்தி, ஆஸ்திரியாவுடன் கூட்டுச்சேர்ந்து, இரண்டு ஆண்டுகளில் டென்மார்க் மீது போர் தொடுத்தான். பின்னர் ஆஸ்திரியாவுடன் வேண்டுமென்றே ஓர் தகராறினை உருவாக்கி, அதனையும் வெற்றி கொண்டான் 1870-ல். பிரான்சின் பெருமையினைத் தகர்த்து, வளமான இடங்களைப் பெற்றதுமன்றி, இருநூறு மில்லியன் பவுன்களைப் போர்க்காலச் சேதத்திற்கு ஈடாகப் பெற்ருன். 1871-ஆம் ஆண்டில் உலகப் படத்தில் முதன்முறையாக ஜெர்மானிய இனம் தனக்குரிய எல்லாப் பகுதிகளையும் மீட்டு ஒரு முழுமையான நாடாக வடிவெடுத்தது. ஐரோப்பாவின் அசைக்க முடியாத வல்லரசாக உருப்பெற்றது. ஆகவே. அவனுக்குச் சிலையமைத்து அந்நாட்டு மக்கள் தங்கள் நன்றியுணர்வைக் காட்டுவதில் வியப்பேதுமில்லை.

வரலாற்றுப் புகழும், தொழில் வளமும், எழிலும் நிறைந்த இந்நகரைப் பார்த்துவிட்டு எஸ்ஸன் நகருக்குத் திரும்பிச் சென்ருேம். இரவு கழிந்தது.

ஜெர்மானியர்கள் சிறந்த உழைப்பாளிகள் மட்டுமல்ல; எதனையும் சீர்தூக்கிப் பார்க்க வல்ல சிந்தனையாளர்கள். சிறந்த விஞ்ஞானிகளும் கூட! இரும்பைக் காய்ச்சி உருவாக்குவதில் மட்டுமல்ல, கரும்பை நிகர்த்த காவியங்கள் புனைவதிலும், சுரும்பெனச் சுழன்று ஆடுவதிலும் வல்லவர்கள். பாடுவதிலும், பரவசந் தரும் ஓவியங்கள் தீட்டுவதிலும், சிறப்பு மிக்கவர்கள். ஆல்பர்ட் டியூரர் போன்ற ஓவியமேதைகளையும், கெப்ளர், அலெக்ஸாண்டர், ஹம்போல்ட், ராண்ட்ஜன் போன்ற விஞ்ஞான வித்தகர்களையும், பாச், ஹேண்டல், பீத்தோவன் போன்ற இசைத்துறை விற்பன்னர்களையும், கத்தே போன்ற கவிஞர்களையும், இம்மானுவேல் கந்த் போன்ற இணையற்ற சிந்தனையாளர்களையும் தந்த பூமி இட்லரின் கொடுங்கோன்மையின் விளைவாக இன்று இரு கூருகப் பிளவுபட்டு நிற்கின்றது. எல்லையைக் குறிக்க நெடுஞ்சுவர் எழுப்பப்பட்டுவிட்டது!



ஒட்டோ வான் பிஸ்மார்க் (1815–1898)

1945 வரை இதயங் கலந்து பழகிய உறவினர்களையும், இனிய நண்பர்களையும் பிரித்துக் கொண்டு இன்று ஜெர்மனியின் குறுக்கே எண்ணூறு மைல்களுக்கு எல்லை ஓடுகிறது. உழவன் கிழக்கு ஜெர்மனியிலும், அவன் உழுத நிலம் மேற்கு ஜெர்மனியிலுமாக இருவேறு கோட்பாடுகளுக்கிடையே, இருவேறு நிலைகளில் ஜெர்மானிய நாட்டின் உடன்பிறந்தவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள்.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு வியத்தகு முறையில் முன்னேறி இருக்கும் மேற்கு ஜெர்மனியை விட்டு, கலாச்சாரமும், பண்பாடும் மிக்க ஜெர்மானிய மக்களுடன் பழகிய பசுமையான நினைவுகளோடு ஜூலைத் திங்கள் 12ஆம் நாள் டஸ்ஸல் டார்ஃப் விமான நிலையத்தை வந்து அடைந்தோம். சற்றுக் காலதாமதமாக வந்த நியூயார்க் விமானம் எங்களைச் சுமந்து கொண்டு பறந்தது.

ஐரோப்பாவின் மலர்க்காடு என்று வர்ணிக்கப்படும் நெதர்லாந்தை நோக்கிப் பயணமாஞேம். (தொடரும்)



பெருகிவரும் இலண்டன் நகரப் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் பொறுப்பை திரு எஸ். தியாகராஜன் என்ற தமிழர் ஏற்றுள்ளார். இவர் வட ஆர்க்காட்டிலுள்ள சோளிங் கரைச் சேர்ந்தவர்.

ஆண்டுக்கு 1,26,000 ரூபாய் (7,000 பவுண்கள்) சம்பளத்துடன் கூடிய இந்த வேலை 33 வயது இந்தியருக்குக் கிடைத்திருக்கிறது என்றாலும், தியாகராஜன் நிறைந்த அனுபவம் உள்ளவர். போக்கு வரத்து, நகர அமைப்பு, கட்டடக்கலை ஆகியவற்றில் நிபுணர்.

இந்தியாவிலேயே பல்கலைக் கழகப் படிப்பை முடித்துக் கொண்டு, கட்டடத்துறை பற்றியும் ஓராண்டு பயிற்சிபெற்ற தியாகராஜன் 1968-ல் அமெரிக்கா சென்றார். அங்குப் பணியாற்றிவிட்டு, பிறகு பெல்கிரேடு நமர அமைப்புக் கழகத்தில் ஆலோசகராகச் சேர்ந்தார். இப்போது இலண்டன் புறநகர்ப் பகுதிப் போக்கு வரத்துப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

இவர் கண்காணிப்புக்குக் கீழே உள்ள பகுதியின் பரப்பு 600 சதுரமைல்கள்; 80 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இந்தப் பகுதியில் உள்ள சாலைகளின் நீளம் 8,000 மைல்கள். இதில் 16 இலட்சம் கார்கள் எந்நேரமும் சுற்றிக்கொண்டே இருக்கின்றன. 2,50,000 சரக்கு வாகனங்களும் நடமாடுகின்றன.

இருபத்திநான்கு மணி நேரத்தில் 4,30,000 கார்கள் 6,00,000 மக்களைச் சுமந்து கொண்டு மத்திய இலண்டனுக்கு வருகின்றன. ஒரு நாளில் இலண்டன் போக்கு வரத்துப் பேருந்துகள் 50,00,000 பயணிகளையும், பாதாள இருப்புப் பாதை 20,00,000 பயணிகளையும் சுமந்து செல்கின்றன.



வெட்டிய விறகை ஈசன்
    வீதியில் விற்றான் அந்நாள்
கட்டியே கையால் நெய்த
    கைத்தறித் துணிகள் தம்மை
சுட்டிடும் வெயிலில் ஓடிச்
    சுமந்துதான் விற்றான், நெய்வோர்
பட்டிடு துயரம் மாற்றப்
    பைந்தமிழ்த் தலைவன் அண்ணா!

இருபது லட்சம் மேலாய்
    இருந்திடு நெசவா ளர்தம்
கருதரு துயரம் நீக்கக்
    கைத்தறி ஆடை கட்டித்
திருமணக் கோலம் கொள்வீர்,
    தீவளிப் பொங்கல் ஆதிப்
பெருவிழாச் சிறக்கச் செய்வீர்,
    பெரியதோர் உதவி ஈதே!

பட்டிலும் மயிரி னாலும்
    பஞ்சிலும் செய்த ஆடைப்
பட்டியல் வரலா றெல்லாம்
    பார்த்தனம் சிலம்பின் உள்ளே
ஒட்டிய வயிற்று மக்கள்
    உண்டுநல் வாழ்வு வாழக்
கட்டுவோம் வண்ண வண்ணக்
    கைத்தறித் துணிகள் நாமே

ஆவியந் துகிலை நெய்த
    அழகிய கரங்கள் இன்று
மேவிய துயரத் தாலே
    மெலிந்திவண் வாடல் நன்றோ!
பூவிரி நங்கை நல்லீர்!
    புதுமணம் புரியும் மக்காள்!
யாவரும் விரும்பும் இந்தக்
    கைத்தறி ஆடை கொள்மின்.

கதரினுக் கடுத்த தாகக்
    கருதுவார் சிலரும் உண்டு
முதலிடம் கையால் நெய்யும்
    கைத்தறி ஆடை கட்கே
இதமுற வழங்கி வாழ்வீர்
    ஏழ்மையை ஒழிக்கச் செய்வீர்
இதனினும் நீவிர் செய்யும்
    எல்லையில் உதவி உண்டோ!

கண்கவர் சோளித் துண்டு,
    கடல்நிறச் சேலை; எண்ணில்
பெண்களுக் கேற்ற ஆடை ;
    பிள்ளைகட் குரிய சொக்காய் ;
பண்களி ஆடல் பாடல்
    பரதநாட் டியத்திற் கேற்ற
தண்கமழ் உடைக ளெல்லாம்
    கைத்தறித் துணியில் தைப்போம்.

வாங்குமின் கையால் நெய்த
    வண்ணமார் துணிகள் நீவிர்
தாங்குமின் நெய்தல் செய்யும்
    தமிழினத் தோழர் வாழ்வை!
ஈங்குநம் மக்கள் வாழ
    இயன்றிடும் உதவி செய்து
பாங்குடன் தமிழர் ஓங்கப்
    பலபணி ஆற்றி வாழ்வோம்.

வள்ளுவர் நெய்த ஆடை!
    மலையையும் மன்னர்க் கீந்த
தெள்ளிய பாரி வள்ளல்
    செல்வியர் ஔவைக் கந்நாள்
உள்ளமோ டளித்த நீல
    ஒளியுறு சிறிய ஆடை
தள்ளுதல் முறையோ! மக்காள்!
    தமிழினம் சிறக்கச் செய்வீர்!



நெசவாளரின் நல் வாழ்வு . . . .

1935-ஆம் ஆண்டில், 43 பிரதம கைத்தறி நெசவாளர் சங்கங்களோடும், ஓராயிரம் தறிகளோடும் ஆரம்பித்த தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் இன்று சுமார் ஓராயிரம் பிரதம சங்கங்களையும், இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட தறிகளையும் கொண்டு இயங்கிவருகிறது. இந்தக் கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்கள் அனைவர்க்கும் நல்ல மலிவான மூலப் பொருள்கள் கிடைப்பதற்கு வழி செய்வதும், உற்பத்தியில் கணிசமான ரகங்களை விற்க வகை செய்வதும் சங்கத்தின் முக்கிய பொறுப்புக்களாகும். நாடு முழுவதும் உள்ள சுமார் 350 விற்பனை நிலையங்கள் மூலம் பலதிறப்பட்ட மக்களுக்கும் விதம் விதமான துணிகளை விற்பனை செய்கிறது. சங்கத்துக்குச் சொந்தமான சாயச்சாலைகள், கூட்டுநெசவுத் தொழிற்சாலைகள், நூலும் துணியும் பதனிடும் தொழிற்சாலை இவை மூலமாகப் பற்பல வசதிகளைத் தமிழகம் முழுவதும் உள்ள நெசவாளர் சங்கங்களுக்கு இச்சங்கம் செய்து தருகிறது. இந்தச் சங்கத்தின் மொத்த விற்பனை கடந்த ஐந்து ஆண்டுகளில் இரட்டிப்பாக இருக்கிறது. 1970-ல் மொத்த விற்பனை ஆறுகோடியை எட்டியுள்ளது. 1971-ல் எட்டுக் கோடியை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1969-ல் 4½ கோடியாக இருந்து 1970-ல் 6 கோடியாகியது, அதாவது சுமார் 1½ கோடி விற்பனை உயர்வுற்றது ஒரு சாதனையாகும். நிர்வாகம், விற்பனை, கணக்குகள் ஆகிய எல்லாத்துறைகளிலும் மற்ற தலைசிறந்த கைத்தறி நிறுவனங்களைப் போலவே நவீன வேலை முறைகளை இன்றைய வியாபார அடிப்படையில் கடைப்பிடிக்கிறோம். இதன் பயனை மாநிலத்திலுள்ள எல்லா நெசவாளர்களும் பெறுவார்கள் எனலாம், கடந்த மூன்று, நான்காண்டுகளில் காசுக்கடன் நூறு லட்சத்திலிருந்து 175 லட்சத்திற்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. இன்னும் 200 லட்சத்திற்கு இதை உயர்த்தவும், அதற்கு வேண்டிய அளவிற்கு தமிழக அரசிடம் பங்குத்தொகை பெறவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நன்மைக்காகத் தமிழக அரசும், மாநில தலைமைச்சங்கமும் எவ்வளவுதான் உதவி செய்தாலும், நெசவாளர்களுக்கு நல்வாழ்வளிக்கும் பொறுப்பு, பொது மக்களின் கையிலிருக்கிறது.

நவீன நாகரிகத்துக்கேற்றவாறு மக்கள் விரும்பும் ரகங்களை நெசவாளர்கள் உற்பத்தி செய்து தரத் தயாராக இருக்கின்றார்கள் என்பதற்கு கைத்தறிப் பொருட்காட்சியே சான்று.

ஆர். கிருபாகரன்

கைத்தறிப் பெருமை

இந்தியாவில் உள்ள சுமார் 25 இலட்சம் கைத்தறிகளில், தமிழகத்தில் மட்டும் 5½ இலட்சம் கைத்தறிகள் உள்ளன. சுமார் 1·87 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவுத் துறையில் உள்ளன. சுமார் 25 இலட்சம் மக்கள் இத்தொழிலை நம்பி வாழ்கின்றனர்.

தமிழகத்தில் மொத்தம் சுமார் 48 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணி உற்பத்தியாகிறது. இதில் கூட்டுறவுத் துறையில் மட்டும் ரூ. 10 கோடி மதிப்புள்ள துணி உற்பத்தியாகிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழக அரசு ரூ. 10·60 கோடி கைத்தறி அபிவிருத்திக்காக ஒதுக்கியுள்ளது. இதில் 1970-71-ஆம் ஆண்டில் 197·06 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வருகின்ற 1971-72-ஆம் ஆண்டில் 254·34 இலட்ச ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 903 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1·87 இலட்சம் தறிகள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனத்தை ரிசர்வ் பாங்கு, கூட்டுறவு வங்கிகள் மூலம் 1½ சத விகிதம் குறைந்த வட்டியில் அளித்து வருகிறது. தமிழக அரசு 5 கோடி ரூபாய் அளவிற்கு உத்திரவாதம் அளித்துள்ளது.

1967-68 முதல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பலப்படுத்த அரசு நேரடியாகப்பங்குகள் எடுத்துக்கொள்ளும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 26 இலட்சம் அரசால் சங்கங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

1970 பிப்ரவரி முதல் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று அமுலாக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் புதிய ரகங்களையும், புதிய முறைகளையும் புகுத்தி ஓர் ஆண்டில் ஒரு பயிற்சி நிலையத்தில் 180 நெசவாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் முறையில் 12 பயிற்சி நிலையங்கள் மாவட்டத்திற்கு ஒன்றாகச் செயல்பட்டு வருகின்றன. இப் பயிற்சித் திட்டத்தில் அரசுக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 8 இலட்சம் செலவாகும்.

கைத்தறித் துணித் தேக்கத்தைத் தவிர்க்கவும், விற்பனையைப் பெருக்கவும், ஊக்கமளிக்கக் கைத்தறித் துணி சில்லறை விற்பனையில் ரூபாய்க்கு 5 பை வீதம் தள்ளுபடியும் மொத்த விற்பனைக்கு ரூபாய்க்கு 3 பை வீதமும் ஆண்டுதோறும் தள்ளுபடி கொடுப்பதற்கு அரசு மானியம் அளித்து வருகிறது. மேலும் தீபாவளி, கிறித்துமஸ், பொங்கல், கைத்தறி வார விழா ஆகிய காலங்களில் ரூபாய்க்கு 10 பை வீதம் விசேட தள்ளுபடி மானியம் கொடுக்கப்படுகிறது.

1970-71-ம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் ரூ. 110 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. அறுபத்தெட்டு நாட்களுக்கு விசேட தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 1971-72-ஆம்ஆண்டிலும் ரூ. 110 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கைத்தறித் துணி விற்பனையை ஊக்குவிக்க விளம்பரத்திற்காகவும், பிரச்சாரத்திற்காகவும், மானியம் வழங்கப்படுகிறது. 1970-71-ஆம் ஆண்டில் ரூ. 5·39 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டது.

சொந்தத் தறி இல்லாத நெசவாளர்களை ஊக்குவிக்கத் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்குக் கருவிகள் வாங்குவதற்கும், பணிக்கூடங்கள் அமைக்கவும் நீண்டகாலக் கடன்களும், பணியாட்களுக்கும், வாடகைக்கும், மானியங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது தமிழ்நாட்டில் 22 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 1970-71-ஆம் ஆண்டில் 1·80 இலட்சம் ரூபாய் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள 20,000 பட்டுத் தறிகளில் 3,500 தறிகள் 11 பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் இயங்கிவருகின்றன. இச் சங்கங்களில் அங்கத்தினர்களுக்குப் பங்குத் தொகை கடனும், நவீன கருவிகள் வாங்க மானியமும் அளிக்கப்பட்டு வருகிறது. 1970-71-ஆம் ஆண்டில் ரூ. 0·86 இலட்சம் இத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது

தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அரசு இதுவரை ரூ. 22·50 இலட்சங்களுக்குப் பங்கு எடுத்துள்ளது. மேலும், நூல், இரசாயனப் பொருட்கள் வாங்கவும், துணித் தேக்கக்காலத்தில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து துணி கொள்முதல் செய்யவும் அவ்வப்போது அரசு கடனுதவி அளித்து வருகிறது. இதனைத் தவிர நடைமுறை மூலதனத்திற்காக ரிசர்வ் வங்கியிலிருந்து ரூ. 200 இலட்சம் காசு கடனாக இச் சங்கம் பெற்றுள்ளது.

நெசவாளர்களின் சமூகப், பொருளாதார நிலைகளை மேம்படுத்த அரசு சில சிறப்பான திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்குத் தொழில் கூடம் இணைந்த வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது. இதற்கு அரசு ஒரு வீடு ஒன்றிற்கு ரூ. 2,000 கடனாகவும். ரூ. 1,250 மானியமாகவு

திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ. 127·65 இலட்சம் செலவிட்டு 2,683 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நான்காவது திட்டக் காலத்தில் 500 வீடுகள் கட்டிக் கொடுக்க ரூ. 27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நெசவாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கச் சம சிக்கன நிதித் திட்டம் ஒன்றை அரசு நடத்தி வருகிறது. இத்திட்டம் தமிழக அரசிற்கே உரித்தான ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்கள் அவர்களது கூலியில் ரூ 1-க்கு 6 காசு வீதம் கொடுக்கிறார்கள். சம்பந்தப்பட்ட சங்கம் 2 காசும், அரசு 4 காசும் கொடுப்பதால் இந்தத் திட்டத்தில் நெசவாளர் வழங்கும் தொகைக்கு இணையாக மேலும் 6 காசு சேருகிறது. இத்திட்டம் 1962–63 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 1970–71 ல் ரூ. 2 05 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 8,500 நெசவாளர்கள் ரூ. 42 இலட்சம் சேமித்துள்ளார்கள்.

கூட்டுறவுத் துறையிலும் பிற துறையிலும் பணிபுரியும் நெசவாளர்களை ஊக்குவிக்கவும், கவர்ச்சிகரமான துணிகளை உற்பத்தி செய்யவும், அரசு ஒவ்வொரு ஆண்டும், போட்டி நடத்தி வருகிறது. இதில் பரிசு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூ. 20,000 மானியமாகச் செலவழிக்கப்படுகிறது.

தமிழகத்திலுள்ள நெசவாளர்களுக்குத் தரமான நூல் நியாய விலைக்குக் கிடைக்கும் பொருட்டு மாவட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் (சென்னை, நீலகிரி மாவட்டம் நீங்கலாக) அரசு 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளை நிறுவியுள்ளது. இவற்றின் உற்பத்தி ஆண்டு ஒன்றிற்கு 66,000 பேல்களாகும். கைத் தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை நூல் விலை உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ளதிலிருந்து விடுவிக்கும் பொருட்டு, மத்திய அரசு அண்மையில் பருத்தி நூல் சிறப்புச் சேமிப்புத திட்டமொன்றை ஏற்படுத்தி 10,20,30, 40 எண்ணுள்ள நூல்களுக்கான அயல் நாட்டுப் பஞ்சினை இறக்குமதி செய்து, நூலை, கைத்தறி, விசைத் தறிகளுக்குப் பயன்படுத்தத் துணி, நூல் ஆணையாளர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விநியோகிக்கிறது.

கூட்டுறவுத் துறைக்கு வெளியே உள்ள நெசவாளர்களும் தம்தொழிலைத்தொடர்ந்து நடத்த ''கைத்தறி நிதி கார்ப்பரேஷன்'' ஒன்றை நமது அரசு ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலதனமாகிய ரூ. 62·35 இலட்சத்தில் அரசின் பங்கு ரூ. 25 இலட்சமாகும். 31-12-1970 வரை முடிந்த ஓராண்டுக் காலத்தில் அதன் அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்ட கடனளவு ரூ. 140·09 இலட்சமாகும்.

கைத்தறித் தொழிலுக்குத் தேவைப்படும் இரசாயனம் மற்றும் சாயமருந்துகள் தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்ய இரண்டு ஆலைகள் அமைக்க நமது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பட்டு, கைத்தறி நெசவாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள ஜரிகையை சூரத்திலிருந்து பெற்று வருகின்றனர். தமிழகத்தில் நியாயமான விலையில் ஜரிகை கிடைக்க 25 இலட்சம் ரூபாய் செலவில் காஞ்சிபுரத்தில் ஜரிகை உற்பத்தித் தொழில் கூடமொன்றை நிறுவ அரசு அனுமதித்துள்ளது.

நெசவாளர் சங்கங்களின் வளர்ச்சிக்கு அதிகக் கவனம் செலுத்துவதற்காக 1969-ஆம் ஆண்டு முதல் இரண்டு, மூன்று மாவட்டங்களுக்கு ஒரு தனிக் கைத்தறித் துணைப் பதிவாளர் நியமிக்கப்பட்டு, கைத்தறித் துறை இயக்குநரின் நேரடி மேற்பார்வையில் பணியாற்றி வருகின்றனர்.

கரூர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட். நெ. எம்.எம். 76.

கரூர், திருச்சி மாவட்டம். தொலைபேசி 168

கீழ்க்கண்ட தேவைகளுக்கு எங்களை அணுகுக

உயர்தர படுக்கை விரிப்புகள், போர்வைகள்
தலையணை உறைகள், தயாரிப்புகள்

எங்கள் தயாரிப்புகள் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் அகில இந்திய கைத்தறி மாளிகைகளிலும் கிடைக்கும்.

G. பாலாஜி, B.SC.
கூட்டுறவு உப பதிவாளர்-செயலாளர்

மு. குழந்தைவேல்,
தலைவர்

கைத்தறித் தொழிலுக்கு ஒரு புதிய ஊக்கம்

"தமிழகத்தில் அரசால் நிறுவப்பட்ட பன்னிரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் குறைந்த விலையில் தரமான நூல்"

மொத்தத் திட்டச் செலவு	..	ரூ. 10·00 கோடி
செலுத்தப்பட்ட மொத்த மூலதனம்	..	ரூ. 3·64 ,,
தமிழக அரசால் செலுத்தப்பட்ட மூலதனம்		ரூ. 2·00 ,,
உற்பத்தியாகும் நூல் ரகங்கள்	..	20-ம் நெம்பர் முதல் 100-ம் நெம்பர் வரை
ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தியாகும் நூலின் அளவு	..	66,000 பேல்கள்
வேலைவாய்ப்பின் மூலம் பயன் பெறுவோர் எண்ணிக்கை	..	5,300

தங்களின் தேவையான நூலுக்கு, கீழ்க்காணும் நூற்பாலைகளை அணுகுக:—

		Carded	Combed
1.	தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை, பேட்டை, திருநெல்வேலி. ..	20s, 26s, 40s, & 60s 2/20s & 2/17s	60s & 100s
2.	சேலம் கூட்டுறவு நூற்பாலை, அம்மாப்பேட்டை, சேலம். ..	60s & 80s & 2/60s	60s & 80s
3.	தஞ்சை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மணல்மேடு, மாயவரம்.	60s	80s & 100s
4.	வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அரியூர், வேலூர். ..	40s, & 60s, 80s, 100s 2/60s & 2/80s	..
5.	தென் ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, சாரம், திண்டிவனம்.	60s & 80s	..
6.	காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை, காஞ்சீபுரம்.	40s & 60s	..
7.	திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை, நாசரத், திருநெல்வேலி மாவட்டம். ..	30s, 36s, 40s, 60s & 2/40s	..
8.	ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை, ஸ்ரீவில்லிபுத்தூர். ..	36s, 40s, 60s & 2/40s	60s
9.	மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மேலூர், மதுரை மாவட்டம். ..	20s, 30s, 40s 2/2ᴼs, & 2/30s	..
10.	கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, தாராபுரம். ..	20s, 40s 2/20s, & 2/40s	..
11.	திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, மலைக்கோவிலூர், கரூர். ..	20s, 30s 2/17s & 2/20s	..
12.	கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி. ..	20s, 24s, 26s 40s 2/17s & 2/20s	..

கணக்கிடலங்காத ஊர்திகள் பரந்த சாலையின் ஓரத்தில் வரிசை வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. ஓடையில் சலசலவென்று ஒலியுடன் செல்லும் நீரினைப்போல் அலை அலையாக மக்கள் வெள்ளம் சாலையின் இருமருங்கிலும் தமக்குள் ஏதேதோ பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் சென்று கொண்டிருக்கிறது. நறுமணங் கமழும் மலர்களைக் கொண்ட கடைகள் ஏராளமாக ஒருபக்கம் காட்சியளிக்கின்றன. அருகேதான் நாட்டின் அமைதியைக் காக்கும் காவல்நிலையம் ஒன்று தன்னுடைய பணிகளில் மூழ்கிக் கிடக்கிறது. முருகனின் தலங்களில் ஒன்றான கந்தகோட்டமும் சிறிது தூரத்தில் தான் ஏராளமான பக்தர்களைத் தன்னிடத்தே கொண்டிருக்கிறது. இப்படிப் பல்வேறு சிறப்புக்களையும் தன்னிடத்தே கொண்டு விளங்குகிறது, சென்னை நகரில் பிரபலமாக விளங்கும் ரட்டன் பஜார்.

ஊர்திகளைக் கடந்து சாலையின் மேற்பாகத்தை அடைந்தால் பெரிய கட்டடம் ஒன்று மயில் சின்னத்தை ஏந்திக்கொண்டு வருவோரை எல்லாம் எதிர்கொண்டழைக்கிறது. ஏராளமான ஆண்களும், பெண்களும் அவசர அவசரமாகக் கட்டடத்தினுள் நுழைகிறார்கள். அருகில் சென்ற பொழுதுதான் அது புகழ்பெற்ற "கைத்தறி மாளிகை" (Handloom House) என்று தெரியவருகிறது. ஏராளமான மக்களின் கூட்டம் கைத்தறித் துணிகள் வாங்குபவர்களின் எண்ணிக்கையையும், அவற்றின் மீதுசென்னை வாழ் மக்கள் கொண்டுள்ள ஆர்வத்தையும் நமக்குக் காட்டுகிறது. நிமிடக்கணக்கில் வெளியே நின்றுகொண்டு இவற்றையெல்லாம் வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தோம். எங்களுக்குள் எழுந்த ஆசையின் காரணமாக உள்ளே நுழைய முடிவு செய்தோம்.

கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்ததும் குளிர் மிகு கோடைக்கானலுக்கோ, உதகைக்கோ வந்து விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்ந்த மர நிழலைப்போல, அங்கே அமைக்கப்பட்டுள்ள குளிர் சாதன வசதி, உடலின் வெப்பத்தைத் தணித்துப் புத்துணர்ச்சியையும், புதுத்தெம்பையும் ஏற்படுத்தியது. திருவிழாவோ என்று வியக்கும் வண்ணம் ஆண், பெண், சிறுவர்கள் கூட்டம் அங்கே நிறைந்திருந்தது. ஒரு பெண்ணைச் சுற்றிப் பல பெண்கள் நின்று கொண்டு ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். அருகில் சென்று கவனித்தபொழுதுதான் அது பெண் அல்ல என்பது புரிய வந்தது. காட்சிக்காக வைக்கப்பட்ட பொம்மையே அது!

"அந்தப் புடவையின் நிறம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்கிறார் ஓர் அம்மையார். சக தோழிகளுடன் வந்த இளம் பெண் ஒருத்தி, "இந்தப் புடவையையே வாங்குவேன்" என்று பிடிவாதம் செய்கிறார். புடவையின் ஒரு நுனியைப் பிடித்துக் கொண்டு தன்னையே மறந்து சிலை என நிற்கிறார் ஒரு நடுத்தர வயதுடைய மங்கை. விற்பனை நிலையத்தில் நுழைந்த பெண்கள் அனைவருமே முதலில் அந்தப் பொம்மையின் மீது தான் தங்களுடைய கவனத்தைச் செலுத்துகிறார்கள். வலது பக்கம் எங்களுடைய பார்வையைச் செலுத்தினோம். மக்கள் கூட்டம் ஒரு 'கவுண்டர்' அருகில் காணப்பட்டது. விசாரித்தபொழுது தாங்கள் வாங்கின துணிகளுக்குரிய பணத்தைச் செலுத்துவதற்காகவே அவர்கள் நிற்கிறார்கள் என்பது தெரிய வந்தது.

வேறொரு பகுதியை நோக்கி நடந்தோம். ஏராளமான பெண்கள் தங்களுக்குத் தேவையான புடவைகளைத் தேர்ந்தெடுப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். இவற்றையெல்லாம் வேடிக்கை பார்ப்பதுபோல் பார்த்து விட்டு மேலே உள்ள மேலாளரின் அலுவல் அறையை அடைந்தோம்; அங்கே மேலாளர் திரு ஏ. ஆர். மணி அவர்கள் இன்முகத்துடன் எங்களை வரவேற்று இருக்கையில் அமர்த்தினார். சில நிமிடங்கள் உரையாடிவிட்டு எங்களுக்குச்சில விற்பனைப் பிரிவுகளைக் காட்டினார். தனது விற்பனை நிலையத்தைப்பற்றிச் சில தகவல்களையும் கொடுத்தார்

இந்தக் கைத்தறித் துணி விற்பனை நிலையம் (Handloom House) "அகில இந்திய மார்க்கெட்டிங் சொசைடி" என்ற பெயருடன் மத்திய அரசின் உதவியோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர், டெல்லி அகமதாபாத் போன்ற ஆறு இடங்களில்தான் இதனுடைய விற்பனை நிலையங்கள் உள்ளன. இதில், மாநில சங்கம், நெசவாளர் சங்கம், தனியார் துறை போன்ற மூன்று பிரிவுகள் உள்ளன. இதில்

உள்ள சில இயக்குநர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகவும், சிலர் மத்திய அரசாலும் நியமிக்கப்படுகிறார்கள். தனியார் துறையினருக்கு இதில் நியமனம் கிடையாது. இந்நிலையங்களில் விற்பனை செய்யப்படும் துணிகள் கூட்டுறவுச் சங்கத்தினிடம் தான் வாங்க வேண்டும் என்ற ஒரு முறை காணப்படுகிறது. சங்கம் உள்ள இடங்களிலெல்லாம் இவர்களுக்கு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ்நாட்டிலிருந்துதான் இங்கே விற்பனை செய்யப்படுகின்ற துணிகளில் 75 சதவிகிதம் வாங்கப்படுகிறது.



சென்னை நகரிலுள்ள இந்த விற்பனை நிலையம் 1956 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் விற்பனை சுமாராக இருந்தாலும் தற்போது வருடத்திற்கு ரூபாய் 1½ கோடி அளவில் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். ரூபாய் 3 கோடி அளவில் உள்நாட்டு விற்பனை உள்ளது. அகில இந்தியாவிலுள்ள ஆறு விற்பனை நிலையங்களிலும், சென்னையிலுள்ள இந்த விற்பனை நிலையமே ஏற்றுமதி செய்வதில் முதல் இடத்தைப் பெற்றுப் பரிசும் அடைந்துள்ளது.

மற்றைய விற்பனை நிலையங்கள் போலன்றி, இதில் தினசரி ரூ. 25 ஆயிரம் முதல் ரூ. 30 ஆயிரம் வரை துணிகள் விற்பனையாகின்றன. தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் குறைந்த அளவு ஒரு லட்சம் ரூபாய் வரை துணிகள் விற்பனையாகின்றன. போன பொங்கலன்று மட்டும் ரூ. 1,32,000 வரை துணிகள் விற்பனையாகி உள்ளன. சராசரியாக வருடத்திற்கு ரூபாய் 80 இலட்சம் வரை துணிகள் விற்பனையாகின்றன. "அடுத்த ஆண்டில் மட்டும் விற்பனையை ரூ. 1 கோடி வரை கொண்டுவந்துவிடுவோம்" என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் இதன் மேலாளர்.

காலத்திற்கேற்றவாறு பெண்களுக்கு வேண்டிய ஆடைகள் அனைத்தும் இங்கே கிடைக்கின்றன. எல்லா வகுப்பினர்களும் தங்களுக்குத் தேவையான ஆடைகளை எடுத்துக்கொள்ளத்தக்க வகையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஏழை, எளிய மக்களின் வசதிக்கேற்பப் பருத்தி நூல் புடவை ரூபாய் 7-க்குக் கிடைக்கிறது. பட்டு நூல் புடவைகள் ரூபாய் 45 முதல் 50 வரை கிடைக்கிறது. நடுத்தர வகுப்பினர்கள் அதிகமாக வருவதாக மேலாளர் கூறுகிறார். வசதி படைத்தவர்கள் அதிக விலைக்குப் புடவைகள் வாங்க நினைத்தால் பருத்தி நூலில் ரூ. 225 வரையிலும், பட்டுநூலில் ரூபாய் 900 முதல் ரூபாய் 1,000 வரையிலும் வாங்கிக்கொள்ளலாம். இதே போன்று ஆண்களுக்கு வேண்டிய குறைந்த விலை ஆடைகளும், அதிக விலை ஆடைகளும் கிடைக்கின்றன. ஆண்களும் பெண்களும் சம அளவில் வருகிறார்கள்.

பார்ப்பவர்கள் மனத்தை ஈர்க்கும் விதத்தில் பல்வேறு வண்ணங்களில் பலப்பல ரகங்களைக் கொண்ட படுக்கை விரிப்புகள் அடுக்கடுக்காக வைக்கப்பட்டுள்ளன. வாங்க விரும்பாத ஒருவரையும் வாங்கத் தூண்டும் தரம் கொண்டவைகளாகக் காட்சியளிக்கின்றன.

வெளிநாட்டவர்களை இந்த விற்பனை நிலையம் மிகவும் கவருகிறது. இயந்திரத்தால் நெய்யப்பட்ட துணிகளையே வாங்கிக் கொண்டிருந்தவர்கள் கைத்தறி ஆடைகளைக் கண்டவுடன் தங்களையே மறந்து

நிற்கின்ற நிலையினை அன்றாடம் காண்கிறோம். விற்பனை நிலையத்தில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட பின்னர் வெளிநாட்டவரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. வெளிநாட்டுப் பெண்களுக்கேற்ற துணிகள் 'ரெடிமேட்'டிலும் கிடைக்கின்றன. துணியாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஆண்களுக்குத் தேவையான புஸ்கோட், டை போன்றவைகள் ரெடிமேட்டில் விற்பனையாகின்றன. வெளிநாட்டவரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பரிசுப் பார்சல் வசதியும் (Gift parcel Service) செய்துதரப்பட்டுள்ளது. குளிர் சாதன வசதி செய்யப்பட்ட பின்னர்தான் காசித் திருமணப் புடவைகள் ஏராளமாக விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. கிடைப்பதற்கரிய மணிப்பூர், வங்காளப் புடவைகள், கேரளா சரிகைப் புடவைகள், காஷ்மீர் கம்பளிச் சால்வைகள் இந்த நிறுவனத்தில்தான் கிடைக்கின்றன. ஐதராபாத் நூலில் தறியில் நெய்யும்பொழுது அந்தத் துணிகளுக்குத் தேவையான டிசைன்கள் தயாராகிவிடுகின்றன. இந்த முறை இந்த நிறுவனங்களில் மட்டுமே உள்ளது.

குறிப்பாக இந்த விற்பனை நிலையத்தில் கல்லூரி மாணவிகள், அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்கள் அதிக அளவில் வருகிறார்கள். அவர்களுக்குத் தற்பொழுது கைத்தறித் துணிகளின் மீது அதிக நாட்டம் ஏற்பட்டுள்ளது என்பதை அவர்களது வருகையிலிருந்தே நாம் அறிந்துகொள்ளலாம். "இங்கே உள்ள துணிகளை நம்பிக்கையோடும் நல்ல விலையிலும், ஏமாற்றமின்றித் திருப்தியோடு வாங்கிச் செல்லலாம்" என்று கல்லூரி மாணவி ஒருவர் கூறினார்.

இங்கே வேலை பார்ப்பவர்கள் எல்லாரும் சுறுசுறுப்புடன்—சலிப்புக் கொள்ளாமல்—வாடிக்கைக்காரர்களை இன்முகம் கொண்டு வரவேற்று, அவர்களுக்கு வேண்டிய பொருட்களைச் சீரிய முறையில் தந்து தங்களுக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொள்கிறார்கள். சுமார் 75 பேர் வேலை செய்கிறார்கள். ஆண்களும், பெண்களும் சமமாக இருக்கிறார்கள். விற்பனை நிலையத்தில் எல்லாருடைய கவனத்தையும் ஈர்ப்பவர் விற்பனை மேற்பார்வையாளராகப் (Sales Superviser) பணியாற்றும் குமாரி சாவித்திரி ஆவார். விற்பனை நிலையத்தை நாம் ஒரு தடவை சுற்றிப் பார்த்தாலே போதும், அந்த அம்மையாரின் சுறுசுறுப்பைக் கண்டுகொள்ளலாம்.

"தமிழ்நாடு அரசின் சீரிய கொள்கையின்படி கைத்தறித் துணிகளுக்கு ஏற்றம் தரவேண்டும், நெசவாளர்களை வாழ்விக்க கைத்தறித் துணிகளை அதிக அளவில் விற்பனை செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் இந்நிறுவனம் இதை ஓர் அழகிய காட்சி அரங்கமாக ஆக்கியுள்ளது. இந்தியாவிலேயே உள்ள எல்லாத் துணிக்காட்சி அரங்கைவிட (Textile Show Room) இதுதான் மிகப் பெரியது; அழகானதும் கூட" என்று பெருமிதத்தோடும், நம்பிக்கையோடும் கூறுகிறார் இதன் மேலாளர். மேலாளரின் திறமையான நிர்வாகத்தாலும் ஊழியர்களின் முழு ஒத்துழைப்பாலும் இது ஒரு சிறந்த நிறுவனமாகவும், சிறந்த விற்பனை நிலையமாகவும் மாறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

வளரும் கைத்தறி

1930-ம் ஆண்டில் 1000 தறிகளுடன் துவக்கப்பட்டது, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச்சங்கம். இன்று தமிழகம் முழுவதும் 2 லட்சம் தறிகள் அதன் நேரடி மேற்பார்வையில் உள்ளது.

கோ-ஆப்-டெக்ஸ் என்றால் குறைந்த விலையில் நெடு நாள் உழைக்கத் தரமான துணிகளைக் குறிப்பிடும் பெயராக விளங்குகிறது.

கைத்தறித் துணிகளில் ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு ஊர் பெயர் போனது.

சேலைக்குப் பெயர் பெற்றது, காஞ்சிபுரம், ஆரணி, தர்மாவரம், சின்னாளபட்டி, கும்பகோணம், சேலம் ஆகிய ஊர்கள்.

வேட்டிக்கு உறையூர், கோவை, ராசிபுரம், அரிசிப்பாளையம் முதலியன; போர்வைகளுக்கு, சென்னிமலை, திங்களூர், மதுரை முதலியவை; துண்டுகளுக்கு ஈரோடு, மதுரை திங்களூர், பாண்டிச்சேரி ஆகியவை.

பெண்ணல்ல—பதுமை!



சங்ககாலம் தொட்டுத் தற்காலம் வரையும், இனி வருங்காலத்தையும் இணைத்துப் பார்த்தால் நமது நாட்டின் கைத்தறி நெசவின் வளர்ச்சி வாழையடி வாழையென வளர்ந்தோங்கி வந்துள்ளது. அதன் வண்ணங்கள், திறன்கள், எழில்கள்—எந்த நூற்றுண்டிற்கும் ஏற்ற வகையில் மாற்றம் அளிக்கக் கூடியதாகச் செழித்துள்ளன.

அறிவியல் வளர்ச்சியில் மேலோங்கிச் சந்திரமண்டலம் செல்லும் அமெரிக்கர் கூடக் கைத்தறி ஆடைகளை விரும்பி அணிகின்றனர். நீர் ஊற்றிலிருந்து நீரை இறைக்க இறைக்க-எடுக்க எடுக்க எவ்வாறு மேலும் மேலும் ஊற்றுக்கள் மீக்கெழுந்து வருகின்றனவோ அதுபோல, மாறிவரும் நாகரிகத்திற்கேற்பப் புத்தம் புது நீர் ஊற்றுக்களாகிய கைத்தறி ஆடைகள் உயர்வுற்று வருகின்றன. எந்தவித மாறிவரும் சூழ்நிலையிலும், எந்தவிதச் சக்தியாலும், பொங்கி வரும் புத்தூற்றுக்கள் தடையின்றிப் புது வெள்ளத்தையும் தன்ஞேடு உள்ளடக்கிக் கொண்டு சலிப்பில்லாமல் ஓடி உழைத்துக் கொண்டே இருக்கும். இது வரலாற்று உண்மை.

இத்தகைய மாற்றங்களுக்கிடையில் எதிர்த்து வந்த இன்னல்களை எல்லாம் இன்பங்களாக மாற்றி விடா முயற்சி, அறிவிலே விடுதலை, கடவுட் பற்று ஆகிய முப்பெரும் ஆயுதங்களால் போராடி, சங்கு முகமது அபூபக்கர் கைத்தறிக் கம்பெனியார் ஒரு வற்ருத ஊற்றுநீர் போல், பரம்பரை பரம்பரையாகச் சிறப்புறுகின்றனர். கைத்தறி உலகில் தனிப் பெருமையும் அருமையும் வாய்ந்த பல புதுமைகளைப் புகுத்தி வெற்றி பெறுகின்றனர். தொடக்கத்திலேயே கடும் போட்டிகளுக்கிடையே, இலங்கை, பர்மா முதலிய நாடுகளில் வெற்றிக் கொடி நாட்டியவர்கள்.

கைத்தறி ஆடைக்கென்றே புது வகையான கட்டங்கள்— இளைஞர் நெஞ்சை இழுக்கும் ஈடில்லாச் சட்டைத் துணிகள்—கண்ணைக் கவரும் வண்ணக் கைக்குட்டைகள்—பெண்மணிகள் விரும்பி வாங்கும் அழகு அழகு டிசைன்கள்—இன்னேரன்ன புதுமைகளை உருவாக்குவதில் தலைசிறந்தவர்கள் "சங்கு" நிறுவனத்தார்.

முன்பொருகால் கைத்தறித் துணிகளின் விற்பனையில் தேக்க நிலை ஏற்பட்ட காலத்தில், சங்கு நிறுவனத்தை உண்டாக்கி உயர்த்திய செம்மல் சங்கு அபூபக்கர் அவர்கள், நமது மேலவைத் தலைவர் திரு. சி.பி.சி. அவர்களோடு சேர்ந்து, தலையில் துணிகளைச் சுமந்து மதுரைத் தெருக்களில் விற்பனை செய்து நெசவாளர்களின் துயரைப் போக்கினர். இந்நிகழ்ச்சி அவர்கள் தொண்டுள்ளத்திற்கோர் சான்று!

மிகமிகச் சாதாரணக் குடும்பத்தில் தோன்றிய சனுப் சங்கு முகமது அபூபக்கர் அவர்கள் உள்ள உறுதியோடு உழைத்து உலகம் புகழும் ஒரே கைத்தறி நிறுவனமாகச் "சங்கு" நிறுவனத்தை வளர்த்தார். இவரது காலத்திலேயே இவருடைய மூத்த புதல்வர் சனுப் சங்கு அகமது மன்சூர் அவர்கள் தயாரிப்பு, விற்பனை ஆகிய துறைகளில் விற்பன்னராக இருந்தார். குடும்பத்தில் மூத்தவர் இவரே! நிறுவனத்தில் பொறுப்பு வாய்ந்தவர் இன்று சங்கு மன்சூர் அவர்களே! அடக்கமும் உழைப்பும், சகிப்புத் தன்மையும், பெருந்தன்மையும், எல்லோரையும் கொண்டு கூட்டிச் செல்லும் வாய்மையும் தந்தையைப் போலவே வாய்க்கப்பெற்றவர் மன்சூர்! அவருக்கும் பின் சகோதரர் சங்கு செய்யது இபுராகிம் அவர்கள். இவர் எம்.ஏ., பி. எஸ்.சி. படித்த பட்டதாரி. சிறந்த பொருளாதார அறிஞர். ஒவ்வொரு கணமும் நிறுவனத்தின் பொருளாதாரச் சூழலைக் கண்காணிப்பதில் சிறந்த பேராற்றல் கொண்டவர். மூன்றுவது சகோதரர் சனுப் சங்கு செய்யது அப்துல் காதர் அவர்கள். இவர் சிறந்த நுண்மாண் நுழைபுலம் வாய்ந்தவர். கைத்தறி ஆடைகளுக்கே முக்கிய உயிர் நாடியாக உள்ள வண்ணக் கலவைகளைச் சிறப்பாகத் தேர்ந்தெடுப்பதில் தனித்தகுதி வாய்ந்த வல்லுநர். இவர்கள் மூவரும் ஒன்றாக இயைந்து ஒற்றுமையோடு செயலாற்றி நிறுவனத்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மேம்பாடடையச்செய்து உயர்த்துகின்றனர்!

வணிகத்துறையில் மட்டும் இவர்கள் வல்லமை வாய்ந்தவர்கள் அல்லர். பொதுச் சேவையிலும் மிகுந்த ஈடுபாடுடையவர்கள். இவர்கள் சொந்த ஊரான அபிராமம் நத்தத்தில் சிறந்த தமிழ்த் தொண்டாற்றி வருகின்றனர். பட்டி மன்றங்கள்—கவி அரங்கங்கள்-கருத்தரங்குகள் அமைத்துப் புலவர்களைப் பாராட்டியுள்ளனர். இவர்கள் தந்தையார் சிறந்த தமிழறிவு மிக்கவர். அவர் காலத்தில் அபிராமம் முசுலிம் உயர்நிலைப் பள்ளியை ஏற்று நடத்தி ஒப்பற்ற சேவை செய்தார். இதனை விரிக்கிற் பெருகும்.

வாழ்க தமிழ்! வளர்க சங்கு முகமது அபூபக்கர் நிறுவனம்!

வணக்கம்.

ADVT.

குழந்தைப் பாதுகாப்பு

குழந்தையைத் தெய்வத்துக்கு இணையாக வைத்து நாம் கொண்டாடுகிறோம். யாழைவிட இனிமையானது குழந்தைகளின் மழலைச்சொல் என்கிறார் உலகப் பொது நூல் தந்த திருவள்ளுவர். இத்தகைய சிறப்புப்பெற்ற நம் குழந்தைகளை அவர்களின் தெய்வீகத்தன்மை குறையாமல், பாதுகாத்துப்பேணுதல் பெற்றோர்கள் அதிலும் குறிப்பாகத் தாய்மார்களின் தலையாய கடமை. ஆகவே, குழந்தைகளை எவ்விதம் பேணிப் பாதுகாப்பது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

நாள் தோறும் உலகம் முழுவதும் இரவு பகல் எந்த நேரமும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பிறந்த வண்ணமிருக்கின்றன. பிறந்துவிட்ட குழந்தைள் அனைத்திற்கும் அளிக்க வேண்டிய வாய்ப்புக்கள் அனைத்தையும் உருவாக்கி அவர்களைத் தலைசிறந்த மக்களாக ஆக்க வேண்டியது உலக சமுதாயத்தின் கடமையெனில் அது மிகையாகாது. முன்னேறிய நாடுகள் குழந்தைப்பாதுகாப்புக்காக விஞ்ஞானரீதியாக நன்கு வளர்ந்திருப்பதால், அந்நாட்டுக் குழந்தைகள் நன் முறையில் வளர்க்கப்பட்டுச் சமுதாயத்தில் சிறந்த குடிமக்களாக உருவாக்கப் படுகிறார்கள். ஆனல் நம் நாட்டின் நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. பழங்காலத்தில் நம் முன்னேர்கள் குழந்தைகளைப் பாதுகாத்த முறைகள் பற்றி எழுத்து மூலமாக எச்சான்று மில்லாததால், தற்காலச் சந்ததியினருக்கு அதுபற்றி ஒன்றும் தெரிய வாய்ப்பில்லை. மேலும் நமது தாய்மார்களில் பெரும்பாலோர் கல்வியறிவு பெருதவர்கள். ஆகவே அவர்களுக்குக் குழந்தைப் பாதுகாப்பைப் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாது போய் விடுகிறது. அதிலும் குறிப்பாக நடுத்தரக் குடும்பத்தினரிடமும், ஏழை எளிய மக்களிடமும் இது சர்வ சாதாரணம். குழந்தைப்பாதுகாப்பிற்கு முக்கிய அடிப்படையாகத் திகழ்வது சிறு குடும்ப அமைப்பு. நம் குடும்ப அமைப்புச் சிறிதாகயிருந்தால்தான், குழந்தைப்பாதுகாப்பில் நாம்முழுமையாகவெற்றி பெற முடியும். 'அளவோடுபெற்று வளமோடு வாழுங்கள்' என்று குடும்பநலத் திட்ட அலுவலர்களும், மற்றவர்களும் சொல்வதை முதலில் நம் தாய்மார்கள் சிந்திக்க வேண்டும். அவர்கள் சிந்தனை, செயல் ஆக்கம் பெற்றால் அது வீட்டுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது. ஒவ்வொரு தாய்க்கும் குழந்தை பிறந்த பின்னர் ஏற்படுகின்ற இழப்புச் சக்தியை ஈடுகட்டக் குறைந்தது ஒரு குழந்தைக்கும், மற்றொரு குழந்தைக்கும் மூன்றுண்டு இடைவெளியாவது தேவைப்படுகிறது. அடுத்தடுத்துக் குழந்தைகள் பிறப்பதால்குழந்தைகள் பிறப்பிலேயே மிக மெலிவாகவும், சக்திக் குறைவாகவும், போதிய வளர்ச்சியில்லாமலும் காணப்படுகின்றன. மேலும், கணவன்மார்கள் வேலைக்குப்போய் விடுவதால் வீட்டிலே இருக்கின்ற குழந்தைகளைப் பராமரிக்கும் பெரும் பொறுப்பையும் தாய்மார்கள் சுமக்க வேண்டியதிருக்கிறது. வீட்டு வேலைகளையும் பார்த்துக்கொண்டு எல்லாக் குழந்தைகளையும் பாதுகாத்துப் பராமரிப்பது மிகக் கடினமான செயல். குடும்பத்தின் அளவுசிறியதாக இருந்தால்தான், குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து, மனக்குறைவின்றி வளர்க்க முடியும்.

இல. பழனியப்பன் எம்.ஏ.

குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, நல்ல காற்று, மனவளர்ச்சிக்கான சூழ்நிலைகள் முதலியவற்றில் பெற்ரேர்கள் கவனம் செலுத்த வேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும்.

குழந்தைப்பாதுகாப்பு, தாயின் கருப்பையிலே குழந்தை இருக்கும் பொழுதே தொடங்கி விடுகிறது. ஆகவே கர்ப்பிணிகளைப் பாதுகாத்தால்தான் பிறக்கின்ற குழந்தைகள் முறையாக வளர்ச்சிபெறச் செய்ய முடியும். இதை முன் காலத்திலேயே நம் வீடுகளில் உள்ள மூத்த தாய்மார்கள் தெரிந்து வைத்திருந்ததால்தான் கருவிலே இருக்கும் குழந்தைகளுக்குத் தேவையான உணவு வகைகளைக் கர்ப்பிணிகளை அருந்தச் செய்து வந்தனர். கர்ப்பிணிகள் கவலையற்று மன நிறைவோடுஇருந்தால்தான்பிறக்கின்ற குழந்தைகள் நல்லவிதமாக இருக்கும் என்ற அடிப்படையிலேதான் கர்ப்பிணிகள் விரும்பும் உணவுப் பொருட்களைக் கொடுக்கின்றார்கள்.

தாய்மைப் பேற்றுக் காலத்திலும் (Pregnancy) குழந்தைகள் தாய்ப்பால் அருந்தும் காலத்திலும் (Lactation Period) தாய்மார்கள் உட்கொள்ளும் உணவைப் பொறுத்துத்தான் குழந்தைகளின் வளர்ச்சி அமைகிறது. குழந்தைகளின் வயதையும் (Age) எடையையும் (Weight) மனத்தில் கொண்டு அதற்கு ஏற்ப உணவின் அளவை அமைத்துக் கொள்ள வேண்டும். உணவின் அளவோடு ஊட்டச் சத்தும் (Nutritional value)மிகவும் அவசியம். நாம் கொடுக்கும் உணவில் புரோட்டின் என்ற புரதச்சத்து, கொழுப்புச் சத்து, கார்போ ஹைட்ரேட் சத்து, வைட்டமின் சத்து, இரும்புச் சத்து ஆகியவை அந்தந்த வயதிற்கு ஏற்ற வகையில் அமைதல் வேண்டும். பால், முட்டை, பருப்புவகைகள், மீன், நெய், கிழங்கு வகைகள், அரிசி வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் பழவகைகள், நிலக்கடலைகீரை வகைகள், மாமிசம் ஆகியவற்றில் மேற்கண்ட சத்துக்கள் உள்ளன. இவைகளைத் தேவையான அளவில் கொடுத்தால் குழந்தைகளுக்கு முறையான வளர்ச்சி (Normal Development) ஏற்பட ஏதுவாகும்.

தாய்ப்பால் கொடுப்பதைப் பற்றி நம் தாய்மார்களிடம் தற்காலத்தில் பலதவருன கருத்துக்கள் நிலவுகின்றன. தாய்ப்பால்

16—5—5

என்று நினைப்பதைப் போல் தவருன எண்ணம் வேறு ஒன்று மில்லை. தாய்ப்பால் எத்தனை முறை கொடுக்கவேண்டும் என்பதே பெரும்பாலோருக்குத் தெரிவதில்லை. குழந்தைகளின் வயதிற்கு ஏற்பத் தேவைப்படும் தாய்ப்பாலின் அளவைத் தெரிந்து கொண்டு அதற்கு ஏற்பக் கொடுப்பது அவசியம். போதுமான அளவு தாய்ப்பால் இல்லாதபோது, புட்டிப் பால் கொடுக்கலாம். அதையும் சுத்தமாகக் கொடுக்கவேண்டும். குறிப்பிட்ட அளவுக்குமேல் பால் குடிக்கும் குழந்தைகளுக்கு அஜீரணம், மந்தம் முதலியன ஏற்படுகின்றன. ஊட்டச்சத்துக் குறைவான உணவை உட்கொள்ளும் நமது ஏழைக் குடும்பப் பெண்களால் குழந்தைகளுக்குத் தேவையான அளவு பால் கொடுக்க முடியவில்லை. தாய்ப்பால் கொடுப்பதால் தொத்து நோய்கள் ஏற்படாது. ஆகவே தாய்ப்பால் மிகவும் அவசியம்.

குழந்தைகளைத் தொத்துநோய்களிலிருந்து பாதுகாப்பது மிகவும் அவசியமானவொன்று. டைபாயிடு சயரோகம், அம்மை, கக்குவான் முதலியன கடுமையான தொத்து நோய்களாகும். தற்கால மருத்துவத்துறை முன்னேற்றத்தால் இவைகளெல்லாம் ஏற்படும் முன்னரே தடுத்துக்கொள்ள வழிவகையிருக்கிறது.

கக்குவான், இருமல் முதலியவற்றைத்தடுக்க மூன்று ஊசிகள் மாதம் ஓர் ஊசி வீதம் அரசாங்க மருத்துவ மனைகளிலும், குடும்ப நல நிலையங்களிலும் போடப்படுகின்றது. அதேபோல் பி. சி. ஜி. ஊசி, சயரோகத்தைத் தடுக்கவும் போடப்படுகிறது. குழந்தை பிறந்த கொஞ்ச நாட்களிலே இவைகளைப்போட்டுக் கொள்வது மிகவும் நல்லது.

நம் நாட்டில் உணவில் வைட்டமின் ஏ சத்துக் குறைவினுல் லட்சக்கணக்கான குழந்தைகளுக்குக் கண்பார்வைக் குறைவு ஏற்படுகின்றது. பெரும்பாலான குழந்தைகளுக்கு மாலை வேளைகளில் கண்களே தெரிவதில்லை. ஆகவே ஆறு மாதத்திற்கு ஒரு முறை வைட்டமின் ஏ சொட்டு மருந்து ஆறு வயது வரை கொடுத்து வந்தால்

குழந்தைகளுக்கு அம்மைப்பால் வைக்க வேண்டிய அவசியத்தை நம் பெற்ருேர்கள் இன்னும் பூரணமாக உணரவில்லை. ஆகவே இதில் கவனம் செலுத்தவேண்டியதும் மிக அவசியமான ஒன்ருகும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் சிறிய நோய்களுக்குக் கூட டாக்டர்களைக் கலந்து ஆலோசித்து ஆவன செய்வது நலம் பயக்கும். நமக்குத் தெரிந்த வைத்திய முறைகளைச் செய்து, குழந்தைகளைச் சோதனைப் பொருட்களாக ஆக்கும் போக்கினைத் தவிர்க்க வேண்டும்.

குழந்தைப் பாதுகாப்பிற்கு மிக்க நிதானமும், பொறுமையும் வேண்டும். அதற்கு வேண்டிய மனப் பக்குவத்தை ஆண்டவன் நம் தாய்மார்களுக்கு அளித்துள்ளார். அதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது நம் தாய்மார்களின் தலையாய கடமையாகும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் மற்ற வியாதிகளில் மிக முக்கியமானது பேதி (Diarrhoea) யாகும். இரண்டு மாதக் குழந்தையிலிருந்து ஓராண்டுக் குழந்தை வரை இது சர்வ சாதாரணமாக நம் நாட்டில் காணப்படுகிறது. பேதி ஆரம்பிக்கும் பொழுது இதைக் குணப்படுத்துவது எளிது. பேதி ஏற்பட முக்கியமான காரணம் கிருமிகளே. ஆதலால் குழந்தைக்குக் கொடுக்கப்படும் பாலில் ஈ மொய்க்காமல் பாதுகாக்க வேண்டும். பால் புட்டியையும், இதர பாத்திரங்களையும் சுத்தமான வெந்நீரில் கழுவ வேண்டும். சில வேளைகளில் எளிதில் சீரணிக்க முடியாத காய்கறிகளினுலோ அல்லது சர்க்கரைச் சத்து அதிகம் இருப்பதாலோ பேதி ஏற்படலாம். காரணம் எதுவாகயிருந்தாலும் டாக்டர்களிடம் காண்பித்து அவர்களின் ஆலோசனைப்படி நடப்பதுதான் நல்லது.

குழந்தைகளுக்குச் சளி பிடிக்காமல் பாதுகாப்பது மிகவும் கடினமான செயல். சளிப் பிடிக்காது பார்த்துக்கொள்வது மிகவும் பிடித்தலும் பெரியவர்களிடமிருந்து குழந்தைகளுக்குப் பரவும். சளிப்பிடித்த குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பாமல் வைத்துக்கொள்ள வேண்டும்.

காதில் சீழ் வராமல் பாதுகாக்க வேண்டும். குழந்தைகளைக் குளிக்கச் செய்யும்பொழுது இரண்டு காதுகளிலும் தண்ணீர் புகாமல் பஞ்சு வைத்து அடைத்துவிட வேண்டும்.

கண்களில் சில குழந்தைகளுக்குக் கோழை அடிக்கடி ஏற்படும். அது சமயம் கண்கள் சிவப்பாக மாறும். டாக்டரிடம் சோதனை செய்து மருந்து கொடுப்பது நல்லது.

கீரைப்பூச்சித் தொந்தரவினுல் நம் நாட்டில் பல குழந்தைகள் தொல்லைப்படுகின்றன. டாக்டரிடம் காண்பித்துப் பேதி மருந்து கொடுத்தால் இக்குறைபாட்டினைத் தவிர்க்கலாம்.

நகங்களைக் கடிப்பது பெரியவர்களைப் பார்த்துக் குழந்தைகள் செய்கின்றன. அந்த வாய்ப்பைப் பெரியவர்களாகிய நாம் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது.

குழந்தைகளுக்கு விளையாட்டிலும், வேடிக்கையிலும் நாட்டம் உண்டு. இந்த உணர்வுகள் வளர வாய்ப்பளிக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு மருந்து கொடுக்கும்முறைகளைத் தாய்மார்கள் நன்கு தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

குழந்தைகளின் உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி ஆகியவற்றில் பள்ளிகளின் பங்கு மகத்தானது. விளையாட்டின் மூலம் படிப்பினையையும், ஞாபக சக்தியையும் பிறருடன் சேர்ந்து வாழ்தலையும், இன்ன பிற குண நலன்களையும் குழந்தைகள் அறிந்துகொள்வார்கள்.

ஆகவே, குழந்தைப் பாதுகாப்பு மிகப் பொறுப்பான மாபெரும் ஆக்கப் பணி. குழந்தைப் பாதுகாப்பில்தான் எதிர்காலத்தின் ஒளி விளக்கு, சுடர் விட்டுப் பிரகாசிக்க முடியும். அந்தப் பணி சிறக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.



உடல் வளத்துககு உபபுககளும சுரப்பிகளும் எப்படியோ அது போல நாட்டின் வளத்துக்கு இரசாயனத் தொழில்கள் சிறப்பிடம் வகிக்கின்றன. தமிழ் நாட்டில் இரசாயனத் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள் ஏராளமாக இருக்கின்றன. இரசாயனத் தொழில் வல்லுநர்கள், பொறியாளர்கள் இதர அலுவலர்களுக்கும் குறைவில்லை. இந்த வாய்ப்புகளைப்பயன்படுத்திச் சிறு தொழில்கள் வகையிலும் இரசாயனத் தொழில்களைத் தொடங்குவது பெரும் பயன் அளிக்கும்.

இரசாயனத் தொழில்களை, கன ரக இரசாயனத் தொழில்கள், மென்வகை இரசாயனத் தொழில்கள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

கனரக இரசாயனத் தொழில்கள், பெருந் தொழில்கள் என்ற பிரிவில் வருகின்றன. சல்பியூரிக் ஆசிட், நைட்ரிக் ஆசிட், சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, இரசாயன உரங்கள் போன்ற அடிப்படை இரசாயனப் பொருட்களின் உற்பத்திக்கானவை இத் தொழில்கள். மென் வகை இரசாயனத் தொழில்களைக் கீழ்க் கண்டபடி பிரித்துக்கொள்ளலாம்

ஏழ்வகைத் தொழில்கள்

1. ஆய்வுக் கூடங்கள், மருந்துகள் பகுப்பு, ஆய்வு முதலியவைகளுக்குத் தேவைப்படும் தூய இரசாயனங்கள் ;

2. நோய்த் தடுப்பு, நோய் சிகிச்சை ஆகியவைகளுக்குப்பயன்படும் இரசாயனங்கள் ;

3. இயற்கை இரசாயனங்கள் வகையில் பெட்ரோ கெமிகல்ஸ், இயற்கை அமிலங்கள் சாயப் பொருட்கள் முதலியவை ;

4. செயற்கை இரசாயனங்கள் வகையில் அலுமினியம் சல்பேட், பிளாஸ்டர் ஆப் பாரிஸ் முதலியவை ;

5. செய்முறை மூலமான பிளாஸ்டிக், பாலித்தீன், சாயங்கள், வார்னிஷ், வைக்கோல், கரும்புச் சக்கை ஆகியவைகளிலிருந்து காகித அட்டைகள் செய்தல் முதலியவை ;

6. விவசாயச் சார்புத்தொழில்கள் என்ற முறையில் இரசாயன உரக் கலவை, பூச்சி மருந்துகள், கால்நடை ஊட்டச் சத்துத்தீவனப் பொருட்கள், கரும்புச் சக்கை, தவிடு போன்றவைகளைப் பயன்படுத்தல், பழப்பதனம், பிண்ணுக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல், பூக்கள், புல் முதலியவைகளிலிருந்து எண்ணெய் எடுத்தல் முதலியவை ;

7. நானுவித இரசாயனத் தொழில்கள் வகையில் தீக்குச்சி, மத்தாப்பு, வர்ணங்கள், மை, மெழுகுவர்த்தி, பிஞயில், காகித அட்டைகள் முதலியன செய்தல்.

பொருள் வளம்

தமிழ் நாட்டில் கிடைக்கும் கச்சாப் பொருட்களைக் கொண்டு,

பழங்கால ஆயுதங்களை மியூசியத்திலே நாம் பார்க்கிருேம். ஆனுல் பார்வையிட்ட பின்னர் அவற்றை எடுத்துக் கொண்டு போர் புரியத் தொடங்குவதில்லை. அது போலத்தான் பழமைக் கருத்துக்களை நாம் படிக்கலாம். ஆனுல் கையாளக்கூடாது.

16-5—5எ

மாநிலத்தில் கீழ்க்கண்ட தொழில்களைத் தொடங்க முடியும்.

மிகத் தூய்மையான சுண்ணும்புக்கல் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், சேலம் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, முதலிய மாவட்டங்களில் கிடைக்கின்றது. இது தவிர கிளிஞ்சல் சுண்ணும்பும் கிடைக்கிறது. கால்சியட் என்ற மிகத் தூய, 98 சதவிகிதம் தூய சுண்ணும்பு வகை சங்கரி துர்க்கத்தில் மட்டுமின்றி, சிவகங்கை அருகே சுண்ணும்பூர் போன்ற இடங்களிலும் கிடைக்கின்றது. சர்க்கரை, பிளீச்சிங் பவுடர் போன்றவை தயாரிப்புக்கான உயர்தர இரசாயனச் சுண்ணும்பு போன்றவைகளையும் உற்பத்தி செய்துகொள்ள முடியும். மருந்துகள், வாசனைப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள் முதலியன தயாரிப்புக்கான, "பிரிசிபிடேட் கால்சியம் கார்பனேட்" செய்வதற்கான தொழிலகமும் அமைக்கலாம். இவ் வகைப் பொருட்களைத் தயாரிக்க நாடு முழுதிலுமாகச் சேர்ந்து இரண்டு அல்லது மூன்று தொழிலகங்கள் தான் உள்ளன. இவ்வகைப் பொருள் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்டு, தேவை சரிக்கட்டப்படும் நிலையே இருந்து வருகின்றது.

கல் ஜிப்சம், கடல் ஜிப்சம்.

பிளாஸ்டர் ஆப் பாரிஸ், பீங்கான், செயற்கைப் பற்கள் சாதனங்கள் முதலியன, தயாரிப்பதற்குப் பயன்படுவது ஜிப்சம். இந்த வெள்ளைக் களிமண் கல் ஜிப்சம்

என்றும் கடல் ஜிப்சம் என்றும் இரு வகைப்படும். கல் ஜிப்சம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கிடைக்கின்றது. கடல் ஜிப்சம் திருநெல்வேலி மாவட்டத்தில் கிடைக்கின்றது. பிளாஸ்டர் ஆப் பாரிஸ் செய்வதற்காக இரண்டு தொழிலகங்கள் அண்மையில் நிறுவப்பட்டன. மேலும் ஒன்றிரண்டு தொழிலகங்களை ஏற்படுத்தலாம்.

தவிட்டிலிருந்து எண்ணெய்

அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் இறக்கிப் பயனடைய முடியும் என்ற நிலை இருந்தும்கூட அந்தச் செல்வம் பயன்படுத்தப்படாமல் இருப்பது நாட்டுக்கு இழப்பேயாகும். தற்சமயம் தவிட்டிலிருந்து எண்ணெய் இறக்க 2 அல்லது 3 தொழிலகங்கள் தான் உள்ளன. இந்த எண்ணெய் இறக்குவதற்கான இயந்திரங்கள் நம் நாட்டிலேயே கிடைக்கின்றன. 5 டன் திறன் வாய்ந்த இயந்திரத்தின் விலை சுமார் ஒரு லட்சம் ரூபாய் ஆகும்.

நெல் வைக்கோலை, காகித அட்டைகள் செய்வதற்கு நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம். தற்சமயம் தமிழ் நாட்டின் காகித அட்டைத் தேவைகள் பெரும்பாலும் இறக்குமதிமூலம் நிறைவு செய்யப்படுகின்றன. ஒரு நாளில் 24 மணி நேரத்தில் 3 டன் காகித அட்டை செய்வதற்குரிய திறனுடைய இயந்திரத்துக்குச் சுமார் 2 லட்சம் ரூபாய் விலை ஆகும். தங்கு தடையற்ற தண்ணீர் வசதி, பெருமளவில் வைக்கோல் இவை இரண்டும் தான் முக்கியம். திருச்சி, தஞ்சாவூர், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் இவ் வகைத் தொழிலகங்கள் ஒன்றிரண்டு ஏற்படுத்தலாம்.

கூந்தல் கருப்புத் தைலம்

ரோஜா, மல்லிகை, மரிக்கொழுந்துமுதலியவைகளிலிருந்து வாசனைத் தைலங்கள் இறக்கும் தொழிலைத் தமிழ் நாடு இதுவரை நல்ல முறையில் . பெருக்கிக் கொள்ளவில்லை. எனவே இவ் வகைத் தொழில்கள் தொடங்க நிறைய வாய்ப்புகள் உள்ளன.

தற்சமயம் நமது நாட்டிலிருந்து மூலிகைகள், பச்சிலைகள் முதலியன தூத்துக்குடி துறைமுகம் மூலம் ஏற்றுமதியாகின்றன. இவற்றை அப்படியே கச்சாப் பொருளாக ஏற்றுமதி செய்யாமல் தைலமாக இறக்கி ஏற்றுமதி செய்தால், அயல்நாட்டு நாணய வசதியை அதிக அளவில் சம்பாதிக்க முடியும். சான்றாகச் சொல்லுவது என்றால் நரைமயிர் கறுக்கும் தைலம் செய்வதற்குப் பயன்படும் ஹென்னா காய்ந்த இலைகள் பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இலைகளை அனுப்புவதற்குப் பதிலாக எண்ணெய் இறக்கி அனுப்பினால் அதிகமான இலாபம் கிடைக்கும்.

இரசாயனத் தொழில்கள் தொடங்க விரும்புவோர், கிண்டியில் உள்ள சிறு தொழில் சர்விஸ் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகள் பெறலாம். செய்முறை, இயந்திரங்கள் முதலியன குறித்தும் யோசனைகள் கூறுவார்கள். தொழில் நுட்பத் தொழில்களைத் தொடங்குவதென்றால் அதற்கு உதவ வங்கிகளும் தனி வசதிகள் செய்துள்ளன.

துவக்கம் 1905. தொலைபேசி எண் : 417

நிக்கல்சன் கோ-ஆபரேடிவ் டவுன் பாங்கு லிமிடெட், எண்-8

தஞ்சாவூர் - 1

தலைவர் : திரு. கோ. இளங்கோவன், B. A. L. T., M. L. A.

பிக்சட் டிபாசிட் வட்டி விகிதங்கள்

3 மாதங்கள்	5%	4 வருடங்கள்	8¼%
6 மாதங்கள்	6%	5 வருடங்கள்	8½%
1 வருடம்	7%	6 வருடங்கள்	8¾%
2 வருடங்கள்	7½%	7 வருடங்கள்	9%
3 வருடங்கள்	8%		

ரூ. 10,000-மும் அதற்கு மேற்பட்டுப் போடப்படும் தொகைகளுக்கும் மேற்கண்ட விகிதத்திற்கு மேல் ½% வட்டி வழங்கப்படும்.

இரண்டு வருடங்களுக்கும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் ரூ. 5,000-மும் அதற்கு மேற்பட்ட தொகையையும் பிக்சட் டிபாசிட்டில் போடுபவர்கள் விரும்பினால் மாதம் ஒருமுறை வட்டி வழங்கப்படும்.

சேவிங்ஸ் டிபாசிட்டு (Daily Products) 5%

நிர்வாக சபையாரின் ஆணைப்படி

R. ராதாகிருஷ்ணன், B. Com., H. D. C

செயலாளர்

699



காஞ்சி கலைகளின் பிறப்பிடமாகவும், அறிவாலயங்களின் இருப்பிடமாகவும், புதுமைகள் மலரும் இடமாகவும் திகழ்ந்ததாக ''யுவான் சுவாங்'' என்ற சீன வரலாற்றாசிரியர் கூறியுள்ளார். அதிலிருந்து அன்று காஞ்சியின் புகழ் சீனா வரை பரவியிருந்தது என்பது தெளிவாகிறது.

அந்தக் காஞ்சியிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தார்கள். அண்ணா அவர்களால் காஞ்சியின் புகழ் அகிலமெங்கும் பரவியது.

இத்தகைய பெருமை பெற்ற காஞ்சிக்கு மேலும் ஒரு மகுடம் சூட்ட அண்மையில் தமிழ் நாடு அரசு 'காஞ்சி' என்ற பெயரில் ஒரு புதிய உயர் விளைச்சல் நெல் ரகத்தை வெளியிட்டுள்ளது.

''வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவேரி'' என்று புகழ் பெற்ற காவேரி தமிழ் நாட்டின் பசிப்பிணி தீர்க்கும் அருமருந்தாக அன்றும் இருந்தது! இன்றும் இருக்கிறது! இனியும் இருக்கும்!

அந்தக் காவேரியாற்றின் கரையிலேதான் தமிழர் நாகரிகம் வளர்ந்தது. காவேரி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில்தான் தமிழர் நாகரிகத்தின் தொட்டிலாக விளங்கிய பூம்புகார் அமைந்திருந்தது.

அன்று வேலி ஆயிரம் கலம் விளைவதற்குக் காரணமாயிருந்த காவேரி, பரம்பரை பரம்பரையாக ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டுவந்த நிலத்தில் இன்று இரு போகம் சாகுபடி செய்வதற்கும் மூல காரணமாகத் திகழ்கிறது.

காவேரி ஆறு அளித்த வீரமும், தீரமும் அன்று, கரிகால் சோழனை காவேரியாற்றுக்குக்கரையெடுக்க வைத்தது!

அதே காவேரி ஆறு அளித்த வீரமும் தீரமும் இன்று, நமது தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களை காவேரியாற்றைப் புதுப்பிக்கும் பெரு முயற்சியில் ஈடுபட வைத்துள்ளது.

இத்தகைய சிறப்புக்களைப்பெற்றுள்ள காவேரி அன்னையின் நினைவாக 'காவேரி' என்ற பெயரில் ஒரு புதிய உயர் விளைச்சல் நெல் ரகத்தை அண்மையில் தமிழ் நாடு அரசு வெளியிட்டுள்ளது.

'காஞ்சி', 'காவேரி' என்ற புதிய உயர் விளைச்சல் நெல் ரகங்கள் தமிழ் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கி வறுமையைப் போக்கவும், ஏழை எளிய உழவர்கள் வாழ்வை ஏற்றமுறச் செய்யவும்; சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றவும், காஞ்சி, காவேரி ஆகியவைகளின் புகழ் தமிழக உழவர் பெருமக்களின் உள்ளங்களிலெல்லாம் நீங்காத நினைவாக நிலைத்திருக்கவும் வழி கோலும் என்பது திண்ணம்.

'காஞ்சி' நெல்லின் சிறப்பியல்புகள்

காஞ்சி என்ற புதிய உயர் விளைச்சல் நெல் ரகம், கோ-29 (குலை நோய் தாக்காத அறுபதாம் கோடை) என்ற தமிழ் நாட்டு உயர் விளைச்சல் நெல் ரகத்தையும், 'தைச்சுங் நேடிவ் 1-(டி.என். 1) என்ற வெளி நாட்டு உயர் விளைச்சல் நெல் ரகத்தையும் கரு இணைப்பு (Hybridisation) செய்து கோயம்புத்தூரில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டதாகும். இதற்கு 'கோ-34' என்றும் பெயருள்ளது.

சாயாத தன்மை, அதிக உர மேற்றுக்கொண்டு அதற்கேற்ப நிறைந்த மகசூல் அளிக்கும் சக்தி, தரமான அரிசி, குறைந்த வயது ஆகியவை 'காஞ்சி' நெல்லின் சிறப்புக் குணங்களாகும். இதன் வயது 110 முதல் 115 நாட்களாகும்.

'காஞ்சி' நெல்ரகம் ஹெக்டேருக்கு 1,000 கிலோ (ஏக்கருக்கு 405 கிலோ) அதிக மகசூல் கொடுக்கும் தன்மையுடையது; காஞ்சிபுரத்தில் நடத்திய பரிசோதனையில் அதிக உர அளவில் ஹெக்டேருக்கு 7,250 கிலோ (ஏக்கருக்கு 2,935 கிலோ) மகசூலும், குறைந்த உர அளவில் ஹெக்டேருக்கு 6,420 கிலோ (ஏக்கருக்கு 2,599 கிலோ) மகசூலும் கொடுத்துள்ளது.

இந்த ரகத்தைச் செங்கற்பட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம்

முதலிய மாவட்டங்களிலும், 'கோ-29' நெல் ரகம் சாகுபடி செய்யப்படுகின்ற மற்ற எல்லா இடங்களிலும் 'கோ'-29க்குப் பதிலாகப் பயிரிடலாம்.

ஆடுதுறை-27, டி.கே.எம். 6, கருணு, கோ-29 ஆகிய ரகங்களை விடக் 'காஞ்சி' நெல் ரகம் அதிக மகசூல் அளிக்கும் ஆற்றல் வாய்ந்தது.

'காவேரி' நெல்லின் சிறப்பியல்புகள்

நயமான அரிசி கொடுக்கும் ரகம் என்ற பெயர்பெற்ற 'சன்ன சொர்ணவாரி' (டி.கே.எம். 6) என்ற தமிழ் நாட்டு ரகத்தையும், தைச்சுங் நேடிவ்-1 என்ற வெளி நாட்டு உயர் விளைச்சல் ரகத்தையும் கரு இணைப்புச் செய்து கோயம்புத்தூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டதே 'காவேரி'.

'காவேரி' என்ற இந்த ரகத்திற்கு கோ-35 என்றும் பெயர் உண்டு. அதிக உர மிட்டாலும் 'காவேரி' ரகத்தின் பயிர் சாய்ந்து விடாமல் நிமிர்ந்து நிற்கும் தன்மையுடையது. அதிக உரம் இடுவதற்கேற்ப அதிகமாக மகசூல் அளிக்கும் ஆற்றல் வாய்ந்தது 'காவேரி'.

'காவேரி' நெல் ரகத்தின் அரிசி வெண்மையானது; தரம் மிகுந்தது. இதன் வயதும் 110 முதல் 115 நாட்களே.

பல்வேறு மண்வகைகளிலும், மண் வளங்களிலும், பருவங்களிலும் பயிர் செய்வதற்குக் 'காவேரி' மிகவும் ஏற்றது.

'டி.கே.எம். 6' என்ற நெல் ரகம், மற்றும் அதன் சார்புடைய ரகங்களுக்குப் பதிலாக, 'காவேரி' யைப் பயிரிட்டால் ஹெக்டேருக்கு 1,000 கிலோ (ஏக்கருக்கு 405 கிலோ) கூடுதல் மகசூல் பெறலாம்.

'காஞ்சி', 'காவேரி' ஆகிய இரு நெல் ரகங்களையும் பயிரிடக் கீழ்க்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொள்ளுமாறு, தமிழ் நாடு அரசின் வேளாண்மைத்துறை பரிந்துரைக்கிறது.

ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

விதையளவு:—

ஒரு ஏக்கர் நடவு செய்ய 15 கிலோ விதையை நாற்றுவிட வேண்டும்.

விதைக்கும் பருவம்:—

சொர்ணவாரி : ஏப்ரல்-மே முதல் ஜூலை-ஆகஸ்ட் (சித்திரை-வைகாசி முதல் ஆடி-ஆவணி) வரை.

குறுவை அல்லது கார் : மே-ஜூன் முதல் ஆகஸ்ட்-செப்டம்பர் வரை (வைகாசி - ஆனி முதல் ஆவணி-புரட்டாசி வரை.)

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

பள்ளக்காட்டுப்புதூர் நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச்
சங்கம் நெ. AA. 128.

2/17 கைத்தறி படுக்கை விரிப்புகள், துண்டு ரகங்கள்
தலையணை உறைகள், 20S துண்டு ரகங்கள்
தயாரிப்பாளர்கள்.

விற்பனை நிலையம் :
தெற்கு ரத வீதி, சென்னிமலை.

பள்ளக்காட்டுப்புதூர் நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட். No. AA. 128.
சென்னிமலை (P.O.) ஈரோடு (தாலுகா)
தமிழ் நாடு.

S. ராமசாமி, தலைவர்.
K. பழனிசாமி, மேலாளர்.

நவரை : டிசம்பர்-ஜனவரி முதல் மார்ச்சு-ஏப்ரல் வரை (மார்கழி-தை முதல் பங்குனி-சித்திரை வரை)

விதையுடன் மருந்து கலக்குதல் :—

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து இட்டு, விதை கலக்கும் கருவி மூலம் நன்கு கலக்கச் செய்யவும்.

நாற்றங்கால் தயாரித்தல் :—

ஒரு ஏக்கர் நடவு செய்ய 10 சென்ட் நிலத்தில் நாற்றங்கால் தயாரிக்கவேண்டும்.

நாற்றங்காலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது பண்படுத்த வேண்டும்.

பத்து சென்ட் நாற்றங்காலுக்கு இரண்டு வண்டி, தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது ஒரு வண்டி பசுந்தாள் எரு அல்லது பசுந்தழை எரு இடவேண்டும்.

நாற்றங்காலில் ஒரு சென்ட் அளவுள்ள (54 அடி நீளம்× 8 அடி அகலம்) 10 மேடைப் பாத்திகளை அமைக்கவும்.

ஒவ்வொரு பாத்தியிலும் 1½ கிலோ நெல் விதையை விதைக்கவும். ஊற வைத்து முளை கட்டிய விதைகளை விதைப்பதே சிறந்தது.

நடவு வயல் தயாரித்தல் :—

நடவு வயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்கவும்.

நடவு வயலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது 5 வண்டி பசுந்தாள் எரு அல்லது பசுந்தழை எரு வீதம் போட வேண்டும்.

நடவு வயலில் சணப்பை, பில்லிப்பயறு போன்ற பசுந்தாள் உரப்பயிர்கள் வளர்க்கப் பட்டிருந்தால், அவைகளை அப்படியே உழுதுவிட வேண்டும்.

பர்மிய சட்டம் அல்லது தழை மிதிக்கும் கருவியைப் பயன்படுத்திப் பசுந்தாள் பயிர்கள் அல்லது பசுந்தழைகளைச் சேற்றில் அழுந்திவிடுமாறு செய்துவிட வேண்டும்.

நிலத்தை உழுவதற்குக் கூண்டுச் சக்கரம் (கேஜ் வீல்) இணைக்கப்பட்ட டிராக்டர் பயன்படுத்தப்பட்டால், நிலத்தில் குறுக்கும் நெடுக்குமாக இரு முறை உழுது பின்னர் பரம்புப் பலகையால் நிலத்தினைச் சமப்படுத்திவிட வேண்டும்.

அடியுரமிடுதல் :—

கடைசி உழவின்போது 35 கிலோ மணிச்சத்து அளிக்க 220 கிலோ சூப்பர்பாஸ்பேட் உரத்தையும், 35 கிலோ சாம்பல் சத்து அளிக்க 60 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் அடியுரமாக இட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு செய்யவும்.

நாற்று நடுவதற்கு முன்பு 45 கிலோ தழைச்சத்து அளிக்க 225 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 100 கிலோ யூரியாவை இட வேண்டும்.

நாற்றின் வயது :—

நாற்றுவிட்ட 20 முதல் 25 நாட்களுக்குள் நாற்றைப் பறித்து நட்டு விட வேண்டும்.

நடவு செய்தல் :—

நாற்றுகளை நடவு வயலில் வரிசை வரிசையாக நடவு செய்வதே நல்லது. வரிசைக்கு வரிசை 20 சென்டிமீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் குழிக்குக் குழி 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டுக் குழிக்குக் குழி 2 நாற்றுகள் வீதம் வைத்து நடவு செய்ய வேண்டும்.

வரிசை வரிசையாக நடவு செய்யக் கயிறு பிடித்து அல்லது வயலில் 'மார்க்கர்' என்னும் கருவியால் கோடு போட்டுக் கொண்டு நடவு செய்வது மிகவும் எளிதான முறைகளாகும்.

களை எடுத்தல்:—

நடவு வயலில் களைகள் தோன்றுவதைப் பொறுத்து ஒன்று அல்லது இரண்டு முறை, களை எடுக்க வேண்டும். நாற்று நட்ட 15-வது நாள், முதல் முறையும், 30-வது நாள் இரண்டாம் முறையும் இடைகிளறியால் (Inter cultivator) மண்ணைக் கிளறிவிட்டுக் களை எடுக்கவும். வரிசையில் பயிர்களின் இடையே உள்ள களைகளைக் கைகளால் எடுக்கவும்.

மேலுரமிடுதல் :—

நாற்று நட்ட 30-வது நாள் ஏக்கருக்கு 30 கிலோ தழைச் சத்து அளிக்க 150 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 65 கிலோ யூரியாவை மேலுரமாகப் பயிர்களின் வரிசைகளுக்கு இடையில் இடவும்.

பயிர்ப் பாதுகாப்பு:—

நாற்றங்காலிலிருந்து நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக பாரத்தியான் 0·05 சதம் (100 மில்லி லிட்டர் பாரத்தியானை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) மருந்தையும், டைத்தியோ கார்பமேட் மருந்தையும் [சைரம் 0·1 சதம் (112 கிராம் சைரம் மருந்தை 112 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது சினப் 0·2 சதம் (224 கிராம் மருந்தை 11 லிட்டர் தண்ணீரில் கலந்து)] தெளிப்பான் மூலம் தெளிக்கவும்.

நாற்று நட்ட 15-ஆம் நாளில் இருந்து, 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம், பூ விடும் வரை மேற்கூறிய அளவிலேயே பாரத்தியானையும், டைத்தியோ கார்பமேட் மருந்தையும் தெளிக்க வேண்டும்.

பூவில் பால் பிடிக்கும் சமயத்தில் பி.எச்.சி. 10 சதத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவான் கருவியைப் பயன்படுத்தித் தூவவும்.

திசையெட்டும் எழில் பரப்பும்

கோடைவெய்யில் அதிகாலையிலேயே அனலாய்க் கொதித்தது. வெய்யிலின் கடுமைக்குப் பயந்து ''அறை'' என்னும் கூண்டுக்குள் அடைந்து கிடந்த எனக்கு அன்றைய நாளிதழில் வெளி வந்த ''இன்றைய நிகழ்ச்சிகள்'' விவரம் குளிர் தரும் செய்தியாயிருந்தது. ''ஏப்ரல் திங்கள் 2ஆம் நாள்-காலை 9-30 மணி—கைத்தறி ஆடை அலங்கார அணிவகுப்பு—சபையர் திரைப்பட அரங்கு''—என்ற செய்தியைப் படித்ததும் துள்ளிக்

தென்னாட்டுக் கைத்தறித் தொழில்

வின்டெக்ஸ்

விசயமங்கலம், தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம்

லிட் : A. A. 245

விசயமங்கலம் (அஞ்சல்), ஈரோடு (வட்டம்)

கோயமுத்தூர் மாவட்டம்

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், நவீன அலங்கார ஆடைகள், துண்டுகள், வேட்டிகள், தரத்திற்கும் நவீன ரகத்திற்கும் கெட்டிச் சாயத்திற்கும் குறைந்த விலைக்கும் மிகச் சிறந்தவை.

தமிழ்நாடு அரசினரால் முதல் பரிசுகளும் அனேக கண்காட்சிகளில் நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லா விற்பனை நிலையங்களிலும் எங்கள் ஜவுளிகள் கிடைக்கும்.

எப்பொழுதும் **'வின்டெக்ஸ்'** பெட்ஷீட் ரகங்களையே வாங்குங்கள்.

T. P. பஞ்சாபகேசன்,
செயலாளர்.

V. C. சின்னசாமி,
தலைவர்.

தொலைபேசி எண்: 222

தந்தி: " திருகோசில்க் "

காஞ்சிபுரம பட்டு ஜவுளி இரகங்கள் உற்பத்தி முன்னணியில் திகழ்வது

நவீன மோஸ்தர்களுக்கும், கண்கவர் இரகங்களுக்கும்
நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உரிய
ஒரே கூட்டுறவு நிலையம்

காஞ்சீபுரம் திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், எண். ஜி. 2054

(தேரடி சமீபம்)
சின்னக் காஞ்சிபுரம்
தமிழ்நாடு

G. குப்புசாமி,
கூட்டுறவு உப பதிவாளர்/செயலா

இரா. வெங்கிடேசன்,
தலைவர்.

குதித்தேன். நண்பன் ஒருவன் அந்நிகழ்ச்சிக்கு அனுமதிச்சீட்டுத் தந்திருந்தது நினைவுக்கு வந்தது. ஆனந்தமாகப் புறப்பட்டேன்.

எங்கும் வெய்யில். ஆனால் சபையர் அரங்கு ஜில்லென்றிருந்தது. குளிர் சாதனம் மட்டும் காரணமல்ல. வந்திருந்தோர் கூட்டம் அப்படி! ஒருவிதமான உள்ள உவகை. நவநாகரிக உலகின் ஒரு பகுதியை அங்கே நான் காண முடிந்தது. எத்தனை விதமான ஆடை அணிகலன்கள்! எத்தனை விதமான சிகை அலங்காரங்கள்! அனைவரது பார்வையும் மேடையை நோக்கியிருந்தது.

எனக்கு அது புது அனுபவம். சுற்றியிருந்தவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது எனது பிரம்மச்சரிய உள்ளம்.

திடீரென்று மின் விளக்கு ஒளி மங்கியது. எங்கிருந்தோ இனிய அறிவிப்பு காற்றில் மிதந்து வந்தது. அந்தச் சிங்கார அரங்கத்தின் திரைச் சீலை மெள்ள விலகியது. அழகு மங்கை மீரா ....காற்றினிலே வரும் கீதம் போல் மேடையில் நடனமாடியபடி கால் தொட்டும் தொடாமலும் மிதந்து வந்தார். மேடையில் மட்டுமல்ல...... அரங்கத்தில் மக்கள் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த செந்நிற நடைபாதையிலும் புள்ளி மான் போல் துள்ளிக் குதித்து வந்தார். விளக்கொளி சிறிது சிறிதாகப் பிரகாசமாகியது.

மீரா அணிந்திருந்தது கைத்தறி ஆடை! மஞ்சள், பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய பல வண்ணப்பட்டுக்கள் இணைந்த உடுப்பு எடுப்பாக இருந்தது. இப்படி ஒரு நடை! அப்படி ஒரு பார்வை! மீரா மேடைக்குத் திரும்பி மறைந்துவிட்டார்.

மீரா போனால் என்ன? கீதா இல்லையா? கையில் வளை குலுங்க, காலில் கொலுசு 'சல் சல்' என ஒலிக்க, கண்கள் மின்னிடச்சேலையுடுத்தித் தென்றலில் ஆடிவந்தார் கீதா.

லுங்கி கட்டிப் பேரெழில் காட்டிவந்தார் லீனா. ஆம்! மீரா, கீதா, லீனா, நளினி, டயனா ஜூலியன், ஏஞ்செலா இப்படி பட்டாம்பூச்சி போல் பதினாறு இளம் மங்கையர் பல வண்ணக் கைத்தறி ஆடைகள் அணிந்து மேடையில் தோன்றினர். தமிழ் நாட்டுத் தங்கைகள், வடநாட்டு மங்கைகள், மேலைநாட்டு நங்கைகள் ஆக பலதரப்பட்டவர்கள் மேடையில் தோன்றினர். அனைவரிடமும் ஒற்றுமை! அவர்கள் அனைவர் அணிந்திருந்ததும் கைத்தறி ஆடைகளே! திசையெட்டும் எழில் பரப்பும் தென்னாட்டுக் கைத்தறித் தொழில் தான் அந்த ஒருமைப்பாட்டை உருவாக்கியது.

கைத்தறி ஆடைகளில் எத்தனை ரகம் உண்டு? எவ்வளவு எழில் உண்டு? வண்ணங்கள் உண்டு? என்பதனை அந்த அணிவகுப்பு நிகழ்ச்சி நன்கு எடுத்துக்காட்டியது. வெள்ளைக்கார மங்கையர் அணிவதற்கு ஏற்ப நமது பட்டாடையை அமைத்து உடுப்பாக, நீண்ட அங்கியாக எவரையும் கவரும் வண்ணம் அமைத்திருந்தது, ஒரு சிறப்பாகும்.

கைத்தறிக் கடைகளில் எத்தனையோ விதமான படுக்கை விரிப்புகளைப் பார்க்கிறோம். படுக்கையில் விரித்தால் அழகாகயிருக்குமே, குளிருக்கு மூட இதமாகயிருக்குமே என்று நான் நாம் எண்ணுகிறோம்! விலைக்கு வாங்கிச் செல்லுகிறோம்.

ஆனால் அந்தப் படுக்கை விரிப்பை எவ்வளவு அழகான உடுப்பாக, மேலாடையாகப் பயன்படுத்தலாம் என்று எடுத்துக் காட்டினர் இந்த உடையலங்கார நங்கையர்.

இது படுக்கை விரிப்பு! இது தலையணைக்கான துணி! இது தலை துவட்டும் துண்டு! என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்! அத்தனை அழகான ஆடைகளாக அவை மாறிப், பார்ப்போரின் கண்களை மயக்கின.

" இம்மாதிரித் துணிகளுக்கு எங்கள் நாட்டில் மிகுந்த வரவேற்பு இருக்கு"மென்றார், என் அருகில் அமர்ந்திருந்த வெள்ளைக்காரர். அவர் அமெரிக்கச் சீமையைச் சேர்ந்தவர். " சேலைக்கு ஈடான அழகு வேறு எந்த ஆடைக்கும் கிடையாது. அதுவும் பட்டுச் சேலைக்கு நிகராக எதையும் ஒப்பிட முடியாது! " என்றார் அவரது துணைவியார்.

பெருமிதத்தால் எனது உள்ளம் விம்மியது. 'கவுன்' உடையும், 'பஞ்சாபி' ரக உடையுமே பெண்களின் அழகுக்கு அழகூட்டுபவை என்று நான் நெடுங்காலமாக எண்ணியது உண்டு. ஆனால் அந்தக் கருத்தைத் தகர்த்தெறிந்தார் அந்த அமெரிக்கப் பெண்மணி.

படுக்கை விரிப்பு உடையாகிவிட்டது.



அவர் மட்டுமல்ல: சேலை மிகக் கவுரமான, மிக்க கவர்ச்சியான உடை என்பது இன்று உலகமெங்கணும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்து. அதற்கு முக்கிய காரணம் நமது கைத்தறிப் புடவைகள்தான் என்றால் மிகையாகாது.

ஜப்பானியரின் எக்ஸ்போவினைப் படையெடுத்த பெருமை நமது காஞ்சிப் பட்டுப்புடவைகளுக்கு உண்டு. அமெரிக்கப் பொருட்காட்சிகளில் பலமுறை பங்கெடுத்துப் பார்புகழச் செய்த பெருமையும் நமது கைத்தறித் தயாரிப்புகளான பட்டாடைகள்—பருத்தி ஆடைகளுக்கு உண்டு.

கற்பனை உலகில் திரிந்த எனது கண்களைத் தன்பக்கம் இழுத்தார், புன்னகை சிந்தியபடி மேடையில் ஆடிவந்த மீரா. அவரது நண்பர்களைப் பார்த்து அவ்வாறு சிரிக்கிறரா என்று மீராவின் கண் சென்ற இடமெல்லாம் என் கண்களைப் பாயவிட்டேன்.

மீரா யாரையும் குறிப்பிட்டுப் பார்க்கவில்லை. சிறுமி போன்று உடுப்பு அணிந்து குழந்தைச் சிரிப்பை அதரங்களில் நெளிய விட்டிருந்தார்.

இதோ, ஒரு புதிய ஜோடி! லீனு—ராசா. அவர்கள் அணிந்திருந்த உடை படுக்கை விரிப்புகளால் தைக்கப்பட்டவை. இளஞ்சிவப்பு, வெள்ளை, பச்சைக் கோடுகள் போட்ட அந்த உடை அந்த இளஞ் ஜோடிக்குத்தான் எவ்வளவு கச்சிதமாகப் பொருந்தியிருந்தது! அவர்களுக்கு மட்டுமல்ல எவருக்குமே பொருந்தக் கூடியது இந்தக் கைத்தறி 'டிசைன்'.

தொடர்ந்து அந்தப் பதினாறு பெண்களும், ஆறு ஆண்களும், 60 வகையான 'டிசைனு'ள்ள கைத்தறி ஆடைகள் அணிந்து எங்களை மகிழ்வித்தனர். நேரம் போனதே எனக்குத் தெரியவில்லை.

திரை கீழிறங்க, விளக்குகள் பளிச்சிடவும்தான் இடைவேளை வந்து விட்டதை நான் உணர்ந்தேன். குளிர்பானம் பருகியதும் மீண்டும் புதிய தெம்பு.

திரையுலகத்தாரகை சவுகார் ஜானகி, தனது இருமகள்கள் புடைசூழ அமர்ந்திருந்தார். அவர்தான் அன்றைய கைத்தறி அழகு ராணிப்போட்டிக்கு நடுவர் என்று அப்போது கேள்விப்பட்டேன். கலெக்டராய், காவியத் தலைவியாய் தோன்றிச் சிறப்பாக நடித்த அந்த நட்சத்திரத்தை நேரில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்ததில் எனக்குப் பெருமகிழ்ச்சி. என்னைப் போலவே பலர் அவரை வேடிக்கை பார்ப்பதை நான் கண்டேன்.

மீண்டும் நிகழ்ச்சி தொடங்கியது. இப்போது நடைபெறுவது கைத்தறி அழகிப்போட்டி.

முந்திய நிகழ்ச்சிக்கு மாருக இதில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் சேலையிலேயே தோன்றினர், ஒரே ஒரு பெண் மணியைத் தவிர. 1, 2, 3,.. ......என ஒவ்வொருவருக்கும் ஒரு எண் கையில் தரப்பட்டிருந்தது. மொத்தம் எட்டுப் பேர். பலர் கல்லூரி மாணவியர் போல் தோற்றமளித்தனர். எனது ஊகம் சரி என்பது விழா முடிவில் தெரிந்தது.

அந்தப்போட்டியில் முதல் பரிசு பெற்ற சந்திரகலா, ஸ்டான்லி மருத்துவமனையில் இரண்டாவது ஆண்டு மாணவி. இரண்டாவது பரிசு பெற்ற ராதா சென்னைக் கல்லூரியில் எம்.ஏ. படிப்பவர். சந்திரகலா, இதற்கு முன் 'பெமினு' நடத்திய போட்டிக்காகத் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுப் பம்பாய்க்கு அனுப்பப்பட்டார். ஆனல் பிராந்திய வாரிப் போட்டியில்லாததால் பங்கு பெறவில்லை. இப்போது கண்டிப்பாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்ற நம்பிக்கையில் வந்ததாகவும், அதேபோல் பரிசு கிடைத்ததாகவும் அவர் பத்திரிகை நிருபர்களிடம் பேசியதை நானும் கேட்டுக்கொண்டேன்.

அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்திரகலாவுக்கு திருமதி சவுகார்ஜானகி, ராணி போல் தலையில்முடிசூட்டினர். அவருக்கு 500 ரூபாய்க்குக் கைத்தறி ஆடைகள் பரிசு தரப்பட்டன. திருமதி சபாநாயகம் தலைமை தாங்கினர். அந்த விழாவினைச் சிறப்பாக நடத்திய தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தனி அதிகாரி திரு. கிருபாகரன் அனைவரையும் வரவேற்ருர்.

விழா முடிவடைந்து விட்டதெனப் புறப்பட நினைத்தேன். அப்போது மணமகள் போல் மாலை சூடி மேடையில் தோன்றினர் ஓர் இளமங்கை. சுற்றிலும் பல்வேறு நங்கைகள். இங்கும் கைத்தறியே நீக்கமற நிலைத்து நின்றது. திருமணச் சடங்கினை அவர்கள் இரு நிமிடங்கள் கண்முன் கொண்டு வந்து நிறுத்தினர்.

அடுத்த நிகழ்ச்சி மேலைநாட்டு ஆடல்கள். மூன்று ஜோடியினர் வந்து ஆடினர்.

இவற்றிற்கெல்லாம் சிகரம் துவைத்தாற்போல் அமைந்த கடைசி நிகழ்ச்சி. வானத்திலிருந்து தேவர்கள் பூமாரி பொழிவார்கள் என்பார்களே, கதைகளில், அதைப்போல் இங்கு பல வண்ணப் பலூன்களைப் பூவாகத் உதிர்த்தனர் கீழே மேடையில் நின்ற அழகு மங்கையர் கூட்டத்தின்மீது, இடையிடையே ராசா, வஹாப், அசீஸ் ஆகிய ஆடவர்கள்! கைத்தறி ஆடை அணிவகுப்பில் பங்கு பெற்ற இவர்கள் உற்சாகமாக மனமகிழ்ந்து ஆடவும், மேலிருந்து பலூன்கள் மழையெனப் பொழியவும் அங்கு ஒரு 'கனவுலோகக், காட்சியே' தோற்றமளித்தது.

ஆம், அன்று நான் கண்ட அந்தக் கைத்தறி விழா இன்றளவும் கனவு போலவே காட்சியளிக்கிறது. இனிமையான கனவு அது.

கற்றல் என்னும் சொல்லுக்கு மிகப் பரந்த பொருள் உண்டு. நூல்களைக் கற்பது மட்டும்தான் கற்றல் என்று எண்ணுவது தவறு. நூல்களின் உதவி இல்லாமலும் கற்கமுடியும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவை ஐம்பொறிகள் எனப்படும். இவற்றின் வாயிலாகப் பெறும் அறிவு ஐம்புலன் எனப்படும். பொறி என்னும் சொல் புற உறுப்பையும், புலன் என்பது அப்பொறி வாயிலாகப் பெறும் அறிவையும் குறிக்கும். பொறி இயங்காவிட்டால் அப்பொறி வாயிலாக அறிவைப் பெறமுடியாது.

— பேராசிரியர் வ. பெருமாள், எம். ஏ., பி. டி. —

எடுத்துக் காட்டாக ஒருவனுக்குக் காதின் புறத் தோற்றம் மிக நன்ருகவும் அழகாகவும் அமைந்திருக்கின்றது. ஆனல் அக்காது தனக்குரிய வேலையைச் செய்ய முடியாமல் இயங்க முடியாமல்செவிடாக இருக்கின்றது. அச்செவிட்டுக்காதால் ஒலியையோ ஒலி வேறுபாட்டையோ அறிய முடியாது. எனவே, அவன் காதைப் பெற்றிருந்தும் அது வேலை செய்யாத காரணத்தால் காதின் பயனைப் பெறமுடியாமல் போகின்ருன். எனவே, பொறி இருந்தால் மட்டும் போதாது. அப்பொறி தனக்கு உரிய பணியாற்றவேண்டும்.

கைவிரல் மூலம் அறிவு

ஐம்பொறிகள் வாயிலாக எவ்வாறு அறிவு பெறமுடியும் என்பதைச் சிறிது விளக்குவோம். மெய்யின் வாயிலாகத் தொடுதல் உணர்ச்சி ஏற்படுகின்றது. சமைக்கும்போது சோறு வெந்திருக்கின்றதா இல்லையா என்றறியச் சோற்றைக் கைவிரல்களால் பதம் பார்க்கின்ருேம். சோறு கடினமாக இருந்தால் இன்னும் வேகவில்லை என்றும், நடுத்தரமான மென்மையுடன் இருந்தால் உண்பதற்கு ஏற்ற பதத்துடன் இருக்கின்றது என்றும், பசைபோன்று இருந்தால் குழைந்துவிட்டது என்றும் அறிந்துகொள்கிருேம்.

சோறு வெந்திருக்கின்றதா இல்லையா என்பதை நாம் புத்தகங்கள் படித்து அறிந்து கொள்ளவில்லை. மெய்ப்பயிற்சி வாயிலாக நாம் அறிந்திருக்கின்ருேம்.

பாடிப்பெற்ற பயிற்சி

நம் தாய்மார்கள் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தூங்கவைக்கும்போது 'கண்ணே, கண்மணியே கண்ணுறங்காயோ' என்று தாலாட்டுப் பாடலை நீலாம்பரி இராகத்தில் பாடுவதையும் அப்பாட்டைக் கேட்டுக் கொண்டே குழந்தை உறங்குவதையும் நாம் கண்டிருக்கின்ருேம். நம் தாய்மார்கள் இத்தகைய தாலாட்டுப் பாடல்களை எவ்வாறு கற்ருர்கள்? அவர்கள் முன்னேர்களிடமிருந்து செவி வழியாகக் கற்ருர்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. செவி வாயிலாகக் கேட்டுவிட்டு அப்படியே சும்மா இருந்துவிட்டால் அவர்களுக்குப் பாட்டு மட்டும் தெரிந்திருக்குமே தவிரப் பாடத் தெரிந்திருக்காது. எனவே, அவர்கள் நூல் உதவி இல்லாமல், செவி வாயிலாகக் கேட்டவற்றை வாய் மூலமாகப் பன்முறை பாடிப் பாடிப் பயிற்சி பெற்றுத் தாலாட்டுப் பாடலைப்பண்ணுடன் பாடுவதில் தேர்ச்சி பெற்றனர். அவர்களுடைய தாலாட்டுப் பாடல் புலமைக்குக் காரணம் அவர்கள் செவி வழியாகக் கற்ற பாடலும் வாய்மூலமாகப் பெற்ற பயிற்சியுமேயாகும்.

மாணவர்கள் திரைப்படப் பாடல்களையும் நாட்டுப் பாடலையும் மிகத் திறமையாகப் பாடுவதற்குக் காரணம் இதுவே. 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்பது முதுமொழி.

நிறம், ஒளி, உருவம் ஆகியவற்றை அறியக் கண் துணை புரிகின்றது ஒருபொருளின் அழகை நிர்ணயிப்பது கட்புலனே. எழுத்தறிவற்றவனுக்கும் அழகு உணர்ச்சி உண்டு. அவன் கூட அழகான பொருளைவிரும்புகிருன். அழகற்ற பொருளை வெறுக்கின்ருன். கண்ணின் வாயிலாகத் தான் நிறம், ஒளி, உருவம் ஆகியவை பற்றிய அறிவும் உணர்வும்பெற முடியும் என்பது தெளிவு.

வேறுபடும் சுவைகள்

மணத்தைப் பற்றிய அறிவை மூக்கின் வாயிலாகப் பெறுகிருேம். காப்பிக்கும் தேநீருக்குமிடையே மணத்தில் வேறுபாடு உண்டு. இந்த வேறுபாட்டை மூக்கால்தான் அறிந்து உணர முடியும். மாங்கனி, வாழைப் பழம் ஆகிய இரண்டும் இன் சுவையாக இருந்தாலும் இவற்றிற்கிடையே வேறுபாடு உண்டு. அவ்வேறுபாட்டை நாக்கால் அறிகின்ருேம். இவ்வாறு ஐம்பொறிகள் வாயிலாக நாம் கண்டு, கேட்டு, உண்டு, முகந்து, உற்று அறிகின்ருேம்.

ஒவ்வொரு பொறியும் அதற்குரிய நெறியில் நின்று அறிவைப்



பெறமுடியுமே தவிர வேறு பொறிக்குரிய அறிவைப் பெற முடியாது. செவி வாயிலாக இசை கேட்கலாமே தவிர மூக்கின் வாயிலாகக் கேட்க முடியாது. பசும்பாலின் இன்சுவையை நாக்கு உணரும். கண் உணருமா ?

கற்பதற்கு ஐம்பொறிகள் ஐந்து வழிகளாக அமைந்தாலும் எல்லோருக்கும் ஒரே அளவாக அமைவதில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று இயற்கைக் காரணம். ஐம்பொறிகளில் ஒன்ருே அதற்கு மேற்பட்டோ ஆற்றல் குறைந்திருப்பது அல்லது முழுவதும் இழந்து விடுவது. ஐம்பொறிகளில் ஏதாவது ஒன்று குறைந்திருந்தால் அதற்கு ஈடாக இன்னெரு பொறி அளவுக்கு அதிகமான ஆற்றல் பெற்றிருக்கும். குருடர்க்கு ஐம்புலன்களில் ஒன்ருகிய கட்புலன் இல்லை. ஆனல் அதற்குப் பதிலாகத் தொடுதல் உணர்ச்சி மிகுதியாக இருக்கின்றது. 'கண்ணைக் கெடுத்த தெய்வம், கோலைக் கொடுத்தது' என்னும் பழமொழிக்கேற்ப ஒரு புலன் குறைபாட்டை ஈடு செய்யும் வகையில் இன்னெரு புலன் அமைந்திருக்கின்றது. இது இயற்கையின் விதி.

தொழிலுக்கு ஏற்பப் புலன் அறிவு

ஐம்பொறிகளும் எல்லாருக்கும் ஒரே அளவாக அமையாததற்கு மற்ருெரு காரணம் உண்டு. இது பயிற்சியின் வாயிலாக ஏற்பட்ட செயற்கைக் காரணம். இசைவாணர்களுக்குச் செவிப்புலன் உணர்வு மிகுதியாக உண்டு. ஓவியர்களுக்குக் கட்புல உணர்வு அதிகமாக இருக்கும். சமையற்காரருக்கு வாய்ச்சுவை உணர்வு மிகுதி என்பது சொல்லாமலே விளங்கும். பூக்கடைக்காரர்கள் அதிகமான மூக்காற்றல் படைத்தவர்கள்.

மளிகைக் கடையில் பொட்டலங்கள் கட்டுகின்ற வேலைக்காரர்களுக்குத் தொடுதல் உணர்ச்சி மிகுதியாகயிருக்கும். இருபதுக்கு மேற்பட்ட பொட்டலங்களைக் கட்டிய பிறகு அப்பொட்டலங்களைப் பிரிக்காமல் ஒவ்வொரு பொட்டலத்திலும் என்ன இருக்கின்றது என்பதை அவர்கள் சரியாகச் சொல்லி விடுகிருர்கள். பொட்டலத்துக்குள் இருப்பது கடலைப் பருப்பா, துவரம் பருப்பா என்பதைப் பிரித்துப் பார்க்காமலே அவர்களால் சரியாகச் சொல்ல முடிகின்றது. இவ்வாறு ஒவ்வொருவருக்கும் அவரவர் தொழிலுக்கும் பயிற்சிக்கும் ஏற்ப ஏதேனும் ஒரு புலனறிவு மிகச் சிறந்து விளங்கும்.

சுருங்கக் கூறுமிடத்துக் கற்கும் முறையை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன : கண்டறிதல், படித்தறிதல், ஊகித்தறிதல். இவற்றை வடமொழியில் பிரத்தியட்சம், ஆகமம், அனுமானம் என்று குறிப்பிடுவதுண்டு. யானையைப் பார்க்கிருேம். யானை மிகப் பெரிய விலங்கு என்னும் முடிவுக்கு வருகின்ருேம். எப்படி அந்த முடிவுக்கு வந்தோம் ? யானையை நாமே நம் கண்களால் பார்த்தோம்—கட்புலன் வழியாக நாம் பெற்ற அறிவைக் கொண்டு யானை மிகப் பெரிய விலங்கு என்று முடிவு செய்தோம்.

ஊகித்து அறிந்த அறிவு

அசோகர் மிகவும் நல்லவர் என்று முடிவு செய்திருக்கிருேம். அசோகரை நாம் பார்த்ததில்லை. அசோகருடன் நாம் பழகியதில்லை. அவ்வாறிருக்க அசோகர் நல்லவர் என்று மிக உறுதியாகச் சொல்கின்ருேம். ஆம்! அசோகரைப் பற்றி வரலாற்று நூல்களில் நாம் பக்கம் பக்கமாகப் படித்திருக்கிருேம். எனவே, அசோகரைப் பற்றி நாம் அறிந்தவை எல்லாம் நூலை அடிப்படையாகக் கொண்டவை. தெரிந்ததைக் கொண்டு தெரியாதவற்றை அறிதல் ஊகித்தல் எனப்படும்.

தூரத்திலுள்ள புகை கண்ணுக்குத் தென்படுகின்றது. புகை மட்டும்தான் தென்படுகின்றது. புகையுள்ளவிடத்தில் நெருப்பும் இருக்கும் என்று ஊகிக்கிருேம். ஒரு நாற்காலியைக் காண்கிருேம், அதை ஒரு தச்சன் செய்திருக்கவேண்டும் என்று ஊகிக்கிருேம்.

யானையைக் கண்ணுல் கண்டு அது மிகப் பெரிய விலங்கு என்று அறிந்து கொண்டோம். அசோகரைக் கண்ணுல் காணுமல்—ஆனுல் நூல் வாயிலாகப் படித்தறிந்து அவர் மிகவும் நல்லவர் என்று முடிவுசெய்தோம். புகையைக் கண்டவுடன் நெருப்பு இருக்க வேண்டும் என்றும் நாற்காலியைக் கண்டவுடன் தச்சன் அதைச் செய்திருக்க வேண்டும் என்றும் ஊகித்தறிந்தோம். இவ்வாறு மனிதன் கண்ணுல் கண்டும், நூலைப் படித்தும், ஊகித்து உணர்ந்தும் அறிவு பெறுகின்ருன். இவையே கற்றலின் முப்பெரும் பிரிவுகளாகும்.

10%
சேமிப்பு
எல்லாவித
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறித்துணிகள்
மீதும் உண்டு
17வது
அகில இந்திய
கைத்தறி
இருவார
கண்காட்சி '71
மே 2 ஆம் தேதி முதல்
மே 16 ஆம் தேதி வரை
Criterion CO 2564 TM
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
சகாயமான விலை...
ஆதாயமான உழைப்பு
பட்டு, பருத்தி மற்றும் ஆர்ட் சில்க் புடவைகள், வேஷ்டிகள், துவலைகள், சட்டைத்துணிகள் மற்றும் நாகரீக அலங்கார திரைத்துணிகள் இவையனைத்துக்கும் அகிலஇந்திய கைத்தறி இருவார கண்காட்சி முடியும் வரை 10% விசேஷ தள்ளுபடி உண்டு. இச்சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.
தமிழ்நாடு கைத்தறி
நெசவாளர் கூட்டுறவு
சங்கம் லிமிடெட்
பாலசுந்தரம்
பில்டிங்ஸ்,
எழும்பூர்,
சென்னை-8.

குற்றவாளிகளைத் திருத்த அறிவியல் சீர்திருத்த முறை

பது யாவரும் அறிந்ததே. உலகம் பழித்தது குற்றம். குற்றம் செய்தவன் குற்றவாளி. குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்பது நியதி. குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதால் அவர்கள் மறுபடியும் பிழை செய்ய மாட்டார்கள். மற்றும் அத்தண்டனை மற்றவர்களுக்கும் ஒரு படிப்பினையாகும் என்பதே பல நூற்றாண்டுகளாக இருந்து வந்த முறை.

மேர்சே என்னும் பெரியார் காலத்தில் "ரத்தத்துக்கு ரத்தம்" என்ற கொள்கை இருந்து வந்தது. அப்போது "குற்றவியல்" நூல் கிடையாது. குற்றவாளிகளைக் கடுமையாகவும் கொடுமையாகவும் தண்டித்தனர். சமுதாயம் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. பழி வாங்கும் தன்மையே மேலோங்கி நின்றது. இன்றைய நிலையில் நாம் மரண தண்டனையையே மாற்றி அமைக்க முற்பட வேண்டும் என்னும் நாட்டம் உடையவர்களாக இருக்கிறோம். ஏனெனில் போன உயிர் மீள மறு உயிரால் சரி செய்ய முடியாது. ஆனால், ஒருவன் உயிரைக் குடித்த கொடுமைக்காரனுக்கு நாம் இரக்கம் காட்டக் கூடாது என்னும் ஒரே கொள்கைக்காகத்தான் நாம் மரண தண்டனையை இன்னும் ரத்தாக்கவில்லை.

குற்றம் என்பது ஒரு தனிப்பட்ட காரணத்தால் உண்டாகக் கூடியதல்ல. சந்தர்ப்ப சூழ்நிலைகளும், போதுமான சமுதாய வளர்ச்சி இல்லாமையும்தான் குற்றங்கள் நிகழ்வதற்குப் பெரும்பாலும் காரணம் என உணருகிறோம். குற்றம் செய்தவனைத் தண்டித்தல் ஒரு மரத்தை வெட்டிச் சாய்த்தலைப் போன்ற ஒரு செயல் என்றும், அவனை வாழவிடுவது சமுதாயத்தின் நன்மகனுக்கும் செயல் மேற்படி மரத்தைத் துளிர்க்கச் செய்து பயனுடையதாக்குவது போன்றது என்றும் தற்போது நீதியியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். அண்ணல் காந்தி அடிகளும், 'குற்றவாளி ஒரு நோயாளிக்கு ஒப்பானவன், அவனைக் குணப்படுத்த முயல்வதே சீரிய பணி' என்று கருதினார். ஆகவேதான், குற்றம் செய்தவனைத் தண்டித்துச் சிறைக்கனுப்பி அவனைச் சமுதாயத்துள் செல்லாக் காசாகச் செய்வதை விட அவனைச் சமூகத்தில் வாழவிட்டுச் சீர்திருத்துவதே மேலான கொள்கை.

இந்தக் கொள்கையின் அடிப்படையில் வளர்ந்ததே குற்ற

இர. நா. சீதாபதி

வாளிகள் நல்லபடி நடந்து கொள்கிறார்களா என்று பார்க்கும் பொருட்டு அவர்களை விடுதலை செய்வதைக் குறித்த சட்டம்.

இச் சட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இச் சட்டத்தின் அடிப்படை, குற்றவாளிகளைச் சீர்திருத்தி அவர்களைச் சமுதாயத்தில் ஒன்றவிடுதலே! இச் சட்டத்தின் மூலம் குற்றவாளி திருந்துவதோடல்லாமல் அவன் குடும்பத்

முறையில் வாழ வழி கோலப்படுகிறது.

நீதிமன்றத்தில் குற்றவாளி எனத் தீர்ப்பெடுத்த பின்னரும் தண்டனை அளிக்கு முன்னரும், அவன் செய்த குற்றத்தின் காரணகாரியங்கள், சந்தர்ப்ப சூழ்நிலை அவனது முந்தைய வாழ்க்கை முதலியவைகளை நன்னடத்தை அலுவலர் மூலம் கேட்டறிந்து அவன் குற்றவாளி என்னும் நிலை மாறி, சமுதாயத்துக்கும் அவன் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் ஒரு நல்ல குடிமகனாக மாற வேண்டும் என்ற சீர்திருத்த முறைகளை மனத்தில் கொண்டு அளிக்கப்படும் தண்டனையே இந்த நன்னடத்தை முறை என்பது. இதன்படி குற்றவாளி நீதிமன்றத்துக்கு ஒரு முச்சலிக்கை எழுதிக் கொடுக்கிறான். நீதிமன்றத்தார் குறிப்பிடும் கால அளவு வரை (குறைந்தது ஓராண்டு, உயர்ந்தது மூன்று ஆண்டுகள்) நன்னடத்தையோடும் சமூகத்தில் ஒழுங்கோடும் வாழ உறுதி கூறுகிறான். அந்தக் காலத்தில் நன்னடத்தை அலுவலர் அவனைத் தனது மேற்பார்வையில் கொண்டு அவனைக் குற்றப் பாதையினின்றும் நீக்கி அறப் பாதையில் திருப்பி விடுகிறார். அவனும் காக்கப்படுகிறான். அவனால் செய்யப்படக் கூடிய மற்ற குற்றங்களும் தவிர்க்கப்படுகின்றன. சமுதாயமும் இன்புற வழியாகிறது.

அப்படியின்றி அவன் சிறைக்கு அனுப்பப்பட்டால் அவன் சமுதாயத்தோடு ஒட்டி வாழ அருகதை அற்றவனாய் பல்லார் பழிப்புக்கும் ஆளாகி, வாழ வகையின்றி, நல்லார்க்கும்பொல்லாதவனாகி, சந்தேகிக்கப்பட்ட நபராகி மறுபடியும் மறுபடியும் சிறை செல்லும் கொடுமைக்கு ஆளாக நேருகின்றது.

அது மட்டுமா ? உழைத்து ஊதியம் பெற்றுத் தன் பெண்டு பிள்ளைகளைக் காக்க வேண்டிய கடமைஉள்ள ஒருவன் சிறைக்குச் சென்றுவிட்டால், அவன் குடும்பம் அவதிக்குள்ளாகி, நிவர்த்திக்கப்பட முடியாத இன்னல்களுக்கு உட்பட்டு, வாழ வழி



யின்றி அவனுடைய குடும்பமும் தீச் செயலில் இறங்க நேரிடுகிறது. இது குற்றத்தைத் தடுக்கும் முறையாகாமல் குற்றத்தை வளர்க்கும் முறையேயாகும். நன்னடத்தை விடுதலையால் அவன் குடும்பம் காக்கப்படுகிறது. அவனுக்குச் சிறை சென்றவன் என்னும் அவப் பெயரும் அணுகாது.

மற்றும் ஒரு முக்கிய விளைவு குறிப்பிடத் தக்கது. குற்றவாளியைச் சிறைக்கு அனுப்பி அவனைப் பேணிப் பாதுகாக்கும் செலவினங்கள் தவிர்க்கப்பட்டு அரசுக்குப் பணச் செலவும் மிச்சமாகின்றது. குடிமக்களின் பணம் வேண்டாச் செலவுக்குக் கரைகின்ற நிலை தவிர்க்கப்படுகின்றது.

இத்துணை நன்மை பயக்கவல்லதும் மேலை நாடுகளில் மிக முக்கியத்துவத்தோடு கையாளப்படுவதுமான இம்முறையை நாம் புறக்கணிப்பது சரியல்ல. ஆகவே இந்த 1971-ஆம் ஆண்டை 'ப்ரோபேஷன்' ஆண்டு என நிர்ணயித்து இந்த ஆண்டிலே மேற்படி சட்டத்தின் நல்ல கருத்துக்களை நாடெங்கும் பரப்புவது அவசியமாகும்.

இன்னா செய்தார்க்கும்
இனியவை செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

—குறள்.

தமிழக அரசின் முழு மூலதன ஆதரவில் கைதேர்ந்த நெசவாளர்களால் நடத்தப்பட்டு வருவதுதான்

சென் கோப்டெக்ஸ் AA-399

படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், டர்க்கி துண்டுகள் தயாரிப்பாளர்கள்.

தந்தி : CHENCOPTEX — தொலை பேசி : 43.

சென்னிமலை தொழிலியில் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம். லிட். No. AA-399, சென்னிமலை.

S. சென்னியப்பன், தலைவர்.

P. K. கணேசன், கூட்டுறவு உப பதிவாளர் காரியதரிசி.

நல்ல ஆடை அணிகலன்கள்

நவநாகரீகத்தின் அடையாளம்!

நேர்த்தியான ஆடைகளுக்கான நல்ல இழை நூல்களை

உற்பத்தி செய்பவர்கள்

தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்

அஞ்சல் பெட்டி எண் : 23,

தஞ்சாவூர்.

(பருத்தியில் 20 நெம்பர் முதல் 100 நெம்பர் நூல் வரை தயாரிப்பவர்கள்)

கே. திருவேங்கட முதலியார்,
நிருவாக இயக்குநர்.

தந்தி : GOODYARN.

தொலைபேசி எண் : { தஞ்சாவூர் : 325.
சென்னை : 83443.

சென்னை அலுவலகம் :

3-வது மாடி, "சோர்தியா மாளிகை"

150-ஏ, மவுண்ட் ரோட்,

சென்னை-2

வெண்பாப் போட்டி

8. ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து எனுந்தலைப்புக்(கு)
அன்றுதித்த வெண்பா அமுதமிதாம்—தென்னாட்டில்
வன்சாதி எல்லா மதங்கடந்து நீதிவழி
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

ஆண்ட தமிழர் அழகில் தமிழகத்தை
ஈண்டுயர்வில் ஆளுகிறார் இன்புறவே—நீண்டுலகில்
அன்பின் கலைஞரவர் ஆட்சிக் குறுதுணையாய்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

சாதி மதங்கடந்து சாத்திரமெல் லாங்கடந்து
நீதி தவறு நெறிதொடர்ந்து—மேதினியில்
என்றும் மனிதன் இனத்தில் இனம்பிரியா (து)
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

ஏற்புடைய கற்பில் இணைந்தார் மணவாழ்க்கை
நோற்புடையோர் பெற்று நுகர்பயனும்—போற்றுதலில்
அன்பில் இளையாது ஆண்பெண் துணைநலத்தே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

பரியும் புலியும் பயனற்ற தீயவினை
தோயும் மதியின் தொடர்பொன்றே—தீயுருவில்
நன்றென் வினையெல்லாம் நாடிகழும் அவ்வினைவிட் (டு)
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

எல்லாம் பெரியார் இயல்பே அவர்வகுத்த
வல்லமையில் ஞாலம் வளருதலால்—வல்லவராம்
தன்மையிலே அப்பெரியார் தாள்பணிந்து ஓங்குநிலை
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

கற்றுரே ஞாலம் கணித்தறிவர் நற்றெளிவு
பெற்றுரைப் பற்றியவர் பின்செல்வர்—அற்றுலும்
மன்னர் குடிமையுறும் மாண்படக்கம் அத்தெளிவில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

மானம் இழத்தல் மதியிழத்தல் மாந்தருறும்
ஞானம் இழத்தல் நலமிழத்தல்—ஊனமதே
உன்னுந் தொழிலாய் உலகலையும் பேதமையற் (று)
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

தோய்ந்த நிலத்தே துலங்கும் வளம்போன்று
வாய்ந்த குடிகள் வரிசையதாம்—காய்ந்தநிலம்
நன்னீர் மழையால் நலம்விளைக்கும் அக்குடிபோல்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—புலவர் சி. துரைசாமி, சென்னை-35

சுயாட்சி சமத்துவந் தண்டமிழ் நாடாய்
உயர்வுபெற நாமோ உழைப்போம்—முயற்சியிலே
என்றென்றுஞ் சோரா (து) இருந்தே நலங்காண
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வ. இராசசேகரன், சென்னை-7

ஏற்றத்தாழ் வற்ற எழிலுடைய பூங்காவாய்
மாற்றித் தமிழ்நாட்டின் மாண்புயர்த்தி—மாற்றுரும்
நன்றே யெனப்போற்ற நம்மின் நலம்பெருக்கி
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வி. மு. உலகநாதன், சென்னை-7

ஒன்றுபட்ட மெல்லிதழ்கள் சேர்ந்தோர் மலராகி
வென்றுவிட்ட வீரனைப்போல் வீரமுடன்—தென்றலிட்ட
மன்றத்தின் நின்றுடும் பொழிலாகிச் சேர்ந்தெல்லாம்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—ந. இராதாகிருஷ்ணன், காஞ்சிபுரம்

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
புலவர் சி. துரைசாமி,
36, கால்வாய்க் கரைத் தெரு,
சி. ஐ. டி. நகர்,
சென்னை-35.

இன்றுமலர்த் தேனெடுத் தின்பமுறும் ஈயினங்கள்
நன்றுபக லாயுழைத்து நானிலத்தில்—ஒன்றித்து
நன்றினிக்கும் தேனீந்து நல்லுணவு செய்வதுபோல்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—ஏ. வி. சாமுவேல், ஆத்தூர்

அன்பு அருளிரக்கம் ஆற்றலுடை நல்லறத்தோ (டு)
என்பும் பிறர்க்காக்கி, ஏற்றமிகு—பண்புடனே
நின்றுலக வாழ்வில் நிலைத்தபுகழ் வந்தெய்த
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—சடையப்பன், ஆனத்தூர் அஞ்சல்

சண்டையிட்டுச் சண்டையிட்டே இந்தியமே துண்டுபட
அண்டையர்கள் ஆட்சியிலே வாழ்ந்திழிந்தோம்—நன்றி
ஆவோ?
இன்றுதொட் (டு) இந்நெஞ்சில் நட்புணர்வு கொண்டென்றும்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து
—இராசவேலன், காஞ்சிபுரம்-1

முல்லை அரும்பே! முழுநிலவே! தெள்ளமுதச்
சொல்லால் வடித்த சுவைத்தமிழே—மெல்லிடையே!
என்றும் பிரியாமல் இல்லறமாம் நல்லறத்தில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—காங்கேயன், வெங்கல்பாளையம்

வெண்ணீ றணிந்துலகில் வாழ்ந்தாலென்? அல்லாவை
எண்ணித் தொழுதாலென் ? ஏசுபிரான்—ஒண்சிலுவை
மண்டியிட்டு நின்றாலென் ? மானிடருள் வேற்றுமையேன்?
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—வை. மறைமணி, புதுக்கோட்டை-2

பண்டைத் தமிழனது பண்புயரப் பாட்டாளி
கொண்ட வறுமை குலைந்தோடத்—தண்டமிழால்
இன்று நமையாள் கலைஞர் அரசுடனே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—வை. நடராசன், திருமலைராயன்பட்டினம்

கண்ணளிக்கும் ஆசிரியர் கட்டத்தைப் போக்குதற்கு,
நண்ணிய சம்பளத்தை நல்கியே—தண்ணளியாய்த்
துன்பத்தைப் போக்கவல்ல தூய்மையுள்ள நம்மரசில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—பி. வெங்கடாசலம், ஆவத்திப்பாளையம்

மூதறிஞர் நாட்டிலின்று மூட்டிவிட்ட சாதிவெறித்
தீதகல ; நாடு செழித்தோங்கப்—பேதமின்றி
இன்பத் தமிழ்நாட்டில் எல்லாரும் ஓரினமாய்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—குழ. அண்ணாமலை, கோவை

பகைமறந்து சாதிமறந்து மதம்மறந்து கொள்கை
வகைசிறந்த தென்புலத்தார் வாழத்—தொகை சிறந்து
நன்றுமட்டும் எண்ணி நயத்தக்க நாம்படைக்க
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—எழில்மாறன், நரிக்கல்பட்டு

வாட்டும் பசியை, வருத்துகின்ற நோயதனை
ஓட்டும் பணியில் ஒழிவின்றி—ஆட்சியினர்
நன்றாய் உழைக்குமிந் நாளதனில் எல்லாரும்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—ஏ. காந்தி, தேவத்தூர் அஞ்சல்

தேர்தல் பகைமறந்து, தீமை விரைந்தொழிய
ஆர்வமுடன் நித்தம் ஆய்பணிகள்—நேர்மையுடன்
என்றென்றும் செய்தே எழிலார் வளநாட்டில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—சுப்பராயலு, பெரியகுளம்

மன்றம் மணக்க மலர்புலமை காட்டுமெழில்
தென்றல் நடைக்கலைஞர் சீராட்சி—நன்றுசெயப்
பொன்றாப் புகழ்குவியப் பொன்வாழ்வு மின்னலிட
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்

தேர்தலெனும் சூறை திருநாட்டில் மோதிவிட்டுப்
போரோய்ந்து போனதுபோல் போயிற்றே—யாருமினி
நன்றாற்றி நம்முதல்வர் நல்லவழி பின்பற்றி
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—புலவர் க. நாகேஸ்வரன், திருத்தணி

அன்றிருந்த காந்திமகான் அண்ணாவின் நல்வழியில்
சென்றே செயல்படுவோம் செந்தமிழா—என்றும்நாம்
வென்றவர்கள் தோற்றவர்கள் வேற்றுமையைத் தான்
[மறந்து
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—வெ. நடராசன், சுந்தராபுரம்

வேற்றுமை எண்ணங்கள் வேரறுத்து, நாட்டினில்
ஏற்றமுங் காண எழுவீரே—தோற்றவரும்
வென்றவருங் கூடியே வெல்வோம் வறுமைதனை!
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—ஏ. பார்த்தசாரதி, கரூர்

கொன்றன்ன செய்தாலும் குற்றங் களைமறந்தே
நன்றெண்ணி வாழ்கவென்றே நற்குறள்—என்றென்றும்
நன்றே உளமதனில் நாம்பதிந்துக் கொண்டோமே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசை

தமிழின் வளங்காத்துத் தன்மானங் காத்துத்
தமிழர் நலங்காத்தே ஆளும்—தமிழர்க்கே
என்றும் துணையாக இங்கே தமிழரெல்லாம்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—சிவ. அம்பிகாபதி, சென்னை-15.

வென்றவர்கள் யாரெனினும் வீழ்ந்தார்நாம் காழ்ப்பின்றி
நன்றுளத் தந்திடுவோம் நல்லுரைகள்—சென்றபகை
கொன்றொழிப்போம் மக்களுக்காய்க் கூடிப் பணிபுரிவோம்
ஒன்றாக வாழ்வோம் உவந்து.
—அழகம்மாள் செல்லமுத்து, புதுக்கோட்டைஅஞ்சல்.

இன்று தமிழர் இயற்றுகின்ற நல்லாட்சி
என்றும் உலகியலில் ஏற்றமுற—நன்றுழைத்துக்
கன்றுக்குத் தாய்ப்பசுதான் காட்டுமுயர் அன்பேபோல்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—புலவர் சி. இரத்தினவேலனார், சென்னை-19.

ஒன்றாய் உயிராய் உடன்வாழ்ந்த நான்கெருதை
ஒன்றொன்றாய்ச் சிங்கம் உறழ்வூட்டித்—தின்றகதை
நன்றாய் உணர்வோமேல் நாட்டில் நலம்விளைய
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—சு. நாராயணசாமி, திருச்சி-3

மூவேந்தர் நாளினிலே மூண்டிட்ட வெம்பகையை
நாவேந்தர் பாடினார் நற்பயனென் ?—கோவேந்தர்
ஒன்றாய் இவர்குறையை ஒண்டமிழர் நாமொழித்தே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

தீமை புரிந்தொழுகும் தீயோரை மன்னிப்போம்
ஆமைபோல் ஐந்தடக்கி ஆண்டிடுவோம்—ஊமையாய்
பின்தங்கி வாழ்ந்தாரைப் பேணிப் பயன்படுத்தி
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—வெ. இரா. இராசகோபாலன், காவேரிநகர்.

உள்ளத்தால் சேர்ந்தாலும் ஊரலரால் தூற்றலுற்றோம்
வெள்ளம்போல் வந்தெதிர்த்தோர் மீண்டுவந்து—தள்ளாது
மன்றமணப் பந்தரிலே மாமணச்சீர் கூட்டுவதால்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

தங்கத் தமிழைத் தடையின்றிக் கற்றுநாம்
மங்காப் புகழ்பெற்று மாவீரர்—வங்கர்போல்
வென்று பகையை விரட்டிடுவோம் ; எந்நாளும்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—வாசு, கணேசன், விழுப்புரம்.

தேர்தல் புயல்ஓய்ந்து தென்றல் தவழ்வதுகாண் ;
தீர்ப்பளித்தார் முன்னணிக்கே தீந்தமிழர்—ஆர்த்தெழு
வோம்
குன்றா(து) உழைத்திடுவோம் கோடி நலம்துய்ப்போம்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—ந. செனார்த்தனன், அரக்கோணம்

நாடு நமக்கென்ன நற்பணிகள் செய்ததென்று
கூடிக் குரலெழுப்பிக் கூவாமல்—நாடுய்ய
முன்னின்று பாடுபட்டு முன்னேற்றம் கண்டுமனம்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—துறவி, சென்னை 12

பள்ளிக் கணக்கில் பயிலும் முதலெண்ணை
உள்ளித்தான் காதலர்கள் ஒன்றினரோ—பள்ளிதனில்
ஒன்றாமல் ஒன்றுண்டோ ஊரில் ; எனவேநாம்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—சி. சௌ. கருப்பன் செட்டி, திருச்சி-16

சாதிமுறை போக்கிச் சமதர்மம் தோற்றுவித்து,
வீதிமுறை வாழ்வோரை மேம்படுத்தி,—ஓதுதமிழ்
நின்று செழிக்கும் நிலைசெய்தே, எந்தமிழீர் :
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—புலவர் த. வாசுதேவன், நயினார்பாளையம்

ஏழையெனச் செல்வத்தின் ஏந்தலென வாழ்வதற்(கு)
ஊழையொரு ஏதாய் உரைப்பவர்கள்—பீழையுற
நன்றுசமு தாயத்தை நேர்வழியிற் கொண்டுசெல்ல
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—மாதையூரான், திருவாமாத்தூர்

நன்றுசெயும் நல்லரசை நாம் பெற்ற காரணத்தால்
வென்றுவிட்டோம் வேதனையை வேல்விழியே—இன்றேநாம
மன்றம் முழங்கிவரும் மாநிலத்தன் றாட்சிபெற்றே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.
—இரா. கூத்தரசன், காவேரிநகர்.

கைவிரல்கள் ஐந்தும் தனித்திருந் தேயிணையும்
மெய்வலியே மேன்மைகொள் தன்னாட்சி—பொய்மையிலே
இன்றுதொட்டே அம்முழக்கம் எல்லாரும் செய்தடைந்தே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து
—வி. இராமலிங்கம், நாங்குநேரி.

ஒன்றே குலமா யொருவனே தேவனாய்
என்றே அனைவரும் எண்ணிநாம்—நன்றாய்
உறவுக்கே ஒன்றி உரிமைக் குரலீந்து
ஒன்றுபட்டு வாழ்வோ முவந்து.
—வெ. சொக்கலிங்கம், ஒரத்தி.

217

செஞ்சொற் கலைஞருடை சீர்மேவு மாட்சியிலே
நெஞ்சினிக்க நற்பணிகள் செய்கின்றார்—வஞ்சமில்லை
நன்செய்யும் புன்செய்யும் நன்கு விளைவுதர
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—பெ. கோவிந்தசாமி, விழுப்புரம்

நின்றபுகழ் நம்நாட்டி லென்றும் நிலைத்திடவே
அன்றண்ணன் பெற்றிட்ட ஆட்சிதனைக்—குன்றாமல்
நன்றாகப் போற்றிவரும் நம்கலைஞர் கையோங்க
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—அ. க. சண்முகசுந்தரம், சேயாறு.

உள்ளத்தால் ஒன்றானோம் ; ஒவ்வாதுன் சாதியென்றார் ;
அள்ளக் குறையாநம் அன்பினையே—கொல்லத்தான்
கன்றி வருங்கூற்றைக் கொன்றழித்(து) என்றுமிங்கே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—செ. நாராயணன், சென்னை-14.

வீணையில் நாதத்தை வெட்டிப் பிரிப்பதுபோல்
ஆணையிட்டுக் காதல் அறுத்தனரால்—ஊனைஉயிர்
ஒன்றுதல் போல்ஒன்றி என்றும் இறப்புலகில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து

—கி. க. இராசேந்திரன், சென்னை-7.

பண்டிருந்த பொற்காலம் பார்க்கத் துடிதுடித்து
நின்றிருக்கும் வேளை நினையாயோ—கொண்டிருந்த
வன்பகையை நீமறந்து வருவாய் உலகத்தில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வி. பெ. ராமசாமி, சென்னை-18.

சிந்தனையில் சீர்த்திறமும் செந்தமிழின் கூர்அறமும் ;
நிந்தனையோ ஏதுமில்லை நெஞ்சினிலே—வந்தனைசெய்
என்றுசொல்லி வாட்டமிலா ஏற்றமிகு ஆட்சியினில்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—து. ம. ராமசாமி, துடியலூர்.

[illegible]
குன்றில் ஒளிரும் விளக்கேபோல்—வென்றிமிகச்
சென்றெட்டு மாதிரமும் செந்தமிழின் சீரோங்க
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—வெ. ப. சிறுப்டிணமூர்த்தி, சிவகா[illegible]

தண்டமிழ்த்தாய் ஒன்றே தமிழர் மலையாளர்
ஒண்தெலுங்கர் கன்னடர்கள் ஓர்குடும்பம்—பண்புடனே
வென்றி வினைபுரிய வெற்றிக் கனிகொணர
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—அ. கிருஷ்ணன், கனியூ[illegible]

பூத்துக் கமழும் பகுத்தறிவுத் தத்துவத்தைப்
பாத்திறமை யில்பகர்ந்த பார்வேந்தன்—மாத்தமிழன்
அன்னவன்தன் நல்வழியாம் அன்புவழி பின்பற்றி
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—பரணன், பந்தநல்லூ[illegible]

செந்தமிழ் நாட்டிலுறை செல்வருடன் ஏழைகளும்
பைந்தமிழ் வல்லாரும் பாமரரும்—செந்தமிழ்த்தாய்க்
கென்றும் பணிபுரிய எங்கலைஞர் சொல்வழியே
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—நா. தணிகை அரசு, காஞ்சிபுர[illegible]

எங்கும் தமிழ்மணக்கும் ; என்றும் வளம்பெருக்கும் ;
பொங்கும் மகிழ்விருக்கும் ; பொன்மனப்—இங்கிருக்கும்
நன்றாய் நலமாய் நமக்கென்றும் நல்வாழ்வாய்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—நா. அழகர்சாமி, தா. வாடிப்பட்டி.

செந்நெல் வயல்கொழிக்கச் சீரணைத்தும் நாடுபெறக்
கன்னல் தமிழரசு கண்டாளும்—இந்நிலத்தில்
தொன்றுதொட்டு நின்றிலங்குந் தாயடண்பு மாறாமல்
ஒன்றுபட்டு வாழ்வோம் உவந்து.

—க. ரத்தினம், ஆயக்காரன்புலம்-2

ஏர்-இந்தியா

அறிவிக்கின்றனர் :

கட்டணங்களிலே கணிசமான குறைப்பு!

எமது (அஃபினிடி க்ரூப்) இன ஒருமைக் குழுப் பயணத் திட்டத்தின் கீழ், தீவிரமான கட்டணக் குறைப்புகளை வழங்குகின்றனர் ஏர்-இந்தியா. பல துறைகளுக்கு இந்த இறக்கம் ரூ. 2000/-க்கு மேற்படும்.

இன ஒருமைக் குழு (அஃபிடினி க்ரூப்) என்பது என்ன?

பயணம் அல்லாத, பொதுவான பிற நோக்கங்களையோ, அலுவல்களையோ கொண்டதாய், பயணத்திற்கு 6 மாதங்களுக்கு முன்பிருந்தே இயங்கிவரும் ஒரு சங்கம் அது. அமெரிக்க நாடுகளுக்குப் பயணம் செய்வதானால், அச் சங்கம் குறைந்தபட்சம் இரு ஆண்டுகளாவது இயங்கிவந்திருக்க வேண்டும்.

உதாரணங்கள் : கலைத்துறை, இன்னிசை, விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம், உணவியல் போன்ற கல்வி நிறுவனங்களை வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், அறுவை சிகிச்சையாளர்கள், நோய்க் குறி ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் போன்றோரின் தொழிற் குழுக்கள்; லயன்ஸ் க்ளப், ரோட்டரி க்ளப் போன்றவை, விளையாட்டுக் கழகங்கள், ஜிம்கானாக்கள், பாடகர் குழாம்கள், நாடக இன்னிசை மன்றங்கள் முதலானவை.

குறைந்த பட்சத் தேவைகள் :

மேற்கூறிய எந்த ஒரு இன ஒருமைக் குழுவிலும், பயணத்திற்கு முன் குறைந்த பட்சம் 6 மாதங்களாவது உறுப்பினராக இருந்தால்தான், இந்தக் கட்டணக் குறைப்பைப் பெற உரித்தாவீர்கள். பயணமுழுதுமே நீங்கள் உங்கள் குழுவுடன் சேர்ந்துசெல்லத் தேவை; அக் குழுவோ 15 பேருக்குக் குறையாதிருக்கவேண்டும்.

இன ஒருமைக் குழுப் பயணத் திட்டத்தின் கீழ் பெருமளவான கட்டணக் குறைப்பைத் தருவதோடு மட்டுமல்ல; கடந்த 3 ஆண்டுகள் நீங்கள் வெளிநாடு செல்லாதவராக இருப்பின், தமக்கே உரித்தான உயர்தனிப்பெரும் நலன்களை உங்களுக்குத் தருகின்றனர் ஏர்-இந்தியா.

செல்லுமிடம்	அஃபினிடி க்ரூப் கட்டணங்கள் (எல்லாக் கட்டணங்களும் இந்திய ரூபாய்களிலே)							
	பம்பாய்		கல்கத்தா		டெல்லி		சென்னை	
	சாதாரண ரிடர்ன் கட்டணம்	அஃபினிடி ரிடர்ன் கட்டணம்	சாதாரண ரிடர்ன் கட்டணம்	அஃபினிடி ரிடர்ன் கட்டணம்	சாதாரண ரிடர்ன் கட்டணம்	அஃபினிடி ரிடர்ன் கட்டணம்	சாதாரண ரிடர்ன் கட்டணம்	அஃபினிடி ரிடர்ன் கட்டணம்
ஆம்ஸ்டர்டாம்	5984	4189	6732	4713	5984	4189	6650	4655
ஃப்ராங்க்ஃபர்ட்..	5984	4189	6732	4713	5984	4189	6650	4655
பாரிஸ்	5984	4189	6732	4713	5984	4189	6650	4655
ப்ரேக்	5984	4189	6732	4713	5984	4189	6650	4655
ஜெனிவா/ஜூரிச்	5895	4127	6646	4653	5895	4127	6561	4593
ரோம்	5233	3664	6027	4219	5233	3664	5899	4130
மாஸ்கோ-நேராக டெல்லி வழி	4986	3491	5633	3944	4938	3457	5652	3957
"மத்தியகிழக்கு/ஐரோப்பா வழி	7704	5393	8498	5949	7704	5393	8370	5859
லண்டன்	6070	4249	6821	4775	6070	4249	6736	4716
நியூ யார்க்	9210	5603	9615	5963	9210	5603	9615	5963
கோலாலம்பூர்	2915	2041	2207	1545	2736	1916	2339	1633
நாந்தி	8649	6055	8073	5652	8649	6055	7987	5591
பெர்த்	6133	4294	5561	3893	6133	4294	5471	3830
சிங்கப்பூர்	2915	2041	2385	1670	2915	2041	2339	1633
ஸிட்னி	7015	4910	6441	4509	7015	4910	6354	4448
டோக்யோ	5912	4139	5206	3645	5604	3923	5427	3799

முழு விவரங்களையும், இக் கட்டணங்களுக்கு உரிய இதர நிபந்தனைகளின் பட்டியலையும் பெற, உங்கள் அருகமைந்த எங்கள் 56 அலுவலகங்களில் ஒன்றுக்கோ, உங்கள் பிரயாண ஏஜண்டுக்கோ இக் கூப்பனை அனுப்புக.

ஏர்-இந்தியா அஃபினிடி க்ரூப் பயணத் திட்டம் பற்றிய இலவசத் தகவலேடுகளை எனக்கு அனுப்புக.

பெயர் ....

எதன் உறுப்பினர் ....

முகவரி .... TAM.

தொழில் வளர்ப்போம்



இன்றைய தொழில் நுட்ப யுகத்தின் நாடி நரம்பாக இருப்பது எலக்ட்ரானிக்ஸ். பொறியியல், இரசாயன இயல், உலோகவியல் . தொழில்களின் உற்பத்தி முறைகளில் இது முக்கிய இடம் வகிக்கின்றது. 'பழைய கம்பியில்லாத் தந்தி சாதனத்திலிருந்து தற்காலச் செய்திப் போக்குவரத்து முறைகள், கம்ப்யூட்டர்கள், நாட்டுப் பாதுகாப்புப் பணிகள், அணு சக்தி, விண்வெளி நுட்பங்கள் வரை பல்வேறு துறைகளிலும் இது புரட்சிகரமான மாறுதல்களைச் செய்திருக்கின்றது.

நமது நாட்டில் எலக்ட்ரானிக்ஸ் மூலமான முதன்மையான பலன் வானொலிப் பெட்டிகளாகும்.

தொழில் நன்கு வேரூன்றி நிலைத்துவிட்டது.

இயந்திரங்கள், கருவிகள் முதலிய வகையில் ரூ.7·5 லட்சத்துக்கு உட்பட்ட முதலீடு உள்ளவை சிறு தொழில்கள் என்ற விளக்கத்தின் படி எலக்ட்ரானிக்ஸ் தொழில் சிறுதொழில் வகையில் சிறப்பிடம் வகிக்கின்றது. நமது நாட்டிலும் அயல்நாடுகளிலும் தொழில்நுட்ப நுணுக்க முறைகளின் வேகமான வளர்ச்சி காரணமாக, சிறு தொழில் முனைவர்களுக்கு அரிய தொரு வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. பெரிய அளவில் முறையாக அமைந்த தொழில் நிறுவனங்கள் மட்டுமே செய்ய இயலும் என்று கருதப்பட்ட, பல உற்பத்திப் பொருட்களை, சிறு தொழில் முனைவர்கள் உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு சில துணைக் கருவிகள், துல்லியமான நுட்ப இயக்கங்கள் கொண்ட இணைப்புக் கருவிகள் நீங்கலாக மற்றப் பெரும்பாலான துணைக்கருவிகளை உற்பத்தி செய்யக்கூடிய திறனைச் சிறு தொழில்கள் பெற்றுள்ளன. சில அயல் நாடுகளின், குறிப்பாக ஜப்பான் நாட்டின் தொழில் நுட்ப ஒத்துழைப்பு, இந்த நம்பிக்கையையும் திறனையும் வலுப்படுத்தியிருக்கிறது.

டெலிவிஷன் பெட்டிகள்

டெலிவிஷன் பெட்டிகள், சிறப்புக்கருவிகள், கார் ரேடியோ, நாடா ஒலிப்பதிவு, சில குறிப்பிட்ட வகை ஒலிபெருக்கிகள்,. எலக்ட்ரானிக்ஸ் போட்டோ ஃப்ளாஷர்கள், வால்யூம் கண்ட்ரோல், போன்ற நுண்ணிய கருவிகளைச் செய்யும் சிறு தொழில்கள் நாட்டில் தோன்றி விட்டன. இந்தப் பொருட்களில் சில, ஏற்றுமதி செய்யப்படும் நிலையில் இருக்கின்றன.

வகையான முறையில் இடம் பெறக்கூடிய சில வகைக் கருவிகள் விவரம் கீழே தரப்படுகின்றது.

கருவி உறுப்புகள் என்ற வகையில் மெட்டல் ஆக்சைடு ரெசிஸ்டர்கள், பாலி கார்பனேட் கபாசிட்டர்கள், அலுமினியம் கபாசிட்டர்கள், வேரியேட்டர்கள், கனெக்டர்கள், பவர் பாக்குகள், பாட்டரி எலிமினேட்டர்கள் ஆகியவைகளைச் சிறு தொழில் அமைப்புகளில் தயாரிக்கலாம். ஒலிக் கருவிகள், செய்திக் கருவிகள் என்ற வகையில் நாடா ஒலிப் பதிவுகள், இசைத்தட்டு இயக்கிகள், ஒலி பெருக்கிகள் முதலியவற்றைச் செய்ய இயலும்.

மருத்துவ எலக்ட்ரானிக்ஸ் என்ற முறையில் டயாதமி, தசை ஊக்குவிப்புக் கருவிகள், பி. செ. மீட்டர்கள், எலக்ட்ரானிக்ஸ் ஈ பிடிப்பான், காது மிஷின்கள், ஸ்டெலிலைசர், ஆபரேசன் விளக்குகள் முதலியவைகள் உற்பத்தி செய்யலாம்.

கம்ப்யூட்டர்கள் இணைப்பு

இக் கருவிகளைத் தயாரிப்பதற்கான செய் முறைகளை நம் நாட்டிலேயே அறிந்து கொள்ள வசதி இருக்கிறது. ரயில்வே சிக்னல், செய்திப் போக்குவரத்துக்கருவிகள், மைக்ரோ வேவ் கருவிகள், கம்ப்யூட்டர்கள் இணைப்பு முதலியவைகளில் கருவிகள் செய்ய இங்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

எலக்ட்ரானிக்ஸ் தொழில்கள் சம்பந்தப்பட்ட சில செயல்நடை முறைகளைக் கீழ்க்கண்ட தேசிய ஆய்வுக் கூடங்கள் உருவாக்கியுள்ளன.

1. மத்திய எலக்ட்ரானிக்ஸ் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் பிலானி, ராஜஸ்தான்:—இந்த நிறுவனத்தின் சிறப்பான பொருள் வகைகள் டெலிவிஷன் பெட்டிகள், சிக்னல் ஜெனரேட்டர், மைக்ரோவேவ் துணைக் கருவிகள், மைக்ரோ போன், நாடா ஒலிப் பதிவுகள் முதலியன. செய் முறையை விளக்குவதிலும், தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குவதிலும் இந்த நிறுவனம் உதவ முடியும்.

2. காரைக்குடியில் உள்ள எலக்ட்ரோ மெடிக்கல் ஆராய்ச்சி நிறுவனம்—டின் ஆக்சைடு ரெசிஸ்டர்கள், டிரை செல்கள், சீலிட்ட வகை நிசிடி பேட்டரி ஆகியவற்றை உருவாக்குவதில் இது சிறப்பிடம் வகிக்கின்றது.

3. தேசிய இரசாயன ஆய்வுக கூடம், பூனா-8—இதில் தெர்மிஸ்டர்கள், கடினமான, மென்மையான பெர்ரைட்ஸ், சி.டி. எஸ். போட்டோ செல்ஸ், சிலிகான் டெட்ரோ குளோரைடு, எலக்ட்ரானிக்ஸ் கருவிகள், போலரோகிராப் முதலியவைகள் உருவாக்கு முறைகள் உள்ளன.

காந்தப் பெட்டி

4. தேசிய பௌதிக ஆய்வுக் கூடம், புதுடில்லி :—இதில் காந்தக் கருவிப் பொருட்கள், நிக்கல், ஜிங்க் பெர்ரைட் பொருட்கள், மைக்ரே வேவ் பொருட்கள் உடைப்புகள் விரிசல்களைக் கண்டறிய காந்தப் பொடி முதலிய பல வகைப் பொருட்கள் தயாரிப்பு முறை இருப்பது குறிப்பிடத் தக்கது. சோதிப்பதற்கான கருவிகளும் இந்த ஆய்வுக்கூடத்தில் உள்ளன.

5. திடநிலை பௌதிக ஆய்வுக்கூடம், டில்லி :—இதில் நிக்கல் காட்மியம் செல்கள், சோலார் செல்கள், வேரியேட்டர் டையோடின், தெர்மோ எலெக்ட்ரிக் ஜெனரேட்டர்கள், மைக்ரோ வேவ் பெர்ரைட்டுகள் முதலியன செய்முறை குறிப்பிடத்தக்கது.

வானொலிப் பெட்டிகள், எலக்ட்ரானிக்ஸ் கருவிகள், ஒலி பெருக்கிகள், கபாசிட்டர், ரெசிஸ்டர், சுவிச்சுகள், டிரான்ஸ்பார்மர்கள் முதலிய முக்கியமான எல்க்ட்ரானிக்ஸ் கருவிவகைகளுக்காக இந்திய தர நிர்ணய நிறுவனம் 150க்கு மேற்பட்ட தர வரையறைகளைக் குறிப்பிட்டுள்ளது. இத்தொழில் வளர்ச்சிக்கும் தொழில் முனைவோர்களுக்கும் இவை பெரிதும் பயன்படும்.

எலட்ரானிக்ஸ் தொழில் மையம்

எலக்ட்ரானிக்ஸ் தொழில்களுக்காகத் தமிழ்நாடு அரசாங்கம் அமைத்த அலுவல் குழு, எலக்ட்ரானிக்ஸ் துணைக் கருவிகள் வகையில் 24 பொருட்களையும், மருத்துவ எலக்ட்ரானிக்ஸ் வகையில் 17 பொருட்களையும் குறிப்பிட்டுள்ளது. தமிழ்நாட்டில் இவற்றுள் பல பொருட்களைச் சிறு தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யலாம். சாத்தியக்கூறு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

சென்னை அடையாறு தொழில் நுட்பநிறுவனங்களின் மையத்தில் எலக்ட்ரானிக்ஸ் தொழில்மையம் ஒன்றை அமைக்க எண்ணியிருக்கிறது. இப்படித் தொடங்கினால் அண்மையிலுள்ள பல்வேறு தொழில் நுட்ப நிறுவனங்களையும் இதன் வளர்ச்சிக்கும் செயல் முறைக்கும் முடிந்த அளவு பயன் படுத்திக் கொள்ள இயலும்.

இந்த நாட்டிலும் அயல் நாடுகளிலும் செய்முறைத் தொழில் நுட்ப உதவிகள் கிடைக்கும் நிலையினாலும் உள்கட்டுக் கோப்புக்கான வாய்ப்பு வசதிகள் இருப்பதினாலும் அரசு நிறுவனங்களின் உதவியினாலும், சிறு தொழில் துறையில் எலக்ட்ரானிக்ஸ்தொழிலுக்கு ஒளிமயமான வருங்காலம் உள்ளது என்று உறுதியாகச் சொல்லலாம்.

நெற்பயிரையும் களையை
யும் வேற்பிரித்தறிவது
கடினமானதால், நாங்கள்
களையை மட்டும் ஒழிக்கும்
ஸ்டாம் F-34
தயாரித்திருக்கிறோம்



இண்டோகேமில் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பம்பாய் 25, இந்தியா

விநியோகிப்போர் :

தி சைன்டிபிக் பெர்டிலிசர்ஸ் கம்பெனி (பி) லிட்., சுதர்சனம் : பொன்னுரங்கம் ரோடு,
ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர்-2. தொலைபேசி : 22854. தந்தி : NITROPHOS
கிளைகள் : உதகமண்டலம், சென்னை, மதுரை, கடலூர், திருச்சிராப்பள்ளி.

அஞ்சவேண்டாம்!

நம்முடைய வாழ்வுக்கு, இயக்கத்துக்கு, நாம் செயல்படுவதற்கு—சக்தி தேவைப்படுகிறது. நாம் உண்ணும் உணவிலிருந்து சக்தியைப் பெறுகிறோம். உண்ணும் உணவில் உள்ள மூன்று வகையான உணவுச் சத்துக்கள் சக்தியை அளிக்கின்றன. அவை, மாவுச் சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்து எனப்படும். இவற்றுள் மாவுச் சத்துக்கள் நிறைந்த சர்க்கரை, அரிசி, கோதுமை முதலிய உணவுப் பொருள்கள் உட்கொண்டு குடலில் பல்வேறு செரிமானப் பொருள்களின் துணையுடன் செரிக்கப்பட்டு 'குளுகோஸ்' எனப்படும் பொருளாக மாற்றமடைந்து ஈரலை அடைகிறது. ஈரலில் இந்த 'குளுகோஸ்' மேலும் மாற்றம் அடைந்து சேமித்து வைக்கப்படுகிறது.

அவ்வப்போது ஈரலிலிருந்து கிளைகோஜின் (மாற்றமடைந்த குளுகோஸ்) மறுபடியும் குளுகோஸாக மாற்றப்பட்டு இரத்த ஓட்டத்துடன் கலந்து உடலின் பல்வேறு பாகங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு விநியோகிக்கப்படும் 'குளுகோஸ்' உடலுக்குச் சக்தி அளிக்கிறது. 'குளுகோஸ்' உடலுக்கு விநியோகிக்கப்படும்போது—உடலின் பல்வேறு நுண்ணறைகளிடையிலும் நுழையவேண்டும். அவ்வாறு நுழைவதற்கு ''இன்சுலின்'' எனப்படும் இயக்குமாற்றலுள்ள சுரப்பி நீர்—உதவுகிறது. மேலும் ஈரலில் சேமிக்கப்படும் 'குளுகோஸ்' கிளைகோஜின் ஆக மாற்றப்படுவதற்கும் ''இன்சுலின்'' தேவைப்படுகிறது.

உடலில் 'இன்சுலின்'' இல்லாததால், அல்லது மிகவும் குறைந்துவிடுவதால்—

(1) 'குளுகோஸ்' சத்து ''கிளைகோஜின்'' ஆக மாற்றப்படாமல் ஈரலில் சேமிக்கப்படுகிறது. அது அப்படியே, குறிப்பாக உணவு உட்கொண்டவுடன், பெருமளவில் இரத்த ஓட்டத்தில் கலந்துவிடுகிறது.

(2) இரத்தத்திலுள்ள 'குளுகோஸ்' உடலின் நுண்ணறைகளில் புகுவதில்லை. அதனால், 'குளுகோஸ்' சத்து உடலுக்குப் பயன்படாமல் வீணாகிறது; இரத்தச் சர்க்கரை அளவு மிகுதியாகிறது.

இவ்வாறு சிறுநீரில் சர்க்கரை வெளிப்படுவது—சக்தி வீணாவதற்கு அறிகுறியாகும். சாதாரணமாகச் சிறுநீரில் சர்க்கரை இருப்பதில்லை. உடலில் வீணாகும் சர்க்கரை தண்ணீரில் கலந்து சிறுநீரில் வெளியேற வேண்டியுள்ளது. எனவே நீரிழிவு நோயாளி (சர்க்கரை நோயாளி) மிகுதியாக, அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு சிறுநீர் வழியாக மிகுதியான தண்ணீர் வெளியேறுவதால் நோயாளியின் உடலில் தண்ணீர் குறைந்துவிடுகிறது. உடலுக்கு மிகுதியான தண்ணீர் தேவைப்படுகிறது. எனவே நோயாளிக்குத் தாகம் மிகுதியாக எடுக்கும். மிகுதியாகத் தண்ணீர் குடிப்பார். உடலில் சர்க்கரைச் சத்துப் பயன்படாமல் வீணாவதால் மிகுந்த பசி, சர்க்கரைத் தேவையை ஈடுசெய்ய முனைகிறது. நோயாளி நன்கு சாப்பிடுவார். உணவை விரும்பி உட்கொள்வார். நன்கு உணவுண்டபோதும் அவருடைய எடை குறைந்து கொண்டே போகும்.

எனவே, நீரிழிவு நோயாளி,

மிகுதியான சிறுநீர் கழிப்பார்.

மிகுதியான தண்ணீர் உட்கொள்வார்.

மிகுதியான உணவு உட்கொள்வார்.

பசி,

தாகம்,

மெலிவு

பலவீனம்—முதலியன நீரிழிவு நோயின் அறிகுறிகளாகும். நீரிழிவு நோய் முதிர்ந்த நிலையில் நோயாளி மயக்கம்—செயலற்ற நிலையை (Coma) அடைந்து விடுகிறார்.

நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை அளிப்பதன் முக்கிய நோக்கம், இரத்தச் சர்க்கரை அளவைச் சமநிலையில் சாதாரண நிலையில் இருக்குமாறு பார்த்துக்கொள்வதேயாகும். இதற்கு,

உணவுக்கட்டுப்பாடு,

உடற்பயிற்சி,

''இன்சுலின்'' உடலில் செலுத்திக்கொள்ளுதல் (அல்லது) உடலில் 'இன்சுலின்' தோற்றுவிக்கும் மருந்து உட்கொள்ளுதல், நீரிழிவுநோய் அறிகுறிகளைக் கண்டறிந்து உரிய சிகிச்சை அளித்தல்.

போதைதரும் குடிவகைகளை விலக்குதல்

புகையிலை, புகை முதலியவற்றை விலக்குதல்.

—ஆகிய முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் தங்கள் உணவு வகையில் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டால் இரத்தச் சர்க்கரையைச் சம அளவில் இருத்தி—உடல்

1948, ஏப்ரல், 17-ஆம் தேதி உலக நல நிறுவனம் செயல்படத் துவங்கியது. ஒவ்வோராண்டும் இந்த நாளை "உலக நல நாளாகக் கொண்டாடி வருகிறோம்." இவ்வாண்டு உலக நல நாளுக்கு "நீரிழிவு நோய்க்குப் பின்னும் நிறைவாழ்வு" (A full life despite Diabetes) என்னும் கொள்கை குறிக்கப்பட்டுள்ளது.

புத்தணிபூண்டு புதிய பொலிவுடன் திகழ்கிறது – ஹேண்ட்லூம் ஹவுஸ்

(ஏர்-கண்டிஷன் வசதி கொண்டது)

இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் தருவிக்கப்பட்ட பல வகைப் பட்டுச் சேலைகள், திருமண பட்டுச்சேலைகள் மற்றும் இதர ஆடைகள். உங்களுக்காகவே உள்ளன. வாருங்கள், பாருங்கள், வாங்குங்கள்.

செல்லும் சாலைகளெல்லாம்
சேருமிடம்
ஹேண்ட்லூம் ஹவுஸ்
9, ரத்தன் பஜார்,
சென்னை-3

நிலையைச் சீராக வைத்திருக்கலாம். நோயாளி எடை குறைந்திருந்தால்-உணவு முழு அளவுக்கு உட்கொள்ள வேண்டும். மாவுப் பொருள் நிறைந்த சர்க்கரை, அரிசிச் சோறு, கிழங்கு வகைகள் முதலிய உணவு வகைகளைக் குறைத்துக்கொள்வது நல்லது.

உடற்பயிற்சி, சர்க்கரைச் சத்து உடல் நுண்ணறைகளில் சென்றடைய உதவுகிறது.

வழக்கமாக, காலையில் சிற்றுண்டிக்கு முன்னதாக, 'இன்சுலின்' ஊசி போட்டுக்கொள்வது நல்லது.

குடிப்பழக்கம் நீரிழிவு நோயாளிக்கு நல்லதல்ல; சிலவற்றில் மிகுந்த மாவுச் சத்து இருக்கிறது. மேலும், குடி, பசியைத் தூண்டும் இயல்புடையது. ஈரலைப் பாதிக்கும் தன்மையது. எனவே குடியை விலக்குவது நல்லது.

புகைபிடித்தல் நல்லதல்ல. நிகோடின் நச்சுப் பொருள் இருதய இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்படுத்தி இதயத்

தைப் பாதிக்கக்கூடியது. எனவே புகைப்பழக்கம் நீரிழிவு நோயாளிக்கு நல்லதல்ல.

வயது முதிர்ந்தவர்களிடையேயும், இனிப்பு முதலான தின்பண்டங்களையும் மாவுப் பொருள்களையும் மிகுதியாக உண்பவர்களிடையேயும், நீரிழிவு நோய் மிகுதியாக வருகிறது. மேலும், நீரிழிவு நோயுள்ள குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அதே நோயுள்ள குடும்பத்தில் திருமண உறவு கொள்வதும், நீரிழிவு நோய் தொடர்ந்து வரக் காரணமாகிறது. எனவே நீரிழிவு நோயுள்ள குடும்பத்தினர் சுற்றத்தினரிடையே திருமணத் தொடர்பு கொள்ளாமை நல்லது.

நீரிழிவு நோய், உடலின் எல்லா முறைகளையும் பாதிக்கும் ஒரு நோய் ; ஆரம்பத்தில் கண்டறிந்து சிகிச்சை அளித்தால் கட்டுப்படுத்துவது எளிது. நோயின் அறிகுறிகள் தோன்றினால் உடனே டாக்டரை அணுகி ஆலோசனை பெறவேண்டும்!

உழைப்பால் உயர்ந்த உழவர்

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்திஐந்திலே, ஆறு ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரராக இருந்த ஒருவர், இன்று அறுபது ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளார் !

'' இந் நிலைக்கு அவரால் எப்படி உயர முடிந்தது ?'' என்று பலர் கேட்கின்றனர்.

'' அறிவியல் முறையில் உழவியலைமேற்கொண்டு அயராது உழைத்து அதிக வருவாயைப் பெற்றதே அவரது உயர்வுக்குக் காரணம்'' என்று அவரைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் கூறுகின்றார்கள்.

அவர் 1968–69-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநில நெல்விளைச்சல் போட்டியில் பங்கு கொண்டு ஐ. ஆர். 8 நெல் பயிரிட்டு ஒரு ஏக்கரில் 5,152 கிலோ மகசூல் விளைவித்து மாநில இரண்டாம் பரிசுக்கு (ரூபாய் 1,000) உரியவரானார்.

மதுரை மாவட்டம் தேனி வட்டத்தில் உள்ள பாலகிருட்டிணாபுரம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர் அவர். அவருடைய பெயர் திரு சுந்தரராசன் என்பதாகும்.

திரு சுந்தரராசன் அவர்கள் தனது 60 ஏக்கர் பண்ணையில் நெல் மற்றும் பருத்தி, நிலக்கடலை, மிளகாய், கேழ்வரகு முதலிய பல பயிர்களையும் சாகுபடி செய்து வருகிறார். ஐந்து கிணறுகளிலிருந்து தண்ணீரை எடுத்து அழுத்தத்துடன் கூடிய தொட்டியில் தேக்கி அங்கிருந்து குழாய்களின் மூலம் அவரது பண்ணையின் பல்வேறு பகுதிகளுக்கும் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. பாஸ்பேட், பொட்டாஷ், எம். எப். காம்ப்ளெக்ஸ் ஆகிய இரசாயன உரங்களை அவர் உபயோகப்படுத்தி வருகிறார். அவர் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 1,200 செலவு செய்கிறார். ஏக்கர் ஒன்றிலிருந்து ரூபாய் 3,000 வருவாய் அவருக்குக் கிடைக்கிறது.

அவருடைய வெற்றிக்குக் காரணம், அவர் தனது பண்ணையின் மண் மாதிரிகளை எடுத்து, மண் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பிப் பரிசோதனை செய்து, வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் முறையில் வேளாண்மையைச் செய்து வருவதேயாகும். அவர் எப்பொழுதும் வேளாண்மைத் துறையிலிருந்தே பொறுக்கு விதைகளை வாங்கிப் பயன்படுத்துகிறார். அவரிடம் ஒரு டிராக்டரும், இதர திருந்திய கருவிகளும் உள்ளன.

திருந்திய வேளாண்மையின் நவீன முறைகளை அறிந்து கொள்ள ஏராளமான உழவர்கள் அவருடைய பண்ணையை அடிக்கடி பார்வையிடுகின்றனர். பாலகிருட்டிணாபுரத்தில் 1,000 பேர்களே உள்ளனர். அவர்களில் பெரும் பகுதியினர் வேளாண்மையிலேயே ஈடுபட்டு உள்ளனர். அவ்வூருக்கு வெகு அருகாமையிலேயே கூட்டுறவு விற்பனைச் சங்கம் உள்ளது. அதனால் அந்தக் கிராம உழவர்கள் தங்கள் விளை பொருள்களை எளிதில் விற்றுக்கொள்ள முடிகிறது.

தேனி வட்டாரத்தில் திரு சுந்தரராசன் அவர்களது பண்ணை ஒரு நல்ல மாதிரிப் பண்ணையாகவே விளங்குகிறது. உழைப்பால் உயர்ந்த உழவர் பெருமகன் திரு சுந்தரராசன் அவர்களைப் போல், எல்லா உழவர்களும் அறிவியல் அடிப்படையில் உழவியலை மேற்கொண்டால் உற்பத்தியைப் பெருக்கி உயரிய வருவாய் பெற்று வளமான வாழ்வு பெறலாம்.

NAS-C-69-D

கேளுங்கள் கொடுக்கப்படும்!

சென்ற மாதம் 30 ஆம் தேதி, மாண்புமிகு தமிழ் நாடு வேளாண்மை அமைச்சர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள் வேளாண்மையில் புது முறைகள் என்ற தலைப்பில் வானொலியில் பேசும் பொழுது, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நெற்கதிரடிக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்துமாறு குறிப்பிட்டார். அந்த இயந்திரம் ஒரு மணி நேரத்தில் எவ்வளவு நெல்லைப் பிரித்துக் கொடுக்கும்? அதன் விலை என்ன? எங்குக் கிடைக்கும்? விவரம் கூறவும்.

—இராமசாமி, வயலூர்.

தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட நெற்கதிரடிக்கும் இயந்திரம், ஒருமணி நேரத்தில் 18 மூட்டை நெல்லைக் கதிரடித்துப் பிரித்துக் கொடுக்கும். மாடுகட்டிப் போரடிக்கத் தேவையில்லை. அந்த நெல்லைத்தனியாகத் தூற்ற வேண்டிய அவசியமும் இல்லை. அந்த இயந்திரம் உயர் விளைச்சல் தரும் குட்டையான ரகங்களுக்கு மிகவும் ஏற்றது.

மழைக்காலத்தில் ஈரப்பதத்தில் கதிரடிக்கையில் கணிசமான பகுதி, போரிலே தங்கிவிடுகிறது. மழையின் காரணமாக, குறிப்பாக தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் உடனடியாகப் போரடிக்கவும் முடிவதில்லை. இதனால் ஏக்கருக்கு 2 முதல் 3 மூட்டை நெல் வீணாகி விடுகிறது. அத்துடன் நெல்லை நன்கு தூற்றித் தூய்மைப்படுத்தவும் முடிவதில்லை. இத் தொல்லைகளிலிருந்து விடுதலை பெறவே, தஞ்சை தீவிர சாகுபடித் திட்ட அலுவலர்கள், அந்தப் புதிய கதிரடிக்கும் இயந்திரத்தை உருவாக்கியுள்ளனர்.

அந்த இயந்திரத்தை டிராக்டரில் இணைத்து உபயோகிக்கலாம்; அல்லது தனியாக மோட்டருடன் இணைத்துப் பயன்படுத்தலாம். அந்த இயந்திரம் உழைப்பாளர்களின் வேலைப்பளுவைப் பெருமளவில் குறைத்துவிடும்.

அந்த நெற்கதிரடிக்கும் இயந்திரத்தின் விலை ரூ. 2,250. அந்த இயந்திரம் பற்றி மேலும் விவரம் அறியக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும் :

" இணைவேளாண்மை இயக்குநர்
தீவிர சாகுபடித் திட்டம்
தஞ்சாவூர்

நான் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து இருக்கிறேன். நான் நவீன முறையில் விவசாயம் செய்து, ஒரு போகமே சாகுபடி ஆகும் என் நிலத்தில் இரு போகம் சாகுபடி செய்ய ஆசைப்படுகிறேன். அதனால் அரசாங்கம், நீர் இறைக்கும் இயந்திரம் வாங்கக் கடன் உதவி செய்யுமா? கிணறு கட்டுவதற்கும் அரசாங்கம் உதவி செய்யுமா? யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்? எவ்வளவு காலத்தில் இந்த உதவி கிடைக்கும்? கையில் கொஞ்சமும் பணம் இல்லாமல் இந்த முயற்சியில் இறங்கலாமா?

—மேரிகிருட்டிணன்,
சாத்தான்குளம்.



உங்கள் ஆசையை வரவேற்கின்றோம். ஆனால் தங்கள் அவசரத்தைப் பாராட்ட முடியவில்லை. ஏனெனில், கடன் கிடைப்பதற்கு வேண்டிய முயற்சிகளில் நீங்கள்தான் ஈடுபட வேண்டும். நீர்இறைக்கும் இயந்திரம் வாங்குவதற்குக்கடன் பெறவும், கிணறு வெட்டுவதற்குக் கடன் பெறவும், உங்கள் பகுதியில் உள்ள நிலவள வங்கிக்கு நீங்கள் மனுச் செய்து கொள்ள வேண்டும். உங்களுக்கு எவ்வளவு நிலம் உள்ளது, அதன் மதிப்பு என்ன என்பதெல்லாம் தெரியாத நிலையில் எவ்வளவு காலத்தில் தங்களுக்குக் கடன் கிடைக்கும் என்பதைத் தெரிவிக்க இயலாத

மிக வலிமையான டயர்

பயர்ஸ்டோன்

படைத்திடும்
தனிப்பட்ட 23°
கோணமுள்ள
டிராக்ஷன்
பார்களை
உடைய
டிராக்டர்
டயர்கள்.

ஆழமாக இறுகப் பற்றி அதிக இழுதிறனை அளிக்கும்படி ரப்பர் பரப்பை முற்றிலும் பயன்படுத்தும் திறனுள்ள வளைவும் கூம்பு முனையும் அமைந்தவை. பயர்ஸ்டோன் டயர்கள், கடுமையான நீடித்தகால உழைப்புக்கான வலிமை படைத்திருக்கக் காரணம் மும்மடங்கு வலுவுள்ள கட்டுமானம் — டயருடன் டிரெட்டை ஒட்டிப் பிணைக்கவும், பக்கவாடுகளைப் பலப்படுத்தவும், கார்டுகளை இன்சுலேட் செய்வதற்குமான முறை அது.



40

பயர்ஸ்டோன்

இந்தியாவெங்கும் வாங்கக் கிடைக்கிறது - இன்றே காண்க உங்கள் பயர்ஸ்டோன் விற்பனையாளரை.

FOCUS-W 28 (R).TM

நிலையில் உள்ளோம். தங்களுக்கு உள்ள நிலங்கள் பற்றிய விவரம் அடங்கிய ' சிட்டா ', அடங்கல் நகல்கள், தங்கள் நிலங்களில் வேறு எந்த வில்லங்கமும் இல்லையென்பதற்குரிய ' வில்லங்கச் சான்றிதழ் ', சொத்து மதிப்புச் சான்றிதழ் இவைகளையெல்லாம் வாங்கிக், கடன் மனுவையும் தயாரித்து, அத்துடன் இணைத்து அனுப்பினால், அதில் எந்தவிதக் குறையும் இல்லாதிருந்து, சொத்து மதிப்பும் இருக்குமானால் 2 மாத காலத்திற்குள் கடன் கிடைக்கலாம். மேற்கூறிய சான்றிதழ்களெல்லாம் வாங்கக் கையில் கொஞ்சமும் பணமின்றி முடியாது. மேலும் விளக்கம் பெறத் தங்கள் பகுதியில் உள்ள நிலவள வங்கியின் தலைவரையோ செயலாளரையோ தயவுசெய்து அணுகுங்கள்.

'மசூரி' என்ற ஒரு புதிய நெல் வந்திருப்பதாகவும், அது தஞ்சை மாவட்டத்தில் தாளடிப்பட்டத்தில் நல்ல மகசூல் கொடுக்கும் என்றும் வானொலியின் மூலம் அறிந்தேன் அதன் விவரங்களைக் கூறவும்.

—முத்துவேல், கூறை நாடு.

தாளடிப்பட்டத்தில், தஞ்சை மாவட்டமெங்கும் செம்டம்பர் மாதம் 15-ஆம் தேதி (ஆவணி 30) வாக்கில் நாற்றுவிட்டு அக்டோபர் 15-ஆம் தேதி வாக்கில் நடுவதற்கு ' மசூரி ' மிகவும் ஏற்ற ரகமாகும்.

மசூரி நம்நாட்டில் கரு ஒட்டுச் சேர்க்கப்பட்டு மலேசியாவில் பயிரிடப்பட்டு வருகிறது. இது ' ஜப்பானிகா இண்டிகா ' ரகத்தையும் ' ஜமெய்க்கா ' ரகத்தையும் கரு இணைப்புச் செய்ததின் மூலம் உருவாக்கப்பட்ட ரகமாகும்.

மசூரியின் வயது 140 நாட்கள். இது தாளடிப்பட்டத்தில் மற்ற ரகங்களைவிட ஏக்கருக்கு 8 மூட்டை நெல் அதிகமாகக் கொடுக்கக் கூடியது. இதன் அரிசி வெண்மையாகவும், நல்ல உயர்தரமானதாகவும் இருக்கும்.

சுமாரான அளவு உயரம்; நீர்தங்கும் பகுதியிலும் வளரும் தன்மை ; அதிக மகசூல் ; தரமான அரிசி ; அதிக வருவாய் ; இவை அனைத்தும் மசூரியின் சிறப்புக்குணங்களாகும்.

மசூரிக்கு அடியுரமாக 35 கிலோ டை—அமோனியம் பாஸ்பேட், 20 கிலோ யூரியா, 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாசு ஆகியவைகளை இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. விதைத்த 80—85 நாட்களில் 35 கிலோ யூரியாவை மேலுரமாகவும் இடவேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் விவரம் அறிய உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரை நாடுங்கள்.

எச்.பி. 3 கம்புவிதை வேளாண்மைக் கிடங்கில் கிடைக்காதபோது எங்கிருந்து வாங்குவது?

—ராமசுப்பு, சிவகங்கை.

உயர்விளைச்சல் ரகத் திட்டத்தின்கீழ் வீரிய ஒட்டுக் கம்பு ரகவிதைகளைத் தேவையான அளவுக்கு வேளாண்மைக் கிடங்குகளில் இருப்புவைத்திருக்க ஆவன செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு வேளாண்மைக் கிடங்குகளில் விதை கிடைக்காவிட்டால், " தேசீய விதைக் கார்ப்பரேசன், கோயம்புத்தூர் " அல்லது " கோயம்புத்தூர் விதைக் கார்ப்பரேஷன், கோயம்புத்தூர்-10 " அல்லது " சக்தி சுகர்ஸ், ராம் நகர், கோவை-9 " என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 2433, 4623 தந்தி: "சொஸைட்டி"

அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் S. 532

அம்மாப்பேட்டை சேலம்-3

[1938-ல் ஆரம்பிக்கப்பட்டது]

உங்கள் விசேட காலத் தேவைக்கும் மற்றும் திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகளுக்கும் எங்கள் சங்கத்தில் 20-ம் நெ. முதல் 120-ம் நெ. நூலைக் கொண்டு உற்பத்தியாகும் புதிய ரக சேலை, வேட்டி, ரவிக்கைத் துண்டுகள் மற்றும் கைக்குட்டைகள் போன்றவற்றை வாங்கிப் பயன் பெற வேண்டுகிறேன்.

ஏ மாரியப்பன்,
தலைவர்.

சங்கம் பற்றிய புள்ளி விவரங்கள்

மொத்த அங்கத்தினர்கள்	2,382
மொத்தத் தறிகள்	2,358
ஒதுக்கப்பட்ட மூலதனம்	ரூ. 10·00 இலட்சம்
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 6·15 இலட்சம்
ஆண்டொன்றுக்கு உற்பத்தியாகும் துணியின் மதிப்பு	ரூ. 65·49 இலட்சம்
ஆண்டொன்றுக்கு விற்பனையாகும் துணியின் மதிப்பு	ரூ. 71·07 இலட்சம்
1969-70 ல் நிகர லாபம்	ரூ. 2·90 இலட்சம்

சென்னை விற்பனை நிலையம் : 9, உஸ்மான் ரோடு, தியாகராய நகர், சென்னை-17.

தொலைபேசி: 441723.

கெட்டி நெசவு ! கெட்டிச்சாயம் !

அகலம் நீளத்திற்கு உத்திரவாதம்

ஆடவர், பெண்டிர், மாணவ மாணவியர் யாவருக்கும் ஏற்ற உயர்தர ஆடைகள்

குறைந்த விலை நீடித்த உழைப்பு

20, 40, 60, நெ. நூல்களில் பல வேஷ்டிகளும், துண்டுகளும், கைக்குட்டைகளும், வெண்ணிற வண்ண பீசுகளும், ஷர்ட்டிங்குகளும், சேலைகளும், நர்சுகள், மாணவியர்க்கேற்ற வெண்ணிறப்புடவைகள் 2/40 & 2/60 டைமண்ட் வேஷ்டிகளும் ஷர்ட்டிங்கு பீசுகளும் தயார் செய்யப்படுகின்றன. மாணவ மாணவியர்க்கேற்ற யூனிபாரம் துணிகளும் கிடைக்கும். அரசாங்க கழிவுத் தொகையுடன் சில்லறையிலும் மொத்தத்திலும் விற்பனை உண்டு.

குறிப்பு.—கழக அரசின் சாதனையால் நவீன நெசவுப் பயிற்சிசாலை துவக்கப்பட்டு, சிறப்புடன் நடைபெற்றுவருகிறது என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

எங்கள் சரக்குகள்

"கோ—ஆப்டெக்ஸ்"

விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

கீழ்க் கொடுங்காலூர்
கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
லிமிடெட், நெ. C. 1374
(வந்தவாசி வட்டம், வ. ஆ. மா.)

எஸ். சி. பெருமாள்
உதவித் தலைவர்

R. 56. இராஜபாளையம் கூட்டுறவு பால்
விநியோக சங்கம் லிமிடெட்,
இராஜபாளையம்.

தொடக்கம் : 2-1-1946. தொலைபேசி எண் : 206

தலைவர் : திரு A.K.D. பலராம ராஜா
உப தலைவர் : திரு C. வீரபத்ரன்

அங்கத்தினர்கள்: 2931. பங்குத் தொகை ரூ.40788

நடப்பு முதலீடுகள் : ரூ. 77,170
இதர முதலீடுகள் : ரூ. 62,500
பால் உற்பத்தி நிலையங்கள் : 24.
பால் விற்பனை நிலையம் : 1.

சங்கம் சுமார் ரூபாய் 80,000 மதிப்புள்ள தனது சொந்தக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. தினமும் சுமார் 3,500 லிட்டர் பால் உற்பத்தியாகிறது. பொதுமக்களின் உபயோகத்துக்கு விநியோகம் செய்த பின்னர் மீந்தும் பாலை மதுரை பால் திட்டத்திற்கு அனுப்பப்படுகிறது.

A. செல்லையா,
கூட்டுறவு உப-பதிவாளர்—காரியதரிசி.

Telegram : 'KOTHARI' Telephone : 24 & 44 Lalgudi
Telex : 258 TR

With the best compliments of

KOTHARI
SUGARS AND CHEMICALS LIMITED

Kattur Railway Station, Lalgudi P.O.
TIRUCHIRAPALLI DISTRICT, TAMIL NADU

Manufacturers of WHITE CRYSTAL SUGAR

Head Office :
'KOTHARI BUILDINGS'

20, Nungambakkam High Road,
Madras-34

Telegram : 'KOTHARI' Telephone : 82036 (8 lines)
Telex : 325 MS Trunk : 811421 (3 lines)



வேறு என்ன வேண்டும்?

"ஆரம்பிக்கலாமா ?" என்று குடிசை மாற்றும் வாரியத் தலைவர் திரு. இராம. அரங்கண்ணல், எம். எல். ஏ. அவர்கள் அன்புடன் பத்திரிகை நிருபர்களைப் பார்த்துக் கேட்டார்.

"சீக்கிரம், சிக்கனம்." என்று எழுதி உங்கள் மேசை மேல் வைத்துள்ளீர்கள். அதனால் சீக்கிரமே ஆரம்பித்து விடலாம்" என்று சிரித்துக் கொண்டே கூறினார் ஒரு நிருபர்.

"எந்தக் காரியத்தையும் சீக்கிர மாகவும், சிக்கனமாகவும் செய்து முடிக்கவேண்டும் என்பது தான் என் கொள்கை. ஆனால் பத்திரிகை நிருபர்களிடையே அந்தக் கொள்கையை நான் வற்புறுத்த விரும்பவில்லை. பத்திரிகை நிருபர்கள் சீக்கிரத்தை மட்டும் கருத்தில் கொண்டு செயல் பட வேண்டுமே ஒழிய, சிக்கனத்தை விட்டு விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால் நீங்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தால், உங்கள் பத்திரிகைகளில் செய்தி குறைவாகவே வரும். எனவே நீங்களெல்லாம் சிக்கனமாக இருந்துவிடாமல், தாராளமாக இருந்து உங்கள் பத்திரிகையில் நிறைய இடம் ஒதுக்கி முழுவிவரத்தையும் வெளியிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். குடிசைகளை எல்லாம் மாற்றி மாடி வீடுகளாகக் கட்டிக் கொடுப்பதை ஒரு மனிதாபிமான பிரச்சினையாகவே கருதி, குடிசை மாற்று வாரியம் செயல்பட்டுவருவதால், இம்மாபெரும் பணியில் பத்திரிகைகள் அனைத்தும் நன்கு ஒத்துழைக்க வேண்டும்" என்று அன்பு வேண்டுகோள் விடுத்தார்.

இவ்வாறு பேட்டியை ஆரம்பித்த திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் தொடர்ந்து கூறியதாவது—

ஏழை-நடுத்தர மக்களுக்கும் மலிவான வாடகை வீடுகள்

"அரசாங்கத்தில் பணிபுரியாமலும் ஆனால் தனியாரிடமோ அல்லது தாங்களோ சிறுசிறு அளவில் தொழில் செய்தவண்ணம், குடியிருக்க வீடுகிடைக்காமல் அவதிப்படுவோருக்கும் உதவுவது என்று குடிசை மாற்றுவாரியம் முடிவு செய்துள்ளது. முக்கியமான இடங்களில், மாதம் ரூபாய் 400க்குக் கீழ் ஊதியம் பெறுகின்ற இப்படிப்பட்ட கீழ்த்தர-நடுத்தர வர்க்கத்தினருக்கு நியாயமான மாத வாடகையில் (சுமார் ரூபாய் 40 அல்லது 50), பல அடுக்கு மாடிக் குடியிருப்புகள் எல்லா வசதிகளோடும் கட்டித்தரலாம் என்று குடிசை மாற்றும் வாரியம் யோசித்து வருகிறது."

சிறுகடைக்காரர்களுக்கு நியாய வாடகையில் கடை

"இதேபோல், சிறு காய்கறிக் கடைக்காரர்கள், சில்லறை வியாபாரிகள், துணி தைப்பவர்கள், சலவை நிலையங்கள், சிகையலங்கரிக்கும் கூடங்களில் பணி புரிபவர்கள், ஆகியோர்களுக்கு நியாயமான வாடகையில் வியாபாரக் கடைகள் கட்டிக் கொடுக்கவும் யோசித்து வருகிறோம்."

அடுத்து திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் குடிசைவாழ் மக்கள் வீடுகளைச் சொந்தமாக்கிக் கொள்ளுதற்குரிய திட்டம் ஒன்றைத் தெரிவித்தார். அதன் விவரம் வருமாறு—

சொந்த வீடு

"சென்னையில் குடிசை வாழ் மக்களுக்காகவும் மாதம் 300 அல்லது அதற்குக் குறைவாகச் சம்பாதிப்பவர்களுக்காகவும், கட்டிக்கொடுக்கப்படும் வீடுகளை

அவர்கள் விரும்பினால், ரொக்கத்திற்கோ அல்லது தவணை முறையிலோ அவர்களுக்கே விற்றுவிடக் குடிசை மாற்றும் வாரியம் முடிவு செய்துள்ளது.

"விலைக்கு வாங்கிக் கொள்ள விரும்பினால் ரூபாய் 5,500 முதல் ரூபாய் 6,000 வரை அடங்கும். ஒரே நேரத்தில் முழுத் தொகையையும் செலுத்தி வீட்டைவாங்க முடியவில்லை என்றால், 20 ஆண்டுத் தவணை அடிப்படையில் அவர்களுக்கு விற்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 'மே' நாள் முடிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திரா நகர், டி.பி. சத்திரம், வியாசர்பாடி ஆகிய பகுதிகளில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்படும். சொந்தமாக வீடுகளை வாங்கிக் கொண்டவர்கள் கூடுதல் வசதி செய்து கொடுக்கும்படிக்கோரினால், வீட்டுச் சொந்தக்காரர்கள் செலவில் கூடுதல் வசதிகளைச் செய்து கொடுக்கவும் குடிசை மாற்றும் வாரியம் தயாராக உள்ளது."

அடுத்தாற்போல், சென்னை நகரில் உள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட திறந்த வெளி பிளாட்டுகளை (Open developed Plots) விற்பனை செய்வது பற்றி அவர் குறிப்பிட்டார்.

"சென்னை நகரின் பல இடங்களில் உள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட திறந்த வெளி பிளாட்டுகள் ஒருவருக்கு காலே அரைக் கால் மனை வீதமும், அந்த வீட்டு மனைக்கு மாத வாடகை ரூபாய் 3 வீதமும் முன்பே பலருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அந்தவீட்டு மனைகளை ஒதுக்கப்பட்டுள்ளவர்களுக்கே மார்க்கட்விலையில் விற்றுவிட வாரியம் முடிவு செய்துள்ளது. அந்த வீட்டு மனைகளில் அவர்கள் வீடு கட்ட விரும்பினால் அவர்களுக்காகக் குடிசை மாற்று வாரியமே வீடு கட்டிக் கொடுத்துவிட்டு, அதற்குரிய தொகையைப் பெற்றுக்கொள்ளும். அவர்களிடம் பணம் இல்லாவிட்டால், வீட்டிற்குரிய தொகையை 20 ஆண்டு கால சுலபத் தவணையில் வசூலித்துக் கொள்ளவும் குடிசை மாற்று வாரியம் முன்வந்துள்ளது.

"இவ்வாறு கட்டிக் கொடுக்கும் வீடுகளை வாரியத்தின் அனுமதியின்றி விற்க முடியாது.

"அரசுக்குச் சொந்தமான திறந்த வெளி மனைக்கட்டுகளை அரசுக்குத் தெரியாமல் சிலர் வாங்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வாரியம் ரூபாய் 250 அபராதம் விதிக்கும். அத்துடன் அந்த மனைக்கட்டுகளை விலைக்கு வாங்க முன்வதால், தற்போதைய மார்க்கட் விலைக்கே விற்றுவிட வாரியம் தயாராக இருக்கிறது.

"அபிவிருத்தி செய்யப்பட்ட திறந்த வெளி பிளாட்டுகளில் சிலர் குடிசை மாற்றும் வாரியத்தின் அனுமதியின்றியோ அல்லது மாநகராட்சி மன்றம் அனுமதித்துள்ள வரை படத்திற்கு (Plan) மாறாகவோ கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள். குடிசை மாற்றும் வாரியத்தின் கண்காணிப்பு அலுவலர்கள் இவைகளைக் கண்டுபிடித்து அக்கட்டடங்களின் விலையை மதிப்பிட்டு வருகிறார்கள். அந்தக் கட்டடங்களின் சொந்தக்காரர்கள், கட்டட மதிப்பில் 10 சத தொகையை அபராதமாகக் கட்டிவிட்டால், அந்த இடமும் கட்டடமும் (கட்டடம் விதிமுறைப்படி கட்டப்பட்டிருந்தால்தான்) அவர்களுக்கே விற்பனை செய்யப்படும்.

"வாரியத்திற்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு அந்த நிலங்களில் பெரிய கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருந்தால், அவர்களுக்குக் குடிசை மாற்றும் வாரியம் எந்தச் சலுகையும் காட்டாது. கட்டடத்தை வாரியமே எடுத்துக் கொண்டு விடும். குடிசை மாற்றும் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் கடைகள் மற்றும் வியாபாரக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளதாக ஒன்றிரண்டு புகார்களும் வந்துள்ளன. அக்கட்டடங்களை வாரியமே எடுத்துக் கொள்ளும்" என்று குடிசை மாற்றும் வாரியத் தலைவர் குறிப்பிட்டார்.

அடுத்துச் சென்னையில் புதிதாகக் குடிசைகள் போட்டால் அவைகளைப் பிரித்து அகற்றப்படும் என்று திரு. அரங்கண்ணல் எச்சரித்தார். அதுபற்றி அவர் கூறியதாவது—

புதிதாகக் குடிசை போடாதீர்கள்!

"புதிது புதிதாகக் குடிசைகள் போடுவதைச் சட்டம்தடுக்கிறது. எனவே, யாரும் குடிசைகள் போடும் முயற்சியில்ஈடுபடவேண்டாம் என வேண்டுகிறேன். அப்படிப்பட்டவர்கள் யாரேனும் தனிப்பட்ட முறையிலோ, பலதால், தகவல் கிடைத்த உடனேயே அவை பிரித்து எறியப்படும்.

"இதற்காக போலீஸ் படை ஒன்று வாரியத்தின் உதவிக்குத் தயாராக இருக்கும் என்று தமிழ் நாடு அரசு அறிவித்துள்ளது. இதில் எந்த விதமான சலுகையோ, 'ஸ்டே'களோ நிச்சயமாக வழங்கப்படமாட்டாது.

"ஆனால், பல்லாண்டுகளாக வாழும் பழைய குடிசை வாசிகள் பயமின்றி இருக்கலாம். தனிப்பட்டவர்கள் கோர்ட் உத்தரவைக் காட்டிப் பிரித்துவிடுவார்கள் என்று அஞ்சவேண்டியதில்லை. சட்டப்படி, இவர்களுக்குத் தக்க பாதுகாப்புக் கிடைத்திருப்பது தமிழக அரசின் பெரிய சாதனையாகும்.

"பழைய குடிசை வாசிகளுக்கு வாரியத்தின் உதவியும், மாற்றிடமும் காட்டப்பட்டாலொழிய எவராவது பிரித்துவிடுவார்களோ என்ற அச்சம் தேவையில்லை. தனியாரும் வாரியத்தின் உதவியை நாடினால், அவர்களுக்குக் குடிசை வாழ் பகுதிகளைப் புனரமைப்புச் செய்வது போலவே எல்லா உதவிகளையும் அளிக்கும்".

இவ்வாறு அவர் கூறி முடித்த உடனே ஒரு நிருபர், 'தனியார் இடத்தில் முன்பே குடிசை போட்டு வாழ்பவர்களை உடனடியாகக் காலி செய்ய முடியாதா?'' என்றார்.

"சட்டப்படி முடியாது" என்று கூறிய திரு. அரங்கண்ணல் அவர்கள் ஒரு நிகழ்ச்சியையும் சான்றாகக் கூறினார். "சேத்துப்பட்டுப் பகுதியில் ரயில்வே லைனுக்குப் பக்கத்தில் குடிசை போட்டு வாழ்ந்தவர்களைக் காலிசெய்யும்படி ரயில்வே நிர்வாகத்தினர் எழுதினர். அதில் குடிசை மாற்று வாரியம் தலையிட்டு, அவர்களுக்கெல்லாம் அண்ணா நகரில் மாற்று இடம் கொடுக்க ஆவன செய்ததுடன் மாறிச் செல்வதற்காக ஒவ்வொரு குடிசைக்கும் ரூபாய் 50 வீதம் கொடுக்கவும் ஏற்பாடுசெய்தது. இவ்வாறு செய்த பின்புதான் ரயில்வே லைனுக்கு அருகில் உள்ள குடிசைகளை அகற்ற முடிந்தது" என்று விளக்கினார்.

"குடிசைகளை மாற்றி மாடிவீடு கட்டிக் கொடுக்கும்போது, ஆள் மாறாட்டம் செய்வார்களே

செய்கிறீர்கள்?" என்றார் மற்றொரு நிருபர்.

"குடிசைப் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தையும்படம் எடுத்துக்கொள்கிறோம். இப்படிச் செய்வதால், பின்னால் அவர்களுக்கென்று வீடு கட்டித்தரும் போது ஆள்மாறாட்டம் செய்வது தவிர்க்கப்படும்.

"இது ஒரு புதுமுறை, எல்லோரும் போற்றுகிற முறை. எத்தனை குடும்பங்கள் சொந்தமாகவும், வாடகைக்கும் வாழ்கின்றன என்ற புள்ளிவிவரத்தை அறியவும் இது பயனுள்ளதாக இருக்கும்.

"சிலர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி—பொய் சொல்லலாம், புகைப்படம் எடுத்துவிட்டால் வீடு கிடைக்கும்' என்ற நப்பாசையால் யார் யாரையோ கொண்டு வந்து புகைப்படம் எடுத்துக் கொள்கின்றனர். வாரியம் இதனால் ஏமாந்து விடாது. 1962, 1967, 1971 பொதுத் தேர்தல்கள், கார்ப்பரேஷன் பட்டியல்களிலும், முன்பே வீட்டு வாரியம் எடுத்துள்ள பட்டியல்களிலும் அவர்களுடைய பெயர்கள் உள்ளனவா என்று பரிசோதிக்கப்படும். இதற்கு என்று ஒரு தாசில்தார் தலைமையில் 'பரிசீலனை இலாகா'

பங்கீட்டு அட்டை பெற்றிருக்கிறாரா, என்று அறிந்து கொள்ளப்படும். அப்படித் தயார் செய்த பட்டியல் ஒவ்வொரு குடிசைப் பகுதியாக அந்தந்தக் குடிசைப் பகுதியைச் சார்ந்த இடங்களில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படும். தவறு செய்கிறவர்கள் --தவறான முறையில் உரிமைபெற முயற்சிக்கிறவர்கள் பற்றி எவர் வாரியத்திற்கு புகார்செய்தாலும் அவைகளை ரகசியமாகக் கண்டறிய "துப்புத் துலக்கும் இலாகா" நிறுவப்பட்டுள்ளது. 'இந்த இலாகா இரகசியமாகத் தலைவருடைய நேரிடையான பார்வையில் இயங்குவதால், யாரும் ஏமாற்ற முடியாது. ஆனால், வீடில்லாத குடிசைவாசிகள் எல்லாருக்கும் வீடு கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதால் வாரியத்துடன் ஒத்துழைக்குமாறு எல்லாரையும் வேண்டுகிறோம். ஏமாற்ற எண்ணுவோர் பற்றிய பட்டியல் 'துப்புத் துலக்கும் பிரிவினரால்' தயாரிக்கப்படும். அவர்கள், வாரியத்தினிடமிருந்து சலுகைகள் பெற இயலாதவர்களாக ஆக்கப்பட்டுவிடுவார்கள்.

"இந்தப் புகைப்படம் எடுப்பது முக்கியம்—இதுவே பிறகு ஒவ்வொரு குடிசைவாசிகளுக்கும் உரிமைச் சீட்டாக விளங்கப்போவதால், எவரும் அஞ்சாமலோ,

புகைப்படம் எடுத்துக்கொள்வது நல்லது" என்று அவர் விளக்கினார்.

"இதுவரை எத்தனை குடிசைப் பகுதிகளில் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது? எப்பொழுது இவ்வேலை முடிவடையும்?" என்றார் ஒரு நிருபர்.

"இதுவரை 100-க்குமேற்பட்ட குடிசைப் பகுதிகளில் புகைப்படம் எடுக்கும் வேலையும், ஆய்வு செய்யும் வேலையும் முடிந்து விட்டது. இன்னும் ஏறத்தாழ 400 பகுதிகளில் இவ்வேலை நடைபெறவேண்டியுள்ளது. இதற்குக் குறைந்தது ஆறுமாத காலமாகக் கூடும்" என்றார்.

"தற்பொழுது எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன?" என்று கேட்டார் இன்னொரு நிருபர்.

"10,000 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன" என்றார் தலைவர்.

பேட்டி தொடர்ந்தது. ஒவ்வொருவராகக் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டனர். தலைவர் மிகவும் பொறுமையாகப் பதிலளித்தார். அவைகள் இதோ·

"சென்னையில் எவ்வளவு பேர் குடிசைகளில் வசிக்கிறார்கள்?"

"சென்னையில் 8 லட்சம் பேர் குடிசைகளில்வசிக்கிறார்கள். மைய அரசு அமைத்த மாத்தூர் கமிட்டி அறிக்கையில், சென்னை நகரமே வீட்டு வசதி செய்து தருவதில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.



சென்னையில் தற்பொழுது 1.3 இலட்சம் வீடுகளே உள்ளன. இன்னும் 4.2 இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும். மற்ற மாநகரங்களுடன் சென்னையின் வீட்டுவசதிகளை ஒப்பிட்டால், நாம் செய்ய வேண்டிய பணி—கட்டவேண்டிய கட்டடம்—மிகவும் அதிகம் என்பது விளங்கும்.''

''குடிசைப் பிரச்சினையைத் தீர்க்க எவ்வளவு நிதி வேண்டும் என்று நினைக்கின்றீர்கள்.?"

''சென்னை நகரில் குடிசைகள் பிரச்சினையைத்தீர்க்க் ரூபாய் 80 கோடி தேவைப்படும். ஆனால் தற்பொழுது ரூபாய் 40 கோடியே ஒதுக்கப்பட்டுள்ளது."

''பாதியளவு நிதிதானே ஒதுக்கப்பட்டுள்ளது? அப்படி இருக்கையில் புதிய திட்டங்களை ஏன் தொடங்குகிறீர்கள்?''

''தற்பொழுது குடிசை வாழ் மக்களுக்கு மாதம் 10 ரூபாய் வாடகைக்கே வீடு கொடுக்கப்படுகிறது. இந்த வகையில் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு வீட்டிற்கும்

ஏறத்தாழ ரூபாய் 27·50 நட்டமேற்படுகிறது. அந்த வீடுகளை அவர்களுக்கே விற்றுச் சொந்தமாக்கிவிட்டால், கிடைக்கும் நிதியைக் கொண்டு மேலும் மேலும் புதிய பகுதிகளில் வீடுகளைக் கட்ட இயலும். எனவேதான் புதிய திட்டங்களைச் செயல்படுத்த வாரியம் முன்வந்துள்ளது."

''இந்திய அரசு ஏதேனும் நிதி ஒதுக்க இசைந்துள்ளதா?''

''இந்திய அரசின் வீட்டுவசதி அமைச்சர் மாண்புமிகு திரு. குஜ்ரால் அவர்களிடம், நமது மாண்புமிகு அமைச்சர் திரு. ராசாராம் அவர்களும், நானும் இதுபற்றி விளக்கிச் சொன்னோம். நமது மாபெரும் திட்டங்களை அவர் மிகவும் பாராட்டியதுடன், நிதி ஒதுக்கீடு செய்ய ஆவன செய்வதாகக் கூறினார். நாங்கள் மைய அரசிலிருந்து நிதி கிடைக்கும் என்று நம்புகிறோம்'' என்றார்.

'வீடு உண்டு! வேறு என்ன வேண்டும்?' என்று கேட்கும் பொன்னாள் விரைந்து வரப் போகிறது.

நவம்பர் மாதத்தில் தீபாவளி; சனவரி மாதத்தில் பொங்கல் ; ஏப்ரல் மாதத்தில் சித்திரை வருடப்பிறப்பு; இப்படி மாதத்திற்கொரு பண்டிகை தமிழ் நாட்டில் கொண்டாடப்பட்டு வருகிறது; மார்ச் மாதத்தில் கைத்தறிக்கு விழா அனைத்திந்தியாவிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால், இந்த ஆண்டு மார்ச் திங்களில் கைத்தறி விழா நடைபெறவில்லை. இடைத்தேர்தலின் வருகையினால், சிறிது இடைவெளி ஏற்பட்டு மே திங்களில் கொண்டாடப்படுகிறது.

சென்னையில், கைத்தறிக் கண்காட்சி, வழக்கம் போல் சிறப்பாகத் துவங்கியது. தமிழகத் தொழில் அமைச்சர் திரு மாதவன் அவர்கள் தலைமையில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள்.

கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே

என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலே கூறியுள்ளார். அதனைச் சற்று மாற்றி,

கைத்தறிக் கண்காட்சி காணாத கண் என்ன கண்ணோ!
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே!

என்று கூறலாம் போலத் தோன்றுகிறது. அத்தனை சிறப்பாக அமைந்திருக்கிறது கண்காட்சி.

கூட்டுறவை விளக்கிக் காட்டும் ஏழுவண்ணக் கொடிகள் கண்காட்சியில் உள்ள பல கடைகளில் கம்பீரமாகப் பறந்து கொண்டிருக்கின்றன.

ஆடவர், பெண்டிர், இளையவர், முதலியவர், இப்படி, சென்னை நகரத்துச் சனத்தொகையில், பாதிப்பேராவது நாள் தோறும் வருகை புரிகிறார்கள். கைத்தறிப் பொருள்களை வாங்கிச் செல்கிறார்கள்.

கண்காட்சிக்கு வருபவர்கள், கண்ணால் பார்ப்பதோடு நிறுத்திக் கொள்வார்களா ? வாய்மொழியையும் உதிர்க்கத்தானே செய்வார்கள் ? அவர்கள் என்னென்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்க வேண்டும் போல இருந்தது. ஒருசிலரைப் பின் தொடர்ந்தோம். அவர்களின் உரையாடலை, 'அசைபோட்டு' இங்கே கொடுக்கிறோம்.

* * *

கண்டதும்... கேட்டதும்...!

''இந்த பெட்சீட் என்ன விலைங்க ?''

''பன்னிரண்டரை ரூபாய்!'

''கமிஷன் நீக்கின எவ்வளவு ஆகுங்க ?''

''ஒரு ரூபாய் இருபது பைசாக் குறையும் !''

''பரவாயில்லியே! ரெண்டு பெட்சீட் கொடுங்க !''

—உடனே கடைக்காரர் வேக வேகமாக பில் போடுகிறார். வந்திருப்பவர் ஜிப்பாப் பைக்குள் கைவிட்டுப் பணத்தை எடுத்துக் கொடுக்கிறார். மறுவினாடி பெட்சீட்டுகள் அவரது கைக்கு மாறுகின்றன. மகிழ்ச்சியுடன் புறப்படுகிறார்; அப்போது அவரது நண்பர், ''இந்த பெட்சீட்டைப் பார்த்தீங்களா'' என்று வியப்புடன் சுட்டிக் காட்டுகிறார். நண்பர் சுட்டிக்காட்டிய பெட்சீட்டைப் பார்த்த ஜிப்பாக்காரரும் வியப்படைகிறார். ஆம்! அவர் மட்டுமல்ல, ஏறக்குறைய அங்கே வந்திருப்போர் அனைவரும் கண்டு வியப்படைகின்றனர். பெட்சீட் கடையில் வியப்புத் தருவதற்குரிய வகையில், என்ன இருக்கிறது என்றுதானே கேட்கிறீர்கள் ! ' குடும்பக் கட்டுப்பாடு ' டிசைன் போடப்பட்ட பெட்சீட் அந்தக் கடையில் இருப்பதுதான் அனைவருக்கும் வியப்பை ஏற்படுத்துகிறது.

சென் கோப்டெக்ஸ் நிறுவனத்தார்தான் இந்த பெட்சீட்டைத் தயாரித்தவர்கள். கோவை மாவட்டத்தில்ஆண்டுதோறும் முதல் பரிசைத் தட்டிச் செல்லும் இந்த நிறுவனத்தார், இந்த ஆண்டு தான் குடும்பக் கட்டுப்பாடு டிசைன் உள்ள படுக்கை விரிப்பைத் தயாரித்திருக்கிறார்கள்.

''ஆமா ! இந்த டிசைன் உள்ள பெட்சீட் இதுவரை எத்தனை வித்திருக்கும்?" 'ஜிப்பாக்'காரர் கேட்கிறார்.

"ஒரு வாரத்திற்குள் 500-க்கு மேலே வித்திருக்கும்''-கடைக்காரர் பதில் சொல்கிறார்.

வந்தவர் வியப்படைகிறார்; அவரது விழியும் இமையும் மேலே சென்று திரும்புகின்றன.

''புது கல்யாண ஜோடிகளுக்கு இதைப்பரிசாக் கொடுக்கலாமே" — ஜிப்பாக்காரரின் நண்பர் வேடிக்கையாகக் குறிப்பிடுகிறார்.

''சரியான யோசனை ! அடுத்த வாரம் எங்க ஊரிலே எங்க சொந்தக்காரங்க வீட்டுக்

கல்யாணம் ஒண்ணு இருக்கு '' அவங்களுக்கு இதையே வாங்கிக் கொடுத்துடுவோம் '' — என்று சொல்லிவிட்டுக் கடைக்காரரைப் பார்த்துக் ''குடும்பக்கட்டுப்பாடு பெட்சீட் என்ன விலை? '' என்று கேட்கிறார்.

''இருபத்தோரு ரூபாய்ங்க'' —கடைக்காரர்.

'' விலைஅதிகமா இருக்குதே'' —ஜிப்பாக்காரர்.

'' முதல்லே வாங்கினது 'சிங்கள்' பெட்சீட்டுங்க, இது 'டபுள்ஸ்'' பெட்சீட்டுங்க''— கடைக்காரர் சொல்கிறார்.

வெளியூர்க்காரர் சிரித்துக் கொள்கிறார் ; ''இருவருக்காகத் தானே வாங்கப் போகிறோம்'' என்ற எண்ணம்தான் அவரது சிரிப்புக்குக் காரணம்.

பணத்தைக் கொடுத்துவிட்டுப் புறப்படுகிறார் ; மூன்று படுக்கை விரிப்புகளையும் சுமக்க அவரால் முடியவில்லை. தவியாய்த் தவிக்கிறார்; அவரது நிலையை உணர்ந்த நண்பர், தனது கையிலே ஒரு சுமையை ஏற்றுக் கொண்டு, பளுவைக் குறைக்கிறார்.

இந்தச் சமயத்தில் அவரை மோதியபடி இரண்டு நவநாகரிக வாலிபர்கள் செல்கின்றனர்.

'' ஏண்டா சேகர் ! இந்த பெட்சீட் ரகங்களைப்பார்த்தியா''?

'' ஆமாடா அத்தனையும் நல்லா இருக்குதுடா !''

''கரெக்ட்டுடா ! எதை வாங்கிறதுன்னே தெரியலே ! எல்லாத்தையும் வாங்கிடலாம்னு தோணுதுடா !''

நவநாகரிக வாலிபர்களின் பேச்சு இதயத்தின் எதிரொலியாகவே பட்டது அந்த ஜிப்பாக்காரருக்கு.

• • •

'' ஏம்ப்பா ! தலையணை உறை இருக்குதா? ''—ஓர் அம்மையார் கேட்கிறார் ·

'' இருக்குதும்மா ! பாருங்க ! மூனரை ரூபாய் ''—

'' பரவாயில்லியே ! எங்கே இரண்டு மூன்று எடுத்துப்போடு''

கடைக்காரர் இரண்டு மூன்றல்ல பத்துப் பதினைந்து ரகத்தை எடுத்துப்போடுகிறார்.

எதை வாங்குவது என்பதில் அம்மையாருக்குக் குழப்பம் ஏற்பட்டுவிட்டது.

ஒவ்வொரு ரகமாகப் பார்வையிடுகிறார், ஒன்றைக் கையில்எடுத்து வைத்துக்கொண்டு கூர்ந்து நோக்குகிறார் ; சில விநாடிகளில் அதைக் கீழே வைத்துவிட்டு, வேறொன்றைக்கையிலே எடுத்துப் பார்க்கிறார்; அருகிலுள்ள தனது சகாக்களையும் பார்வையிடுகிறார். இறுதியில் குழப்பம் அதிகரித்து விடுகிறது.

'' ஏண்டி, ருக்கு ! நீ எதுக்காக என்னோட வந்தே ! எனக்குக் குழப்பமா இருக்கும்னு தானே

"சென்டெக்ஸ்" உங்கள் மனதைக் கவரும் புதிய ரக அலங்காரத் துணிகளை இப்பொழுது உங்களுக்கு அளிக்கிறது.



படுக்கை விரிப்புகள்
அலங்காரத்துணிகள்
தலையணை உறைகள்.
மற்றும் பல ரகங்கள்...

சென்டெக்ஸ்

உலகெங்கிலும் உள்ள
இல்லங்களை அழகுபடுத்துகிறது

சென்னிமலை நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி
& விற்பனை சங்கம் லிமிடெட்.,
சென்னிமலை, தென் இந்தியா.

உன்னைக் கூட்டிவந்தேன். நீ என்னடான்னு ஒன்னுமே பேச மாட்டேங்கிறியே'' —அன்பு கலந்த கோபத்துடன் பேசுகிறார் அம்மையார்.

'' ஒங்களுக்குத் தெரியாததா அத்தே!''-பணிவுடன் சொல்கிறார் அந்த இளம் பெண்.

''சரிசரி ஒன்னைச் சொல்லிக் குத்தமில்லே! நானே பார்த்துக்கிறேன் '' — சொல்லிவிட்டு அம்மையார் தனக்குப் பிடித்தமான 2 ரகங்களை எடுத்துக்கொள்கிறார்.

ராகங்களின் சுரங்கள் ஏழு என்பார்கள். ஏழு சுரங்களும் உருவாகி வடிவாகி வருவது போலக், கல்லூரி மாணவியர் ஏழு பேர் ஒன்றுசேர்ந்து ஒரு குழுவாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் பார்வை, பட்டுப் புடவைக் கடையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தனது கடையை நோக்கிக் கல்லூரி மாணவிகள் வருகிறார்கள் என்பதை அறிந்து, மன மகிழ்ச்சி கொண்டார் பட்டுப்புடவைக் கடைக்காரர். நைலான், நைலக்ஸ், டெர்லின் துணிகளை வாங்கி அணிகின்ற ' அன்னக் கொடிகள் ' பட்டுப் புடவையை வாங்க வருகிறார்களே என்றறிந்ததும், கடைக்காரர் மனமகிழ்ச்சி அடைந்ததில் வியப்பில்லை.

ஆனால், அந்த மனமகிழ்ச்சி நெடு நேரம் நீடிக்கவில்லை. வந்திருந்த பூவிருந்த வல்லிகளில் ஒருவரின் கண்பார்வை, பட்டுப் புடவைக்கடைக்கு எதிரில்இருந்த கடையில் நிலைத்துவிடுகிறது.

"அதோ பாரடி லவ்லி லுங்கீஸ்' —உணர்ச்சி ததும்ப ஒரு மாணவி சொன்னவுடன் மற்ற அறுவரின் கண்களும் லுங்கிகளின் பக்கம் வெடுக்கென்று திரும்புகின்றன. மறுவிநாடி, அவர்களது கால்கள் லுங்கிக் கடையை நோக்கி ஓடுகின்றன.

ஆரஞ்சுப் பழத்தில் ஊசி!

நீரிழிவு போன்ற சிலநோய்களால் பாதிக்கப்படுபவர்கள் தனக்குத் தானே ஊசி போடுவது அவசியமாகிறது.

எப்படித் தனக்குத் தானே போட்டுக் கொள்வது ? சிலருக்குத் தன் உடலில் ஊசி குத்தப் பயம் ஏற்படுவது இயற்கை. இவ்வாறு ஊசி போடுவதற்கு முன், முதலில் ஆரஞ்சுப்பழத்தில் ஊசி இறக்கிப் பழகிக் கொள்ள வேண்டும். இப்படிப் பழகினால் உடலில் வலிஇல்லாமல் ஊசி போடும் கலையை விரைவில் கற்றுக்கொள்ளலாம். மேலை நாடுகளில் இவ்வாறே பழக்கப்படுத்திக் கொள்ளுகின்றனர்.

'' ஹவ் மச் — — ?''

'' சாயம் நிற்குமா ?''

'' எனக்கு ஹாப் -எ-டஜன் கொடுங்க''

'' எனக்கு சிகப்பு கலர் ''

'' எனக்குப் பச்சைக் கலர் ''

எழுவரும் ஒருவரையொருவர் போட்டி போட்டுக் கொண்டு லுங்கிகளை வாங்குகிறார்கள்.

பட்டுப் புடவைக்கடைக்காரர் ஏக்கப் பார்வையுடன் பார்க்கிறார். ''புடவைக்கு வந்த வாய்ப்பை லுங்கி தட்டிப் பறித்துக் கொள்கிறதே'' என்று நினைக்கிறார். மறுகணம், தலையை அசைத்துக்கொண்டு ஏதோ முணுமுணுக்கிறார். ஏதோ ஒரு முடிவுக்கு வந்திருப்பதுபோல அவர் காணப்படுகிறார்.

ஒருவேளை, '' அடுத்த ஆண்டு பட்டு லுங்கி தயாரித்துவிடலாம்'' என்று எண்ணியிருப்பாரோ என்னவோ ?

• • •

''ஆறுகெஜம் பிளெய்ன் நூல் புடவை இருக்கிறதா '' ஓர் இளம் தம்பதியர், ஒரு கடையில் கேட்கிறார்கள்.

''இருக்குதுங்க''-சொல்லிவிட்டு, ஏழெட்டுப் புடவைகளை எடுத்துக் காண்பிக்கிறார் கடைக்காரர்.

புடவைகளைத் தொட்டுப் பார்த்துவிட்டு அந்த அம்மையார், ''புட்டா புடவை இருக்கிறதா '' என்கிறார்.

''இருக்குதுங்க '' — சொல்லிவிட்டு, புட்டா ரகப் புடவைகள் சிலவற்றை எடுத்துப் போடுகிறார் கடைக்காரர்.

''நல்லாத்தான் இருக்கு எடுத்துக்கோ!''—அவரது கணவர் சொல்கிறார்.

'' விலை எவ்வளவு?'' —மனைவி கேட்கிறார்.

'' இருபது ரூபாய் ! நூறும் நம்பர் !''—கடைக்காரர் சொல்கிறார்.

அம்மையார் ஐந்தாறு புடவைகளைப் பார்வையிடுகிறார். நெசவின் அழுத்தத்தைக் கூட ஆய்ந்து பார்க்கிறார். எதுவும் வாங்காமல்,

"வாருங்கள் போகலாம்"— கணவருக்கு உத்தரவு போடுகிறார்.

அந்த உத்தமர் உடனே புறப்பட்டு விடுகிறார். கடைக்காரருக்குச் சிரிப்பு வருகிறது.

"கண்காட்சின்னு போட்டதும் கண்ணாலே பார்த்துட்டுப் போகலாம்னு நெனைக்கிறாங்க போலிருக்கு!" — தனக்குத்தானே பேசிக்கொள்கிறார் கடைக்காரர்.

* *

கோ ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கடைக்குள்ளே ஏகக் கூட்டம்! புகை வண்டி நிலையத்திற்குள் வந்துவிட்டோமோ என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது. யார் உள்ளே போகிறார்கள், யார் வெளியே வருகிறார்கள் என்பதைக் கூட அறிந்து கொள்ள முடியவில்லை. இம்மியளவு கூட இடமில்லாமல் மக்கள் கூட்டம் அங்கே ததும்பி வழிகிறது.

"முற்றுகை யிடப்பட்ட கோட்டை மாதிரி இருக்கிறதே"- தமிழ் இலக்கியப் பயிற்சி உள்ள ஒருவர் குறிப்பிடுகிறார்.

மக்கள் முண்டியடித்துக் கொண்டு, கைத்தறி ஆடைகளை வாங்குகிறார்கள் என்பதை நினைக்கும் போது, நமது இதயம் பூரிப்படைகிறது. இதிலே மகிழ்ச்சிக்குரிய செய்தி ஒன்று உண்டு. பொது மக்களின் பணம் எல்லாம்-தனிப்பட்ட முதலாளிகளுக்கு அதிகம் போகாமல், பெரும்பாலும் கைத்தறித் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செல்வதை எண்ணும் போது நமக்கு மிகுந்த திருப்தி ஏற்படுகிறது. கூட்டுறவின் பெருமை நமக்குப் புரிகிறது. கூட்டுறவே நாட்டுயர்வு என்னும் தத்துவத்தின் மெய்மை தெளிவாகிறது.

'இவர்தான் திருவாளர் பொன் மொழியார்' என்று உங்களுக்கு அவசியம் அறிமுகம் செய்துதான் ஆகவேண்டும்.

அடுத்த இதழ் முதல் ஒவ்வொரு இதழிலும் நீங்கள் இவரைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிவிட்டீர்களே!

'இதென்ன அறுவைக் கேஸ்?' என்று அஞ்ச வேண்டாம்!

திருவாளர் பொன்மொழியார் பொல்லாத மனிதரும் அல்லர்; புனிதமானவரும் அல்லர்!

எதையும் வெள்ளை உள்ளத்துடனே நோக்கும் இவரை ஒரு சராசரி மனிதராகவே நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

சராசரி மனிதரைச் சந்திப்பதில் என்ன 'சுவை' இருக்கும் என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள்.

பூர்வீகத்தில் புண்ணிய கோடி என்ற பழம்பெயருக்குச் சொந்தக்காரரான இவரையும் இவர் மனைவி அருந்ததியையும் சந்தித்த பிறகு நீங்களே சொல்வீர்கள்!

வேறு விவரம் வேண்டுமா?

அடுத்த இதழில்தான் நீங்களே சந்திக்கப் போகிறீர்களே........!

கைத்தறி பற்றி அறிஞர் அண்ணா

நூல்—எப்போதும் சிக்கலுக்கு ஆளாவதுதான்! நூலுடன் தொடர்பு கொண்ட நெசவாளர் வாழ்க்கையும் சிக்கல் கொண்டதுதான். பக்குவமாக அந்தச் சிக்கலை நீக்குவதுதான் மிக முக்கியமான தேவையாகும். மற்ற ஆலைத் தொழிலுக்குக் கிடைக்காத வாய்ப்பும், வசதியும் விஞ்ஞானக் கருவிகளின் உதவியும் கிடைக்காத போதும்கூட—நேர்த்தியான—மெச்சத் தக்க துணிகளைக் கைத்தறியாளர்கள் தயாரித்து வருகிறார்கள்!

ஆலைத் துணியில்தான் கண்ணைக் கவரும் ஆடைகளைத் தயாரிக்க முடியும் என்று நம்பப்பட்டது. ஆனால் இப்போது கைத்தறியில் கண்ணைக் கவரும் ஆடைகள் வேகமாகத் தயாராகின்றன.

நெசவாளர்களது எதிர்காலத்தைக் கவனித்து—வேறு தொழிலில் அமர்த்த வேண்டும் என்பது கவனிக்கப்படத்தக்க பிரச்சினை என்றாலும்—

பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் நேர்த்தியான கைத் திறமையை—வெளிச் சந்தையிலிருந்து ஏராளமான பணத்தை ஈட்டித் தந்த கைத் திறமையை விட்டுவிட வேண்டும் என்பது வரவேற்கத் தக்க கருத்தல்ல.

மக்களின் தேவைகளை அறிந்து ஆடைத் தினுசுகளை அடிக்கடி மாற்ற வேண்டும் என்று சில பெரியவர்கள் கூறுகிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் ஆண்டுக்கொரு முறை கண்காட்சியில் மட்டும் ஆடைகளைக் காண்பவர்களாக இருப்பார்கள். ஏனென்றால், கைத்தறியாளர்கள் வாரத்திற்கு ஒரு முறை சேலைத் தினுசுகளை மாற்றி வருகிறார்கள்.

ஒரு சினிமா வெற்றிகரமாக ஓடிவிட்டால் போதும், அடுத்த வாரமே அந்தப் பெயரில் ஒரு அழகான சேலைத் தினுசு தயாரித்து விடுவார்கள் கைத்தறியாளர்கள்.

இத்தனைக்கும் அந்தச் சினிமாவை நான்கு முறை பார்க்கும் வசதி அந்த நெசவாளருக்கு இல்லை. ஒரே முறைதான் பார்க்கிறார். அந்தப் படத்தில் வரும் கதாநாயகி அணிந்திருக்கும் சேலையைப் போல்—தயாரிக்க நினைக்கிறார். அந்த நினைப்பு நம்பிக்கையாய் மாறி உள்ளத்திலிருந்து கிளம்பி விரல் நுனிக்கு வருகிறது. பிறகு தறியிலமர்ந்து அழகான சேலையைத் தயாரிக்கிறார்.

கோடிக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலால் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் வதை பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளி நாட்டின் சந்தை தேடிக் கொடுக்கும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்ததாகும்.

நெசவுத் தொழில் இதுநாள் நசித்துப் போகாமல் இருக்க—நெசவாளர் பாதி வயிறாவது சாப்பிட உதவுபவர்கள் நமது நாட்டுத் தாய்மார்கள்தான். ஆடவர்கள் எப்படிப் போனாலும் தாய்மார்கள்தான் மறவாமல் கைத்தறியாடைகளை வாங்குபவர்கள்! ஆகவே, கைத்தறியாளர்களைக் காப்பாற்றும் தாய்க் குலத்திற்கு எனது மரியாதை கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆடவர்களைப் போல் தாய்மார்களும் ஆமதாபாத்தையும், கட்டானையும் நம்பத் தொடங்கினார்கள் என்றால் நெசவாளர்கள் வண்ணாரப்பேட்டையில்—தண்டையார்ப் பேட்டையில்—வீதியோரங்களிலோ—குடிசைகளிலோ— குடியேற வேண்டிய வேதனையான நிலை ஏற்பட்டிருக்கும்.

அண்மையில் வந்த அறிவிப்புகள்
பரிசுச் சீட்டு பரிசுச் சீட்டு பரிசுச் சீட்டு ரூபாய் 75 லட்சம்.
பரிசுச் சீட்டு வருவாயிலிருந்து ரூ.75 லட்சம் மருத்துவ மனைகளுக்காகச் செலவிட அரசு திட்டமிட்டுள்ளது.
கலைஞர் கலைக் கல்லூரி
வாங்க! வாங்க!! உங்களுக்கு அதிக இடங்கள் தருகிறோம்.
கல்லூரிகள், அரசுப்பணிகள் ஆகியவற்றிற்கு முன்பு பிற்பட்டோருக்கு 25 சதவிகிதமும், தாழ்த்தப்பட்டோருக்கு 16 சதவிகிதமும் இடங்கள் ஒதுக்கப்பட்டன. இனி பிற்பட்டோருக்கு 31 சதவீதமாகவும், தாழ்த்தப்பட்டோருக்கு 18 ஆகவும் ஒதுக்கத் தமிழக அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
இனி சரிகை வாங்க சூரத் போகவேண்டாம், காஞ்சியிலே வாங்கலாம்
சரிகைத் தொழிற் கூடம்
காஞ்சிபுரத்தில் 25 லட்சம் ரூபாய் செலவில் சரிகைத் தொழிற்கூடம் அமைக்கப்படுகிறது.
கோபன்...


!?
ஒன்றரைக் கோடி போதாது! தாருங்கள் 6 கோடி ரூபாய்!
ரூ 1½ கோடி
கிராமப் புறத்தில் 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்க 6 கோடி ரூபாய்களாவது தேவை என்று தமிழக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறது என்று முதல்வர் அறிவித்தார்.
இதனை மாற்றி அமையுங்கள்!
முன்னாள் தலைமைச் செயலர் திரு. வர்கீஸ் தலைமையில் நிர்வாகச் சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
இதோ பணம்! உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்!
சிறு விவசாயிகள் ரசாயன உரம், பொறுக்கு விதைகள், விவசாயக் கருவிகள் வாங்கவும், கிணறுகள் வெட்டவும் பம்பு செட்கள் அமைக்கவும் கடன் தந்து உதவ தமிழ்நாடு அரசு ரூ.5½ கோடி ஒதுக்கியுள்ளது.

பார்த்தோம் படித்தோம்

கோவைக்கு இல்லையா?

மதுரைச் சிறப்பிதழ் மனத்தைக் கவர்ந்துவிட்டது. எங்கள் கோவைக்குச் 'சிறப்பிதழ்' தரமாட்டீர்களா?

— எஸ். ராமச்சந்திரன்,
கோவை-12.

இத்தனை புலவர்களா ?

மதுரைப் புலவர்கள் என்ற தலைப்பில் வெளிவந்துள்ள செய்தியைப் படித்தேன். அடேயப்பா! அந்தக் காலத்திலேயே அறுபத்து நான்கு பேர் இருந்திருக்கிறார்களே !

— எல். தணிகாசலம், தஞ்சை.

சிறப்புமிகு இரு பக்கங்கள்

இரா. நாகசாமி எழுதியுள்ள 'மதுரை வரலாற்றில் சில இதழ்கள்' படிக்கச் சுவையாக இருந்தது. இரண்டு பக்கங்களில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளை அடைத்துவிட்டாரே!

— எஸ். முரளி, மணப்பாறை.

கன்னித் தமிழ்ச் சுவை !

'கன்னித் தமிழ் மதுரை' என்னும் கவிதை சுவையாக இருந்தது. அதனை யாத்தவர்க்கு எம் பாராட்டு.

— புலவர் பொன்னப்பன்,
சாத்தூர்.

ஒரே ஒரு பக்கம்தானா ?

எண்ணூர் அனல் மின் நிலையம் பற்றிய செய்தியை ஒரே ஒரு பக்கத்தில் வெளியிட்டிருக்கிறீர்களே ! இன்னும் விளக்கமாக எழுதினால் குறைந்தா போய் விடுவீர்கள் ?

— கோதை, திருவில்லிப்புத்தூர்.

மகுடக் கட்டுரை!

தொழிலாளர் கல்வியைப் பற்றி, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தந்திருக்கும் கட்டுரை, உற்பத்தித்திறன் சிறப்புப் பகுதிக்கே மகுடம் போன்றது.

— எம். சதாசிவம், பெங்களூர்.

காட்டூரார்க்குப் பாராட்டு!

தொழிற்சங்கங்களின் பங்கு பற்றிக் காட்டூர் கோபால் தீட்டியுள்ள கட்டுரையைப் படித்தேன். இதுவரை நாங்கள் அறிந்துகொள்ளாத செய்திகளை எல்லாம் அறிந்துகொள்ளப் பயன்பட்டது அந்தக் கட்டுரை.

—பி. அன்பரசன், வேலூர்.

வாழ்க கார்ட்டூன்

ஆளுநரின் உரையைக் 'கார்ட்டூனு'க்கு வண்ணக் களஞ்சியமாகப் படைத்திருக்கிறீர்கள் ! கேலி செய்வதற்கு மட்டும் தான் கார்ட்டூன் என்ற கொள்கையுடைய பத்திரிகையாளர்களின் மத்தியில், ஆக்கத்தைத் தெரிவிப்பதற்கும் கார்ட்டூனைப் பயன்படுத்த முடியும் என்பதை மெய்ப்பித்து விட்டீர்கள் !

—கே. சேகர்,
சிந்தாதிரிப்பேட்டை.

கலைஞர் கலைஞர்தான்!

குடும்ப நலம் பற்றித் தமிழ் நாடு முதல்வர் கலைஞர் அவர்களின் வானொலிப் பேச்சைத் 'தமிழரசு' இதழில் படித்தேன். "இது நாள்தோறும் நினைவு படுத்திட வேண்டிய விவகாரம்" என்று முதல்வர், சுருக்கமாக—தெளிவாக—நகைச்சுவையாக எடுத்துக் காட்டியிருக்கிறார்; கலைஞர் கலைஞர் தான்!

— என், நமச்சிவாயம்,
சென்னை-1.

உதகை உள்ளம்

ஜெர்மனி மீண்டெழுந்த திருச்சரிதத்தைச் செங்கனித் தமிழ் நடையில் முதல்வர் தரும்போது, நமது உள்ளமெல்லாம் உதகையில் நனைந்தது போன்ற உவகையில் ஆழ்கிறது.

—கே. கதிரவன், செங்கை.

வெண்பாப் போட்டி-10

ஈற்றடி : ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு

முடிவு நாள் : 1—6—1971

பரிசு ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக





ரூ. 75 லட்சம்

ஐங்கள் நல் வாழ்வுக்காக!

தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு ஒதுக்கியுள்ளது.

இன்றே வாங்குவோம்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

மொத்தப்
பரிசுத்தொகை: ரூ. **7,00,000**

மொத்தப் பரிசுகள்: **1222**

குலுக்கல் நாள்: **25-5-1971**

தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டால் இதுவரை உருவாகிய லட்சாதிபதிகள் 243 பேர்.

தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு வருவாய் மூலம் நம் நல்வாழ்வுக்காக மருத்துவ வசதி அளிக்க அரசு ரூ. 75 லட்சம் இப்போது ஒதுக்கியுள்ளது.

நாம் அளிக்கும் ஒவ்வொரு ரூபாயும் நமக்கே திரும்பி வருகிறது.

வாங்கிடுவோம் பரிசுச்சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்.

செலவு ஒரு ரூபாய்

வரவோ லட்ச ரூபாய்

வெளியீடு:
இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:— இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு, சென்னை-2

* 2 வரிசை வெளியீட்டுக்கு உட்பட்டது.

747

நமது நிலை

தமிழக முதல்வர்
கலைஞர்

மு.கருணாநிதி

நமது நிலை

1971 பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பினை ஏற்றுத் தமிழகத்தில் புதிய அமைச்சரவை அமைந்த பின்பு, சட்டமன்றப் பேரவை, மேலவை இரண்டும் கூடின. சட்டமன்றக் கூட்டு அவையில் மாநில ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதும், பின்னர் 1971—72-க்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதும் இரு அவைகளிலும் விவாதம் நடைபெற்றது. மாநிலத்தின் பல்வேறு துறை இயல்களையும் நாட்டின் பிரச்சினைகளையும் ஊடுருவிப் பார்க்கும் முறையில் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கும் கிளப்பிய ஐயங்களுக்கும் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் துல்லியமான, விளக்கமான விடை அளித்தார்கள்.

நாட்டை இன்று எதிர்நோக்கியுள்ள ஒவ்வொரு பிரச்சினையிலும் மாநிலத்தின் நிலையை, அரசின் நிலையைக் கோடிட்டுக் காட்டி விளக்கம் தருவதாக இருக்கிறது முதல்வர் அவர்களின் உரை. அவருடைய பதில் 'நமது நிலை' என்ற தலைப்பில் இந்த வெளியீட்டில் தொகுத்துத் தரப்படுகின்றது. மாநிலத்தின் நிலையை, நமது பிரச்சினைகளை உணர்ந்துகொள்ள இந்த விளக்கம், மக்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

சென்னை
22—5—1971.

செய்தி-விளம்பரத் துறை,
தமிழ்நாடு அரசு.

நமது நிலை

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை-மேலவை உறுப்பினர்களடங்கிய கூட்டவையில் 24—3—1971 அன்று ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் நிகழ்த்திய பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குத் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,இரு அவைகளிலும் விடையளித்தார்கள். அவருடைய உரை வருமாறு:—

கவர்னர் பெருமானுடைய உரையின்மீது இந்த மாமன்றத்தில் உறுப்பினர் திரு. வேழவேந்தன் கொண்டுவந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தையொட்டி எல்லாக் கட்சிகளின் தலைவர்களும், கட்சிகளினுடைய உறுப்பினர்களும் கலந்து கொண்டு தங்களுடைய நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.

இறுதியாகப் பேசிய நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் உட்பட மொத்தம் 67 பேர் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு உரை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 183 பேர் இங்கே இருந்தாலும் கழகத்தின் சார்பிலே உரையாற்றியவர்கள் 33 பேர். எதிர்க்கட்சியிலே மொத்தம் 52 பேர் இருந்தாலும் 34 பேர் உரையாற்றுவதற்கான வாய்ப்பினை இங்கே பெற்றிருக்கிறார்கள்.

இது ஒன்றே ஆளுங்கட்சி, எதிர்த்தரப்பிலே உள்ளவர்களை நல்ல வகையிலே மதிக்கிறது என்பதற்குச் சரியான சான்றாகும்.

கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்ட, தேர்தலைப் பற்றி உறுப்பினர்கள் உரையாற்றும்போது காரசாரமாக விவாதம் நடைபெற்றது.

தீமையை எதிர்ப்பதில் ஒற்றுமை

ஆனால், ஒவ்வொருவரும் தங்களுடைய தொகுதியில் நடைபெற்ற அசம்பாவிதங்களை எடுத்துச் சொல்லிவிட்டு இனிமேல் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறியதில் இருந்தே, இந்த வன்முறை வெறியாட்டங்களைத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் யாரும் விரும்பவில்லை என்பது வெகு தெளிவாகத் தெரிகிறது.

முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திருப்பூர் மொய்தீன் அவர்கள் பேசும்போது, "நடந்தவைகளை மறந்துவிட்டு ஜனநாயகத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு நாட்டின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதற்கு நாம் அனைவரும் சேர்ந்து பாடுபடுவோம்" என்று அழகாகக் குறிப்பிட்டார்கள். அப்படிப் பாடுபட வேண்டும் என்று எண்ணுகிற நேரத்தில் நடந்து முடிந்த தேர்தல் ஏதோ மோசடியானது, தவறாக நடந்துவிட்டது—என்ற பிரச்சாரம் இங்கே அவையில் செய்யப்பட்டாலும் சரி, அல்லது வெளியிலே செய்யப்பட்டாலும் சரி, அது நல்லதல்ல, பொருத்தமுடையதுமல்ல.

தேர்தல் முடிவு வெளியானதும் சுதந்திராக் கட்சியின் ஒரு பெருந்தலைவரான மசானி அவர்கள் தெரிவித்த கருத்து வெளியாகி இருக்கிறது.

ஜனநாயக மரபு

நாடாளுமன்றத்திற்கும், அவர்களது கட்சிக்கும் வாக்காளர்கள் நம்பிக்கையோடு அளித்த வாக்குகளை, ஜனநாயகவாதி என்ற ரீதியில் மக்கள் அளித்த தீர்ப்பாகத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகச் சுதந்திரக் கட்சித் தலைவர் திரு மசானி கூறிய கருத்துக்கள் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தன.

அதுதான் ஜனநாயகத்திலே போற்றிப் பாராட்டவேண்டிய நல்ல மரபாகும்.

அடுத்தபடியாக மையிலே ஏதோ ரசாயனக் கலவை, ஏதோ மாயங்கள் நடந்தன, இந்திரஜாலங்கள் நடந்துவிட்டன—என்று உறுப்பினர் பொன்னப்ப நாடார் பேசும்போது சொன்னார்கள்.

இந்திரஜாலங்கள் என்று அவர் குறிப்பிடுவதை நான் புரிந்துகொள்கிறேன். 'மையிலே தவறு இருக்கிறது' அதை வைத்தால் உடனே காய்ந்து விடுகிறது 'வேறு மாதிரி மாறி விடுகிறது' என்றெல்லாம் இன்றைக்கும் பேசப்படுகிறது; எழுதப்படுகிறது.

டாட்டாவின் மறுப்பு

வாக்குச் சீட்டில் மோசடி நடந்ததா என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்ட நேரத்தில் ஜனநாயகக் கூட்டணியில் உள்ள சில கட்சிகளின் ஆதரவோடு சுயேச்சையாகப் போட்டியிட்ட டாட்டா அவர்கள் அந்தப் புகாரை மறுத்து ஒரு அறிக்கை வெளியிட்டார்கள்.

தமது தோல்வியை எதிர்த்து, தான் வழக்குத் தொடரப் போவதாக வந்துள்ள செய்தியை மறுத்து நாவல் டாட்டா அறிக்கை ஒன்று விட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களாவன "நான் தேர்தல் முடிவை எதிர்த்து மனு எதையும் தாக்கல் செய்ய விரும்பவில்லை. அவ்வாறு ஒரு போதும் யோசித்ததும் இல்லை. நான் வழக்காடப்போவதாக வந்துள்ள செய்தி குறும்புத்தனமானது. வாக்குச் சீட்டுகளில் ரசாயன மை பயன்படுத்தப்பட்டது எனும் புகார்கள் நெருங்கிய தொடர்பில்லாதவை; கற்பனையானவை. மர்ம ரசாயன மை பயன்படுத்தப்பட்டது, விசேஷ வாக்குச் சீட்டுகளிருந்தன என்ற புகார்களெல்லாம் உண்மையாயிருக்கும் பட்சத்தில் நான் சுமார் 20,000 வாக்குகளைத் தான் பெற்றிருப்பேன். நீரிலிருந்து வெளியே தூக்கிப்போட்ட மீன் போலாகி விட்டேன். மீண்டும் தண்ணீருக்கே போக விரும்புகிறேன்."

மக்களின் தீர்ப்பை எவ்வளவு மிகுந்த பெருந்தன்மையோடு அவர்கள் ஒத்துக் கொண்டார்கள் என்பதற்காகத் தான் நான் இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லுகிறேன்.

தெளிவான தீர்ப்பு

அதே போல் மாநிலங்களவை உறுப்பினர் திரு ஆர். டி. பார்த்தசாரதி அவர்கள் "சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலில் இந்திரா காங்கிரசுக்கு மக்கள் பெருவாரியான ஆதரவு தந்ததால் அதன் முற்போக்குக் கொள்கையில் மக்கள் தங்கள் நம்பிக்கையைத் தெரிவித்தனர் என்பது நிரூபணமாகிவிட்டது. இந்திரா காந்தியின் தலைமைக்கு மக்கள் பெருவாரியான ஆதரவு அளித்தனர். ஜனநாயகவாதி என்ற முறையில் மக்கள் தீர்ப்பை நான் ஏற்கிறேன்" என்று கூறியுள்ளார். அந்தக் காங்கிரசிலிருந்து கூட அவர் வெளியேறியிருக்கிறார். அவரோடு வேறு சிலரும் சென்றிருக்கிறார்கள்.

இப்படி, தேர்தல் முடிவை அவர்கள் மிகுந்த பெருந்தன்மையோடு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

குறை வேறு ; குற்றம் வேறு.

தேர்தலில் இன்னும் நவீனமான முறைகள் எல்லாம் பயன்படுத்தப்படவேண்டும் என்று இங்கு பலர் பேசியிருக்கிறார்கள், அதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. மேலும் நவீனமான முறைகள் தேவை தான்.

ஆனால், தேர்தலில் அங்கொன்றும் இங்கொன்றும் என்று சில குறைகள் இருக்கலாமே தவிர, குற்றங்கள் இருப்பதாக நாம் கூறுவது நல்லதல்ல. குறைகளுக்கும் குற்றங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை நாம் ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.

குறைகள் என்றால், ஆங்காங்கே சென்று உடனடியாகக் களையப்பட வேண்டியவை. தெரிந்து மீறி செய்யப்படுகின்ற காரியங்கள் குற்றங்களாகும். அப்படி எந்தக் குற்றமும் இந்தத் தேர்தலில் நடைபெறவில்லை.



நம்முடைய பெருமதிப்பிற்குரிய உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் பேசும்போது, இந்தத் தேர்தலில் ஜாதி உணர்வுகள் தலைகாட்டின; கடவுளர் இழுக்கப்பட்டார்கள்; ஆஸ்திக நாஸ்திக வாதங்கள் தேவையில்லாமல் தேர்தலில் பயன்படுத்தப்பட்டன என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

ஆமாம் ! இந்தத் தேர்தலில் என்றைக்கும் இல்லாத அளவிற்கு வகுப்புணர்ச்சிகள் தூண்டப்பட்ட காட்சியைப் பார்த்தோம். ஆனால் அந்த வகுப்புவாத சக்திகள் பெரும்பான்மையான அளவில் வெற்றியைப் பெறவில்லை என்பதையும் நாம் கண்டோம்.

753

சேலம் நகரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைத் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இணைத்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியோடு இணைத்து—ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்கக்கூடாது என்றெல்லாம் சேலம் நிகழ்ச்சியோடு தேர்தலுக்கு முடி போட்டார்கள்.

சேலம் நிகழ்ச்சி; ஒரு விளக்கம் !

இன்றும் சொல்கிறேன். சேலம் நிகழ்ச்சியை யாரும் ஒத்துக் கொள்ளவில்லை. சேலத்தில் நடைபெற்ற சம்பவங்களை யாரும் ஏற்றுக் கொள்ள இயலாது.

நான் சேலம் சம்பவம் நடைபெற்ற இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் மதுரை சென்றிருந்த போது நிருபர்கள் என்னைச் சந்தித்துக் கேட்ட நேரத்தில் 'சேலம் நிகழ்ச்சிகளை நான் ஏற்றுக்கொள்ளவில்லை, காவல் துறையினர் அதைப் பற்றி நடவடிக்கைகள் எடுப்பார்கள்' என்றுதான் கூறினேனே அல்லாமல், அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது என்று கூறினேனே தவிர, சேலம் நிகழ்ச்சியில் என்ன தவறு என்று நான் கேட்கவில்லை.

ஆனால், சேலம் நிகழ்ச்சி நடந்து முடிந்து விட்ட பிறகும் சேலம் நிகழ்ச்சியில் என்னென்ன நடந்ததோ' அவற்றை எல்லாம் பெரிய பெரிய சுவரொட்டிகள் போட்டு ஊர் எல்லாம் ஒட்ட வேண்டியது அவசியம் தானா? எண்ணிப்பார்க்க வேண்டும். உள்ளபடியே கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் என்றால் அப்படிச் செய்வார்களா ?

என்ன போட்டிருந்தார்கள் சுவரொட்டிகளில் ? ராமன் படத்தையும், முருகன் படத்தையும் போட்டு, பெரியார் அதைச் செருப்பால் தாக்குவது போலவும் போட்டு, அதை நான் பார்த்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருப்பதைப் போலவும் போட்டிருந்தார்கள். அந்தச் சுவரொட்டிகளை ஊரெல்லாம் ஒட்டினார்கள்.

உள்ளபடியே, அது அனுமதிக்கக் கூடிய காரியமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். சேலம் நிகழ்ச்சி தவறு என்றால், ஊரெல்லாம் அந்தச் சுவரொட்டிகளை ஒட்டி, தவறு இப்படித்தான் நடந்தது என்று சொல்ல வேண்டுமா ?

தவறைச் செய்து காட்டுவது முறையா ?



ஒருவரின் தகப்பனாரை ஒருவன் சண்டையில் அடித்து விடுகிறான். அப்படி அடிபட்ட நேரத்தில் அதைப் புகைப்படமும் எடுத்து விடுகிறான் ஒருவன். அடித்தவன் மீது அடிபட்டவனின் மகன், வழக்குப் போடச் செல்வான். இல்லை, வழக்கு மன்றத்திற்குச் சென்று விவகாரத்தை அவ்வளவு பெரிதாக்காமல் சும்மா இருந்து விடுவான்.

இந்த இரண்டையும் விட்டு விட்டு, அடித்தவன் தீயவன் என்பதை உலகத்திற்குச் சொல்ல வேண்டும் என்பதற்காக, எடுக்கப்பட்ட அந்தப் புகைப்படத்தைப் பெரிதாக்கி அதைப் பிளாக் செய்து, அழகான வண்ணத்தில் சுவரொட்டிகள் அடித்து, அதை ஊரெல்லாம் ஒட்டினால் என்ன நடக்கும் ? அந்தத் தந்தை மகனைக் கூப்பிட்டு, “அடப்பாவி ! அவன் ஒரு இடத்தில் தான் என்னை அடித்தான், நீ ஊரெல்லாம் என்னை அடிக்கச் செய்திருக்கிறாயே” என்று கூறி அவர் வருத்தப்பட மாட்டாரா ?

மகேசனும் சேர்ந்து அளித்த தீர்ப்பு

எங்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லுவதுண்டு, “மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு” என்று. மகேசனும் சேர்ந்து அளித்த தீர்ப்புதான் இந்தத் தீர்ப்பு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த ஆட்சியிலே பத்திரிகை சுதந்திரம் எல்லாம் பறிக்கப்பட்டு விட்டது என்று குறிப்பிட்டார்கள்.

ஒரு பத்திரிகையிலே சில வெறுக்கத்தக்க, வேண்டத்தகாத படங்கள், வெளிவரத்தகாத படங்கள், வெளியிடப்பட்டன என்ற காரணத்தால் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்த நடவடிக்கைகளின் உட்பொருளுக்கு நான் செல்ல விரும்பவில்லை.

இந்த ஆட்சி 4 ஆண்டுக் காலத்தில் எத்தனை பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுத்தது ? எத்தனை பத்திரிகைகள் மீது ஜாமீன் தொகை கேட்டது ? எத்தனை நாடகத்திற்குத் தடை போட்டது ? எத்தனை நூலுக்குத் தடை போட்டது?

பத்திரிகை சுதந்திரம் : அன்றும் இன்றும்.



இருபது ஆண்டு காலக் காங்கிரஸ் ஆட்சியில் எத்தனை பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது தெரியுமா? 1965-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் ‘மித்திரன்’ பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? அதனுடைய ஆசிரியர் கைது செய்யப்படவில்லையா ? ‘மாலை மணி’ பத்திரிக்கை மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா ? அதனுடைய அலுவலகத்தில் புகுந்து ஆசிரியர் கைது செய்யப்படவில்லையா?

‘விடுதலை’, ‘திராவிட நாடு’ போன்ற பத்திரிகைகளிடத்தில் ஜாமீன் தொகை கேட்கப்படவில்லையா? ‘இரணியன்’ நாடகம் தடை செய்யப்படவில்லையா ? ‘தூக்குமேடை’ ‘உதய சூரியன்’ நாடகங்கள் தடை செய்யப்படவில்லையா ? ‘போர்வாள்’ நாடகம் தடை செய்யப்படவில்லையா ?

நூல்களைப் பொறுத்த வரையில், ‘பெரியார் பொன்மொழி’, ‘இலட்சிய வரலாறு’ ‘இராவண காவியம்’ போன்ற பல நூல்கள் தடுக்கப்படவில்லையா ?

அரசாங்கச் சார்பில் தடை உத்திரவு போடப்பட்டது, பத்திரிக்கைச் சுதந்திரம் பறி போயிற்று என்று எப்படிச் சொல்லுகிறார்களென்றால் எங்கள் அமைச்சரவையில் இருக்கும் யாரைப் பற்றியாவது ஆளும் கட்சியில் இருக்கும் எவரைப் பற்றியாவது தனிப்பட்ட முறையில் மக்கள் தவறாகப் புரிந்து கொள்ளவேண்டுமென்று கெட்ட நோக்கத்தோடு எழுதப்படுகிற நேரத்தில் விஷயங்களை, நாங்கள் நீதி மன்றத்துக்கு எடுத்துச் செல்லாமல் வேறு எங்கே செல்வது ?

757

கருணாநிதி தன்னுடைய கட்சிப் பணத்தை, தேர்தல் நிதியைக்கொண்டு சினிமா எடுத்து விட்டான் என்று பத்திரிகையில் செய்தி போட்டார்கள். நானும் ஒவ்வொரு கூட்டத்திலும் இல்லை, இல்லை என்று சொன்னேன். அவர்கள் ஆமாம், ஆமாம் என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். நீதி மன்றத்திற்குச் சென்றால்தான் அதற்குச் சரியான தீர்வு காண முடியும் என்று நீதி மன்றத்திற்குச் சென்றோம்.

நீதி மன்றத்திற்குச் செல்கிறவர்கள், நீதி மன்றம் தரும் தீர்ப்பை ஏற்கத் தயார் என்று சொல்லும் நேரத்தில், எழுதியவர்கள் அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராகத்தான் இருக்க வேண்டும்.

நாடகத் தடைகுறித்துக் கூறியது யார் ?

எங்கள் மீது சில பத்திரிகைகளால் சுமத்தப்பட்ட அபாண்டங்களை மறுத்து, உண்மையை நிரூபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர, எந்தப் பத்திரிகையும் தடை செய்யப்படவில்லை. எந்த நாடகமும் தடை செய்யப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட நாடகத்தைத் தடை செய்ய வேண்டுமென்று, காங்கிரஸ் ஒன்றாக இருந்த காலத்தில், காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசிய நேரத்தில் கூட நான் எழுந்து, ''எழுத்து உரிமையைப் பறிப்பது நல்லதல்ல. எங்களைப் பொறுத்த வரையில் மக்கள் ஆதரித்தால் ஆதரிக்கட்டும். இல்லாவிட்டால், ஆதரிக்காது செல்லட்டும்'' என்று சொன்னேனே தவிர, '' ஆமாம், நாடகம் தடை செய்யப்பட வேண்டும்'' என்று சொல்லவில்லை. இதை நாடு நன்றாக அறியும். அது பத்திரிகையிலும் வந்து இருக்கிறது.

அரசியலும் கொலைகளும்.

தேர்தல் நேரத்தில் நடந்துவிட்ட கொலைகள் 17 என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். 17 கொலைகள் நடந்து இருக்கின்றன என்று சொன்னால் அவை தேர்தல் காலத்திற்கு முன்னும் பின்னும் நடைபெற்றவை. நடைபெற்ற கொலைகள் எல்லாம் தேர்தலுக்குத் தொடர்புடைய கொலைகள் என்று சொல்ல முடியாது. அப்படிச் சொல்வது தவறாகும்.

17 கொலைகளில், ஒன்பது, பத்து கொலைகள் அரசியல் தொடர்புடையதாக உள்ளன. மற்றவை தனிப்பட்ட தகராறுகள் அவர்களுக்குள்ளே இருந்ததால் ஏற்பட்டவை என்று தான் நமக்குச் செய்திகள் கூறுகின்றன.

அந்த வழக்குகள் அனைத்தும் நீதி மன்றத்தில் இருக்கிற காரணத்தால், நான் அவற்றின் மீது அதிகம் ஆராயப் புகவில்லை. என்றாலும் கொலைகள் விழக்கூடாது. வன்முறைச் சம்பவங்கள் ஏற்படக்கூடாது என்று நாம் இந்த மன்றத்தில் ஒவ்வொரு நாளும் பேசிக்கொண்டே இருக்கிற காலத்தில் தான், இரண்டு நாளைக்கு முன்பு கூட, பரங்கிமலைத் தொகுதியில், எம்.ஜி.ஆர். அவர்கள் வெற்றி பெற்று வந்த தொகுதியில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த முருகேசன் குத்திக் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்.

ஆகவே, கொலைகள் எந்த அரசியல் காரணத்திற்காக நடைபெற்றாலும், எந்த அரசியல் கட்சிக்காரர்களால் நடத்தப்பட்டாலும், அவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் இதைச் செய்தாலும் மிகவும் கண்டிக்கத்தக்கது தான்.

பலரும் இங்கே அபிப்பிராயம் தெரிவித்தார்கள், சர்வ கட்சித் தலைவர்களும் சேர்ந்து அறிக்கை விட வேண்டுமென்று சொன்னார்கள். நான் அதற்கு மறுப்புக் கூறவில்லை. நாம் அறிக்கை விடுகின்ற அதே நேரத்தில், நமக்கு அடுத்து இருக்கிற ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள தலைவர்களும், கிளை அமைப்புக்களும் அந்த முறையைக் கடைப்பிடித்தாக வேண்டும். தமிழ் நாட்டில் இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் பண்பாடும், நாகரீகமும் காப்பாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது கொள்கை

கவர்னர் உரையில் எந்தத் திட்டங்களும் இல்லை, எந்தக்கொள்கையும் இல்லை என்று குறைசொல்லப்பட்டது. ஆனால், கவர்னர் உரை மீது நடைபெற்ற இந்த விவாதத்திலும், இடைக்கால நிதி நிலை அறிக்கை மீது விவாதம் நடைபெற்ற நேரத்திலும் ஆளும் கட்சியின் சார்பில் நாம் பல்வேறு வகையான முற்போக்குக் கொள்கைகளை எல்லாம் நிறைவேற்றக் காத்துக் கொண்டு இருக்கிறோம் என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.

முற்போக்குத் திட்டங்களையெல்லாம் இந்த அரசு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோரிக்கை வருகின்ற நேரத்தில், அதுவும் குறிப்பாக நிஜலிங்கப்பா காங்கிரஸ் கோரிக்கை விடுகிற நேரத்தில் நாம் மெத்த மகிழ்ச்சியோடு அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

முற்போக்குத் திட்டம் யார் சொன்னாலும் அதை நிறைவேற்றித்தர நாங்கள் தயாராக இருக்கிறோம். அவற்றின் மூலம் எங்களுக்கு நன்மையையே தவிர, தீமை ஒன்றும் இல்லை.

கைத்தறி நெசவாளர்களைப்பற்றிச் சொல்லவில்லை, சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றிச் சொல்லவில்லை. வேறு சிலவற்றைக் குறித்துச் சொல்லவில்லை என்ற காரணத்தால் அவற்றில் இந்த அரசுக்கு அக்கறை இல்லை என்று எண்ணிவிடக் கூடாது.

மிகவும் குறிப்பாகவும், சிறப்பாகவும், மாநிலத் திட்டக் குழு அமைப்பது ஆளுநர் அவர்கள் உரையில் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

நிர்வாகச் சீர்திருத்தம்



ஆராய்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள், ஒழுங்காகவும், செம்மையாகவும் விரைவாகவும் விறுவிறுப்பாகவும், செயல்பட வேண்டுமானால், நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இருக்க வேண்டும்.

நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இருந்திடவும், மேலும் நல்ல முறையில் முடுக்கி விடப்பட வேண்டுமென்பதற்காகவும், அதிகாரிகளின் கடமைகளை நல்ல வகையில் பயன்படுத்துவதற்காகவும்தான் நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவை இந்த அரசாங்கத்தின் சார்பில் ஆளுநர் அவர்களுடைய உரையில் அறிவித்து இருக்கிறார்கள்.

நிர்வாகத்தில் இருக்கும் தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது பற்றி இந்த மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள் கோடிட்டுக் காட்டிய எண்ணங்களை நான் வரவேற்கிறேன். அதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்தத் தாமதங்கள் தவிர்க்கப்பட்டால்தான், அரசாங்கம் நிறைவேற்றும் திட்டங்கள், அந்தத் திட்டங்களுக்காக அரசு அள்ளி இறைக்கும் பணம் ஆகியவை எல்லாம் ஏழை எளிய மக்களின் படிக்கட்டுகளில் சென்று மக்கள் அமைதியான வாழ்வு பெற வகை செய்ய முடியும்.

நமது அதிகாரிகள் கடமை உணர்ந்தவர்கள். கடமை உணர்ந்த அதிகாரிகள் பலபேர் இருக்கிறார்கள். அதே நேரத்தில் சில அதிகாரிகள் வேறு மாதிரி எண்ணம் கொண்டு இருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் திருந்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் திருந்திக் கொண்டால் மட்டும் போதாது. திருந்திக் கொண்ட அதிகாரிகளை இணைத்து, நிர்வாக இயந்திரத்தை மிகவேகமாக இயக்கிடவும், ஆக்கபூர்வமாகக் கருத்துக்களை எடுத்துக் கூறவும் இந்த நிர்வாகச் சீர்திருத்தக் குழுவை அமைத்து இருக்கிறோம்.

காரியம் ஒன்று, கடிதங்கள் பதினொன்று

பட்டா வழங்குவதில் அரசு எந்த வகையில் பரிசீலித்துப் பணியாற்ற வேண்டும் என்று எடுத்துக்காட்டி, நிர்வாகத் துறையில் இருக்கிற சிக்கல்களையெல்லாம் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். ஒரே காரியத்திற்கு 11கடிதங்கள் எழுதப்பட்டு 11 உறைகளில் இடப்பட்டு 11 வில்லைகள் ஒட்டி அனுப்பப்பட்டன என்று சுட்டிக்காட்டினார்கள். அதுகூட அறிவிக்க வேண்டிய ஒன்றுதான்.

எந்த நிலம் பட்டா செய்யப்படுகிறது, ஆர்ஜிதம் செய்யப் படுகிறது என்பது சம்பந்தப்பட்ட ஒருவருக்கு மட்டும் தெரிவிக்கக் கூடியது அல்ல.

தமிழக அரசு பட்டா வழங்குகிற நேரத்தில் யார் யாருக்கு என்று எந்த எந்தப் பகுதிகளில் வழங்கப்பட்டது என்று அந்த அந்த எம். எல். ஏ., எம். எல். சி.,எம் பி.-க் களுக்கு அறிவிக்க வேண்டியதுதான். அந்த விவரங்களை ஒன்றாகக்கூட அனுப்பி இருக்கலாம். நிர்வாகத்தில் இப்படிப் பட்ட சீர்கேடுகளைக் களைவதற்காக நடவடிக்கை எடுக்கப் படும்.

பதவி நீடிப்புப் பிரச்சினை

திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் நிர்வாகச் சீர்திருத்தக் குழு அமைத்தது சரிதான்; அதிகாரிகளுக்குப் பதவி நீடிப்பு விஷயத்தில் யாருக்கும் சலுகை காட்டக் கூடாது என்று சொன்னார்கள். அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த முடிவை மேற்கொண்டு இருக்கிறோம்.

பதவி நீடிப்பைப் பொறுத்தவரையில், "சிலர் நிபுணர்கள், இவர்களை விட்டால் அந்த இடங்களுக்கு வேறு தகுதியான ஆட்கள் கிடையாது, அவ்வளவு நிபுணத்துவம் உள்ளவர்கள்" என்ற நிலையில், மருத்துவத் துறைபோன்ற சில அத்தியாவசியத் துறைகளைத் தவிர மற்றத் துறைகளில் பதவி நீடிப்புக் கிடையாது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அது சில இடங்களில் இப்பொழுது சரியான முறையில் நிறைவேறாமல் இருக்கலாம். அதிலே சில சங்கடங்கள் ஏற்பட்டிருந்தன.

திரு கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய உரையையொட்டி மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன்: மிகவும் தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தால் அல்லாமல் பதவி நீடிப்பை இந்த அரசாங்கம் இனி நிச்சயம் தராது என்பதையும் நான் இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்)

ஆசியாவிலேயே பெரிய ஒரு தொழில் திட்டம்

நம்முடைய நாட்டிலே தொழில் வளம் எவ்வாறு இருக்கிறது என்பது, சிலராலே போற்றப்பட்டது, பாராட்டப்பட்டது. தொழில் வளம் நல்ல வகையிலே இல்லை என்றும் சில உறுப்பினர்களால் எடுத்துச் சொல்லப்பட்டது. கவர்னர் உரையிலே தூத்துக்குடி உரத்தொழிற்சாலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கான அனுமதி விரைவிலே கிடைக்கும் என்று கூறினார்கள்.

அதே நேரத்தில் கவர்னர் உரையின் மீது விவாதம் நடத்திக்கொண்டிருக்கிற இந்தநேரத்திலே இந்த உரத் தொழிற்சாலைக்கு நாப்தா மூலப்பொருளாக நமக்கு அனுமதி கிடைத்திருக்கிறது.



தூத்துக்குடி உரத் தொழிற்சாலைத் திட்டம். ரூ. 65 கோடித் திட்டம். ஆசியாவிலேயே மிகப் பெரிய திட்டம். இதற்கு மாநில அரசு ரூபாய் 3 கோடியும், தனியார் பிரதிநிதிகள் 3 கோடியும் தருகிறார்கள்; தனியார் பிரதிநிதிகளின் முயற்சியினால் அரசு சார்புள்ளதும், அரசு சார்பற்றதுமான நிறுவனங்களின் வாயிலாக மீதமுள்ள தொகை திரட்டப்பட்டு இந்த உரத் தொழிற்சாலை அமைகிறது. நாம் இதைக் கூட்டுத்துறையில் அமைத்திருக்கிறோம். கூட்டுத் துறையில் இதனை அமைத்திருப்பதால் அரசாங்கத்தினுடைய கண்காணிப்பு இந்தத் தொழிற்சாலைக்கு இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக அரசாங்கத்தின் சார்பிலே நான்கு டைரக்டர்கள் இதிலே இருக்கிறார்கள்.

அணுமின் நிலயத்திற்குக் கனநீர் உற்பத்தி

அதைப் போலவே ரூ. 20 கோடி அளவில் ஹெவி வாட்டர் உற்பத்தித் திட்டம் விரைவிலே வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான தொடக்கப் பேச்சுவார்த்தைகளெல்லாம் முடிவுற்றிருக்கின்றன. அது சம்பந்தமாக அணுசக்தி ஆணைக்குழுவுடன் நம்முடைய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள்.

இந்த ஹெவி வாட்டர் உற்பத்தித் திட்டம் வந்து விடுமேயானால், நம்முடைய கல்பாக்கம் அணுமின் நிலையத்திற்குப் பயன்படக்கூடிய இத்திட்டம் ரூ. 20 கோடியில் ஒரு பெரிய திட்டமாக அமையும்.

சேலம் உருக்காலை வந்த விதம்

சேலம் உருக்காலைத் திட்டத்தைப் பற்றி இங்கே பலரும் பேசினார்கள். ரூ. 110 கோடியில் இந்தத் திட்டம் நமக்குக் கிடைத்தது. இந்தத் திட்டம் கிடைத்ததைப் பற்றிப் பேசிய உறுப்பினர்கள்—எதிர்த் தரப்பில் உள்ளவர்கள்—குறிப்பாக நிஜலிங்கப்பா காங்கிரஸில் உள்ளவர்கள் இது

761

எங்களுடைய காலத்தில் சொல்லப்பட்டதுதான். எங்களுடைய காலத்தில் கேட்கப்பட்டதுதான்' என்றெல்லாம் சொன்னார்கள். நானும் அதை மறுக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால், சேலம் உருக்காலைக்கு அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்ற நேரத்தில் இந்தத் திட்டத்திற்காக ஆரம்ப காலத்தில் பாடுபட்ட திரு. காமராஜர் அவர்களுக்கும், திரு. வெங்கட்ராமன் அவர்களுக்கும் திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். நாங்கள் யாரும் நன்றி மறந்துவிடுபவர்கள் அல்ல. அரசியல் பண்பாட்டை இழந்துவிடுபவர்கள் அல்ல.

ஆனாலும், இந்தத் திட்டம் இடைக்காலத்தில் 'கிடப்பிலே' போடப்பட்டது. இது வராது என்கிற அளவுக்கு நிலைமை போயிருந்தது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. இதற்காக நாம் ஒரு பெரிய போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரும் இணைந்து 'எழுச்சி நாளை'க் கொண்டாடினோம். அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் நாடெங்கிலும் பல்வேறு பகுதிகளிலும் பேசி, தீர்மானங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அதற்குப்பிறகு நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவில் முதலமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் நான் ''சேலம் உருக்காலைத் திட்டத்தை எங்களுக்கு அளிக்கா விட்டால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை நிறுவாவிட்டால், நான்கு கோடித் தமிழ் மக்களுடைய சார்பாகச் சொல்கிறேன், இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்னுடைய சம்மதத்தைத் த முடியாது'' என்று திட்டவட்டமாகச் சொன்னேன்.

''நீங்கள் எதிர்த்துப் பேசுவதில்லை. அங்கு போனதும் வளைந்து விடுகிறீர்கள், இங்கேதான் வீரமாகப் பேசு கிறீர்கள், அங்கு சென்று துணிச்சலாகக் கேட்பதில்லை!' என்று டாக்டர் ஹாண்டே அவர்களும், திருமதி அனந்த நாயகி அவர்களும் பேசும்பொழுது குறிப்பிட்டதால் அங்கு நடந்ததைச் சொன்னேன்.

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலிருந்து வெளியே வந்ததும் டெல்லியில் உள்ள சில தமிழ் நாட்டுத் தலைவர்களெல்லாம் என்னைச் சந்தித்து ''இப்படி என்.டி.சி. கூட்டத்தில் வேகமாகப் பேசலாமா? நிபந்தனை பாட்டுப் பேசலாமா? ஒருவேளை சேலம் உருக்காலை

கிடைக்காவிட்டால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை விட்டுவிடுவதா?'' என்று கூடக் கேட்டார்கள். பிறகு 10 நாளைக்குள் சேலம் உருக்காலை கிடைத்துவிட்டது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

பெண் கேட்டவர்கள் கதை.

''நாங்கள்தான் கேட்டோம், நாங்கள்தான் கேட்டோம் ஆகவே வெற்றியில் உங்களுக்குச் சொந்தமில்லை'' என்று கூறுகிறார்கள்.

ஒரு வீட்டில் அழகான பெண் இருக்கிறாள். பல பேர் போய்ப் பெண் கேட்கிறார்கள். பையன் பிடிக்கவில்லை, நல்ல வருமானம் இல்லை. நல்ல அழகு இல்லை என்று சொல்லித் தட்டிக்கழித்துவிட்டு, கடைசியில் அந்தப் பெண்ணுக்குத் திருமணம் ஆகி, திருமண ஊர்வலம் வரும்பொழுது, பாதை ஓரத்தில் நின்றுகொண்டு ''நான் கேட்ட பெண்தான்'' என்று கேலி செய்வதா? கட்டினவனுக்குத்தான் பெண்ணே தவிர, கேட்டவனுக்கெல்லாம் அல்ல என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதைப்போலத்தான் தி.மு.க. ஆட்சிக்கு வெற்றி கிடைத்தது. வெற்றியை நாங்கள் கொண்டாடுகிறோம். அனைவரும் சேர்ந்து கொண்டாடுகிறோம். ஆனால் வெற்றி கிடைத்த நேரத்தில், ''நாங்கள்தான் கேட்டோம், நாங்கள்தான் கேட்டோம்'' என்று சொல்வதா?

''சேலம் உருக்காலைகுறித்து மேலும் ஒரு அறிக்கை தேவைதானா? ஆராய்ச்சிகள் முடிந்துதானே அறிக்கை கொடுக்கப்பட்டது? மறுபடியும் அறிக்கை எதற்கு?'' என்று குறிப்பிட்டார்கள்.

புது அறிக்கை பெரிய அறிக்கையாக இருக்காது, ஒரு திருத்த அறிக்கையாகவே இருக்கும். அது ஏன் தேவை? இந்த அறிக்கை வெளியாகி பல ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டு விட்டது. தொழிற்சாலை வராது என்ற நிலையில் அறிக்கையை எடுத்துப் பார்க்காத சூழ்நிலை உருவாகியிருந்தது. உருக்காலை வருகிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டு, காலக் கடத்தல் காரணமாக, தாமதம் காரணமாக, அந்த அறிக்கையில் சில திருத்தங்கள் தேவைப்பட்டன.

திருத்த அறிக்கையையும் ஆறுமாத காலத்தில் கொடுத்து, வேலையைத் தொடங்கிட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறோம். நல்ல சூழ்நிலை இருப்பதால், தேர்தலுக்குப் பின்னால் ஆட்சி மாற்றம், அமைச்சரவை மாற்றம்

கள் காரணமாக சேலம் உருக்காலை ஏற்படுவதற்கு, சீக்கிரமே செயல்படுவதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகியிருப்பதாக அறிகிறேன்.

இதிலே நாம் அவசரப்படுகிறோம். அதே நேரத்தில், ஆறு மாதத்தில் அறிக்கை வரவேண்டும் என்றும் மத்திய சர்க்காரிடத்தில் வலியுறுத்துகிறோம். அறிக்கை தேவையா —இல்லையா என்பதில்லை வாதம். தேவை என்பதை நாம் அறவே மறுக்கவில்லை. காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக, சில திருத்தம் தேவை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆறு மாதங்கள்தான். அதற்குள் சமர்ப்பித்துவிடவேண்டும் என்று கூறித் திருத்த அறிக்கைக்கு ஒத்துக்கொண்டிருக்கிறோம்.

நல்லதைச் செய்தோமா, இல்லையா?



அம்மையார் ஜோதி வெங்கடாசலம் அவர்கள், இவர்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள், உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்றால், எங்கள் காலத்தில் போட்ட திட்டம்தான் என்கிறார்கள்.

இப்படியே போய்க்கொண்டிருந்தால், எங்கள் காலத்து வயல்கள் என்றுகூடச் சொல்லலாம். ஆகவே, சொன்னவைகளையும் செய்தவைகளையும் நாங்கள் கெடுக்காமல், மேலும் அது தொடர்பாக முயற்சியில் ஈடுபட்டு நல்லவைகளைச் செய்து முடித்திருக்கிறோமா, இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதை விட்டுவிட்டு, 'நாங்கள் செய்தோம், நாங்கள் செய்தோம்' என்று சொன்னால் எப்படி அது முறை ஆகும்?

உணவு உற்பத்தி பெருகியது என்றால், மழை பெய்தது ஆகவே தான் அதிக உணவு உற்பத்தி என்று சொல்வது எப்படி ஒரு வாதம் ஆகும்? அப்படி வாதத்திற்கு எடுத்துக்கொள்வோமானால், நல்லவர்கள் இருக்கிறார்கள், மழை பெய்கிறது என்று அதையும் சொல்லலாம் அல்லவா?

நான் சொல்கிறேன்: மழை, பற்றாக்குறையாக இருந்தது உண்டு. கடந்த நான்காண்டு காலத்தில் வறட்சி கூட வந்தது. வறட்சியையும் சமாளித்துத்தான் நாங்கள் உணவு உற்பத்தியை கணிசமாகப் பெருக்கியிருக்கிறோம், அதில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

தொழிலில் நமது வளர்ச்சி.



சேலம் உருக்காலையைப் போல அடுத்து பல பெரிய தொழிற்சாலைகள் நம்முடைய நாட்டுக்குக் கிடைத்திருக்கின்றன. நம்முடைய மாநிலம் பெற்றிருக்கின்றது. அந்த அளவுக்குப் பெரிய தொகை கொண்ட தொழிற்சாலைகள் இல்லை என்றாலும், டயர் தொழிற்சாலை ஒன்று வருகிறது. சோடியம் ஹைட்ரோ சல்பேட் தொழிற்சாலை ஒன்று உருவாகிறது. சோடா ஆஷ் தொழிற்சாலை அதுவும் கூட்டுத் துறையிலே உருவாகிறது. நைலான் தொழிற்சாலை விரைவிலே வரும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றியிருக்கின்றன. பாலிஸ்டர் ஃபைபர் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்பட இருக்கிறது.

நமது மாநிலத்தில் எந்த அளவுக்குத் தொழில்கள் வளர்ந்திருக்கின்றன என்பதற்கான விவரங்களைக் காட்டுகிற குறிப்புகளை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தொழில் உற்பத்திக் குறிப்பீட்டெண் என்ற தலைப்பிலே 1967-ல் 158·3, 1968-ல் 166·3, 1969-ல் 172·8, 1970-ல் 182·3 என்கின்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

அதைப்போலவே பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் 1967-ல் 7,065, 1970-ல் 7,922, எதுவும் குறைந்துவிடவில்லை.

பொதுத்துறையிலும், தனியார் துறையிலும் பதிவான நிறுவனங்கள், கம்பெனிகள் 1967-ல் 91, 1969-ல் 116, 1970-ல் முதல் 6 மாதங்களில் 76 கம்பெனிகள் பதிவாகியிருக்கின்றன.

தொழில் உரிமங்களுக்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள், 1967-ல் 38 விண்ணப்பங்கள் அனுப்பினோம். அதிலே 16 விண்ணப்பங்களுக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்க உரிமங்கள் கிடைத்தன. 1968-ல் 51 விண்ணப்பங்கள் அனுப்பினோம். அதிலே 9-க்கு லைசென்ஸ் கிடைத்தது. 1969-ல் 97 அனுப்பினோம். 12-க்கு லைசென்ஸ் கிடைத்தது. 1970-ல் 142 விண்ணப்பங்கள் அனுப்பினோம். அதில் இதுவரையிலே 36-க்கு லைசென்ஸ் கிடைத்திருக்கிறது. ஆகவே, தொழிற்சாலைகள் ஆரம்பிக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளாமலே இருந்துவிட்டோம் என்று குறை சொல்வதற்கில்லை.

சிறு தொழில் நிறுவனங்கள்.

சிறுதொழில்கள் வகையில் தொழில் வர்த்தக இயக்குநரால் பதிவு செய்யப்பட்ட தொழில் நிறுவனங்கள் :

1967-ல்	..	..	11,929
1968-ல்	..	..	13,571
1969-ல்	..	..	18,063
1970-ல்	..	..	21,857

ஆக, இந்த அளவிற்குத் தொழில் துறையில் நாம் முன்னேறியிருக்கிறோம் என்றாலும், இது உள்ளபடியே போதுமான முன்னேற்றம் இல்லை. இன்னும் அனுமதிகள் கொடுக்கப்படவேண்டும். 100 கேட்டால் 30-க்கு அனுமதி கிடைக்கிறது. ஆகவே, இதில் குறைபாடு இல்லாமல் இல்லை.

இன்னும் அதிகமாகத் தொழில் வளர்ச்சி அடைந்திட வேண்டும் என்கிற கொள்கையின் அடிப்படையில் தொடர்ந்து மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

கூட்டுத்துறையின் சிறப்பு.

மேலும், மேலும் தொழிற்சாலைகளை விரைவில் உருவாக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் துறை, பொதுத்துறை, கூட்டுத் துறை இவைகளைப் பற்றி விவாதத்தில் குறிப்பிடப்பட்டது. கூட்டுத்துறை என்பது என்ன? கூட்டுத் துறை என்பது அநேகமாகத் தனியார் துறையாகத்தான் இருக்கிறது என்று உறுப்பினர்கள் சிலரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுத்துறை என்பதில், தனியாருடைய ஊக்கமும், அரசாங்கக் கண்காணிப்பும் இருக்கும். முன்பெல்லாம் தனியார் துறை என்றால் அரசாங்கக் கண்காணிப்புக் கிடையாது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மெட்ராஸ் அலுமினியம் பாக்டரியில், அதற்குப் பங்கு மூலதனம்—முதலீடு ரூ. 3 கோடி. அதிலே, தனியார் ஒன்றரைக் கோடி ரூபாயும், அரசாங்கம் ஒன்றரைக் கோடி ரூபாயும் போட்டார்கள். கண்காணிக்கும் பொறுப்பை அரசாங்கம் வைத்துக் கொள்ளாமல் இருந்தது. அரசின் சார்பில் ஒரே ஒரு டைரக்டர் அதில் இருக்கிறார். அரசைக் கலந்து கொண்டு பாக்டரியில் தனியார் தங்கள் காரியங்களைச் செய்வதில்லை.

இப்பொழுது ஏற்பட்டிருக்கிற கூட்டுத் துறையில் நிலைமை முற்றிலும் மாறுபட்டது. தனியாருடைய ஊக்கம் பயன்படுத்தப்படுகிறது. அதே நேரத்தில் அரசாங்கத்தின் கண்காணிப்பும் இருக்கிறது. இரண்டும் இணைந்து கூட்டுத்துறைக் கொள்கை நிறைவேறுகிறது என்ற அளவில், இந்த அரசு புதிய கொள்கையை உருவாக்கியிருக்கிறது.

நமது முடிவான லட்சியம்

தமிழ்நாடு தொழில் வளம்பெற வேண்டும் என்கிற எண்ணத்தில், பொதுத் துறைதான் நம் முடிவான லட்சியம். ஆனாலும் அப்படிச் சொல்லிக்கொண்டே தொய்ந்து விடக் கூடாது என்கிற அடிப்படையில்தான் இன்றைக்கு இந்தக் கூட்டுத் துறையை நாம் ஒத்துக் கொண்டிருக்கிறோம். இறுதி லட்சியம் பொதுத் துறையே.

கவர்னர் உரையில் குறிப்பிட்டபடி, வேலை வாய்ப்புக்கள் பற்றி உறுப்பினர்கள் பெரிதும் எடுத்துச் சொன்னார்கள். வேலை வாய்ப்புக்களை அளிப்பதில், தமிழ்நாடு அரசும் மத்திய சர்க்கார் அளவிலும் பல திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்றார்கள்.

படித்தோரிடையே வேலை இல்லா அவதி

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானல், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் காலதாமதம் ஆனதன் காரணத்தாலும், திட்டங்கள் இல்லாததாலும், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. பட்டதாரிகள், பொறியாளர் இவர்களுக்கெல்லாம், வேலை அளிக்கக் கூடிய திட்டங்கள் இல்லை என்பதால், வேலை வாய்ப்பின்மை நாட்டில் பெருகியதை மறுத்திட இயலாது.

மாநில மட்டத்தில் சில காரியங்களைச் செய்து இருந்தாலும், அது பூரண திருப்தி அளிக்கக் கூடியதாக இல்லை. புன்னகை அளிக்கக் கூடியதாக இல்லை.

ஆர்வத்தைக் காட்டும் அறிகுறி



ஆனாலும், 6,500 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எந்தச் சம்பளமும் பெறாமல், குடும்பத்தை நடத்த முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருப்பவர்களுக்கு ஓரளவு ஊதியமாவது கிடைக்க வேண்டும் என்று, தொழில் பயில் ஆசிரியர்களுக்கு உதவியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 6,500 ஆசிரியர்களுக்கு வேலை அளிக்கப்பட்டு, அனைவரும் வேலைக்குச் சேர்ந்து விட்டனர்.

அதேபோலத்தான் 2,400 பொறியாளர்களுக்கு உதவியளிக்க முன்வந்ததில், 1971 பிப்ரவரி முடிய 1,795 பேர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

இப்படி 6,500 ஆசிரியர்களுக்கும், 2,400 பொறியாளர்களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுத்தோம். இதனல் தமிழ்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அறவே ஒழிந்துவிடும் என்பதல்ல. இந்த அரசுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆர்வம் இருக்கிறது என்பதைக் காட்டத்தான், இது செய்யப்பட்டது. இந்த ஆர்வம் மேலும் மேலும் பெருகும். மேலும் மேலும் பெருகுகின்ற வகையில் திட்டங்கள் தீட்டப்படும் என்பதற்கு இது விடிவெள்ளி என்ற அளவில் இந்தக் காரியம் செய்யப்பட்டது. இதை வைத்துக் கொண்டு வேலை வாய்ப்புப் போதுமா என்று கேட்பது நல்லதல்ல.

குமுறிக் கொந்தளிக்கும் கேள்வி



மேலும் மேலும் வேலை வாய்ப்புகள் பெருகிட மத்திய அரசினரும் ஒரு திட்டம் தீட்டியிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும், 1,000 பேர்களுக்கு வேலை கொடுப்பது என்பது திட்டம். கிராமப்புறத்தை ப்ளாக் ப்ளாக்காக எடுத்துக் கொள்கிறார்கள். ஒவ்வொரு ப்ளாக்கிலும் 100 பேர்களுக்கு வேலை கொடுப்பது. ஒரு மாவட்டத்தில் 10 ப்ளாக்குகள் எடுத்து, 1,000 பேர்களுக்கு வேலை கொடுப்பது என்பது மத்திய சர்க்காருடைய திட்டம். டெல்லியில் தலைமைச் செயலாளர்கள் மாநாட்டில் இந்தக் கிராமப்புறத்திட்டம் விவாதிக்கப்படும்.

கிராமப்புற மக்களுக்கு இந்த அளவில் வேலைகள் கொடுப்பது மாத்திரம் போதுமா? விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் வருஷத்தில் ஆறு மாதம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இது வேலை கொடுக்கும். ஆனல் படித்துவிட்டு வேலையற்றிருப்பவர்களுக்கு, நம்முடைய வாலிபர்களுக்கு— இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு என்ன என்று கேள்வி போட்டார்கள்.

இந்தக் கேள்வி எதிர்க் கட்சியில் இருக்கிறவர்களுடைய உள்ளங்களில் மட்டும் இருப்பது என்பதில்லை. ஆளுங் கட்சியிலிருக்கிற அத்தனை உறுப்பினர்களுடைய உள்ளங்களிலும் குமுறிக் கொந்தளிக்கும் கேள்வி இது.

பதில் சொல்லத் தான் போகிறோம்!

புதிய புதிய கல்லூரிகளைத் திறந்து, கல்லூரிகளில் சலுகைகள் கொடுத்துப் படிக்கவிட்டு, அனுப்புகிறோம். மருத்துவக் கல்லூரிகளுக்கும் மற்ற கல்லூரிகளுக்கும் அனுப்புகிறோம். பட்டதாரிகளாக ஆகிறார்கள். அப்படிப் படித்து விட்டுக் கல்லூரிகளிலிருந்து வெளிவந்ததும், அவர்கள் வேலை எங்கே, வேலை எங்கே என்று கேட்கிறார்கள். நாம் அவர்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். பதில் சொல்லப் போகிறோம்; நல்ல முறையில் பதில் சொல்லப் போகிறோம்.

அதனால்தான் இந்தத் தேர்தலில் முற்போக்குக் கூட்டணி வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து, ஆதரவு பெற்று, இந்த மாமன்றத்திலும், மத்திய சர்க்காரிலும் அரசுகள் அமைத்திருக்கும் காட்சியைக் காண்கிறோம்.

சொன்னதைச் செய்தோம்

அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு முன்னின்றிருக்கிறது. முன்பு 1967-ம் ஆண்டு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் பெரும்பான்மையானவற்றை திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றியிருக்கிறது.

இந்தப் புதிய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு, அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் நின்று தேர்தல் நேரத்தில் எடுத்துச் சொன்ன நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்கள் என்ன, எப்படி வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டும். சுதந்திர நாட்டில் ஏழைக்கு எத்தகைய சுதந்திரம் வேண்டும். பாட்டாளிக்கும், தொழிலாளிக்கும் விடிவு காலம் எந்த

வகையில் ஏற்படவேண்டும், ஏழை வீட்டில் என்றென்றும் நல்ல விளக்கு எரிந்திட வேண்டுமென்பதற்காக என்னென்ன வாக்குறுதிகள் அளித்தோமோ, அந்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்ற இந்த அரசு கொஞ்சம் கூடத் தயங்காது என்பதை மிகுந்த திட்டவட்டமாக இந்த மன்றத்தில் எடுத்துக் கூறிக்கொள்ளுகிறேன்.

மின்சார வாரியத்தில் வேலைகள்

மின்சாரத் துறையில் பல்லாயிரக் கணக்கான மனுக்களைப் பெற்றீர்களே, ஒருவரைக் கூட வேலைக்குச் சேர்த்துக் கொள்ளவில்லையே என்று பெருமதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே கேட்டார்கள்.

டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் இப்படித் தகவல் அறியாமல் பேசுகிறார்களே என்பதுதான் என் கவலை. பல்லாயிரக் கணக்கான மனுக்களைப் பெற்றது உண்மை. அந்த மனுக்கள் என்னவென்ன வேலைகளுக்காகக் கோரப்பட்டதோ அந்த வேலைகளுக்கு எல்லாம் ஆட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்: வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள்—பில் கலெக்டர்கள் 360 பேர்; டைப்பிஸ்ட் 100 பேர்; கிளார்க்குகள் 1,500 பேர்.

டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தரப்பட்ட தகவல்—அவர் சொல்லிய தகவல் என்று சொல்லவில்லை—தவறான தகவல்; மின்சார வாரியத்தில் மனுக்களைப் பெற்று யாரையும் வேலையில் சேர்க்கவில்லை என்ற குற்றச்சாட்டு தவறானது.

விலைவாசி குறைவின் அளவு

விலைவாசி பற்றிப் பேசப்பட்டது. எல்லா வகையிலும் விலைவாசி அறவே குறைந்து விட்டது என்று யாரும் கூறிக் கொள்ளவில்லை. உணவு தானியங்களைப் பொறுத்தவரை விலைவாசி குறைந்திருக்கிறது. வேறு சில விஷயங்களிலும் குறைந்திருக்கிறது.

எல்லாப் பொருள்களின் விலையும் குறையவேண்டுமென்றால் மத்திய சர்க்கார் ஒத்துழைப்புடன் தான் செய்யமுடியும். இதுதான் கவர்னர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இதனை யாரும் மறுத்திட முடியாது.

விலைவாசியைப் பொறுத்த வரை திருச்சி மார்க்கெட்டை எடுத்துக்கொண்டால் இரண்டாம் ரக அரிசி மார்ச் 10-ல்

273

100 கிலோ கிராம் கொண்ட மூட்டைக்கு ரூ. 100 ஆக இருந்தது. மார்ச் 71-ல் ரூ. 86·60 ஆகக் குறைந்திருக்கிறது: சோளம் மார்ச் 70-ல் 85·3 ஆக இருந்தது. மார்ச் 71-ல் ரூ. 73·35 ஆகக் குறைந்திருக்கிறது. கம்பு 90 ரூபாயாக இருந்தது. 52 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. ராகி 70 ரூபாயாக இருந்தது. 62 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. கடலை எண்ணெய் 470 ரூபாயாக இருந்தது. 445 ரூபாயாகக் குறைந்திருக்கிறது.

பருப்புக்கு தனி திட்டம்

பருப்பு வகை, சில எண்ணெய் வகைகளின் விலை சற்று ஏறி இருக்கிறது என்பதை மறுக்கவில்லை. அவற்றின் விலை குறைய, உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும். அதற்காகத்தான் பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க நாம் தனித் தொகை ஒதுக்கி, தமிழ்நாட்டில் ஆறு லட்சம் ஏக்கரில் பருப்பு வகைகளை விளைவிக்க வேண்டுமென்று திட்டம் தீட்டியிருக்கிறோம்.

மிளகாய் 100 கிலோ கிராம் 1970-ல் 410 ரூபாயாக இருந்தது. 1971-ல் 350 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. மஞ்சள்—ஈரோடுதான் மஞ்சளுக்குப் பேர் போனது—ஈரோடு மார்க்கெட்டின்படி 380 ரூபாயாக இருந்தது. 180 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. மஞ்சள் விலை குறைந்ததைப் பெண்கள் அதிகமாக வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். விறகுவிலை 14-ல் இருந்து 18 ஆக ஏறியுள்ளது.

ஒன்றுபட்டு வாதாடுவோம்

விலைவாசி குறைவதற்கு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருக்கிறது. அதே நேரத்தில் மத்திய அரசு விலைவாசிகளை உயர்த்தும் போது நம்மைக் கலந்து கொண்டு செய்தாக வேண்டும். அதைத்தான் திரு கே.எம். சுப்பிரமணியம் அவர்கள் விலை உயர்வை எதிர்த்தீர்களா ? என்று கேட்டார்கள்.

எதிர்ப்பதற்கு எங்கள் கையைப் பலப்படுத்துங்கள். எல்லோரும் சேர்ந்து எதிர்ப்போம். எதிர்ப்பதற்கு நாங்கள் அஞ்சுபவர்கள் அல்ல. எந்த முறையிலே எதிர்ப்பது ? அந்த எதிர்ப்பைத்தான் கவர்னர் உரையிலும் நிதிநிலை அறிக்கையிலும் இணைத்திருக்கும் வாசகங்கள் தெரிவிக்கின்றன.

மத்திய அரசு சம்பள உயர்வு அறிக்கையாக இருந்தாலும், விலைவாசிகளை உயர்த்துவதாக இருந்தாலும் மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அவை நம்முடைய எதிர்ப்பைக் காட்டுகின்ற உணர்ச்சியின் அடிப்படையில் உள்ள வாசகங்கள்தான்.

நியாயத்தைக் கேட்டோம்

திட்டங்களுக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு நீங்கள் அவர்களுடன் வாதித்தீர்களா என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். எத்தனை முறை கடிதம் எழுதினோம் ? எத்தனை முறை சந்தித்துப் பேசி இருக்கிறோம் ? கடிதங்களின் முழு விவரங்களைக் கொடுக்க முடியாவிட்டாலும் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

பேரவைத் தலைவராக இருக்கின்ற அன்றைய நிதியமைச்சர் அவர்கள் 1969 ஆகஸ்டில் இந்தச் சட்டமன்றத்தில் அறிக்கை ஒன்றை வைத்தார்கள். அதில் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதி அளவின் சதவிகிதம் குறைந்தது குறித்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியப் பிரதமருக்கு 1969 செப்டம்பரில் நான் எழுதிய கடிதத்தில் இந்திய நிதிஆணைக்குழு இழைத்த அநீதி, திட்டக் குழுவின் தகுதிவரைமுறைகளினால் நேர்ந்துள்ள நஷ்டம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறேன்.

மூன்று நிபந்தனைகள்

இந்தியப் பிரதமருக்கு மீண்டும் 1969 நவம்பரில் ஒரு கடிதம் எழுதியதோடு இந்தியப் பிரதமரையும், திட்டக்குழுத் துணைத்தலைவர் அவர்களையும் சந்தித்து நீண்ட நேரம் இதைப்பற்றி விவாதித்திருக்கிறேன்.

இதற்குப் பிறகு இரண்டு மூன்று தடவை நிதியமைச்சர் திட்டக் குழுவினரோடு பேசி நமக்குச் சாதகமான ஒரு முடிவுக்கு வரமுடியாததால் ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு நிச்சயிக்கப்படாமல் போய்விட்டது.

ஊதியக் குழுவின் சிபாரிசுகளால் ஏற்படக்கூடிய பெரும் செலவினை ஈடுகட்ட மத்திய அரசு உதவியளிக்க வேண்டுமென 1970 மார்ச்சில் வலியுறுத்தப்பட்டது.

தேசிய அபிவிருத்திக்குழு 21—3—70 அன்று கூடியபோது அக்கூட்டத்தில் எதிர்ப்புக் குறிப்பு எழுதினர்களா என்று கேட்டார்கள். அந்தக் கூட்டத்திலேதான் நான் மூன்று நிபந்தனைகளைச் சொன்னேன். ஒன்று சேலம் உருக்காலை; இரண்டாவது சிறப்பு நிதியாக ஒதுக்கப்பட்ட 800 கோடி ரூபாயில் நம்முடைய மாநிலத்திற்குப் பங்கு வர வேண்டும் என்பது. மூன்றுவது ஒவ்வொரு மாநிலத்திலும் பின்தங்கிய பகுதிகளுக்காக ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாயில் நம்முடைய மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளுக்கும் பணம் ஒதுக்க வேண்டுமென்பது.

ஆக, இந்த மூன்று நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் தான் திட்டத்திற்குச் சம்மதம் தருவோம் என்று சொன்னோம். அதற்குப் பிறகுதான் 800 கோடி ரூபாயில் முதல் தடவையாக 7 கோடி ரூபாய் தந்தார்கள். இந்த ஆண்டு தர மறுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், தர்மபுரி மாவட்டத்திற்கும் இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். முதலிலே சொல்லப்பட்ட சேலம் உருக்காலைக்கும் இசைவு தந்தார்கள்.

இடைவிடாத முயற்சி

நமக்குச் சிறப்பு உதவியளிப்பது அவசியம் என்றும் அதற்காக நம் நிதி வாயில்களைப் பரிசிலனை செய்ய வேண்டுமென்றும் 1970 ஏப்ரல் 15 அன்று நாம் கோரினோம். 25—4—70 அன்று இந்தக் கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

நமது இக்கட்டான நிதி நிலையை 1970 ஆகஸ்டில் விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். டாக்டர் காட்கில் அவர்கள் உடல்நிலை சரியாக இல்லாததால் ஒத்தி வைக்கப்பட்டிருந்த சந்திப்பு துரிதமாக நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தினோம்.

நம்முடைய தொழிலமைச்சர், அதிகாரிகள் அனைவரும் சேர்ந்து 1970 அக்டோபர் 12 அன்று டாக்டர் காட்கில் அவர்களைச் சந்தித்துப் பேசினோம். நம் வாதத்தில் நியாயம் இருக்கிறது என்பதை ஓரளவுக்கு ஒப்புக்கொண்ட காட்கில் அவர்கள், அதிகாரிகள் மட்டத்தில் நம் நிதி பற்றிய புள்ளி விவரங்கள் திரும்பப் பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற அளவோடு பேச்சு வார்த்தை முடிந்தது. அந்த சந்திப்புக்குப் பிறகு 1970 அக்டோபர் 31, நவம்பர் 1 ஆகிய இரு நாட்களிலும் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன.

தலைமையமைச்சரிடம் 1970 டிசம்பர் இறுதியில் இதே கோரிக்கைகளை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறேன். 1971 ஜனவரி 19-ல் தலைமை அமைச்சருக்கு மீண்டும் இது குறித்து வற்புறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

தொடரும் போராட்டம்

நம் வாதங்களுக்கு ஒரு சில மறுப்புகள் தெரிவிக்கும் நீண்ட குறிப்பை திட்டக்குழுச் செயலாளர் 1971 ஜனவரி 12-ல் அரசுக்கு அனுப்பினர். அதற்கு பிப்ரவரி 3-ம் நாள் மறுபடியும் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. இப்படி தொடர்ந்து மத்திய அரசோடு போராடிக்கொண்டிருக்கிறோம்.

டாக்டர். எச். வி. ஹாண்டே : 21—3—70 அன்று நடந்த என்.டி.சி. மீட்டிங்கில் சில நிபந்தனைகளைக் கூறியதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மீட்டிங்கில் இதையெல்லாம் செயலில் ஒத்துக்கொள்ளும் வகையில் அதிகார பூர்வமாகத் தெரிவிக்கும் வகையில் வாயில் சொன்னதோடு மட்டுமில்லாமல் ' டிஸ்சென்டிங் நோட் ' எழுதியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முதல்வர் : அங்கே நமது பேச்சுக்கள்தான் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி ரிகார்டுகள் எதுவும் பதிவு செய்யப்படுவதில்லை.

நாம் எந்தெந்த அளவுக்குப் போராடி இருக்கிறோம், எந்தெந்த அளவுக்குப் போராடி வெற்றி பெற்றிருக்கிறோம், பெற வேண்டிய உரிமைகளை எப்படி எப்படியெல்லாம் வலியுறுத்திப் பெற்றிருக்கிறோம் என்பதற்காகத்தான் இதையெல்லாம் சுட்டிக்காட்டுகிறேன்.

தகுதி வரைமுறையை எதிர்ப்பது ஏன்?

திட்டத்திற்காக மத்திய அரசு கொடுக்க ஏற்கெனவே ஒத்துக் கொண்ட தொகை 250 கோடி ரூபாய்; ஆனால் மத்திய அரசு 202 கோடி ரூபாய் அளவுக்குக் குறைத்திருக்கிறது. மத்திய அரசின் சார்பிலே அங்கே இருக்கிற திட்டக்குழு, மாநிலங்களுக்கு என்று சில தகுதிகளை வரையறுத்தது. அந்தத் தகுதிகள் என்ன என்ன என்று பார்த்தால் மக்கள் தொகுதியிலே 60 சதவீதம், நபர்வாரி வருமானம் என்பதிலே ஒரு 10 சதவீதம், தனிப் பிரச்சினைகள் என்பதற்காக ஒரு 10 சதவீதம்; வரி விதிக்க எடுத்த முயற்சிக்காக ஒரு 10 சதவீதம், தொடர்ந்து திட்டவேலைகள் நடைபெறுகிறதா என்ற அடிப்படையில் 10 சதவீதம் என்ற அளவில் வரையறுத்திருக்கிறது. இந்த அளவிலேதான் மாநிலத்தின் தகுதிகள் என்று தகுதியை உருவாக்கினார்கள்.

இந்த அடிப்படையின் காரணமாகத் தமிழ்நாடு அரசுக்கு கிடைக்கக்கூடியது கிடைக்காமல் போய் இருக்கிறது. ஆகவே, இந்தத் தகுதிகளை வரையறுத்த முறைகளை எதிர்க்கிறேன்.

இப்படித் தகுதி வரையறுத்த முறைகளால் ஆந்திரா 40 கோடி ரூபாய் இழந்துவிட்டது; மத்தியப்பிரதேசம் 26 கோடி ரூபாயை இழந்திருக்கிறது; மைசூர் 49 கோடி ரூபாயை இழந்து விட்டது, மேற்கு வங்காளம் 24 கோடி ரூபாயை இழந்து விட்டது, தமிழ்நாடு 48 கோடி ரூபாயை இழந்து விட்டது :

வராது போன உதவி

நபர்வாரி சராசரி வருமானம் என்றிருக்கிறதே ஒரு பத்து சதவீதம்; அதை அகில இந்தியக் கணக்கிலே பார்த்தால் அனைத்திந்திய சராசரி 418 ரூபாய். தமிழ் நாட்டின் நபர்வாரி சராசரி வருமானம் 434 ரூபாய். 418 ரூபாய்க்கு மேல் நபர்வாரி வருமானம் இருந்தவர்களுக்கு உதவி மறுக்கப்பட்டது. நமக்கு—தமிழ் நாட்டுக்கு 16 ரூபாய் அதிகமானது என்ற காரணத்தாலே, நமக்கு அந்தப் பத்து சதவீதத்தில் பங்கு இல்லையென்று சொல்லிவிட்டார்கள். 418-க்கும் 434-க்கும் அதிக வித்தியாசம் இல்லையென்ற அளவில் அவர்கள் செயல்பட்டிருந்தால் நமக்கு மேலும் 25 அல்லது 30 கோடி ரூபாய் கிடைத்திருக்கும்.

அதே நேரத்தில் என்ன செய்தார்கள்? 9 மாநிலங்களுக்கு ரூ. 800 கோடி சிறப்பு நிதியாகத் தந்தார்கள். முன்பு நான் கூறியபடி தகுதி வரையறுத்த முறைகளால் மத்திய உதவியைக் கணிசமான அளவு இழந்த தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில், மத்தியப் பிரதேசம், ஆந்திரா, மைசூர், மேற்கு வங்காளம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கு இச் சிறப்பு நிதியில் பங்கு அளித்தார்கள். ஆனால் அந்த நிதியில் தமிழ் நாட்டுக்குப் பங்கு இல்லை.

அதிகமாகச் சண்டைபோட்டு, நிபந்தனை போட்டு, தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் கேட்டபோது 7 கோடி ரூபாய் தரப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு தர மறுக்கிறார்கள். அதைத்தான் இந்த நிதி நிலை அறிக்கையிலும் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம்.

தனிப் பிரச்சினையாக கணக்கிட்டு மேற்கு வங்காளத்தில் கல்கத்தா நகரத்திற்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், சென்னை மாநகரத்திற்குத் தனிப் பிரச்சினையாகப் பணம் கொடுக்கவில்லை. சென்னை மாநகரின் மவுண்ட்ரோடு மற்றும் பல ரோடுகளையும் பார்த்துவிட்டு, சென்னை மாநகரம் எல்லாவகையிலும் முன்னேறியிருக்கிறது என்ற தன்மை காரோ எமாற்றிக்கொள்ள நான் விரும்பவில்லை

கடற்கரையோரத்தில் இருக்கிற குப்பங்களில் எவ்வளவோ பேர் நடுத்தெருவில் படுப்பதற்குப் பாய் கூட அற்ற நிலையில் இருக்கிறார்கள். குடிசைகள் எல்லாம் இருள் சூழ்ந்திருக்கின்றன. சுகாதார வசதி கிடைத்தபாடில்லை. இவ்வகைக் குறைகளை நீக்கி, மேம்பாட்டுக்காக நாம் 40 கோடி ரூபாய் அளவிலே குடிசை மாற்று வாரியத்தை அமைத்திருக்கிறோம்.

இதைத் தனிப்பிரச்சினையாக மத்திய அரசு கவனித்து அதிலே பத்துச் சதவீதம் ஒதுக்கியிருந்தால் நமக்கு ஒரு பத்துக் கோடி ரூபாய் கிடைத்திருக்கும். மாநிலத் தகுதி என்ற அடிப்படையில் செயல்படுகிற விதம், நமக்கு மறுக்கப்படுகிற விதம் சரியில்லை.

ஐந்து மாநிலங்களுக்கு மத்திய திட்ட உதவியில் இழப்பு ஏற்பட்டதில், தமிழ்நாட்டைத் தவிர நான்கு மாநிலங்களுக்கு சிறப்பு நிதி கிடைக்கிறது. வேறு ஐந்து மாநிலங்களுடன் சேர்த்து 800 கோடி ரூபாய் சிறப்பு நிதியாகத் தரப்படுகிறது. அதில் நமக்குப் பங்கு இல்லையென்று சொல்வது நியாயம் அல்ல என்பதைத்தான் கவர்னர் அவர்களுடைய உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

போராடிப் பெற்றவை

நாம் போராடி எதுவுமே பெறவில்லையா என்று கேட்டால், போராடிப் பெற்றிருக்கிறோம் என்று சொல்ல விழைகிறேன்.

கையாலாகாதவர்கள், புள்ளி விவரங்களைக் கேட்டறியாதவர்கள் என்றெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லாவிட்டாலும், சுற்றிச் சுற்றி அந்தப் பொருள் தொனிக்கும்படியாகப் பேசினார்கள்.

சென்ற ஆண்டு மட்டும் வாதிட்டு வறட்சிப் பணிக்காக 14 கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம்.

அடுத்து, ராயலசீமா கடன், ராஜாஜி ஆட்சியில் ரிசர்வ் பாங்கின் ஓவர் டிராஃப்ட் ஆக 23 கோடி ரூபாய் இருந்தது. அதில் நமக்கு 13 கோடி ரூபாய் பங்கு உண்டு.

இப்போது பேரவைத் தலைவராக இருப்பவர் நிதியமைச்சராக இருந்த நேரத்தில் அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். போராடியதன் விளைவாகத் தவணையாக அந்தக் கடன் (13 கோடி ரூபாய்) 4 வருடமாக தள்ளிக் கொடுத்து வருகிற சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்படியாக நாம் சென்ற ஆண்டு 31 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறோம். புயல்நிவாரணப் பணிகளுக்காக 14 கோடி ரூபாய், பின்னர் 10 கோடி ரூபாய், பின்னர் 7 கோடி ரூபாய் ஆக—சென்ற ஆண்டு வாதிட்டுக் கேட்டுப் பெற்றது 31 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்

அதேபோல் இந்த ஆண்டும் பெற வேண்டுமென்றுதான் போராடி வருகிறோம். சட்டசபையில் இப்படி அறிக்கை வைத்திருக்கிறோம், பேசுகிறோம், இவையெல்லாம் எங்களுடைய எதிர்ப்புத்தான். தமிழ்நாட்டு மக்களுடைய சார்பாக மத்திய அரசுக்குக் காட்டும் எதிர்ப்புத்தான் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்;

மக்களிலே சிலபேர் இது எங்கே பிரிவினையில் கொண்டு போய்விடுமோ என்று அஞ்சுகிறார்கள். அப்படி அஞ்சத் தேவையில்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்றுதான் கோருகிறோம். இந்திய நாட்டு ஒருமைப்பாட்டில் நாம் அக்கறை கொண்டிருக்கிறோம். இந்திய நாடு ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறோம்.

இந்திய நாடாளுமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கிழக்கு வங்காளப் பிரச்சினையை அந்தத் தீர்மானம் பரிந்துரைத்திருக்கிறது. ஒரு நாடு பிரிந்துபோகிறபோது நாடாளுமன்றத்திலே ஆதரவு தரப்படுகிறது. அதைப்பற்றிய சர்ச்சையில் நான் இறங்க விரும்பவில்லை.

முஜிபுர் ரகுமான் கோரியது என்ன?

கிழக்குப் பாகிஸ்தானின் தலைவராக இருக்கிற முஜிபுர் ரகுமான் என்ன கோரிக்கைகளை ஆரம்பத்தில் வைத்தார்? இலங்கையில் இருந்து வெளிவரும் 'பீப்ள்ஸ் வில்' என்ற பத்திரிகையில் ரகுமானுடைய ஆறு அம்சத் திட்டம் இருக்கிறது.

இவைகளை யெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டு அதைத் திருப்பித் திருப்பிச் சொல்கிறது என்று யாரும் கருதவேண்டாம்.

இப்போது சுதந்திர நாடு என்று கேட்கிற ரகுமான் முதலில் ஆறு அம்சத் திட்டத்தைத்தான் முன்வைத்தார். அவரதுமுதல் திட்டம் கிழக்குப் பாகிஸ்தான், மேற்கு பாகிஸ்தான் இரண்டு மாநிலங்களில் உண்மையான தன்மையில் கூட்டாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது. இது நாம் கேட்கிற சுயாட்சியின் உண்மையான தன்மையில், கூட்டாட்சி ஏற்படவேண்டும் என்பதன் சாயலாகத் தோன்றக் கூடும்.

இரண்டாவது திட்டம், பாதுகாப்பு, வெளி விவகாரம் ஆகிய இரண்டு மட்டும் மத்திய அரசின் அதிகார வரம்பில் வரவேண்டும்; மீதி அத்தனை அதிகாரங்களும் மாநிலத்திற்கு வரவேண்டும் என்பது. நான் அப்படிச் சொல்லவில்லை. நம்முடைய மாநில சுயாட்சியில் அப்படிச் சொல்லவில்லை. நமக்கும் அதற்கும் வித்தியாசமிருக்கிறது.

மூன்றாவதாக, இரண்டு பகுதிகளுக்கும் கரன்சி நோட்டு தனித் தனியாக இருக்க வேண்டும். அடுத்தது, வரி போடும் அதிகாரமும், வசூலிக்கும் அதிகாரமும் மாநிலத்திற்கே இருக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார். இந்த வருமானத்திலிருந்து மத்திய அரசின் நிர்வாகத்திற்கு ஒரு பகுதியைச் செலுத்துவது என்பது அவருடைய திட்டம். இங்கே தலை கீழாக இருக்கிறது. மத்திய அரசு வசூலித்து ஒரு பகுதியைத்தான் நமக்குக் கொடுத்து வருகிறது.

அடுத்து, அந்தந்த மாநில அந்நியச் செலாவணிவருமானம் அந்தந்த மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்பது. மத்திய அரசுக்குச் செலவுக்குத் தேவையான அந்நியச் செலாவணியை மாநில அரசு பங்காகச் செலுத்த வேண்டும். அடுத்து, வர்த்தகம், தொழில் வளர்ச்சிகளுக்காக வெளிநாடுகளோடு ஒப்பந்தம் செய்து கொள்கிற உரிமைகளை மாநிலத்திற்கே வழங்கவேண்டும் என்ற கோரிக்கையாகும்.

ஆறாவது (ஏ) தனி ராணுவம், இருமாநிலங்களுக்கும் தனித் தனியாக இருக்க வேண்டும். அதிலேயும் (பி) வங்க மொழியும் கூட்டாட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டும்.

இவை எல்லாம் முஜிபுர் ரகுமான் தன்னுடைய மாநில சுயாட்சித் திட்டத்திற்காக எடுத்து வைத்த 6 அம்சமாகும். இப்போது அவரது மாநில சுயாட்சித் திட்டம் நாட்டுக்குச் சுதந்திரம் தேடுகிற திட்டமாக, பாகிஸ்தானில் இருந்தே பிரிந்து போகிற திட்டமாக ஆகிவிட்டதைக் காண்கிறோம்.

எதிர்க் கட்சித் தலைவரின் ஆதரவு

மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் பேசும்போது நம்முடைய உரிமைகளுக்காக நாங்கள் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் 'நாங்கள் உதவத் தயார்' என்று சொன்னார்கள்.

நான் பேசும்போது குறிப்பிட்டேன். அவர் கவனம் இல்லாமல் சொல்லவில்லை. நாங்கள் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் உதவத் தயார் என்று திரு. ராஜாராம் அவர்கள் சொன்னார் என்றால் நாங்கள் எடுக்கிற நடவடிக்கைகள் எல்லாம் அறவழி முறையில் இருக்கும். இந்தியாவைப் பலப்படுத்தி மாநிலங்களும் வளப்படுகிற முறையில்தான் இருக்கும் என்கிற நம்பிக்கையின் காரணமாகத்தான் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் ஒத்துழைக்கத் தயார் என்று சொல்லியிருக்கிறார் என்று குறிப்பிட்டேன்.

இது பிரிவினைக் கோரிக்கை அல்ல

அதையேதான் மீண்டும் சொல்கிறேன். நாம் கோருகிற அதிகாரங்கள் மாநிலத்தைத் தனியாகப் பிரிப்பதற்கு அல்ல. இந்தியா எப்போதும் ஒன்றாக வலுப்பெற்று இருப்பதற்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என்று கோருகிறோம். மாநில அதிகாரங்களில் மத்தியத் தலையீடு அடிக்கடி இல்லாதபடி, தவிர்க்கப்பட வேண்டும். மத்திய அரசின் அதிகாரச் சுமை குறைந்தால் அதுவும் செம்மையாகத் திறம்படத் தன் பணியை ஆற்றமுடியும். மாநிலங்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்படுவதன் மூலம் மாநிலங்கள் வளமடையும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். கவர்னரின் உரையிலும், எனது அறிக்கையிலும், இந்தக் கருத்துத்தான் எதிரொலிக்கிறது: இதுதான் இந்த மன்றத்தின் ஏகோபித்த வாசகமாக உருக்கொள்ள வேண்டும்.

கவர்னர்பெருமான் உரையில் புரட்சிகரம் இல்லை, சோஷலிசம் இல்லை என்று விவாதத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

திரு. மணலி கந்தசாமி அவர்களும், திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களும் நிலச் சீர்திருத்தம் பற்றிச் சொன்னார்கள். பல அன்பர்கள் புரட்சிகரமான மாறுதல் உண்டாக்கப்பட வேண்டும் என்றார்கள்.

நிலமில்லாதோர் இல்லை என்ற நிலை

நிலம் இல்லாதவர்கள் இருக்கக் கூடாது, ஒவ்வொருவருக்கும் 50 சென்ட் நிலமாவது இருக்க வேண்டும். 15 குழி மனைக்கட்டாவது இருந்தாகவேண்டும் என்கிற புதிய சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு தக்க ஏற்பாட்டைச் செய்ய என்னுடைய தலைமையில் உருவாகியிருக்கிற அந்தக் குழு விரைவில் அந்தப் பணியை ஆராயத்தொடங்கும்.

பஸ் உச்சவரம்பைப் பற்றிக்கூடச் சொன்னார்கள். அந்த அடிப்படைக் கருத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. நேற்று திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது கூடக் குறுக்கிட்டுச் சொன்னேன். பஸ்ஸுக்கு உச்சவரம்பு விரைவில் வரும். 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்டோடு' வரும் என்று இந்த நேரத்திலும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

வேடுவர்கள் சூழ்ந்த மான்

மேலவையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மது விலக்கைத் தயவு செய்து எடுத்து விடாதீர்கள் என்று குறிப்பிட்டார்கள். மது விலக்குக் கொள்கையைப் பொறுத்த வரை தி.மு.க.வுக்கு அதில் நம்பிக்கை இல்லை என யாரும் கருதமாட்டார்கள். எங்களை ஆளாக்கிவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டப் பேரவையிலும், மேலவையிலும் உரை நிகழ்த்தும் போது இந்த அரசு மது விலக்குக் கொள்கையில் தீவிரமாக இருக்கும் என்று அறிவித்தார்கள்.

தமிழ்நாட்டிலும், குஜராத்திலும் மட்டும் இப்போது மதுவிலக்கு அமுல் படுத்தப்பட்டு

வருகிறது: இந்தியா முழுமைக்கும் ஏன் இதனை அமுல் ஆக்கக்கூடாது என்பது தான் நமது கேள்வி. நான் கூட நிருபர்களைச் சந்தித்தபோது குறிப்பிட்டேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் எனக் கேட்கும் நாங்கள் இந்த ஒரு அதிகாரத்தினை மத்திய அரசுக்குத் தரத் தயாராக இருக்கிறோம். அதனைக் கொண்டு இந்தியா முழுவதற்கும் மதுவிலக்கை அமல்படுத்த மத்திய அரசு முன் வரவேண்டும் என்றேன்.

தமிழ் நாட்டில் மதுவிலக்கு அமலில் இருக்கிறது. ஆனால் இங்கிருந்து 50 மைல் சென்றால் பாண்டிச்சேரி—அங்கு மது விலக்கு கிடையாது. இந்தப் பக்கம் 50 மைல் சென்றால் ஆந்திர எல்லை வருகிறது; மறுபக்கம் 50 மைல் சென்றால் பெங்களூர் வருகிறது. மற்றொரு பக்கம் கேரளம். இப்படி நான்கு பக்கமும் வேடுவர்கள் சூழ்ந்த மானைக நமது மாநிலம் விழித்துக்கொண்டிருக்கிறது. நமது மாநிலத்துக்குக் கிடைக்கும் வருமானத்தையும் இழந்து நிற்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நமது மாநிலத்தில் மதுவிலக்குத் தோல்வி அடைந்துவிட்டதாகக் கூறினார்கள். நான் அதனை ஒப்புக்கொள்கிறேன். முந்தைய அரசினரைப் போல் ஆகா! மகாப் பெரிய வெற்றி! எனக் கூறி என்னையே நான் ஏமாற்றிக்கொள்ள விரும்பவில்லை. நான் உறுதியாக ஒப்புக்கொள்கிறேன். இக்கொள்கை தோல்வி அடைந்து பலரது நாணயத்தையும் கெடுக்கிறது. அதிகார வர்க்கத்தாரையும் கெடுக்கிறது. இதனை ஏன் கவனிக்கக்கூடாது என்று கேட்கலாம்: ஒன்றா இரண்டா கவனிப்பதற்கு! கொள்கையைப் பொறுத்தவரை இது புனிதமான திட்டம். ஏற்கிறேன். இந்தப் புனிதமான கொள்கை இந்தியா முழுதும் இருக்க வேண்டாமா!

குதிரைப் பந்தயம் ஏன்?

குதிரைப் பந்தய ஒழிப்பும் ஒரு நல்ல திட்டம். எப்போது ஒழிக்கப் போகிறீர்கள் என்று இங்குள்ளவர்களைவிட அண்டை மாநிலத்தவர் அதிக அக்கறை காட்டுகின்றனர். நாம் எடுத்துவிட்டால் உடனே நமது மாநில எல்லையை ஒட்டி அவர்கள் எல்லையில் குதிரைப் பந்தயத்தை ஆரம்பித்து வருமானம் பெறலாம் என முனைந்து நிற்கிறார்கள்!

தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை ஒழிப்பு நல்ல திட்டம் தான். அது தமிழ் நாட்டில் மட்டுமிருந்தால் என்ன நிலை? தமிழ் நாட்டில் தீண்டாமை ஒழிந்து—இங்குள்ள ஒரு ஆதி திராவிட நண்பர் அடுத்த ஆந்திர மாநிலத்திற்குச் சென்று அங்குத் தீண்டாமை ஒழிக்கப்படாமலிருந்தால் என்ன நிலை ஏற்படும்—இங்கு

783

நடப்பது போல அங்கு நடந்தால் அவர் அடி உதைக்கு உள்ளாகமாட்டாரா? இப்போது தீண்டாமை ஒழிப்பு அகில இந்திய ரீதியில் பரப்பப்பட்டிருப்பதால் அகில இந்தியாவிலும் வெற்றி பெறும் நிலை உள்ளது.

தீண்டாமை ஒழிப்பைப் போலவே காந்தியக் கொள்கையான மதுவிலக்கை, காந்தி வளர்த்த காங்கிரஸ் அரசுகள் கைவிட்டுவிட்டன. நமது அரசு கைவிடாததற்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

மதுவிலக்கைப் பற்றி திரு டி. கே. சண்முகம் அவர்கள் ஒரு பாட்டையே பாடினார்கள். மதுவிலக்கை ரத்து செய்தால் ஆங்காரமாக தொகையருவே பாடிவிடுவார்கள். அந்த அருமையான பாட்டைக் கேட்கவாவது ரத்து செய்தால் என்ன என்று கூட ஒரு ஆவல் தோன்றுகிறது. நான் இப்படியெல்லாம் கூறுவதால் மதுவிலக்கு ரத்தாகும் எனப் பத்திரிகைக்காரர்கள் தலைப்புப் போட்டுவிடவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். இத்தகைய சூழ்நிலைகளைக் கொண்டு மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் என்று அனைத்துக் கட்சியினரையும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கிருஷ்ணசாமி நாயுடு (நி. காங்): முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்கு எடுக்கப்படலாம் என்ற தோரணையில் உரை நிகழ்த்தினார்கள். இங்குள்ள 2 கோடி பெண்கள் சார்பில் தயவு செய்து மதுவிலக்கை ரத்து செய்து விடாதீர்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

முதல்வர்: ரத்து செய்யப் போவதாகக் கூறவில்லை. உறுப்பினர்களைச் சிந்தித்துப் பார்க்கத் தான் கூறினேன். மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட மாநிலங்களிலும் பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

நிதிநிலை அறிக்கை விவாதத்துக்கு முதல்வர் பதில்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகியவைகளில் இடைக்கால நிதி நிலை அறிக்கை விவாதத்துக்குப் பதிலளித்துத் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் நிகழ்த்திய உரைகளின் தொகுப்பு கீழே தரப் படுகிறது. முதல்வர் அவர்களின் உரை வருமாறு :—

இடைக்கால நிதிநிலை அறிக்கை மீது நடைபெற்றுள்ள விவாதத்திற்குப் பதில் அளிக்கிற இந்த நேரத்தில் ஏற்கனவே இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்து பிறகு அயல் நாடாக ஆகிவிட்ட பாகிஸ்தானின் ஒரு பகுதியான கிழக்கு வங்காளத்தில் நடைபெறுகிற கோரக் கொலைகளை, உலக அரசியல் சட்டங்களுக்கு அப்பாற்பட்டு மனிதாபிமானத்தோடு நாம் கூர்ந்து கவனித்து, அந்த மக்களினுடைய உரிமைகளுக்காகப் போராடுகிற வீர மறவர்களுக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இது வெளிநாட்டு விவகாரம், அதிலே நாம் தலையிடக்கூடாது என்றாலும் கூட, நான் முதலில் குறிப்பிட்டதைப்போல் உலக அரசியல் சட்டங்களினுடைய நிலைமைக்கும் அப்பாற்பட்ட நிலையில் மனிதாபிமானத்தோடு நான்கு கோடி தமிழ் மக்களின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் வெகு விளக்கமாக நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த அவையில் இன்றைக்கு ஒரு புதிய அரசு மீண்டும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருக்கிற நிலையில், நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் என்ற முறையில் நான் முன்வைத்து உங்களுடைய சீரிய கருத்துக்களையெல்லாம் கேட்டுப் பதிலளிக்கிற பேறு பெற்றமைக்குப் பெருமைப் படுகிறேன். மிகுந்த பூரிப்பும் அடைகிறேன்.

ஆற்றல் படைத்தவர்கள்

பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு நான்காண்டுக்காலம் அவர் வழி நின்று ஆட்சி நடாத்தித்தமிழ் நாட்டுப்பெருங்குடி மக்களின்பேராதரவினைப்பெரும்பான்மையாகப் பெற்று இந்த அரசு அமைந்திருக்கிறது. இங்கு வந்திருக்கிற உறுப்பினர்கள் எவ்வளவு ஆற்றல் மிக்கவர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

இந்த மாமன்றத்திற்கு வந்திருக்கிற உறுப்பினர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாத்திரம் 30 வழக்கறிஞர்களும், நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியின் சார்பில் 5 வழக்கறிஞர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 2 வழக்கறிஞர்களும், பார்வேர்ட் ப்ளாக் கட்சியின் சார்பில் ஒரு வழக்கறிஞரும், முஸ்லீம் லீக் சார்பில் ஒரு வழக்கறிஞரும் ஆக 39 வழக்கறிஞர்கள் இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் டாக்டர்கள் 4 பேரும், சுதந்திரா கட்சி சார்பில் 2 பேரும் ஆக ஆறு பேர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் ஆற்றல் மிகு கருத்துரைகளை மாத்திரம் அல்ல, சமயத்தில் உதவக் கூடிய அளவிலும் இங்கே ஆறு டாக்டர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆசிரியர்கள் பிரதிநிதிகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 5 பேரும் சுயேச்சை ஒருவரும் ஆக 6 பேர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். பொறியாளர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒருவர் இடம் பெற்றிருக்கிறார். பட்டதாரிகள் சார்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 20 பேரும், காங்கிரஸ் கட்சி சார்பில் 3 பேரும், ஆக 23 பேர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகள் வரிசை

இந்த அளவிற்கு ஆற்றல் படைத்தவர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவத்துறை நண்பர்கள், பொறியாளர் இப்படிப் பட்டவர்கள் நிறைந்திருக்கிற இந்த மாமன்றத்தில் நான் முதல் அமைச்சராக இருப்பதிலும், விவாதங்களுக்குப் பதில் அளிப்பதிலும் உள்ளபடியே பெரும்பேறு பெற்றவன் என்ற முறையில் நான் பெருமைப்படுகிறேன். எதிர்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பவர்களில் குறிப்பிடத்தக்கவர், காங்கிரஸ் கட்சியின் தலைவராக வீற்றிருக்கும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள். அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்க வேண்டுமென்று நான் பலமுறை ஆசைப்பட்டவன். அந்த ஆசை இன்றைக்கு அரைகுறையாக நிறைவேறியிருப்பதற்காக நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால் நல்ல வாதத்திறமையோடும், கருத்தாழத்தோடும், புள்ளி விவரங்களோடும், மெத்த மரியாதையுணர்ச்சியோடும், அரசியல் பண்போடும், தமிழர்களின் நாகரீகத்திற்கு ஏற்றவாறு அவர்கள் பேசக் கூடியவர்கள் என்ற காரணத்தினாலும், அவர்கள் இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்திருக்கக் கூடாதா என்று நான் பல நேரங்களில் எண்ணியதுண்டு. என்னுடைய அமைச்சர் பெருமக்களிடத்திலும் அதைப் பற்றிச்சில நேரங்களில் அங்கலாய்த்துக் கொண்டதும் உண்டு. இன்று அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக வரமுடியாவிட்டாலும் இன்றைக்கு எதிர்க்கட்சிக்

குழுவில் பிரதான கட்சியாக இருக்கிற காங்கிரஸ்கட்சியின் தலைவராக அமர்ந்திருக்கிறார்கள். அதற்கு வழி வகுத்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அவர்கள் நன்றி சொல்லாவிட்டாலும் நான் அவர்கள் இங்கு இடம் பெற்றிருக்கிறார்களே என்ற வகையில் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தலைவராக வீற்றிருக்கிற மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஐந்தாண்டுக் காலத்திற்கு மேலாகப் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்து பாராளுமன்றத்தில் நீண்ட நேரம் பேசக்கூடியவர் என்ற பெயரையும், நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடியவர் என்ற புகழையும் பெற்றவர்களாவார்கள். அவர்களுடைய முற்போக்கு எண்ணங்களை இந்த மாமன்றத்தில் தங்குதடையில்லாமல் எடுத்துச் சொல்லட்டும். அவைகள் எல்லாம் எங்களுக்கு நல்ல அறிவுரைகளாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

தோழமை உணர்ச்சி

முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராக வீற்றிருக்கிற பெருமதிப்பிற்குரிய திருப்பூர் மொய்தீன் அவர்கள் நாங்களெல்லாம் மாணவர்களாக இருந்த காலத்தில் மேடைப் பேச்சுக்கள் மூலமாக நாங்கள் எல்லாம் உணர்ச்சியும் உத்வேகமும் அடையக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டில் புகழ் வாய்ந்தவர்களாக இருந்தவர்களாவார். இன்று சட்ட மன்றத்தில் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்று அவர்கள் தரக்கூடிய இனிய கருத்துக்கள், தோழமை உணர்ச்சியோடு பரிமாறிக் கொள்ளக்கூடிய நல்லெண்ணங்கள் இவைகளுக்கெல்லாம் இந்த மாமன்றத்தில் நல்ல மதிப்பு இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

பார்வார்ட் பிளாக் கட்சியின் தலைவராக அமர்ந்திருக்கக்கூடிய நண்பர் திரு. பெருமாள்அவர்கள் வீர உரை ஆற்றுவர், அதே நேரத்தில் விவேகம் மிளிர்ந்திருக்கத் தக்க அளவிற்கு உரையாற்றுவார். அவர்கள் கட்சி சார்பில் எடுத்துச் சொல்கிற கருத்துக்களையும் இம்மாமன்றம் நின்று நிதானித்துக்கவனித்து நல்லவைகளைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறது என்றும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

குட்டியைக் கவ்வும் பூனை

சுதந்திராக் கட்சியின் தலைவராக வீற்றிருக்கிற மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் மேலவை உறுப்பின

ராகவும் இருந்திருக்கிறார்கள். இம்மாமன்றத்திலும் நான்காண்டுக் காலம் உறுப்பினராக வீற்றிருந்து இப்போதும் உறுப்பினராகவும், சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் வீற்றிருக்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, அவர்கள் ஒருமுறை அரசினுடைய கொள்கைகளைக் கண்டித்துப் பேசிய நேரத்தில் அன்றைய தினம் முதல் அமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், ஹாண்டே அவர்கள் எங்களைக்கண்டிப்பது பூனை தன் குட்டியை வாயால் கவ்விச் செல்வது போல் இருக்கிறது. மாறாகக் காங்கிரஸ்காரர்கள்கண்டிப்பது பூனை எலியைத் தூக்கிச் செல்வது போல் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இனிமேல் எந்த லாவகத்தைக் கையாள்வார்களோ தெரியாது. ஏனென்றால் எலியைத் தூக்குகிற நிலைமையில் உள்ளவர்களைச் சேர்ந்திருக்கிற காரணத்தினால் அவர்கள் குட்டியைக் கவ்வுவது போல் கண்டனங்கள் தெரிவிப்பார்களா அல்லது எலியைப் பிடிப்பது போல் கண்டனங்கள் தெரிவிப்பார்களா என்று எனக்குத் தெரியாது. ஆனாலும் இன்றைக்குக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் நிச்சயமாக பூனை, குட்டியைக் கவ்வுவது போலவே கண்டனங்கள் தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருப்பதால் இருவரும் ஒருசாராராகயிருந்து நல்ல வகையில் தேவையான ஆக்கபூர்வமான கருத்துக்களை இங்கு அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.



மிகுந்த அடக்கத்திற்கும் எளிமைக்கும் பெயர்போனவராக விளங்குகிற நம் மதிப்பிற்குரிய திரு. மாரிமுத்து அவர்கள் பி.எஸ்.பி. கட்சியின் தலைவராக வீற்றிருக்கிறார் அவர்களது பேச்சில். காரம் இருக்காது. என்றாலும் சாரம் அதிகமாக இருக்கும். அவர்களுடைய நல்ல அறிவுரைகளை ஏற்றிட ஆளும்கட்சித் தரப்பில் இருக்கிற நாங்கள் தயாராக இருக்கிறோம். தமிழரசுக் கழகத்தின் தலைவராக வீற்றிருக்கிற நண்பர் திரு. தியாகராஜன் அவர்கள் பொதுப்பணிகளில் நாட்டம் கொண்டவர். பல பொது நிறுவனங்களில் இருந்தவர். அவருடைய தலைவர் இங்கு வரமுடியாமல் போனாலும்

அவருடைய தலைவரின் எண்ணங்களையெல்லாம் இங்கு எதிரொலிப்பார் என்ற அளவிலும் அவருடைய தலைவர் சிலம்புச் செல்வர் உரையாகவே அவரது உரையை நாங்கள் மதிப்போம் என்று இங்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்த மாமன்றத்திலே அமர்ந்திருக்கிற உறுப்பினர் களின் பணி எவ்வளவு நேர்த்தியாக இருந்திட வேண்டும், எவ்வளவு பொறுப்புடையதாக இருந்திட வேண்டும் என்பதனை முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் பேசிய மாண்பு மிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். மின்விசிறியின் கீழே அமர்ந்து இருக்கும் நாம், இந்த நாட்டிலே நமக்காக வாக்களித்த லட்சோப லட்சம் மக்கள், ஏழை எளியவர்கள், சாதாரண மக்கள், தொழிலாளர்கள், நடுத்தர மக்கள், அவர்கள் எல்லாம் தங்களுடைய வாழ்வுக்காக மின்விசிறியைப் போல் சுழன்று கொண்டு, அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் இருக்க வேண்டியவர்களாவோம். நல்ல மெத்தையில் அமர்ந்து இருக்கிறோம், மேலே விசிறி ஓடிக் கொண்டு இருக்கிறது, எவ்வளவு பெரிய அந்தஸ்து நமக்குக் கிடைத்து இருக்கிறது என்று கருதாமல், இந்த இடத்தை நமக்குத் தந்த லட்சோப லட்சம் ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெற வேண்டுமென்ற நியாய உணர்வோடு, நேர்மை எண்ணத்தோடு, நாம் அவர்களுக்குத் தந்த வாக்குறுதிகளை மனதில் கொண்டு ஒவ்வொரு உறுப்பினரும் பணியாற்ற வேண்டும் என்று இந்த அவையில் வீற்றிருக்கும் எல்லாக் கட்சித் தரப்பினர்களையும் கேட்டுக்கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

ஜூன் மாதத்தில் விரிந்த நிலையில் கொள்கை விளக்கம்

இங்கே வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிதி நிலை அறிக்கையில் கொள்கை விளக்கங்கள் எதுவும் அதிகமாகச் சொல்லிவிட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். நம்முடைய மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக்காட்டியது போல் ஜூன் மாதத்தில் வெளிவர இருக்கிற முழு வடிவம் உடைய நிதி நிலை அறிக்கையில்தான் அமைச்சரவையினுடைய கொள்கை விளக்கங்களை அதிகமாக எடுத்துச் சொல்ல முடியும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



நம்முடைய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் மாண்புமிகு அம்மையார் அனந்த நாயகி அவர்கள் "வரிகள் குறையவில்லை, வசதிகள் பெருகவில்லை" என்று தங்களுடைய பேச்சை முடித்தார்கள். வரிகள் குறையவில்லை என்று அவர்கள் சொல்லுகிற அதே நேரத்தில், நஞ்சைக்கும், புஞ்சைக்கும் நில வரி விலக்கு அளிக்கப்பட்டு இருப்பதை தமிழ் நாட்டிலே உள்ள மக்கள் யாரும் மறந்து இருக்க முடியாது. இன்னும் ஏராளமான வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அன்புச் செழியன் எடுத்துக் காட்டியதுபோல், ஒரு அரசாங்கம் என்றால், அது வரி போடாமலேயே நடக்க வேண்டும் என்கிற கொள்கையை யாரும் ஏற்றுக் கொண்டது கிடையாது.

தாங்கக்கூடியவர்களுக்கு வரி

நாங்களும் வரியைப் போடமாட்டோம் என்று சொன்னது கிடையாது. தாங்கக் கூடியவர்களுக்கு வரி போட்டு, தாங்க முடியாத மக்களுக்கு வசதிகளைப் பெருக்குவதுதான் ஒரு முற்போக்கு அரசாங்கத்தின் நல்ல கொள்கையாக இருக்க முடியும். அந்த வகையிலேதான் வரிகள் இந்த நாட்டிலே நான்காண்டுக் காலமாக நிர்ணயிக்கப்பட்டிருக் கின்றன. இதிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும், அம்மையார் அனந்தநாயகி அவர்களும் தரப்பட்டுள்ள குறிப்பேடுகளி லிருந்து இரண்டொன்றைச் சுட்டிக் காட்டினார்கள்.

ரிஜிஸ்டிரேஷனுக்கு எந்த அளவிற்கு இடைக்கால வருமானம் உயர்ந்து இருக்கிறது என்று அவர்கள் குறிப் பிட்டார்கள். ரிஜிஸ்டிரேஷனுக்கு உயர்ந்திருக்கிற அந்த வருமானம் இன்றைக்கு 316 லட்சம் ரூபாயாக இருக்கிறது. ஆனால், 1938–39 ஆண்டிலே 32 லட்சம் ரூபாயாக இருந்தது. 1962-ம் ஆண்டிலேயே 124 லட்சம் ரூபாயாக உயர ஆரம் பித்து விட்டது. ரிஜிஸ்டிரேஷனில் ஏதோ நாம் கூடுதலாக வருமானத்தைப் பார்க்கிறோம் என்று மாத்திரம் எடுத்துக் கொள்ளாமல் ரிஜிஸ்டிரேஷனில் அதிக வருமானம் வருவ

தற்குக் காரணம், அந்தக் காலத்தை ஒட்டி நிலங்களின் மதிப்பீடுகள் உயர்ந்துகொண்டு போகிறது என்பதையும், அதற்கு ஏற்றவாறு ரிஜிஸ்டிரேஷன் கட்டணம் மூலமாக அரசாங்கத்திற்கு அதிக வருமானம் வருகிறது என்பதையும் நாம் மறந்து விடுவதற்கு இல்லை.

வருமானம் உயர்ந்ததின் காரணம்

அடுத்ததாக, மோட்டார் வாகனங்கள் மீதானவரி. இதன்பேரில் 1938-ல் 81 லட்சமாக இருந்த வருமானம், இப்போது 23 கோடியாக வருகிறது என்றால் அந்தஅளவுக்கு வாகனங்கள் எண்ணிக்கை உயர்ந்து இருக்கிறது என்பது தான் காரணமே தவிர, வரிகள் மட்டும் உயர்ந்துவிட்டன என்பது காரணமல்ல.

திரு. கே. எம். சுப்பிரமணியம் பேசுகிற நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள். மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் தொகைகள், அவை அனுமதிக்கப்பட்ட காரியத்திற்குப் பயன்படுத்தப்பட்டதா என்ற விவரத்தைத் தரவேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையிலும், மாநகராட்சி மன்றத்தின் நிலையில் இருக்கிறார்கள். மாநகராட்சி மன்றக் கணக்கிற்கும், மாநில அரசின் கணக்கிற்கும் இருக்கிற வேறுபாடுகளை நாம் முதலில் புரிந்து கொண்டாக வேண்டும்.

கார்ப்பரேஷன் முதலிலேயே அரசிடமிருந்து கடனைப் பெற்றுவிட்டு, பிறகு செலவுகளைச் செய்கிறது. ஆனால், மாநில அரசு அப்படி அல்ல. பெரும்பாலும் செலவுகளைச் செய்துவிட்டு, அதற்கு ஈடுகட்ட மத்திய அரசிடம் கடன் அல்லது மான்யங்களைப் பெறுகிறது. ஆகவே, செய்யப்பட்ட செலவுகளுக்குத்தான் மாநில அரசு மத்திய அரசிடமிருந்து பெரும்பாலும் கடனாகவோ, மான்யமாகவோ பெறுகிறதே அல்லாமல் இன்னின்ன செலவுகளைச் செய்ய வேண்டுமென்று கடன் பெற்றுப் பிறகு அவைகளைச் செய்யாமல் வைத்துக் கொண்டு இருக்கிறது என்று குற்றம் கூற வேண்டிய எந்த விதமான அவசியமும் நேர்ந்துவிடவில்லை என்று நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எல்.ஐ.சி.-யிடமிருந்து மாநகராட்சி பெற்ற கடன்

இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். சென்னை மாநகராட்சி மன்றம் எல்.ஐ.சி.-யிடமிருந்து 5 கோடி ரூபாய் கடன் பெற்றது. அந்த 5 கோடி ரூபாயை அரசாங்கம் வைத்துக்கொண்டு இருக்கிறது என்று சொன்னதோடு நிற்காமல், கொஞ்சம் பயங்கரமான ஒரு விஷயத்தையும் வெளி

யிட்டார்கள். ஏதோ ரிசர்வ் பாங்க் 'ஓவர் டிராப்டை' அடைப்பதற்காக சென்னை மாநகராட்சி எல்.ஐ.சி. மூலமாகப் பெற்ற கடனை இந்த அரசு பயன்படுத்திக்கொண்டது என்று குற்றச்சாட்டைச் சொன்னார்கள். உள்ளபடியே எல்.ஐ.சி. யிடமிருந்து பெற்ற கடன் ரூ. 5 கோடி ரூபாய் அல்ல, எல்.ஐ.சி.யிடமிருந்து பெற்ற கடன் 3 கோடி ரூபாய்தான். அந்த 3 கோடி ரூபாயை எல்.ஐ.சி.யிடமிருந்து மாநகராட்சி மன்றத்திற்காக அரசாங்கம் பெற்றது.

மாநகராட்சி மன்றம் 3 கோடி ரூபாய் கடன் அரசாங்கத்தின் மூலமாகப் பெற்று இல்லாவிட்டால், அதை ஒரு வங்கியில் வைத்து, அந்த வங்கியிடமிருந்து மாநகராட்சி மன்றம் பெறும் வட்டி 4 சத விகிதமாக இருந்து இருக்கும். எல்.ஐ. சி.-க்கு மாநகராட்சி மன்றம் 7 சதவிகித வட்டியைக் கொடுத்து இருக்க வேண்டும். அந்தத் தர்மசங்கடத்திலிருந்து மாநகராட்சி மன்றத்தை விடுவிப்பதற்காக எல்.ஐ. சி.யிடமே பொறுப்பு ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு 7 சதவீதம் வட்டியை அரசாங்கமே தருவதாக வாக்களித்து 3 கோடி ரூபாய் கடனைப் பெற்றது. திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டது போல், பெற்றது 5 கோடி ரூபாய் அல்ல, 3 கோடி ரூபாய்தான்.

அந்த மூன்று கோடி ரூபாயில் 1 கோடி ரூபாய் மாநகராட்சி மன்றத்துக்குத் தரப்பட்டு இருக்கிறது. மீதமுள்ள 2 கோடி ரூபாய் அரசாங்கத்திடம் பத்திரமாக இருக்கிறது. அது மாத்திரம் அல்லாமல், கிட்டத்தட்ட இரண்டரைக் கோடி ரூபாய் மாநகராட்சி மன்றத்திற்கு 'வழிவகை முன்பணமாக' (வேய்ஸ் அண்டு மீன்ஸ் அட்வான்ஸ்) இந்த அரசு கொடுத்து இருக்கிறது. அது அந்தக் கடனோடு இணைந்தது அல்ல, என்றாலும் மாநகராட்சி மன்றத்திற்கு இந்த அரசு, எவ்வகையில் உதவி செய்து இருக்கிறது என்பதைக் கூற இதனை நான் குறிப்பிடுகிறேன்.

பொதுநலக் கடனாக மாநகராட்சி திரட்டிய ஒரு கோடியே 10 லட்சம் ரூபாயில், 5 லட்சத்தை வைத்துக் கொண்டு, பாக்கிக் கடனை, 1 கோடி 5 லட்சம் ரூபாயை, அரசிடமே ஒப்படைத்து இருக்கிறது. அதற்கான 6 சதவீத வட்டியை இந்த அரசு தந்து கொண்டு இருக்கிறது என்பது உண்மை நிலையாகும்.

சிறு தொழில் துறைக்கு நிதி குறையவில்லை

சிறு தொழில்கள், கிராமத் தொழில்களுக்காக நிதி ஒதுக்கீடு குறைந்து விட்டது என்று குற்றம் சாட்டப்பட்டது. ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ. 20 லட்சமாகக் குறைந்துவிட்டது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் தம்மிடத்திலுள்ள 'ஒயிட் பேப்பர் ஆன் பட்ஜெட்' என்று இருக்கிற

புத்தகத்தில் இருக்கிற குறிப்பை மாத்திரம் படித்த காரணத்தால் அந்தக் குற்றச்சாட்டைச் சாட்டினார்கள். அதிலே உள்ள குறிப்பை நான் மறுத்திடவில்லை. ஆனால், ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ. 24 லட்சத்திற்குக் குறைந்து விட்டது என்று யாரும் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. இந்த ரூ. 24 லட்சம் அல்லாமல், சிட்கோ, அதாவது ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒன்றை அரசு நிறுவி, அதன் பெயரால் ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது 1971–72-ம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில்தான். வெள்ளை அறிக்கை என்ற பெரிய புத்தகத்திலே இது பற்றிய விவரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அக்கறை குறைந்து விடவில்லை

அதே புத்தகத்தில் 25-ம் பக்கத்தைப் பார்த்தால், அந்தப் பக்கத்திலே கூட கிராமச் சிறு தொழில்களுக்காக எந்த அளவுக்கு இந்த அரசு முயன்று, பணத்தை அதிகமாக ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். மேலும், பெரிய பெரிய நடுத்தரத் தொழில்கள், கனிவள மேம்பாட்டிற்காக 1970–71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3·92 கோடியாக இருந்தது, இப்பொழுது 1971–72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 5·35 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது கூட இடைக்கால வரவு-செலவுத் திட்டம்தான் என்பதை நான் நினைவு படுத்துகிறேன். அது போலத்தான் கிராமச் சிறு தொழில்களுக்காக ஏற்கனவே 1970–71-ம் ஆண்டில் ரூ. 360 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பொழுது 1971–72-ம்ஆண்டில் ரூ. 421 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் இடைக்காலத் திட்டம்தான். மேலும் ஒதுக்கப்படும் என்பதையும் கூறிக்கொள்கிறேன். ஆகவே, சிறுதொழில் வளர்ச்சியிலே அரசினுடைய அக்கறை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, கரைந்து, தேய்ந்துவிட்டது என்று யாரும் எண்ணிக்கொள்ளத் தேவையில்லை.

மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு எந்தெந்த இனங்களிலிருந்து வருமானம் வருகிறது என்றால், 'வருமானவரி', 'மத்திய ஆயத்தீர்வை' (எக்சைஸ் டியூடி), 'சொத்து உரிமை' போன்ற மற்றைய இனங்களின் மூலம் நம் மாநில அரசுக்குப் பங்கு கிடைக்கிறது. அது போலவே, நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப அளிக்கப்படும் தனி மானியங்களின்மூலம் மாநில அரசுக்குப் பணம் கிடைக்கிறது. மூன்றாவதாகத் திட்ட நிதி உதவியின் மூலம் பணம் கிடைக்கிறது. நான்காவதாக, திட்டம் அல்லாத, திட்டத்தில் சேராத சில பணிகளுக்காக நிதி உதவி கிடைக்கிறது. இதிலே மூன்று, நான்கு என்று நான் சொன்ன, திட்டநிதி உதவி, திட்டத்தில் சேராத பல பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைத் தவிர, மற்றபடி நான் ஏற்கனவே எடுத்துக்காட்டிய, வருமான வரி, மத்திய ஆயத்தீர்வை, நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் மூலம் கிடைக்கும் பணம் இவையெல்லாம் நமது அரசினுடைய நிதியில் பொதுவாக இணைக்கப்பட்டு, செலவு செய்யப்படுகின்ற காரணத்தினால், எந்தத் தனிப்பட்ட வேலைக்காக அவை செலவு செய்யப்படுகின்றன என்று கணக்கிட்டுக் கூற இயலாது.

மொத்தத்தில் நம்முடைய மாநிலத்தின் தேவைகளுக்காக இந்தப் பணத்தின் மூலம் செலவுகள் செய்யப்படுகின்றன. முறையாகச் செய்யப்படுகின்றன என்பதை மாத்திரம் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

டிராக்டர்கள் வாங்க நிதி ஒதுக்கீடு

டிராக்டர்கள் வாங்க நிதி ஒதுக்கம் குறைந்து விட்டது என்று குறிப்பிட்டார்கள். நான் ஒரு புள்ளி விவரத்தை இந்த மாமன்றத்தின் முன்னால் வைப்பது நல்லது என்று கருதுகிறேன். 'டிராக்டர்கள் வாங்க அரசு நிதி ஒதுக்கத்தைக் குறைத்து விட்டது' என்பது குற்றச்சாட்டு, அல்லது அவர்களுக்கு ஏற்பட்ட ஐயப்பாடு. 1946-ம் ஆண்டு முதல் 1966–67-ம் ஆண்டு வரை, 20 ஆண்டுக்காலத்தில் டிராக்டர்

கள் வாங்க, பழைய அரசு—பழைய அரசு என்றால் மிகப் பழைய அரசு—அந்த அரசு செலவிட்ட தொகை ரூ. 76 லட்சம்—20 ஆண்டு காலத்தில் ரூ. 76 லட்சம். ஆனால், 1967-68-ல் ரூ. 6 லட்சம், 1968-69-ல் ரூ. 22.68 லட்சம், 1969-70-ல் ரூ. 69.95 லட்சம், 1970-71-ம் ஆண்டில் ரூ.29.55 லட்சம் செலவிட்டிருக்கிறோம். அதிலே கூட மேலும் 16 டிராக்டர்கள் வாங்க ரூ. 30 லட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் இதில் சேரவில்லை. அது சேர்ந்தால் 1970—71-ல் அதுவும் ரூ. 59 லட்சம் என்கின்ற அளவுக்கு வந்து நிற்கும்.



ஆக, நான்கு ஆண்டு காலத்தில் டிராக்டர்கள் வாங்க இந்த அரசு ரூ. 129 லட்சம் பணம் ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆனால், 20 ஆண்டு காலத்தில் அவர்கள் செய்த பண ஒதுக்கீடோ ரூ. 76 லட்சம்தான் என்பதைக் குற்றச் சாட்டாக அல்ல, உறுப்பினர்களின் கவனத்திற்காகக் குறிப்பிட விரும்புகிறேன்.

குடிசை ஒழிப்பைப்பற்றி அம்மையார் அவர்களும், கே. எம். எஸ். அவர்களும் பேசினார்கள். இருவரும் சென்னைவாசிகள் என்கின்ற காரணத்தினால் இனிமேல் குடிசையைப்பற்றி அதிகமாகப்பேசவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படும் என்கின்ற காரணத்தினால் பேசினார்கள். அவர்களுடைய அரசு இருந்த காலத்திலே ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டது, நீங்கள் என்ன புதிதாகச் செய்து விட்டீர்கள் என்று பொருள் தொனிக்கும் வகையில், அவர்களுடைய பேச்சு அமைந்திருந்தது.



795

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்—குடிசைவாழ் மக்களுக்காகக் கட்டப்பட்ட டெனமெண்ட்ஸ், மாடி வீடுகள் 2,688. அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1966-67-ல் கட்டப்பட்ட டெனமெண்ட்ஸ்1, 476. ஆக, அவர்களுடைய 20 ஆண்டுக் கால ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட டெனமெண்ட்ஸ் 4,164. நான்கு வருடங்களில் கழக ஆட்சியில் 1970 டிசம்பர் 31 முடிய கட்டப்பட்டுள்ள டெனமெண்ட்ஸ் 7,037. நான்கே ஆண்டுக் காலத்தில், அதுவன்றியில் 2,247 தீப்பிடிக்காத வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி அம்மையார் அவர்கள் அவை தீப்பிடிக்காத வீடுகள் அல்ல. தீப்பெட்டி வீடுகள் என்று சொன்னார்கள். தீப்பெட்டிக்குள் தீக்குச்சிகள் இருக்கும். ஆகவே தீப்பெட்டி என்றால், அலட்சியப்படுத்தக் 'கூடியது அல்ல. தீக்குச்சிகள் வைப்பதற்குத் தீப்பெட்டிகள் தேவைப்படுகின்றன. குடிசைகளிலே இருக்கிற ஏழை எளிய மக்கள் தீக்குச்சிகளுக்குச் சமமானவர்கள் என்பதை அவர்களுக்குத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்ந்து எழும்பும் வீடுகள்

இந்தத் தீக்குச்சிகள் தீ பற்றாமல் பார்த்துக் கொள்ளும் கடமை அரசைச் சார்ந்தது. அதற்காகத்தான் ரூ. 40 கோடி அளவில் 7 ஆண்டுக்கான ஒரு திட்டம் வகுத்து, குடிசைகளை மாற்றி, நல்ல எழிலான காற்றோட்டம் மிகுந்த வலுவான வீடுகளைக் கட்டுவதற்கு 'குடிசை மாற்று வாரியம்' என்ற அமைப்பை உருவாக்கியிருக்கிறோம். இந்த மாமன்றத்தின் உறுப்பினரான திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் குடிசைப் பகுதி மக்களோடு நீண்ட நாட்களாக உறவும், தோழமையும் கொண்டுள்ள காரணத்தினால் அவரை அவ்வாரியத்திற்குத் தலைவராக நியமனம் செய்திருக்கிறோம். குடிசை மாற்று வாரியம் திறம்படப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. குடிசைவாழ் மக்களுக்கு எந்த அளவுக்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது என்று கேட்பவர்கள் சென்னை மாநகரத்தில் சில பகுதிகளைச் சுற்றிப் பார்க்கலாம், அங்கெல்லாம் உயர்ந்து எழும்பிக்கொண்டிருக்கிற அந்த வீடுகள் அவர்களுக்குப் பதில் சொல்லும் என்பதை மாத்திரம் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வேளாண்மைக்கு அளித்த வசதி

வசதிகள் பெருகவில்லை என்கின்ற குற்றச்சாட்டு அடிக்கடி கூறப்படுகிறது. வேளாண்மைத் துறையில் மாத்திரம் 1966-67-ம் ஆண்டில் குறுகிய காலக் கடனாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 31 கோடி. 1970-71-ல் அந்தக் குறுகிய காலக் கடன் தொகை ரூ. 55 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 1966-67-ம் ஆண்டில் வேளாண்மைத் துறையில் கொடுக்கப்பட்ட நீண்டகாலக் கடன் தொகை ரூ. 3 கோடி; ஆனால், 1970-71-ம் ஆண்டில் நீண்டகாலக் கடன் தொகை ரூ. 19 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இது வசதிகளைப் பெருக்குவதற்காகச் செய்யப்பட்ட காரியம் அல்லவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். வேளாண்மைக்காக மொத்தச் செலவு என்ற அடிப்படையில் பார்த்தால்கூட, 1966-67-ம் ஆண்டில் ரூ. 11.80 கோடி, 1970-71-ல் ரூ. 14.74 கோடி, 1971-72-ல் ரூ. 18.39 கோடி, அதுவும் முதல் (ஃபர்ஸ்ட் பார்ட்) திட்டமாக ரூ. 18 கோடி என்ற அளவுக்கு வேளாண்மைக்கான மொத்தச் செலவு இன்றைய தினம் பெருக்கப்பட்டிருக்கிறது.

கல்விக்கான நிதி ஒதுக்கம்

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், 1966-67-ல் ரூ. 43 கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக, இன்றைக்கு ரூ. 79 கோடி செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மருத்துவத் துறையில் 1966-67-ல் ஒதுக்கப்பட்ட ரூ. 11 கோடிக்கு மாறாக, இன்றைக்கு ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சுவாமிதாஸ் அவர்கள் பேசும்போது இந்த சதவிகிதத்தைப் பார்த்தால், கல்விக்காகச் செலவிடும் தொகையை 1971-72-க்கு உள்ளதை 1966-67 உடன் ஒப்பிட்டுப் பார்த்தால், குறைவாக உள்ளதே என்று குறிப்பிட்டார்கள். அது சரியான வாதம் அல்ல. சரியான புள்ளியும் அல்ல. 1966-67 வருவாய்க் கணக்கில் மொத்தத் தொகையில் ரூ. 201 கோடியில், கல்விக்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது ரூ. 43.86 கோடி.

இது மொத்தத் தொகையில் 22 சத விகிதம்; 1971-72-ல் மொத்தத் தொகை ரூ. 349 கோடியில், கல்விக்காக ஒதுக்கப்பட்டது ரூ. 79.11 கோடி. இது மொத்தத்தில் 22·6 சத விகிதம். ஆக, அவர் குறைந்துவிட்டது என்று கூறுவது சரியாகாது. எந்த அளவிற்கு வருமானம் பெருகியிருக்கிறதோ, எந்த அளவுக்கு மொத்தச் செலவுகள் செய்யப்படுகின்றனவோ, அந்த அளவிற்குக் கல்வித்துறையில் கூடுதலாகச் செலவழிக்கப்படுகிறது. சதவிகிதக் கணக்கைப் பார்த்தாலும், புள்ளிவிவரங்களைப் பார்த்தாலும், குறைந்துவிடவில்லை, உயர்ந்திருக்கிறது என்பதையும் அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

மின்ஒளி இல்லாத ஊர் இல்லை

வசதிகள் பெருகவில்லை, வசதிகள் பெருகவில்லை என்று அம்மையார் குற்றம் சொன்னார்கள். வசதிகளைப் பெருக்குவதற்காகத்தான், தண்ணீர்த் திட்டத்திற்காக இந்த அரசாங்கம் ரூ. 15 கோடி ஒதுக்கியிருக்கிறது. மின் வசதிகள் கொடுக்க ரூ. 39 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் மின் விளக்குகள் இல்லாத கிராமமே இருக்கலாகாது என்கின்ற சபதத்தை எடுத்துக்கொண்டு, அதற்கென ஒதுக்கீடு செய்து அந்தக் காரியத்தில் தீவிரம் காட்டுகிறது இந்த அரசு. பின்தங்கியவர்கள் நலனுக்காக ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.



எதிர்க்கட்சி வரிசையில் நாங்கள் இருந்தபோது அம்மையார் ஆளும் கட்சி வரிசையில் உட்கார்ந்து கொண்டு, பின்தங்கிய மக்கள் நலனுக்காக ஒரு தனி இலாகா வேண்டும் என்றெல்லாம் நாங்கள் வாதாடிய நேரத்திலெல்லாம், யாராவது காதில் போட்டுக்கொண்டார்களா? காது கொடுத்துக் கேட்டார்களா? உரிமையோடு "உட்கார்" என்று உட்கார வைக்கப்பட்டது கிடையாதா? இன்றைக்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட நேரத்தில், அண்ணா அவர்கள் மறைவுக்குப் பின்னால், நான் பொறுப்பேற்ற நேரத்தில் சொன்னேன், நான் மிகப் பின்தங்கிய வகுப்பில் பிறந்தவன்—'மிக', 'மிக' 'மிக

என்று எவ்வளவு வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளுங்கள். ஆகவே, இந்த நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பின் தங்கிய மக்களுக்காக, என் உயிரைப் பணயமாக வைத்து, அவர்கள் வாழப் பாடுபடுவேன் என்று எடுத்துச் சொன்னேன்.

பின்தங்கியவர்கள் நிலை உயர உதவிகள்



அது வாய்ச் சொல் அல்ல என்று நிரூபிக்க, உடனடியாகவே பின்தங்கியவர் நலனுக்காக ஒரு தனி இலாகா அமைக்கப் பட்டது. தனி இலாகா, தனி அமைச்சர் அல்லாமல், ஒரு குழுவும் அமைக்கப் பட்டது. அந்தக் குழு தன்னுடைய பரிந்துரைகளைத் தந்து, அந்தப் பரிந்துரைகளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கும் நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அது மாத்திரமல்ல, பின்தங்கியோர் நலத்துறையில், மாணவர்களுக்கு 50 சதவிகிதம் எண்கள் பெற்றால் தான் அவர்களுக்கு "ஸ்காலர்ஷிப்" கொடுக்கப்படும் என்கிற நிலையை மாற்றி, 40 சதவிகிதம் எண்கள் பெற்றவர்களும் ஸ்காலர்ஷிப் பெற வகை செய்தோம். ஏற்கனவே ரூ. 90 லட்சம் உதவிப் பணம் என்றிருந்ததை ரூ. 300 லட்சம் உதவிப்பணம் தரும் அளவில் திருத்தி அமைத்தோம்.

அதேபோல், இடைக்கால வரவு-செலவுக் கணக்கில் ரூ. 9 கோடி ஒதுக்கி, பின்தங்கியவர்களுக்கு ரூ. 3 கோடி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரூ. 6 கோடி என்ற விவரத்தைப் புள்ளி விவரம் காட்டுவது மட்டுமல்ல; தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காகப் பல பணிகள் செய்யப் பட்டிருக்கின்றன. கிராமங்களில் இடுகாட்டுக்குக்கூடச் செல்ல முடியாத அளவில் கஷ்டங்கள் இருந்ததை, எதிர்க் கட்சியிலிருந்தபோது சுட்டிக்காட்டியவற்றை மறந்து விடாமல், மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக, இன்றைக்கு அந்தக் காரியங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். எத்தனையோ கிராமங்களில் அரிசனக் காலனிகளுக்கு இணைப்புச் சாலைகளை உருவாக்கிக் கொடுத்து வருகிறோம்;

முன்னால் இருபத்து மூன்று ஆண்டுக் காலத்தில் 5,000-க்கு மேற்பட்ட அரிசனக் காலனிகள் மின் வசதி பெறாமல் இருந்தன.

இருள் அகலுகிறது

இந்தப் புதிய அரசு வந்தபின், அந்த 5,000-காலனிகளில் 4,000 காலனிகளுக்கு மின் விளக்குக் கொடுத்திருக்கிறது. ஆகவே, இந்த அரசு ஏழை, எளிய, நடுத்தர மக்களுடைய முன்னேற்றத்திற்காகச் செயல்படுகிறது என்பது தெளிவு.



தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்று திரு. கே. டி. கே. தங்கமணி குறிப்பிட்டார்கள். தொழிலாளர்களுடைய முன்னேற்றத்திற்காக, இங்கே கூறினாலும், கூறாவிட்டாலும், தொழிலாளர்கள், பாட்டாளி மக்கள், ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், சமுதாயத்தின் அடித்தளத்தில் அழுத்தப்பட்டுக் கிடக்கும் மக்கள் இவர்களுக்காகப் பாடுபட இந்த அரசு உறுதி பூண்டிருக்கிறது. அதற்குத் தோழமை உணர்ச்சி உள்ளவர்களின் உதவி தேவை. தேவை என்று மிகுந்த அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் நிதி நிலைகளை ஆராய்ந்து, மத்திய சர்க்கார், மாற்றுந்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்ளாமல், தேவைகளை நிறைவேற்றிட நிதியைத் தந்திட வேண்டும் என்று அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

இது இடைக்கால நிதிநிலை அறிக்கை என்பதால், இதில் எழுப்பப்பட்டிருக்கும் உரிமைக்குரல் இடைக்கால உரிமைக் குரலோ என்று யாரும் எண்ணத் தேவையில்லை.

ஒருமித்த உரிமைக்குரல்

மேலவையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பேசிய மற்ற உறுப்பினர்களும் நீங்கள் மத்திய அரசிடமிருந்து அதிகமான நிதியைப் பெற எந்தவிதமான நடவடிக்கைகளை

எடுத்தாலும் அதை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். மேலவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசின் மீது உள்ள நம்பிக்கையின் காரணமாக அப்படிப்பட்ட உறுதியைத் தெரிவித்தார்கள் என்று கருதுகிறேன்.

வன்முறைச் செயலில் நாட்டம் கொண்டவர்கள் அமைச்சரவையில் இருப்பார்கள் என்றால் அந்த வார்த்தையை அவர்கள் பயன்படுத்தியிருக்க மாட்டார்கள்.

அவர்கள் கள்ளம் கபடமின்றி, வெள்ளை உள்ளத்தோடு இப்படிக் கூறக் காரணம், எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் நிதானத்தோடு, நேர்மையோடு, நாடாளுமன்ற முறைப்படி இருக்கும்; அண்ணா அவர்களின் பாதையில் தான் அந்த நடவடிக்கை இருக்கும் என்று அவர்கள் நம்பியதால் தான் இவ்வளவு அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்கள். நான்கூட அவருடைய இந்தப் பேச்சைக் கேட்டு அவருடைய கட்சிக் காரர்கள் என்ன சொல்வார்களோ என்று பயந்தேன்.

தமிழ்நாட்டின் முன்னேற்றத்தில் அவர்கள் கொண்டிருக்கிற இந்த ஆர்வத்தைப் பாராட்டப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

நமக்கு வந்து சேர வேண்டிய நிதிநிலைக் கூறுகள் வந்து சேராததற்கான காரணங்கள் என்னென்ன என்பதையெல்லாம் உறுப்பினர் திரு. சாமிநாதன் ஆராய்ந்தார். மத்திய அரசின் தூதுவர் ஒருவர் பேசுகிறாரோ என்று எண்ணக் கூடிய அளவிற்கு அவருடைய பேச்சு போய்விடுமோ என்று கூட எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் அவர் பேச்சை முடித்த பிறகுதான் பரவாயில்லை, தமிழக அரசு, மத்திய அரசிற்கு எதிராக நடத்துகின்ற அறப் போராட்டத்திற்கு—உரிமைப் போராட்டத்திற்கு—பாராளுமன்ற முறைக்கேற்ற போராட்டத்திற்குத் திரு. சாமிநாதன் அவர்களும், நிச்சயமாக நம்மோடு இருப்பார் என்ற துணிவினைப் பெற்றேன்.

இந்த அரசு ஒன்றுதான் மத்திய அரசோடு வீரமாக எதிர்த்துக் குரலை எழுப்பக்கூடிய அரசு என்பதை அனைவரும் அறிவார்கள்.

தமிழ்நாட்டின் பண்பாடு

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் நீண்ட காலம் பணியாற்றிய பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் மேலவையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசிய நேரத்தில், குடும்பத்திலுள்ள ஒரு பெரியவர் வாழ்த்துவது போன்ற உணர்ச்சியையும், உள்ள உணர்வையும் நான் பெற்றேன். தேர்தலுக்கு முன்பு அவர்கள் தங்களுடைய

கட்சிக்காகப் பணியாற்றிய நேரத்தில் அவர்களுடைய எண்ணமெல்லாம் அவர்களுடைய கட்சியின் அரசு வர வேண்டும் என்பதுதானே தவிர, நாங்கள் வரக்கூடாது என்ற தீய நோக்கத்தோடு பணியாற்றவில்லை.

தமிழ்நாட்டில் பலர், இந்தச் சாதாரணமானவர்கள், சாமான்யமானவர்கள் ஆட்சிக் கட்டிலில் வீற்றிருப்பதா என்ற எரிச்சலோடு பார்த்தவர்கள் உண்டு.

நான்காண்டுக் காலத்தில் நாங்கள் நாட்டிற்குச் செய்திருக்கிற நன்மைகள் எல்லாம் மறைக்கப்பட்டு, எடுத்துக் கூறிய சாதனைகளெல்லாம் எள்ளி நகையாடப்பட்டு, நாங்கள் அகற்றப்பட வேண்டுமென்ற முறையில் தேர்தலில் பணியாற்றியவர்களும் உண்டு.

உள்ளத் தூய்மையோடு பாராட்டு

ஆனால் இங்கே வாழ்த்திய இந்தப் பெரியவர்கள் அந்த எண்ணத்தோடு இந்தத் தேர்தலில் பணியாற்றவில்லை. உள்ளத்தூய்மையோடு அவர்கள் அளித்த பாராட்டுக்களை மிகுந்த கனிவோடும் பணிவோடும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அந்தப் பாராட்டுக்கள் என்னுடைய பணிக்கும், சக அமைச்சர்களுடைய பணிக்கும் நல்ல உறு துணையாக அமைந்திடும்.

தேர்தல் முடிந்து விட்டது. தேர்தலுக்குப் பிறகு நடைபெற்றிருக்கிற சம்பவங்களானாலும் முன்பு நடைபெற்ற சம்பவங்களானாலும் அவை அரசியல் ரீதியில் நடைபெற்றிருக்கிற சம்பவங்களானால் உள்ளபடியே அதற்காக நாமெல்லாம் வருத்தப்பட வேண்டும். வேதனைப்பட வேண்டும்.

அரசியல் கட்சியில் ஈடுபட்டிருக்கிற அத்தனைபேரையும் கேட்டுக் கொள்கிறேன், கொலை வெறிக்கு யாரும் ஆட்படாமல், மனமாச்சரியங்கள், அரசியல் மாச்சரியங்கள் எவ்வளவு இருந்தாலும் அவை பேச்சின் மூலம், எழுத்தின் மூலம் தீர்த்துக் கொள்வதில்தான் தமிழ் நாட்டின் பண்பாட்டையும், அரசியல் நாகரீகத்தையும் காப்பாற்ற முடியும்.

வன்முறையைச் சகியோம்

வேண்டுகோள் விடுக்கிற அதே நேரத்தில், இப்படிப்பட்ட வன்முறைகளில் ஈடுபடுகிறவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் கண்டிப்பாக நடவடிக்கைக்கு ஆளாவார்கள் என்கிற எச்சரிக்கையை மீண்டுமொருமுறை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டின் நலன் கருதி, தமிழ்நாட்டின் எதிர்காலம் கருதி, அரசியல் பண்பாட்டைக் காப்பாற்றும் பெருநோக்கின் அடிப்படையில் இந்தக் கண்டிப்பான எச்சரிக்கையை வன்முறை எண்ணம் கொண்டவர்களுக்கு விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு பக்கத்திலும் நம்முடைய உரிமைக்குரல் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். இந்த உரிமையைப் பெற என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று உறுப்பினர் திரு. சாமிநாதன் கேட்டார். எந்த நடவடிக்கையானாலும் தமிழக அரசினைப் பொறுத்தவரை, பாராளுமன்ற முறைப்படித்தான் நடவடிக்கைகளை எடுக்குமே அல்லாமல், வன்முறைப் போக்கில் நம் நடவடிக்கைகள் இருக்காது.

அன்று கொண்டாடிய எழுச்சி நாள்



ஆளும் கட்சியாக நாங்கள் வந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் காங்கிரசைத் தவிர்த்த ஏனைய அனைத்துக் கட்சிகளையும் சேர்த்து, தூத்துக்குடித் துறைமுகத்திற்காகவும், சேலம் இரும்பாலைக்காகவும் எழுச்சி நாள் கொண்டாடினார்கள். ஆளும் கட்சி எழுச்சி நாள் கொண்டாடலாமா என்றெல்லாம் அப்போது கேலி புரிந்தார்கள். அந்த எழுச்சி நாள் குரலுக்கு நல்ல மதிப்பிருந்தது. தூத்துக்குடித் துறைமுகம் ஆழ்கடல் துறைமுகமாக அறிவிக்கப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது.

சேலம் இரும்பாலை வேண்டும், இல்லாவிட்டால் நாங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஒத்துக் கொள்ள மாட்டோம் என்று பாராளுமன்ற முறைப்படி சொன்ன பிறகு சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கு அனுமதி கிடைத்தது.

அனைவரும் சேர்ந்து குரல் எழுப்புவோமேயானால், ஒரு கட்சியின் நன்மைக்காக அல்ல, தமிழ்நாட்டு மக்களின் நன்மைக்காக எழுப்புவோமேயானால், கிடைக்க வேண்டிய நியாயங்கள் நிச்சயமாகக் கிடைக்கும். அதுவரை நாம் தொடர்ந்து நம்முடைய அறப்போராட்டங்களைப் பாராளுமன்ற முறைப்படி நடத்திக் கொண்டிருப்போம்.

எடுத்த காவடியை இறக்குவது எப்போது ?

காவடி எடுக்க வேண்டிய நிலைமை இருக்கலாமா என்று குறிப்பிட்டார்கள். எங்கள் உறுப்பினர் மாத்திரமல்ல, திரு. காமராசரே கூடக் கேட்டார். யார் எடுத்தாலும் காவடி தான். நான் சொல்வது எல்லாம், எடுத்த காவடியை எப்போது இறக்கி வைப்பது ? அதற்கு எல்லோரும் ஒன்று சேர வேண்டாமா ? என்பதுதான் ! அந்த வழியில்தான் மாநில சுயாட்சியைப் பெறமுடியும் என்று நாம் கூறுகிறோம். அப்படிப்பட்ட கருத்தின் அடிப்படையில் அரசு எடுக்கிற முடிவானாலும், இந்த மாமன்றத்தில் இருக்கிற அனைவரும் எடுக்கிற முடிவானாலும், அந்த முடிவிற்கு மத்திய அரசு மதிப்பளித்து நடந்து கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தின் சார்பில் மத்திய அரசிற்கு நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

இங்கே பேசப்படுகிற பேச்சுக்கள் ஏதோ ஒரு சிறிய கூடத்திற்குள், 40, 50 பேர் அமர்ந்து பேசுகிறோம் என்றாலும், இந்தப் பேச்சிற்கு உரிய மதிப்பு இல்லாமல் போகவில்லை. இந்தப் பேச்சுக்கள் நிச்சயம் டெல்லிப் பட்டணத்தில் எதிரொலிக்கக் கூடிய பேச்சுக்கள். தமிழ் நாட்டின் முதலமைச்சர் கருணாநிதி இப்படி கருத்து தெரிவித்திருக்கிறார் என்றும், அதை எல்லாக் கட்சிகளும் ஆதரித்திருக்கின்றன என்றும் செய்திகள் டெல்லிப் பட்டணத்தில் பரவும். இதை தான் கூறுவது யாரையும் பயமுறுத்துவதற்காக அல்ல ; இந்த நாட்டிலிருக்கிற எல்லா மக்களுடைய பிரதிநிதிகளும் தமிழ்நாடு வஞ்சிக்கப்படக் கூடாது என்று விரும்புகிறார்கள், தமிழ் நாட்டிற்குத் தேவையான நிதியினை அளிக்க வேண்டுமென்று கோருகிறார்கள் என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் இதனைச் சொல்லுகிறேன்.

அறுத்துக்கொள்ள வேண்டும் என்பது அவர்கள் ஆசை.

ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிர்க் கட்சிகளின் தலைவர்களும், அனைவரும் குறிப்பிட்டார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் மத்திய சர்க்காரைக் கேட்பதை வரவேற்கிறேன் என்றார்கள். இப்பொழுது உறுதியாக, நிச்சயமாக வரவேற்பார்கள். நம்முடைய ஹாண்டே அவர்கள் மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டே இருக்கிறீர்களே, அவர்கள் கொடுக்காவிட்டால் என்ன செய்யப் போகிறீர்கள் என்றார்கள். ஏதாவது செய்து அறுத்துக் கொள்ள வேண்டும் என்பது அவர்களுடைய ஆசை. ஆகவே, என்ன செய்யப் போகிறீர்கள், என்ன செய்யப் போகிறீர்கள்? என்றார்கள். அவரையே ' என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள் ' என்று நான் கேட்டேன்.

நாங்கள் இந்திரா அம்மையாருக்குக் கொடுக்கும் ஆதரவு மாநிலத்திற்குப் பணம் பெறுவதைப் பொறுத்த காரியம் அல்ல. நாங்கள் தந்த ஆதரவு, நாங்களும் முற்போக்குக் கூட்டணிக் கட்சித்தலைவர்களும், நண்பர்களும் தந்த ஆதரவெல்லாம், கொள்கை ரீதியான ஆதரவு, ஏதோ பேரம் பேசிக்கொண்டு தரப்பட்ட ஆதரவு அல்ல.

நாங்கள் ஆதரவு தந்தாலும் தராவிட்டாலும் திருமதி இந்திரா அம்மையார் அவர்களுடைய அரசு மத்தியில் பலமான அரசாக அமைந்திருக்கிறது. இன்றைக்கு நாங்கள் ஆதரவு தராத நிலைமையிலும் கூட, மத்திய அரசு முற்போக்கான கொள்கைகளை உருவாக்குகின்ற நேரத்தில் எங்களுடைய 23 ஓட்டுகள் விழுந்தாலும் விழாவிட்டாலும் வெற்றிபெறும் நிலையில் மத்திய அரசு இருக்கிறது. முற்போக்கான கருத்துக்கு ஆதரவாக எங்களுடைய கைகள் உயருமே அல்லாமல் எங்களுடைய கைகள் தாழாது என்பதை எதிர்க்கட்சிக்காரர்களுக்கும், சுதந்திராக் கட்சிச் சட்டமன்றத் தலைவர் திரு. ஹாண்டே அவர்களுக்கும் எடுத்துக்காட்டி, இது கொள்கை ரீதியான ஆதரவே என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தி திணிக்கப்பட்டால்......

இன்றைக்கு ராஜமானிய ஒழிப்பு, வங்கிகள் தேசியமயமாக்கும் திட்டம் இவைகளுக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நாளையத் தினமே தமிழ் நாட்டில் இந்தி திணிக்கப்படும் என்ற நிலை, மறைமுகமான முறையில் திணிக்கப்படும் என்ற நிலை, ஜாடைமாடையாகத்தெரிந்தாலும்கூட, அங்கே இருக்கிற எங்களுடைய தோழர்கள் பட்டாளத்துச் சிப்பாய்களாய் இருந்து அதை எதிர்த்துப் போர்க்குரல் கொடுப்பார்கள் என்பதை மறக்க வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். மத்திய அரசுடன் உறவுக்குக் கை கொடுப்போம், அதே நேரத்தில் எங்களுடைய உரிமைகளுக்குக் குரல் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'நீங்கள் மத்திய அரசுக்கு வணங்காதீர்கள், வளையாதீர்கள்' என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அம்மையார் சொன்னது, அவர் மறவர் குல மங்கை என்ற காரணத்தால் வீரத்தைப் போதித்தார் என்று கருதுகிறேன். ஒரு தாய், அதுவும் புறநானூற்றுத் தாய் என்று எடுத்துக் கொண்டேனேயல்லாமல், எங்களை இழிவுபடுத்துவதற்காக வணங்காதீர்கள், வளையாதீர்கள் என்று சொன்னதாக நான் கருதவில்லை. அவர் அப்படிச் சொன்னது, 'நாங்கள் உங்களுடன் சேர்ந்து உங்களுக்காகப் போராட நேரடியாக இல்லாவிட்டாலும் மறை முகமாக ஒத்துழைக்க இருக்கிறோம்' என்ற கருத்தில்தான் பேசினார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாநிலத் திட்டக் குழு, போட்டிக் குழு அல்ல !



இன்னும் நம் நாட்டிற்குப் பல்வேறு திட்டங்களை அமைக்க வேண்டும். அதற்கேற்ற வகையில்தான் மாநிலத் திட்ட ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்திப் பத்தாண்டு காலத்திற்கான திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கவர்னர் உரையிலும், என்னுடைய அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்ட ஆணைக் குழு, மத்தியில் இருக்கிற திட்டக் குழுவிற்குப் போட்டியாக ஏற்படுவதல்ல; இந்தக் குழு பத்தாண்டுக் காலத்தில் தமிழகத்தில் மக்கள் தொகை எந்த அளவிற்குப் பெருகும்? அவர்களுக்கான வாய்ப்புகள், வசதிகள் எந்த வகையில் அரசு செய்ய வேண்டும்? அவர்களுக்கான கல்வியைத் தர வாய்ப்புக் கூறுகள் என்னென்ன? மருத்துவ வசதி எந்த வகையில் தேவைப்படும்? விவசாயத்தில் முன்னேற்றம் அந்த நேரத்தில் எப்படி இருக்கவேண்டும்? தண்ணீர்ப்பற்றாக்குறை ஏற்படுமானல் அதற்கெல்லாம்எப்படி வழி வகை செய்ய வேண்டும்? இப்படிப் பல்வேறு அம்சங்களை அந்த மாநிலத் திட்ட ஆணைக்குழு ஆராய்ந்து தங்களுடைய அறிக்கையில் அவைகளைச் சமர்ப்பிக்கும்.

பத்து ஆண்டு காலத்திற்கு எப்படித் திட்டங்களை நிறை
வேற்றிக் கொள்ள வேண்டும் என்று வரையறுத்துக்கொண்டு
அதை வைத்துக்கொண்டு போராட முடியும். என்னென்ன
காரியங்களுக்காகக் கேட்கப்பட்டது என்று கேள்வி வரு
மானால் அதற்கு இந்தத் திட்டக் குழுவின் அறிக்கை
பயன்படும்.

அடுத்தாண்டில் 1972-73-க்கான நிதி நிலை அறிக்கை
வைக்கப்படுகிற நேரத்தில், அதற்குள்ளாக அந்தக் குழுவின்
அறிக்கை அவையில் வைக்கப்பட்டு, அந்தத் திட்ட வரைவ
பற்றி நாமெல்லாம் விவாதிக்கலாம் என்ற மகிழ்ச்சியான
செய்தியை உங்களுக்கு உறுதியோடு அளிக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

உரிமைக் குரல்

மாநில சுயாட்சி என்னும்போது அதிகாரங்கள் பரவ
லாக்கப்படவேண்டும்; ஒரே இடத்தில் அதிகாரங்கள்
குவிந்துவிடக் கூடாது; அரசியல் துறையில் சமுதாயத்
துறையில், பொருளாதாரத் துறையில் மாநிலங்களுக்கு அதிக
அதிகாரம் வேண்டும் என்கிறோம். மத்திய அரசு எல்லா
அதிகாரங்களையும் முடக்கி வைத்துக்கொண்டும், மாநிலங்கள்
கையைக் கட்டிக் கொண்டும் இருக்கிற நிலை இருக்கக்
கூடாது என்றுதான் சொல்கிறோம்.

பாகிஸ்தான் ஏன் ஏற்பட்டது? மாநில சுயாட்சிக்கு
இணங்காத காரணத்தால்தான் பாகிஸ்தான் ஏற்பட்டது.
இன்றைக்கு கிழக்குப் பாகிஸ்தானில் என்ன நிலைமை?
மாநில உரிமைகளைத் தடுத்திடும் போக்கால் மாநிலத்திற்கு
மாநிலம் ரகுமான்களைத் தோற்றுவிக்க இந்தியாவிலே யாரும்
முன்வரமாட்டார்கள் என்று நானும் நிச்சயமாகநம்புகிறேன்.
இந்த நிதி நிலை அறிக்கை தமிழ் நாட்டு மக்களுடைய உரிமைக்
குரலை எதிரொலிக்கிற ஒரு அறிக்கையாகும். பாராளுமன்ற
முறைகளை ஏற்றுக் கொண்டிருக்கிற நாம், அந்த அடிப்படை
யில் நம்முடைய உரிமைக் குரலை இதன் மூலம் எழுப்பி
யிருக்கிறோம்.




தமிழரசு
திங்கள் இருமுறை
ஜூன் 1 1971 35 காசு

கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி

கலைஞர் ஆட்சியில்

அறிஞர் அண்ணாவின் பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ் உழவர் பெருமக்களே!

ரொக்கம், உரம், விதை, பூச்சி மருந்து ஆகியவைகளை வைத்துக்கொண்டு உங்கள் ஊர் கூட்டுறவுச் சங்கம் உங்களுக்காகக் காத்திருக்கிறது....

நன்செய்ப்பயிராயினும், புன்செய்ப்பயிராயினும் வேளாண்மைக்கு ஊட்டமளித்து உற்பத்தியைப் பெருக்கத் தேவையான பொருள்களையெல்லாம் கொடுத்து உதவி வருவது

கூட்டுறவுச் சங்கமும் மத்திய வங்கியுமே ஆதம்

ஒரு ஏக்கர் விவசாயம் செய்ய குத்தகைதாரர்களுக்கும் கடன் அளவு ரூ 275 வரை உயர்த்தப்பட்டுள்ளது....

நெல் சாகுபடியானல் ரூ. 300
கரும்பு சாகுபடியானல் ரூ. 850
பருத்தி பயிரிடுவதானல் ரூ. 400
வாழை சாகுபடியானல் ரூ. 500
மணிலா கடலையானல் ரூ. 250
வெற்றிலைகொடிக்கால் என்றல் ரூ. 1500 தரப்படுகிறது...

தானியத்தை வைத்துக்கொண்டும் கடன் வழங்கப்படுகிறது உங்கள் தேவைகள் எல்லாவற்றிற்கும் கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தை அணுகுங்கள்!

உறுப்பினர்கள் வளர்ச்சிக்குச் சங்கமும், சங்கத்தின் வளர்ச்சிக்கு மத்திய வங்கியும் உறுதுணை செய்கின்றன!

தலைவர்:
கோ.சி.மணி எம்.எல்.சி
செயலாளர்:
மு.பார்த்தசாரதி

நீங்கள் சங்கத்தில் சேர்ந்துவிட்டீர்களா ?
கடன் மனு கொடுத்துவிட்டீர்களா ?
இல்லையேல் இன்றே உங்கள் ஊர் விவசாயக்கூட்டுறவு சங்கத்தை அணுகுங்கள்...

மத்திய கூட்டுறவு வங்கி கும்பகோணம்

தமிழரசு

மலர் 1 1971 ஜூன் 1 இதழ் 23

இந்த இதழில்

ஐந்தரைப் பெட்டியில் அருமை அமிழ்தம்
சிற்றூர்
மோகவிளைச்சல்
தமிழ் நாட்டில் மின் வளர்ச்சி
பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதி
கேளுங்கள் கொடுக்கப்படும்
மக்களை நாடிவரும் மருத்துவமனை
மாணவர் அரங்கம்
வெண்பாப்போட்டி

முதல்வர் எழுதும்

இனியவை இருபது

நான் கேட்கும் பிச்சை

உடன் பிறப்பே,

ஜூன் மூன்றும் நாள் என் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டு அந்த விழாவுக்கு நானும் வரவேண்டுமென்று மடல்கள் தீட்டிக்கொண்டேயிருக்கிறாய். என் பிறந்த நாளன்று நான் விழா அரங்குகளுக்கு வருவதை வழக்கமாகவே கொள்ளவில்லை என்பது உனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் ஒரு நிபந்தனையுடன் பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்வதுண்டு.

என் பிறந்த நாளையொட்டி நான் தொடங்கிவைத்த அண்ணா அறக்கட்டளைக்குப் பெருந்தொகையொன்றினை அன்பளிப்பாகத் தருவதாக இருந்தால் மட்டுமே விழாக்களில் நான் பங்குகொள்ள முடியும் என்பதுதான் அந்த நிபந்தனை. அண்ணா அறக்கட்டளையைத் துவக்கி வைத்ததுதான் என் பொறுப்பு!

ஏனைய பணிகளை அதன் பொறுப்பாளர்கள் கவனித்து வருகிறார்கள். ஒரு கணிசமான தொகை சென்ற ஆண்டும், அதற்கு முதல் ஆண்டும் என் பிறந்தநாளில் வழங்கப்பெற்று அதில் ஒரு குறிப்பிட்ட தொகையை அண்ணா குடும்பத்தாருக்கு அளித்து, மிச்சத்தை அறக்கட்டளையில் சேர்த்துவிட்டேன். வங்கியில் போடப்பட்டுள்ள அந்தப் பணத்திற்கு வரும் வட்டியைக் கொண்டு, ஆண்டுதோறும் பள்ளி இறுதி வகுப்பில் தமிழ்ப் பாடத்தில் முதல் எண்கள் எடுத்துத் தேர்ச்சி பெறும் மாணவ மாணவிகளுக்கு மாவட்ட வாரியாக ஒரு தொகை பரிசாக வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு முதல் மேற்கொண்டும் பல அறச்செயல்கள் புரிந்திட அண்ணா அறக்கட்டளையினர் முனைந்துள்ளனர். தென்னிந்திய திரைப் படத்துறையினர் சென்ற ஆண்டு என் பிறந்தநாள் விழாவில் அளித்த பெருந்தொகையில் நான் பிறந்த ஊரில் கட்டப்படும் உயர்நிலைப்பள்ளிக்கு இருபத்தையாயிரம் ரூபாய் அளித்தேன்.

மிச்சத்தொகையை வாழ்வில் இன்னலுறும் கலையுலகப் பெருமக்களுக்கு உதவி அளிக்கும் திட்டமொன்றைத் தொடங்குமாறு வேண்டி, கலையுலகத்து நண்பர்களிடமே அளித்து விட்டேன். அவர்கள் என் பெயரால் ஒரு அறக்கட்டளை உருவாக்கி இந்த ஆண்டு அத்தகைய கலைஞர்களுக்கு உதவிப் பணம் தந்திடத் திட்டம் தீட்டியுள்ளனர். ஜூன் இறுதி வாரத்திலிருந்து அந்தக் காரியம் தொடர்ந்து நடக்க இருக்கிறது.

நமது கழக அரசு, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் தமிழ் நாட்டில் பிச்சைக்காரர்களே இல்லாத அளவுக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தப் பணியாற்றி வருகிறது என்பதை அனைவரும் அறிவர். அதற்காக விடுதிகள் அமைக்கப்பட்டு ஆங்கு பிச்சைக்காரர்களுக்குத் தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப் பெரிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னோடியாக இந்த ஆண்டு, தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு விடுதிகள் அமைத்து அவர்களை வீதியில் அலைய விடாமல் அந்த விடுதிகளில் சேர்த்து, வியாதிக்குச் சிகிச்சை அளிப்பதோடு வேலைகள் கற்றுக் கொடுக்கும் பயிற்சியும் தரப்பட இருக்கிறது. அந்த விடுதிகளிலேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். அதற்கெனத் திரட்டப்படும் நிதிதான் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி! ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணத் துடித்த அண்ணனுக்குத் தம்பிகள் அல்லவா நாம்! அந்த ஆவலை நிறைவேற்றப் பாடுபடுவோம்.

ஜூன் மூன்றும் நாள் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தைப் புதிய கவர்னர் முன்னிலையில் தமிழக அரசு தொடங்குகிறது. என் பிறந்தநாள் விழா, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்ட விழாவாக இருப்பதைவிட எனக்கு வேறொரு மகிழ்ச்சி இருக்க முடியுமா ?

உத்தமர் காந்தியடிகள் தொழுநோய்க்காரன் உடலைத் தொட்டுச் சிகிச்சை அளிப்பது போன்ற படம் பொறித்த ஒரு அட்டையை, அன்று தமிழக அரசு விற்பனைக்குக் கொண்டு வருகிறது. ஜூன் திங்கள் முழுவதும் அந்த அட்டை விற்பனையாகும். அதன் விலை ஐம்பது காசுதான்!

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காகத் தமிழக அரசுப் பரிசுச் சீட்டு சிறப்புப் பரிசுகளைப் பிரகடனப் படுத்தியிருப்பதையும் நாடு அறியும்.

ஆகவே, ஜூன் மூன்றும் நாள் என்னைப் பார்க்க, பிறந்தநாள் வாழ்த்துச் சொல்ல, மாலைச் செலவு, ரயில் செலவு இவைகளையெல்லாம் வீணாகச் செய்து கொண்



நமது நிலை

டிராமல் அந்தச் செலவில் பாதிப் பணத்தைக்கொண்டு ஐம்பது காசு அட்டைகள் பலவற்றைப் பெற்றிட வேண்டுகிறேன். பரிசுச் சீட்டுகள் வாங்கிட வேண்டுகிறேன்.

" ஆவல் அடங்கவில்லை. வந்து தான் தீருவேன்" என்று அடம் பிடித்தால், ஒவ்வொரு மாலை போடும் போதும் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்குப் பத்து ரூபாய் என்னிடம் கொடுத்தால்தான் ஜூன் மூன்றும் தேதியன்று நான் மாலை போட்டுக் கொள்வேன் என்பதை மட்டும் கண்டிப்பாகச் சொல்லி விடுகிறேன். பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு 'அரசு எடுக்கும் அரிய முயற்சிக்குத் தமிழகத்தார் அனைவரின் பங்கும் இருந்திடல் வேண்டும். அது ஒன்றே இந்த ஆண்டுப் பிறந்த நாளில், என் உடன் பிறப்பே! நான் உன்னிடம் கேட்கும் பிச்சையாகும்.'

அன்புள்ள,

மு. கருணாநிதி.



17. கடல் விழுங்கிய நாடு

டஸ்ஸல்டார்ஃபிலிருந்து புறப்பட்டு ஹாலந்து நாட்டின் முக்கிய நகரான ஆம்ஸ்டர்டாமை அடையும்பொழுது நண்பகல் 12-45 மணி, அங்கு ஹாலந்து நாட்டில் ஹேக் (The Hague) நகரில் தங்கியிருக்கும் இந்திய தூதுவர் எங்களைவரவேற்க ஆம்ஸ்டர்டாம் நகருக்கு வந்திருந்தார். தன் தாய் நாட்டின் ஒரு மாநில முதல்வரைத் தூதுவர் என்ற முறையில் வரவேற்கும் கடமை உணர்ச்சியை விட அன்புணர்ச்சியே மிகுதியாக அவரிடம் இருக்கக் கண்டேன். பிலிப்ஸ் ஸ்தாபனத்தாரின் உயர்தர அதிகாரிகளும் விமான நிலையத்திற்கு எங்களை வரவேற்க வந்திருந்தனர்.

மேலை நாட்டு விமான நிலையங்கள் யாவும் நவீன வசதிகளுடன் மிகச் சிறந்து விளங்குகின்றன. ஆம்ஸ்டர்டாமும் குறிப்பிடத்தக்க சிறந்ததோர் விமான நிலையமாகும். அங்கிருந்து " அப்பலோ " என்ற விடுதிக்குச் சென்றோம். விடுதியிலிருந்த வண்ணம் ஆம்ஸ்டர்டாம் நகரின் தோற்றத்தின் ஒரு பகுதியைக் காணமுடிந்தது. அந்த நகரின் பெரும்பகுதி நீர்மயமாகத் தெரிந்தது. ஒரு மாபெரும் கப்பல் மாளிகையாகத் தண்ணீரின் நடுவே ஆம்ஸ்டர்டாம் விளங்கிக் கொண்டிருந்தது.

ஹாலந்து நாட்டை நெதர்லாந்து என்றும் அழைப்பர். நெதர்லாந்து என்றால் இங்கு வாழ்கின்ற டச்சு மக்களின் தாய் மொழியில் ' தாழ்வான பூமி ' என்று பொருள். நாட்டின் பெரும்பகுதி கடல் மட்டத்திற்குத் தாழ்வாகவே இருக்கிறது.

1170-ஆம் ஆண்டில் வடகடல் நெதர்லாந்தின் உட்புகுந்து நூற்றுக்கணக்கான கிராமங்களையும் நகரங்களையும் விழுங்கியது. நாட்டின் தெற்குப்பகுதியில் பல நூறு மைல் பரப்பளவில் பன்னிரண்டு அடி ஆழத்திற்கு 'சூடர் சீ' (Zuider Zee) எனப்படும் சிறியதொரு கடலாக வடிவெடுத்தது. 1421-ஆம் ஆண்டில் மீண்டும் கடல் பொங்கி எழுந்து பதினாயிரவரைப் பலிகொண்டது. 1953-ல் வேனிற் காலத்து வெள்ளம் மேற்குப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை இரையாகப் பெற்றது. ஆனால் டச்சுக்காரர்கள் நெஞ்சம் அயர்ந்தார்களில்லை. மாபெரும் சுவர்களை எழுப்பிக் கடல் நீரை வடித்து விளைநிலமாக்கி வருகின்றனர்.

தாழ்வான நிலத்தில் நீர் புகாமல் கடலோரத்தில் இயற்கையான மணல் திட்டுகள் தடுத்து வருகின்றன. அவை இல்லாத இடங்களில் டச்சுக்காரர்கள் வலிமையான செயற்கைச் சுவர்களை (dykes) எழுப்பியுள்ளனர். இத்தகைய வருமுன் காக்கும் பணிகள் ஒருபுறமிருக்க, கடல் நீரை வற்றச்செய்து அவற்றை வளமிக்க நிலமாக்கும் மகத்தான பணியும் மறுபுறம் நடந்துகொண்டிருக்கிறது. அவற்றை போல்டர்கள் (Polders) என்று அவர்கள் அழைக்கின்றனர். அவ்வாறு கடலிடமிருந்து மீட்கப்பட்ட நிலம் ஹாலந்து மண்ணில் இன்று மூன்றில் ஒரு பங்கிற்கும் மேற்பட்டதாகும் என்பது கடலையேவெற்றிகொண்ட! அந்தக் கடல் மறவர்களின் ஆற்றலுக்கு அரியதொரு சான்றாகும். இதனால் " கடவுள் உலகைப் படைத்தார்: ஹாலந்தை டச்சுக்காரர்கள் படைத்தார்கள் " என்ற ஒரு பழமொழி அங்கு வழங்கி வருகிறது.

காலமெல்லாம் கடலோடு போராடிய காரணத்தால் கப்பல்கள் கட்டுவதிலும், இயக்குவதிலும் சிறந்து விளங்கும் இவர்கள் அலைகடல்மீதும் ஆணை செலுத்தி 'காலனி'களை அமைத்தவர்கள் என்னும் வீரவரலாற்றினையும் பெற்றிருக்கின்றனர்.

உழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா(து) உஞற்று பவர்

என்பதற்கோர் உதாரணம் நெதர்லாந்து நாடு.

இவைகளையெல்லாம் கண்டும் கேட்டும் உணர்ந்த பொழுது
' பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள'

என்னும் சிலப்பதிகார அடிகள் என் நினைவிற்கு வரத் தவறவில்லை. குமரி ஆற்றினையும் மலையினையும் அவற்றை ஒட்டிய கொடுந்தமிழ் வழங்கிய பன்னிரு நாடுகளையும் உள்ளிட்ட ஏழேழு நாற்பத்தொன்பது நாடுகளையும் இமிழ் கடல் தனக்கு இரையாக்கிக் கொள்ளாமல் இருந்திருந்தால், கன்னித் தமிழ் வளர்த்த கபாடபுரமும் தென்னவர் தலைநகராம் தென் மதுரையும் கடலில் மூழ்காமல் இருந்திருந்தால், நமது இன்பத் தமிழகம் எத்தனை பெரிதாகவும் வலிவும் வனப்பும் மிக்கதாகவும் இருந்திருக்கும் என்று எண்ணி ஏங்கினேன். "வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" என்று குறுகியிருக்காதே எனவும் வருந்தினேன். கடல்கொண்ட பூம்புகாரை ஹாலந்து நாட்டின் உதவி கொண்டாவது மீட்க முடியுமா என்று பெருமூச்சு விட்டேன்.

ஹாலந்து நாடெங்கும் எண்ணற்ற காற்றுப் பொறிகள் (Wind Mills) காணப்படுகின்றன. தாழ்வான நிலங்களிலிருந்து தண்ணீரை இவை அல்லும்

பகலும் இறைத்தவண்ணம் இருக்கின்றன. கடலுக்கு அருகே, அதனினும் தாழ்வான மட்டத்தில் உள்ள ஒரு நாடு கடலோடு போராடிக்கொண்டு வாழ்ந்து வருகிறது. பாலென்றும், வெண்ணெய்யென்றும், பனிமலர்ப் பூக்களென்றும், பாலடைக் கட்டியென்றும், சீனியென்றும், சிறந்த துணிகளென்றும், உரம்மிகு நிலக்கரி என்றும், உணர்ந்த காலணிகளென்றும், வானொலிப் பெட்டியென்றும் வகைவகையாய் இயந்திரங்களென்றும் உலகமெங்கும் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது அந்நாடு.

பூந்துகில்களுக்கும், புதுப்புது இரசாயனப் பொருள்களுக்கும், காகிதங்களுக்கும், கண்ணாடிகளுக்கும், அழகிய நல்ல வெள்ளித் தட்டுகளுக்கும், ஆகாய விமானங்களுக்கும், சாக்கலேட்டுகளுக்கும் கரும்புத் தொழிலுக்கும் புகழ் மிக்க ஆம்ஸ்டர்டாம் நகரம், வைரத்தைப் பட்டை தீட்டுவதிலும் பெரும் பெயர் பெற்றிருக்கிறது. டச்சுக்காரர்கள் தங்கள் இணையற்ற ஆற்றலைக் காட்டிடும் மற்றொரு தொழிலும் இங்கு உண்டு. அதுதான் அச்சுத் தொழில்.

ஸ்பெயின் ஆதிக்கத்திலிருந்து டச்சு மக்களுக்கு விடுதலை அளித்து 1581-ல் அதற்குக் குடியரசு வாழ்வுப் பிரகடனம் செய்த பெருமை ''வில்லியம்'' என்பவனுடையதாகும். மத வாழ்வில் மாற்றத்திற்கு உரிமை கோரும் மக்களை ஈவு இரக்கமின்றி நசுக்கிட வேண்டும் என்னும் திட்டத்தினை மன்னன் கூறக் கேட்டு அவன் அருகில் அரசின் அந்தரங்க ஆலோசகனாக இருந்த வில்லியம் மனம் கொதித்தான் என்றாலும் மவுனியாக இருந்தாலும் சூழ்நிலையைக் கருதி! அதனால் மவுனி வில்லியம் (WILLIAM the Silent) என்ற பெயரே அவனுக்கு வரலாற்றில் நிலைத்து விட்டது. பின்னாளில் 'இரண்டாம் பிலிப்' என்னும் ஸ்பெயின் மன்னனின் அரசாட்சியில் படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட பொழுது மக்களுக்குத் தலைவனாகி மாபெரும் போர் நிகழ்த்தினான் வில்லியம். போர் முகத்தில் அவனைச் சந்திக்க இயலாத பிலிப், வில்லியத்தின் தலைக்கு விலை பேசினான். அடிவருடிகள் அம்முயற்சியில் இறங்கிப் பன்முறை தோற்றனர்.

ஜெர்மனியில் ரைன் நதியின் மீதுள்ள பாலம்



இறுதியில் 1584-ல் பொற்காசுகளுக்கு ஆசைப்பட்ட பொல்லாத கொலை வெறியன் ஒருவனின் துப்பாக்கியால் வில்லியம் தாக்குண்டு மாண்டான். ஆனால் அவன் விட்டுச்சென்ற வீர காவியத்தைத் தொடர்ந்து எழுத அவனுடைய இரு மைந்தர்களும் முன்வந்தனர். ''மாரிஸ்'', ''பிரடரிக் ஹென்றி'' என்ற அந்த மாவீரன் பெற்ற இரு கண்மணிகள் களத்தில் இறங்கினர். 1609-ல் டச்சுக் குடியரசு உருவாகியது.

ஹாலந்தின் வீரத்திற்கு ஒரு விளக்கம் வில்லியம் என்றால், கலைக்கு ஒரு வடிவமாகத் திகழ்ந்தவன் ரெம்ப்ராண்ட் (Rembrandt) என்பவன். வறுமையில் பிறந்து, வளமையில் சின்னாள் வாழ்ந்து, பின்னர் மீண்டும் வறுமையில் உழன்று, இறுதியில் கவனிப்பார் யாருமின்றிக் காலத்தை முடித்துக் கொண்ட ரெம்ப்ராண்ட், ஓவியத் துறையில் ஓர் ஒப்பற்ற மேதை. இல்லாமைத் தொல்லையால் அவன் இடுக்கண்களுற்றதைப் பற்றி வரலாற்றாசிரியர்கள் வருந்துவதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அவனுடைய எழில் மிகு சித்திரங்களுள் மிகவும் சிறந்தவை அவன் ஏழ்மையில் வாழ்ந்தபோது தீட்டியவைதானாம். ஹாலந்து நாட்டு மக்கள் அவனை மறக்காமல் அவன் புகழ் கூறிடக் கேட்டேன்.

ஆம்ஸ்டர்டாம் நகரில் வரிசை வரிசையாக வீடுகள். அவை நீரில் மிதக்கின்றனவோ என்று எண்ணிடத்தக்க வகையில் அவற்றின் ஓரத்தே கால்வாய்கள் ஓடுகின்றன. சாலைகளையும், மரங்களையும் காண்கிறேன். அவை மருங்கே ''கருங்கயற்கண் விழித்து ஒல்கி'' நடக்கும் கால்வாய்களையும் காண்கிறேன். ''இத்தனை கால்வாய்கள் ஏன் இப்படிப் பின்னிப் பிணைந்திருக்கின்றன?'' என்று அந்நாட்டினர் ஒருவரைக் கேட்டேன்.

'தண்ணீரைக் கடலின்பால் வடிக்கும் பொருட்டு'' என்றார் அவர். அவைகள் நகரின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குப் பொருள்களை ஏற்றிச் செல்லவும் உல்லாசப் பயணிகள் படகுகளில் சென்று நகரின் தோற்றத்தைக் கண்டு களித்திடவும் பயன்படுகின்றன.

நம்முடைய தமிழகத்தின் தலை நகரில் ஒரு தீவுத் திடலைத் தானே காணமுடிகிறது! ஆம்ஸ்டர்டாம், நகரைக் கால்வாய்கள் 90 சின்னஞ்சிறு தீவுகளாகப் பிரித்திருக்கின்றன. அவற்றின் மேல் நகரெங்கும் காணப்படும் பாலங்களின் மொத்த எண்ணிக்கை நானூறு.

வட ஐரோப்பாவின் அழகு மிக்க நகரமாக விளங்கும் ஆம்ஸ்டர்டாம் நெதர்லாந்தின் வணிகத்தலமாகும். 1240-ஆம் ஆண்டில் ஆம்ஸ்டல் நதிக் கரையின்மீது அணை எழுப்பிய போது தோன்றிய இந்நகரம் அதனாலேயே ஆம்ஸ்டர்டாம் என்னும் பெயரைப் பெற்றதாம். இது ஓர் எழில்மிகும் துறைமுகப் பட்டினமாகும்.

இறுக்கமில்லாத மண்ணின் மீது மரப் பலகைகளை அடுக்கி மாளிகைகள் எழுப்பப்பட்டிருக்கும். இம்மாநகரைக் கால்வாயில் சிறு படகில் அமர்ந்த வண்ணம் சுற்றிப் பார்ப்பது எங்களுக்கு இன்பம் மிக்கதொரு பொழுது போக்காக இருந்தது. சிறிய படகு மெல்லென்று அசையச் சீதளக் காற்று சில்லென்று வீச, ஆம்ஸ்டர்டாமை நாங்கள் பார்வையிட்டபோது, அழகான ஆங்கிலப்பேச்சு அடிக்கடி காதில் வந்து பாய்ந்தது. வழிகாட்டியாக அந்தப் படகிலே பணியாற்றிய கல்லூரி மாணவியின் விளக்க உரைகள்தாம் அவை. கழுத்தில் கருப்பு ரிப்பன்; மஞ்சள் நிற மேல் சட்டை, கரிய வண்ணத்தில் முழங்கால் வரை

ஒப்பற்ற ஓவிய மேதை ரெம்ப்ராண்ட்

கால்சட்டை அணிந்து கனிவுடன் விளங்கினாள். ஆங்கிலம், டச்சு ஜெர்மன் ஆகிய மூன்று மொழிகளில் அழகாக விளக்கம் தந்து கொண்டு வந்தாள். படகு ஒவ்வொரு இடத்தைக் கடக்கும் பொழுதும் ''இதோ இடது பக்கம் தெரிகிறதே, சிவப்பு நிறக் கட்டடம், இங்குதான் ஆம்ஸ்டர்டாம் நகரின் சிறந்த கவிஞன் வாழ்ந்தான்; அதோ சற்று முன்னால் வலது கரையில் தெரிகிறதே மஞ்சள் நிறக் கட்டடம், அது தான், ஆம்ஸ்டர்டாம் நகரின் முதல் வங்கி என்றும் அந்தந்த இடங்களின் முக்கியத்துவம் பற்றிச் சலிக்காமல் இனிய குரலில் விளக்கம் தந்து கொண்டே வந்தாள். கல்லூரிப் படிப்பையும் படித்துக் கொண்டு ஓய்வு நேரங்களில் கைடு (Guide) தொழிலையும் செய்து ஓரளவு ஊதியம் ஈட்டுகிறாள் அந்தப் பெண்மணி.

காற்றுப் பொறி



இந்தக்கால்வாய்களில் படகுப் பயணம் செய்யும் ஒவ்வொருவரும் ஒரு சுவையான நிகழ்ச்சியைக் காண நேரும். நாங்கள் படகில் ஏறும்பொழுது யாரோ ஓர் இளைஞன் தன் விருப்பத்திற்கு ஒவ்வொருவரையும் புகைப்படமெடுத்துக் கொண்டிருந்தான். அவன் என்ன பொழுது போக்கிற்காக எடுக்கிறானோ அல்லது, அவனுக்குப் பைத்தியமோ என்று கூட எண்ணத் தோன்றும். ஆனால் படகுப் பயணம் முடிந்து நாங்கள் மீண்டும் அதே இடத்திற்கு வந்தபொழுது எங்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டான். எடுத்த அத்தனை படங்களையும் அழகாக அச்சிட்டு மாட்டியிருந்தான். பயணம் செய்தவர்களில் பெரும் பகுதியினர் அவன் கூறிய விலை கொடுத்து வாங்கிச் சென்றனர். நம் அனுமதியின்றி நம்மைப் படமெடுத்து நம் அனுமதியுடன் நமக்கே விற்கும் விந்தையை— வியாபாரத் தந்திரத்தைப்— போற்றாமல் இருக்க முடியுமா?

படகு ஓட்டுபவர் குறுகலான இடங்களிலும், சிறுபாலங்களின் வளைவுகளுக்குள்ளேயும் வெகு திறமையாக ஓட்டிச் சென்றார். சுமார் ஒரு மணி நேரத்தில் நகரின் பெரும் பகுதியைச்சுற்றிப் பார்க்க முடிந்தது. இம்மாதிரி உல்லாசப்படகு வீடும் தொழிலில் இந்த நகரில் பலர் ஈடுபட்டுள்ளனர். நகரில் இடமின்மை காரணமாகச் சிலர் படகு வீடு

களில் கால்வாய் ஓரங்களில் வாழ்கின்றனர். இப்படகு வீடுகள் வாடகைக்கும் விடப்படுகின்றனவாம்.

இந்நகரின் கால்வாய்கள் கண்ணுக்கு விருந்தாகும். கவிஞரின் பண்ணுக்கு ஊற்றாகும். முதியோரும், இளையோரும் காதலரும் களித்திருக்கும் உல்லாச இடங்களாகும்.

"அழகுநீர் அலையாய் அசைந்து வர, அன்னம்போல் படகுகள் அதன்மேல் மிதந்துவர, இருபுறத்திலும் ஓங்கி உயர்ந்த கட்டடங்கள் எழில் தர, நகரின் இடையே செல்லும் கால்வாய்கள் உலகின் பல பகுதிகளிலிருந்து 'ஹிப்பிகள்' உட்பட உல்லாசப் பயணிகள் பலரை ஈர்க்கின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் அடங்கிய "ஹிப்பிகள்" கூட்டம் ஒன்று நகரின் மத்தியில் உள்ள எழில் மிக்க சதுக்கம் ஒன்றினைத் தங்கள் வாழுமிடமாக்கிக் கொண்டதையும் கண்டேன்.



ஹாலந்து நாட்டில் ஓர் அழகிய காட்சி.

நெதர்லாந்தில் அன்னம்போல் மிதந்துவரும் படகுகள்



மணம் மிக்க பூமி நெதர்லா, டுலிப், ஹயாசிந்த் எனப்படும் நறுமண மலர்கள் நம் நாசிக்கு நல்விருந்து. எழில் மணக்கும் ஆம்ஸ்டர்டாம் எங்களுக்கு 7-30 மணிக்கு விடை தந்தது.

வழி நெடுகிலும் பசும்புல் நிலங்களையும், வளமான மாடுகளையுடைய பால் பண்ணைகளையும் நிறையக் காணமுடிந்தது. விளைநிலங்கள் மிகக் குறைவாகவே தென்பட்டன. இரவு சுமார் ஒன்பது மணிக்கு உலகம் முழுதும் பரந்து விரிந்துள்ள பிலிப்ஸ் நிறுவனத்தாரின் தலைநகரும், நெதர்லாந்தின் எல்லைப்புறத்தில் அமைந்திருப்பதுமான "எய்ந்தோவன்" நகரை வந்தடைந்தோம்.

(தொடரும்)

மக்களை நாடிவரும் மருத்துவமனை

கும்மிடிப்பூண்டி கிராமம் அன்று குதூகலத்தில் மூழ்கியிருந்தது. எங்கும் சுறுசுறுப்பு-மகிழ்ச்சியின் பிரதிபலிப்பு.

ஊரையடுத்து, 'சாரணர் தங்குமிடமா?, அல்லது ராணுவத்தினர் முகாமிட்டிருக்கின்றனரா?' என்று எண்ணவைக்கும் வகையில் ஏராளமான கூடாரங்கள்!

அருகில் சென்று பார்த்தால் அங்கு காக்கி உடைகள் இல்லை. கழிகளும், துப்பாக்கிகளும், காணப்படவில்லை. மாறாக வெள்ளை உடை பூண்ட டாக்டர்கள், செவிலியர்கள் அங்கும் இங்கும் சென்று நோயாளிகளைக் கவனிக்கலாயினர்.

ஆ! அது ஒரு நடமாடும் மருத்துவமனை! ஊர்திகளில் சென்று கவனிக்கும் மருத்துவமனை போன்றது மட்டும் அல்ல! இது அதைவிடத் தனிச்சிறப்பு வாய்ந்தது. மருத்துவ வசதியில்லாத கிராமப்புறங்களில் டாக்டர்களும், நர்சுகளும் தங்கியிருந்து நாள்தோறும் நோயாளிகளைப் பார்வையிட்டு மருந்துகள் தந்து பேணிக் காத்திடும் பெரும்பணி, இது.

கிராம மக்களின் நல்வாழ்வினைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு நேரடியாக மருத்துவ வசதியைச் செய்து தரும் வண்ணம், மத்திய மாநில அரசுகளின் துணையுடன், மறைந்த தேசபக்தர் சித்தரஞ்சன் தாஸ் அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் விதத்தில் இந்த நடமாடும் மருத்துவ மனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனைச் செங்கை மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியில் 8—1—1971 அன்று நல்வாழ்த்துறை அமைச்சர் திரு. அன்பழகன் அவர்கள் தலைமையில் தமிழக முதல்வர் கலைஞர் துவக்கி வைத்தார்.

ஏழைக் கிராமவாசிகளுக்கு உதவுவதோடன்றி, மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கட்கும், மற்றும் இளம் டாக்டர்களுக்கும் கிராமத்திலே உள்ள சுகாதாரச் சூழ்நிலைகளைச் சுட்டிக்காட்டி எதிர்காலத்தில் அந்த வகையில் பணியாற்றப் பயிற்சி அளிப்பதும் இந்த மருத்துவ மனையின் குறிப்பிடத்தக்க நோக்கமாகும். அதுபோல், செவிலியர் மற்றும் மருத்துவத் துறையைச் சேர்ந்த பல்வேறு பிரிவினருக்குக் கிராமியச் சூழ்நிலையை உணர்த்துகின்ற வாய்ப்பினையும் இந்த நடமாடும் மருத்துவமனை அளிக்கின்றது. இதன் விளைவாகக் கிராம மக்கள் தாங்கள் இருக்கும் இடத்திலேயே சிறந்த மருத்துவ வல்லுநர்களின் சேவைகளைப் பெற ஏதுவாய் உள்ளது. மருத்துவச் சிகிச்சை மட்டுமின்றிப் பொதுச் சுகாதாரம், தொற்றுநோய் பரவும் விதங்களைத் தடுப்பது, சத்துள்ள உணவுகளை உண்பதன் அவசியம்முதலியவற்றைக் கிராம மக்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்கவும் இத்திட்டம் உதவியாக உள்ளது.

கடந்த சனவரித்திங்கள் ஏழாம் நாள்காலை மருத்துவஅதிகாரியின் தலைமையில் ஏழுபேர் கொண்ட முன்னேற்பாட்டுக் குழு, கும்மிடிப்பூண்டி வந்தடைந்தது. மறுநாள் அதாவது 8—1—71 காலை முதற்கொண்டே (Out Patient) எனும் புறநோய்ப் பகுதியை ஊராட்சி ஒன்றிய அவைக்கூட்டத்திலே துவக்கினார்கள். முதல் நாளன்று 32 பேர்கள் மட்டுமே சிகிச்சைக்கு வந்தாலும், நாளடைவில் நூற்றுக்கணக்கான பேர் சிகிச்சை பெற ஆர்வத்துடன் திரண்டு வந்தனர். தினந்தோறும் ஏறத்தாழ 500 பேர் சிகிச்சைக்கு வந்த வண்ணம் இருக்கின்றனர். 10—3—71 அன்று புறநோய்ப் பகுதிக்கு வந்தவர் எண்ணிக்கை 620 ஆகும்.

இம் மருத்துவ மனையை வெற்றிகரமாக நடத்தும் பொறுப்பு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் மருத்துவமனை திரு. கே. எம். காதர் மஸ்தான் என்ற மருத்துவ அதிகாரியின் கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி பயிற்சி டாக்டர்கள் உதவி புரிகின்றனர். இவர்கள் வாரத்திற்கு ஒருமுறை மாற்றப்படுகின்றனர். இந்த மருத்துவமனையில் 3 செவிலியர்கள் அங்கேயே தங்கி இருந்து பணிபுரிகின்றனர். இவர்களுக்கு உதவியாக வாரத்திற்கு இருமுறை, பயிற்சி செவிலி

யரும் பணிபுரிகின்றனர். வாரத்திற்கு 4 தடவை ஆர்.எஸ்.ஆர்.எம். ஆஸ்பத்திரியிலிருந்து பெண் டாக்டர்களும் வரவழைக்கப்படுகிறார்கள். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எம். ஜி. பிரபு அவர்கள் தலைமையில் பேராசிரியர்கள் பலர் இம் மருத்துவ மனைக்குச்சென்று தங்கள் துறையை நாடிவரும் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

இந்த நடமாடும் மருத்துவ மனை மொத்தம் 62 கூடாரங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ மனையில் மொத்தம் 8 வார்டுகள் இருக்கின்றன.



சிகிச்சைக்கு வந்துள்ள பெண்கள், ஆண்கள் கூட்டம்

ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக 25 படுக்கைகள் உள்ளன. இந்த மருத்துவ மனை அழகான சூழ்நிலையில் கூடாரங்களில் அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனிக் கூடாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. முதலில் நோயாளிகளை விசாரணை செய்வதற்கென்றே ஒருதனிக்கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனியாகப் புறநோய்ப் பகுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் சிகிச்சை காலை 8 மணி அளவில் தொடங்கி 11-30 மணி வரை இயங்குகிறது. மிக அவசரமாக வரும் நோயாளிகளை, எந்த நேரத்திலும் சோதிக்க வசதியுள்ளது. மருந்தகத்திற்காக, ஒரு தனிக்கூடாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல், ஊசி போடுவதற்கும், புண்களுக்கு மருந்து கட்டுவதற்கும், எக்ஸ்ரே படம் எடுப்பதற்கும், தனித்தனிக்கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல அறுவை அரங்கக் கூடாரமும் உள்ளது. இங்கு சிறு சிறு அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. மிகப்பெரிய அறுவைச் சிகிச்சையானால் அவர்களைச் சென்னைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுகிறது. இங்கு நோயாளிகளுக்கு மருந்து இலவசமாக வழங்கப்படுகிறது. வார்டில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு, இலவசமாகச் சத்துள்ள உணவும் வழங்கப்படுகிறது.

இங்கேயே தங்கிப் பணிபுரியும் பயிற்சி டாக்டர்கள், நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதோடன்றி, கிராமங்களுக்குச் சென்று கிராம மக்களுக்கு நோய்த்தடுப்பு முறைகளையும் நல்வாழ்வு வழிகளையும் அவ்வப்போது போதித்து வருகின்றனர். இந்த இளம் மருத்துவர்கள் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சமூக மற்றும் தடுப்பு மருந்து பேராசிரியர்களின் துணையுடன் தண்டலச்சேரி கிராமத்தில் ஏறத்தாழ நூறு குடும்பங்களைச் சந்தித்து ஆராய்ந்து அறிக்கை தயாரித்துள்ளனர்.

கடந்த குடும்பநலத் திட்ட இரு வார விழாவினையொட்டி இங்கிருந்து சுமார் 10 மைல் தொலைவிலுள்ள தேர்வாய் கிராமத்தில், ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் மருத்துவ அதிகாரியும் மற்றும் இளம் டாக்டர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர். குடும்ப நலத்திட்டப் பிரிவினரின் ஆதரவில் திரைப் படக் காட்சிகளும் காண்பிக்கப்பட்டன. 12—4—71 முதல் 18—4—71 வரை ஒரு சிறிய பொருட்காட்சியும் சிறப்பான முறையில் நடந்தது. மருத்துவ மனையில் குடும்பநலத் திட்ட விளக்கங்களும் தெரிவிக்கப்படுகின்றன. இங்கு இதுவரை டுபெக்டமிஅறுவைச் சிகிச்சைகளும் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 25—3—71 காலை 8 மணிக்கு இங்கு அனுமதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு சித்தரஞ்சனி என்று பெயரிட்டு மூன்றே நாளில் தாயும் சேயும் நலமுடன் வீடு திரும்பினர்.

இந்த மருத்துவமனைத் துவக்கத்திலே இது ஒரு புது அனுபவம்.

இத்தகைய புதுமையான மருத்துவ மனை தமிழகத்திலேயே இதுவே முதலாவதாகும். இந்தியாவிலேயே இதுதான் சிறந்த சில நடமாடும் மருத்துவ மனைகளில் ஒன்றாகும் என்று டெல்லி அதிகாரிகளே, இப்பணியினைப் போற்றியுள்ளனர். இந்த நடமாடும் மருத்துவமனை வெற்றிகரமாகப் பணிபுரிய கும்மிடிப்பூண்டி பஞ்சாயத்து யூனியனும், கும்மிடிப் பூண்டி நகரப்பஞ்சாயத்தும் பெரிதும் உதவி செய்து வருகின்றன. இத் திட்டம் மக்களிடம் அமோக

621



மருத்துவ அதிகாரிகளும் .. .. ..

.. .. .. மக்கள் கூட்டமும்

வரவேற்பையும், பாராட்டுதலையும் பெற்றுள்ளது. கடந்த 4 மாதங்கள் வெற்றிகரமாகப் பணி புரிந்தும், இத் திட்டம் கும்மிடிப் பூண்டியில் மேலும் சில மாதங்கள் இருக்க விரும்பி, மனுச் செய்த வண்ணம் இருக்கிறார்கள் கிராம மக்கள். இந்த நடமாடும் மருத்துவமனை, தனது பணியை முடித்துக்கொண்டு சில நாட்களில் வேறு ஓர் ஊருக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளது.

இதுவரை இந்த மருத்துவ மனையில் புறநோய்க்கு வந்து சேர்ந்து சிகிச்சை பெற்றவர் எண்ணிக்கை 15,135. அதே போல் வார்டுகளில் அனுமதிக்கப் பட்டுச் சிகிச்சை பெற்றோர் எண்ணிக்கை 244 ஆகும்.

கும்மிடிப்பூண்டியில் வெற்றியுடன் தனது பணியைச் செய்து வரும் இந்த மருத்துவ மனை தமிழகத்தின் பல பகுதிகளுக்கு முன்னோடியாகவும் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்கிறதென்பதில் ஐயம் இல்லை.

அதனால்தான் ''இதுபோன்ற மருத்துவமனைகள் கிராமப்பகுதிகளில் நிரந்தரமாக இருந்தால் நல்லதுதான்'' என்று கூறியுள்ளார் தமிழக முதல்வர் அவர்கள். மக்களை நாடிவரும் இந்த மருத்துவமனை பொது மக்களின் இதயங்களில் இடம்பெற்றுவிட்டது.

கூடாரங்களுக்குள்ளே மருத்துவப் பரிசோதனை நடைபெறுகிறது



ஐந்தறைப் பெட்டியிலே அருமை அமிழ்தம்

—நாகை மருத்துவர் நாராயணசாமி

"அமுதா. இன்றிரவு அவர் என்னை விருந்துக்கு அழைத்துள்ளார்; போகவேண்டும்."

"எவர் அழைத்திருக்கிறார்?"

"அவர்தான்; வேலப்பர்."

"என்ன, வேலப்பரா? அவர் நஞ்சப்பராயிற்றே! அவர் ஏன் உங்களுக்கு விருந்து வைக்க வேண்டும்? உங்களுக்கு நீண்டகாலப் பகைவர் விருந்து வைக்கிறார் என்றால் நீங்கள் போகவேண்டுமா என்ன?"

"ஆம். செல்லப்போகிறேன். அவர் விருந்தையும் அச்சமின்றி உண்ணத்தான் போகிறேன். அழைக்கும்போது எவ்வாறு மறுப்பது? அது நாகரீகமாகாது."

"வேண்டாம்; செல்லவேண்டாம். அவர் விருந்தில் நஞ்சு வைத்தாலும் வைப்பார்."

"நஞ்சு வைத்தால் என்ன ? பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர், என்ற குறளுக்கு இலக்கியமாகிவிடலாம் அன்றோ?"

"நீங்கள் இலக்கியமாவீர்கள்; நம் குடும்பம் கலக்கியமாகிவிடும்"

"அமுதா இங்கே பார். எனது மேல் துண்டின் முனையிலுள்ள முடிச்சைப் பார்."

"என்ன அந்த முடிச்சில் உள்ளது?"

"பத்து மிளகு இருக்கிறது."

"இருந்தால் என்ன?"

"உனக்குத் தெரியாதா, ஒரு மருத்துவப் பழமொழி? 'பத்து மிளகிருக்கப் பகைவன் வீட்டுண்ணலாம்' என்ற பழமொழியை அறிந்துகொள்"

கணவன் மனைவிக்கிடையே நிகழ்ந்த உரையாடல் இது. கணவன் எடுத்துக் காட்டிய பழமொழி மிக உண்மை பொதிந்தது. பத்து மிளகு உணவில் சேர்ந்தால் நஞ்சையும் முறிக்கும் என்பது உண்மை. மிளகுக்கு அத்துணை வல்லமை உண்டு. அந்த மிளகின் வல்லமைகள் நினைக்கத்தக்கன; நினைந்து போற்றத்தக்கன. போற்றிக் கைக்கொள்ளத்தக்கன.

மிளகு அத்துணை பெருமையுடையதா என்றால், ஆம் என்று சான்று சொல்கிறது இருக்கு என்னும் நான்மறையில் ஒன்று. இருக்கு மறையில் காரத்திற்கு மிளகாய் எங்கும் குறிக்கப்படவில்லை. மிளகுதான் சிறப்போடு ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளது.

அருமறையாம் உயர்ந்த நூலில் மட்டுமன்று, நிலத்தில் உயர்ந்த இடமாம் மலைப் பாங்கான இடத்தில் இடம்பெற்றது மிளகு. அதற்குரிய பெயர்களுள் மலையாளி என்பதும் ஒன்று. நம்நாட்டு மேற்கு மலைச்சாரலில் விளையும் அது, செல்வம் கொழிக்கும் மேலை நாடுகளில் முற்காலம் முதல் முடைமுடையாய் விரும்பிக் கலங்கள் மூலம் ஏற்கப்பட்டது. அங்கையில் நம் சங்க இலக்கியங்களில் நல்லிடம் பெற்றது. அவ்வேற்றுமதியால் நம் நாட்டுப் பொருளியலுக்குத் துணை நிற்பது.

அருமறையிலும், அரும் மலையிலும் விளங்கும் மிளகு அடுக்களையிலும் தனி இடம் பெற்றது என்பதையும் அறிவோம். உணவுக்குத் துணை உணவாய் அமைவதைக் கறி என்கிறோம். அப்பெயரே இந்த மிளகினால் வந்ததோ என்று கருதும் அளவில் மிளகுக்குக் கறி என்ற பெயர் உள்ளது.

மிளகின் இப்பெருமைகளோடு அதன் தன்மையும், விளைவும், திறனும், பயனும் நோக்கத்தக்கன. அவற்றைக் காண்பது நமக்கு நற்றுணையாகும். அந்த மிளகினைக் கண்ணால் காண்பதே ஒரு நன்மை என்பதை,

"—மிளகாய் கண்டவர்க்கும் இன்பமாம் காரிகையே"

என்கிறது பதார்த்த குண சிந்தாமணி என்னும் மருத்துவ நூல்.

காட்சிக்கு இன்பம் நல்கும் மிளகு, கொடியில் விளைவது. அக்கொடியின் காய் முற்றிப் பழுத்தால் அது பச்சை மிளகு. காய்ந்தால் மிளகு. மிளகு வகைக் கொடி வேறொன்றில் காய்த்து முற்றிப் பழுத்து மேல்தோல் உரிந்தால் வெள்ளை மிளகு. மற்றொருவகைக் கொடியில்



காய்த்துப் பழுத்துக் காம்புடன் காய்ந்தது வால்மிளகு. இது மேல்தோல் சுருக்கமில்லாதது.

பச்சை மிளகு ஊறுகாயாக்கவும், பச்சைக் கறிக்கிடவும் பயன்பட்டு உடல் நலம் பயக்கும். வெள்ளைமிளகு உணவுப்பண்டத்திற்கு ஓரளவான துணைப் பொருளாகவும் பெருமளவில் மருந்துப் பொருளாகவும் பயன்படும். வால்மிளகு மணப் பொருளாகவும் மருந்துப் பொருளாகவும் பயன்படும்; நலம் பயக்கும். வெற்றிலை பாக்குடன் சேர்த்துண்ணுதலால் கோழை போகும். கோழையகற்றி என்பது அதற்குப் பெயர்.

மிளகு பல்வகையாலும் மக்கட்கு நிறைவாகப் பயன்பட்டு நிறைவான நலம் வழங்கும் தனிப்பெருமையுடையது. நாம் அந்த நிறைவைக் காண்போம் :

மிளகு ஓர் உணவுப்பொருள்

மிளகின் பெயராம் கறி என்னும் சொல்லாலே அது உணவில் நிற்பதை அறிந்தோம். அது தனியாக உணவுப் பொருளாவதில்லை. அதன் காரச் சுவை அறுசுவைகளில் ஒன்றாயினும் காரம் தனியாகச் சுவைக்க இயலாத ஒன்று ஆகையால் பிறவற்றுடன் கலந்தே உணவுப்பொருளாகின்றது.

மிளகுச்சாறு சுவையுடைய ஒன்று. வெள்ளைப் பூண்டுடன் சேர்த்து இரசம் என்னும் சாற்றில் நின்று சுவைப்பொருளாகிறது. தனியே மிளகைப் பொடி செய்து சோற்றிலிட்டு நெய் பெய்து நல்லுணவாகிறது. பல்வகைச் சிற்றுண்டிகளிலும் மிளகு அமைந்து மிளகு வடை, மிளகுச் சோறு, மிளகுப் பொங்கல், மிளகு அடை எனத் தன்பெயர் நிறுத்துகிறது. இவ்வகை உணவுகளிலெல்லாம் அமைந்து சுவை பயப்பதோடு அவை செரித்துக் குருதியாகி உடல் ஊட்டத்திற்கும் பயன்படுகின்றது. மிளகுப் பொங்கல் தனிப் பொங்கலை விடவும் பிற பொங்கல்களைவிடவும் எத்துணை பயனுடையது என்பதனைப் பின்வரும் வெண்பா குறிக்கின்றது :

மிளகோ தனமருந்த விம்முகின்ற வாதம்
இளகும் பசியும் எழும்பும்—கலகலெனக்
கூவும் வயிற்றின் குடலிரைச்ச லுங்கபமும்
தாதுபித்த முந்தணியுஞ் சாற்று.

இவ்வெண்பா கொண்டு, மிளகு உணவைச் செரிக்கவைத்துப் பசியைத் தூண்டும் என்பதையும், குடலின் இரைச்சலைப் போக்கும் என்பதையும் அறிகிறோம். அத்துடன் வாதம் இளகவும், தாது பித்தம் தணியவும் மருந்தாவதையும் காண்கிறோம். இலக்கண நூல் உரையாசிரியர்கள் "உணவு மருந்துமாயிற்று" எனக் குறித்துள்ளமையும், மார்கோபோலோ நம்நாட்டார் உணவைப் பார்த்துத் தமிழர்தம் உணவிலேயே மருந்துண்டு என்று குறித்தமையும் இம்மிளகையும் கருத்தில் கொண்டே என அறிய முடிகின்றது.

மிளகு ஒரு மருந்துப் பொருள்

உணவோடு மிளகு மருந்தாவதைக் கண்டோம். முன் கண்ட ஒருவரியோடு இணைந்த மற்றொன்றைக் காண்போம்.

மிளகாய்

கண்டவர்க்கும் இன்பமாம் காரிகையே
— ஏழ்மூலம்
கொண்டவர்க்கு நன்மருந்தாம் கூறு.

என்னும் வெண்பாவில் மிளகு நன்மருந்தாவதைக்காண்கிறோம். இம்மிளகு தனியாகவும் பிற பொருள்களோடும் கூடியும் மருந்தாகும்.

மிளகுக்கு வீக்கங்கரைச்சி என்றொரு மருத்துவப் பெயர் உண்டு. இப்பெயர் கொண்டே இதனை நீரிலிட்டு வீக்கத்திற்குப் பூச, வீக்கம் வடியும் என்பதை அறியலாம். தேள்கடிக்கு ஒவ்வொரு மிளகாக வாயிலிட்டு மெல்லக் கடுப்பு படிப்படியாகக் குறையும். மிளகு ஒன்றைச் சந்தனக் கல்லில் உரைத்துக் கண் புருவத்தில் இடக் கண் கூச்சம் போகும்.

மிளகு, பிணித்தடை

வந்தபின் காக்கும் மிளகு வருமுன் காக்கும் பிணித்தடையுமாகும். சுற்றுப் புறத்தில் ஒட்டும் காய்ச்சல், பரவும் காய்ச்சல், அம்மை முதலியன இருக்குங்கால் பெரியவர்க்கு முப்பதும் சிறியோர்க்குப் பதினைந்துமாக நீர்விட்டு நன்கு அரைத்து ஒவ்வொரு வாய் நீர் அளவு விட்டுக் கரைத்துத் தெளியவைத்து ஒரு வாயும் அரை வாயுமாகக் கொடுக்க மேற்கண்ட பிணி அணுகாது. 'முன்னரே தொட்டிருப்பின் பெருகித் தாக்காது. இவ்வகையில் மிளகு தனித்து நின்று, வந்த நோயைப் போக்கி, வரும் முன் காப்பதனால், மனிதனின் அறிவை ஒத்ததாகின்றது. வள்ளுவப் பெருந்தகை அறிவு துன்பத்தைப் போக்கும் கருவி என்றும்

பகைவராலும் தாக்கி அழிக்க முடியாத உள் கோட்டை என்றும் கருவியாகவும் கோட்டையாகவும் அறிவைக் குறித்தார். அது போன்றே மிளகும் வந்த நோயைப் போக்கி, வரும் நோயையும் தடுப்பதால் வள்ளுவர் தம் குறளாம்,

> அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
> உள்ளழிக்க லாகா அரண்.

என்பதனை இரு சொல்லளவில் மாற்றி,

> மிளகற்றங் காக்கும் கருவி செறுபிணிக்கும்
> உள்ளழிக்க லாகா அரண்.

என்று குறிக்கத் தோன்றுகின்றது.

இவ்வாறு மருந்தாகும் மிளகு எத்துணை நோய்களுக்குப் பகை என்பதை மருத்துவ நூல்கள் பலவும் விரிவாகக் கூறுகின்றன. தமிழ் மருத்துவர் சித்த மருத்துவத்தில், மிளகு நல்லிடம் பெற்றதாகும். சித்தர்கள் மிளகை ஒரு கைம் மருந்தாகக் கண்டனர். மிளகுக்காய் கையில் இருந்தால் உடலைக் கோணலாக்கும் பக்க வலி ஏது? சூன்ய ரோகம் ஏது? வாதம் வருமோ? கழுத்திற் குள் தோன்றும் புண் நிற்குமோ? காது நோய் ஏது? மாதர் குன்மம், மஞ்சட் காமாலை வருமோ? மந்தம் ஏது? என்று சித்தர் வினவுகிறார். இதனைப் பதார்த்த குண சிந்தாமணி,

> கோணுகின்ற பக்கவலி, குய்யரோகம், வாதம்,
> சோணிதம், கழுத்திற்குட் டோன்றுநோய்—காணரிய
> காதுநோய், மாதர்குன்மம் காமாலை, மந்தமென்றீ
> தேதுநோய் காய்இருக்கில் ஈங்கு.

என்று எடுத்துக் காட்டுகின்றது. இவைமட்டுமோ,

> சீதசுரம், பாண்டு, சிலேத்துமம், கிராணி, குன்மம்
> வாத மருகிபித்தம் மாமூலம்—ஓதுசன்னி
> யாசம் பகமார மடன்மேகங் காசமிவை
> நாசங் கறிமிளகி னால்

எனவும் அந்நூல் எடுத்துக்காட்டுகின்றது. நோயின் பெயர்களை நினைவில் நிற்காத நிலையில் இம்மருந்து கையில் நிற்கக் காண்கிறோம்.

இனி, மிளகு, பிற பொருள்களோடு சேர்ந்து மருந்துப் பக்குவமாகி சிறு நோய்களையும் பெருநோய்களையும் தீர்க்கவல்லது என்பதைக் காண்போம்.

பல் நோய் பறக்கும்

ஓர் அளவு மிளகுக்கு இரு அளவு வெல்லச் சருக்கரை சேர்த்துப் பொடியாக்கிப் பல்வலி உள்ள இடத்தில் வலி வருங்கால் வைக்க, விரைவில் பல்வலி போகும். இது மரபுவழி முறை.

காய்ச்சல் கலங்கும்

புதிய மண்சட்டியில் 200 மிளகைப்போட்டுக் கருகாமல் வறுத்து, சட்டியில் வைத்தே மெதுவாகக் கடைந்து பொடியாக்கி, ஒரு

படி நீர் விட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சி அரைப்படி சுண்டியபின் வடிகட்டி, நாளுக்கு இரண்டு வேளையாக மூன்று நாள் கொடுக்க, கடுங்காய்ச்சல் கடுகி ஓடும். இது தேரையர் என்னும் சித்தர் முறை.

நீண்டநாள் மந்தம் நீங்கும்

காக்கரட்டான் எனப்படும் காக்கணம் கொடி உண்டு. அதில் வெள்ளையாகப் பூக்கும் கொடி வேரில் ஒரு பிடி அளவு சேர்த்து அரைப்பிடியளவு மிளகு கூட்டி அம்மியில் அரைத்து வெந்நீரில் கரைத்து நாளுக்கு 4 வேளை கொடுக்க மூன்று நாட்களில் நீண்டநாள் வருத்தி வந்த வயிற்று மந்தம் நீங்கும். இதனை மருத்துவக் குறள்,

> மேலுமே காக்கணம் வேர்மிளகு வெந்நீரில்
> நாலுவே ளையும் அருந்து

எனப்பேசுகிறது.

வெள்ளை—வெட்டை விலகும்

ஆண்களின் வீரியம் வெள்ளையாய் வெளி வரலும், பெண்களுக்கு வெட்டை வெளி வரலும் உடலை உருக்கி நோயாளியாக்கி வாழ்வில் வெறுப்பை ஊட்டுவன. இவை விலக வெள்ளை அறுகம்புல் ஒரு பிடி சேர்த்து மிளகு அரைப்பிடி கூட்டி, வெள்ளைப்பூண்டு பெரிது இரண்டு, தோல் நீக்கிச் சேர்த்து அரைத்து, நீர்விடாமல் கெட்டியாக அரைத்துச் சுண்டைக்காய் அளவு நாளுக்கு இரண்டு வேளை மூன்று நாள் உண்ணவேண்டும். இந்நாள்களில் புணர்ச்சி கூடாது. புளி, எண்ணெய், கடுகு, உப்பு நீக்க வேண்டும். இதனையும் மருத்துவக் குறள் பின்வருமாறு குறிக்கிறது:

> வெள்ளறுகு டன்மிளகு வெள்ளுள் விகழற்சி
> கொள்ளரைத்து வெள்ளையிற் குண்.

தலைப் பொடுகும் புழுவெட்டும் போகும்

மிளகு முப்பது, வெங்காயம் மூன்று, உப்பு ஒரு பிடி சேர்த்துச் சிறிதளவு நீரோ, பாலோ விட்டு அரைத்துத் தலையில் தேய்த்து அரை மணி நேரம் வைத்திருந்து நீராடிவர (வாரத்திற்கு மூன்றுநாள்) பொடுகு போகும்; புழுவெட்டு நீங்கும்; உடல் நிலைக்கேற்ப மயிர் முளைக்கும். இது ஒரு சித்தர் முறை.

கண் பார்வை கவின்பெறும்

உடல் வெப்பத்தாலும், நெறியில்லாத கண் விழிப்பாலும், மீறிய புணர்ச்சியாலும், பகற் புணர்ச்சியாலும், கண் பார்வை மங்குவதுண்டு. அம்மங்கல் நீங்கிப் பார்வையில் தெளிவு பெற வைப்பதில் மிதிபாகல் இலைச்சாறு மிளகுடன் சேர்ந்து கொள்ளுகிறது. மிதிபாகல் இலைத் தனிச் சாறு எடுத்து வைத்துக்கொண்டு சந்தனக் கல்லில் இரண்டு துளி விட்டு ஒரு மிளகு முழுவதையும் உரைத்து மையாக்கிக் கண் இமையின் மேலும் கீழும் 40 நாள் இட்டு வர, கண் ஒளி பெறும். இஃதும் சித்தர்முறை.

பல பிணிக்கும் பகை

மேலே சில முறைகளே குறிக்கப்பட்டன. இம்மிளகின் குணங்கள் தொடப் பெருகும் அளவினதாகும். பல சிறு பிணிகளுக்கும் பெரும்பிணிகளுக்கும் தனியாகவும் பிறவற்றுடன் பக்குவமாகியும் மிளகு தரும் பயன் பலவாம்.

மிளகு உயிரைப் படைக்கும் வல்லமையையும் கொண்டது எனச் சித்தர்கள் நம்பினர். அதற்கு முறையும் கண்டனர். பெண்களது கருப்பையில் பூச்சி காரணமாகவோ பிற குறையாலோ கருத்தரிக்காமல் தடை ஏற்படுவதுண்டு. அத்தடையை நீக்கும் மருந்து உண்டு எனக் கண்டனர். அம்மருந்தில் மிளகு இடம் பெற்றது. கழற்சிக்காய் இலை ஒரு பிடியுடன் மிளகு முப்பது, பெரும்பூண்டு ஒன்று (தோல் நீக்கி) சேர்த்து அரைத்துக் குழம்பாக்கி ஆமணக்கு எண்ணெய் அளவாக இட்டுக்குழப்பி ஒரு நாளுக்கு ஒரு முறை மூன்று நாள் குடிக்க, கருத்தரிக்கும் பக்குவத்தைக் கருப்பை பெறும். இவ்வகையால் மிளகு உயிரைப் படைக்கும் தொழிலிலும் இடம்பெறுகிறது. இதனை, மருத்துவக் குறள் பின்வருமாறு அறிவிக்கிறது:

> தெளிவுடன்க ருப்பமாம் சேரெண்ணெய்க்
> கெச்சையிலை
> மிளகுவெள் ளுள்ளியுடன் உண் (கெச்சை—கழற்சி)

நிலமிசை நீடு வாழ நிலவும் அமுதம்

நீண்ட நாள் வாழ்வு இயற்கையாகவும் அமையும். நல்ல நெறியான வாழ்வாலும் உயிருட்ட மருந்துகளாலும் அமையும். இடையே நச்சுத் தாக்குதல் இன்மையும் நெடுவாணுளுக்கு வேண்டும். மிளகு நஞ்சுத் தாக்குதலின் வல்லமையைக் குறைப்பதிலும் போக்குவதிலும், உயிருட்ட மருந்தாகி

உயிரை வளர்ப்பதிலும் இடம்பெறுகிறது. முதலில் நச்சுக்குத் தடையாவதைக் காண்போம்.

பூரான், நட்டுவாய்க்காலி கடிப்பின் நஞ்சு உடலில் ஏறும். பூரான் கடிக்குரிய மருந்தை முன்கூட்டியே உருவாக்கி வைத்திருக்க வேண்டும். வெற்றிலைச்சாறு எடுத்து ஒரு பலம் மிளகு முழுகும் அளவில் ஊற்றி 4 அல்லது 5 மணி நேரம் ஊறவைத்துப் பின் காயவைக்கவும். இதுபோல் இரண்டு முறை ஊறவைத்து இருமுறை காய வைத்துக்கொள்ளலாம். பூரான் கடிக்குப்பின் காலை மாலை மூன்று நாள் கொடுக்க அந் நஞ்சு நகர்ந்து அழியும்.

நண்டுத் தெறுக்கால் என்னும் நட்டுவாய்க்காலி நஞ்சுக்கு, மிளகு எடுத்துப்பெரும் பூண்டில் பாதி தோலுரித்து மை போல் அரைத்து விழுங்கச் செய்ய கடுப்பு நீங்கி நஞ்சு நீங்கும்.

பாம்பு முதலிய கடும் நஞ்சேறி நினைவிழந்தோர்க்கு நினைவேற்படுத்த இம்மிளகு துணையாகும். இதற்கும் முன் கூட்டியே உருவாக்கி வைத்திருத்தல் வேண்டும். நன்கு பழுத்து நிறையச் சாறு உள்ளதும் மெல்லிய மேல்தோலை உடையதுமான ஓர் எலுமிச்சம் பழத்தை எடுத்து ஒரு மிளகு கொள்ளும் அளவில் மேல் தோலை எடுத்துவிட்டு ஒவ்வொரு மிளகாக உள்ளே செலுத்தி, பழம் கொள்ளும் அளவில் அடைத்து, எடுத்த பழத்தோலின் சிறு வில்லையை வைத்து அவ்விடத்தை மூடி அது அகலாமல் மேலே ஏதேனும் ஒட்டிவிடவும். பின் அடுப்பின் புகைபடுமாறு நூலில் கட்டித் தொங்குமாறோ கம்பித் தாங்கலாகவோ அமைக்கவும். பழத்தின் சாறு வற்றும் வரை இவ்வாறு அமைத்து சாறு வற்றி மிளகு உள்ளே உருளும் அளவில் பழத்தோலைப் பிளந்து மிளகுகளை எடுத்து வெய்யிலில் காயவைத்து எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். நச்சுக்கடியால் நினைவிழந்தபோது ஒரு மிளகை எடுத்துச்சந்தனக் கல்லில் உரைத்து, இரு துளியைக் கண்ணில் இட, நினைவு மீளும். அல்லது அம்மிளகை ஊசியில் குத்தி எரியும் நெருப்பிலோ, விளக்கெண்ணெய் விளக்கிலோ காட்டிப் புகையை மூக்கில் பிடிக்க, நினைவு மீளும்.

உடம்பை வைரமாக்கும் ஊட்டம்.

''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்'' என்பது திருமந்திரம். உடம்பாரை வைரத்தார் ஆக்கினால் அழியார். குடி கொண்ட உயிராரும் நகரார். அதற்கு மிளகு நல்ல துணையார்.

நோயற்ற கட்டிளைஞரின் சிறு நீரில் 216 மிளகு தேரும் அளவு மிளகை எடுத்து ஊறவைத்துக் காயவைத்து இவ்வாறு 4 முறை ஊறவும் காயவும் வைத்து முதல் நாள் ஒன்று, அடுத்த நாள் இரண்டு, அடுத்த நாள் மூன்று, என நாளுக்கு நாள் ஒவ்வொன்று

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, ரூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

Sarath

தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்

Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். இதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கை பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்தி புதிய சக்தி புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்
டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.O.,A.M.I.H.
பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி S.I.
போன் : 16 தந்தி : சித்தர்
சென்னை கிளை ஆபீஸ் :
41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1
போன் : 21448

கூட்டி 108 நாள்கள் தின்னவேண்டும். 109 ஆம் நாள் 107 மிளகாகவும் அடுத்த நாள் ஒன்று குறைத்தும் இவ்வாறு நாளுக்கு நாள் ஒவ்வொன்று குறைத்தும் தின்றுவர உடல் வைரமாம். உயிர் நிலைப்பாம். நீண்டநாள் வாழ்வு கிட்டும். இதற்கு மனக்கட்டுப் பாடும் வேண்டும். இதனை மருத்துவக் குறள்,

மிளகைச் சிறுநீரின் மேலிட்டு மண்டலங்கொள்
ளளவிலாச் சூடும் அறும்.

என்று உள்ளே அமைந்து பெருஞ் சூடு அற்றுப்போகும் நிலையை அறிவிக்கிறது. இச் சூட்டுத் தணிப்பு எத்தகையது என்பது சித்தர் அறிவர். அவ்வறிவால் மிளகு கர்ப்பம் என்னும் இம் முறை வாணாளை நீடிக்கும் என்னும் உளவை அறிந்தவன் சித்தன் என்னும் கருத்தமைய மருத்துவப் பழமொழி பேசுகிறது. "மிளகுக் கருப்பத்தில் உளவறிவான்" சித்தன் என்பது அது.

தாயின் பெருமை

பச்சிளங் குழந்தைக்கு வந்துற்ற பயமூட்டும் நோயினை நீக்குதற்கு, மருத்துவர் கேட்கும் மூலிகை, வேங்கை உலவும் காடதனில் பாம்புப் புற்றுக்கருகினிலே கிடைக்கும் என்று தாய் அறிந்தால், தயக்கம் காட்டி நிற்பாளோ, தடுத்தாலும் போகாதிருப்பாளோ ?

இவ்வாறு மிளகு உணவுப் பொருளாய், கறியின் கூட்டுப் பொருளாய், பிணித் தடையாய், நோய் நீக்கியாய், அரு மருந்தாய் நிறைந்து நிற்பது. நஞ்சை நீக்கி, உயிரை வளர்க்கும் இதனை அமிழ்தம் என்பதில் உண்மை திகழ்கிறது. இவ் வமுதைப் பெறப் பாற்கடலைக் காண வேண்டாம். மத்தும் கயிறும் கொள்ள வேண்டாம். கடையும் இருபடைக் கூட்டம் கூட்ட வேண்டாம். இடையில் நஞ்சு பெற்று வருந்தவேண்டாம். இறுதியில் ஒரு கூட்டம் ஏமாற மற்றொரு கூட்டம் மட்டும் உண்டது என்ற நேர்மையற்ற நிலையும் வர வேண்டாம். அடுக்களையில் ஒரு பெட்டி உண்டு. அதனில் ஐந்து அறை இருக்கும். ஐந்தறையில் ஓர் அறையில் இந்த அமுதமாம் மிளகு எப்போதும் கிடைக்கும். ஐந்தறைப் பெட்டியை (அஞ்சாரப்பெட்டி என்று மரூஉமொழியாக வழங்குவதை அறிவோம்) அணுகினால் அருமை அமிழ்தம் கிடைக்கும். அவ்வமுதத்தை முறையாகப் பயன்படுத்தி நீண்ட நாள் வாழ்வோமாக!



வளைவுகள் பலவுங் கொண்ட
வளமிலாப் பாதை யோரம்
விளைந்துள செடிகள் தன்னை
விழியினாற் கண்டே சென்றேன்!
களைப்பிலா உள்ளந் தன்னில்
கண்டஅப் பக்க மெல்லாம்
முளைத்தநெற் கதிர்கள் மீதே
முற்றிய மணிகள் கண்டேன்!



வானத்தை முட்டும் கோயில்
வையத்தை அளக்கும் வாவி!
ஞானத்தை வியக்கச் செய்யும்
நாடக அரங்கம் கண்டேன்!
தேனிசை பாடும் சிட்டு;
திசையெலாம் பறவைக் கூட்டம்!
நானங்குக் கண்ட போது
நாளெல்லாம் இன்பம் கொண்டேன்!

தென்னையும் பனையு முண்டு
தெள்ளெனப் பாயும் நல்ல
சின்னதோர் வாய்க் காலுண்டு
சிற்சில குடிசை யுண்டு!
பொன்னப்பன் மாடு மேய்க்கப்
பொலிவுடை நிலங்க ளுண்டு!
இன்சுவைக் கரும்பு வாழை
இவைகளும் ஆங்கே யுண்டு!

பள்ளியும் பாட்டு முண்டு
பைந்தமிழ்ப் பெரியோ ருண்டு!
துள்ளியே ஆடு(ம்) அந்தத்
துணிவுடை சிறுவர்க் கெல்லாம்
அள்ளியே பருகும் பாலும்
அருந்தயிர் முதலா முண்டு!
தள்ளியே நடக்கு மந்தத்
தாத்தாவின் கதைக ளுண்டு!

மண்ணுக்குப் பிறப்பே யான
மலரெலாம் விழித்தே எம்மை
அண்மையில் அழைக்கு மந்த
அழகிய காட்சி என்னே!
பண்ணிசை பலவும் பாடும்
பறவையின் இன்பம் என்னே!
வண்ணநற் சிற்றூர் தந்த
வனப்பிலே மயங்கி நின்றேன்!



தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு," "செல்வம் எத்தனையுண்டு புவி மீதே அவை யாவும் படைத்த தமிழ் நாடு-", இப்பேர் பெற்ற தமிழ்த் திருநாடு, தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா என்று வணங்கப்படுகிறது. இப் பெரும் வள நாட்டில், மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவுச் சுரங்கத்தில் விளைந்த அற்புதங்கள் பலவற்றில் குறிப்பிடத் தக்கதொன்று சீரணியாகும். அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்து பெற்ற வளங்களை உற்ற வகையில் பயன்படுத்தி வளர்க்கத், திட்டங்களை விரைவு படுத்த எண்ணினார் பெருந்தகை அண்ணா அவர்கள். பல்கிப் பெருகி நிற்கும் மனித சக்தியை ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்துவதால் விளையும் பயன்கள் அளவிட முடியாதது என்று கண்டார். இந்த அடிப்படையில், உறங்கிக் கிடக்கும் மனித சக்தியை விழித்தெழச் செய்து, நாட்டுப் பணிபுரியும் நல்ல திசையில் திருப்பி, ஊருக்கும். உலகுக்கும் செம்மை சேர்க்க உருவாக்கிய பேரணிதான் சீரணி. தமக்காகவும், தம் குடும்பத்துக்காகவும் செலவிட்ட நேரம் போக, எஞ்சியதில் ஒரு நேரமாகிலும் நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவோம் என்ற உறுதி கொண்ட சில ஆயிரமவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின் சமூகம் மேம்பாடு அடைந்திடுவது உறுதி. இந்த ஆர்வம் கொள்வேர்ர்கள் பல்லாயிரம் உளர்.

சீரணியில் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பொறியியல் வல்லுநர், ஆசிரியர்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள் அனைவரும் உண்டு. பாட்டாளியும் உண்டு, பாமரனும் உண்டு. ஆகையால் தான் அண்ணா, " ஒளி படைத்த கண்ணினாய் வா வா, உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா, களிபடைத்த மொழியினாய் வா வா, கடமை கொண்ட தோளினாய் வா வா, என்று அழைத்தார், பல்லாயிரக் கணக்கில் தொண்டர்கள் திரண்டார்கள். இப் பெரும் சக்தி மாபெரும் சக்தி என்று உணர்த்தினர்.

சீரணி ஒன்றியந் தோறும் நடைபெற வேண்டும் என்று திட்டம் தீட்டப்பட்டது. இத் திட்டத்தில் விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் முன்னின்று நடத்தப்பட்டு வருகிறது. 1967-68-ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நடைபெற்றுள்ள வேலைகள் மிகவும் பாராட்டத் தகுந்தவைகளாகும். 1967-68ம் ஆண்டு இத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தது ரூ. 2,136. விருதுநகர்-அழகாபுரி பிரதான ரோட்டில் இருந்து பாவாலி கிராமத்திற்குப் பிரிவு ரோட்டில் பாதை அமைத்திருந்தும், போக்குவரத்துக்கு மிகவும் பாதிக்கப்பட்டு, விவசாயப் பெருங்குடி மக்கள் பல துயர்கள் அடைந்தார்கள். இக் குறையை மக்கள் கூறினார்கள். சீரணித்தொண்டர்கள் கிராம மக்களின் மனித சக்தியையும் பயன்படுத்திச், சீரமைப்புச்சரள் பரப்பி நல்லதொரு சாலையாக உருவாக்கினார்கள். இதன் மதிப்பு ரூ. 2,400. ஓ. கோவில்பட்டி கிராமத்தில் கண்மாயில் குடி தண்ணீர் சீரான முறையில் தேங்காமல் இருந்தது. சீரணித் தொண்டர்கள் இதனை அறிந்து கண்மாயில் உள்ள மணல், களிமண் ஆகியவைகளை அப்புறப் படுத்தினார்கள். இதன் மதிப்பு ரூ. 72.

ஒன்றியத்தின் உள்ள பள்ளிகளில் பல வருடங்களாக வெள்ளை அடிக்காமல், பெயர்ப் பலகை மாற்றம் செய்யாமல் இருந்தது. உடன் ஒன்றியத்தில் உள்ள 64 பள்ளிகளிலும் சீரணித் தொண்டர்கள் மூலம் வெள்ளையடித்து, பெயர் பலகை ஆர்ட் எழுத்துக்களில் தயார் செய்து சுவர்களில் திருக்குறள் எழுதி முடித்தார்கள். இவைகளின் மதிப்பு ரூ. 1,555

1968-69-ஆம் ஆண்டு அரசினர் ரூ. 1,834 மானியம் அனுமதியளித்தார்கள். விருதுநகர் செந்தில்குமார் நாடார் கல்லூரி மாணவர்கள் மிகவும் உற்சாகமாகத் திரண்டு எழுந்தார்கள். தாங்கள் சீரணியில் சேர்ந்து திட்ட வேலைகள்செய்ய மிகவும் ஆர்வம் கொண்டார்கள். இவர்களது ஆர்வம் பயன் படுத்தப்பட்டது. ஆமத்தூர் கண்மாயில் தண்ணீர் வரும் கால்வாய் பல வருடங்கள் செப்பனிடப்படாததால் சீரான முறையில் தண்ணீர் வராமல் கண்மாய்க்குத் தண்ணீர் வரத் தடங்கலாக இருந்தது. நான்குபர்லாங்கு தூரமுள்ள கால்வாயை 534 கல்லூரி மாணவர்கள், பொது மக்கள், சீரணித் தொண்டர்கள் சீரமைத்து மணல் எடுத்தார்கள். இந்த வேலைகளின் மதிப்பு ரூ. 1,936. வேலை முடிந்த கண்மாயில் தண்ணீர் தங்கு தடையின்றி வருகிறது.

ஆசிரியர் பெருமக்கள் தாங்கள் சீரணியில் சேர்ந்து பயனுற-கடமையாற்ற முன்வந்தார்கள். 1968-69-ஆம் ஆண்டு விருதுநகர்-வடமலைக் குறிச்சி ரோட்டில் பாப்பாக்குடி கிராமத்திற்குச் சாலை இல்லாமல் இருந்ததால் அவ் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்படி ஒன்றியத்தில் உள்ள எல்லா ஆசிரியர்களும், சின்னமூப்பன் பட்டி கிராமத்தில் முகாமிட்டு வேலை செய்தார்கள். நான்கு பர்லாங்கு தூரம் உள்ள

இக் கிராமத்திற்கு 1,036 பேர்கள் பணிபுரிந்து புதிய சாலை அமைத்தார்கள். வேலையின் மதிப்பு ரூ. 2,759.

உலக உத்தமர் மகாத்மா காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒரு விழா மாவட்ட அளவில் விருதுநகரில் எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் பணித்தார். இச் சிறப்பு மகாநாடு நடத்தச் சீரணித் தொண்டர்கள் காட்டிய ஆர்வம் கணக்கில் அடங்காது. மாபெரும் ஊர்வலம் நடைபெற்றதில், எல்லா அணிகளுக்கும் முன்னால் சீரணியினர் சீருடையில் பீடுநடை போட்டு அணிவகுத்தார்கள். இப் பெரும் அணி ஒரு படைபோன்று காட்சி அளித்தது. அன்று இரவு சுமார் இருபத்தையாயிரம் மக்கள் கொண்ட பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அப் பெரும் கூட்டத்தை அமைதிப்படுத்திச் சீரணித் தொண்டர்கள் நடத்தினார்கள். பெரியவர்கள் 280 சீரணித் தொண்டர்கள் இவ் வேலைகளில் கலந்துகொண்டது பற்றி மிகவும் பாராட்டினார்கள்.

சீரணி கண்ட செம்மல் அண்ணாவின் 60-வது ஆண்டு நிறை விழாவின் போது அவருக்கு ஒரு அழியா நினைவுச் சின்னமாக விளங்கும்படி அண்ணா மணிவிழா பள்ளிக்கட்டடம் கட்டத் தீர்மானிக்கப்பட்டது. பள்ளிக் கட்டடம் இல்லாமல் இருந்த பாவாலி ஊராட்சி சந்திரகிரிபுரத்தில் ஒரு பள்ளிக் கட்டடம் கட்டத் தீர்மானிக்கப்பட்டது. துவக்க வேலையை செப்டம்பர் 15ஆம் நாள் விருதுநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் (தற்போதைய துணை சபாநாயகர்) திரு பெ. சீனிவாசன் அவர்கள் ஆரம்பித்து வைத்து, சீரணித் தொண்டர்களுக்குக் கடமை பற்றி விளக்கினார். பள்ளிக் கட்டடம் சீரணித் தொண்டர்களால் திட்டமிட்டபடி மிகவும் உற்சாகத்துடன் செய்து முடிக்கப்பட்டது. இக் கட்டடத்தைத் தொழில் அமைச்சர் திரு செ. மாதவன், பி.காம்., பி.எல்., திறந்து வைத்தார்கள். கட்டடத்தின் வேலையின் மதிப்பு ரூ. 5,583. இதில் சீரணி உழைப்பின் மதிப்பு ரூ. 2,283

பெரிய பேராளி கிராமம், பல விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்ந்து வரக்கூடியது. சின்னப் பேராளியில் இருந்து இக் கிராமத்திற்குச் சாலை அமைப்பு வேலை சீர்பெறாமல் கண்மாய்க் கரையில் செல்லும் சாலை மிகவும் ஆபத்து விளைவிக்கக்கூடிய அளவுக்கு இருந்தது. இதையறிந்து சீரணித்

சீரணியினரால் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக் கட்டடம்



சிவகெங்கையில் சாலை அமைக்கும் பெண்கள் !

தொண்டர்கள் இந்தச் சாலை வேலையைச்சீரமைத்துக் கண்மாய்க் கரைகளில் செல்லும் இடத்தை விரிவுபடுத்திச் சுமார் முப்பது அடி உயரத்திற்குச் சரள் பரப்பிச் சீரமைத்துள்ளார்கள். இவைகளின் மதிப்பு ரூ. 1,878. இப்போது விவசாய வண்டிகள் தாராளமாகச் சென்று ர முடிகிறது.

சீரணி தாரக மந்திரம் அண்ணாவின் பத்துக் கோட்பாடுகளாகும். அக் கோட்பாடுகள் கொண்டு பைந் தமிழ்நாடு பல்வளம் பெறவும், சமூகம் நல் ஏற்றம் எய்தவும், சமூகம் எல்லாத் துறைகளிலும் மறு மலர்ச்சி காணவும், நல்ல ஆக்கப் பணிகள் ஆற்றவும், சீரணி நோக்கத்தில் நம்பிக்கையும் செயலில் ஈடுபாடும் கொண்டு உள்ளத் தூய்மையோடு காய்தல், உவத்தல் அகற்றிக் கைமாறு கருதாது கட்டுப்பாட்டோடும், கண்ணியத்தோடும், கடமையாற்றுவேன் என்று உறுதி ஏற்று இவ் ஒன்றியத்தில் உள்ள 57 ஊராட்சிகளில் உள்ள சீரணித் தொண்டர்கள் ஒன்று திரட்டப்பட்டார்கள். திட்டமிட்டுச் செயல்கள் புரியப் பல துறைகளில் இவர்களுக்குப் பயிற்சி தேவை. காவல் பயிற்சி, முதலுதவி, தீத்தடுப்பு, கோழி வளர்ப்பு, விவசாயச் சீர்திருத்த முறை, முதியோர் கல்வி, குடும்ப நலம், நல்வழிப் பணிகள், பொதுப் பணிகள் பண்டைத் தமிழரின் வரலாறு மற்றும் பயிற்சிகள் ஒரு வாரம் இவ் ஒன்றியத்தில் கொடுக்கப்பட்டது.

விருதுநகர் ஒன்றியத்தில் பலபெரிய திட்டங்களைப் போற்றத் தகுந்த முறைகளில் சீரணித்தொண்டர்கள் செயலாற்றியுள்ளார்கள். 1970-71ஆம் ஆண்டிற்குச் சீரணித் திட்டத்தில் ஒரு பெரிய திட்டமாக எடுத்து நடத்த, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரைப்படி, சிவகாசி உதவி ஆட்சித் தலைவர் இக் கோட்டத்தில் அடங்கியுள்ள ஒன்றியங்களிலெல்லாம் ஒதுக்கீடு செய்துள்ள பணத்தை ஒன்று திரட்டி, விருதுநகர் ஒன்றியத்தில் நடத்த முடிவு செய்துள்ளார். இதன்படி இவ்வொன்றியத்தில் உள்ள அப்பநாயக்கன்பட்டி கிராமத்திலிருந்து மல்லநாயக்கன்பட்டி கிராமத்தில் மூன்று மைல் தூரத்திற்குப் புதிதாகச் சாலை அமைத்து, சரள் பரப்பு ரூ. 60,000 (அறுபதினாயிரம்) மதிப்பில் வேலை செய்யத் திட்டம் போடப்பட்டுள்ளது.

ஒரு வெளிச்சம்

கோ. கண்ணன்

அந்தக் கிராமத்துக்கு வந்த மூணு வருஷ சர்வீசில் தபால்காரர் சாமண்ணா ''டைப்'' செய்யப்பட்ட முகவரியோடு கூடிய கவரைப் பார்த்ததில்லையாதலால் இப்போது, முதல் முறையாக அவருடைய கண்கள் வியப்பால் விரிந்தன.

அ. வேலப்பன்,
அழகப்பர் மகன்,
தண்டேகுப்பம் அஞ்சல்,
கிருட்டிணகிரி (வழி),
தருமபுரி (மாவட்டம்).

என்று ஆங்கிலத்தில் டைப் செய்யப்பட்டிருந்த முகவரியைப்படித்தவுடன் '' ஓகோ நம்ம மைனர் தம்பிக்கு வந்திருக்கு '' என்று நினைத்துக் கொண்டார். அதே சமயம், ''என்ன சார் நமக்கு லெட்டர் வந்திருக்கா '' என்று கேட்டுக் கொண்டே வந்து நின்றான் வேலப்பன்.

அந்தக் கிராமத்தில் 'எஸ்.எஸ்.எல்.சி' வரை படித்து, நாகரிகத்தோடு விளங்குபவனாக இருந்த ஒரே காரணத்தால் அந்தக்கிராமமே அவனை 'மைனர்' என்று கூப்பிடுவதில் ஒருவிதமான பெருமை கொண்டது. வேலப்பன் தங்களோடு நின்று பேசுவதைக்கூடப் பெருமையாகக் கருதியவர்களும் உண்டு.

கவரைப் பெற்றுக்கொண்டு தன் தந்தையிடம் செய்தியைச் சொல்ல வந்த வேலப்பன், எதிரில் டீக்கடையில் அவர் உட்கார்ந்திருந்ததைக் கண்டு, தூரத்திலிருந்தவாறே கூவினான். '' அப்பா, நாம கோயமுத்தூருக்கு மண்ணை அனுப்பிச்சோமில்லே ? அவுங்க ஆராய்ச்சி பண்ணி பதில் போட்டிருக்காங்க இதோ கடுதாசி வந்திருக்கு ''. அவர் மகனைப்பெருமிதத்தோடு பாத்தார். அவன் கடிதத்தின் வாசகங்களில் கண்ணை ஓடவிட்டுக் கொண்டிருந்தான்.

''அப்படியா! நம்ம மண்ணுக்கு எது புடிக்குமாம் ?''

'' அதாம்பா—நெல்லுபோடற எடம் போக, தண்ணி பாயாத மேட்டு நிலத்துலே வீரியக் கம்பு போடலாமாம்.''

''என்னஅது வீரியக் கம்பு ?''

'ஆராய்ச்சியிலே அதிக விளைச்சலைத் தர்ற பலவிதமான ரகங்களைக் கண்டு புடிச்சிருக்காங்க, ' அமோக விளைச்சல் திட்டம்னு ' பேரு. அதுலே வீரியக் கம்பும் ஒரு வகை. இந்தக் கம்பு சாதாரண கம்பை விடக் குட்டையாக இருக்கும். ஆனா பூட்டே மட்டும், சாதாரணப் பூட்டே மாதிரி ரெண்டு, மூணு மடங்கு பெரிசா இருக்கும். விளைச்சல் செமக்கே இருக்கும். ''

'' சரி. உன் இஷ்டம்.''

'' ஆனா அதுக்கும் அப்பப்ப தண்ணி பாச்சனும். அந்த வாய்க்காலெ கொஞ்சம் ரிப்பேர் பண்ணிக்கிறேன்.''

''சரி'' என்று கூறி விட்டு டீக்கடையில் இருந்தவர்களை ஒரு சுற்றுப் பெருமிதத்தோடு பார்த்து விட்டு, வேலுவுடன் புறப்பட்டார், அவர்.

• • •

'' அப்பா ''

'' ஓய் ! தோ வந்துட்டேன். என்னடா பையும் கையுமா ?''

'' பேட்டைக்குப் போயிட்டு வாரேன். கலப்பெ மழுங்கிப் போச்சு. மாத்தனும்—ஆயிலு எஞ்சினு கைப்பிடி லூசாயிருச்சு அப்படியே ரிவிட் பண்ணி யாந்துடறேன்.''

'' ஏன் ? புதுசாவே ஒண்ணு வாங்கியாந்துடேன்.''

''எதுக்கப்பா ? கவர்மெண்டுலே இன்னும் கொஞ்ச நாள்லே கரண்ட்வசதி செய்யப்போறாங்க. அதுக்குள்ளே ஏன் புதுசு வாங்கணும்? இதுலெயே ஓட்டிப்புடலாம்.''

''சரி.''

வாட்சை எடுத்து மணிக்கட்டுக்குமேல் ஐந்தங்குலம் தள்ளிக் கட்டிக்கொண்டு புறப்படுகின்றான் வேலப்பன். பஸ் வருகின்றது. கிராமத்தில் இருந்து டவுனுக்குப் போகிற சிலர் விரைந்து வருகின்றனர். டவுனிலே வேலை இருக்கிற சிலரும் வருகிறார்கள். வேலப்பனிடம் அவர்கள் நடை முற்றுப்பெறுகின்றது.

'' மைனர் தம்பி....பேட்டையிலெ உங்கண்ணன் கிட்டெ சைக்கிளு ரிப்பேருக்கு உட்டிருக்கிறேன். வாரப்ப அது ரிப்பேராயிருந்தா, அதுலெயேவந்துடேன்'' —கோவிந்த மூப்பனாரின் இந்த வேண்டுதலை அவன் ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக, அவன் புருவங்கள் ஏறி இறங்கின.

'' தம்பி ! நம்ம பொடியன் ஐஸ்கூலுக்குப் போறான். ஐஸ்கூலு பக்கத்திலே, கண்டக்டர் சாருகிட்டே சொல்லி எறக்கி வுட்டுடு ''—புருவங்கள் மீண்டும் ஏறி இறங்கின ; பொடியனின் கையைப் பிடித்து இழுத்து அருகில் நிறுத்திக் கொண்டான் வேலப்பன்.

'' இந்தாப்பா வேலு! வர்ரப்ப ஒரு பேப்பரு வாங்கியா ? இன்னிக்கி மார்க்கட்டு நிலவரம் எப்பிடியிருக்குன்னு பார்க்கனும். நோம்பி சந்தெ வேறெ பக்கத்துலெ வருது '' என்று சொன்ன ஊர்க் கவுண்டரிடம் காசைப் பெற்றுக் கொண்டு, ''. சரிங்க '' என்றான் வேலப்பன். '' வந்தப்புறம் படிச்சிக் காட்றதுக்கும் நான்தான் '' என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டான் அவன்.

டிரைவர் ஹாரன் கொடுத்தார் ; பஸ் உறும ஆரம்பித்தது. பொடியனைத் தூக்கி உள்ளே விட்டுவிட்டு, படிகளில் கால் வைத்த வேலப்பன், வலதுபக்கம்

திரும்பிப் பார்த்து விட்டு, ராசாத்தி வேகமாக வருவதைப் பார்த்ததும், "கண்டக்டர் கொஞ்சம் இருங்க" என்று கூறி விட்டுக் கீழே இறங்கினான். ராசாத்தி அவனுக்கு முறைப் பெண்.

"வந்து, ஒரு மை டப்பி வேணும்" என்று சொல்லிக் கொண்டே சில்லறைக் காசுகளை நீட்டினாள்.

"கண்ல இருக்கிற கருப்பு போதாது? மை வேறியா?" என்று சொல்லிவிட்டு, "எங்கிட்டயும் காசு இருக்குது" என்று கூறியவன், கண்டக்டர் விசில் சத்தம் கேட்டதும், பஸ்ஸில் பாய்ந்து ஏறினான்.

• • •

வேலப்பனின் திறமையாலும், டவுனோடு அவன் கொண்டிருந்த தொடர்பினால் பெற்ற புதுப் புது அனுபவத்தாலும், விளைச்சல் அமோகமாகப் பெருகிக் கொண்டிருந்தது. அதோ—தாங்க முடியாமல் பழங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் இராட்சசப் பப்பாளி மரம், செடியில் காய்க்கும் துவரை, மரமாகக் காய்த்திருக்கும் அழகு; குட்டை மரமாய் நெட்டைத் தார் தரும் பச்சை வாழைத் தோட்டம்......என்றெல்லாம் பசுமை குலுங்கிக் கொண்டிருக்கும் அந்த வயலின் ஒரு மூலையில் இருந்த அரை ஏக்கரா நிலம் மட்டும் ஒன்றும் விளையாமல் சொட்டையைப் போல், திருஷ்டிப் பொட்டாய் நின்றது. அதற்கும் காரணம் வேலப்பன்தான்! உரம் போட்டால் பயிர் வளரும். உரத்தை அதிகமாக, அபரிமிதமாக, அளவுக்கு மேல் பத்து மடங்கு போட்டால் என்ன ஆகும் என்று அவன் செய்த சோதனை—இன்று உழவுக்குத் தகுதியில்லாத களராக மாறி விட்டது அந்தப் பண்ணை. நல்ல வேளை—அவன் சோதனை அரை ஏக்கரோடு நின்றது. அந்த மண்ணில் கொஞ்சத்தை எடுத்துக் கோயமுத்தூருக்கு அனுப்பி விட்டு, வேறு வேலைகளைக் கவனித்தான் அவன்.

• • •

காலச் சக்கரம் சுழல்கின்றது......

வேலப்பனைப் பற்றிய நல்லெண்ணம் இப்பொழுதெல்லாம் அழகப்பருக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்துவிட்டது. "அடிக்கடி டவுனுக்குப் போகிறான்—அதுவும் வார்த்தைக்கு வார்த்தை தன்னிடம் சொல்லி விட்டுப் போகிறவன் இப்பொழுதெல்லாம் வருவதும் போவதும் தெரியவில்லை" என்று நினைத்துப் பார்த்தார். தங்களுக்குப் பெரிய மகன் ஒருவன் (வேலப்பனின் அண்ணன் முத்தப்பன்) இருப்பது இப்பொழுது அவரது உள்ளுணர்வைத் தாக்கத் தொடங்கி விட்டது. இத்தனை நாள் முத்தப்பனை எதற்குமே கூப்பிட்டுக் கொள்ளாமல், வேலப்பனின் விருப்பத்திற்கே பண்ணையை விட்டு விட்ட எண்ணம் அவர் நெஞ்சை லேசாக வருடியது.

அன்றைக்கு அறுவடை வேலை மும்முரமாக நடைபெற்றாக வேண்டும். அழகப்பர், மனைவி காமாட்சியைக் கூப்பிட்டார். "ஏ புள்ளே! இன்னிக்கி அறுப்பாச்சே. ஆளுவகளுக்குச் சொல்லி அனுப்பியாச்சா? வேலு எங்கே? போயி ஒரு நடை சொல்லி வந்தான்னா பரவால்லே."

"வேலு என்னமோ அவசர சோலியா பேட்டைக்குப் போவனும்னு சொல்லிக்கிட்டிருந்துது."

"அறுப்பெ விட்டுட்டு என்னா அவசர சோலி? இருக்க இருக்க சுத்த மோசமாப் போயிட்டான் அவன். எல்லாம் நீ குடுக்கிற செல்லம்."

"ஆமா .... நான் தான் செல்லம் குடுத்தேன்? நான் தான் அவன் எது கேட்டாலும் பெருமா மாடு மாதிரி 'சரி-சரி' ன்னு தலையாட்டினேன்."

"என்னடி வாய் நீளுது? ஒழுங்கு மருவாதியாப் பேசு."

"ஆமா" என்று நீட்டி முழக்கினாள் காமாச்சி. இந்த வேகமான உரையாடலில், முத்தப்பன் முதல்முதலாகத் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான். பல நாட்களாக அவன் நெஞ்சில் குமுறிக் கொண்டிருந்த எரிமலை வெடித்தது.

"அம்மா சொல்றதுலெ என்னப்பா தப்பு? தம்பிப்பய எதுக்குமே லாயக்கில்லாதவனாப் போயிட்டான். உங்களுக்குஅதெல்லாம் கண்ணிலேயும் படாது, காதுலேயும் ஏறாது. சொன்னா கெட்ட பேரு. வாரத்துலே மூணு நாளு டவுனுக்கு சினிமா பாக்கப் போறான். கேட்டா, ஏதோ பெருசா சோலி இருக்குதுங்கிறான்.

"அது போவட்டும், வயலுக்கு வந்தாலும் ஒரு கராறு இருக்கறதில்லே. இவன் பெருமையெ அவுங்க கிட்ட பேசவே நேரம் போதலெ. அவுங்களுக்கென்ன? வேலை செய்யறதெ விட, 'ஊம்' கொட்றது லேசுதானே. நான் அதட்டினாலும், 'சரிதான் போசாமி! சின்னத்தம்பியே ஒண்ணும் சொல்லலே'ன்னு எடுத்தெறிஞ்சி பேசுறாங்க. அதுவும் பொம்பளெங்க கிட்டெ பேசறதுன்னா நேரம் போறதே தெரியாமப் போயிடிச்சி அவனுக்கு.. நீங்களும் அவனெ கட்டுப்படுத்தறதில்லே"—அண்ணாந்து கொண்டு விட்டத்தைப் பார்த்தபடி, சொல்லி முடித்துவிட்டுக் கோபத்தினால் மூச்சிறைக்க, இன்னும் விட்டத்தையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் முத்தப்பன்.

"என் நேரே நிக்கக் கூடப் பயப்பட்டுக் கொண்டு ஒதுக்குப்புறமா நிக்கும் பெரிய மவன், எனக்கே புத்தி சொல்ற தோரணையிலே பேசறதுக்குக் காரணம் வேலுவின் நடத்தைதான்" என மனசுக்குள்ளே சொல்லிக் கொண்ட அழகப்பர், "சரி.. சரி.. இப்ப ஒண்ணும் குடி முழுகிப் போவுலே.. நீ அறுப்புக்கு வேண்டியதெப் பாரு" என்று முத்தப்பனுக்கு உத்தரவிட்டார்.

"நம்ம ஏத்தப் பரி நேத்து கிழிஞ்சு போச்சு; தைக்கணும்"

"ஏன்-பரி குத்தறவங்கிட்டெ போயி சொல்றதுதானே?"

"அறுப்புக்குப் போறதா? பரி குத்தறவனெ கூட்டியாறப் போறதா?" எனக் கேட்டான் முத்தப்பன்.

வேலுவும் இருந்தால், ஆளுக்கொரு வேலை செய்யலாம் என்பதை உணருகிறார் அழகப்பர். ஒன்றும் பேச முடியவில்லை அவரால்.

"தம்பீ! நீ முதல்லெ அறுப்புக்குப் போ" என்கிறாள் காமாச்சி.

"எனக்கென்ன? மொளவாச் செடிக்குத் தண்ணி கட்டி நாளாவுது. இன்னிக்கும் பரி கிழிசல். இன்னிக்கிப் பரியைத் தச்சாத்தான் நாளைக்காவது தண்ணி கட்டலாம். பூத்திருக்கற பருவத்துலே தண்ணி கட்டலேன்னா, செடி வாடாமெப்போனாலும், பூ உதுந்து போயிடும். அப்புறம் காய் எப்பிடிப் புடிக்கும்" என்று முணகிக்கொண்டே நகருகிறான் முத்தப்பன்.

இந்த உரையாடல் அவர்கள் வீட்டில் நடந்துகொண்டு இருந்த பொழுது, வேலப்பன் வேகமாகப் வரப்புகளைத் தாண்டிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக, பஸ்ஸைப் பிடித்துவிட வேண்டும் என்று வந்து கொண்டிருந்தான். "இன்னிக்கி மேட்னி, தங்கம் தியேட்டர்லே பாத்துட்டா, முதல் ஆட்டம் கீத்துக் கொட்டாயிலே பாக்கலாம். ராவோட ராவா வந்து திண்ணையிலே படுத்துக்கணும். இப்பிடி மறஞ்சி ஏதோ செய்யக் கூடாததெ செய்யற மாதிரி செய்ய வேண்டியிருக்கு...... ஐயையோ .. .. பஸ் ஸ்டாண்டிலே ஆளுக்கொரு வேலை குடுப்பாங்களே .. அதெல்லாம் ஏத்துக்கிட்டா மேட்னி பாத்த மாதிரிதான் .. .. அதனாலே இப்பிடிக் குறுக்காலே மேட்லெ ஏறி, பஸ்ஸை ஒண்ணாவது மைல்லெ புடிச்சிடலாம்" என்று நினைத்துக்கொண்டு திசையை மாற்றினான். கல்லுக் கட்டைத் தாண்டி மேட்டில் ஏறும்போது, எதிரில் பரிகுத்தும் சின்னான் வந்து கொண்டிருந்தான்.

"என்னா சாமீ இந்தப் பக்கமா? என்னெக் கூப்புட வந்தீங்களா? ஏதாச்சும் பரிகிரி குத்தணுமா? குத்தணும்னா இப்பவே சொல்லிடுங்க. நான் பக்கத்துக் கிராமத்துக்கு ஓரம்பரயாப் போறேன் வர ரண்டு மூணு நாளாவும்."

சின்னானின் வார்த்தைகள் வேலுவின் கருத்தை எட்டவில்லை

"பரியா? எல்லாம் நல்லா[illegible]தான் இருக்கும். உன் வேலையை[illegible] பாத்துக்கிட்டு நீபோ"—மேலு[illegible] பேசிக்கொண்டு நேரத்தை[illegible]

விளைக்க விரும்பாமல் விரைந்தான் வேலப்பன்.

அங்கே—

தோட்டத்து வீட்டில் கிழிந்த பரி தொங்கிய வண்ணம் காற்றில் ஆடியது.

மேட்னி முடிந்தது. கூட்டத்தோடு கூட்டமாக வந்து கொண்டிருந்த வேலப்பனின் தோளை, யாரோ பிடித்து நிறுத்துவதை உணர்ந்தான் அவன். தோளோடு கழுத்தைத் திருப்பிப் பார்த்தான்.

" யாரது.... மாணிக்கமா ?

" ஏம்பா ? ஆளையே மறந்துட்டியா ? "

" நான் மறக்கல்லேப்பா ! நீ தான் ஆளே மாறிட்டெ "

அவர்களைத்தாண்டிக் கூட்டம் கரைந்து கொண்டிருந்தது. இருவரும் தனித்துவிடப்பட்டனர். மாணிக்கத்தை இப்பொழுது, முழுமையாக ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்தான் வேலப்பன்.

கால்களில் பூட்சு.... காலைக் கவ்விப் பிடித்துக் கொண்டிருக்கும் அழகான கால் சட்டை.... கால்சட்டையின் இறுக்கத்திற்கு முற்றிலும் மாருக, தொள தொளவென்றிருந்த மேல் சட்டை...... அந்தச் சட்டை, மஞ்சள் சுவரில் சிகப்புச் சாந்தை விட்டெறிந்த மாதிரி கண்ணைக் கவர்ந்து உறுத்தியது ....இத்தனை ஆடம்பரத்திற்கும் முரணுக எண்ணெய் பூசாமல் திமிறிக் கொண்டிருந்த தலைமுடி........ மாணிக்கத்தைப்பற்றி மிகவும் நன்ருகத் தெரியும் வேலுவுக்கு. தன்னுடன் படித்துக்கொண்டிருக்கும் பொழுது " அனுதை " என்று எள்ளி நகையாடப்பட்டவன் ; இன்று அதே அனுதைப் பட்டத்தைக் கவசமாகவும், அணிகலனுகவும் கொண்டு வளர்ந்து நிற்கிருன்.

" எப்பிடியப்பா உன்னுலே இவ்வளவு ஜோரா இருக்க முடியுது ? " —வேலுவின் உள்ளக்கிளர்ச்சி, பெருமூச்சோடு இணைந்து, கேள்வியாக வெடித்தது. இந்தக் கேள்விக்குப் பளீரென்று பதில் சொன்னுன் மாணிக்கம். " எனக்குக் குடும்பமுங்கற கட்டுக் கிடையாது. நாலணு சம்பாரிச்சாலும், நாலாயிரம் சம்பாரிச்சாலும், அது எனக்கே சொந்தம்—என் இஷ்டம் போலவே அதைச் செலவு செய்யலாம்........" இவ்வாறு சொல்லிவிட்டு, நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு மாணிக்கமே தொடர்ந்தான், " ஆனு. ....கட்டுப்பாடும் இல்லாமெப் போயிடிச்சி. சம்பாரிக்கறதும், இஷ்டத்துக்குச் செலவழிக்கறதும் — பெட்ரோலைக் குடிச்சிட்டு ஓடற மெசின் மாதிரி "...... பிறகு அவனே கைகளைத் தலைமுடிக்குள் பரப்பி நெட்டி முறித்துக்கொண்டு, பெருமித்தோடு " என்ன இருந்தாலும், நான் இருக்கறவரைக்கும் நானே ராஜா " என்ருன்.

தன்னைப் பற்றிய ஒரு முடிவுக்குத் தானே வரமுடியாமல் தவிக்கும் மாணிக்கத்தின் குழப்பத்தைத் தவிர்க்க, வேலு பேச்சை மாற்றினுன்.

" இந்தப் படத்துலெ வர்ற கிளப் டான்சு எப்பிடி ? பிரமாதமில்லே ? "

" அட போப்பா—இது ஒரு டான்சா........ என்னமோ நிழலைப் பாத்துட்டுப் பெருமூச்சு விடறியே...... நான் நிஜமாவே பாத்தவன்........ பெங்களூர்லே இல்லாத கிளப் டான்சா ?"—இந்த உரையாடலுக்குப் பிறகு, மாணிக்கம் தனக்குத் தெரிந்த இனக் கவர்ச்சி நடனங்களைப் பற்றி மிக விரசமான முறையில் வருணித்து முடித்தான். தனக்குத் தெரியாமல் உலகம் எப்படி எப்படியோ சுகப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற தவருன முடிவை ஒரே கணத்தில் எட்டிப் பிடித்துவிட்டான் வேலப்பன். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவிட்டவனைப்போல ஆவேசமாகக் கேட்டான்.

" பெங்களூருக்கு ஒரு தடவை போய்வர எவ்வளவு செலவாகும் ? "

" நாற்பது ரூவா "

• • •

பெங்களூரைப் பார்க்கப் போன வேலப்பன் பெங்களூரையே ஏற்றுக்கொண்டதில் வியப்பில்லை ; பெங்களூர் அவனை ஏற்றுக்கொண்டது. அவனது திறமையினுல்தான் என்ருலும், அதை அவனுடைய அதிருஷ்டம் என்று சொல்லிவிட முடியாது. கிராமத்துச் செழிப்பை நகரத்துப் பூச்சில் மறைத்துக் கொண்டான் வேலப்பன்.

• • •

வேலப்பன் காணமற் போனதிலிருந்து குன்றிக் கூனிக்குறுகி மெலிந்து பசையற்றுப்போய் விரக்தியோடு சிரித்துக்கொண்டிருந்தார் அழகப்பர். வேலு எங்கு போனுன், என்ன ஆனுன் என்றே அவரால் அறிய முடியவில்லை. ஒரு நாள், கோவிந்த மூப்பனுரிடம், " பயிர் நல்ல விளைச்சலைத் தராதுன்னு ஆரம்பத்துலெயெ தெரிஞ்சப்பறம், விளைச்சல் இல்லாமப் போனுலும், பயிராவது மாட்டுக்குத் தீவனம் ஆகும்னு மனசைத் தேத்திக்கலாம். ஆனு, கதிர் பூரிச்சு, மணி நெறஞ்சி, முத்தித் தலை குனிஞ்சி, அறுவடைக்குத் தயாரான பயிர் ஒரு நாள் மழை வெள்ளத்துலெ அடிச்சிக்கிட்டுப் போயிட்டா, மனசு பொறுக்குமா ? என்னேட வேலுவும் அப்படிப் போயிட்டானே " என்று சொல்லிக்கொண்டு கதறினுர். என்ருலும் என்றைக்காவது ஒரு நாள் வந்துவிடுவான் என்ற நம்பிக்கையிலேயே உயிரைப்பிடித்து வைத்துக்கொண்டிருந்தார்.

ராசாத்தியும் வேறு யாருக்கோ மணமுடித்து வைக்கப் பட்டாள். ஒருவேளை, வேலப்பன் கிராமத்திலேயே இருந்து, ராசாத்தியைத் திருமணம் செய்துகொண்டிருந்தால், அது " காதல் திருமணம் " என்று பாராட்டப்படும் அளவுக்குச் சிறப்புடையதாக இருந்திருக்கும். அப்படிப்பட்ட அன்புப் பிணைப்பு, அழிவது தெரியாமல் அழிந்தது.

நீண்ட நாட்களுக்கப்புறம் வேலப்பனிடமிருந்து, அழகப்பருக்கு ஒரு கடிதம் வந்தது.

" அப்பாவுக்கு வணக்கம்.

நான் ஒரு மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு

ஏர்-இந்தியா

அறிவிக்கின்றனர்:

கட்டணங்களிலே கணிசமான குறைப்பு!

எமது (அஃபினிடி க்ரூப்) இன ஒருமைக் குழுப் பயணத் திட்டத்தின் கீழ், தீவிரமான கட்டணக் குறைப்புகளை வழங்குகின்றனர் ஏர்-இந்தியா. பல துறைகளுக்கு இந்த இறக்கம் ரூ. 2000/-க்கு மேற்படும்.

இன ஒருமைக் குழு (அஃபிடினி க்ரூப்) என்பது என்ன?

பயணம் அல்லாத, பொதுவான பிற நோக்கங்களையோ, அலுவல்களையோ கொண்டதாய், பயணத்திற்கு 6 மாதங்களுக்கு முன்பிருந்தே இயங்கிவரும் ஒரு சங்கம் அது. அமெரிக்க நாடுகளுக்குப் பயணம் செய்வதானல், அச் சங்கம் குறைந்தபட்சம் இரு ஆண்டுகளாவது இயங்கிவந்திருக்க வேண்டும்.

உதாரணங்கள் : கலைத்துறை, இன்னிசை, விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம், உணவியல் போன்ற கல்வி நிறுவனங்கள்; வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், அறுவை சிகிச்சையாளர்கள், நோய்க் குறி ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் போன்றோரின் தொழிற் குழுக்கள்; லயன்ஸ் க்ளப், ரோட்டரி கிளப் போன்றவை, விளையாட்டுக் கழகங்கள், ஜிம்கானக்கள், பாடகர் குழாங்கள், நாடக இன்னிசை மன்றங்கள் முதலானவை.

குறைந்த பட்சத் தேவைகள் :

மேற்கூறிய எந்த ஒரு இன ஒருமைக் குழுவிலும், பயணத்திற்கு முன் குறைந்த பட்சம் 6 மாதங்களாவது உறுப்பினராக இருந்தால்தான், இந்தக் கட்டணக் குறைப்பைப் பெற உரித்தாவீர்கள். பயணமுழுதுமே நீங்கள் உங்கள் குழுவுடன் சேர்ந்துசெல்லத் தேவை; அக் குழுவோ 15 பேருக்குக் குறையாதிருக்கவேண்டும்.

இன ஒருமைக் குழுப் பயணத் திட்டத்தின் கீழ் பெருமளவான கட்டணக் குறைப்பைத் தருவதோடு மட்டுமல்ல; கடந்த 3 ஆண்டுகள் நீங்கள் வெளிநாடு செல்லாதவராக இருப்பின், தமக்கே உரித்தான உயர்தனிப்பெரும் நலன்களை உங்களுக்குத் தருகின்றனர் ஏர்-இந்தியா.

செல்லுமிடம்	அஃபினிடி க்ரூப் கட்டணங்கள் (எல்லாக் கட்டணங்களும் இந்திய ரூபாய்களிலே)							
	பம்பாய்		கல்கத்தா		டெல்லி		சென்னை	
	சாதாரண ரிடர்ன் கட்டணம்	அஃபினிடி ரிடர்ன் கட்டணம்	சாதாரண ரிடர்ன் கட்டணம்	அஃபினிடி ரிடர்ன் கட்டணம்	சாதாரண ரிடர்ன் கட்டணம்	அஃபினிடி ரிடர்ன் கட்டணம்	சாதாரண ரிடர்ன் கட்டணம்	அஃபினிடி ரிடர்ன் கட்டணம்
ஆம்ஸ்டர்டாம்	5984	4189	6732	4713	5984	4189	6650	4655
ஃப்ராங்க்ஃபர்ட்..	5984	4189	6732	4713	5984	4189	6650	4655
பாரிஸ்	5984	4189	6732	4713	5984	4189	6650	4655
ப்ரேக்	5984	4189	6732	4713	5984	4189	6650	4655
ஜெனிவா/ஜுரிச்	5895	4127	6646	4653	5895	4127	6561	4593
ரோம்	5233	3664	6027	4219	5233	3664	5399	4130
மாஸ்கோ-நேராக டெல்லி வழி	4986	3491	5633	3944	4938	3457	5652	3957
*மத்தியகிழக்கு/ஐரோப்பா வழி	7704	5393	8493	5949	7704	5393	8370	5859
லண்டன்	6070	4249	6821	4775	6070	4249	6736	4716
நியூ யார்க்	9210	5503	9615	5963	9210	5603	9015	5983
கோலாலம்பூர்	2315	2041	2207	1545	2736	1916	2339	1633
நாந்தி	8649	6055	8073	5652	8649	6055	7987	5591
பெர்த்	6133	4294	5561	3893	6133	4294	5471	3830
சிங்கப்பூர்	2915	2041	2385	1670	2915	2041	2333	1638
ஸிட்னி	7015	4910	6441	4509	7015	4910	6354	4448
டோக்யோ	5912	4139	5206	3645	5904	3923	5427	3790

முழு விவரங்களையும், இக் கட்டணங்களுக்கு உரிய இதர நிலையங்களின் பட்டியலையும் பெற, உங்கள் அருகமைந்த எங்கள் 56 அலுவலகங்களில் ஒன்றுக்கோ, உங்கள் பிரயாண ஏஜன்டுக்கோ இக் கூப்பனை அனுப்புக.

ஏர்-இந்தியா அஃபினிடி க்ரூப் பயணத் திட்டம் பற்றிய இலவசத் தகவலேடுகளை எனக்கு அனுப்புக.

பெயர் ....

சங்க உறுப்பினர் ....

முகவரி .... TAM.

இருக்கிறேன். அது ஒரு எந்திர வாழ்க்கைதான் என்றாலும், அதிலிருந்து மீளமுடியாதது என்பதையும் உணருகிறேன். பெங்களூரிலே வாழ்ந்த அந்த எந்திர வாழ்க்கையிலே ஒரு சலிப்பு ஏற்பட்டமாதிரி இருக்கு. அதுக்காக கிராமத்துக்கே வந்து டவுனிலே எனக்கு முகம் கிடையாது. அதனுலெ, இதே வாழ்க்கையை வேறே இடத்திலே வாழ்ந்து பாக்கப் போறேன். பம்பாய்ப் பக்கம் போக எண்ணம்.

'அம்மாவையும் அண்ணனையும் நல்லபடி கவனிச்சுக்குங்க''.

கடிதத்தைப் படித்து முடித்த அழகப்பர், வேலப்பன் தன்னோடு இருப்பதைப் போலவும், விலகிச் செல்வதையும் ஒருசேர உணர்ந்தார்.

கடிதம் வராமல் இருந்திருந்தால், அவன் வருவான் என்ற நம்பிக்கையாவது இருந்திருக்கும். இப்பொழுது, அந்த நம்பிக்கை கூட ஊசலாட ஆரம்பித்து விட்டது. அதோடு, தன் உயிரும் ஊசலாடுவதை உணர்ந்தார் அவர். எனவே, உடனடியாக உயிலை எழுதி முடித்துவிட வேண்டும் என்று நினைத்துக்கொண்டார். எனினும், அந்த முடிவைக் காமாட்சியிடம் சொல்ல அவருக்கு மனமில்லை. வக்கீலைப் பார்க்க டவுனுக்குப் போக நினைத்தார். காமாட்சியிடம், என்ன காரணம் சொல்வது என்று தெரியாமலே,

'' காமாச்சி—அந்தச் சொக்காயையும், மணிபர்சையும் எடு'' என்றார்.

'' அப்பாடி — இன்னிக்காவது, டாக்டருகிட்டெ போகணும்னு உங்களுக்குப் பட்டுதே .... இந்தக் காலத்துலெ மாரடைப்பு ஒரு பெரிய நோவா ? மருந்து சாப்புட்டா சரியாப் போயிடுது...... சரி சரி பஸ் வர்ற நேரம். சீக்கிரமாய் போயிட்டு வாங்க '' என்று சொல்லிக்கொண்டே சட்டையையும், பர்சையும் கொண்டுவந்து கொடுத்தாள் காமாட்சி. டாக்டரிடம் போகலாம் என்ற 'சாக்கு' அவருக்கு வலியக் கிடைத்தது.

பஸ்ஸில் உட்கார்ந்துகொண்டு உயிலை எப்படி எழுதலாம் என்ற நினைவிலேயே மூழ்கி மூழ்கி எழுந்து கொண்டிருந்தார் அவர். '' எனக்குப் பிறகு, வருமானத்தை மூணாக்கணும். ஒரு பாகம் காமாட்சிக்கு...... ஒருபாகம் பெரியவனுக்கு.... ஒருபாகம்.... ஆமா, அதை வருஷா வருஷம் பேங்கியிலே போட்டு வைக்கணும்...... சின்னவன் வந்தா திருப்பிக் கொடுத்துடணும்.... இல்லேனா அது, பள்ளிக்கூடம் கட்டறது மாதிரி நல்ல தர்மத்துக்குப் பயன்படணும் '' என்ற முடிவே அவருக்குப் பிடித்திருந்தது. வக்கீலிடம் தன் விருப்பத்தை வெளியிட்டார். அவருடைய விருப்பமும், சட்டமும் இணைந்து போகிற மாதிரி உயில் தயாரிக்கப்பட்டது. டவுனுக்கு அவர் வந்த வேலை முடிந்தது. கிராமத்துக்குப் புறப்பட நினைத்தார்.

கிராமத்தை நினைத்தவுடனேயே காமாட்சியின் நினைவும் வந்தது. '' ஆமா, நாம பாட்டுக்குச் சும்மா போனா அவ கொடஞ்சி எடுத்துப்புடுவாளே .... அவளுக்குச் சமாதானம் சொல்லுறதுக்காவது மருந்து வாங்கிக்கணும் '' என்று ஒரு டாக்டரிடம் சென்றார். டாக்டர் எழுதிக்கொடுத்த மருந்தைக் கடையில் வாங்கிப் பையில் போடும் போது, '' ஆமா, மருந்தாலே தீர்ற நோவா எனக்கு?'' எனச் சலித்துக் கொண்டார்.

வீட்டிற்கு வந்ததும், அவசர அவசரமாக, மடியில் வைத்திருந்த உயிலை எடுத்துப் பெட்டியில் வைத்துப் பூட்டினார். மாத்திரைப் பொட்டலத்தை எடுத்து வீசி எறிந்தார். அப்போது முத்தப்பன் வந்தான். '' அப்பா, தம்பி இங்கே இருந்தப்ப கோயமுத்தூருக்குக் கடுதாசி எழுதியிருப்பானாட்டம்

இருக்கு. அட்ரசு சரியில்லாததனாலே, எங்கெங்கேயோ சுத்திட்டு, பதில் கடுதாசி இப்பத்தான் வந்திருக்கு. ''

'' என்னப்பா விஷயம் ? ''

'' நம்ம தோட்டத்துலெ வேலு 'வீணாக்கிப்புட்ட அரை ஏக்கரா நிலத்து மண்ணை அவன் அனுப்பிச்சு, என்ன செய்யறதுன்னு கேட்டு எழுதியிருக்கான்.......... அந்தக் களர் மண்ணு...... இன்னும் மூணு வருஷத்துக்கு அப்படியே விட்டு வைச்சா, சரியாப் போயிடுமாம்''

அந்தக் களர் நிலத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் வேலப்பனை நினைத்துக்கொள்வார் அழகப்பர். '' அந்த மண்ணுட்டமே மகனும் பயனில்லாமப் போயிட்டானே '' என்று எத்தனையோ நாட்கள் கலங்கியிருக்கிறார். எனவே, ஒரு விதமான ஆவேசத்துடன்,

'' என்ன ? மண் நல்லாயிடுமா ? அப்ப மவனும்.. ......'' என்று அவர் வாய் விட்டுக் கூவியது முத்துவுக்குப் புரிந்திருக்க நியாயமில்லை. ஆனாலும், தந்தையின் முகத்தில் ஒரு நம்பிக்கை ஒளி படர்வதைப் பார்க்க முடிந்தது அவனால்.

அழகப்பர் உரக்கக் கூவினார்: '' காமாச்சீ ! இங்கேவா...... டாக்டரு நோய் சரியாயிடும்னு சொல்லிட்டாரு........ ஆனா வாங்கியாந்த மருந்துப் பொட்டலம், இங்கே எங்கயோ விழுந்துடிச்சி........ தேடு தேடு....'......'

சின்னஞ்சிறு குடியரசு

உலகிலேயே மிகச் சிறிய குடியரசு எது தெரியுமா ? இத்தாலி நாட்டை யொட்டியுள்ள 'சான் மரினோ' என்ற நாடுதான். இதன் மக்கள் தொகை 20,000 பேருக்கும் குறைவு.

மிகப் பெரிய மக்கள் தொகையுள்ள நாடு சீனா. மக்கள் தொகை 70 கோடி.

பூச்சி தாக்காப் புதிய நெல்

அதிக மகசூல் அளிக்கும் ஆற்றல், தத்துப் பூச்சிகளின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் தன்மை, சன்னமான அரிசி ஆகியவைகள் ஐ. ஆர். 24 ரக நெல்லின் சிறப்புக் குணங்களாகும். இந்த ரகத்தை, பிலிப்பைன்ஸ் நாட்டில் 'லாஸ்பேனஸ்' என்ற இடத்தில் உள்ள அனைத்துலக நெல் ஆராய்ச்சி நிலையம் உருவாக்கி வெளியிட்டுள்ளது.

'அதிசய நெல்' என்று புகழ்பெற்ற ஐ.ஆர். 8 ரகத்தைவிட ஐ. ஆர். 24 ரகம் பலவகைகளில் சிறந்தது. ஐ.ஆர். 8 ரகத்தின் அரிசி பருமனாகவும், அரைவையில் உடையக் கூடியதாகவும் இருந்ததுடன், பலரால் விரும்பி உண்ணப்படாமலும் இருந்தது. ஐ.ஆர். 24 ரகத்தின் அரிசி நீண்டும் சன்னமாகவும் இருக்கிறது; அரைவையில் உடையாது. தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வாழும் மக்களால் விரும்பப்படும் சமையற் குணங்களைக் கொண்டுள்ளது. இந்த ரகம் உயர் விளைச்சல் தருவதுடன், பூச்சிகளால் தாக்கப்படாத தன்மையையும் கொண்டுள்ளது.

ஆசிய பசுமைப் புரட்சிக்கு மூலகாரணமாக விளங்கும் அனைத்துலக நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பயிர் உற்பத்தியாளர்கள் தற்பொழுது பூச்சி நோய்களினால் தாக்கப்படாத புதிய ரகங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள், நெல் தத்துப் பூச்சியால் பாதிக்கப்படாத ரகத்தை உருவாக்குவதில் வெற்றி பெற்று வருகிறார்கள். அத்தகைய ரகங்களில் ஒன்று ஐ.ஆர். 24.

அனைத்துலக நெல் ஆராய்ச்சி நிலையத்தின் மற்றுமொரு குறிப்பிடத் தகுந்த கண்டுபிடிப்பு, புல் போல் மெலியும் வியாதியால் (Grassy stunt disease) பாதிக்கப்படாத நெற்பயிர்களை உருவாக்கியுள்ளதாகும். இவ்வியாதி நெற்பயிர்களைத் தாக்கினால் பயிர்கள் வலிவிழந்து, மெலிந்து புல் தூர்களைப் போல் அடர்த்தியாகக் காணப்படும். ஐ. ஆர். (International Rice) ரகங்களையும், மத்திய இந்தியாவில் அமோகமாகக் காணப்படும் ஒருவகைக் காட்டு நெல்லையும் கரு இணைப்புச் செய்து, மேற்கூறிய வியாதி தாக்காத ரகங்களை உருவாக்கியிருப்பது மிகவும் பாராட்டிற்குரிய செயலாகும்.



''நீங்கள் தேர்வு எழுதவேண்டு மானால் உங்களுடைய 'கிருதாக் களின்' நீளம் குறையவேண்டும். அதாவது மிகக் குறைவாக அமையவேண்டும். அதுமட்டு மல்ல. உங்களுடைய மீசைகளை எடுத்து விடவேண்டும்.''

மாணவர்களைப் பார்த்து இப் படிச் சொன்னால் என்ன நடக்கும்?

மறுநாள் கல்லூரியில் வேலை நிறுத்தம் நடக்கும். உரிமைக் குரல் கிளம்பும். தேர்வு ஒத்தி வைக்கப்படும். கல்லூரி கால வரையின்றி மூடப்படும்.

இப்படித்தான் நாம் நினைப் போம்!

ஆனால், ஆசி ரியர்களின் கோரிக்கையை ஏற்று மாணவர் கள் அப்படியே நடந்து கொண் டனர்.

இந்த அதி சயம் எங்கே நடந்தது என்று திகைக்கிறீர் களா?

ஆச்சரியத் தில் மூழ்கடிக் கும் இந்த அதி சய நிகழ்ச்சி நடந்தது, சென் னையில்தான்.

அடையாற்றிலுள்ள சமையல் இயல் தொழில்நுட்பக் கல்லூரி யில்தான் இந்த அதிசயம் நிகழ்ந் தது.

ஏன் இந்தக் கல்லூரியில் மட் டும் மாணவர்களின் மீசை, கிரு தாக்களை எடுக்கச் சொன்னார்கள்?

நடைமுறைப் பயிற்சித் தேர்வு களின்போது வெளிநாட்டவர்வரு வார்களாம். அவர்கள் விரும்பும் வகையில் தோற்றம் அமைய வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்யச் சொல்கிறார்களாம்.

இன்னொரு காரணமும் சொல் கிறார்கள். முகத்தில் அதிக அள வில் முடியிருப்பது சமைக்கும் பொழுதும் பரிமாறும் பொழுதும் இடையூறாக அமைந்துவிடுமோ என்ற அச்சமாம்.

என்ன காரணமாக இருக்கட் டுமே; மாணவர்கள் அத்தனை பேரும் இதை ஏற்றுக்கொண்டு விட்டார்களா?

அப்படிச் சொல்லமுடியாது

முதலாண்டு மாணவர்களில் தான் 90 சதவீதம் மீசைகளையும் கிருதாக்களையும் பறி கொடுத் தார்கள்.

பத்து சதவீதத்தினர் அளவைக் குறைத்துக் கொண்டார்கள்.

இரண்டாவது ஆண்டு படிக் கும் மாணவர் களில் 50 சத வீதம் இப்படி, 50 சதவீதம் அப்படி.

மூன்றாம் ஆண்டு மாண வர்கள் எப்படி?

மூச்! அவர் கள் வழக்கப்படி —அவர்கள் தான் கல்லூரிப் படிப்பை முடித் துக் கொள் கிறார்களே! பயமேன்?

—பறவை

'இந்தியாவுக்கு வழி' பாடிய வால்ட்டர் விட்மன்

ஜனநாயகத்தைப் பாடிய முதல் கவிஞர் விட்மன். அமெரிக்க நாட்டினரான இவரை வால்ட்டர் விட்மன் என்று பலர் கூறுகின்றனர். " புல்லின் இதழ்கள் " என்ற கவிதைத் தொகுப்பிலே

" ஜனநாயகமே, உனக்கே
இவை என்னிடமிருந்து,
என் ஆரணங்கே, உனக்கு
ஊழியம் செய்ய,
உனக்காக, உனக்காகவே
நான்
இந்தப்பாடல்களைப்பாடு
கின்றேன். "

என்று எழுதியிருந்தார் விட்மன். ஜனநாயகத்தில் மனிதனுக்கு இருக்கும் சமத்துவம்—இதுவே அக்கவிஞரின் வாழ்க்கைக் குறிக்கோள்—இதனை அழகுற வடித்திருக்கிறார் கவிஞர் தமது சொல்லோவியத்திலே. அமெரிக்காவின் வலிமைக்கு ஆதாரம் அமெரிக்க மக்களே என்று நம்பியவர் விட்மன். நாட்டின் பண்பு அறிந்து பாடும் பண்புடையவரே கவிஞர் என்பது அவர் துணிபு.

ஜனநாயக சமுதாயத்திலே காணப்படும் சமத்துவத்தில் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தாலும் எந்தச் சமுதாயத்திலுமுள்ள தளைகளை எதிர்த்துப் போராடத் தனி நபருக்கு இருக்கும் உரிமையிலும் அவருக்கு நம்பிக்கை உண்டு. தம் கவிதைகளில் மனிதனின் பண்புக்கு ஏற்றம் தந்தார். சுதந்திர மக்கள் கொண்ட ஒரு நாடு என்று அமெரிக்காவைச் சித்திரித்தார்.

" புல்லின் இதழ்கள் " தான் அவருடைய தலை சிறந்த படைப்பு. தன்னையே பாமர அமெரிக்கனாகப் பாவித்து, அந்த முறையிலே அமெரிக்காவைச் சித்திரிக்க முயன்றார், இந்தக் கவிதையிலே.

வால்ட்டர் விட்மன் 1819 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதி நியூயார்க் மாநிலத்திலே லாங் ஐலண்டு தீவில் வெஸ்ட்ஹில்ஸ் பண்ணை ஒன்றில் பிறந்தார். புரூக்லின் நகரில் வளர்ந்து வந்தார். சிறுவனாக இருக்கையில் பொதுப்பள்ளிக்கூடங்களில் படித்தார். இடைவிடாமல் வாசிப்பது அவர் வழக்கம். கோயிலுக்கும் தவறாமல் ஒழுங்காகச் சென்று வருவார்.

இளைஞர் விட்மன் அச்சகத்தில் வேலை செய்தார். பத்திரிகை நிருபராகவும், பள்ளி ஆசிரியராகவும் வேலை பார்த்தார். 1839 முதல் 1848 வரை புரூக்லீன் நகரிலும் நியூயார்க் நகரிலும் பல்வேறு செய்தித் தாள்களில் ஆசிரியராகப் பணி புரிந்தார். இந்தக் காலத்தில் அவர் எழுதியதெல்லாம் உரை நடைதான். ஃபிராங்க்ளின் இவான்ஸ் என்ற நாவல் 1842-ல் தோன்றியது. மிதக்குடியை ஆதரித்து எழுதிய நாவல் இது.

1846—1855 ஆண்டுகளில் விட்மன் சிந்தனை, உணர்ச்சி, எழுத்து, ஆகியவற்றை மாற்றிய ஏதோவொன்று நிகழ்ந்தது. இந்த மாறுதல் அவரை முற்றிலும் மாறுன ஆனால் மாபெரும் கவிஞராக மாற்றியது.

புதுப்பெயர்

புது விட்மன், புல்லின் இதழ்கள் என்ற நூலின் முதல் பதிப்பில் தெளிவாகக் காட்சியளிக்கிறார். 1855-ல் வெளியான இந்த நூல் இன்னும் அவருடைய முக்கியப் படைப்பு என்றே மதிக்கப்படுகிறது. புது விட்மனுக்குப் புதிய பெயர் ஒன்றும் கிடைத்தது. அதுதான் வால்ட் விட்மன்!

" புல்லின் இதழ்கள் " விட்மன் முன்னர் எழுதிய கவிதைகளிலிருந்து மாறுபட்டதாகும். எதுகை, மோனை, சந்தம் எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டார். மக்களின் மரபுப்படியான எளிய சொற்களிலே வாழ்க்கையைச் சித்திரித்தார் கவிஞர் விட்மன்.

"புல்லின் இதழ்கள்" முதலில் தோன்றியபோது, இலக்கியத் திறனாய்வாளர்களுக்கு அது பிடிக்கவில்லை. " விந்தையான கவிதை " என்றனர்; என்றாலும் இன்று அதனை வாசிப்பவர்கள் என்ன கூறுகிறார்கள் தெரியுமா? விட்மனின் கவிதை புனையும் ஆற்றலை, கவிதை எழுதும் புதிய வழியைத் தோற்றுவித்தது இந்நூல் என்கின்றனர். " புல்லின் இதழ்கள்" மனிதனின் வாழ்க்கையை, ஒரு நாடு முதிர்ச்சி அடைவதை மனிதனின் இளமை நீங்கி முதுமை அடைவதைச் சித்திரிக்கிறது.

புது விட்மன் தோன்ற பல சக்திகள் வேலை செய்தன. தாமே முதிர்ச்சி அடைந்து விட்டதாகவும், தமது கவிதைகள் தமது 36 ஆண்டு அனுபவங்களை விளம்புகின்றன என்றும் நம்பினார், அவர். தவிரவும், அவர் ஷேக்ஸ்பியர் படைப்புகளையும் நூலையும் விரிவாகப் படித்து வந்ததன் காரணமாக அவருடைய கவிதை புனையும் பாணியே மாறிவிட்டது. அமெரிக்க எழுத்தாளர்களை, முக்கியமாக தோரோ, லாவெல்த் எமர்ஸன் ஆகியோரைப் பின்பற்றி விட்மன் " கட்டுக் கோப்பில்லாத " கவிதைகள் எழுதலானார்.

வால்ட்டர் விட்மன்

கருத்துக்களை உருவாக்குவதில் எமர்ஸனுடைய எழுத்தோவியங்கள் விட்மனிடம் நிலையான செல்வாக்குப் பெற்றிருந்தன. அமெரிக்கர்கள் சுதந்திரமாகவும் தன்னிறைவுடனும் இருந்தால்தான் அவர்கள் சொந்தமாகச் சிந்திக்கும் ஆற்றலுடையவர்களாக இருப்பர், ஜனநாயக மரபினையொட்டி வாழ்வர் என்று எமர்ஸன் கருதி வந்தார். இதனை அப்படியே ஏற்றுக் கொண்டார் விட்மன். " நான் கொதித்தெழுந்தேன். எமர்ஸன் என்னைப் பொங்கச் செய்தார்" என்றார்.

" சுயகீதம் " என்ற நீண்ட கவிதை ஒன்றிலே தனி நபரின் ஜனநாயக மரபு பற்றி எமர்ஸன் கொண்டிருந்த கருத்தினை விட்மன் பெருமைப்படுத்தினார். முழுக்க முழுக்க ஜனநாயகத்தைப் பாடும் கவிதை இது; இது மாதிரி ஒருக்காலும் எழுதப்படவில்லை என்று அது போற்றப்பட்டது. ஒவ்வொரு மனிதனையும் அவர் தானாகவே பாவித்துப் பாடினார்.

கலங்கினார்.

அமெரிக்க உள்நாட்டுப் போர் (1861—1865) அவரை மிகவும் கலக்கிவிட்டது. 1862-ஆம் ஆண்டு முதல் அவர் பல்வேறு மருத்துவமனைகளிலும் இராணுவ முகாம்களிலும் பணியாற்றினார். இருதரப்புப் போர் வீரர்களுக்கும் அவர் உதவி செய்தார்.

விட்மனின் மிகச் சிறந்த கவிதைகளில் சில, அவருடைய போர்க்காலத்து அனுபவங்களிலிருந்து தோன்றியவையாகும். " டிரம் டாப்ஸ் " என்ற ஒரு நூலில் இந்தக் கவிதைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டன. 1864-ல் இது முதலில் வெளிவந்தது. இந்தத் தொகுப்பில் இரண்டு கவிதைகள் பெரும் புகழடைந்தவையாகும்.

"ஓ காப்டன்—மை காப்டன்", " வென் லாக்ஸ் லாஸ்ட் இந் தி டோர்யார்டு புரூம்ட் " என்ற இந்த இரு கவிதைகள் அதிபர் ஆபிரகாம் லிங்கனின் மறைவைக் குறித்து எழுதியவையாகும். லிங்கனை விட்மன் மிகவும் வியந்து போற்றி வந்தார்.

1873-ஆம் ஆண்டில் வாஷிங்டனில் வேலை செய்து கொண்டிருக்கையில் திடீரென்று முடக்கு வாதம் கண்டது. இதனால் அவர் பாதி முடமானார். நியூயார்க் நகரிலிருந்து வெளியேறி நியூ ஜெர்ஸி மாநிலத்திலே காம்டன் நகருக்கு வந்து தமது வாழ்நாள் இறுதிவரை வசித்தார். அங்குதான் தமது 73-வது வயதில் 1892-ஆம் ஆண்டில் காலமானார்.

தமது கடைசி ஆண்டுகளிலும்கூட இன்னொரு மாறுதல் வால்ட் விட்மனிடம் காணப்பட்டது. தமது கவிதைக்கு அவர் புதிய கோட்பாடுகளை உருவாக்கியிருந்தார். அவை யாவன : குறிக்கோள் நெறி, நாட்டுணர்ச்சி, அனைத்துலக உணர்ச்சி. அவருடைய எழுத்தோவியங்கள் ஆழ்ந்த சிந்தனையின் அடிப்படையில் உருவானவை; அமைதியானவை.

மனிதனின் சார்புநிலை அவருடைய சிந்தனையில் முக்கிய இடம் பெற்றது. குறிப்பாக " பாஸேஜ் டு இந்தியா " (இந்தியாவுக்கு வழி) என்ற கவிதையில் இது எதிரொலிக்கிறது.

இந்தக் கவிஞரின் மாபெரும் குறிக்கோள் நெறியிலே பிரிட்டிஷ் நாவலாசிரியர் இ. எம். ஃபார்ஸ்ட்டர் மிகவும் ஈடுபட்டவராகி, தமது தலைசிறந்த படைப்புக்கு "ஏ பாஸேஜ் டு இந்தியா " என்ற பெயரையே சூட்டினார். விட்மன் கவிதையின் பெயர் இது.

'மாணவர் அரங்கம்' என்ற புதிய பகுதி மாணவர்களுக்காக இந்த இதழிலிருந்து தொடங்கப் படுகிறது.

இப்பகுதியில் மாணவர்கள் பங்கு பெறலாம்.

கல்லூரிகள் அனைத்தும் திறந்தவுடன் மாணவர்களுக்குப் போட்டி ஒன்று நடத்தப்படும். இதற்கான அறிவிப்பு மிக விரைவில் வெளிவரும்.

இப்பகுதிக்கு எழுதும் மாணவர்கள் அஞ்சல் உறையிலும் தங்கள் எழுத்தோவியங்களின் தலைப்பிலும் 'மாணவர் அரங்கம், என்று குறிப்பிடும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

எழுத்தோவியங்கள் அனைத்தையும் அஞ்சலிலேயே அனுப்ப வேண்டும். வெளியிட இயலாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. அனுப்பும்பொழுதே ஒரு படி எடுத்துக் கொள்வது நல்லது.

அடுத்த இதழில்தான் 'பொன்மொழியார்' வருகிறார் !

“முற்போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்ற பெரும்பான்மையான மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள ஒரே அரசியல் கட்சியின் அமைச்சரவைகள் அடுத்தடுத்துப் பணியாற்றி வந்துள்ளன. இம்மாநிலம் தொடர்ச்சியாக நிலையான திறமை வாய்ந்த நிர்வாகத்தைப் பெற்று வந்திருக்கிறது. இவை எல்லாம் பெருமிதம் அளிக்கும் செய்திகளாகும்.”



ஆளுநர் பதவிக்காலம் முடிவுற்று தம்மூர் செல்லும் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்களுக்கும் சர்தார்ணி உஜ்ஜல்சிங் அவர்களுக்கும் சென்னையில் சிறப்பான வழியனுப்பு விழா நடைபெற்றது.

அரசு நடத்திய வழியனுப்பு விழாவில் தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாடு அரசின் சார்பில் நினைவுக் கேடயம் ஒன்றினை அளித்தார்கள்.

தமிழ் நாட்டிலிருந்து புறப்படும் முன்னர் ஆளுநர் அவர்கள் அண்ணா சதுக்கம் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

விடை பெற்றுச் செல்லும் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் வானொலியில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

“தமிழ் நாட்டின் மக்களின் அறிவாற்றலும் ஒழுக்கமும் கடின உழைப்பும் என்னைப் பெரிதும் கவர்ந்து விட்டன. எல்லாத் துறைகளிலும் இம்மாநிலம் மேலும் முன்னேறி சிறந்து விளங்கும் என்ற நம்பிக்கையை இந்த நற்பண்புகள் வளர்க்கின்றன.

நமது புதிய ஆளுநரின் முழுப் பெயர் திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா என்பதாகும். மராட்டிய மாநிலத்திலுள்ள கோலாபா மாவட்டத்திலுள்ள காரிகான் என்ற இடத்தில் 1908 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ஆம் நாள் பிறந்தார். குஜராத் கல்லூரியிலும், புனா புதுக் கல்லூரியிலும் பயின்று பி.ஏ., எல்.எல்.பி., பட்டம் பெற்றார்.

பின்னர் பம்பாயில் சாந்தா குருஸ் என்ற இடத்திலுள்ள போட்டார் உயர்நிலைப் பள்ளியின் ஆசிரியரர்கப் பணியாற்றினார். 1934-ஆம் ஆண்டில் சட்டம் பயின்று சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தார். புகழ் வாய்ந்த வழக்குகளான செம்பூர் கொலை வழக்கு, நஜினா மஸ்ஜிட் கலக வழக்கு ஆகியவற்றை எடுத்து நடத்தினார்.

திரு. ஷா அவர்கள் தனது இருபத்து இரண்டாவது வயதில் தேசிய இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அதன் காரணமாக 1932-ல் சிறை புகுந்தார். பின்னர் 1942-ல் ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் பங்கெடுத்துக்கொண்ட காரணத்தினால் மறுபடியும் கைது செய்யப்பட்டார்.

பம்பாய் மாநிலக் காங்கிரஸ் குழுவின் பொதுச்செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். 1955-ஆம் ஆண்டிலிருந்து 1957 வரை அதனுடைய துணைத் தலைவராக இருந்த திரு. ஷா 1960-ஆம் ஆண்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் 1962-63-ல் அவர் அனைத்திந்தியக் காங்கிரசு இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தார். பரோடா சமஸ்தானத்தைப் பம்பாய் மாநிலத்துடன் இணைக்கின்ற பணியில் அவர் ஏற்றுக்கொண்ட பங்கு குறிப்பிடத்தகுந்த இடத்தை வகிக்கின்றது.

பின்னர் 1948-ஆம் ஆண்டு அவர், பரோடா மன்னருக்குச் சட்ட ஆலோசகராகச் சேர்ந்தார். பல ஆண்டுகள் பம்பாய் மாநகராட்சி உறுப்பினராக இருந்த திரு. கே. கே. ஷா 1952-ம் ஆண்டு பம்பாய் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960-ஆம் ஆண்டிலும் பின்னர் 1966 ஏப்ரலிலும் மாநிலங்

களவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. ஷா பல்வேறு கல்வி, கலாச்சார, சமூக அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு இருந்தார். பம்பாய், பரோடா பல்கலைக் கழகங்களில் செனட், பம்பாய் மாநிலப் பஞ்ச நிவாரணக்குழு, சயாஜிரா வைர விழா நினைவு அறநிலையம் ஆகியவை முக்கியமானவைகள். இவர் இந்தோ-அரேபிய சங்கம், பிரிகேட் பாரத்ய சமாஜ் ஆகியவற்றின் தலைவராகவும் சர்வ தேசக் கழகம், ஜவுளி நிறுவனக் குழு ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார். 1962-ஆம் ஆண்டு வரையிலும் மத்திய குடி மக்கள் குழுவுடன் தொடர்பு கொண்டிருந்த திரு. ஷா 1965-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அதன் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். 1962-ல் பம்பாயில், வழிகாட்டும் நாடாளுமன்றம் ஒன்றை உருவாக்கிய திரு. ஷா தொடர்ந்து அதன் தலைவராக இருந்து வருகின்றார். ஆயுள் காப்பு நிறுவனத்தின் முதல்தர ஊழியர்களின் சங்கம், இந்திய எண்ணெய்க் கார்ப்பரேசன் பணியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்து வருகின்றார்.

திரு. ஷா பல்வேறு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு இருக்கின்றார். ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் சென்று வந்து இருக்கின்றார். 1964-ஆம் வருடம் லண்டன் மாநகரில் நடந்த, தென்னாட்பிரிக்கப் பொருள் உதவி மாநாட்டிற்குச் சென்ற இந்தியத் தூதுக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றினார். 1965-ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் தகராறின் போது ஹெப்காரன் பகுதியைச் சுற்றிப் பார்த்த திரு. ஷா அகதிகளின் மறுவாழ்வில் தனி அக்கறை எடுத்துக் கொண்டார்.

திரு. ஷா 1944-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ஆம் நாள், திருமதி மதுபென் ஷா அவர்களைத் தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். அவர்களுக்கு இரண்டு புதல்வர்களும் மூன்று புதல்விகளும் இருக்கின்றார்கள்.

கே. கே. ஷா அவர்களின் பொழுதுபோக்கு கிரிக்கெட், டென்னிஸ், நீந்துதல், குதிரைச் சவாரி முதலியன.

விவசாயத்தில் பின் தங்கியிருந்த செங்கை மாவட்டம், பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ், அமோக விளைச்சல் தரும் நெல் வகைகளைப் பயிரிட்டு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்துக் கொண்டிருக்கிறது.

	1967-71	1966-67
அமோக விளைச்சல் தரும் நெல் சாகுபடி	9,57,216 ஏக்கர்கள்.	79,993 ஏக்கர்கள்.
விளைச்சல்	14·35 இலட்சம் டன்.	1.20 இலட்சம் டன்.

இது கடந்த நான்காண்டுகளில் இம்மாவட்டத்தில் ஏற்பட்ட வியத்தகு சாதனையாகும்.

* * *

	1967-71	1966-67
நிலப்பட்டா பெற்ற ஏழைகளின் எண்ணிக்கை.	16,992	1,163
வீட்டு மனைப் பட்டா பெற்ற ஏழைகளின் எண்ணிக்கை.	25,215	1,630
கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள்.	159	..



இத்துடன், 42,000 நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு 16-5-1971 அன்று செங்கை மாவட்டத்தில் தமிழக முதல்வர் நிலப்பட்டாக்களையும் வீட்டு மனைப் பட்டாக்களையும் வழங்கினர்.

கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம் இந்தியாவிலேயே முதல் முதலாக முன்னோடியாகச் செங்கை மாவட்டம் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அகரம் கிராமத்தில் 14-10-1970 அன்று துவக்கி வைக்கப்பட்டது. செங்கை மாவட்டத்தில் இதுவரை 159 கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

* * *

தமிழகத்திலேயே எல்லாக் கிராமங்களுக்கும், அரிசனக் குடியிருப்புகளுக்கும் மின் வசதிசெய்து கொடுத்துத் தனிப் பெருமையைத் தட்டிக் கொண்டுள்ளது செங்கை மாவட்டம்.

இதுவரையில் 56,522 விசையேற்றங்களுக்கு மின் சக்தி இணைப்பு செய்யப்பட்டுள்ளது.



	1960-67	1967-71
மின்வசதி பெற்ற கிராமங்களும் குக் கிராமங்களும்.	1,716	3,353
மின் இணைப்புப் பெற்ற கிணறுகள்.	20,089	36,433

செங்கை மாவட்டத்தில் ஊரெல்லாம் ஒளிமயமாகி விட்டது.

* * *

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை

	1966-67	1967-71
	ரூ.	ரூ.
விதை உரம் வாங்க ..	81,335	5,96,89,744
கிணறு வாரகம் ..	8,97,850	3,08,16,230
பம்பு செட்டுகள் வாங்க	12,77,600	2,15,78,655
மொத்தம் ..	22,56,785	11,20,84,629

தமிழகத்தில் மலர்ந்து வரும் பசுமைப்புரட்சி—அதன் விளைவாக உணவு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்று வருகின்ற ஒரு நிலை—இதற்கெல்லாம் உழவர் பெருமக்களுக்கு 'வாரிவழங்கிய வசதிகளே மிக முக்கியமான காரணமாகும்.

விவசாயிகளுக்குக் கடன்கள் விவசாய மறுநிதிக் கழகம் மூலமாக

	1967-71	1960 67
வழங்கப்பட்ட கடன்	ரூ. 19,10,900	
பம்பு செட்டுகள் ..	259	..
இரசாயன உரங்கள்	39,796 டன்கள்.	20,040 டன்கள்.

குடிசைவாழ் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம்

அரும்புப் பருவத்திலே உள்ள குழந்தைகள், ஆரோக்கியமாக வளர்க்கப்பட்டால்தான் ஒளி மிகுந்த எதிர்காலத்தை நாட்டிற்கு அளிக்கின்ற ஒப்பற்ற மேதைகளாக அவர்கள் திகழ முடியும். விளையும் பயிர்களை நல்ல வளமான பயிர்களாக விளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ்நாடு அரசு, பள்ளி செல்லாத ஆறு மாதம் முதல் மூன்று வயதிற்கு மேற்படாத குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தினை, முதன் முறையாக அக்டோபர் 1970-ல் சென்னை நகரக் குடிசைப் பகுதிகளில் அமுலுக்குக் கொண்டு வந்தது. இத்திட்டம் செங்கற்பட்டு, மதுரை, திருச்சி, கோவை முதலிய மாவட்டங்களிலும் இப்பொழுது அமுலாக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள சென்னை நகரை ஒட்டிய பகுதிகளில் இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 20,000 குடிசைவாழ் குழந்தைகள் பயனடைந்து வருகின்றார்கள்.

பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம்.

மாதவரம் ஊராட்சி ஒன்றியம்.

வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம்.

தாம்பரம் நகராட்சி.
பல்லவபுரம் நகராட்சி.
திருவொற்றியூர் நகராட்சி.
மாதவரம் நகராட்சி.
கத்திவாக்கம் நகராட்சி.
அம்பத்தூர் நகராட்சி.
ஆலந்தூர் நகராட்சி.
ஆவடி நகராட்சி.

ஓர் ஆண்டில் 250 நாட்களுக்கு ஒரு குழந்தைக்கு 23½ காசுகள் (பைசா) என்ற விகிதத்தில் ரூ. 11,75,000 செங்கை மாவட்டத்தில் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குழந்தைக்கும் 75 கிராம் எடையுள்ள புரதச் சத்து நிறைந்த "மாடர்ன் ரொட்டி" மூன்று துண்டுகளாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. செங்கற்பட்டு மாவட்டத்தில் இச்சத்துணவுத் திட்டம் 100 மையங்களில், மையம் ஒன்றுக்கு 200 குழந்தைகள் வீதம் அமுல் செய்யப்பட்டுள்ளது. கூடுமானவரை, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ரொட்டியினை அந்த மையங்களிலே ஊட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரொட்டி பெற்றுக்கொள்ள வராத சில குழந்தைகளின் ரொட்டிகள் அடையாளச் சீட்டில்லாத வேறு ஏழைக் குழந்தைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

காலாண்டிற்கு ஒரு முறை குழந்தைகளின் உடல்நிலை முன்னேற்றம், மருத்துவரால் பரிசோதிக்கப்பட்டு அடையாளச் சீட்டில் கடைசிப் பக்கத்தில் குறிக்கப்படும்.

மகளிர் மன்றங்கள், ஒய்.எம்.சி.ஏ. கல்லூரி மாணவர் கிராம சேவைச் சங்கம், இந்திய மகளிர் மன்றம் முதலிய சமூக நலச் சங்கங்கள் மூலம் குடிசை வா குழந்தைகளுக்கு, மகப்பேறு இல்லங்கள், குடும்பக்கட்டுப்பாடு நிலையங்கள், மகளிர் மன்றங்கள், பள்ளிகள், முதலிய இடங்களில் சத்துணவு பகிர்ந்து கொடுக்கப்படுகின்றன. 200 குழந்தைகள் கொண்ட ஒவ்வொரு மையத்திலும் கண்காணிப்பாளருக்கு மாதம் ரூ. 20, உதவியாளருக்கு ரூ. 10 என்ற விகிதத்தில் எல்லா மையங்களுக்கும் உதவித்தொகை அரசால் கொடுக்கப்படுகிறது.

ஏழை மக்களுக்குரிய இந்தத் திட்டத்தைத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 16—5—71 அன்று தாம்பரத்தில் துவக்கி வைத்தார்கள்.

பேரறிஞர் அண்ணா புற்றுநோய் நிலையம்

அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம் 21—3—1969 அன்று உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தமிழக அரசால் காஞ்சிபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்திற்கான கட்டடம் சுமார் 5,00,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது.





கேளுங்கள் கொடுக்கப்படும்!

வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்படவேண்டும்

என் வயலில் சூரை என்ற வியாதி தாக்கியுள்ளதாக அக்கம் பக்கத்து வயலின் சொந்தக்காரர்கள் கூறுகிறார்கள். ஆனால் எங்கள் கிராம சேவகர் மாவுப்பூச்சி தாக்கியுள்ளது என்று கூறி பாரத்தியான் தெளிக்கச் சொன்னார். இதில் எது சரி? முழு விவரமும் கூறும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கருப்பன்,
திட்டக்குடி.

'சூரை' என்பது வியாதி அல்ல; மாவுப்பூச்சியினால் ஏற்படும் அழிவே 'சூரை' என்று சொல்லப்படுகிறது. மாவுப்பூச்சி தாக்கினால் பின் கண்ட அறிகுறிகள் காணப்படும்.

நெற்பயிரில், இங்குமங்குமாக திட்டுத்திட்டாகப் பயிர் குழிந்து காணப்படும். நாளடைவில் இது அதிகமாகிக் கொண்டே செல்லும். அதன் பின்பு, பயிர் எரிந்து அழிந்தது போன்று காணப்படும். தோகையைப் பிரித்துப் பார்த்தால், மாவால் மூடப்பட்ட முட்டை வடிவப் பூச்சிகளைக் காணலாம். பூச்சிகள் இல்லாவிட்டாலும் மாவு மட்டும் ஒட்டிக்கொண்டிருப்பதையாவது காணலாம். மாவுப்பூச்சி தாக்கிய பயிரிலிருந்து கதிர் வெளிவராமல், பதராகிக் குருத்துக்குள்ளேயே அமுங்கி இருக்கும்.

மேற்கூறிய அறிகுறிகள் காணப்பட்டால், அவை மாவுப்பூச்சியினால் ஏற்பட்டதே என்று முடிவு செய்து கொள்ளலாம். தாய்ப்பூச்சிகள் முட்டையிடுகின்றன. அதிலிருந்து வரும் குஞ்சுகள் பயிரின் சாற்றை உறிஞ்சி வாழுகின்றன. பயிரின் சாறு உறிஞ்சப்பட்டு விடுவதாலேயே மேற்கூறப்பட்ட சேதங்கள் ஏற்படுகின்றன. மாவுப்பூச்சி பாசன நீரில் மிதந்தும், ஊர்ந்தும் அடுத்தடுத்த இடங்களுக்குப் பரவுகின்றன. நெற்பயிர் இல்லா நிலையில் புற்களில் வாழுகின்றன.



நெல் மாவுப்பூச்சி

மாவுப்பூச்சிகளின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தக் கீழ்க்கண்ட கடுப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

வரப்புகளில் புற்கள் இல்லாமல் அறுத்துவிட வேண்டும்.

வயலில் குழிந்து காணப்படும் இடங்களில் உள்ள பயிர்களை எடுத்துத் தீயிட வேண்டும். ஐ.ஆர். 8, ஐ.ஆர்-5 போன்ற அடர்ந்து வளரும் பயிர்களில் இவை தங்க வசதியிருப்பதால், தீயிட்டு அழிப்பதே சிறந்தது. பாரத்தியான் மருந்தில் 200 முதல் 300 மில்லி லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பது மிகவும் ஏற்றது. மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்த டி.டி.டி அல்லது என்ட்ரின் மருந்து பயனற்றது. மாவுப்பூச்சியை அழிக்கக் கையால் இயங்கும் தெளிப்பானை (ஸ்ப்ரேயர்) மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

பெரியகுளம் பகுதியில் உருளைக் கிழங்கு பயிரிட முடியுமா?

ராஜரத்தினம்,
பெரியகுளம்.

வெப்பம் குறைவாக உள்ள சமவெளிப் பகுதிகளில் உருளைக் கிழங்கு பயிரிட முடியும். பெரியகுளம் பகுதியில் வெப்பம் குறைவாக உள்ளது. அப்பகுதியில் உருளைக்கிழங்கை இரு பருவங்களில் பயிரிடலாம். வைகாசி முதல் ஆவணி முடிய முதல் பருவம். இப்பருவத்தில் விதைக் கிழங்குகளை விளைவிக்கலாம். புரட்டாசி—ஐப்பசி முதல் தை மாதம் வரை இரண்டாவது பருவமாகும். இப்பருவம் உருளைக்கிழங்கைப் பெருமளவில் விளைவிப்பதற்குச் சிறந்தது. "கோ—சிம்லா ஹைபிரிடு ஹீட்" என்ற ரகத்தைப் பயன்படுத்திப்பெரியகுளம் பகுதிகளிலும் உருளைக்கிழங்கு பயிரிட்டுப் பயனடையலாம்.

தமிழரசு இதழில் உழவர்களுக்கான கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற பகுதியை இடைவிடாமல் படிப்பவன் நான். உழவர்களின் ஐயங்களை விளக்கித் தாங்கள் பதிலளிக்கும் அப்பகுதி என்னைப் போன்ற பல உழவர்களுக்கு உபயோகமாக உள்ளது. கீழ்க்கண்ட என் கேள்விகள் என்னுடைய தனிப்பட்ட கேள்வி அல்ல; என் போன்ற பல உழவர்களுடைய கேள்வியாகும். எனவே தயவு செய்து என் ஐயங்களைத் தீர்த்து வைக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதி கூட்டுறவுச் சங்கங்களில் இப்கோ காம்ப்ளெக்ஸ் உரம் என்று ஏதோ ஒன்றைக் கூட்டுறவு உரம் என்று சொல்லி விளம்பரப்படுத்துகிறார்கள். இப்கோ என்றால் என்ன ? அது என்னென்ன உரங்கள் தயார் செய்கிறது ? தொழிற்சாலை எங்கே உள்ளது ? அதை ஏன் கூட்டுறவு உரம் என்று கூறுகிறார்கள் ?

சோமசுந்தரம், மாமண்டூர்.

தங்கள்ஆர்வத்தைப் பாராட்டுகின்றோம். 'இப்கோ' என்றால் இந்திய உழவர் இரசாயன உரக் கூட்டுறவு (Indian Farmers Fertiliser Co-operative) என்று பொருள்படும். அந்த நிறுவனம் தயாரித்து வழங்கும் இரசாயன உரம் 'இப்கோ' உரம் என்று சொல்லப்படுகிறது. இந்தியக் கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சொந்தமாக இந் நிறுவனம் இருப்பதால், இந்நிறுவன உரங்களைக் 'கூட்டுறவு உரம்' என்றும் கூறுகிறார்கள்.

'இப்கோ' நிறுவனத்தில் பஞ்சாப், உத்திரப் பிரதேசம், குஜராத், அரியாணா, ஆந்திரம், மத்தியப் பிரதேசம், மகாராட்டிரம், மைசூர், இராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய 10 மாநிலங்களிலுமுள்ள கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் முதல் மாநில கூட்டுறவுச் சங்கங்கள் வரை பங்குதாரர்களாக உள்ளன. பத்து மாநிலங்களிலுமுள்ள கூட்டுறவு நிறுவனங்களின்மொத்தப் பங்குத் தொகை ரூபாய் 9 கோடியாகும். இதில், தமிழ்நாட்டின் பங்குத் தொகை ரூபாய் 50 லட்சமாகும். மத்தியஅரசுஇந்நிறுவனத்திற்குப் பங்குத் தொகையாக ரூபாய் 18 கோடியைக் கொடுத்துள்ளது. அமெரிக்க கூட்டுறவுச் சங்கங்களால் நிறுவப்பட்ட 'அனைத்து நாட்டு உரக் கூட்டுறவு' (Co-operative Fertiliser International) நிறுவனத்தின் உதவியுடனும், அமெரிக்க, இங்கிலாந்து அரசுகளின் அந்நியச் செலாவணி உதவியுடனும் சுமார் ரூபாய் 100 கோடி செலவில், குஜராத் மாநிலத்தில் அகமதாபாத்திற்கு அருகேயுள்ள 'கலோல்' (Kalol) என்ற இடத்தில் அமோனியா யூரியா தொழிற்சாலையும், காண்ட்லா (Kandla) 'துறைமுகத்தில் என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் உரத்தொழிற்சாலையும்அமைக்கப்பட்டுவருகிறது. அத்தொழிற்சாலைகள் 1973-ஆம் ஆண்டிற்குள் உற்பத்தியைத் தொடங்கும். எதிர்காலத்தில் தயாரிக்க இருக்கும் உரங்களைத் தற்பொழுது 'இப்கோ' நிறுவனம் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து அறிமுக விற்பனைத் திட்டத்தின் (Seeding Programme) கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உழவர்களுக்கு வழங்கிவருகிறது.

'இப்கோ' நிறுவனம் தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து அடங்கிய 10 : 26 : 26, 12 : 32 : 16, 14 : 36 : 12 என்றுமூன்று வகை காம்ப்ளெக்ஸ் உரங்களையும், 46 சத தழைச் சத்துள்ள யூரியாவையும் வழங்கி வருகின்றது. இந்த உரங்களெல்லாம் தமிழ்நாட்டில் பயிராகும் நெல், கரும்பு, ராகி, மக்காச் சோளம், நிலக்கடலை, பருத்தி, உருளைக்கிழங்கு போன்ற எல்லாவகைப் பயிர்களுக்கும் ஏற்றதாகும்.

பயிருணவுச் சத்துக்களின் விலை அடிப்படையில் 'இப்கோ' உரங்கள் விலை மலிவானவை என்று கூறப்படுகின்றன. மற்ற காம்ப்ளெக்ஸ் உரங்களைக்காட்டிலும் 'இப்கோ' காம்ப்ளெக்ஸ் உரத்தில் அதிகப் பயிருணவுச் சத்துகள் உள்ளன. குறைந்தது 60 சதமும், உச்ச அளவாக 62 சதமும் மொத்தப் பயிருணவுச் சத்துக்கள் இருக்கின்றன.

நெற்பயிரில் குட்டையான ரகத்தில் மிகவும் குறைந்த வயது உடைய (அதாவது 80–90 நாட்கள்) ரகம் ஏதாவது இருக்கிறதா ? எங்குக் கிடைக்கும் என்று தெரிவிக்கவும் ! மேலும் வாடகை, கிரய அடிப்படையில் தவணையில் டிராக்டர் எங்குக் கிடைக்கும் ? முன் பணம் எவ்வளவு கட்டவேண்டும் ? எங்கு கட்டவேண்டும் ? என்று தெரிவிக்கவும்.

துரை, வெள்ளிப்பாளையம்,

குட்டையான தன்மையும், 80 முதல் 90 நாள் வயதும் உடைய நெல் ரகங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. ஆனால் அதற்குரிய ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டுவருகிறது.

இதுவரை வெளியிடப்பட்டுள்ள குட்டையான ரகங்களில் மிகவும் குறைந்த வயது உடையது 'பாலா' (சி.ஆர். 42 -38 -173) என்ற ரகமேயாகும். இது ஒரிசா மாநிலத்தில் 'கட்டாக்' என்ற இடத்தில் உள்ள மைய நெல் ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடித்து வெளியிடப்பட்டுள்ளது. இதன் வயது 95 நாட்கள். இதன் வயது சில இடங்களில் கால நிலைக்கேற்ப 110 நாட்களாகவும் உள்ளன. இந்த ரகம் தமிழ் நாட்டிற்கு ஏற்றதா என்பதை அறிய இது பற்றிய பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. 95 நாட்களுக்குள் வயதுடைய ரகங்களை உருவாக்க வேண்டுமென்பதற்காகத் தமிழ் நாட்டின் ஆராய்ச்சி நிலையங்களில் பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ''பாலா'' என்ற ரகம் தமிழ் நாட்டிற்கு ஏற்றதா என்பது முடிவு செய்யப்பட்ட பின்பு அவ்விதைகளை வாங்க முயற்சி செய்யுங்கள்.

வாடகைக்கு டிராக்டர் வேண்டுமானால், எத்தனை ஏக்கர் உழ வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு உங்கள் பகுதி 'உதவி வேளாண்மைப் பொறியாளர் (தணிக்கை)' அவர்களுக்கு மனுச் செய்து கொள்ளுங்கள். அவர்களிடமிருந்து முன் பணம் கட்டச் சொல்லிக் கடிதம் வந்தால், அதன்பின் அந்த அலுவலகம் சென்று முன்பணம் கட்டுங்கள். இதற்கு உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரின் உதவியை நாடுதல் நல்லது.

ஓசூர் பகுதியில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்ய ஏக்கருக்கு எவ்வளவு கடன் கொடுக்கப்படுகிறது ? யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்?

—முத்துசாமி, ஓசூர்.

தருமபுரி மாவட்டம் ஓசூர் வட்டத்தில் உருளைக் கிழங்கு சாகுபடி செய்வதற்கு ஏக்கருக்கு உருளைக்கிழங்கு விதைக்கிழங்கு வாங்குவதற்காக ரூபாய் 400, இரசாயன உரம் வாங்குவதற்காக ரூபாய் 300, பயிர்ப் பாதுகாப்புக்காக ரூபாய் 50, ஆக மொத்தம் ஏக்கருக்கு ரூபாய் 750 வீதம் கடன் கொடுக்கப்படுகிறது. இக்கடன் பெற கிருஷ்ணகிரியில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலருக்கு மனு அனுப்ப வேண்டும்.

மகளிர் பகுதி

ஆடை அலங்கார வகைகள் காலத்துக்குக் காலம் மாறி வருவது நாகரீகத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. ஆனால் நாம் உண்ணும் உணவு வகைகள் ஆடை நாகரீகம் போன்று அடியோடு மாறுவது கிடையாது. ஆனால், சுவைக்கு ஏற்பக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கொள்கிறோம்.

உணவு வகைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால் சத்துள்ள உணவுப் பொருள்களை உட்கொள்ள வேண்டும். சமையல் முறைகளை ஆரோக்கியத்துக்கு ஏற்றவகையில்அமைக்க வேண்டும். அந்தக் கருத்துக்கு ஏற்பவே இங்கு உணவு வகைகளைச் செய்யும் முறைகள் விவரிக்கப்படுகின்றன.

இடையே இரண்டு இதழ்களில் இந்தப் பகுதி இடம் பெறவில்லை என்று எழுதியுள்ளார்கள். இனிமேல் இப்பகுதி தொடர்ந்து வெளிவரும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

பயத்தம்பருப்பு கிச்சடி

பயத்தம்பருப்பு கிச்சடி தென் மாநிலங்களில் அதிக அளவில் வழக்கில் இல்லை. குஜராத், மராட்டியம் போன்ற மாநிலங்களில்தான் வழக்கில் உள்ளது.

எட்டுப் பேர்களுக்குத் தேவையான பயத்தம்பருப்புக் கிச்சடிக்குத் தேவையான பொருள்கள் விவரம்—

புலவு அரிசி—450 கிராம்.

பயத்தம் பருப்பு—225 கிராம்.

இலவங்கப்பட்டை—1 சின்னத் துண்டு.

கிராம்பு, ஜாதிக்காய்—6.

நெய்—55 கிராம்.

வெங்காயம்—115 கிராம்.

மஞ்சள்பொடி—1 சிட்டிகை.

உப்பு—10 கிராம்.

செய்யும் முறை :

அரிசியைக் கழுவி 15 நிமிடங்கள் வரை ஊற வைக்கவும்.

பருப்பை ½ மணி நேரம் ஊற வைக்கவும்.

நெய்யைச் சூடாக்கிப் பருப்பைப் போடவும்.

அரிசி, மற்றுமுள்ள பொருள்கள், உப்பு முதலியவற்றுடன் இரண்டு மடங்கு தண்ணீரை நன்றாகக் கலந்து அரிசி வேகும் வரை வேகவைக்கவும். தண்ணீர் அதிகமாக இருந்தால் வடிகட்டிக் கொள்ளவும்.

முழுவதுமாக வெங்காயத்தை நறுக்கிப் போடவும். பின்னர் சாப்பிடவும்.

சாலட்

சாலட் செய்வது மிகவுப் சுலபமானது.

தேவையான பொருள்கள்:—

கேரட்—225 கிராம்.

வெள்ளரிக்காய்—115 கிராம்.

தக்காளி—115 கிராம்.

சிவப்பு முள்ளங்கி—30 கிராம்.

பச்சடிகீரை—1 கொத்து.

செய்யும் முறை :

கேரட்டைக் கழுவிச் சீவிக் கொள்ளவும்,

வெள்ளரிக்காயைத் தோலை சீவி நறுக்கிக் கொள்ளவும் தக்காளியை வெட்டிக் கொள்ள வும். சிவப்பு முள்ளங்கியை நறுக்கிக் கொள்ளவும். இவை களைச் சேர்த்து தேவைக்கு ஏற்ப உப்பையும் கலந்து கொண்டால் சாலட் சுவையாக இருக்கும்.

மேலே குறிப்பிட்ட அளவில் செய்தால் நான்கு பேர்கள் தாரா ளமாகச் சாப்பிடலாம்.

மிஸ்ஸி ரொட்டி

இந்த உணவு வகை வட இந்திய உணவாகும். நான்கு பேர்களுக்கு மிஸ்ஸி ரொட்டி செய்யத் தேவையான அளவுகள் விவரம் :

நவதானியம்—200 கிராம்.
கடலைமாவு—200 கிராம்.
பசலைக்கீரை—100 கிராம்.
வெங்காயம்—100 கிராம்.
தண்ணீர்—200 கிராம்.
(ஏறக்குறைய)
உப்பு—5 கிராம்.
எண்ணெய்—100 கிராம்.

செய்யும் முறை :

நவதானியங்களையும் கடலை மாவையும் முதலில் நன்றாகச் சலித்துக் கொள்ளவும்.

பசலைக்கீரையை நன்றாகக் கழுவி, தண்ணீர்போக நறுக்கிக் கொள்ளவும்.

வெங்காயத்தைத் தோல் உரித்து நறுக்கிக் கொள்ளவும். நறுக்கிய பொருள்களைச் சலித்த பொருள்களுடன் சேர்த்துக் கொள்ளவும். உப்பையும் தண்ணீரையும் கலந்து மாவையும் பிசைந்து கொள்ளவும்.

மாவை ஒரே அளவுள்ள உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்.

ரொட்டி மாதிரி இட்டு நெய்யைக் கலந்துகொண்டு கொஞ்சம் மாவைத் தூவிக்கொண்டு இரண்டாக மடித்து மீண்டும் ரொட்டி மாதிரி இடவேண்டும்.

தோசைக் கல்லில் கொஞ்சம் நெய்யைத் தடவிச் சுடலாம்.

சுட்டவுடன் சூடாக எடுத்துச் சாப்பிட்டால் சுவை மிகுதியாக இருக்கும்.

சுக்காப்பருப்பு

இதுவும் வடக்கே வழங்கும் உணவு முறைதான்.

தேவையான பொருள்கள்:—

உளுத்தம் பருப்பு 225 கிராம்.
பூண்டு—சில.
பச்சை மிளகாய்—5 கிராம்.
மஞ்சள்பொடி—1 சிட்டிகை.
சீரகப்பொடி—1 சிட்டிகை.
உப்பு—சுவைக்கு ஏற்ற அளவு.
எண்ணெய்—15 கிராம்.

செய்யும் முறை :

பருப்பை இரண்டு மணி நேரம் ஊறவைத்துத் தண்ணீரை வடிகட்டவும்.

எண்ணெய்யைச் சூடாக்கி நறுக்கிய பூண்டு, பச்சைமிளகாய், மஞ்சள் பொடி, சீரகப்பொடியைச் சேர்க்கவும். நன்றாகக் கிளறி விடவும்.

பருப்பைப் போட்டு 5-லிருந்து 10 நிமிடங்கள்வரை வேகவைக்கவும். கொஞ்சம் தண்ணீரை ஊற்றிப் பாத்திரத்தை மூடி, மெதுவான சூட்டில் வேக வைக்கவும். அவ்வப்போது கிளறி விடவும்.

பருப்பு வெந்தவுடன் உப்புப் போட்டு நன்றாகக் கலக்கிக் கொள்ளவும். பின்னர் அடுப்பிலிருந்து இறக்கிக் கொள்ளவும்.

சூடாகச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும். மேலே சொன்ன அளவில் செய்தால் நான்கு பேர் சாப்பிடலாம்.

—அஞ்சரு

அஜாக்ஸ் உப்புத்தாள்கள்

- தரத்தில் சிறந்தவை
- பொருள்களைச் சுலபமாக மழமழப்பாக்குகின்றன
- ஒரு சிறுதுண்டு பல நாட்களுக்கு நீடித்துவரும்

நல்ல வேலை செய்து அதிக லாபம் காண
அஜாக்ஸ் உப்புத்தாள்கள் உபயோகியுங்கள்

கார்போரண்டம் யுனிவர்சல் லிமிடெட்,
சென்னை - கல்கத்தா - பம்பாய் - புது டில்லி.

கைத்தறியைக் காப்போம்!

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் மிகத் தொன்மையான மாபெரும் குடிசைத் தொழிலாகும். இங்கு சுமார் 5·50 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. (இது இந்தியாவில் உள்ள கைத்தறிகளின் எண்ணிக்கையில் 26 சதவீதத்திற்குச் சற்றுக் கூடுதலாகும்). ஏறத்தாழ 20 லட்சம் மக்கள் இத்தொழிலை நம்பியுள்ளனர். ஆண்டொன்றிற்கு ரூ. 48 கோடி மதிப்புள்ள சுமார் 39 கோடி கஜம் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புள்ளது. இத்தொழில் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

இத்தொழிலின் சீரிய மேம்பாட்டிலும் அதில் ஈடுபட்டுள்ள மக்களின் நலனிலும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருகின்றது. மூலப் பொருள்கள், நிதி, விற்பனை வசதிகள் ஆகியவற்றைப் பெற்றுத் தருவதற்கான தகுந்த நிறுவன முகவர்களாகச் செயலாற்றும் கூட்டுறவுகள் மூலம் அரசு உதவி பெரும்பாலும் அளிக்கப் படுகின்றது. இத்தொழிலின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்கள் தமிழ்நாடு அரசால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்தில் கைத்தறி வளர்ச்சிக்காக நிறைவேற்றப் பட்டுவரும் பல்வேறு திட்டங்களில் "விற்பனையும் விளம்பரமும்" என்ற திட்டம் மிக முக்கியமானதாகும். இத்திட்டத்தின் கீழ் மொத்த விற்பனை நிலையங்களையும், சில்லறை விற்பனை நிலையங்களையும் நிறுவவும், நாட்காட்டிகள் அச்சிடவும், காகிதப் பைகள் அச்சிடவும், செய்தித் தாள்களில் விளம்பரம் வெளியிடவும், திரை அரங்கில் விளம்பரம் செய்யவும் (Slides) பொருட்காட்சிகளில் பங்கு கொள்ளுதல் முதலிய பல்வேறு வகை விளம்பரங்களுக்காகவும் பிரதம கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் அரசு நிதி உதவி அளித்து வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் 1970-71ம் ஆண்டில் ரூ. 5·39 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் கைத்தறி ஆடைகளின் மேம்பாட்டை விளக்க நகரங்களிலும், கிராமங்களிலும் திரையிடப்படுவதற்காக ஒரு திரைப் படம் தயாரிக்க மாநில நெசவாளர் சங்கத்திற்கு 1·70 இலட்சம் ரூபாய் மான்யமாக ஒதுக்கப்பட்டு ரூ. 29,500 செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் விற்பனை நிலையங்களை விரிவு படுத்துவதற்காகவும், விளம்பரக் காட்சி அறை ஏற்படுத்தவும் இந்தச் சங்கத்திற்கு ரூ. 20,000 மான்யம் வழங்கப் பட்டுள்ளது.

ஆராய்ச்சியும், தொழில் நுட்பமும் பயிற்சியும்

ஆலைத்துணியின் போட்டிக்கு கைத்தறித் துணி ஈடு கொடுக்க வேண்டுமாயின், கைத்தறித் துணியின் உற்பத்தியின் அடிமட்டத்திலே தீவிர மாற்றங்கள் ஆய்வுடன் செய்யப்பட வேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு பலவித முன்னேற்றம் தரத்தக்க நல்ல மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. கைத்தறித் துணிகளின் தரத்தில் மட்டுமின்றி, தோற்றத்திலும் கண்டோர் வியப்புறும் வண்ணம், புதிய இரகங்களையும், வண்ணங்களையும் கைத்தறித் துணிகளுக்குத் தரும்பொருட்டு, நூதனமான தறிக் கருவிகள் கொடுப்பதற்கும், சாயக்கூடங்கள் அமைப்பதற்கும் அரசு, மானியமாகவும், கடனாகவும் ஏறத்தாழ ரூ. 6·62 இலட்சம் வரை கடந்த ஆண்டில் (1970-71ல்) கைத்தறி நெசவாளர்கட்கு வழங்கியுள்ளது.

மக்களுக்குக் கவர்ச்சிகரமான இரகங்களில் கைத்தறித் துணி கொடுப்பது என்ற உயர் நோக்குடனும், நெசவுத் துறையில் புதிய மறு மலர்ச்சியைக்கொண்டு வரும் ஆர்வத்துடனும் தமிழகத்தில் சென்னை, நீலகிரி ஆகிய இரு மாவட்டங்கள் நீங்கலாக 12 மாவட்டங்களில் 12 பயிற்சி நிலையங்களை நிறுவி, கைத்தறி நெசவாளர்கட்குப் புதிய இரகங்களை உருவாக்குவதிலும், எழில்மிகு வண்ண மாற்றங்கள் செய்வதிலும் நுண் கருவிகள் இயக்குவதிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஓராண்டில் 2,160 நெசவாளர்கள் பயிற்சி பெறுவார்கள். பயிற்சிக் காலத்தில் நெசவாளர்கட்கு மாதம் ரூபாய் 100 வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற நெசவாளர்கள், அத்தகைய பயிற்சியின் பயனாய் வியத்தகு மாற்றங்களைக் கைத்தறித் துணியில் கொண்டு வருவதன் மூலம் அவர்கள் அங்கத்தினராயுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைக்கு ஏற்றம் அளித்தவராகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய நூதனக் கருவிகள் மான்யமாகவும், கடனாகவும் வழங்கப்படுகிறது. பயிற்சி அளிக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பயிற்சிக்கூடம் கட்ட ரூ. 5,000 வரை மானியம் அளிக்கப்படுகிறது. நெசவாளர்கட்கு, பயிற்சியளிக்கும் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு ரூ. 3·90 இலட்சம் வரை அரசு நிதி உதவியுள்ளது.

நடைமுறையில் பல புதிய மாற்றங்களுடன் இன்று கைத்தறித் துணி ஆலைத்துணியினுக்கு ஈடாக விளங்குகிறது எனில் அது அரசு கைத்தறித் தொழிலின் வளர்ச்சியில் கொண்டுள்ள ஆர்வம் என்பது மட்டுமின்றி நெசவாளர்களின் வாழ்வுத்தர உயர்வினிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்பதன் அடிப்படை நல்லெண்ணமே என்றால் மிகையாகாது.

சிகிச்சையின்றித் திரும்பிச் செல்லோம்!

உலகம் முழுமையிலும் மக்கள் தொகை பல்கிப் பெருகி வருவதையும், சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியாவில் மக்கள் தொகைப் பெருக்கம் மிகப் பெரிய அளவில் இருந்து வருகிறது என்பதையும் அனைவரும் அறிவர். மிகுந்த தொலை நோக்குடன் குடும்பநலத்திட்டத்தைத் தேசீயத் திட்டமாக இந்திய அரசும், தமிழ் நாடு அரசும் செயல்படுத்தி வருகின்றன.

குடும்ப நலத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் தலைசிறந்து விளங்குகிறது. குடும்பநலத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்தியதற்காக 1961-62, 1962-63, 1965-66 1966-67 ஆகிய ஆண்டுகளில் இந்திய தேசீய விருதைத் தமிழகம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

1956-ம் ஆண்டு குடும்பநலத் திட்டம் தமிழகத்தில் செயல்படத் தொடங்கிய நாள்முதல் 8,87,321 தந்தைமார்கள் ஆண் அறுவை (வாசக்டமி) சிகிச்சையும், 81,821 தாய்மார்கள் பெண் அறுவைச் (டூபக்டமி) சிகிச்சையும் செய்து கொண்டுள்ளார்கள். மொத்தத்தில் இங்கு 1971 ஜனவரி முடியக் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளோர் 9,69,142 பேர் ஆவார்கள். இது தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 2·4 சதவிகிதமாகும். தமிழகக் குடும்பநலத் திட்ட வரலாற்றில் இப்போது காணப்படும் ஒரு முக்கிய அம்சம், '' அறுவைச் சிகிச்சை '' யில் தாய்மார்களின் ஆர்வம் அதிகமாகிக்கொண்டு வருவதாகும்.

தாய்மார்களுக்கான அறுவைச் சிகிச்சை இரண்டு முறைகளில் செய்யப்படுகிறது. ஒன்று வயிற்றின் வழியே செய்யப்படுகிறது. இது குழந்தை பிறந்த பின் இரண்டு மூன்று நாட்களில் செய்யப்படும். இப்படி அறுவைச் சிகிச்சை செய்யும் தாய்மார்களுக்கு வயிற்றில் தழும்பு ஏற்படுகிறது. இதைத் தவிர கர்ப்பம் தரிக்காத நாட்களிலும் இதே அறுவைச் சிகிச்சை '' பிறப்பு வாய் வழி '' யாகச் செய்யப்படுகிறது. ''பிறப்புவாய் வழி '' தழும்பு ஏதும் ஏற்படுவதில்லை. எனவே, தாய்மார்கள் வயிற்றின் வழியாக அறுவைச் சிகிச்சை செய்வதைவிட, 'பிறப்பு வாய் வழி' யாகச் சிகிச்சை செய்வதைப் பெரிதும் விரும்புகிறார்கள்.

தாய்மார்களுக்குப் ' பிறப்பு வாய் வழி ' புதிதாகச் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை, சுருக்கமாக ' டி.வி.டி. (Trans Vaginal Tubectomy) என அழைக்கப்படுகிறது. இந்த அறுவைச் சிகிச்சை செய்தபின் ஆறு அல்லது ஏழு நாட்கள் மருத்துவமனையிலேயே வைத்திருந்து ஊசி போட்டு, மருந்து கொடுத்து நல்ல சிகிச்சைக்குப் பின், உடல்நிலை இயல்பான நிலை அடைந்தபின், மிகுந்த நலத்துடன் தாய்மார்கள் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். பொதுவாக இந்த அறுவைச் சிகிச்சைக்குத் தாய்மார்களிடையே பேராதரவு இருந்து வருகிறது.

பிறப்பு வாய் வழி செய்யப்படும் இந்த அறுவைச் சிகிச்சை முதன் முதலாக மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் செய்யப்பட்டு, காந்தி கிராமத்துக்கு எட்டி மதுரை மாவட்டம் முழுமையிலும் பரவியது.

மதுரை மாவட்டம் காந்தி கிராமத்திலும் அரசினர் எர்ஸ்கின். மருத்துவமனையிலும் நாள் தோறும் இரண்டு அல்லது மூன்று அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுவதற்கான வாய்ப்பு, வசதியைப் பெரும்பாலான தாய்மார்களுக்கு அளிப்பதற்காக முதன் முதலாக பழனி அரசினர் மருத்துவமனையில் 13—8—1970 அன்று ' பெண் அறுவைச் சிகிச்சை ' முகாம் நடத்தப்பட்டு, அந்த ஒரே நாளில் 23 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ப்பட்டது. தமிழகம் முழுமையிலும் இந்த ''டி.வி.டி.'' அறுவைச் சிகிச்சையை மக்கள் ஏற்கும் வகையில் பரப்ப அங்கங்கே '' அறுவைச் சிகிச்சை'' முகாம்கள் நடத்தப்பட்டு, குறுகிய காலத்தில் பெருவாரியான தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இப்படி நடத்தப்படும் முகாம்களில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு முப்பது ரூபாயை அரசு ஈட்டுத் தொகையாக அளிக்கிறது. தாய்மார்களை அறுவைச் சிகிச்சைக்கு அழைத்து வருவோருக்கு ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கும் பத்து ரூபாய் வீதம் தரப்படுகிறது.

1970 செப்டம்பர் மாதம் 22,23 தேதிகளில் கோயமுத்தூர் தலைமை மருத்துவமனையிலும் 28, 29 தேதிகளில் சேலம் தலைமை மருத்துவமனையிலும் இந்த முகாம்கள் நடத்தப்பட்டு முறையே 76 தாய்மார்களுக்கும், 48 தாய்மார்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. 1970 நவம்பர் 28, 29 தேதிகளில் விருதுநகர் அரசினர் மருத்துவமனையில் இந்த முகாம் நடத்தப்பட்டு 64 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

கடலூர் தலைமை மருத்துவமனை சேலம் தலைமை மருத்துவமனை, தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவமனை, காஞ்சீபுரம் தலைமை மருத்துவமனை ஆகிய இடங்களில் 1970 டிசம்பர் மாதத்தில் 169 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. 1971 ஜனவரி மாதத்தில் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலும், திருச்சி தலைமை மருத்துவ மனையிலும், வேலூர் தலைமை மருத்துவ மனையிலும், இராமநாதபுரம் தலைமை மருத்துவ மனையிலும் 'பெண் அறுவைச் சிகிச்சை முகாம்கள் ' நடத்தப்பட்டு 475 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. நாகர்கோயில் மருத்துவமனையில் பிப்ரவரி 5, 6, 7 ஆகிய தேதிகளில் நடத்திய முகாமில் 20 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இந்த முகாம்களில் மிகச் சிறப்பாக அமைந்தது வேலூரில் நடைபெற்ற பெண் அறுவைச் சிகிச்சை முகாமாகும். 1971 ஜனவரி மாதம் 29லிருந்து நான்கு நாட்கள் நடத்தப்பட்ட இந்த முகாமின் போது அப்பகுதித் தாய்மார்கள் காட்டிய ஆர்வம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

' பிறப்பு உறுப்பு வழி ' அறுவைச் சிகிச்சை வேலூர் முகாமில் செய்யப்படுகிறது எனக் கேள்விப்பட்டுப் பெருவாரியான தாய்மார்கள் வந்தார்கள். 232 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

வேலூர் பெண்ட்லண்டு மருத்துவமனையில் 374 படுக்கைகளே உள்ளன. 114 படுக்கைகளே குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டோருக்கென ஒதுக்கப்பட்டவை.

இரண்டாவது முறையாக பிப்ரவரி 20, 21 தேதிகளில் அறுவைச் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டபோது இடமின்மையால் 11 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய முடியாது போயிற்று. ஆனால் அந்த 11 தாய்மார்களும் ' அறுவைச் சிகிச்சை ' செய்துகொள்ளாமல் வீடு திரும்ப மறுத்துவிட்டார்கள். இந்தச் செய்தி இத்திட்டத்திற்குக் கிடைத்த பெரு வெற்றியாகும். தாய்மார்கள் ' அறுவைச் சிகிச்சை செய்தால்தான் வீடு திரும்புவோம் ' எனச் சொல்லக் கூடிய அளவுக்கு அவர்களது ஊக்கமும் உற்சாகமும் வளர்ந்திருப்பது திட்டத்திற்கு ஆக்கமூட்டுவதாக அமைந்துள்ளது. எனவே, அந்த 11 தாய்மார்களும் சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்கள். ராஜாசர். ராமசாமி முதலியார் பெண்கள் மருத்துவமனையில் அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இந்த '' அறுவைச் சிகிச்சை '' தாய்மார்களிடையே மிகுதியாகப் பரவி வருகிறது. இந்தச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் சாதாரணமாக ஒரு வார காலம் மருத்துவமனையில் தங்க வேண்டியுள்ளது. அதற்குப் படுக்கை வசதிகள் தேவை. ஆண்டொன்றுக்கு 600 பெண் அறுவைச் சிகிச்சை செய்யும் பெரிய மருத்துவமனைகளில் 20 படுக்கை வசதி கொண்ட டூபக்டமி வார்டுகள் அமைத்துக் கொள்ள, குடும்பநல நிதியிலிருந்து மத்திய அரசு பணம் ஒதுக்கியுள்ளது. 20 படுக்கை வசதி கொண்ட வார்டு ஒவ்வொன்றும் (ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் செலவில்) கட்டப்படும். படுக்கைகள், போர்வைகள், பாய்கள் போன்றவற்றிற்காக ரூ. 40,000 செலவிடப்படும். குடும்பநலத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்நாடு அரசு முதலில் சேலம் தலைமை மருத்துவமனை, நாகர்கோயில் தலைமை மருத்துவமனை, சென்னை கஸ்தூரிபா காந்தி பெண்கள்—குழந்தைகளுக்கான மருத்துவமனை, எழும்பூர் பெண்கள்—குழந்தைகளுக்கான மருத்துவமனை, மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை, ஆகிய 5 மருத்துவமனைகளில் 20 படுக்கை வசதி கொண்ட ' அறுவைச் சிகிச்சைப் பகுதிகள் ' (டூபக்டமி வார்டு) கட்ட ஆணை பிறப்பித்தது. அதன்பின் சென்னை ராஜா சர். ராமசாமி முதலியார் மருத்துவமனை, தஞ்சாவூர் ராஜாமிராசுதார் மருத்துவமனை, பாளையங்கோட்டையிலுள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றிலும் ' டூபக்டமி வார்டுகள் ' கட்ட ஆணை பிறப்பித்துள்ளது.

மொத்தத்தில், குடும்பநல இயக்கம் பல்வேறு அம்சங்களிலும் தமிழகத்தில் வெற்றி நடைபோட்டுவருகின்றது.

பிற்பட்டோர் முன்னேறப் பெருகிவரும் சலுகை

பிற்பட்டோர் நலம் பேணத் தனித்துறை—தனி அமைச்சர் ஏற்படுத்தியது இன்றைய அரசு.

தற்போது பிற்பட்டோருக்குப் புதிய சலுகையாக அரசுப் பணிகளிலும், கல்லூரியிலும் கூடுதல் இடம் ஒதுக்கிடத் தமிழ் நாடு அரசு அமைச்சரவை சமீபத்திய கூட்டத்தில் முடிவு செய்துள்ளது.

இதுவரை அரசு அலுவலகங்களிலும், கல்லூரிகளிலும் பிற்பட்டவர்களுக்கு 25 சதவீத இடங்களும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சதவீத இடங்களும் இதுவரை ஒதுக்கப்பட்டுவந்தன. இனி பிற்பட்டோருக்கு 31 சதவீதமும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதமாகவும் உயர்த்தப்படும்.

அரசின் அன்பிற்கும் கருணைக்கும் இலக்காக விளங்கும் இந்தப் பிற்பட்டோர் யார்? தாழ்த்தப்பட்டோர் எவர்?

சமுதாயத்தில் பெரும் பகுதி இவர்கள்தாம். கல்வியால், பணிகளால், பொருளாதாரத்தால், சமுதாயப் பழக்க வழக்கங்களால், தகுதியால் சமுதாயத்தின் அடித்தளத்தில் தள்ளப்பட்டு உயர்ந்த நிலையை அடைய முடியாமல் தத்தளிப்பவர்கள், இவர்கள். எனவேதான் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணவிரும்பும் இந்த அரசு, இவர்களின் வாழ்வினை வளமுடையதாக மாற்றிட முனைந்து செயல் படுவது இயற்கை தானே! விரைவில் தமிழகத்தில் பிற்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் என எந்த மக்களும் இருக்கக் கூடாது என்பதே இந்த அரசின் கொள்கை—சித்தாந்தம்.

கிராமப்புறங்களுக்கு மின் வசதி அளிப்பதில் தமிழ் நாடு இன்று எல்லா மாநிலங்களையும் விட முன்னணியில் நிற்கிறது. மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்கள் தமிழ்நாட்டில்தான் அதிகம் உள்ளனர். பாசனங்களுக்கு மின் சக்தியைப் பயன்படுத்துதலிலும் தமிழ் நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது.

மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியில் பெரும் அளவு நகர்ப்புறங்களில் தொழில் வளர்ச்சிக்கும், கிராமப்புறங்களில் விவசாயத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ் நாட்டில் மூலை முடுக்குகளிலெல்லாம் சங்கிலித் தொடர்போல் மின்சாரத்தைக் கொண்டு சென்று விநியோகம் செய்கின்ற பணி உருவாக்கப்பட்டுச்செயல் வடிவம் பெற்றுள்ளது. இதனுல் மின்சார சக்தியானது தொழிற்சாலைகளுக்கு 50 சதவிகிதமும், விவசாயத்திற்கு 25 சதவிகிதமும் மிச்சமிருக்கின்ற மின் சக்தியானது வியாபார நிறுவனங்களுக்கும், வீட்டுக் காரியங்களுக்கும் வழங்கப் பெறுகிறது. ஏறக்குறைய 19 இலட்சம் பயனீட்டாளர்கள் மின்சாரத்திஞல் பயன்பெறுகிருர்கள். இதில் 75 சதவிகிதம் பேருக்கு வாரியம் நேரடியாக மின்சாரம் வழங்குகளுக்குச் சிறப்பான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. முதல் திட்டத் துவக்கத்தில் மூன்று நீர் மின்சாரத் திட்டங்களும் இரண்டு அனல் மின்சார நிலையங்களுமே தமிழ் நாட்டில் இருந்தன. இதன் மொத்த நிறுவப்பட்ட திறன் 156 மெகா வாட்டுகள் தான். முதல் திட்டக் காலத்தில் இது 256 மெகா வாட்டாக உயர்ந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் நிறுவப்பட்ட திறனுனது இரு மடங்காகப் பெருகி 571 மெகா வாட்டுக்கு உயர்ந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் ஒரு விஷயம் நமக்குத் தெளிவாகப் புலனுகியது. பொதுவாகவே மின் சக்தி உற்பத்திக் குறைவாக உள்ள நிலை அத்துடன் மழை மிகக் குறைவாக உள்ள காலங்களில் நீர் மின்சாரத் திட்டங்களினுல் அதிக அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாத ஒரு நிலையை நாம் சமாளிக்க வேண்டி வந்தது. இந்தக் குறைபாட்டைப் போக்கவும், ஏற்றத் தாழ்வினை நீக்கவும், நீர்மின் நிலையங்களையும், அத்துடன் அனல் மின் நிலையங்களையும் அமைக்கத் திட்டமிட்டு அவை செயல்படுத்தப்பட்டன. இதன்விளைவாக மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நல்லதொரு சூழ்நிலை மின்சார உற்பத்தியைப் பொறுத்த மட்டில் தமிழ் நாட்டில்

கிறது. எஞ்சியுள்ளவர்களுக்கு ஐந்து நகராட்சி நிறுவனங்களாலும் 7 தனிப்பட்ட உரிமைதாரர்களாலும் மின்சாரம் வழங்கப்படுகிறது,

1908-ஆம் ஆண்டு வரை தமிழ் நாட்டில் மின்சாரம் நீலகிரி மலைச்சாரலில் உள்ள காட்டேரியிலும் மற்றும் சில தேயிலைத் தோட்டங்களிலுமே சிறு சிறு மின் நிலையங்கள் மூலம் செய்யப்பட்டு வந்தது. 1927-ல் அரசின் சார்பில் மின்சாரத் துறை அமைக்கப்பட்டது. 1929-ல் பைகாரா நீர் மின்சாரத்திட்ட வேலைகள் துவங்கப்பட்டன. இதுதான் மாநிலத்தின் மின்சக்தி வளர்ச்சிக்காகத் துவங்கப்பட்ட பணிகளில் முதலாவதாகும். இதற்குப் பிறகு மாநிலத்தில் மின் சக்தியை உற்பத்தி செய்து பயன்படுத்துவதில் வியக்கத்தக்க முன்னேற்றத்தினை நாம் அடைந்துள்ளோம்.

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மின்சார வளர்ச்சி

விவசாய வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரம் இன்றியமையாத ஒன்ருனபடியால், ஐந்தாண்டுத் திட்டங்களில் மின்சார உற்பத்திப் பணி உருவாகியது. இக்காலத்தில் குந்தாவில் ஆறு மின் உற்பத்திப் பிரிவுகளும், மேட்டூர் சுரங்க நீர்த் திட்டத்தில் நான்கு பிரிவுகளும், பெரியாறு மின் நிலயத்தில் ஒரு பிரிவும் (நான்காவது பிரிவு) பரம்பிக்குளம் -ஆளியாறு திட்டத்தில் சர்க்கார் பதியில் ஒரு பிரிவும் துவங்கப்பட்டன. அத்துடன் 340 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் எண்ணூர் அனல் மின்சார நிலைய வேலையும் சென்னை பேசின்பிரிட்ஜில் கூடுதலாக 30 மெகா வாட் உற்பத்திப் பிரிவு வேலையும் துவக்கப்பட்டன. ஆக மாநிலத்தில் நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் (நெய்வேலி அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் 300 மெகாவாட் அல்லாமல்) 1,070 மெகாவாட்டாக உயர்ந்தது.

இன்றைய நிலை

மாநிலத்தில் தற்பொழுது 15 நீர் மின்சார நிலையங்கள் உள்ளன. இவற்றின் மொத்த நிறுவப்பட்ட திறன் 1,114 மெகாவாட்டாகும். அத்துடன் பேசின்பிரிட்ஜ், மதுரை, எண்ணூர் ஆகிய இடங்களில் மூன்று அனல் மின்சார நிலையங்கள் உள்ளன. இவற்றின் மொத்தத் திறன் 251 மெகா

வாட்டாகும். இவை தவிர, நிலக்கரியைப் பயன்படுத்தி நெய்வேலியில் அனல் மின் நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தித் திறன் 600 மெகா வாட்டாகும். ஆக, தமிழ் நாடு மின் இணைப்பின் மொத்த நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் (நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படும் 600 மெகாவாட்டையும் சேர்த்து) 1965 மெகாவாட்டாகும். நீர் மின்சார நிலையங்களில் மேட்டூர், பெரியாறு, பாபநாசம், சோலையாறு, சர்க்கார் பதி ஆகிற ஐந்து மின் நிலையங்களும் 463 மெகா வாட் நிறுவப்பட்ட திறன் உடையவை. இவை நீர்ப்பாசனத்துடன் இணைக்கப்பட்டு உள்ளவை. ஆகவே நீர்ப்பாசனம் அல்லாத காலங்களுக்கு இவை உற்பத்திக்குப் பயன்படுவதில்லை. மிச்சமுள்ள ஒன்பது நீர் மின்சார நிலையங்களும் முழுக்க முழுக்க மின்சக்தி உற்பத்தி செய்யும் நிலையங்களேயாகும். கீழ்க்கண்ட நிலையங்களில் பணிகள் வெகு வேகமாக நடைபெற்று வருகின்றன:—

1 பரம்பிக்குளம்-ஆளியாறு நீர்மின்சாரத் திட்டத் கீழ் சோலையாறு மின் சக்தி நிலையம்.	70 மெகாவாட்
2 கோதையாறு நீர் மின் சாரத் திட்டம் மின் உற்பத்தி நிலையம்.	40 மெகாவாட்
3 எண்ணூர் அனல் மின் சாரத் திட்டம் மூன்றுவது 4-வது பிரிவுகள்.	220 மெகாவாட்

எண்ணூர் அனல் மின்சாரத் திட்டத்தில் (4-வது பிரிவு தவிர) இந்த மின் உற்ப்பத்தித் திட்ட வேலைகள் 1971-72-க்குள் முடிவடைந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் மாநிலத்தில் நிறுவப்பட்ட மின் சக்தித் திறன் 330 மெகாவாட்டாக உயரும்.

நெசவாளர் நகர்

நெசவாளர்களின் சமூக, பொருளாதார நிலைகளை மேம்படுத்த தமிழ் நாடு அரசு சில சிறப்பான திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்குத் தொழில்கூடம் இணைந்த வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது. இதற்கு அரசு ஒரு வீடு ஒன்றிற்கு ரூ. 2,000 கடனாகவும் ரூ. 1,250 மானியமாகவும் கொடுத்துதவியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ. 127·65 இலட்சம் செலவிட்டு 2,683 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. நான்காவது திட்டக் காலத்தில் மேலும் 500 வீடுகள் கட்டிக் கொடுக்க ரூ. 27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்களில் மின்சக்தி வளர்ச்சி

மேற்குறிப்பிட்ட மின் உற்பத்தித் திட்டப் பணிகள் நிறைவுபெறுவதினால் நெய்வேலித் திட்டத்தையும் சேர்த்து 1971-72 முதல் தமிழ் நாட்டில் உற்பத்தித் திறன், பாசனம் இல்லாத காலங்களில் 1,367 மெகாவாட்டாக உயரும். ஆனால் 1971-72-ல் 1,719 மெகாவாட்டாகவும் மின்சாரத்தின் தேவையானது உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே உற்பத்தித் திறனுக்கும், எதிர்பார்க்கப்படுகிற தேவைக்கும் இடையே ஒரு பெருத்த இடைவெளி ஏற்படுகிறது. நான்காவது திட்டத்தில் புதுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டாலொழிய 1971-72ல் பற்றாக்குறையாக உள்ள 352 மெகாவாட் 1973-74-ல் 906 மெகாவாட்டாக உயர்ந்துவிடும். நான்காவது திட்டக் காலமுடிவில் இந்தப்பற்றாக்குறை இன்னும் அதிகமாகிவிடும். அநேகமாக நான்காவது திட்டக் கால ஆரம்பத்தில் கல்பாக்கம் அணு சக்தி நிலையம் முடிக்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் 200 மெகா வாட் திறன் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இந்தப் பற்றாக்குறையைப் போக்கலாம். அண்டை மாநிலங்களான கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களிலிருந்து இப்பொழுது உபரியான மின் சக்தி கிடைக்கப் பெற்றாலும் நான்காவது திட்டக்காலத்தில் அந்த மாநிலங்களில் வேகமாக ஏற்படுகின்ற வளர்ச்சிப் பணிகள் காரணமாக இந்த உபரியாகக் கிடைக்கின்ற மின்சக்தியை நம்பி இருப்பது உசிதமானதல்ல. அத்துடன் ஒரு திட்டத்திற்கு அனுமதியளிக்கப்பட்டு அந்தத் திட்டம் நிறைவு பெறுவதற்கிடையே நீண்ட கால இடைவெளி உள்ளது. ஆகவே நான்காவது திட்ட இறுதியில் எதிர்பார்க்கப்படுகிற அதிகப்படியான பற்றாக் குறையைச் சரிக்கட்ட, நான்காவது திட்டத்திலேயே தமிழ் நாட்டில் மேலும் கூடுதலான மின்சக்தித் திட்டங்களை உருவாக்குதல் மிகவும் அவசியமாகும். மாநிலத்தில் நீர் மின்சாரத்தைத் தோற்றுவிக்கின்ற கூறுகள் குறைவாக உள்ளதால் பெரிய அளவில் அனல் மின்சார நிலையங்களையோ அணுச் சக்தி நிலையங்களையோ எதிர்பார்க்கப்படுகின்ற பற்றாக் குறையைச் சமாளிக்கப் பெரிய அளவில் உருவாக்குவது மிக மிக அவசியமாகும். அப்படியே செய்தாலும், உற்பத்தி செய்கின்ற முழுமையான செலவினத்தைக் குறைப்பதற்காகவும் அன்றாட உச்ச மின் சுமையைச் சமாளிப்பதற்கும், நீர்மின்சார நிலையங்களைப் பெருக்குவதும் விரும்பத்தக்கதாகும். இந்த நோக்கத்தைக் கருத்தில்கொண்டு, வருகின்ற திட்டக் காலங்களில் செயல்படுத்துவதற்காக வேண்டி கீழ்க்கண்ட கூடுதல் பணிகள் துவக்கப்பட இருக்கின்றன:—

1 நீலகிரியில் பாண்டியாறு, பொன்னம்புழா (மோயார்) மின்சாரத் திட்டம் (100 மெகா வாட்)

2 குந்தா நீர் மின்சாரத் திட்டம் நான்காவது நிலை (குந்தா மின் சக்தி நிலையம் III-ல் 60 மெகாவாட் கூடுதலும், உற்பத்தி நிலையம் IV-ல் 50 மெகாவாட் கூடுதலும்)

3 நடுவட்டம் நீர்த் திருப்புத் திட்டம் (பைகாரா-மோயார் மின்சார நிலையங்களில் 60 மில்லியன் யூனிட்டுகள் கூடுதலாக உற்பத்தி செய்தல்)

4 எண்ணூர் அனல் மின்சார நிலையத்தில் ஐந்தாவது பிரிவாக 110 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்தல்.

இவற்றில் முதலில் சொல்லப்பட்டது தவிர மற்ற திட்டங்களெல்லாம் நான்காவது காலத் திட்டங்களிலேயே 1973-74-க்குள் செயல்படுத்தப்படும். இவை தவிர நான்காவது திட்டக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாவது திட்டக் காலத்தில் பணிகள் முடிவுறும்படியாகக் கீழ்க்கண்ட திட்டங்கள் துவக்கப்படவிருக்கின்றன:—

1 காட்டம்பாறை நீர் மின் சாரத் திட்டம்.	200 மெகாவாட்
2 சுருளியாறு நீர்மின்சாரத் திட்டம்.	35 மெகாவாட்
3 மேல் தாம்பிரவருணி நீர்மின்சாரத் திட்டத்தில் சேர்ந்துள்ள சேர்வலாறு மின் நிலையம்.	30 மெகாவாட்
4 குன்னூர்-கள்ளாறு மின் சாரத் திட்டம்.	50 மெகாவாட்
5 மேல் தாம்பரவருணி நீர் மின்சாரத் திட்டம் (எஞ்சியுள்ள மின் நிலையங்கள்).	165 மெகாவாட்
6 மேல் அமராவதி நீர் மின் சாரத் திட்டம்.	70 மெகர்வாட்
7 மேல் மணிமுத்தாறு நீர் மின்சாரத் திட்டம்.	90 மெகாவாட்
8 கீழ்க்காவேரி நீர் மின் சாரத் திட்டம்.	200 மெகாவாட்
9 கீழ் மொய்யாறு நீர் மின் சாரத் திட்டம்.	70 மெகாவாட்
10 பரணையாறு நீர்மின்சாரத் திட்டம்.	35 மெகாவாட்
11 சோழாட்டிப் புழா நீர் மின்சாரத் திட்டம் (இரு மாநிலங்களும் சேர்ந்த திட்டம்).	30 மெகாவாட்
12 மேல் காவேரி நீர் மின் சாரத் திட்டம் (தமிழ் நாட்டில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள்).	250 மெகாவாட்

இந்தத் திட்டங்களெல்லாம் செய்து முடிக்கப்பட்டாலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 1,300 மெகாவாட் அளவு பற்றாக் குறையாகவே இருக்கும். இந்தப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமானால் கல்பாக்கம் அணுமின்சக்தி நிலையத்தின் 200 மெகா வாட்டை 400 மெகா வாட்டாக விரிவுபடுத்துதலும், 600 மெகாவாட் திறன் உள்ள இன்னொரு அணு மின்சக்தி நிலையம் தோற்றுவித்தலும், தூத்துக்குடிப் பகுதியில் ஆரம்பத்தில் 400 மெகாவாட்டும் இறுதியில் 600 மெகா வாட்டும் திறனுள்ள அனல் மின்நிலையம் ஒன்றினைத் தோற்றுவித்தலும் மிகவும் அவசியமாகிறது. நிலக்கரி விலை உயர்வினாலும், இப்பொழுது மின் சக்தியை உற்பத்தி செய்யப் பயன்படுத்துகின்ற குறைந்த தரமான நிலக்கரிக்குப் பதிலாக நல்ல நிலக்கரியை அந்த இடங்களுக்குக் கொண்டு செல்வதினால் ஏற்படுகின்ற அதிக பட்சச் செலவையும் முன்னிட்டு, அதற்குப் பதிலாக அணு மின் சக்தி நிலையம் இந்த மாநிலத்தில் தோற்றுவிப்பது விரும்பத் தக்கது. இன்னொரு இரண்டாவது அனல் மின்சார நிலையத்தில் சுமார் 600 மெகாவாட் மின் சக்தியை உண்டாக்குகின்ற வகையில் நெய்வேலியில் இன்னொரு இரண்டாவது சுரங்கம் வெட்டும் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த வேலைகள் அனைத்தும் நான்காவது திட்டத்தில் ஏற்படும் பற்றாக் குறையைச் சமாளிக்க நான்காவது திட்டக் காலத்திலேயே எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

நெசவுப் போட்டி

கூட்டுறவுத் துறையிலும் பிற துறையிலும் பணி புரியும் நெசவாளர்களை ஊக்குவிக்கவும், கவர்ச்சிகரமான துணிகளை உற்பத்தி செய்யவும் அரசு ஒவ்வொரு ஆண்டும் போட்டி நடத்தி வருகிறது. இதில் சிறந்த உற்பத்தியாளர்களுக்குப் பரிசு வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூ. 20,000 மானியமாகச் செலவழிக்கப்படுகிறது

மின் உற்பத்தி

வாரியத்தில் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியும் அண்டை மாநிலங்களில் வாங்கப்பட்ட மின்சக்தியும் சேர்ந்து முதல் திட்ட முடிவில் மொத்தம் 1,053 மில்லியன் யூனிட்டுகளாக இருந்தது. இது இரண்டாவது திட்ட முடிவில் 2,214 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்தது. மூன்றாவது திட்ட முடிவில் உற்பத்தி செய்யப்பட்ட, வாங்கப்பட்ட மின்சக்தி 4,041 மில்லியன் யூனிட்டுகளாகும். 1970-71-ல் மாநிலத்தில் செய்யப்பட்ட மொத்த மின்சக்தி 6,189 மில்லியன் யூனிட்டுகள். இவற்றில் 3,603 மில்லியன் யூனிட்டுகள் அல்லது சுமார் 59 சதவிகிதம் வாரியத்தின் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டன. மிச்சமுள்ள 2,586 மில்லியன் யூனிட்டுகளில், 1,523 மில்லியன் யூனிட்டுகள் நெய்வேலியிலிருந்தும் 733 மில்லியன் யூனிட்டுகள் மைசூரிலிருந்தும், 328 மில்லியன் யூனிட்டுகள்

கேரளத்திலிருந்தும், 2 மில்லியன் யூனிட்டுகள் ஆந்திரத்திலிருந்தும் வாங்கப்பட்டன. 1970-71ல் வடகிழக்குப் பருவக்காற்று, சாதகமாக இல்லாதிருந்தும் அவ்வாண்டில் மின் நிலையங்கள் ஓர் இணைக்கப்பட்ட அமைப்பாகச்செயல்படுத்தப்பட்டதினால் மின்சக்தி உற்பத்தியானது மிகவும் திறமையான முறையில் கவனிக்கப்பட்டு மாநிலத்தின் மின்சாரத் தேவையானது எந்தவித மின் வெட்டும் இல்லாத நிலையில் முழுமையாகவும் மனநிறைவு அளிக்கும் முறையிலும் சமாளிக்கப்பட்டதை இங்கே குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை.

மின்சக்தி அனுப்புதலும் பங்கிடுதலும்

மாநிலம் முழுமைக்கும், குறைந்த செலவில், பெருவாரியான அளவில் மின்சக்தி எல்லாருக்கும் சீரிய முறையில் கிடைக்கவும், கிடைக்கின்ற மின் ஆதாரங்களை வளர்ச்சியுறச் செய்யவும் வேண்டி, மின்சாரத் துறையானது தன்னுடைய துவக்கக் காலம் தொட்டே மாநிலம் முழுவதையும் கவியக் கூடிய நிலையில் ஒரு மின் இணைப்பினை அமைக்க வேண்டும் என்ற இலட்சியத்தைக்கொண்டிருந்தது. நாட்டில் உள்ள பல்வேறு நீர்மின்சார நிலையங்கள், அனல் மின்சார நிலையங்கள் அனைத்தும் இறுதியில் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவும் எல்லா நகரங்கள், கிராமங்களில் உள்ள பயனீட்டாளர்களுக்கு எல்லாம் மின் அனுப்புக் கம்பித் தொடர்களும், பங்கீடு கம்பித் தொடர்களும் பின்னிப் பிணையப்பட்ட ஒரு செயல் முறையின் மூலம் மின்சாரம் கிடைக்கப் பெறுகின்ற நிலையிலும் மின் இணைப்பானது திறமையான முறையில் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதல் 230 கே.வி. மின் அனுப்புக் கம்பித் தொடரை ஏற்படுத்திய தனிச் சிறப்பு தமிழகத்தையே சாரும். 230-220 கே.வி. மின் அனுப்புக் கம்பித் தொடர்கள் மூலமாக மைசூர், கேரளம், ஆந்திர மாநிலங்களின் மின் இணைப்புகளுடன் தமிழ்நாடு இணைக்கப் பெற்றுள்ளது. 31-3-71ல் உள்ள நிலவரப்படி, இந்த மின் இணைப்பில் 11 கே.வி. வால்டேஜும் அதற்கு மேலுமான 55,000 கிலோ மீட்டர்கள் உயர் அழுத்தக் கம்பித் தொடர்களும் 400 வால்டுகள் சக்தியுள்ள குறைந்த அழுத்தக் கம்பித் தொடர்களும் உள்ளன. செயல் வடிவம் பெறப் போகும் புதுத் திட்டங்களின் மூலம் கிடைக்கப் பெறும் மின்சக்தியைத் திறமையான முறையில் அனுப்பவும், பகிர்ந்தளிப்பதற்காகவும், கூடுதலாக மின் அனுப்பும் கம்பித் தொடர்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

தொழில் வளர்ச்சி

கடந்த பத்தாண்டுக் காலத்தில் ஒரு தொழில் புரட்சியின் தோற்றுவாயினை இந்த மாநிலம் கண்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்கள் துவங்கியதிலிருந்து, தொழில் வளர்ச்சியானது ஐந்து மடங்கு பெருகியுள்ளது. தொழில்வளர்ச்சிக்கு மின்சாரம் பெருவாரியாகப்பயன்படுத்தப்பட்டிருப்பதுஇதைத் தெளிவாக்கிக் காட்டுகிறது. முதல் திட்ட முடிவில் 325 மில்லியன் யூனிட்டுகள் மின் சக்தி தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாவது திட்ட இறுதியில் இந்த அளவு 766 மில்லியன் யூனிட்டுகளுக்கும் மூன்றாவது திட்ட இறுதியில் 1,524 மில்லியன் யூனிட்டுகள் என்ற பிரம்மிக்கத்தக்க அளவுக்கும் உயர்ந்துள்ளது. நான்காவது திட்டக் கால முடிவில் 4,100 மில்லியன் யூனிட்டுகள் மின்சக்தியினைத் தொழிற்சாலைகள் பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமப்புறங்களை மின்மயமாக்குதல்

கிராமப்புறங்களுக்கு மின் வசதி அளித்தலை முக்கிய நோக்காகத் தமிழ்நாடு கொண்டுள்ளது. இத்துறையில் பணிகள் பாராட்டத்தக்க வகையில் நடைபெற்று வருகின்றன. 75 சதவிகித மக்கள் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அவர்களின் பொருளாதார மேம்பாட்டினை உயர்த்த, கிராமப்புறங்களுக்கு மின் வசதியை உடனடியாக, மிகவும் வேகமாகக் கொண்டு செல்வது மிக மிக அவசியமாகிறது. தமிழ்நாட்டில் வற்றாத ஜீவ நதிகள் போதிய அளவுக்கு இல்லை. ஆகவே விவசாயிகள் கிணற்றுப் பாசனத்தையே நம்பியுள்ள நிலை உள்ளது. ஆகவே இறைவைப் பாசனத்திலும் உணவு உற்பத்தியைப் பெருக்குதலிலும், அத்துடன் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிப்பதிலும் மின்சாரம் முக்கிய பங்கு வகிக்கிறது.

31-1-71 நிலவரப்படி இந்தியா முழுமையிலும் 15·65 இலட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்புத் தரப்பட்டுள்ளது. இப்படி மின் இணைப்புத் தரப்பட்ட விசையேற்றங்கள் தமிழ் நாட்டில் மட்டும் 5·14 இலட்சம் உள்ளன. மாநிலத்தில் உள்ள மக்கள் வதியும் 57,000 கிராமங்கள், குக்கிராமங்களில், 31-3-71ல் உள்ள நிலவரப்படி 41,957 கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டுவிட்டது. மிச்சமுள்ள 15,000 கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் 1971-72க்குள் மின் வசதி அளிப்பதற்கான விரைவுத் திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு தீட்டியுள்ளது.

31-3-71ல் உள்ள கணக்குப்படி, 5.30 இலட்சம் விசையேற்றங்களுக்கு மேல் மின்சக்தியினால் இயங்குகின்றன. இந்த விசையேற்றங்களின் மூலம் 15.90 இலட்சம் ஏக்கர் நிலம் பாசனம் செய்யப்படும் என்றும் சுமார் 7.5 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்படுமென்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நான்காவது திட்டக் காலத்திலும் கிணறுகளுக்கு மின்சக்தி வழங்குதலில் இதே வேகம் கையாளப்பட்டுப்பணிகள் நடைபெறவும் ஆண்டொன்றுக்கு 60,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இந்தத் துறையில் தமிழ்நாடு கண்டுள்ள மகத்தான சாதனையை எந்த மாநிலமும் விஞ்சமுடியாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிராமப் புறங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான செலவுக்காக வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் நிறுவனங்களிடமிருந்தும், கடன்கள் எழுப்பப் பெறுகின்றன.

நிதி நிலைமை

நிதி நிலைமையில்கூட, மின்சாரத் துறையில் தமிழ்நாடு கண்டுள்ள முன்னேற்றம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். முதல் திட்ட ஆரம்பத்தில் இருந்த மூலதன முதலீடு 24 கோடி ரூபாய் தான். இது நிதானமாக உயர்ந்து 31-3-69ல் ரூ. 357 கோடிக்கு உயர்ந்துவிட்டது. முதல் திட்ட ஆரம்பத்தில் ஈட்டப்பட்ட வருவாய் ஆண்டொன்றுக்கு ரூ. 3·18 கோடி. 1970-71ல், இந்த வருவாயானது ரூ. 61·00 கோடிக்கு உயர்ந்துள்ளது.

முதல் திட்ட ஆரம்பத்தில் தனி நபர் மின்சாரத்தைப் பயன்படுத்திய அளவு பன்னிரெண்டு யூனிட்டுகள். 31-3-70ல் இது 120 யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது. அகில இந்திய ரீதியில் எதிர்பார்க்கப்பட்ட உயர்வு 78·4 யூனிட்டுகள் தான். நான்காவது திட்டக் காலத்தில் செயல் வடிவம் பெறும் புதுத்திட்டப் பணிகளின் விளைவாகத் தனிநபர் பயன்படுத்தும் அளவு 200 யூனிட்டுகளுக்கு உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ச்சி பெற்ற மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இது மிகக் குறைவுதான்.

கட்டண விகிதம்

மற்ற மாநிலங்களில் உள்ளதைவிடத் தமிழ்நாட்டில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்காக விதிக்கப்படும் கட்டண விகிதங்கள் மிகவும் அதிகமாக உள்ளன என்ற ஒரு குறை பொதுமக்களாலும், பத்திரிகைகளாலும் மிகவும் பரந்த அளவில் சொல்லப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மொத்த மின் சக்தியில் 25 சதவிகித அளவுக்கு மின்சாரத்தைப் பெறுகிற விவசாயத்திற்குத் தமிழ்நாடு அரசு மின்சாரத்தை மிகவும் குறைந்த கட்டணத்திலேயே வழங்குகிறது என்பதை இங்கே குறிப்பிடாமலிருப்பதற்கில்லை. மேலும், நீர் மின்சாரத் திட்டத்தை விட மிகவும் அதிகமான செலவினை உள்ளடக்கிய அனல் மின்சாரத்தினைக் கூடுதலாக உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்நிலையில், இக்கட்டான நிதி நிலையிலோ, அல்லது நிதிச் சுமையிலோ ஆட்கொள்ளாத வகையில் வாரியமானது கட்டண விகிதங்களை நிர்ணயிக்க வேண்டியுள்ளது.

உயர் அழுத்த மின்சாரம் பெறும் தொழில்களுக்கு, குறிப்பாக, புதிதாக ஆரம்பிக்கப்படுகிற தொழிற்சாலைகளுக்கும் சக்திச் செறிவான தொழிற்சாலைகளுக்கும் சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டி அரசு வல்லுநர்கள், வாரிய வல்லுநர்கள் அடங்கிய உயர் மட்டக் குழு ஒன்றினைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலைகளுக்கு மின்சாரத்தினைக் குறைந்த கட்டணத்தில் வழங்குவது பற்றி இக்குழு ஆராயும். அக்குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கலைமிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற வடுக்களை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சிலைகளும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் ' அந்த நாளை ' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ !

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா



நெற்பயிரையும் களையை
யும் வேற்பிரித்தறிவது
கடினமானதால், நாங்கள்
களையை மட்டும் ஒழிக்கும்
ஸ்டாம் F-34
தயாரித்திருக்கிறோம்

களையைப் பிடுங்கும்போது சிறிய நெற்பயிர்களும் பிடுங்கப்படுகின்றன அல்லவா? மேலும், கையால் பிடுங்குவது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைக்கொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும்.
ஸ்டாம் F-34—குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைக்கொல்லி!



பம்பாய் 25, இந்தியா
STAM F-34 என்ற பெயரும்

விநியோகிப்போர் :
தி சைன்டிபிக் பெர்டிலிசர்ஸ் கம்பெனி (பி) லிட்., அதர்சனம் : பொன்னுரங்கம் ரோடு,
ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர்-2. தொலைபேசி : 22854. தந்தி : NITROPHOS

மாலை மணி மூன்று இருக்கும். வெய்யில் மிகவும் கடுமையாக இருந்தது. அந்த வெய்யிலில் வயலில் இருந்து திரும்பி வீட்டிற்கு வந்த ஏகாம்பரம் "அப்பாடா! என்ன வெய்யில் அடிக்குது! மண்டை வெடித்துவிடும் போலிருக்கிறதே!" என்று கூறிக்கொண்டே வீட்டின் முன் வராந்தாவில் கிடந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்து சாய்ந்தார்.

அவருடைய குரலைக் கேட்ட அவரது மனைவி அங்கு வந்து, "எழுந்து வாங்களேன்; சாப்பிடலாம்" என்றார்.

"சாப்பாடு இப்ப வேண்டாம். முதலில் மோர் விட்டு ஒரு டம்ளர் கூழ் கரைத்துக்கொண்டு வா!" என்றார் ஏகாம்பரம். சற்று நேரத்தில் அந்த அம்மையார் ஒரு பாத்திரத்தில் கூழைக் கரைத்து எடுத்துக் கொண்டு வந்து, ஒரு குவளையில் ஊற்றிக் கொடுத்தார். ஏகாம்பரம் சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணமே அந்தக் குவளையை வாங்கிக் கூழை 'மடக் மடக்' கென்று ஒரே மூச்சில் குடித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவர் வீட்டு வாசலின் முன்பு ஒரு 'ஜீப்' வேகமாக வந்து நின்றது. அதிலிருந்து 'எம்.எல்.ஏ.' அவர்களும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் அவர்களும் இறங்கி வந்தனர். அவர்களைக் கண்டதும், ஏகாம்பரம் கூழ் குடித்துக் கொண்டிருந்ததை நிறுத்தி, குவளையை மனைவியிடம் கொடுத்துவிட்டு அவசர அவசரமாக எழுந்து வந்து இரு கைகளையும் குவித்து "வணக்கம்! வாங்க! வாங்க!" என்று கூறி எதிர்கொண்டழைத்தார். அதே நேரத்தில் 'எம்.எல்.ஏ.'வும், பெருந்தலைவரும், "வணக்கம் தலைவரே! நலந்தானா?" என்று கேட்டுக்கொண்டே வந்தனர்.

"நலமாகத்தான் இருக்கிறேனுங்க. இந்த வெய்யிலில் வந்திருக்கின்றீர்களே! உங்கள் உடம்பு என்னத்துக்கு ஆகுமுங்க? வெய்யில் தாழ்ந்து வந்திருக்கலாமே! நின்றுகொண்டே இருக்கின்றீர்களே! உட்காருங்க!" என்று கூறி நாற்காலிகளைக் காட்டினார் ஏகாம்பரம்.

மூவரும் நாற்காலிகளில் அமர்ந்தனர். அப்பொழுது ஏகாம்பரத்தின் மனைவி ஒரு சொம்பில் குளிர்ந்த நீரும், ஒரு டம்ளரும் கொண்டுவந்து ஏகாம்பரத்திடம் கொடுத்தார்.

ஏகாம்பரம் அந்த டம்ளரில் தண்ணீரை ஊற்றி "சாப்பிடுங்க" என்று கூறி எம்.எல்.ஏ. விடம் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட எம்.எல்.ஏ. "பெருந்தலைவரே! நாம் அனல் காற்றையும் பொருட்படுத்தாமல் தலைவரைப் பார்க்க வந்துள்ளோம். ஆனல் நம்மைக் கண்டதும் தலைவர் எதையோ அவசர அவசரமாகக் குடித்துவிட்டு, மீதியையும் உள்ளே அனுப்பிவிட்டார். நமக்கு வெறும் தண்ணீர் மட்டும் கொடுக்கிறார்" என்றார்.

"நீங்க அதெல்லாம் சாப்பிட மாட்டிங்க!" என்றார் ஏகாம்பரம்.

"என்ன குடித்துக் கொண்டிருந்தீர்கள்? அதைச் சொல்லுங்க முதலில்" என்றார் பெருந்தலைவர்.

ஏகாம்பரம், கூழ் குடித்தேன் என்று சொல்லத் தயங்கினார். எம்.எல்.ஏ.வும், பெருந்தலைவரும் தண்ணீர் குடித்துவிட்டு, மீண்டும் ஏகாம்பரத்தைப் பார்த்து 'தலைவரே!' என்ன சாப்பிட்டீர்கள் என்று சொல்ல மாட்டீர்களா?" என்றனர்.

"இப்பத்தான் வயலிலிருந்து வந்தேன். களைப்பாக இருந்தது. மோர்விட்டுக் கூழ் கரைத்துக் கொண்டு வரச் சொல்லிக் குடித்துக்கொண்டிருந்தேன். நீங்கள் இருவரும் திடீரென வந்துவிடவே, கூழ் குடித்துக்கொண்டிருந்ததை பாதியிலேயே நிறுத்திவிட்டு, மீதியை உள்ளே அனுப்பிவிட்டேன்" என்றார் ஏகாம்பரம்.

"வெய்யிலுக்குக் கூழ் நல்லது என்று சொல்லுவார்களே! எங்களுக்கும் களைப்பாகத்தான் இருக்கு; எங்களுக்கும் கொஞ்சம் கூழ் கொடுக்கக் கூடாதா?" என்றார் எம்.எல்.ஏ.

"சாப்பாடு ரெடி! எழுந்திருங்க சாப்பிடலாம்!" என்றார் ஏகாம்பரம்.

"முதலில் கொஞ்சம் கூழ் குடிக்கலாம்" என்றார் எம்.எல். ஏ.

"நீங்க என் வீட்டிற்கு வந்து கூழ் குடிப்பதாவது? எழுந்திருங்க சாப்பிடலாம்!" என்றார் ஏகாம்பரம்.

"பெரிய பண்ணையாராகிய நீங்களே கூழ் குடிக்கும்பொழுது, நாங்கள் சாப்பிடக் கூடாதா என்ன?" என்றார் எம்.எல்.ஏ.

முடியாதென்று சொல்ல முடியாமல் பண்ணையார் ஏகாம்பரம் வீட்டின் உள்ளே சென்று புளிக்காத மோர் விட்டு, தன் கையாலேயே கூழை நன்கு கரைத்து எடுத்துக்கொண்டுவந்து இருவருக்கும் ஊற்றிக் கொடுத்தார். தொட்டுக் கொள்வதற்கு எலுமிச்சம்பழ ஊறுகாயும் கொடுத்தார்.

ஒரு டம்ளர் கூழ் குடித்துவிட்டு "மிகவும் குளிர்ச்சியாய் இருக்குதுங்க. இன்னும் கொஞ்சம் போடுங்க" என்றார் பெருந்தலைவர். அதுபோலவே எம்.எல்.ஏ.வும் கூறினார். பண்ணையார், மீண்டும் ஆளுக்கு ஒரு டம்ளரில் கூழ் ஊற்றிக் கொடுத்தார்.

"பண்ணையார் ஏன் கூழ் குடிக்கிறார் என்பது இப்பத்தானே புரியுது! இனிமேல் நாம் கூட கூழ் குடிக்க ஆரம்பிக்கணும் என்று முடிவு செய்துவிட்டேன். அப்பதான் இந்த வெய்யிலுக்கு என் உடம்பு தாக்குப் பிடிக்கும்" என்றார் பெருந்தலைவர்.

"நான் சிறு பையனாக இருந்த பொழுது கூழ் குடித்திருக்கிறேன் அது பழுப்பு நிறமாகவல்லவா

இருந்தது. நீங்கள் கொடுத்துள்ள கூழ் வெண்மை நிறமாக இருக்கிறதே!'' என்றார் எம்.எல்.ஏ.

'' இது வெள்ளை ராகியிலிருந்து தயாரிக்கப்பட்ட கூழ். அதனால் வெண்மையாக இருக்கிறது '' என்றார் பண்ணையார்.

'' வெள்ளை ராகி உங்களுக்கு எங்கே கிடைச்சுது ?'' என்று கேட்டார் பெருந்தலைவர்.

'' நம்ம ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலர் தான், வெள்ளை ராகியை வரவழைச்சுக் கொடுத்தார்'' என்று பண்ணையார் பதிலளித்தார்.

'' அப்படியானால் நான் கூட அந்த வெள்ளை ராகியைப் பயிரிட்டுப் பார்க்க வேண்டும் '' என்றார் பெருந்தலைவர்.

'' பெருந்தலைவரே! நாம் வந்த வேலையை மறந்துவிட்டு, வேறு எதையோ பேசிக்கொண்டிருக்கிறோமே! '' என்றார் எம்.எல்.ஏ.

'' பண்ணையாரே ! உங்க ஊருக்கு மின்சார வசதி இல்லை என்று குறைபட்டுக்கொண்டிருந்தீர்களே ! அந்தக் குறையைப் போக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளனைத்தையும் நம்ம ' எம்.எல்.ஏ.' செய்து விட்டார். நாளைக்கே உங்க ஊரில் கம்பம் நட ஆரம்பித்து விடுவார்கள். இன்னும் 15 நாட்களில் உங்கள் ஊரில் மின் விளக்கு எரியும். உங்க ஊரே ஒளிமயமாகிவிடும்'' என்றார் பெருந்தலைவர்.

மின் விளக்கு ஏற்றும் விழாவிற்கு நமது மாநில அமைச்சரைக் கூப்பிடலாம் என்று நினைக்கிறோம். உங்களுடைய கருத்தைக் கேட்டுக்கொண்ட பின்புதான் இது பற்றி அமைச்சரிடம் தொடர்பு கொள்ள வேண்டும். உங்களுடைய கருத்தறிந்து போகவே நாங்கள் வந்துள்ளோம் '' என்றார் எம்.எல்.ஏ.

'' நீங்க ஏற்பாடு செய்துவிட்டால் நான் வேண்டாம் என்று சொல்லப் போகிறேன் ?'' என்றார் பண்ணையார்.

'' நீங்கள் மறுப்பு சொல்ல மாட்டீர்கள் என்பது தெரியும். இருந்தாலும், ஊராட்சி மன்றத் தலைவராகிய உங்களைக் கலந்தாலோசிக்காமல் செய்வது முறையில்லிங்களே !'' என்றார் எம்.எல்.ஏ.

'' அத்துடன் நீங்கள் எங்களை விட வயதில் பெரியவர் ; முதிர்ந்த அனுபவமுள்ளவர் ; உங்களைக் கலந்தாலோசிக்காமல் செய்யக் கூடாது பாருங்க !'' என்றார் பெருந்தலைவர்.

'' நான் என்ன செய்யணும் என்று சொல்லுங்க ! அப்படியே செய்து முடிக்கின்றேன் !'' என்றார் பண்ணையார்.

'' நாளைக்கே மின் துறையினர் உங்களைக் கலந்துகொண்டு, வேலையைத் துவக்கிவிடுவாங்க. நீங்க அவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்புகளைக் கொடுக்க வேண்டும் '' என்றார் பெருந்தலைவர்.

'' நான் பார்த்துக்கொள்கின்றேன். இனிமேல் அது பற்றிய கவலையே வேண்டாம். மணி 4 ஆகப் போகுது. சாப்பாடு சாப்பிடுகின்றீர்களா ? அல்லது டிபன் சாப்பிடுகின்றீர்களா ? என்று பரிவுடன் கேட்டார்பண்ணையார்.

'' கூழ் குடித்ததே வயிறு நிரம்பிவிட்டது. இனிமேல் சாப்பாடு தேவையில்லை. நாங்கள் புறப்படுகிறோம் '' என்றார் எம்.எல்.ஏ.

'' டிபனாவது சாப்பிட்டுவிட்டுப் போகலாம். கொஞ்சம் பொறுங்க '' என்று கூறிவிட்டு வீட்டினுள்ளே சென்றார் ஏகாம்பரம்.

'' எம்.எல்.ஏ. ஐயா கொஞ்சம் பொறுங்க. அவசரப்படாதிங்க. டிபன் சாப்பிட்டுவிட்டுப் புறப்படுவதற்குள் வெய்யிலும் தாழ்ந்துவிடும் '' என்றார் பெருந்தலைவர்.



'' டிபன் சாப்பிடாமல் நகருவதில்லை என்று முடிவு செய்துவிட்டீர்கள் போலுள்ளது. உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள் '' என்றார் எம்.எல்.ஏ.

உள்ளே சென்று திரும்பி வந்த பண்ணையார் '' எழுந்திருங்க! டிரைவர், நீயும் வாப்பா, டிபன் சாப்பிடலாம் !'' என்று கூறிக்கொண்டே ஒரு வாளியில் தண்ணீரையும் கொண்டுவந்து வைத்தார். முகம், கை, கால்களைக் கழுவிக்கொண்டு உள்ளே சென்றனர். அங்கு மூன்று இலைகள் ஓர் இடத்திலும், அதிலிருந்து சற்றுத் தள்ளித் தனியாக ஓர் இலையும் போடப்பட்டிருந்தது. எம்.எல்.ஏ, பெருந்தலைவர், பண்ணையார் ஆகிய மூவரும் ஒரே இடத்தில் அமர்ந்தனர். டிரைவர் அவருக்கெனப் போடப்பட்டிருந்த இலையில் அமர்ந்தார்.

பண்ணையாரின் மனைவி எல்லாருக்கும் நான்கு நான்கு அடைகளை வைத்து, சட்னி, சாம்பார், கூட்டு ஆகியவைகளைப் பரிமாறினார். எம்.எல்.ஏ. வும். பெருந்தலைவரும் மிகவும் சுவைத்துச் சாப்பிட்டனர். பண்ணையாரின் மனைவி, மேலும் இரண்டு அடைகளை வைத்தார். வேண்டாம் என்று யாருமே சொல்லவில்லை. அவைகளைச் சாப்பிட்டு முடிக்கும் தறுவாயில், மேலும் சில அடைகளைப் பண்ணையாரின் மனைவி எடுத்துக் கொண்டு

வந்தபோதுதான், '' போதும், இனிமேல் வேண்டாம் '' என்றனர்.

டிபன் சாப்பிட்டு முடிந்ததும் அனைவருக்கும் இளஞ்சூடான ' ராகிமால்ட் ' கொடுக்கப்பட்டது. அதையும் சுவைத்துக் குடித்துவிட்டு வெளியே வந்து அமர்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண்டிருந்தனர்.

'' பண்ணையாரே, அடையும் ராகியில் செய்ததுதானே ?'' என்றார் பெருந்தலைவர்.

'' ஆமாம், ஏன் நன்றாக இல்லையா ?'' என்றார் பண்ணையார்.

'' அடை பிரமாதம் ! '' என்றார் பெருந்தலைவர்.

'' ராகி மால்ட் அதைவிட மிகவும் பிரமாதம் '' என்று கூறிக்கொண்டே நாற்காலியில் இருந்து எழுந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

'' இன்னும் அரை மணி நேரத்திற்கு என்றால் எங்கும் புறப்பட முடியாது. என் வயிறு ' டபுள் புல் ! ' எம்.எல்.ஏ. ஐயா நீங்கள் அப்படியே ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நான் அதற்குள் ராகியைப்பற்றிக் கொஞ்சம் பண்ணையாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்கின்றேன் '' என்றார்.

'' என் நிலைமையும் அதுதான் ! உங்க பேச்சை ஆரம்பியுங்க. நானும் கேட்டுக் கொள்கின்றேன் '' என்றார் எம்.எல்.ஏ.

'' நீங்க பெரிய பண்ணையாராக இருந்தும் ராகி பயிரிடுது ஏன் ? '' என்றார் பெருந்தலைவர்.

நாமெல்லாம் அரிசியைத்தான் முக்கியமாக உணவுக்குப் பயன்படுத்தினாலும், பெரும்பாலான ஏழை மக்களின் உணவாக விளங்குவது ராகியே ! ராகியில் நல்ல சத்துக்கள் இருப்பதாலேயே, அதிலிருந்து தயாரிக்கப்படும் ' ராகிமால்ட் ' என்னும் பானத்தைப் பெரும் பணக்காரர்களெல்லாம் விரும்பி அருந்துகின்றனர். எங்கள் வீட்டில் ஒவ்வொரு நாளும், ஒரு வேளையிலாவது ராகியால் செய்யப்பட்ட உணவு இல்லாமல் இருக்காது. எங்கள் வீட்டில் யாருக்குமே சத்துக்குறைவு என்ற நிலைமையில்லை. என் பையன்களெல்லாம் ' கொழு, கொழு ' வென்றுதான் இருப்பார்கள். இதையெல்லாம் மனத்தில் கருதியே நான் தொடர்ந்து பயிரிட்டு வருகின்றேன் '' என்றார் ஏகாம்பரம்.

பெருந்தலைவர் கேட்பதற்கு, பண்ணையார் பதில் சொல்வது என்ற முறையில் அவர்களுடைய பேச்சு, தொடர்ந்தது. எம்.எல்.ஏ.வும் அதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

'' எங்க ஊரில்கூட பலர் ராகி பயிரிடுகிறார்கள். ஆனால் மகசூல் மிகவும் குறைவாகவே கிடைக்குதென்று கூறுகிறார்களே ! அது உண்மை தானுங்களா ? ''

'' பருவத்தே பயிர் செய் என்ற பழமொழிக்கேற்ப, பருவத்தில் ராகி பயிரிட வேண்டும். அத்துடன் பருவத்திற்கேற்ற ரகத்தைப் பயிரிட வேண்டும். அவ்வாறு செய்யாமல் கண்ட விதையை, காலம் தவறி விதைத்தால், எப்படிங்க மகசூல் நிறையக் கிடைக்கும் ? ''

'' நம்ம தென்னார்க்காடு மாவட்டத்தில் ராகி பயிரிடச் சிறந்த பருவம் எதுங்க ? ''

'' நம்ம தென்னார்க்காடு மாவட்டத்தில் வைகாசி (மே-ஜூன்) பட்டமும், மார்கழி (டிசம்பர்-ஜனவரி) பட்டமும் தான் ராகி விதைப்பதற்கு ஏற்ற சிறந்த பருவங்களாகும் ''

'' எந்தப் பட்டத்திற்கு எந்த ரகம் ஏற்றது ? ''

'' வைகாசிப் பட்டத்தில் விதைக்க '' கோ-7 '' என்ற ரகமும், மார்கழிப் பட்டத்தில் விதைக்க பாலூர்-1 (பி.எல்.ஆர். 1) என்ற ரகமும்தான் ஏற்றது ''.

'' இந்த விவரமெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்ததுங்க ? ''

'' அது பெரிய கதைங்க. நம்ம மாவட்டத்தில் நெல்லிக்குப்பத்திற்கு அருகில் பாலூர் என்று ஒரு ஊர் உள்ளது. அங்கு ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இருக்குதுங்க. போன ஆண்டு அந்த ஆராய்ச்சி நிலையத்தில் நடந்த ' வயல் நாள் ' விழாவுக்கு வரச் சொல்லி எனக்கும் அழைப்பு அனுப்பியிருந்தாங்க. நானும் போனேன். அங்குதான் இந்த விவரங்களை எடுத்துச் சொன்னார்கள்.

'' அங்கு தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஏற்ற ராகி ரகங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 1966-67, 1967-68, 1968-69 ஆகிய மூன்று ஆண்டுகளில் பரிசோதனை நடத்தினார்களாம்.

'' சோதனைப் பாத்திகளுக்கு அடியுரமாக ஏக்கருக்கு 10 வண்டி மக்கிய எருவும், 9 கிலோ தழைச் சத்தும், 9 கிலோ மணிச் சத்தும், 9 கிலோ சாம்பல் சத்தும், கொடுத்து வைகாசிப் பட்டத்தில் பாலூர்-1, கோ-2, கோ-5, கோ-7 என்ற நான்கு ரகங்களையும், மார்கழிப் பட்டத்தில் பாலூர்-1 (பி.எல்.ஆர். 1), அனகாபள்ளி-2 (ஏ.கே.பி. 2), கோ-7, கோ-8 ஆகிய நான்கு ரகங்களையும் பயிரிட்டுப் பார்த்தனர்.

தழைச்சத்தை நாற்று நட்டு முதல், களை எடுத்தவுடன், போட்டுள்ளனர். எல்லா ரகங்களுக்கும் வரிசைக்கு வரிசை 9 அங்குலமும், பயிருக்குப்பயிர் 6 அங்குலமும் இடைவெளி விட்டு நட்டார்களாம். நாற்று நட்ட 15-வது நாள் 250 மில்லி லிட்டர் என்ட்ரினையும், 600 கிராம் '' பிளைட்டாக்ஸ் '' என்ற பூஞ்சாள மருந்தையும் 250 லிட்டர் தண்ணீரில் கலந்து எல்லா ரகங்களுக்கும் தெளித்தார்களாம். களை எடுத்தல், தண்ணீர் பாய்ச்சுதல் போன்ற பின்செய் நேர்த்தி முறைகளையும் எல்லா ரகங்களுக்கும் சமமாகவே செய்தனராம்.

“அந்தந்த ரகங்களையும் தனியே அறுவடை செய்து அடித்துத் தூற்றி மகசூலைக் கணக்கிட்டு வந்தனராம். அதன் பின் மூன்று ஆண்டுகளிலும் கிடைத்த மகசூலின் சராசரியைக் கணக்கிட்டனராம்.

''மூன்று ஆண்டுகளிலும், வைகாசிப் பட்டத்தில் ராகி விதைத்துக் கிடைத்த சராசரி ஏக்கர் மகசூலைக் கணக்கிட்டுப் பார்த்ததில், கோ-7 என்ற ரகம் 1034·5 கிலோவும், கோ-5 என்ற ரகம் 877·6 கிலோவும், பாலூர்-1 என்ற ரகம் 856·3 கிலோவும், கோ-2 என்ற ரகம் 684·7 கிலோவும், கொடுத்துள்ளது தெரியவந்ததுங்களாம்.

“அது போலவே மூன்று ஆண்டுகளிலும் மார்கழிப்பட்டத்தில் ராகி விதைத்து கிடைத்த சராசரி ஏக்கர் மகசூலைக் கணக்கிட்டதில்,

''பாலூர்-1 என்ற ரகம் 1229·8 கிலோவும்,

''கோ-7 என்ற ரகம் 1172·4 கிலோவும்.

''கோ-8 என்ற ரகம் 1096·9 கிலோவும்.

''அனகாபள்ளி-2 என்ற ரகம் 987·2 கிலோவும் கொடுத்துள்ளது புலனாகியதாம்.

''இதனால் வைகாசிப்பட்டத்தில் கோ-7 என்ற ரகமே ஏக்கருக்கு சராசரியாக 1034·5 கிலோ மகசூல் அளித்து முதலிடம் பெறுகிறது என்பதும், மார்கழிப்பட்டத்தில் பாலூர்-1 என்ற ரகமே ஏக்கருக்கு சராசரியாக 1229·8 கிலோ மகசூல் அளித்து முதலிடம் பெருகிறது என்பதும் தெளிவாகியதாம்.

''எனவே, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வைகாசிப்பட்டத்தில் ராகி விதைக்க,கோ-7 என்ற ரகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும், மார்கழி பட்டத்தில் ராகி விதைக்க, பாலூர்-1 என்ற ரகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் பாலூரில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இச் சோதனைகளை நடத்திய கண்காணிப்பாளர் திரு வே. க. பழனியாண்டி அவர்களும், வேளாண்மை உதவியாளர் திரு வீ. சுப்ரமணியம் அவர்களும் என்னிடம் விளக்கிக் கூறினார்கள் '' என்று கூறினார் பண்ணையார்.

அதுவரை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த எம். எல்.ஏ. '' ஆராய்ச்சி நிலை

வர்களுக்கும் கிடைக்கும் என்பதற்கு என்ன உறுதியிருக்குதுங்க?'' என்றார்.

'' அவர்கள் கூறிய முறைப்படியே சென்ற ஆண்டு மார்கழிப்பட்டத்தில், நம்ம வேளாண்மை வளர்ச்சி அலுவலரின் உதவியுடன் பாலூர்-1 என்ற ரகத்தை 3 ஏக்கரில் பயிரிட்டுச் சராசரியாக ஏக்கருக்கு 1,320 கிலோ மகசூல் எடுத்துள்ளேனுங்க. என்னைப் போலவே, எல்லாரும் செய்தால் நிச்சயமாக ஆராய்ச்சி நிலையத்தில் கிடைத்ததைவிட அதிக மகசூல் எடுக்கலாம் '' என்றார் பண்ணையார்.

'' சரி நேரமாகுது. ' ராகி மால்ட் ' செய்கிற முறையை மட்டும் கொஞ்சம் சொல்லுங்க. நாங்க புறப்படுகிறோம் '' என்றார் பெருந்தலைவர்.

'' ராகிமால்ட் தயாரிக்க பழுப்பு ரகமுள்ள ராகியைவிட, வெள்ளைரக ராகி மிகவும் சிறந்தது. அதில் சத்தும் அதிகமாக உள்ளது. தூய்மைப்படுத்தப்பட்ட ராகி மணிகளை 24 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். 4 அல்லது 5 முறை தண்ணீரை மாற்றுவது நல்லது. அதன்பின் தண்ணீரை வடித்துவிட்டு, ஊறிய ராகி மணிகளை ஒரு ஈரத் துணியில் கட்டி முளைக்க வைக்க வேண்டும். துணியில் ஈரம் இருக்குமாறு செய்து வந்தால்தான், சீக்கிரம் முளைவிடும். முளைகள் வந்தவுடனேயே, அவை

துணியிலோ பரப்பி நிழலில் உலர வைக்க வேண்டும். நன்ருக உலர்ந்த பின்பு, சிறிது தண்ணீர் தெளித்து, இடித்து மேல் தோலையும், முளைகளையும், பிரித்து எடுக்க வேண்டும். அதன்பின் தானியத்தை லேசாக வறுத்து எடுத்து திருகைக்கல்லிலோ, மாவு அல்லது காபி அரைக்கும் இயந்திரத்திலோ அரைக்க வேண்டும். அதன்பின் நேர்த்தியான பருத்திநூல் துணியிலிட்டு சலிக்க வேண்டும். ... சலித்த பின்பு

... ' மால்ட் '
இம்மாவை
... தண்ணீ
...க்குத் தக்க
...லது உப்புச்
'' என்றார்.

...ளிடமிருந்து
... செய்தி
...ாண்டோம்.
...என்று கூறிக்
...லைவர் எழுந்

...னைந்தாவது
ஏற்றுவிழா
விடாதீர்
எம்.எல்.ஏ.

கவலையை
சிறப்பாக
அமைத்து விடுகின்றேன் '' என்றார் பண்ணையார்.

எம்.எல்.ஏ.வும், பெருந் தலைவரும் விடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டனர். பண்ணையார் ஏகாம்பரம் ராகியின் பெருமையை இரு பெரிய பொறுப்பில் உள்ளவர்களுக்கு உணர்த்திய மன நிறைவுடனும், ஊரை ஒளி மயமாக்கப் போகிறோம் என்ற புதிய தெம்புடனும் ஊராட்சிமன்ற உறுப்பினர்களைக் கூட்டிப் பேசுவதற்காக, ஊராட்சி மன்ற அலுவலகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்.

CAUTION
END OF THE FILM ROLL



நீரிழிவு நோய் நீங்கிடக் கேழ்வரகு சாப்பிடுங்கள் !

கேழ்வரகு உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், நீரிழிவு நோய் (டயாபெட்டீஸ்) வராது. நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் கேழ்வரகில் செய்யப்பட்ட உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட ஆரம்பித்தால், நீரிழிவு நோய் நாளடைவில் நீங்கிவிடும்.

கேழ்வரகைக் கொண்டு களி (இட்டு) அல்லது கூழ் தான் செய்யலாம் என்று பலர் நினைக்கிறார்கள். கேழ்வரகிலிருந்து கீழ்க்கண்ட உணவுகளையும் தயாரித்து உண்ணலாம்.

1. அடை (இனிப்பு அல்லது காரம்).
2. அல்வா.
3. ரொட்டி.
4. தோசை.
5. பிட்டு.
6. பக்கோடா.
7. வடாம்.
8. சீடை.
9. முறுக்கு.
10. கேக்.
11. பூரி.
12. ராகிமால்ட்.

சிறுசேமிப்புக் குறள்

புலவர். மு. சிக்கந்தர்

நாமிருக்கும் காலமெலாம் நன்மைதரத் தக்கசிறு
சேமிப்பில் சேர்த்தல் சிறப்பு.

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்(பு)
என்றுணர்ந்தால் வாழ்வாய் இனிது.

வரவுக்கு மேல்செலவைச் செய்யின் முதுமையில்
உறவுக்குக் கைகொடுப்பார் யார் ?

காசுள்ள காலத்தில் சேர்த்திடுதல் காற்றுவந்து
வீசுங்கால் தூற்றல் நிகர்.

நாட்டுக்கும் வீட்டுக்கும் ஏற்புடைய திட்டத்தில்
நாட்டத்தைக் கூட்டுவித்தல் நன்று.

எதிர்கால வாழ்வினை எண்ணுமல் வாழ்ந்தால்
மதிப்பாரோ சான்ருேர் மகிழ்ந்து.

சிறுசேமிப் பின்சிறப்பைத் தேர்ந்தறியா ம(ா)க்கள்
இறப்பினும் வாழினும் என் ?

குலவிளக்காய்ப் போற்றும் மகன்கல்வி கற்க
நலம்பயக்கும் திட்டத்தை நாடு.

பெருவிளக்காய் எண்ணும் மகள்மணந்து வாழத்
திருவிளக்காம் திட்டத்தை வாழ்த்து.

நட்பைப்போல் நன்மைத்தரும் நல்லசிறு சேமிப்பில்
திட்டங்கள் வெற்றிபெறும் நன்று.

அரசேற்ற திட்டந்தான் ஐயமே வேண்டாம்
வரவேற்று வாழ்வாங்கு வாழ்.

சேமிப்புச் செய்யாமல் சிரற்றுப் போய்விட்டால்
பூமிக்குத் தானே சுமை.

கூட்டுறவு, சேமிப்பு, நல்ல குடும்பநலம்
நாட்டுக்கு வேண்டாதார் யார் ?

வெள்ளநிகர் காலத்தை வெற்றியுடன் நீந்துதற்கே
உள்ளதிட்டம் சேமிப்பென் றுணர்.

மூவகைத் தேவைகளை முன்னறிந்து சேமிப்பில்
ஆவலுடன் சேர்த்தல் உயர்வு.

வெண்பாப் போட்டி

9. நீறிலே பூத்த நெருப்பு

மீண்டுமிவண் சாதிக்கு மேடைகட்டி வைக்காதீர்
மாண்டபடி போகட்டும் மாண்புடையீர்—தீண்டாதீர்
மீறினல் தீமைதான் மேன்மையற்ற சாதியிவண்
நீறிலே பூத்த நெருப்பு.

—கல்லூர் மணியம், திருச்சி.

அடிபட்ட பாம்பும் அணியிழையார் நெஞ்சும்,
மிடிபட்ட மாந்தர்தம் வாழ்வும்—படியின்கண்
ஆறிக் கிடந்தாலும் அச்சோ ! அவைசெயலில்
நீறிலே பூத்த நெருப்பு.

—சுப்பராயலு பி. ஏ., பெரியகுளம்.

ஏழ்மைக் குடியி லெழுந்த வொளியாகும்
சூழிருள் போக்குஞ் சுடராகும்—வாழ்வளிக்கு
மீறிலா நம்கலைஞர் இத்தரையி லென்றுமே
நீறிலே பூத்த நெருப்பு.

—செந்தமிழ்ச் சிற்பி, சென்னை-5.

சோறிலை என்பார் சொகுசாகச் சுற்றிவர
பேறிலை என்றுரைப்பார் பெற்றபின்னும்—ஆறுவாரோ?
வேறிலையே என்றுமனம் வாடுவார் உள்ளமோ
நீறிலே பூத்த நெருப்பு.

—மு. பூங்கோவன், சென்னை-2.

மக்கட் சமுதாயம் மாணலங்கள் பெற்றுவக்கத்
தக்கநிலை செய்யும் தமிழரசு—மிக்கயர்வில்
மாறிலாக் கொள்கை மதுவிலக்கை மேற்கொள்ளல்
நீறிலே பூத்த நெருப்பு.

--மாதைபூரான், திருவாமாத்தூர்.

நெஞ்சிலே பூத்த நெருப்பே சினமென்பேன் !
பிஞ்சிற் பழுத்தல் பிழையென்பேன்—நஞ்சுக்கும்
மாருத நாகரிகர் மாட்டுச் சினப்பொறுமை
நீறிலே பூத்த நெருப்பு.

—சாந்தா வேங்கடேசன், நெய்வேலி--2.

மண்மகள் காணு மலர்வண்ணச் சீரடியாள்
பெண்பெருமை வையம் பிறங்கவைத்த—கண்ணகியின்
மாருத கற்புநெறி மாண்பியலைக் காட்டுதுகாண்
நீறிலே பூத்த நெருப்பு.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

தந்தை தடைவிதித்தார் தாயெனக்குக் காவலுற்ருள்
சிந்தையிலும் உன்நினைவு தீதென்ருர்;—சொந்தந்தான்
மாறுமோ இத்தடையால்? மன்னவனே நம்காதல்
நீறிலே பூத்த நெருப்பு.

—குழ. அண்ணுமலை, கோவை.

தாய்தமிழும் நாடும் தனியாட்சிச் சிந்தனையும்
ஓய்வடையா மெய்யுழைப்பும் ஒற்றுமையும்—தாய்
நாட்டின்
பேறின்றி வேறுண்டோ? பன்ஞளும் நெஞ்சினிலே
நீறிலே பூத்த நெருப்பு.

—வெ. இரா. இராசகோபாலன், காவேரி நகர்.

தாழ்வும் உயர்வும் தரம்பிரித்(து) என்காதல்
வாழ்வு கெடுத்தார்; மறப்பேஞே—வேல்விழியை?
சேறிலே பூத்தசெந் தாமரை யாள்நினைவு
நீறிலே பூத்த நெருப்பு.

—மு. சிவலிங்கம், சிவகாசி.

வில்லுழவர் சொல்லுழவர் வேலுழவர் காத்துவந்த
வெல்லத் தமிழழிக்க வேற்றுருவில்—புல்லருமே
நாறுவகைத் தந்திரங்கள் நோற்ருலும் செந்தமிழர்
நீறிலே பூத்த நெருப்பு.

—சத்திரமனை-சித்திரகவி, திருச்சி.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு. கல்லூர் மணியம்,
கல்லூர் (அஞ்சல்),
(வழி) கீழாநிலை,
திருச்சி மாவட்டம்.

5

அல்பகலாய்ப் பாடுபடும்; ஆக்கம் பிறர்க்குதவும்
தொல்லை மிகுவாழ்வில் தோய்ந்துவிடும்—நல்லவரின்
சீறும் பசிக்கொடுமை செந்தழலாய்க் கொப்பளிக்கும்
நீறிலே பூத்த நெருப்பு.

—திரு. பாலசுப்பிரமணியம், புதுக்கோட்டை-2.

செங்குருதி சிந்தியதும் செந்தழலில் மாண்டதுவும்
இங்கதனை யார்மறப்பர் எம்நாட்டில்—இந்திதனை
வேரறுத்து மாய்த்திடுவோம் வேல்மறவர் நாங்களின்று
நீறிலே பூத்த நெருப்பு.

—வீரு. இராசு, சென்னை-19.

கல்லக் குடிகாணக் காளையவ ராரூரார்
கொல்லத் தலைகொடுத்தா ரந்நாளில்—நல்வினையால்
வீறிலே தோய்த்தீந்தார் வெற்றித் தமிழரசாம்
நீறிலே பூத்த நெருப்பு.

—பெ. இராசசுந்தரம், சென்னை-56.

சுயஆட்சி வேண்டுமெனச் சூளுரைத்தோம், டெல்லி
நயமுடன் ஈதலே நன்றாம்;—பயமுறுத்தி
தீராத் துயர்தந்தால் திக்கெட்டும் பற்றாதோ
நீறிலே பூத்த நெருப்பு.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

கன்னித் தமிழ்மொழியை கல்லூரிக் குள்வைத்தோம்;
முன்னைச் சிறப்பறுக்கும் மூர்க்கர்கள்—நம்மொழியை
நேரில் எதிர்த்தார்; கண்சிவந்தேன்; அந்நிறம்கண்
நீறிலே பூத்த நெருப்பு.

—வெ. இராமசாமி, தும்மநாய்க்கன்பட்டி.

நாட்டினர் போற்றிட நல்வாழ்வு வாழ்ந்திடக்
காட்டுவது நல்வழிபோல் காட்சிக்குக்—காட்டிடும்
மாறிய நெஞ்சந்தான் மானெஞ்சம் என்றென்றும்
நீறிலே பூத்த நெருப்பு.

—குமார்—கவிதாசன், புதுப்பாளையம்.

பொங்கும் புதுவெள்ளம் போலெழுந்தே எந்தமிழர்
தங்களுயிர் ஈவர் தமிழ்காக்க!—எங்களுளத்(து)
ஊறும் உணர்வழிக்க ஒண்ணாதே! அவ்வுணர்வு
நீறிலே பூத்த நெருப்பு.

—தேவன், பி.ஏ., கீழச்செருவாய்

தமிழினத்தைச் சாய்க்கத் தமிழகத்தில் வாழும்
தமிழ்ப்பகையே! புல்லறிவு மக்காள்!—தமிழினத்துச்
சாறிலே பூத்த தமிழனின் தன்மானம்
நீறிலே பூத்த நெருப்பு.

—குடந்தை வில்லேந்தி, சென்னை-5.

மக்கட்குத் தொண்டாற்றி மாண்புற வாழவைத்து
தக்கதொரு நற்புகழைத் தான்பெறவே—எக்கணமும்
வேறின்றி வென்றுநிற்கும் கட்சியன்றி மற்றயவை
நீறிலே பூத்த நெருப்பு.

—புலவர் வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

இந்தியை ஏற்காத எந்தமிழர் நாட்டின்மேல்
தந்திரச் சேனையொடு தானு(ம்)வந்து—இந்திரனே
வீறிட்டுப் போரிடினும் வீழ்த்தொணாஎம் வீரமின்று
நீறிலே பூத்த நெருப்பு.

—வெ. தியாகராசன், திருச்சிராப்பள்ளி-11.

நல்லரசை நம்மொழியை நச்சுளத்தால் சாய்க்கவெனும்
புல்லரவர் செல்லரித்துப் போயிடுவார்—நல்லாய்கேள்
வீறுமிகு தென்னகத்து வீரமிகு மக்களுளம்
நீறிலே பூத்த நெருப்பு.

—க. இரத்தினம், ஆயக்காரன்புலம்-2.

ஆயிரந்தான் நற்கருத்தை ஆர்வமுடன் ஊட்டிடினும்
போயிரந்து கூழ்குடிக்கும் புன்மைசேர்—பேயாளர்
வேறெனவே தாங்கருதி வேறாகார்; அன்னவரே
நீறிலே பூத்த நெருப்பு.

—புலவர் இரெ. சி. பூபதி, இடைப்பாடி.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி

இரந்துண்ணும் வாழ்க்கையைப்பற்றி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பழந்தமிழ்ப் புலவர்கள் பாடியுள்ளனர். சங்க இலக்கியத்தில் பல செய்திகள் காணக்கிடக்கின்றன. வள்ளுவரும், பிச்சையெடுப்பதைப் பற்றி 'இரவு' 'இரவச்சம்' என்னும் இரண்டு அதிகாரங்களை வகுத்துள்ளார். ''இரப்பது இழிந்தது, கொடுப்பது உயர்ந்தது'' என்னும் கருத்துக்களை ஏறக்குறைய எல்லாப் புலவர்களுமே எடுத்துக் கூறியுள்ளனர். ''ஏற்பது இகழ்ச்சி'' என்று கூறிய ஔவையார் ''ஐயமிட்டு உண்'' என்றும் கூறியுள்ளார். இக்கருத்தைப்புறநானூற்றுப் பாடல் ஒன்று அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

ஈயென இரத்தல்
இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல்
அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல்
உயர்ந்தன்று, அதனெதிர்
கொள்ளேன் என்றல்
அதனினும் உயர்ந்தன்று

கழைதின் யானையார் பாடிய இப்பாட்டு மேற்கூறிய கருத்துக்களைத் தெள்ளிதின் விளக்குகின்றது.

இரந்தும் உயிர்வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்

என்பது குறள்.

இப்பாவில் புரட்சிக் கருத்தைப் பொலியுமாறு செய்துள்ளார் வான்புகழ் வள்ளுவர். பிச்சையெடுத்துத்தான் வாழவேண்டுமென்றால், இந்த உலகத்தை உண்டாக்கியவன் தொலைந்து போகட்டும் என்று சீற்றமுடன் கூறுகின்றார். தம்மிடம் உள்ளதை ஒளிக்காமல் உதவுகின்ற ஒருவரிடம்தான் பிச்சை கேட்க வேண்டும். ஏனையோரிடம் கேட்கலாகாது என்பதும் வள்ளுவர் கருத்தாகும். இக்கருத்தினை

இரப்பான் இரப்பாரை
எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று

என்னும் குறளில் விளக்குகிறார். பிச்சைக்காரரிடம் பிச்சை கேட்கின்றார் வள்ளுவர்.

> பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக நம் அரசு, முதல்வர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3-ஆம் நாளிலிருந்து நிதி திரட்டுகிறது. அண்ணல் காந்தியடிகள் தொழுநோயாளிக்குப் பணிவிடை செய்யும் படமுள்ள அட்டையை நம் அரசு வெளியிட்டுள்ளது. ஐம்பது காசு மதிப்புள்ள இந்த அட்டைகள் முப்பது லட்சம் அடிக்கப்பட்டுள்ளன. இவை மூலம் நிதி திரட்டவும், தனிப்பட்டமுறையில் நிதி திரட்டவும் அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. அரசின் ஆக்கப்பூர்வமான முயற்சியைச் சுருக்கமாக விவரிக்கிறது இச்சிறு கட்டுரை.

பிச்சையெடுப்பவர்கள் அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கின்றார்கள். பிச்சையெடுப்பதை அறவே ஒழித்துவிட வேண்டும் என்னும் கருத்து பழங்காலப் புலவர்களுக்கு இல்லை. ஆனால் இன்றைய உலகம் புரட்சிப் பாதையில் நடைபோட்டு வருகின்றது. எல்லார்க்கும் எல்லாம் இருப்பதான இன்ப உலகைக் காண எல்லாரும் துடிக்கின்றனர். பிச்சைக்காரர் இல்லாத நாடுதான் நாகரிக நாடு என்னும் கருத்து விரைவாக வளர்ச்சி பெற்று வருகின்றது. ஒவ்வொரு நாட்டினரும் ''எங்கள் நாட்டில் பிச்சைக்காரர் இல்லை'' என்று பெருமை பேசிக்கொள்ளப் போட்டி போடுகின்றனர். பிச்சையெடுக்கும் வழக்கத்தை விரட்டியடிக்க நம் நாட்டிலும் பல்லாண்டுகளாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 1945-ஆம் ஆண்டில் பிச்சையெடுப்புத்தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பிச்சையெடுப்போர்க்கு உரிய தண்டனைகளும் இச்சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளன. பிச்சையெடுப்போர் தண்டனைத்தொகை கட்ட வேண்டும், இல்லாவிட்டால் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. எனினும் காப்பு இல்லங்கள் இருக்கும் இடங்களில் சிறைத் தண்டனைக்குப் பதிலாக அவர்கள் அங்கு அனுமதிக்கப்படுவர். பிச்சையெடுப்புத் தடுப்புச் சட்டத்தைக் காவல் துறையினர் செயல்படுத்தி வருகின்றனர்.

பிச்சைக்காரர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். நல்ல உடல் நலம் பெற்றிருந்தும் பிச்சையெடுப்போர். நோயினால் வலிவிழந்து வேலை செய்ய இயலாமல் துன்புறுவோர் என்னும் இரண்டு வகையினரை நாம் அன்றாடம் காண்கின்றோம். தமிழக அரசு பிச்சைக்காரர்களுக்கென இரண்டு காப்பு இல்லங்களை நடத்தி வருகின்றது. சென்னையை அடுத்த மேம்பாக்கத்தில் ஒன்றும், காஞ்சிபுரத்தில் ஒன்றுமாக அவை இயங்கி வருகின்றன. சென்னை நகரிலே ஓட்டேரி என்னும் இடத்தில் ''தயா சதன்'' என்னும் தனிப்

பட்ட நிறுவனத்தார் பிச்சைக்காரர் இல்லம் ஒன்றை நடத்தி வருகின்றனர். இதற்கு அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது. சென்னை கிருஷ்ணாம் பேட்டையில் மாநகராட்சி, தன் செலவிலேயே ஒரு பிச்சைக்காரர் இல்லத்தை நடத்தி வருகின்றது. செங்கற்பட்டு திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், மதுரை, நாகர் கோயில், சிதம்பரம் முதலிய நகராட்சிகள் பிச்சைக்காரர் இல்லங்களை நடத்தி வருகின்றன. இவற்றிற்கு அரசு உதவித் தொகை அளித்து வருகின்றது.

1961-ஆம் ஆண்டில் எடுக்கப்பெற்ற மக்கள் தொகைக் கணக்குப்படி தமிழ் நாட்டில் 40,000 பிச்சைக்காரர்கள் இருந்தனர். இந்த ஆண்டு அதாவது 1971 ஆம் ஆண்டில் எடுக்கப்பெற்ற பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை விவரம் இன்னும்

காரணமாகப் பிச்சையெடுக்கும் நிலைக்கு விரட்டப்படுகின்றனர். பரம்பரை பரம்பரையாகப் பிச்சையெடுக்கும் தொழிலிலேயே ஈடுபட்டிருப்போரும் உண்டு. தொற்றுநோய் காரணமாகப் பிச்சைக்காரரின் எண்ணிக்கை ஏறிக்கொண்டே போவதும் உண்டு. எனவே தொல்லை என்று மட்டும் இதனை எடுத்துக் கொள்ளாமல், இது ஒரு சமுதாய நலப்பிரச்சினை என்று கருதி நல்ல முறையில் தீர்த்து வைக்க முயல்வதே அனைவருக்கும் கடனாகும்.

1969-70-ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக் குழு பிச்சைக்காரர்கள் பிரச்சினையை நன்கு ஆராய்ந்து அறிக்கை ஒன்று அனுப்பியுள்ளது. பிச்சைக்காரர் தொல்லையை நீக்குவதற்குரிய வழிவகைகளையும் அது எடுத்துக் கூறியுள்ளது. பிச்சைக்காரர்களின் துயரத்தைப் போக்கத் தமிழக அரசு

வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் ஆறு சிறப்பு இல்லங்களைத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது. மூன்று இல்லங்களைக் கட்டுவதற்கான உத்தரவுகள் ஏற்கனவே வெளியிடப் பெற்றுள்ளன. கீழ்க்கண்ட மூன்று இடங்களில் தொழு நோயாளர் காப்பு இல்லங்கள் உடனடியாக திறக்கப்பெறும்.

(1) சென்னை-செங்கற்பட்டு நெடுஞ்சாலையில் செங்கற்பட்டு அருகிலுள்ள பரனூர் கிராமம்.

(2) தென் பிராந்திய நெடுஞ்சாலையில் உளுந்தூர் பேட்டைக்கு அருகில்.

(3) சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் பரகூர் அருகில்.

ஒவ்வொரு இடத்திலும் கட்டடம் கட்ட ஏழு லட்ச ரூபாய் செலவாகும். இச்செலவிற்கான அனுமதியை அரசு வழங்கியுள்ளது.

இரத்தல் இழிவு ஈயேனெனல் அதனினும் இழிவு

நமக்குக் கிடைக்கவில்லை. எனினும் 1961-ஆம் ஆண்டை விட 50 சதவீதம் எண்ணிக்கை அதிகமாகியிருக்கும் என்று கருத இடமுண்டு. எனவே தமிழ் நாட்டில் இன்றைக்கு ஏறக்குறைய 60,000 பிச்சைக்காரர்கள் இருக்கின்றார்களெனக் கொள்ளலாம்.

" பிச்சைக்காரர் தொல்லை " என்று அடிக்கடி பேசுகின்றோம். தொல்லை என்பது உண்மைதான். எனினும் பிச்சைக்காரர்கள் வேண்டுமென்றே நமக்குத் தொல்லை கொடுக்கின்றார்களென்று எண்ணிவிடக் கூடாது. நமக்குத் தொல்லை கொடுப்பது அவர்களுடைய நோக்கமன்று. தீராத நோய்வாய்ப்படும் காரணத்தால் சிலர் உற்றார் உறவினரால் கைவிடப்படுகின்றனர். இத்தகையோரும், சூழ்நிலை

தீவிர நடவடிக்கை எடுத்துவருகின்றது. 1970-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ஆம் தேதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிச்சைக்காரர் பற்றிய எல்லாச் செய்திகளும், கருத்துக்களும் விவரமாக ஆராயப்பெற்றன. தமிழ் நாட்டின் மாநகரங்களிலும் மற்றைய நகரங்களிலும் பிச்சைக்காரர் தொல்லையைப் படிப்படியாக நீக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. பிச்சைக்காரர்களிலும், நோயுற்றோர்களையே முதலாவதாகக் கவனிக்க வேண்டும். அவர்களிலும், தொழுநோயால் துன்புறுவோரை உடனடியாகக் கவனித்து அவர்களுக்கு ஏற்ற நல்வாழ்வை அளிக்க ஆவன செய்தாக வேண்டும். எனவே, தொழுநோய் வந்து வருந்துவோர், தங்கி, மருத்துவச்சிகிச்சை பெற்று, மறுவாழ்வு பெறு

பிச்சைக்காரர் பிரச்சினை பெரும் பிரச்சினையாகும். அரசால் மட்டும் அப்பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவை. பொருள் வசதி படைத்தோர் அனைவரும் ஆதரவு காட்ட வேண்டும். பிச்சைக்காரர் நலம் பேணவும், பொது மக்களிடமிருந்து நிதி திரட்ட அரசு முடிவு செய்துள்ளது. இந்நிதிக்கு அரசும் தன் பங்கினைச் செலுத்தும், எனவே பொது மக்கள் உளமகிழ்ந்து இந்த நற்பணிக்கு அள்ளி அள்ளித் தர முன்வர வேண்டும்.

"கரப்பார் இன்றேல் இரப்பார் இல்லை"

"பிச்சையெடுத்தேனும் பிச்சையை
நீக்குவோம்"

செய்திகள்! செய்திகள்!

நீந்தும் குழந்தைகள்

தவழும் குழந்தைகளுக்குச் சரியாக நடக்கத் தெரியு முன்பே நீச்சல் சொல்லித் தரப்படுகிறது, ஜெர்மன் நாட்டில்.

இதற்காக ' கோலன் ' நகரிலுள்ள உடற் பயிற்சிக் கல்லூரியிலும், ஜெர்மானியக் குடியரசின் பிற பகுதிகளிலுள்ள விளையாட்டு நிறுவனங்களிலும் வசதிகள் உள்ளன.

தாய்மார்கள் அங்குச் சென்று தத்தித் தத்தி நடக்கும் தங்களது குழந்தைகளுக்கு நீச்சல் கற்றுத் தருகிறார்கள். குழந்தைகள் உடல் சளியினால் பாதிக்கப் படாமல் இருக்கும் பொருட்டுச் சற்று வெதுவெதுப்பான நீரை நீச்சலடிக்கும் தொட்டியில் நிரப்பி வைக்கிறார்கள். அதில் குழந்தைகளுக்கு நீச்சல் கற்றுத் தரப்படுகிறது.

5 விநாடிக்கு ஒரு [கார்] 12 விநாடிக்கு ஒரு [குழந்தை]

அமெரிக்காவில் ஒவ்வொரு 12 விநாடிக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது. ஆனால், ஐந்து விநாடிக்கு ஒன்று வீதம் கார் உற்பத்தி ஆகிறது.

இங்கிலாந்தில் சுமார் 120 லட்சம் கார்கள் உள்ளன. ஸ்பெயினில் சுமார் 5 லட்சம் கார்கள் இருக்கின்றன. இந்தியாவில் 10 லட்சம் மோட்டார் வண்டிகள் உள்ளன. மாஸ்கோவின் அகன்ற தெருக்களைக் கார் அடைத்துக் கொண்டு விடுகிறது. அவ்வளவு கார்கள் அங்கே. 1969 கணக்குப்படி, ரஷ்யாவில் 16,000 மக்கள் கார் விபத்தில் உயிரிழந்திருக்கிறார்கள். மேற்கு நாடுகளில் அதே ஆண்டில் மொத்தம் 17 லட்சம் பேர் உயிர் இழந்திருக்கிறார்கள்.

இங்கிலாந்து நாடு 1969-ல் நூறு கோடி பவுன்கள் மதிப்புக்கு மோட்டார் கார் ஏற்றுமதி செய்திருக்கிறது.

நிலத்துக்குள் கடல்

நமது தமிழகத்தில் நிலத்துக்கு அடியிலுள்ள நீரை வெளிக்கொணர்ந்து பாசனத்திற்குப் பயன்படுத்த அரசு தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறதல்லவா ?

ரஷ்ய நாட்டிலும் இந்த நிலத்தடி நீரில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. கழகஸ்தான் என்ற பகுதியில் பாலைவனம் போன்ற பகுதிகளில் நிலத்திற்கடியில் 70 இடங்களில் கடல் போல் வற்றாத நீரூற்றுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 20 லட்சம் சதுர கிலோ மீட்டர் நிலத்தில் இந்த நீரூற்றுக்கள் உள்ளன.

இந்த நீரூற்றுக்களிலிருந்து விநாடிக்கு 3,900 கனமீட்டர் நீர் கிடைக்கும். அதைக் கொண்டு ஏறத்தாழ 15 கோடி ஹெக்டேர் நிலத்திற்கும், 40 லட்சம் ஹெக்டேர் மேய்ச்சல் தரைக்கும் பாசன வசதி செய்ய முடியுமெனக் கணக்கிட்டிருக்கின்றனர்.

ஏற்கனவே சுமார் 35 நகரங்களுக்கும் பல கிராமங்களுக்கும் இந்த நீர் பயன்படுத்தப்படுகின்றது.

1500 அழகிகள்

ஜெர்மனி நாட்டில் மூனிக் நகரில் 1972-ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற விருக்கின்றன. விளையாட்டுப் போட்டிகளைக் காண உலகெங்குமிருந்து வரும் ரசிகர்களுக்கு வழிகாட்டிகளாக வரவேற்பாளர்களாகப் பணியாற்ற 1,500 அழகு மங்கையரைத் தேர்ந்தெடுக்கப் போகின்றனர். இதற்காக ஏற்கனவே எட்டுப் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு மூனிக் நகருக்கு வந்துவிட்டனர். வந்தவர்களில் ஒருவர் இந்தியப் பெண்மணி. பெயர் ரவிபாலா. பிரேசில், கானா, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்தும் இந்த வரவேற்பாளர்கள் வந்துள்ளனர்.

மூனிக் நகரில் ஒலிம்பிக் அரங்கத்தில் போடப்படும் கூரைதான் உலகத்திலேயே மிகப் பெரிய கூரையாகும். 80 ஆயிரம் சதுர மீட்டர் அளவுள்ள இந்தக் கூரை சிறுசிறு இரும்புத் தகடுகளைக் கொண்டு இணைக்கப்பட்டதாகும்.

ஒலிம்பிக் விளையாட்டினையொட்டி ஜெர்மனியில் பரிசுச் சீட்டு ஒன்றும் நடத்தப்படுகிறது. அதில் 5 கோடி பரிசுச் சீட்டுகள் விற்கத் திட்டமிட்டுள்ளனர். அதிலிருந்து கிடைக்கும் நிதி விளையாட்டுக்கள் அமைப்புக் குழுவிற்குத் தரப்படும்.

அண்மையில் வந்த அறிவிப்புகள்
வெயிலுக் கேற்ற நிழலுண்டு...
முதல்வர் கலைஞர் அவர்களின் 48-வது பிறந்தநாளையொட்டிச் சென்னை நகரில் 48 இடங்களில் சீரணியினர் நிழற்கொடை வழங்குகின்றனர்.
செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரே நாளில் நிலமற்ற 42000 - ஏழை எளியவர்களுக்கு நிலப்பட்டா - மனைப் பட்டாக்கள் வழங்கப் பெற்றன.
தமிழ்நாடு உணவு விடுதி
சென்னையில் சிற்றுண்டிகளின் விலைகளைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
தமிழ்நாடு உணவு விடுதி
விலை விவரம்
தோசை 25 காசு
வடை 12 காசு


தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை
பயிர்களுக்குப் பூச்சி மருந்து தெளிக்க 2 ஹெலிகாப்டர் விமானம் வாங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. 10 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு இந்த விமானங்கள் பயன்படும்!
கும்மிடிப்பூண்டியில் நடமாடும் மருத்துவ மனை துவக்கப்பட்டது. தமிழகமெங்கும் கிராமங்களுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்படும்.
நடமாடும் மருத்துவமனை
ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது!
பிச்சைக்காரர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி திரட்டுகிறார் கலைஞர்!

அறிவுப் பயணம்

'தமிழரசு' கைத்தறி இருவார விழா மலர் என் மனத்தைக் கவர்ந்தது.

அட்டைப் படம் ஓவியக் கலையின் கோபுரமாயிருந்தது. மலர்களையும்—சின்னக் குழந்தைகளையும் அட்டையில் இதே அழகோடு வெளியிட்டால் நல்லது.

''ஈசன் விறகு விற்றான்; அண்ணா கைத்தறித் துணி விற்றார்'' என்கிற பாசொலியின் கற்பனை உருக்கமானது.

மார்டின் லூத்தரைப் பற்றிய செய்திகள், பயணக் கட்டுரை படிக்கிறேனா இல்லை நான் அறிவுப் பயணம் செய்கிறேனா என்கிற திகைப்பினை என்னில் உருவாக்கின.

—நா. காமராசன், சென்னை-14.

வாழ்க வட ஆர்க்காடு

இலண்டன் நகரத்துப் போக்குவரத்தினை ஒரு தமிழர்—அதுவும் எங்கள் மாவட்டத்துக்காரர்



திறம்பட நிருவகிக்கிறார் என்பதை அறிந்து பெருமகிழ்வு எய்துகிறேன்! வாழ்க அவர்!

—கே. எஸ். மணி, வேலூர்.

குறள் வாழ்க !

குற்றவாளிகளைத் 'திருத்துவதற்கு அருமையான அறிவுரைகளைக் கூறியிருக்கும் சீதாபதியைப் பாராட்டுகிறோம். வள்ளுவரின் 'இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யாக்கால்' என்ற குறள் இடமறிந்து பயன்படுத்தியிருப்பது போற்றலுக்குரியது.

—ஏ.கே. ராமன், தஞ்சை.

தக்க தலைவருண்டு—பயமில்லை மனமே !

ஏழை-நடுத்தர மக்களின் நல்வாழ்வுக்கு அருமையான திட்டங்கள் உருவாகியிருக்கின்றன. வளமான வாழ்வு—அமைதியான வாழ்வு அவர்களை நாடி வருகிறது—என்பதைத் தெளிவாக்கியுள்ளது, 'வீடு உண்டு; வேறு என்ன வேண்டும் ?' என்ற கட்டுரை. தமிழக அரசின் புதிய புதிய திட்டங்களை நிறைவேற்றி வைக்க, தகுந்த குடிசை மாற்று வாரியத் தலைவர் கிடைத்து விட்டார் ; ஏழைகளுக்கு இனிக் கவலையே இல்லை !

—என். ஆர் சந்திரன், கோவை-9

கவர்ந்த கைத்தறி !

கைத்தறி விழா மலரில் கருத்துக்குகந்த கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறீர்கள். கைத்தறி மாளிகை, திசையெட்டும் எழில் பரப்பும்தென்னாட்டுக் கைத்தறித் தொழில், கைத்தறிக் கண்காட்சியில் கண்டதும் கேட்டதும் ஆகிய கட்டுரைகள் என்னைக் கவர்ந்தன.

—எச். கமலவல்லி, முகவை.

பயனுள்ள கட்டுரை

கற்பது எப்படி— பயனுள்ள கட்டுரை. கற்றலின் முப்பெரும் பிரிவைத் தெளிவுற எடுத்துக் காட்டிய கட்டுரை ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

—கோ. மீனமணாளன், சேலம்-5.

வெண்பாப் போட்டி-11

ஈற்றடி: இரந்தும் ஒழிப்போம் இரப்பு

முடிவு நாள்: 15—6—1971

பரிசு ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1

பிச்சைக்காரர்

மறுவாழ்வு நிதிக்காக

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் வாரி வழங்கிடும்
ஏராளப் பரிசுகள்! மொத்தப் பரிசுத் தொகை:

38 லட்சம் ரூபாய். 3333 பரிசுகள்

ஜூன் 3ல் முதல்வர் பிறந்த நாளில் 33-வது குலுக்கல் துவக்கம்

சிறப்புப் பரிசுகள்: ஒரு முதற் பரிசு **10** லட்சம் ரூபாய்

- ஒரு இரண்டாவது பரிசு 2 லட்சம் ரூபாய் • ஒரு மூன்றாவது பரிசு 1 லட்சம் ரூபாய்
- 30 நான்காவது பரிசுகள் (ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபாய்) ... 3 லட்சம் ரூபாய்

100 பேருக்கு ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 5000 ரூபாய்
100 பேருக்கு ஆறாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 3000 ரூபாய்
100 பேருக்கு ஏழாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 2000 ரூபாய்
1000 பேருக்கு எட்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 1000 ரூபாய்
2000 பேருக்கு ஒன்பதாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 100 ரூபாய்

துவக்கம் ஜூன் 3 குலுக்கல்: 12-7-19

இதுவரை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் உருவாக்கிய லட்சாதிபதிகள் எண்ணிக்கை: 245

வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9.
10 வரிசைகள் வெளியிடப்பட்டது
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு, சென்னை-2.

10 வரிசைகள்
இவ்வளவு பரிசுகளுக்கும்
உரிய சீட்டு
ஒன்றின் விலை ரு. 1/- தான்

செலவு ஒரு ரூபாய்

வரவோ பல லட்ச ரூபாய்





தமிழரசு

மலர் 1 1971 ஜூன் 16 இதழ் 2

இந்த இதழில்

முகமும் முப்பாலும்

சிங்காரச் சென்னையிலிருந்து
– செந்தமிழ்க் காஞ்சி வரை

துள்ளி வரும் புள்ளி விவரம்

திருவாளர் பொன்மொழியார்

நாளைய தலைமுறை

அன்னை (கவிதை)

சாதனைக்கு உதவுவோம் (கவிதை)

முதலும் முடிவும்

மாம்பழம் உண்ண வந்த
மாஸ்கோ மங்கையர்

வட சென்னையிலே வளரும் படகு

வெண்பாப் போட்டி

முதல்வர் எழுதும்

இனியவை இரு

அட்டையிலே

இரண்டாம் ஆண்டை எட்டிப்பி
'தமிழரசின்' உருவகம்!

நான்காண்டுகளில் நடைபெற்ற சிறப்புப் பணிகள்

காஞ்சிபுரத்தை இம்மாவட்டத்தின் தலைநகராக்கியது.

வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2¼ கோடி ரூபாயில் குடிநீர்த்திட்டம், இணைப்புச் சாலைகள் அமைத்தல், ஏரிகளைப் பராமரித்தல், கிணறு, குளங்கள் ஆழப்படுத்துதல், பல்லாயிரக் கணக்கான ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு அளித்தல், குறுகிய காலத்தில் பயனளிக்கும் வகையில் நடைபெற்றன.

விவசாயத்தில் பின் தங்கியிருந்த மாவட்டத்தைப் பசுமைப் புரட்சித்திட்டத்தின்கீழ், அமோக விளைச்சல் தரும் நெல்வகைகளைப் பயிரிட்டு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறச்செய்து மக்கள் மன நிறைவு பெற வழி வகுக்கப்பட்டது.

எல்லாக் கிராமங்களுக்கும் அரிசன மக்கள் வாழும் எல்லாக்குக்கிராமங்களுக்கும் மின்வசதி செய்து கொடுக்கப்பட்டு, தமிழகத்திலேயே முதலிடம் பெற்றது இம்மாவட்டம்.

42,000 ஏழை விவசாயிகளுக்கு நிலப் பட்டாவும், குடி மனையற்ற ஏழைகளுக்குக் குடிமனைப் பட்டாவும் வழங்கப்பட்டன.

14 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு அரிசன மக்களுக்குக் குடிமனை வழங்கத் திட்டம் தீட்டப்பட்டு அமுலாக்கப்பட்டு வருகிறது.

காஞ்சியில் 25 லட்சம் ரூபாய் அரசு மானியத்துடன் ஒரு சரிகைத் தொழிற்சாலை அமைத்தல்.

மாமல்லபுரத்தைச் அழகிய சுற்றுலா நகரமாக்க 1 கோடி ரூபாய் மதிப்புக்குத் திட்டந் தீட்டப்பட்டுள்ளது.

20,000 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

கிராமத்திலுள்ள ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு, திருவள்ளூர் ஆகிய இடங்களைத்துணை நகரங்களாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

வேலையற்றோர் பிரச்சினை

வேலையற்றோர் பிரச்சினை இன்று பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. உணவுப் பிரச்சனையைப் போல் இதுவும் முக்கியமானதேயாகும். இதற்குத் தீர்வு காண்பதில் மைய அரசும், மாநில அரசும் தீவிரமாகப் பாடுபட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் துவக்கப்பட்டுள்ளது தான் கிராமப்புற வேலை வாய்ப்புத் தீவிரத் திட்டம்.

கிராமப் புறங்களில் ஏழை மக்களிடையே வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்காக மத்திய அரசு கொடுத்துள்ள இத் தீவிரத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டமும் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவிருக்கின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு ஒன்றியத்திலும் நூறு பேருக்கு இத்திட்டம், மூலம் வேலைவாய்ப்புக் கிடைக்கும். ஒவ்வொரு ஒன்றியத்திலும் நூறு பேருக்கு வருடத்தில் 10 மாதங்களுக்குக் குறையாமல் வேலை காடுப்பதற்கு, சம்பளத்திற்கென ரூ. 1 லட்சமும், வேலைக்கு வண்டிய பொருள்கள் வாங்குவதற்கு ரூ. 25 ஆயிரமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட வலைகள் எடுத்துக்கொள்ளப்டும் :—

(அ) கிராமச் சாலைகள் அமைத்தல்

(ஆ) நிலச் சீர்திருத்தம் (ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களின் வளத்தினைப் பெருக்குதல்)

(இ) சாக்கடைகள், கரைகள் கட்டுதல்

(ஈ) குடிநீர்ப் பாதுகாப்பு வேலைகள்

(உ) சிறுநீர்ப்பாசனப் பாதுகாப்பு வேலைகள்

(ஊ) மண் வளப் பாதுகாப்பு

இவ்வாண்டு செங்கற்பட்டு மாவட்டத்தில், இரண்டாம் நிலையைத் தாண்டிய 10 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படடுள்ளது.

இந்த வேலைவாய்ப்புத் தீவிரத் திட்டத்தினைச் சீரான, பயன்தரும் முறையில் செயல்படுத்த வட்டார அளவில், கோட்ட ஆட்சியாளரைத் தலைவராகவும் ஊராட்சி ஒன்றிய ஆணையரைச் செயலாளராகவும், ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர், தொகுதி சட்டமன்ற உறுப்பினர், வட்டார சீரணித் தலைவர் முதலியவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும்.

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வட்டம்பாக்கம் ஊராட்சி எல்லையில் ரூ. 5,000 மதிப்பீட்டில் அமையவிருக்கும் வட்டம்பாக்கம் — பனப்பாக்கம் 3 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சாலை வேலையைத் தமிழக முதல்வர் அவர்கள் இத்தீவிரத் திட்டத்தின்கீழ் மாநிலத்தின் முதல் வேலைத் திட்டமாக மே 16-ஆம் நாள் அன்று துவக்கி வைத்தார்கள். இச்சாலை வேலை 20 பேர்களைக் கொண்டு 65 நாட்களில் முடிக்கப்படும்.

இத்திட்டம் செயல்படுத்தப்படும் வட்டாரங்கள் ஒவ்வொன்றும் ஐந்து பகுதிகளாக வகுக்கப்பட்டு, பல வேலைத் திட்டங்கள் 10 மாதங்களுக்குள் முடிக்கப்படவிருக்கின்றன. ஆதலால் இத்திட்டம் மூலம் வேலை வாய்ப்புப் பெறும் கிராம மக்கள் 5 மைலுக்கு மேல் வேலை செய்யும் இடங்களை நாடிச் செல்ல வேண்டிய சிரமும் பயணத்திற்காகும் செலவும் தவிர்க்கப்படுகிறது.

யாதொரு நபருக்கும் வேலை கிடைக்காத நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்து, குடும்பத்திற்கு ஒரு நபர் விகிதத்தில் வேலை வாய்ப்புக் கொடுப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். வேலை வாய்ப்புப் பெறும் ஒவ்வொரு நபருக்கும் மாதம் ரூ.100 சம்பளமாகக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.



18. மின்விளக்கின் தாயகம்

ஏறக்குறைய எழுநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய நகரம் எய்ந்தோவன். பதினைன்காம் நூற்றாண்டு முதல் சுமார் மூன்று நூற்றாண்டுகள் அவ்வப்பொழுது பகைவர்களின் பலத்த முற்றுகைகளுக்கும் படையெடுப்புகளுக்கும் இலக்காகித் துன்புற்ற நகரம் இது. ஸ்பெயின், பிரான்சு, ஆஸ்திரியா ஆகிய நாட்டினரின் கரங்களில் மாறி மாறித் தவழ்ந்திட்டது இந்நகரம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈராயிரவரைக் கொண்டிருந்த இந்நகரம் இன்று 1,85,000 மக்களின் வாழ்விடமாக இருந்து வருகிறது.

எய்ந்தோவனுக்கு ஏற்றமும் எழிலும் கூட்டுவது பிலிப்ஸ் நிறுவனமாகும். மின்னியல் கருவிகளைத் தயாரிப்பதில் மிகவும் சிறந்து விளங்கும் பிலிப்சின் சாதனைகளைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

1879-ஆம் ஆண்டில் தாமஸ் ஆல்வா எடிசன் முதன்முறையாக மின் விளக்கைக் கண்டு பிடித்தார் என்பது பள்ளியில் நாம் பெற்ற பாடம். விஞ்ஞானத்தின் வியத்தகு சாதனை பார் முழுதும் சென்று பரவும் பொருட்டு 1892-ஆம் ஆண்டில் எய்ந்தோவனில் கெராட் பிலிப்ஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட பிலிப்ஸ் நிறுவனத்தின் பீடுமிக்க தொண்டும் நம்மால் அறிந்து பாராட்டப்பட வேண்டிய ஒன்ருகும். நாளொன்றுக்கு 350 விளக்குகளைத் தயாரிக்கும் திறனோடு இந்த நிறுவனம் தொடங்கப் பட்டதாம். இன்று இங்கு உருவாகும் மின்விளக்குகளின் வகைமட்டும் நாற்பதாயிரம் ! பத்துத் தொழிலாளிகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பிலிப்ஸ் நிறுவனத்தில் இன்று உலகம் முழுவதும் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்டோர் பணி புரிகின்றனர்.

சின்னஞ்சிறு வண்ண விளக்குகள் முதல், பெரிய சாலைகளில் ஒளியை வாரி வழங்குகின்ற பிரகாசமான விளக்குகள் ; அழகுச் சாதனங்கள் முதல் அடுக்களைக் கருவிகள் ; இன்னும் செவிக்கு நல்விருந்து வழங்கும் வானொலிப் பெட்டிகள் முதல் செவிகேளாரின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஊட்டும் துணைக் கருவிகள் முதலியவை (Hearing Aid) பிலிப்ஸ் நிறுவனத்தாரால் சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டிருப்பதைப் பார்த்தேன். தொலைக்காட்சிக் கருவிகளும், மேனுடுகளில் தொழில் துறையில் புரட்சியைப் புகுத்திவிடும் எலக்ட்ரானிக் கருவிகளும், மருத்துவத் துறையின் உன்னத வளர்ச்சிக்கு உதவிடும் கதிரியக்கக் கருவிகளும் பிலிப்ஸ் நிறுவனத்தினரால் உற்பத்தி செய்யப்படுகின்றன. மின்னியலின் வரவுக்குப் பிறகு, விஞ்ஞானம் அடைந்துள்ள மகத்தானதொரு முன்னேற்றத்திற்கு எடுத்துக்காட்டாக பிலிப்ஸ் நகர் விளங்குகிறது. ஒளி, ஒலி பற்றிய எல்லாத் துறைகளிலும் ஒப்பற்ற சாதனைகளை ஆற்றிவரும் பிலிப்ஸ் நிறுவனத்தாரிடம் உரையாடும்பொழுது, தமிழகம் முழுவதற்கும் மின் வசதியளிக்கத் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதை நான் தெரிவித்ததும் அந்நிறுவனத்தின் உரிமையாளர் பெருமகிழ்ச்சி கொண்டார்.

பிலிப்ஸ் நிறுவனத்தின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவின் நினைவாக " எவாலுவன் " (Evoluon) என்ற பெயரில் மிகப் பெரியதோர் கட்டடத்தை உருவாக்கியுள்ளனர். அது பூமியைப்போன்று வட்ட வடிவில் அமைந்துள்ளது. மின்னியலில் மட்டுமல்ல, கட்டடக் கலையிலும் பிலிப்ஸ் நிறுவனத்தார் வல்லுநர்கள் என்பதற்கு அது ஓர் எடுத்துக்காட்டு. அதை பிலிப்சின் சாதனைகளை விளக்கும் கலைக்கூடமாக, காட்சிக்கூடமாக ஆக்கியுள்ளனர். நூற்றுக்கணக்கானவர்கள் அதைத் தினம் கண்டு களிக்கின்றனர்.

ஜூலைத் திங்கள் பதின்மூன்ரும் நாள் இரவு மீண்டும் ஆம்ஸ்டர்டாம் நகருக்குத் திரும்பி வந்தோம். மறுநாள் காலை 11-25 மணிக்கு ஆம்ஸ்டர்டாமை விட்டு இலண்டன் மாநகருக்குக் கிளம்பினோம்.

இலண்டன் விமான நிலையத்தை அடைந்தோம். அங்கு அயல் நாட்டுப் பொது நல விவகாரத் துறைச் செயலாளர் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் துணை ஹைக்கமிஷனர் திரு வி. சி மார்டின், ஆசிய ஆஸ்திரேலியக் குழுவின் தலைவர் திரு எஸ். எஸ். ஹார்டர்ன், இந்திய ஹைகமிஷன் அதிகாரிகள் இலண்டனில் வசிக்கும் தமிழ்ப் பெருமக்கள் பலரும் அன்போடு வரவேற்றனர்.

அன்று மாலையில் இலண்டனில் உள்ள இந்தியப் பத்திரிகையாளர்களும், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் என்னைச் சந்தித்தனர். இந்தியக் குடியரசின் செய்திகளை உலகெங்கும் எடுத்துச் செல்லும் இந்தியப் பத்திரிகையாளர்களின் பயன்மிக்க பணியினைப் பாராட்டியதோடு, தமிழகம், இந்தியாவில் நன்கு நிர்வகிக்கப்படும் மாநிலங்களில் ஒன்று என்னும் உண்மையினை வெளியார்க்கு உணர்த்தியுள்ளமைக்காக என் ஆழ்ந்த நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டேன். அதனைத் தொடர்ந்து சூடும் சுவையும் மிக்க, நுணுக்கமும் ஆழமும் மிக்க, கேள்விக் கணைகளைச் செய்தியாளர்கள் தொடுக்கலாயினர். இந்தப் பேட்டி சுமார் ஒரு மணி நேரம் தொடர்ந்தது.

கேள்வி : கடந்த இரண்டு வாரங்களாக ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் செய்துள்ளீர்கள். தாங்கள் தொழில், வர்த்தகம் சம்பந்தமாக எந்த வகையான பேச்சு வார்த்தை நடத்தினீர்கள் ?

பதில் : நான் ஒரு மாநிலத்தின் முதல் அமைச்சர் தான் ! ஓர் அந்நிய நாட்டுடன் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள் எதுவும் இந்திய அரசினுல் தான் முடிவு செய்ய முடியும் என்பதை நீங்கள்

யாவரும் அறிவீர்கள். நான் பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் மட்டும்தான் நடத்தியுள்ளேன்.

கேள்வி : நீங்கள் ஐ.சி.ஐ.க்குச் (இங்கிலாந்தில் உள்ள முக்கிய இரசாயனத் தொழிற்சாலை) செல்கிறீர்களா ? அப்படி நீங்கள் செல்வீர்களாயின் மணலியில் பெட்ரோ-கெமிகல் தொழிலகங்களைத் துவக்குவதற்கும் இதற்கும் தொடர்பு உண்டா?

பதில் : நான் ஐ.சி.ஐ. செல்வது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. பெட்ரோ-கெமிகல் தொழிலகங்கள் துவக்கும் பிரச்சினை குறித்து நான், இந்தியப் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளேன். அது குறித்து ஒரு முடிவு விரைவில் எடுக்கப்படும்.

கேள்வி : தாங்கள் பாரிசில் தொழிலதிபர்கள்' சிலருடனும், வங்கி அதிகாரிகளுடனும் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விவரங்களைக் கூற முடியுமா ?

பதில் : நான் பாரிசில் வர்த்தகத் தொழிற் கழகத் தலைவரைச் சந்தித்தேன். எங்களது பேச்சு வார்த்தைகள் பொதுவாகவும், பூர்வாங்க அடிப்படையிலும் இருந்தன. குறிப்பிட்ட திட்டம் எதைப் பற்றியும் பேசிடவில்லை.

கேள்வி : இந்திய மாநிலங்கள் சிலவற்றில் நிலையில்லாத அரசு இருப்பது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் ?

பதில் : தேர்தலின் போது எந்த ஒரு குறிப்பிட்ட கட்சிக்கும் மக்கள் பெரும்பான்மை பலம் அளிக்கும் வகையில் வாக்களிக்காதது தான் காரணம்—என்று நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. கட்சி மாறுதல், கட்சிக்குள் ஏற்படும் பிளவு முதலியன மற்றக் காரணங்களாகும். இதற்குச் சான்றாக எந்தவொரு மாநிலத்தையும் குறிப்பிட்டு தான் விளக்கமளிப்பது முறையாகாது.



எய்ந்தோவன் நகரிலுள்ள பிலிப்ஸ் விளக்கு மாளிகை

கேள்வி : தமிழ் நாட்டில் நக்சல் பாரி இயக்க வளர்ச்சி பற்றி என்ன கருதுகிறீர்கள் ?

பதில் : தமிழ் நாட்டில் நக்சல் பாரிகளின் ஊடுருவல், ஹிப்பிகளின் ஊடுருவலைப் போன்றது. (என்று நான் கூறியதும் நிருபர்கள் அனைவரும் கொல்லெனச் சிரித்துச் 'சிறந்த ஒப்புவமை' என்றனர்).

கேள்வி : தேசியக் கொள்கையை உருவாக்குவதில் தி.மு.க. எந்த அளவிற்குப் பங்கேற்க இயலும் ?

பதில் : தமிழகத்தைப் பொறுத்த வரையில் அரசியலில் தி.மு.க.வுக்கு முக்கியப்பங்கு உள்ளது. மொழிக் கொள்கை—மாநிலத்துக்கு அதிக அதிகாரம் ஆகிய பிரச்சினைகளில் அதன் கொள்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இவை சம்பந்தப்பட்ட வரையில் மற்ற மாநிலங்களுக்கு நாங்கள் முன் மாதிரியாக இருக்கின்றோம்; தொடர்ந்து இருக்க விழைகிறோம்.

கேள்வி : எந்தமாதிரி வெளிநாட்டுக் கொள்கையை நீங்கள் ஆதரிப்பீர்கள் ?

பதில் : எங்கள் தலைவர், பேரறிஞர் அண்ணா, பதவிக்கு வருமுன்பே, நாங்கள் வெளிவிவகாரக் கொள்கையில் மத்திய அரசிடமிருந்து மாறுபட்டு நிற்கக்கூடாது என்ற நியதியை வகுத்து வைத்துள்ளார். இதுவே எங்கள் கொள்கையாக நீடிக்கிறது.

கேள்வி : மாநிலங்களுக்குச் சுயாட்சி அளிக்க மத்திய ஆளும் கட்சியோ, பிரதமரோ வழி வகுக்கக்கூடும் என்று எண்ணுகிறீர்களா ?

பதில் : யார் ' 'பிரதமராக இருக்க வேண்டும், எந்தக் கட்சி ஆட்சியிலிருக்க வேண்டும் என்பதல்ல பிரச்சினை. நாங்கள் கூறுவதெல்லாம் மத்திய அரசிடம் இவ்வளவு அதிகாரங்கள் குவிந்து மாநிலங்களின்மீது ஆதிக்கம் செலுத்தும்படியாக இருக்கக் கூடாது என்பதுதான். மாநில சுய ஆட்சி மத்திய அரசைப் பலப்படுத்துமேயல்லாது பலவீனப்படுத்தாது.

கேள்வி : மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் என்கிறீர்களே அதன் பொருளென்ன ? நீங்கள் பொருளாதார அதிகாரங்களைக் குறிப்பிடுகிறீர்களா? ஐரோப்பியப் பொதுச் சந்தையைப் போல இருக்க வேண்டுமென விரும்புகிறீர்களா ?

பதில் : மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்பதை விளக்குவது கடினம்—இது சிக்கல் மிகுந்த பிரச்சினை. இந்திய சுதந்திரத்துக்கு முன்பு அதாவது பாகிஸ்தான் பிரியுமுன்பு—வெளிநாட்டுக் கொள்கை, பாதுகாப்பு, இரயில்வே, தபால் போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை மட்டும் மத்தியில் இருந்திட வேண்டும்; மற்றவை மாநிலங்களிடம் இருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. ஆனால் பாகிஸ்தான் பிரிந்த பின்பு, அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள், இக்கருத்தைக் குறுக்கி, மத்திய அரசிடம் அதிக அதிகாரங்களைக் கொடுத்தார்கள். ஐரோப்பியப் பொதுச் சந்தை என்பது வளர்ந்த நாடுகளின் வர்த்தகச் சங்கம் போன்றதாகும். வளராத நாடுகளை ஐரோப்பியப் பொதுச் சந்தையிலுள்ள உறுப்பு நாடுகளுடன் ஒப்பிடுவது சரியல்ல.

கேள்வி : மற்ற மாநில முதலமைச்சர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கிறார்களா ?

பதில் : அவர்களுக்கும் அந்த விருப்பமிருக்கிறது. ஆனால் வெளிப்படையாகத் தெரிவிக்க அவர்கள் இன்னும் முன்வரவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. உதாரணமாக மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சியில் இருப்பது ஒரு சிலரைச் சுதந்திரமாகப் பேச இயலாமல் கட்டுப்படுத்துகிறது.

கேள்வி : மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுப்பது மத்திய அரசைப் பலவீனப்படுத்தும் என நீங்கள் கருதவில்லையா ?

பதில் : மத்திய அரசைப் பலவீனப்படுத்தாமலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வழியொன்று காண முடியும் என்றே நான் நம்புகிறேன்.

கேள்வி : மாநிலங்களுக்குச் சுய ஆட்சி அளிக்க அரசியல் சட்டத்தில் இப்போதுள்ள அதிகாரமே போதுமானதென நீங்கள் கருதவில்லையா ? அப்படியானால் உங்கள் கோரிக்கைக்கு அவசியமென்ன?

பதில் : அவசரப்பட்டு எந்த யோசனையையும் நாங்கள் கூறவில்லை. சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி டாக்டர் ராஜமன்னார் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், முன்னாள் தலைமை நீதிபதி திரு சந்திரா ரெட்டி ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். கூடிய விரைவில் இக்குழு தனது முடிவை அறிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் நாங்கள் எமது கோரிக்கையை வற்புறுத்துவோம்.

கேள்வி : மாநில சுயாட்சி என்ற உங்கள் கோரிக்கையை ஏற்றால் இந்திய ஒற்றுமை கடுமையாகப் பாதிக்கப்படாதா ?

பதில் : உங்களுக்கு எதிரே சுவரில் தொங்கவிடப்பட்டுள்ள பல வண்ண ஓவியத்தைப் பாருங்கள்— ஒவ்வொரு வண்ணமும் தன் தனித்தன்மையுடன் தான் தோற்றமளிக்கிறது. இருந்தாலும் அனைத்தும் ஒருங்கிணைந்து சிறந்த எழிலோவியமாகத் திகழ்கிறது. இது போலத்தான் மாறுபாட்டுக்கிடையே ஒற்றுமை காண முடியுமென நான்நம்புகிறேன்.

கேள்வி : மாநில சுயாட்சிக்குத் தனி முயற்சி தேவையில்லை. நாளாவட்டத்தில் தானே அது வருமென நீங்கள் நினைக்கவில்லையா ?

பதில் : மத்திய அரசை மையமாகக் கொண்ட அரசியல் சட்டத்தில் ஏற்படும் மாறுதல், காட்டாறு போன்று கட்டுப்பாடின்றி இருத்தலாகாது சீரான அருவியைப் போல் இருக்க வேண்டுமென்பதிலேயே மத்திய அரசை நாங்கள் எச்சரிக்கிறோம். விரைவில் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வற்புறுத்துகின்றோம். ஒரே கட்சிதான் பல நூற்றாண்டுகளுக்கு, மத்தியிலும் மாநிலங்களிலும் ஆளும் என்ற அடிப்படையில் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டதாகவே நான் கருதுகிறேன். ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது. பல்வேறு மாநிலங்களில் பல வேறுபட்ட கட்சிகளும், மத்தியில் வேறு ஒரு கட்சியும் இப்பொழுது ஆட்சி புரிகின்றன. மத்தியிலும் மாநிலங்களிலும் வெவ்வேறு அரசியல் கட்சிகள் ஆளும் நிலைமையை எதிர்கொள்ள நம்மை நாமே பக்குவப்படுத்திக் கொள்வது நல்லது. சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் போக்கிற்கு இதை விட்டுவிடக் கூடாது என்று நான் கருதுகிறேன்.

கேள்வி : பலமான மத்திய ஆட்சியே நாட்டின் ஒற்றுமையையும் நன்மதிப்பையும் காக்கும் என்று வரலாறு கூறுகிறதே, உங்கள் யோசனை, ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்காதா?

பதில் : பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், செய்தித் தொடர்பு என்ற ஒருசில குறிப்பிட்ட காரியங்களுக்காகவே பலமான மத்திய ஆட்சி தேவை. இதனால், மாநிலங்களுடைய முழுவளர்ச்சிக்குத் தேவையான அதிகாரம் இருக்கக்கூடாது என்று பொருளல்ல !

கேள்வி : சென்ற பொதுத் தேர்தலில் பெரும்பான்மை பெற்ற உங்கள் கட்சியில் பிற்போக்குவாதிகள் நுழையாமல் தடுக்க நீங்கள் எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

பதில் : கார்குழலாள் கையில் சீப்பு இருக்கும்போது தன் கூந்தலிலே பேன் நுழைய விடுவாளா!

கேள்வி : மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டை தி. மு .க. நடத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்குமல்லவா?

பதில் : உங்கள் யோசனை ஏற்கப்பட்டால் அது கழகத் தமிழ் மாநாடாக இருக்குமே தவிர உலகத் தமிழ் மாநாடாக இருக்காது.

என் நினைவைவிட்டு என்றும் நீங்கிடாத பத்திரிகையாளர்களின் சந்திப்பிற்குப் பின்னர் பாரிஸ் நகருக்குப் புறப்பட்டேன்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை எமது அண்ணன் நடத்திவைத்த பாங்கிலை எண்ணி உளம் கனிந்தேன். அவர், அவருக்கே உரித்தான புன்முறுவல் பூக்கும் முகத்துடன் இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பில்லையே என்று எண்ணிய பொழுது என் கண்களில் நீர் மல்கியது.

ஆம்!

இதற்கு முன்னால் பாரிசுக்குச் சென்றபொழுது அதன் வனப்பையும் வளர்ச்சியையும் காணச் செல்லும் பார்வையாளனின் உணர்வே மிகுந்திருந்தது.

ஆனால், இம்முறையோ, உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் இடமான பாரிசிற்கு அதனைத் தொடங்கி வைக்கும் பேறுபெற்ற தமிழனாகச் சென்றேன்.

விமானம் மேலே.... மேலே .... மேலே.... பறந்தது.

என் இதயமோ அதற்கும் மேலே பறந்தது. அது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் பரந்த, வெளியில் பறந்தது. "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் ஞான வெளியில் பறந்தது. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்னும் பெருமையுடன் பறந்தது. "இனிமைத் தமிழ் மொழி எமது—எமக்கின்பம் தரும்படி வாய்த்த நல் அமுது" என்னும் கீதமிசைத்துப் பறந்தது.

உமிழ்ந்தசிறு பருக்கையினுல்
உயிர்வாழ் வோரும்
உரமிழந்து சாக்காட்டை
நண்ணு வாரும்

விஞ்ஞானத்தில் பிலிப்ஸ் நிறுவனத்தின் பங்கினை நன்கு எடுத்துக் காட்டும்
எவொலூஷன் காட்சிக் கூடம்



தமிழென்று தமிழரென்று
சிறிது தொண்டு
தாம் புரிவார்; அவர் பெருமை
அரசர்க் கில்லை

என்னும் புதுவைப் புரட்சிக் கவிஞரின் முழக்கம் என் நினைவில் ஒலித்தது.

ஆடம்பரத்தின் இருப்பிடம் எனக் கருதி உலகத்து மக்கள் நித்தமும் கூடுகின்ற பாரிஸ் மாநகரத்து மண்ணில் ஜூலை 15-ம் நாள் நந்தமிழின் நறுமணமும் வீசலாயிற்று.

மாநாட்டிற்குப் பேராசிரியர் பில்லியோசா தலைமை தாங்கினர். யுனெஸ்கோ நிறுவனத்தின் தலைமை இயக்குநர் திரு. மால்கம் ஆதிசேஷையா, தமிழக அன்றைய நிதியமைச்சர் எனது அன்புச் சகோதரர் திரு மதியழகன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

நான் என்னுடைய தொடக்க உரையில் எனது சொந்த விழியினும் மேலாகத் தமிழ் மொழியை மதிக்கிறேன் என்ற உணர்வோடு, இந்த மாநாட்டை நான் வரவேற்கிறேன் என்றேன். அப்படிப்பட்ட இந்த மாநாட்டில் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்கிறேன். நான், எனது குழந்தைகள் மழலைத் தமிழ் பேசுவதைக் கேட்டு வெகு நாட்களாயிற்று. ஆனால், திரு ஆதிசேஷையா அவர்களது தமிழ்ச் சொற்பொழிவைக் கேட்டதும் எனக்கு அந்த நினைவுதான் வந்தது.

தமிழில் பேசுவதன்மூலம் ஒரு பெரிய துணிச்சலான மாற்றத்தைச் செய்துகாட்டியமைக்காக, திரு ஆதிசேஷையா அவர்களைப் பாராட்டுகிறேன்.

பிரெஞ்சுப் பண்பாடானது தமிழ் நாட்டில் தனது செல்வாக்கை ஊடுருவிப் பரவவிட்டதாகச் சொல்ல முடியாது என்றபோதிலும், கடந்த நூற்றாண்டுகளில் தமிழர்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் பிரெஞ்சுப் பண்பாடு அறிமுகமானது என்பதை இந்த அனைத்துலக மாநாடு அறிவுறுத்துகிறது.

தமிழின் வளர்ச்சியில் பிரான்ஸ் கொண்டுள்ள ஆழ்ந்த நாட்ட
தமிழ்—பிரெஞ்சு

அண்மையில், சின்னுட்களுக்கு முன் "வெர்சேல்சு"க்குச் சென்றிருந்தேன். அங்கே, பிரான்சு—தமிழக உறவுகளைக் காட்டும் பொருள்களைக் காண விரும்பினேன். இந்தியாவுக்கு டூப்ளே எடுத்துச் செல்ல விரும்பியதும், ஆனால் மாறிவிட்ட சூழ்நிலையால் அவ்வாறு எடுத்துச் செல்ல முடியாமற்போனதுமான ஒரு கடிகாரத்தை எனக்குக் காட்டினார்கள். காலம் மாறிவிட்டது. எனவே அந்தக் கடிகாரம் வெர்சேல்சிலேயே இருக்கிறது.

நான் சென்ற வாரத்தில் பாரிசுக்கு வந்திருந்தபோது, இங்குள்ள இந்திய மாணவர்கள் என்னை ஒரு விருந்துக்கு அழைத்திருந்தனர். அந்த மாணவர்களிலே ஒருவர், பாரிஸ் நகரை ஏதோ பழந்தமிழ்ப் பெருவீரன் பாரியினுடையது என்பதுபோல் "பாரி நகர்" என்று குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்துள்ள தூதுக் குழுவில் பதினெட்டுப் பேர் உள்ளனர். ஆனால், அவர்கள் நான்கு கோடித் தமிழர்களின் பிரதிநிதிகள். இந்த முறையில், இந்த மாநாட்டில் வீற்றிருக்க எனக்கும் தூதுக் குழுவிற்கும் கடமையும் உரிமையும் உண்டு.

தமிழ், உலகின் பல பகுதிகளில் பரவியுள்ளது. தமிழர்கள் உலகெங்கும் சென்றுள்ளார்கள். ஆனால், தமிழ் மொழி—உதாரணமாக மொரிஷியஸ் தீவில் மறைந்து வருகிறது. இன்னும் வேறு சில நாடுகளிலுள்ள தமிழர்களும், தம் தாய் மொழியை மறந்துவிடக்கூடிய அபாயத்திலுள்ளனர். இந்த மாதிரியான நிலைமை தொடர்ந்து நிலவ அனுமதிக்கக்கூடாது.

தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளிலெல்லாம், தமிழைக் கற்பதற்கான வாய்ப்பிற்கும் தமிழறோடு தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொள்வதற்கான வாய்ப்பிற்கும் வகை செய்யப்பட வேண்டும்.

மொழிப் பிரச்சினைமீது கவனம் செலுத்துவது தவறோ குற்றமோ ஆகாது என்பதை, அண்மையில் நான் பல்வேறு ஐரோப்பிய நாடுகளைப் பார்த்தபோது கண்டேன்.

சுவிட்சர்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளில் தாய்மொழிப் பிரச்சினை, பிறதேசியபிரச்சினைகள் எதற்கும் குறையாத இடத்தைப் பெற்றுள்ளது. வரலாற்றுக்காலம் தொட்டு ஆழ்ந்த புலமை பெற்றது தமிழ் மொழியாகும். அது ஒரு செழுமையான மொழி. பாரதி போன்ற கவிஞர்கள் அதன் பெருமையைப் பாடியிருக்கிறார்கள்.

ஆனால், அந்தத் தொல் புகழையே போற்றிக்கொண்டு ஓய்ந்திருக்கக் கூடாது. சிந்தனைகளை உணர்த்தவும், விஞ்ஞான வளமிக்க — விண்வெளிப் பயணம் நடத்துகிற நவீன காலத்தின் செய்திகளைத் தெரிவிப்பதற்கும் ஏற்ற கருவியாய், வாகனமாய்த் தமிழ் மாறவேண்டும் என்பதனை நாம் உணரவேண்டும். தொழில் நுணுக்கம், அறிவியல், மருத்துவம் முதலியவற்றைக் கற்பிப்பதற்கு ஏற்ற பயிற்று மொழியாய் வளர்ந்தாக வேண்டும்.

தமிழ் வளர்வதற்காகத் தமிழ் நாட்டுக்கும் பிற நாடுகளுக்கும் இடையே மாணவர்களைப் பரிமாறிக் கொள்வது அவசியமாகும். வேற்று மொழிகளின் தொடர்பால் தன்னுடைய தனித்தன்மை கெடாமல் தமிழ் செழுமைப்படுத்தப்படலாம்!

ஆங்கில—தமிழ் நவீன அகராதி ஒன்றை உருவாக்குதலும் அவசியமாகும். இந்த அகராதி மிகச் சிறந்ததாய் அமைய வேண்டுமெனின் மூன்று இலட்சம் சொற்களுக்குப் பதில் குறைந்த பட்சம் ஆறு லட்சம் சொற்களேனும் இடம் பெற்றிடவேண்டும். அப்போதுதான் தமிழ் உண்மையான ஒரு நவீன மொழியாக முடியும்.

இங்கே, நீங்கள் தமிழ்நாட்டுத் தூதுக் குழுவினரைப் பார்க்கிறீர்கள். அவர்கள், மருத்துவமனைக்குத் தம் குழந்தையை எடுத்து வந்திருக்கிற பெருமிதமான தாயைப் போன்றவர்கள். அனுபவம் வாய்ந்த மருத்துவ நிபுணர்களையும், அறுவைச் சிகிச்சை நிபுணர்களையும் போன்றவர்கள் இங்கே கூடியுள்ள தமிழறிஞர்கள். அவர்கள் குழந்தைக்கு (தமிழுக்கு) முழு ஆரோக்கியத்தையும் தர முயல்கிறார்கள்.

இப்படிப்பட்ட கடுமையான அறுவைச் சிகிச்சைகளுக்கெல்லாம் குழந்தை இரையாகலாமா என்று எண்ணி, அந்தச் சிகிச்சையைத் தடுக்கக்கூடாது தாய். அது, தாய்மை அன்பைக் காட்டுவதாகாது. அதேபோல் அறுவைச் சிகிச்சைக்காரர்களும் கண்டபடி தம் கத்தியை ஓட்டக் கூடாது. தமிழ் வல்லுநர்களும், ஆராய்ச்சியாளர்களும், ஆராய்ச்சி செய்துவிட்டு அத்தோடு தம் பணிமுடிந்ததென்று எண்ணி விடக் கூடாது.

இந்த மாநாடு, மூன்று பணிகள்மீது கவனம் செலுத்த வேண்டும். முதலாவதாக, உலக நாடுகளுக்கும், தமிழ் நாட்டுக்குமிடையே மாணவர்கள் பரிவர்த்தனைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டாவதாகத், தமிழை ஒரு நவீன மொழியாக்கு வண்ணம் ஆங்கில — தமி அகராதியைத் தயாரிக்கும் பணியிலிறங்க வேண்டும். மூன்று தாக, உலகின் பல்வேறு நா களிலும் தமிழைப் பரப்பவு வளர்க்கவும் வழிவகை செய் வேண்டும். இந்தப் பணிகளி மறைந்த அண்ணாவின் அ யொற்றி நடக்கும் எமது தமி நாட்டு அரசு இயன்ற எல் உதவிகளையும் செய்யும் . .

என்று நான் பேசி . முடித் பொழுது எழுந்த கையொ அடங்கிடப் பல நிமிடங்க ஆயின.

(தொடரு

குரங்கினை ஆட்டி ஏற்பார் ;
. குழந்தையைக் காட்டிக் கேட்பார் ;
சிரந்தனில் செந்நீர் பாய்ச்சிச்
சிந்தையை நெகிழச் செய்வார் ;
கரங்களைக் குவிப்பார் ; பல்லைக்
காட்டியே 'முருகா' என்பார் ;
தரங்கெடப் பிச்சை ஏற்பார்
தன்மையைப் பேச லாமோ !

குட்டநோய் கையைக் காட்டிக்
'கொடுத்திடும் காசிங்' கென்பார் ;
பட்டையாய் நீற்றைத் தீட்டிப்
பக்தராய் நடித்துக் கேட்பார் ;
சுட்டிடு வெயிலில் வீழ்ந்து,
தோளெலாம் நாமம் போட்டு,
'விட்டலே! ராமா' என்றே
வீதியில் புரண்டே ஏற்பார்.

"குடுகுடு நல்ல காலம்
கோடிவிட் டம்மா வுக்கு !
எடுஎடு துணியும் காசும்
இல்லையேல் மாரி யம்மன்
படுதுயர் செய்வாள்" என்றே
பணத்தினைப் பறிப்பா ருண்டு
'விடுவிடு துன்ப மெல்லாம்
வெருட்டுவன் பேய்கள்' என்பார்.

'பும்பும்' என முழக்கிப்
பொதிசுமை எருதைக் காட்டிக்,
கொம்பினை நீட்டி நம்மைக்
கும்பிடச் செய்வா ருண்டு.
வம்புசெய் குறத்தி வந்து
'வருவதைச் சொல்வோ' மென்றே
நம்பையில் காசைக் கொள்வார்
நாட்டினுக் கிழுக்கி தன்றோ!

'ஆவிற்கு நீரென் றி'ங்கே
அன்புடன் இரப்பும் தீது!
பாவினை யாத்துப் பின்னர்
பணத்தினை இரத்தல் தீது
ஏவிடும் வறுமை போக்க
ஈயென இரத்தல் புன்மை
நாவினுக் கிரத்தல் போல
நாணிடும் செயல்வே றுண்டோ!

வீதியில் இரப்போ ருக்கு
வேண்டிய தொழில்கள் நல்கி
ஓதிடும் விடுதி நாட்டி
உடையுடன் உணவும் தந்தே
நீதிசார் மக்க ளாக
நிலவிடச் செய்யும் மேலாம்
சாதனை வெற்றி எய்தத்
தமிழர்நாம்! உதவு வோமே!

•

கவின்மிகு நகர் — கலைஞர் கருணாநிதி நகர்

சிங்காரச் சென்னை அழகிலும் அளவிலும் வளர்ந்து கொண்டிருப்பது அனைவருக்கும் தெரியும். தமிழ் நாட்டின் தலைநகரம் எந்த வகையில் வளர்ச்சி பெற்று வருகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது கலைஞர் கருணாநிதி நகர் !

சமன் செய்யப்பட்ட மேட்டு நிலம், அகலகலமான சாலைகள், அசுத்தத்துக்கு இடமில்லாத விதத்தில் புதை சாக்கடை, மின் சாரம், இனிய நீர் வசதி, நாளைக்கு நிழல் கொடுப்பதற்காக விரைந்து வளர்ந்து கொண்டிருக்கும் நிழல் மரக் கன்றுகள், பூங்கா, பள்ளி, பொதுக்கூடம் ஆகிய அனைத்துக்கும் இடம்தந்து, இணைந்து வளர்ந்து வருகின்ற சென்னை சுற்றுப் புறப் புத்தூர்கள்—புது நகரங்கள்—மக்களின் விருப்பத்துக்கு ஏற்பப் புதுப் பெயர்களையும் புனைந்து கொண்டு வருகின்றன.

புத்தூர்கள் பல....

தென் சென்னையில் நகரம் வளரத் தொடங்கி ஊரூர் புதூர் ஏற்பட்டதையடுத்து, அப்பகுதி இந்திரா நகர், சாஸ்திரி நகர் என்ற பெயர்களைப் பெற்றது. மேற்குச் சென்னைப் புதூர், கோடம்பாக்கம் புதூர் என்ற பெயரில் தொடங்கி, அசோக் நகர் என்று பெயர் பெற்றது. மொத்தம் மூன்று பெரும் திட்டப் பிரிவுகளை உள்ளடக்கிய கோடம்பாக்கம் புதூர்த் திட்டத்தில் இரண்டாவது பிரிவில் உள்ள நகரம் தான் கலைஞர் கருணாநிதி நகர்என்று பெயர் பெற்றுள்ளது. வடமேற்குச் சென்னையில் அனைத்துலக வர்த்தகப் பொருட்காட்சி நடந்த பகுதி, அறிவுலக மேதை அறிஞர் அண்ணாவின் பெயரைச் சூடிக்கொண்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் முனைப்பினால், கோடம் பாக்கம் புதூர் திட்டத்தின் அடுத்த கட்ட வேலைகள் விரைந்து நிறைவேறி வருகின்றன. கலைஞர் கருணாநிதி நகர் என்று புதிய பெயரினைப் பெற்றுள்ள கோடம் பாக்கம் புதூர் இரண்டாம் பிரிவுப் பகுதி மொத்தம் 750 ஏக்கர் பரப்புள்ளது. இதன் வளர்ச்சிக்கெனத் திட்டமிடப் பட்டுள்ள தொகை 4 கோடியே 46 லட்சம் ரூபாயாகும். சற்றேறக் குறைய 6,000 குடும்பங்கள், சுமார் 30,000 பேரிலிருந்து 50,000பேர் வரை மக்கள் இங்கு வாழக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நகரில் மொத்தப் பாதைகளின் நீளம் 21 மைல்களாகும். 40 அடியிலிருந்து 120 அடிவரை அகலம் உள்ள பாதைகள் மட்டும் 11 மைல்கள். இவற்றுக்கு மொத்தம் சுமார் 34 லட்சம் ரூபாய் செலவாகும். அநேகமாக எல்லாப் பாதைகளும் போடப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளன. சமன் செய்தல், தெரு விளக்கு வசதி, பாதை ஓரங்களில் மரங்கள், சாக்கடைப் போக்கிகள் ஆகிய வகையில் ரூ. 1 கோடியே 55 லட்சம் செலவிடத் திட்டமிட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

சேர்ந்து வாழும் சிறப்பு

எல்லா விதமான வசதிகளும் மேம்பாடுகளும்பெற்றுள்ள இந்த நகரின் ஒரு தனிச் சிறப்பு, இது செல்வந்தர்கள், வசதி வாய்ந்த

கலைஞர் கருணாநிதி நகர் திறப்பு விழாவில் தமிழக ஆளுநர் திரு கே. கே. ஷா.

வர்கள் ஆகியோருக்கு இடம் தரும், அதே நேரத்தில் நடுத்தர வருமானப் பிரிவினர், குறைந்த வருமானக் காரர்கள், தொழில் வினைஞர்கள், குடிசை வாழ் மக்கள் ஆகிய பல்வேறு பிரிவின ருக்கும் வாழ இடம் அளிக்கிறது என்பதாகும். சமுதாயத்தில் பல்வேறு நிலைகளிலும் உள்ள மக்கள் சேர்ந்து வாழும் நிலை இதில் குறிப்பிடத் தக்க சிறப்பு.

நடுத்தர வருமானப் பிரிவின ருக்காக இந்த நகரில் 500 குடி யிருப்பு மனைகள் வழங்கப்பட் டுள்ளன. இது தவிர மாதத் தவணை முறையில் தருவதற்காக 216 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 220 குடி யிருப்புகளுக்கான வேலைகள்விரை வில் தொடங்கும்.

குறைந்த வருமானப் பிரிவின ருக்காக 660 வீட்டு மனைகள் ஒதுக்கிச் செப்பனிடப்பட்டு விலைக் குக் கொடுக்கப்பட இருக்கின்றன. இத் திட்டத்தில் 96 குடி யிருப்பு கள் கட்டப்பட்டு, ''சொந்தமாக் கும் திட்டப்படி'' வழங்கப்பட் டுள்ளன.

சீரான குடிசைகளும் உண்டு

தொழில் வினைஞர்கள், குடிசை வாழ் மக்களுக்கென்று 40 × 22 அளவில் 2,360 மனைகள் இங்கு மாதத் தவணை முறைத் திட்டப் படி விலைக்கு வழங்கப்பட்டுள் ளன. இதன் மூலம் குடிசை வாழ் மக்கள் மாதாமாதம் சிறுதொகை செலுத்தித் தங்களுக்கான இடத்தை உரிமையாகப் பெற லாம். இப்படிப் பெற்ற மனை களில் வீடுகள் கட்டி, சிலர் குடித் தனம் வந்திருக்கிறார்கள். இன் னும் வீடு கட்டாமல் இருப்பவர் களுக்காகக் குறைந்தசெலவில்வீடு கட்டி வழங்கக் ''குடிசைமாற்று வாரியம்'' ஒரு திட்டம் தயாரித் துள்ளது. சின்னஞ்சிறு வீடுகள் என்றாலும் பல்வேறுவகைப்பட்ட இருபது விதமான கட்டட அமைப்புகளில். மொத்தம் 200 வீடுகளைக் கட்டுவதென்று இந்த ஆண்டில் வீட்டு வசதி வாரியம் முடிவெடுத்திருக்கிறது.

பலமாடிக் குடியிருப்புகள்

வீட்டு வசதி வாரியம், இது வரை கலைஞர் கருணாநிதி நகர்ப் பகுதியில் 281 அடுக்கு வீடு வகை குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. இது வரை 40 × 22 அளவில் 280 மனைகள் வழங்கப்பட் டுள்ளன. இப் பகுதியில் 300 குடும்பங்களுக்கு அடுக்கு வீடு வகை குடியிருப்புகள் கட்டுவ தென்று குடிசை மாற்று வாரியம் திட்டமிட்டிருக்கிறது.

தமிழ்நாடு வீட்டுவசதிவாரியம் தனது திட்டங்களுக்காக மட்டு மின்றி மத்திய அரசுப் பொதுப் பணித் துறை, ஆயுள் காப்பீட்டு நிறுவனம், இந்திய ரிசர்வ் வங்கி, தபால் தந்தித் துறை ஆகியவை களில் பணியாற்றும் அலுவலர் களுக்கான வீட்டு வசதிக்கென் றும் இடம் ஒதுக்கியுள்ளது. இவர் களுக்காகப் பல மாடிக் குடி யிருப்புகள் ஆங்காங்குக் கட்டப் பட்டு வருகின்றன.

கவின்மிகு நகர்

இப்பகுதியில் உயர்நிலைப் பள்ளிகள், பெரிய மருத்துவ மனைகள், தொழிலாளர் களுக்காக அரசாங்க இன் சூரன்ஸ் மருத்துவமனை, காவல் நிலையம், சமுதாயக் கூடம், பூங் காக்கள் ஆகியவைகளுக்கு இடங் கள் ஒதுக்கப்பட்டுத் திட்டங் களும், தயாரிக்கப்பட்டுள்ளன. மிகப்பெரிய அங்காடி ஒன்றை ஏற்படுத்தவும் எண்ணம் உண்டு. மொத்த வியாபாரிகள் தங்கள் சரக்குகளை இங்கே வைத்துக் கொள்ளலாம். இதன் மூலம் சென்னை நகருக்குள் இன்றுள்ள நெரிசலைத் தவிர்க்கவும் முடியும்.

கிராமப் பகுதிகளுக்குரிய எளி மையும் எழிலும், நகரப் பகுதி களுக்குரிய வசதிகள் பலவும் கொண்டு, திட்டமிட்ட முறை யில் கவின் மிகு நகரமாக வளர் கிறது, கலைஞர் கருணாநிதி நகர்! புதிய நகர் வளர்ச்சித் திட்டங் களுக்கு இது முன்னோடியாக விளங்கினால் அதில் வியப்பில்லை!

வழிகாட்டும் தமிழ் நாடு

பேரறிஞர் அண்ணா அவர்களால் 1967-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் துவக்கப்பட சீரணியைத் தொடக்கத் தில் பலர் எதிர்த்தார்கள்—சீரணியைக் குறைகூறத் தொடங்கினார்கள். சீரணி பற்றித் தப்புக் கணக்குப் போட்டார் கள். ஆனால், சீரணியோ செம்மை யான அணி என்பதைத் தனது சீரிய தொண்டினால் மெய்ப்பித்து வந்தது. இன்று, அதன் புகழ் திக்கெட்டும் பரவி வருகிறது. மைய அரசே நமது சீரணியின் பெருமை யை உணர்ந்து அதுபோன்ற அணியை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்த எண்ணிச் சீரணி பற்றிய தகவல்களைத் தெரிவிக்க வேண்டுமென்று நமது அரசுக்கு அண்மையில் கடிதம் எழுதியிருக்கிறது.

ஒவ்வொரு துறையிலும் பிற மாநிலத்துக்கு வழிகாட்டியாக விளங்கும் தமிழ்நாடு—சீரணியிலும், பிறருக்கு வழிகாட்டியாக அமைந்திருப்பதில் வியப்பென்ன இருக்கிறது!

அழகிய முகம்வேண்டுமென்று ஆசைப்படாதார் உண்டா? ''அழகிய முகம் மிகச்சிறந்த ஒரு பரிந் துரைக் கடிதம்'' (A good face is the best letter of recommendation) என்றார் இங்கி லாந்து நாட்டு அரசி முதலாம் எலிசபெத். முகத் துக்குப் பொலிவு. அகத்தோடு-மனத்தோடு-தொடர்பு கொண்டது. முகத்தைப் பார்க்கக் கண்ணாடி உண்டு. அகத்தைக் காண ஆடி உண்டா? உண்டு. அதுவே முகம். அகத்தில் உள்ளதைப் படம் பிடித்துக் காட்டும் ஆற்றல் முகத்துக்கு உண்டு. ''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்பது முதுமொழியல்லவா!

உடலின் அக உறுப்புக்களைப் படம் பிடித்துக் காட்ட எக்ஸ் கதிர்கள் உண்டு. அக் கதிர்கள் கொண்டு எடுக்கப்படும் படங்களில் உள்ளுறுப்புக் களின் உருவ அமைப்பு மட்டுமே தென்படும். உள்ளம் மகிழ்வோடு இருக்கிறதா, வருத்தத்தில் ஆழ்ந்திருக்கின்றதா என்பன போன்ற தன்மைகளை எடுத்துக்காட்ட எக்ஸ் கதிர்களால் முடியாது; ஆனால் முகம் காட்டிவிடும். நெஞ்சத்தின் இருப்பை அறிவிக்கும் ஐந்தொகைக் குறிப்பு (Balance Sheet) முகமே.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

(குறள் 706)

தன்னையடுத்த பொருளைக் கண்ணாடி தன்னுள் காட்டும். அதுபோல ஒருவர் மனத்தில் எழும் கருத்தை அவருடைய முகம் காட்டிவிடும். பளிங்கு, வெளியில் உள்ள பொருளை உள்ளடக்கிக் காட்டு கிறது ; முகம் உள்ளடங்கியதை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

நெஞ்சுக்கும் முகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. முகத்திற்குத் தெரியாது எதையும் நெஞ் சில் மறைத்துவைக்க முடியாது. நெஞ்ச வீட்டிற்கு முகம் ஒரு கண்ணாடிக் கதவு ; உள்ளே உள்ள பொருள்களைத் தெளிவாக, மறைவின்றிக் காட்டி விடும். முகம் தவிர்த்த மற்ற உறுப்புக்களால் ஒருவருடைய உள்ள நிலையை வெளிப்படுத்திக் காட்ட முடியாது. ஒருவன் கையைக் கொண்டோ அல்லது காலைக் கொண்டோ அவன் மகிழ்வோ டிருக்கிறானா என்பதைக் கண்டுபிடிக்க இயலாது ; முகமோ தன் மலர்ச்சியால் அதனை வெளிப்படுத்தி விடும். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற உணர்ச்சிகளை மெய்ப்படுத்திக் காட்டும் நிலைக் கள மாக அமைந்திருப்பது முகமே. அகத்தின் நிலையை முன்னுரைப்பது முகம்போல வேறில்லை. எனவே தான் முகத்தைவிட அறிவில் மிக்கது எதுவும் இல்லை என்கிறார் வள்ளுவப் பெருந்தகையார்.

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்.

(குறள் 707)

நெஞ்சில் தோன்றும் சீற்றம், வெறுப்பு, பொறாமை, செருக்கு, எரிச்சல், ஏளனம், வேதனை, நடுக்கம் ஆகிய உணர்வுகளாயினும் சரி ; எக்க ளிப்பு, தன்னிறைவு, பாசம், இச்சை, பணிவு

16-6—4

ஆகிய பண்புகளாயினும் சரி அவற்றைத் தக்காங்கு வெவ்வேறு தோற்றங்களால் முகம் புலப்படுத்திக் காட்டிவிடுகிறது. பேச்சு, எழுத்து மொழிகள் நாட்டுக்கு நாடு மாறுபட்டுள்ளன. நெஞ்சக் கருத்துக்களை அறிவிக்கும் முகமொழியோ உலகம் முழுமைக்கும் பொதுவாய்-உலகளாவியதாய் உள்ளது. பேசும் மொழி புரியாவிட்டாலும் ஒருவருடைய முகத்தைக்கொண்டு அவர் உள்ள நிலையை அறிந்து கொள்ள முடியுமல்லவா?

திருவள்ளுவர் அறத்திற்குக் கூறும் இலக்கணம் மிகவும் சிறப்பானது. மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பதே அறம் என்பது அவர் கொள்கை. மனம் தூய்மையாகும்போது தீமைகள் அகன்று நன்மைகள் பெருகும்; அகந்தை அழிந்து அன்பு தழைக்கும். எனவேதான் மனமாசற்ற தன்மையை அறமாகக் கொள்ளுகிறார் திருவள்ளுவர். உள்ளத்தில் பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் இடம் கொடுக்காது காத்தலே அறமாகும் என்பார் அவர். இக் குற்றங்கள் இல்லாதபோது உள்ளம் மாசுமறுவற்று விளங்கும்; அங்கு இன்பம் ஊற்றெடுத்துப் பெருகும். அகத்திலூறும் அவ்வின்பப் பெருக்கினை முகம் வெளிப்படுத்திய வண்ணமிருப்பதால் அருளாளர்களின் முகங்கள் எப்போதும் மலர்ச்சியாகவே காணப்படும். உள்ளம் தூய்மையாக இருப்போர் உரைக்கும் உரையில் இனிமை தவழ்கிறது; செய்யும் செயலில் அறம் விளைகிறது. இக் கருத்துக்களை உள்ளடக்கியதாய், வள்ளுவர், ஒருவரைக் கண்டபொழுதே முகமலர்ச்சியோடு, விரும்பி, இனிதாக நோக்கி, பின் நெருங்கிய விடத்து அகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைச் சொல்லுதலே அறமென்பார்.

> முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானும்
> இன்சொ லினதே அறம்.
>
> (குறள் 93)

அகமலர்ச்சி அருளைச் சுரந்து ஈகையைத் தோற்றுவிக்கும். முகமலர்ச்சி இன்சொல்லை விளைவிக்கும். ஈகையிலும் இன்சொல்லே நன்று என்பது திருவள்ளுவர் கருத்து.

> அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
> இன்சொல ளாகப் பெறின்.
>
> (குறள் 92)

விருந்தோம்பல் ஒரு சிறந்த அறப்பண்பு. விருந்தினர்கள் வீட்டிற்கு வரும்பொழுது 'முகனமர்ந்து' வரவேற்க வேண்டும். குளிர்ந்த நோக்கு அவர்களை மகிழச் செய்வதாகும். வரவேற்போரின் திரிந்த நோக்கு விருந்தினரை வருத்திவிடும். அனிச்சம் மிகவும் மென்மையான பூ; எடுத்து முகரும் போதே குழைந்துவிடும். அப் பூவை விட மென்மையானது விருந்து. எவ்வாறு? அனிச்சம் நோக்கும் போது குழைவதில்லை. முகரும் போதுதான் குழைகிறது. விருந்தோ நோக்கும்போதே குழைந்து விடும். விருந்தின் மென்மையை வரவேற்போரின் முகம் பேணிக் காக்கவேண்டும்.

> மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
> நோக்கக் குழையும் விருந்து.
>
> (குறள் 90)

இக் குறளின் கருத்தை இளங்கோவடிகள் தம் காப்பியத்தில் அழகுற எடுத்தாண்டுள்ளார். காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா நடைபெறுகிறது. பரத்தையர் வீடு சென்ற ஒருவன் தன்னகம் திரும்புகின்றான். "நம் நடத்தையறிந்து மனையாள் வெகுண்டிருப்பாளே! அவளுடைய கயற்கண்கள் கனல் வீசிச் சினந்திருக்குமே! அவள் முன் எவ்விதம் போய் நிற்பது?" என்ற எண்ணம் உள்ளத்தில் ஓடுகிறது. மனைவியின் வெகுளியைக் களைய வழியொன்று தேடுகிறான். விருந்தினர் ஒருவரை அழைத்துக்கொண்டு வீடு செல்கிறான். மனைவியின் நிலையென்ன? கணவன் மீதுள்ள வெகுளியால் முகம் மாறுபடின் வந்த விருந்து குழைந்துவிடும்! என் செய்வாள்? விழிக் கடையில் தோன்றி நின்ற சிவப்பு எங்கோ மறைகிறது; கனல் வீசும் கண்களில் கனிவு தோன்றுகிறது. முகமலர்ச்சியோடு விருந்தை வரவேற்கிறாள். அதையே தனக்கும் அழைப்பாகக்கொண்டு கணவனும் உள்ளே நுழைந்துவிடுகிறான். கணவனின் தகாத நடத்தையால் தோன்றிய வெகுளியையும் விரட்டிக் கனிவைத் தோற்றுவிக்கும் ஆற்றல் விருந்துக்கு உண்டு.

> ". . . . . . மனையுறை மகளிர்
> மாதர்வாள் முகத்து மணித்தோட்டுக் குவளைப்
> போதுபுறங் கொடுத்துப் போகிய செங்கடை
> விருந்தின் தீர்ந்தில தாயின் யாவதும்
> மருந்தும் தரும்கொல் இம்மாநில வரைப்பென்."
>
> (சிலப்பதிகாரம்—இந்திர விழவூரெடுத்த காதை
> வரிகள் 229-233.)

முகன் அமர்ந்து விருந்தோம்ப வேண்டுவதன் முக்கியத்துவத்தை இது நன்கு உணர்த்துகிறது. இங்ஙனம் விருந்தோம்பும் ஒருவனுடைய இல்லத்தில் செழிப்பு நிறையும். அவன் வீட்டில் திருமகள் விரும்பி உறைவாள் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

> அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
> நல்விருந்து ஓம்புவான் இல்
>
> (குறள் 84)

காண வருபவர்க்கு அரியனும், ஒருகால் கண்டு தம் குறையைச் சொன்னாலும் வெறுப்புக் காட்டுகின்ற முகத்தையுடையவனுமான ஒருவனுடைய செல்வம், பூதம் காக்கும் பொருளைப் போலத் தனக்கும் பிறர்க்கும் உதவாது ஒழியும்.

> அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
> பேஎய்கண் டன்னது உடைத்து.
>
> (குறள் 565)

காட்சிக்கு எளிமையும், இனிய நோக்கும், கண்ணோட்டமும் வேண்டுமென்பதை இக்குறள் மிகவும் வலியுறுத்துவதை அறியலாம்.

கொடுப்பவனின் செல்வம் கொடுப்பவனுக்கும், பெறுபவனுக்கும் ஒரு சேரமகிழ்ச்சியை அளிக்கிறது. ஒருவர் இரந்து நிற்கும்போது அவர் நிலை, காண்போர்க்குத் துன்பத்தைத் தருகிறது. இல்லாது இரப்பதால் அவருக்குத் துன்பம்; அவருடைய கவலை கண்டு காண்போர்க்குத் துன்பம். இத் துன்பம் எதுவரை? கொடுக்கும் வரைதான். இரந்ததைக் கொடுத்ததும் பெறுபவர் முகம் மலர்கிறது. அவருடைய துன்பம் நீங்கியதைக் கண்டு கொடுப்பவரின் முகமும் மலர்கிறது. துன்ப முகங்கள் இன்ப முகங்களாகின்றன.

> இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
> இன்முகம் காணும் அளவு.
>
> (குறள் 224)

முகத்தில் குறிப்பறியும் அறிஞர்கள் முன்னே சென்று நின்றாலே போதும் எதையும் வாய்விட்டுப் பேசவேண்டியதில்லை. முகத்தைப் பார்த்தவுடனேயே அகத் தேவையை அறிந்து ஆவன செய்வார்கள். முகத்தைக் கொண்டே அகத்தை நோக்கி அங்கு 'உறுவதை' உடனடியாக உணர்ந்து விடுவார்கள்.

> முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
> உற்றது உணர்வார்ப் பெறின்.

பொதுவாக முகம் அகத்தைக் காட்டுமாயினும், சிலர், முகத்தில் அகத்தை மறைக்க முயல்வதுண்டு. 'இவர் சரியான அழுத்தக்காரர். முகத்திலிருந்து எதையும் அறியமுடியவில்லையே' என்ற சொற்களைச் சில வேளைகளில் நாம் கேட்கிறோம். அகத்திலே வெறுப்பைக் கொண்டு அதை முயன்று மறைத்து முகத்திலே களிப்புப் பொங்க நடிப்பவரும் உண்டு. அவர்கள் வஞ்சகர்கள். ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியரின் துன்பியல் நாடகங்களில் மாக்பெத் ஒன்று. அதில் மாக்பெத்தின் மனைவி தன் கணவனைத் தீமை செய்யத் தூண்டும் போது 'முகம் மலரைப் போல் முறுவலிக்கட்டும். உள்ளமோ, மலரடியில் நெளியும் நச்சரவாக இருக்கட்டும்' (Look like the flower but be the serpent under it) என்கிறாள். இத்தகைய வஞ்சகர்கள் தோற்றத்தால் பிறரை ஏமாற்றித் தாம் எண்ணியதை நிறைவேற்றிக்கொள்ள முகத்தில் மட்டும் இனிமையைப் படர விடுவது உண்டு. முக இனிமை, பார்ப்போரைக் கவரும் என்ற பொது விதியை மேற்கொண்டு, அவர்கள், முகத்தில் போலி மலர்ச்சியைத் தோற்றுவித்துப் பிறரை வஞ்சிக்கப் பார்ப்பர். அத்தகைய போலிப் பொலிவு காட்டுவோர் சமுதாயத்தின் கொடிய விரோதிகளாவார். அவர்களைக் கண்டு அஞ்சி ஒதுங்க வேண்டும்.

> முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
> வஞ்சரை அஞ்சப் படும்.
>
> (குறள் 824)

நட்புக்கு இலக்கணம் சொல்லும்போது திருவள்ளுவர் "முகம் மட்டும் மலரும் படியாக நட்புச் செய்வது நட்பன்று. நெஞ்சமும் மலரும்படியாக, உள்ளன்பு கொண்டு நட்புச் செய்வதே நட்பு" எனக் குறிக்கிறார்.

> முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
> அகநக நட்பது நட்பு.
>
> (குறள் 786)

முகத்தளவில் மலர்ச்சி காட்டி அகத்தில் அழுக்காறு கொண்டுள்ளவர்கள் நம்மோடு நண்பர் போலப் பழகவரின் என்ன செய்வது? முள்ளை முள்ளால்தானே நீக்க வேண்டும்! பகையாயிருந்

தும் நட்புப்போல நடிக்கும் அத்தகையோரிடம் நாமும் முகத்தளவில் நட்புச் செய்ய வேண்டும். அகத்தில் அவர் மாட்டு அன்பு தோன்ருது அகற்ற வேண்டும். பின்பு வேண்டாதபோது இப் புற நட்பையும் நீக்கிவிடவேண்டும்.

> பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
> அகநட்பு ஒரீஇ விடல்.
>
> (குறள் 830)

கள்ளுண்பதைக் கண்டித்த முதற்புலவர் திருவள்ளுவரே. நம் ஒழுக்கத்தையும் உணர்வையும் அழிப்பதால் .கள்ளினையுண்ணுதல் "திருநீக்கப் பட்டார் தொடர்பு" என்ருர். கள்ளுண்பார் அறிவை யிழப்பதால் அவர்கள் எவ்வளவு உயர்ந்தவராயிருப்பினும் அவர்கட்குப் பகைவர் அஞ்சார். அவர்கள் பிறரால் இகழவும்படுவர்; வழிவழிவந்த ஒளியையும் இழப்பர். கள்ளுண்பார் சான்ருேரால் மதிக்கப்படமாட்டார். ஒருவன் கள்ளைப் பருகுவது ஈன்ற தாய்க்கே துன்பம் தருமெனின் அதன் தீமையை நன்குணர்ந்து குற்றம் கடியும் இயல்புடைய சான்ருேருக்கு இன்னுதாகுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

> ஈன்ருள் முகத்தேயும் இன்ஞதால் என்மற்றுச்
> சான்ருேர் முகத்துக் களி.
>
> (குறள் 923)

தாயின் முகத்தையே வெறுப்பிஞல் திரியச் செய்யும் நிலையை மேற்கொள்ளா திருப்பது ஒருவனுக்குச் சிறப்பன்ருே?

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

நக்தி : MONARCH

Sarath

முகம் ஒளி பொருந்தியதாக விளங்குவது விரும்பப்படுவது என்பதால் அது மதிமுகம், நகைமுகம், வாண்முகம் என்றெல்லாம் அடைகொடுத்து அழைக்கப்படுகிறது. குளிர்பொங்கும் நிலவைக் காணும் ஒருவன் அதைத் தன் காதலியின் முகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிருன். "விண்ணிலுள்ள மீன்கள் அங்கிங்காக அலைகின்றன. எதனுல்? ஒருவேளை நிலவுக்கும், என் காதலியின் முகத்துக்கும் வேறுபாடு தெரியாமல் மயங்கிக் கலங்குகின்றனவோ?"

> மதியும் மடந்தை முகனு மறியா
> பதியிற் கலங்கிய மீன்.
>
> (குறள் 1116)

விண்மீன்கள் வேறுபாடறியாது கலங்கவேண்டிய அவசியமே இல்லையே! இரண்டுக்குமுள்ள வேறுபாட்டை எளிதில் புரிந்து கொள்ளலாமே! மதியத்திற்குப் போல என் காதலியின் முகத்தில் மறு (களங்கம்) உண்டா என்ன ?

> அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
> மறுவுண்டோ மாதர் முகத்து.
>
> (குறள் 1117)

என் காதலியின் முகம்போல் தேய்தல் வளர்தல் இன்றியும், களங்கமின்றியும், என்றும் ஒரு தன்மைத்தாய் விளங்க மதியமே உன்னுல் முடியுமா? முடியாது. ஆதலின் நீ என் வாழ்த்திற்கு உரியை இல்லை!

> மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேற்
> காதலை வாழி மதி.
>
> (குறள் 1118)

நிலவே, என் காதலியின் முகத்தோடு உன்னை ஒப்பிட்டுப் பேச உனக்குத் தகுதியில்லை. அவ்வாறிருக்க உன்னை எவ்வாறு நேசிக்க முடியும்? குறைகளை வைத்துக்கொண்டு பலர் காணத் தோற்றமளிக்கிருயே! இது உனக்கு நகைப்பாயில்லை! என்றும் ஒரு தன்மைத்தாய் மாதர் முகம்போல ஒளிவிட இயலாத நீ இனிமேலாவது எல்லாருங் காணத் தோன்ருதே!

> மலரன்ன கண்ணுள் முகமொத்தி யாயிற்
> பலர்காணத் தோன்றல் மதி.
>
> (குறள் 1119)

இங்ஙனம் இனியவை கூறவும், விருந்தோம்பவும், வெருவந்த செய்யாது விலக்கவும், ஈந்து இசைபட வாழவும், நன்னட்பைத் தேடிக் கூடா நட்பை அகற்றவும், கள்ளுண்ணலைக் கடியவும், காதல்மொழி பேசவும், குறிப்பறிவிக்கும் முகத்தை எடுத்தாண்டு நம் முகங்களை மலரவைக்கும் வள்ளுவர் குறள், நாட்டவர் தம் நெஞ்சப் பொய்கையில் மலர்வதாகுக!

சிங்காரச் சென்னையிலிருந்து செந்தமிழ்க் காஞ்சி வரை

"நேரத்திற்குப் போய் விடுவோமல்லவா?"—மறுபடியும்ஒரு நண்பரின் அவசரக் கேள்வி.

"கொள்ளை நேரம் கிடக்கு . . . ..போய் விடுவோம் "—இது பதில்.

எதற்குப் போகிருேம் என்பது உங்களுக்குத் தெரிய .வேண்டாமா? தமிழக முதல்வர் அன்று செங்கை மாவட்டத்தில் பல முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிருர். சத்துணவுத் திட்ட விழா, கிராம வேலை வாய்ப்புத் திட்டத்துவக்க விழா, காஞ்சியில் பாதாள சாக்கடைத் திட்டக்கால் கோள் விழா, எல்லாவற்றிற்கும் மேலாக 42,000 ஏழைமக்களுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டா வழங்கும் விழா இப்படிப் பல முக்கிய நிகழ்ச்சிகள் அன்று. அந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளத்தான் நாங்களும் போய்க் கொண்டிருந்தோம்.

ஞாயிற்றுக்கிழமை, மே16-ஆம் நாள் பிற்பகல். சுட்டெரிக்கும் வெய்யில் சற்றுத் தணிந்திருந்தாலும், வெய்யிலின் கடுமை ஒன்றும் குறைந்த பாடில்லை. மே மாதத்திற்கே உரித்தான நசநசப்புப் புழுக்கம். வானம் மப்பாகத் தான் இருந்தது. இருந்தாலும் புழுக்கம். 'மழை பெய்தால் இப்ப ஜோராக இருக்கு மில்லே' என்றுசொல்லியபடியேவண்டியில் வந்து அமர்ந்தார் ஒரு நண்பர்.

'அதற்கென்ன? கருத்து மழை பொழிவதைக் கேட்கத் தானே போகிருேம்! எல்லாம் போகப் போகச் சரியாயிடும்'' –இன்னொரு நண்பர்.

வண்டி புறப்பட்டது.

சென்னை மாநகர் எல்லையைக் கடந்து செங்கை மாவட்டத்தினுள் நுழைந்தது வண்டி.

தாம்பரம் அரங்கநாதபுரம். எங்கள் வண்டி, விழா நடத்தும் இடத்தில் போய்ச் சேரவும் முதல்வர் வந்து சேரவும் சரியாக இருந்தது. ஒரே கூட்டம். தங்களுடைய அருமைத் தலைவனைக் காண மக்கள் பெருங்கூட்டமாகக் கூடியிருந்தனர். குழந்தை, குட்டிகளுடன் பெண்கள் திரளாக வந்திருந்தனர். பெண்களும், குழந்தைகளும் வந்து விட்டால் சந்தடிக்குச் சொல்ல வேண்டுமா? அதுவும் கூடவே வந்துவிடுமே!

"பள்ளி செல்லாத ஆறுமாதம் முதல் மூன்று வயதிற்கு மேற்படாத குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டத்தை, தமிழ் நாடு அரசு முதன் முறையாக அக்டோபர் 1970-ல் சென்னை நகர்க் குடிசைப் பகுதிகளில் அமுலுக்குக் கொண்டு வந்தது. இப்பொழுது இத்திட்டம்செங்கற்பட்டு,மதுரை திருச்சி, கோவை முதலிய மாவட்டங்களில் அமுலாக்கப்பட்டுள்ளது. இருபது ஆயிரம் குழந்தைகளுக்கு 100 மையங்களில் மையம் ஒன்றுக்கு 200 குழந்தைகள்வீதம் அமுல் செய்யப்படுகிறது. ஓர் ஆண்டில் ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு 23½ காசுகள் என்கிற விகிதத்தில் ரூ. 11,75,000 இம்மாவட்டத்தில் இத்திட்டத்திற்காகச் செலவு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது.''— மளமளவென்று எங்களிடம் இதை ஒப்பித்துவிட்டு அந்தப் பக்கம் சென்ருர் மாவட்ட ஆட்சி அலுவலர் ஒருவர். "அம்மா, அம்மா மாடர்ன் ரொட்டி" ஒரு குழந்தையின் குரல். திரும்பிப் பார்த்தேன். மாடர்ன் ரொட்டிகள் அழகாக பிளேட்டுகளில் குழந்தைகளுக்கு அளிக்கப்படுவதற்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. குழந்தைகளின் ஆரவாரத்திற்கும் சத்தத்திற்கும் எனக்குக் காரணம் இப்பொழுது தெளிவாகப் புரிந்தது. முதல்வரின் கார் வந்து நின்றதும் மக்களின் ஆரவாரம் சொல்லி முடியாது. ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டத்தைத் துவக்கி வைக்க ஏழைகளின் தலைவன் வந்துவிட்டார்.

அரிசன நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் சத்துணவுத் திட்ட விழாவைத் துவக்கிவைத்து முதல்வர்இரத்தினச் சுருக்கமாகப் பேசிஞர் :

"அரும்புப் பருவத்திலே உள்ள குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்க்கப்பட்டால் தான், ஒளிமிகுந்தஎதிர்காலத்தைநாட்டிற்கு அளிக்கின்ற ஒப்பற்ற மேதைகளாக அவர்கள் திகழ முடியும். உடல் வலிவு மட்டுமல்லாமல், மூளையும் நல்ல வளர்ச்சி பெற வேண்டும். விளையும் பயிர்களை நல்ல வளமான பயிர்களாக விளைவிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இந்தத் திட்டத்தை மாநிலஅரசு துவக்கியுள்ளது. எந்தத் திட்டமாஞலும், அந்தத் திட்டத்தின் நன்மைகளை அடித்தளத்தில் உள்ள மக்கள் பெற்றிட வேண்டும் என்பது தான் இந்த அரசின் நோக்கம். இப்பொழுது பள்ளி செல்லாத 6 மாதம் முதல் 3 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு என்று இருக்கும் இந்தத் திட்டத்தை 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் விரிவாக்க வேண்டும் என்ற கருத்தை அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்'' என்று முதல்வர் கூறி முடித்ததுமே ஒரே கைதட்டல், சத்தம் கூச்சல் எல்லாம். "இது என்ன சத்துணவுத் திட்ட விழாவா அல்லது சத்த உணவுத் திட்ட விழாவா என்றே எனக்குத்தெரியவில்லை'' என்று அவருக்கே உரித்



ான நகைச் சுவையுடன் தல்வர் கூறியதும் மறுபடியும் கதட்டல்.

அடுத்தது, படப்பை அருகில் ள்ள வட்டப்பாக்கம் கிராமத் ல் கிராமப் புற வேலை வாய்ப்புத் ட்டத் துவக்க விழா.

மிக முக்கியமான நிகழ்ச்சி. மயின் ரோடின் அண்மையில் ரிய பந்தல் போட்டு மிகப் ரிய அளவில் கூடியிருந்தனர் ராம மக்களும், ஊராட்சித் தலை ர்களும், ஊராட்சி ஒன்றியத் லைவர்களும்.

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றி த்தில் உள்ள வட்டப்பாக்கம் ராட்சி எல்லையில் ரூ. 5 ஆயிரம் திப்பீட்டில் அமைய இருக்கும் ட்டப்பாக்கம்-பனப்பாக்கம் 3 லோ மீட்டர் நீளமுள்ள சாலை லையை, மதிப்பிற்குரிய முதல் ர், இத் தீவிரத் திட்டத்தின்கீழ் நிலத்திலேயே முதல் வேலைத் டமாகத் தன் பொற்கரங்க ால் துவக்கி வைத்தார்கள்.

வேளாண்மைத்துறை அமைச் திரு. அன்பில் தர்மலிங்கம் லைமை தாங்க, முதல்வர் அவர் ா திட்டத்தைத் துவக்கிவைத் ர்கள். அந்தப் பகுதி கிராம களின் உவகையைச் சொல்ல டியாது. ''இந்தப் பகுதியிலே ாமங்களை இணைக்கச் சாலை வசதி இல்லை. இது பெரிய குறை யாக இருந்தது. நாங்களே கேட்க வேண்டுமென்றிருந்தோம்; ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள் எங்களை முந்திக் கொண்டு விட்டார்கள். எப்படி நன்றிசொல்வ தென்றே எங்களுக்குத் தெரிய வில்லை'' என்று உள்ளம் நெகிழ உரைத்தார் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. பால கிருட்டிணன், தன்னுடைய வர வேற்புரையில். போட்டி போட் டுக் கொண்டு மாலைகளை முதல் வருக்கும் அமைச்சருக்கும் அணி வித்நார்கள்.

மாலைகள் போட்டார்கள். கைத்தறித்துணி போட்டார்கள். ஒருவர் முதல்வருக்கு ஒரு லுங்கி யைக் கூடக் கொடுத்தார்.

இப்படிப்பட்ட குதூகலத்திற்கு என்ன காரணம் தெரியுமா ?

இந்தக் கிராம வேலை வாய்ப்பு தீவிரத் திட்டத்தை தமிழ் நாட் டிலேயே முதன் முதலாக முதல் வரின் திருக்கரங்களால் துவக்கி வைக்கப்பெற்ற பெரும்பேற்றினை அல்லவா அவர்கள் அன்றுஅடைந் திருந்தார்கள்! இது புதிய திட்டம். பெரிய திட்டம். மைய அரசினால் கொடுத்துள்ள இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மா வட்டத்திலும் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க இருக் கிறது. ஒவ்வொரு மாவட்டத் திலும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 100 பேருக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படும். ஒவ்வொருவருக் கும் மாதச் சம்பளம் 100 ரூபாய் கிடைக்கும். இத்திட்டத்தின் கீழ்,

கிராமச் சாலைகள் அமைத்தல்

நிலங்களின் வளத்தினைப் பெருக்குதல்.

சாக்கடைகள், கரைகள் கட்டு தல்.

குடிநீர்ப் பாதுகாப்பு வேலை கள்.

சீரிய நீர்ப்பாசனப் பாதுகாப்பு வேலைகள்.

மண் வளப் பாதுகாப்பு வேலை கள்.

செயல்படுத்தப்படும்.

இதற்கென்று தமிழகத்திற்கு மைய அரசு ஒதுக்கியுள்ள தொகை ரூ. $1\frac{1}{2}$ கோடி.

திட்டத்தைத் துவக்கி வைத்து முதல்வர் பேசுகையில் ''தமிழ் நாட்டின் விழிப்பிற்கே காரண மான அண்ணா பிறந்த செங்கற் பட்டு மாவட்டம் என்ற காரணத் தினால் இத் திட்டமானது இம்மா வட்டத்தில் தொடங்கப் பெறு வது சாலப் பொருத்தமுடையதா கும்'' என்று குறிப்பிட்டு விட்டு, ''தமிழகத்திற்கு ஒதுக்கப்பட் டுள்ள ஒன்றரைக் கோடி ரூபாய் மிகவும் குறைவானதாகும். தமிழ் நாட்டிற்கு 6 கோடி ரூபாயாவது இதற்கென்று ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆறு கோடியே போதாது. இப்படி இருக்க $1\frac{1}{2}$ கோடி ஒதுக்கியிருப் பதற்காக வருத்தப்படுகிறோம். மாவட்ட அளவில் இதை ஒதுக்கு கிறார்கள். இதனால் தமிழ்நாடு பெரிதும் பாதிக்கப்படுகிறது. மாவட்ட அளவிலே இல்லாமல், ஒன்றிய அளவிலே எடுத்துக் கொண்டு ஒதுக்கீடு செய்யுங்கள் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளேன். தமிழ் நாட் டில் மாவட்டங்கள் பெரிய அள வில் இருக்கின்றன. மாவட்டங் களும் குறைவு, மாவட்டங்களின் பரப்பளவோ அதிகம். இதனால் பெற வேண்டிய பயனைப் பெற இயலாத நிலை உள்ளது. இப்படி முன்கூட்டியே தெரிந்திருந்தால் செங்கை மாவட்டத்தை நான் காகப் பிரித்திருப்போம். தெரி யாமல் போய் விட்டது. ஆகவே, தமிழ்நாட்டில் உள்ள 375 ஒன்றி யங்கள் என்ற அளவிலே ஒதுக்கீடு செய்யுங்கள் என்று மைய அர சைக் கேட்டுக் கொண்டுள்ளோம். கிடைத்ததற்காக நன்றி. கிடைக்க வேண்டும் என்பதற் காக வேண்டுகோள்''.

கிராம மக்களின் ஏழை எளிய மக்களின் நலனில் முதல்வருக்குத் தான் எவ்வளவு அக்கறை! எந்தப் பிரச்சினையையும், இந்த இலட்சி யத்தை மையமாகக் கொண்டே பார்க்கும் அவருடைய இதய சுத்தியை மக்கள் புரிந்து கொண் டுள்ளார்கள் என்பதற்குச் சாட்சி யாக, கூடியிருந்த மக்கள் எழுப் பிய கரவொலி அமைந்திருந்தது.

அதன்பிறகு செந்தமிழ்க்காஞ்சி அண்ணா பிறந்தமண்ணை நோக்கிப் பயணம். வழிநெடுக அலங்கார வளைவுகள், கொடிகள், தோரணங் கள்! இதுவென்ன செங்கை மாவட்டமே விழாக் கோலம் பூண்டு விட்டதா என்ன? வழி நெடுகப் பாதையின் இரு மருங் கிலும் சாரி சாரியாக மக்கள் நின்று தங்கள் அருமைத் தலை வனை வரவேற்கக் குழுமியிருந்த காட்சி உள்ளத்தைப் புல்லரிக்க வைத்தது.

காற்று சுழன்று சுழன்று அடித் தது. வெப்பம் தணிந்துவிட்டது, மாலைக் கதிரவனின் ஒளிக் கதிர் கள் பட்டு, அன்னை பூமி பொன் னிற மங்கை போல் ஒளி வீசிக் கொண்டிருந்தாள்.

காஞ்சி எல்லையை இன்னும் முதல்வரின் வண்டி தொடக்கூட இல்லை. எல்லைக்கு வெளியிலேயே விழா, களை கட்டிவிட்டது. அழ கான வளைவுகள்-''உணவு உற்பத் தியில் தஞ்சையையும் மிஞ்சு வோம்'' என்று ஒரு வளைவு— தோரணங்கள், ஒளி விளக்குகள் —சாலை இரு மருங்கிலும் மக்கள் நின்று தங்கள் அருமைத் தலை வனை ஆனந்தக் கண்ணீர் மல்கக் கரங்கூப்பி வரவேற்றனர்.

காஞ்சியில் அன்று பெரிய திரு விழா. ஊரெங்கும் ஒளி மயம்! திரும்பிய திசையெல்லாம் ஒளி விளக்குகள், தோரணங்கள், அலங் கார வாயில்கள் வரலாற்றுப் புகழ் படைத்த—வரலாற்றுக் காவியத்திலேயே பல பொன்னே டுகளைத் தனக்கே உரிமையாக்கிக் கொண்டுள்ள அந்தச் சிங்காரத் திருநகர் அன்று விழாக் கோலமே பூண்டிருந்தது. வீதிகளிலே சாரி சாரியாக மக்கள்! எங்கு பார்த்தா லும் ஓர் பரபரப்பு, ஓர் இனம் புரியாத இன்பக் கிறுகிறுப்பு.

''முதல்வர் வந்து விட்டார்''
''முதல்வர் வந்து விட்டார்''

காஞ்சி மாநகரம் அந்தத் தலை வனை, தமிழக முதல்வரை, கலை ஞரை எத்தனையோ முறை பார்த் திருக்கிறது. அவர் ஒன்றும் அந்த மண்ணிற்குப் புதியவரல்ல. அவர் பிறந்தது, தஞ்சை மண். ஆனால் படித்தது காஞ்சியில் அண்ணாவின் பல்கலைக் கழகத்தில் தானே! இருந்தும் ஏன் இவ் வளவு குதூகலம்! இவ்வளவு மகிழ்ச்சி. இவ்வளவு ஆரவாரம்! அதில் உள்ள சூட்சமத்தைப் புரிந்து கொண்டால் கலைஞரின் வெற்றியின் இரகசியம் தெள் ளெனப் புரிந்து விடும். அவர் தொடாத துறை ஒன்றுமில்லை. தொட்டது பொன்னாகாமல் இருந்ததுமில்லை.

மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். பிரம்மாண்ட மான மேடை. குழல் விளக்குக இரவைப் பகலாக்கிக் கொண் டிருந்தன.

கூட்டம் சொல்லி முடியாது காஞ்சி நகரமே திரண்டு வந் விட்டதா ?

மேடையிலே கம்பீரமாக முத வர். அருகில் வேளாண் மைத் துறை அமைச்சர் அ பில். புதுவை முதல்வர் பரு தண்ணீர்-வடிகால் வாரியத் த வர் திரு. செ. சந்தப்பன், நாட ளுமன்ற உறுப்பினர் சிட்டிபாபு காஞ்சி நகரத் தலைவர் திரு. கே டி. எஸ். மணி. சட்ட மன் உறுப்பினர் திரு. சி. வி. எம் அண்ணாமலை, மாவட்ட ஆட்சி தலைவர் திரு. சீதாராம தா

''நீராடும் கடலுடுத்த....'' தமிழ்த் தாய் வாழ்த்துப் பாட பாடப்படுகிறது.

நினைவு அலைகள் எங்கோ ஓ கின்றன. அன்றொரு நாள் அ தேர்ப்புரவி ஆட்பெரும் படை டன் பாராண்ட பல்லவப் பெரு தகைகள் மகேந்திர பல்லவன். மாமல்ல பல்லவன் இப்படி தான் அத்தாணி மண்டபத்தி கொலுவீற்றிருந்திருப்பார்கள்.

காலம் ஓடி விட்டது. ஆன அதே வீரம், அதே இராச தந்

கால் முடமான முடிதிருத்தத் தொழிலாளருக்கு மூன்று சக்கர வண்டியைத் தருகிறார் முதல

ரம், அதே கலை உணர்வு, அதே செயல்திறன் எல்லாம் உருண்டு திரண்டு மறுபிறப்பாக கலைஞர் வடிவில்........

திரு அன்பில் அவர்களின் கம்பீரமான குரல் மேடையிலிருந்து ஒலிக்கிறது. அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டி விட்டு அவர் உரையாற்றிக் கொண்டிருந்தார். இதற்காகும் செலவு மதிப்பீடு ரூபாய் 3 இலட்சம். பல முக்கிய நிகழ்ச்சிகள். ஆனால் எல்லாம் ஒரேமேடையில்ஒன்றன் பின் ஒன்ருக நடந்தேறுகின்றன. அன்னை அஞ்சுகம் திருமண மண்டப அடிக்கல் நாட்டு விழா, கலை

துணி தேய்க்கும் பெட்டி வழங்குதல்—இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக,

நெஞ்செல்லாம் இனிக்கும்படியாக, 42,000 நிலமற்ற ஏழைகளுக்கு நிலப்பட்டாவும் குடிமனைப் பட்டாவும் வழங்கு விழா..............

இத்தனை விழாக்களும் ஒரே இடத்தில்....ஒரே மேடையில்- அஞ்சுகம் திருமண மண்டபத்திற்குச் செலவு மதிப்பீடு ரூபாய் 3 லட்சம். கலைஞர் கருணநிதி விளையாட்டரங்கத்திற்குச் செலவு மதிப்பீடு ஏழு இலட்சம் ரூபாய். காஞ்சிமா நகர் பாதாளச்சாக்கடைத் திட்டத்திற்கு 1 கோடி ரூபாய்......42,000 ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படும்

யார் என்ன சொன்ஞலும், எதிர்த்தாலும் நான் பின்வாங்கப் போவதில்லை. அண்ணு சமாதியை எவ்வளவு அழகுபடுத்த முடியுமோ அவ்வளவு அழகு படுத்தவும், அண்ணன் நினைவு எந்தப்பக்கம் திரும்பினுலும் இருக்குமளவிற்கு அண்ணனின் பொன் மொழிகள் இருக்கத்தக்க அளவிற்குச் செய்து முடிக்கத்தான் போகிறேன்'' அண்ணு பிறந்த மண்ணில் நின்று அவருக்கே உரித்தான கம்பீரத்துடன் கலைஞர் அறிவித்த பொழுது எழுந்த கரவொலி வானைப் பிளந்தது.

'' காஞ்சியில் நீண்ட நாளைய ஆவலாக இருந்தது பாதாளச் சாக்கடைத் திட்டம், ரூ. 1 கோடிக்குமேல் செலவிடப்

காஞ்சியில் கலைஞர் கருணநிதி விளையாட்டு அரங்கை புதுவை முதல்வர் பரூக் அவர்கள் திறந்துவைக்கிருர்கள்

ஞர் கருணநிதி விளையாட்டரங்கம் அடிக்கல் நாட்டு விழா, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊர்க்காவல் துறைக் கண்காணிப்பாளர் இல்லங்கள் திறப்பு விழா, காஞ்சிப் பாதாள சாக்கடைத் திட்டத் துவக்க விழா, மாமல்லன் கூட்டுறவுக் குடியிருப்புத் திறப்பு விழா, செங்கற்பட்டு மாவட்ட சாதனைமலர் வெளியீட்டு விழா, கலப்பு மணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு தங்கப்பதக்கம், நரிக்குறவர்களுக்கு ''வானெலிப் பெட்டிகளை அளித்தல், முடமான நாவிதர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல், சலவையாளர்களுக்கு

நிலப்பட்டா குடிமனைப்பட்டா நிலங்களின் மதிப்பு சுமார் 3 கோடி ரூபாய்.

செங்கை மாவட்டத் தமிழாசிரியர் சங்கம் தேன் தமிழில் வரவேற்பு மடல் வாசித் தளித்தது.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக அமைந்தது முதல்வரின் பேருரை....அண்ணன் பிறந்த மண்ணில் அவருடைய அருமைத் தம்பி தன் பேச்சால் அனைவரின் மனத்தையும் உருக்கிவிட்டார்.

'' ..சென்னைக் கடற்கரையில் உள்ள அண்ணு சமாதியை ஒரு பிருந்தாவனமாக்கப்போகிறேன்.

படும் பெரியதிட்டம் இது. இன்று அதன் கால் கோள் விழா நடைபெற்றிருக்கிறது. இன்று அடிக்கல் நாட்டப்பட்ட திருமண மண்டப விழாவை விட, விளையாட்டரங்கத்தை விட எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரத்தக்கது 42,000 ஏழை எளிய நிலமற்ற மக்களுக்கு நிலப்பட்டா, மனைப் பட்டா வழங்கப்பெறும் நிகழ்ச்சியேயாகும். அதற்கு எவ்வளவு செலவாகிறது தெரியுமா? சுமார் 3 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலமும் வீட்டு மனையும் 42,000 பேருக்கு இன்று தரப்பட்டுள்ளது'' என்று ஏழை எளிய மக்களின்பால் தனக்குள்ள,

தன் அரசுக்குள்ள ஈடுபாட்டைக் கோடிட்டுக் காட்டி விட்டு, எழுப்பப்பட்ட கோரிக்கையைப் பற்றி முதல்வர் தனக்கே உள்ள நகைச் சுவையுடன் '' அண்ணு, திரைப் படம் ஒன்றிலே 'சேடி இல்லாத ராஜகுமாரி....ஜோடி இல்லாத மாடப்புரு இருக்க முடியாதாம்.' என்ற வசனம் எழுதியிருந்தார். அத்துடன் 'கோரிக்கை இல்லாத மந்திரிகள் வரவேற்பும் இருக்க முடியாது' என்று சேர்த்துக்கொள்ளலாம். 5,000 பேர் வேலை செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலை காஞ்சிபுரத்தில் அமைய வேண்டும் என்ற கோரிக்கை நண்பர் சி. வி. எம். அண்ணுமலை அவர்களால் எழுப்பப்பட்டது. 5,000 பேர் வேலை செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலை உருவாவது என்ருல் அதற்குப் பல கோடி ரூபாய் தேவை. தனிப்பட்ட யாராவது முன்வந்தால் கூட ''அளித்தேன் அனுமதி'' என்று சொல்லக் கூடிய அதிகாரங்கள் என்னிடமில்லை.

''5,000 பேர் வேலை செய்யும் தொழிற்சாலை காஞ்சிபுரத்திற்கு வேண்டும் என்று கேட்பது சுவையாக இருக்கிறது.

"தொழிற்சாலையின் புகைப் போக்கிகள் ஆலயத்தின் கோபுரத்தைவிட உயரமாகவும், அதிலிருந்து கிளம்பும் புகை மண்டலம் மேக மண்டலத்தோடு போட்டி போட்டுக் கொண்டு புகை மண்டலம் எது, மேக மண்டலம் எது, என்று தெரியாத அளவுக்கு இருக்கின்ற காட்சிகளை எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு பார்த்தால் களிப்பான காட்சி—ஆனல் கண்ணைத் திறந்து பார்த்தால் சாவி நம்மிடமில்லை. டில்லியிலிருக்கிறது. அப்போது தான் இப்படிப்பட்ட நேரங்களில் வேண்டுகோள் விடும் பொழுது மகிழ்ச்சி அடைவதை விட மனக் கிலேசம் அடைகிறேன்" என்று கூறிவிட்டு செங்கை மாவட்டத்தின் நான்காண்டு வளர்ச்சியைப் புள்ளி விவரங்களோடு விளக்கிஞர் :—

'' செங்கை மாவட்டத்தில் 1960-லிருந்து 67 வரை நிலப்பட்டா பெற்றவர்கள்—1,163 பேர்.

1967-லிருந்து 1971 வரை நான்காண்டுகளில் நிலப்பட்டா பெற்ருேர்—16,992 பேர்

(இன்று கொடுத்தது நீங்கலாக)

1960-லிருந்து 1967 வரை வீட்டு மனைப் பட்டா பெற்ருேர் —1,630 பேர்.

1967-லிருந்து 1971 வரை வீட்டு மனைப்பட்டா பெற்ருேர் 25,215 பேர்.

1960-லிருந்து 1967 வரை மிகு விளைச்சல் தரும் நிலச்சாகுபடி செய்யப் பட்ட நிலம்—79,900 ஏக்கர்.

இந்த நான்காண்டுக் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலம்— 9,57,314 ஏக்கர்.

பாராண்ட பரம்பரையின் மறுபதிப்பாக, தமிழக முதல்வர்! தமிழகத்து வரலாற்றுக் கதாநாயகர்கள்—செந்தமிழ் நாட்டுக்குப் புகழ் தேடித் தந்த வீரத் திருமகன்கள், இராச இராச சோழன், இராசேந்திர சோழன்- களம்பல கண்ட கடமை வீரர்கள்—கல்லெல்லாம் கதை சொல்லும் மாமல்லபுரம் கண்ட பல்லவப் பேரரசர்கள்-மகேந்திர பல்லவரின் இராச தந்திரம், மாமல்ல பல்லவனின் வீரம்—அத்தனையும் கல்லக்குடி கொண்டானின் பார்வையிலே, செயலிலே, நடையிலே, அவருடைய அழகுத் தமிழிலே நின்று நிலவிப் பரிமளிக்கிறது—இதயம் எங்கெங்கோ ஓடியது. வரலாறு திரும்புகிறது. தமிழகத்தின் பொற்காலம் மலர்ந்து கொண்டிருக்கிறது.

அனைத்து இந்திய அளவில் மிகச் சிறந்த கிராமமாக தமிழ் நாட்டிலுள்ள 'மணவாளக் குறிச்சி, என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப் பெற்று முதல் பரிசு பெற்றுள்ளது. இதற்குரிய பரிசு 27-4-71 அன்று புதுடில்லியில் மத்திய உணவு வேளாண்மை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

இதை வைத்துக் கொண்டு தான் '' உணவு உற்பத்தியில் தஞ்சையையும் மிஞ்சுவோம் '' என்று எழுதியிருக்கிருர்கள் போலும். முடியாது. தஞ்சையை மிஞ்ச முடியாது. இருப்பினும் இந்தப் போட்டி மனப்பான்மை உணவு உற்பத்தியில் வருவதை வரவேற்கிறேன் '' என்று கூறி முடித்தார்.

நாட்டுப் பாடலுடன் விழா நிறைவு பெற்றது. வீதிகளில் எல்லாம் மக்கள் வெள்ளம். ஒளிமயம்; காஞ்சி மாநகரை வண்டி தாண்டும் பொழுது மனத்திலே விவரிக்கவொண்ணுத நினைவுகள். கலைஞரின் கம்பீரக் குரல் காதுகளிலே ரீங்காரம் செய்து கொண்டே இருந்தது.

தமிழகத்தில் தான் எவ்வளவு வியத்தகு மறுமலர்ச்சி......!

வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. இதயம் வாழ்த்தொலி எழுப்புகிறது. தூக்கம் கண்ணைப் பொத்துகிறது. அயர்ந்து தூங்கி விட்டேன். கண் விழித்துப் பார்த்தால்—நடு நிசியாகி விட்டது. சிங்காரச் சென்னையின் இதயமான அண்ணுசாலை—இரவைப் பகலாக்கும் ஒளி உமிழ் விளக்குகள்—காஞ்சி விழா கண்ட நெஞ்சு இனித்தது. நிறைவு பெற்றது. பஞ்சைப் பராரிகளை வாழ்விக்க வந்த காஞ்சித் தலைவன் அண்ணுவின் சிலையை நோக்கிக் கரம் கூப்பி வணங்கி விட்டு வண்டியை விட்டு இறங்கினேன்.

அண்ணுவின் சமாதி அழகுப் பிருந்தாவனமாக்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பு தேனுக இனிக்க, தெம்புடன் வீட்டை நோக்கி வீதியில் நடைபோட்டேன்.

திருவாளர் பொன் மொழியார்

அன்புள்ள ஆசிரியருக்கு,

சங்கு சுட்டாலும் வெண்மை தரும். என்னைப்பற்றி நீங்கள் என்ன எழுதியிருந்தாலும் உலகுக்குத் தெரியத்தான் போகிறது உண்மை. நான் அஞ்சவில்லை. குருட்டுக் கழுதை இருட்டுக்குப் பயப்படுமா ?

'இவரைச் சந்தியுங்கள்' என்ற அறிவிப்புடன் எழுதியிருந்தீர்கள் :

''இவர்தான் திருவாளர் பொன் மொழியார்'' என்று உங்களுக்கு அவசியம் அறிமுகம் செய்துதான் ஆக வேண்டும்.

அடுத்த இதழ் முதல் ஒவ்வொரு இதழிலும் இவரைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி விட்டீர்களே !

'இதென்ன அறுவைக் கேஸ்' என்று அஞ்ச வேண்டாம். திருவாளர் பொன்மொழியார் பொல்லாத மனிதரும் அல்லர்; புனிதமானவரும் அல்லர்!

எதையும் வெள்ளை உள்ளத்துடனே நோக்கும் இவரை ஒரு சராசரி மனிதராகவே நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

சராசரி மனிதரைச் சந்திப்பதில் என்ன சுவையிருக்கும் என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள்.

பூர்வீகத்தில் புண்ணிய கோடி என்ற பழம் பெயருக்குச் சொந்தக்காரரான இவரையும் இவர் மனைவி அருந்ததியையும் சந்தித்த பிறகு நீங்களே சொல்லுவீர்கள்.

வேறு விவரம் வேண்டுமா?

அடுத்த இதழில்தான் நீங்களே சந்திக்கப் போகிறீர்களே..'' என்று

இதையெல்லாம் படித்தவுடன் எனக்கு உடனே ஆசிரியருக்குக் கடிதம் எழுதவேண்டும் என்று தோன்றியது.

"இளவல்"

''ஆசிரியருக்குக் கடிதமா ? ஏன் என்று கேட்கிறீர்களா?''

ஆசிரியருக்குக் கடிதம் எழுதக் காரணம் வேண்டுமா ?

'எதையும் எதிர்ப்பது, எதையும் சொல்வது என்பது தானே புதுமை! அதுபோல எதைப்பற்றியும் எப்படி வேண்டுமானாலும் கருத்துக்களை எழுதுவது தானே ஆசிரியருக்குக் கடிதம் எழுதுவது! பெயரும் பத்திரிகையில் வரும். இப்படி நாம் எழுதாவிட்டால் பல ஏடுகளில் ஆசிரியர்களே அந்தக் கடிதத்தை எழுதிப்போட்டுக்கொள்வார்கள். ஆகவேதான் ஆசிரியருக்குக் கடிதம் எழுதிவிடத் துணிந்தேன்.

அறிவிப்பை இன்னொரு அறிவிப்பால்தானே முறியடிக்க முடியும்.

முள்ளை முள்ளால்தானே எடுக்க வேண்டும்! அதே நேரத்தில் இன்னொன்றும் நினைவுக்கு வந்தது, 'தீயைத் தீயால் அணைப்பதில்லையே', என்று!

எனவே அவசரமாக ஒரு தந்தியை அனுப்பினேன்.

'இந்த வாரம் என்னைச் சந்திக்க முடியாது' என்று தந்தி அடித்தேன்.

நீங்களும் 'அடுத்த இதழில் தான் வருகிறார் பொன்மொழியார்' என்ற அறிவிப்பை அழகாக வெளியிட்டுள்ளீர்களே!

இனிமேல் பிகு செய்வது பிரயோஜனமில்லை என்று வந்து விடுகிறேன்.

''கத்தி சாணைக் கல்லைத் தின்கிறது. சாணைக்கல் கத்தியைத் தின்கிறது.''

நீங்கள் அழைத்து வந்தால் என்ன? நானாக வந்தால் என்ன?

புகழ்மிக்க நண்பன்,

பொன்மொழி.

• • •

தண்ணீர் எரிவதில்லை!

தங்கம் துருப்பிடிப்பதில்லை!

பொன்மொழி பொய் பேசுவதில்லை !

அப்பப்பா என்ன பாராட்டுகள்! என்ன புகழுரைகள்! அந்த விழாவில் பொன்மொழியாரைப் பாராட்டாதவர்கள் மேடையில் ஏறுதவர்கள்தாம்!

பீச்சிலே உட்கார்ந்திருப்பவர்களைப் பார்த்துப் பட்டாணி சுண்டல் விற்பவர்கள் எல்லாம் அருகில் வந்து ஒரு சுற்றுச் சுற்றி ''தேங்காய் மாங்காய் பட்டாணி சுண்டல், முறுக்கு, அடை'' என்று கூறுவதுபோல் மேடையில் ஏறியவர்கள் எல்லாம் 'மைக்' பக்கம் வந்து பொன்மொழியார் புகழ் பாடினார்கள்.

பொன்மொழி சொன்னால் பொய்யாவதில்லை.

''பூலோக வாழ்வே அவர் வாய்மொழி!

"திருவாளர் 'பொன்மொழியார்' தேசத்தின் திரண்ட சொத்து. பொன்மொழியார் இந்த நூற்றாண்டின் இணையற்ற அறிவுக் கருவூலம்" அப்படி இப்படின்னு யார் யாரோ சொன்னாங்க....

அவருடைய பால்ய சிநேகிதன் பரட்டைத்தலை பரமசிவம் கூட என்னென்ன சொன்னான்.... எப்படி எப்படிப் பாராட்டினான்...!

''ஏய் புண்ணியகோடி! புத்தகப் புழுவே! பிழைக்கத் தெரியாதவனே !" என்று, காணும்பொழுது எல்லாம் அந்தக் காலத்தில் நாவார வசை பாடும் அவன் கூட அல்லவா எல்லோரையும் போல—தொண்டை கட்டிக் கொண்டிருந்ததால் கீறல் விழுந்த இசைத் தட்டைப்போலவே பேசினான்.

'பொன்மொழியை எனக்கு அப்போதே தெரியும்! பொரியுருண்டை வாங்கித்தின்போம். நாட்டிலே நாலு பேர் பாராட்டும் அறிவாளியாக மேதையாக வளர்வார் நடப்பார் என்பதைக் காதறுந்த செருப்புடன் நடந்து வரும் அவருடைய அந்தக்கால நடையே சொல்லும், என்று பாராட்டினான்.



பொன்மொழியார் எழுதிய புத்தகம் ஒன்று 1,000 பிரதிகள் விற்றதால் இந்தப் பாராட்டு விழா நடைபெற்றது!

ஆயிரம் பிரதிகள் விற்றதால் ஆயிரம் பிறை காண எல்லாரும் வாழ்த்தினார்கள்.

'அறிவு' தலைக்குக் கிரீடம் அடக்கம் காலுக்குச் செருப்பு' என்ற பேருண்மையை உணர்ந்த மனத்துடன் அமர்ந்திருந்தார் பொன்மொழியார்.

'எல்லாப் பாவங்களும் முதுமையடையும் போதுகூடப் பேராசை மட்டும் இளமையாக இருப்பது போல்' எல்லோரும் பாராட்டினாலும் அவர் மனைவி பாராட்ட வேண்டும் என்ற ஆசை பொன்மொழியார் நெஞ்சில் துளிர்த்தது.

அருந்ததியை வருந்தி வருந்தி அழைத்தார். அந்த அம்மையாரோ ''விருந்து ஒன்றினுக்குப் போகவேண்டும்; வேறு வேலை இருக்கிறது" என்று மறுத்து விட்டார்.

பொன்மொழியாரைப் பற்றி இங்கு பேசியவர்கள் எல்லாம் கூறியதைக் கேட்டால் அருந்ததிக்கு எவ்வளவு மனங்குளிரும் என்பது மட்டுமல்ல......இதுவரை தான் புரிந்துகொள்ளாமல் தன் கணவரைப் பற்றி அலட்சியமாக இருந்ததை மாற்றிக் கொள்ளமாட்டாளா ?

அருந்ததி கேட்காத புகழுரைகள் பாராட்டுகள் எல்லாம்..

காட்டில் எரித்த நிலவு

கடலில் பெய்த மழை

காப்ரே பார்த்த குருடன் போலாகும் என்று நினைவு ஓடியது. அந்தக் காலக் காட்சிகள் கண்முன்னே வந்தன.

அம்மி மிதித்து அருந்ததி பார்த்துத் திருமணம் செய்து கொள்ள அவர் பெண்ணல்லவே! ஆண் மகன் அல்லவா?

ஆகவே ஆட்டுக்கல்லை மிதித்து அருந்ததியைப் பார்த்தார்.

ஆமாம், ஆட்டுக்கல் மீது நின்று, இடிந்த சுவர் வழியாக அடுத்த வீட்டுத் தோட்டத்தில் நிற்கும் அருந்ததியைக் கண்டார்!—கண்டார்கள்!—கட்டுண்டார்கள்!—கடிமணம் — காதல் மணம் செய்து கொண்டார்கள்.

'அறிவாளியின் ஒருநாள், முட்டாளின் முழு வாழ்வுக்குச் சமம்' என்பதுபோல ஆனந்த வெள்ளத்தில் சில காலம் வாழ்க்கை ஓடியது.

ஆனால் ரஷ்யப் பழமொழிக்கு இலக்கியமானாள் - அருந்ததி. ஆனந்த வெள்ளம் பிரேக் டவுன் பஸ்ஸாகிவிட்டது.

ஓகோ.. உங்களிடம் சொல்லவில்லையே திருமதி பொன்மொழியார் இலக்கியமாகிய தற்கான இலக்கண மொழி எது என்று சொல்லவில்லையே.. நினைவுபடுத்திச் சரியாக சொல்கிறேன்......

''உழவனுக்கு நிலம் வேண்டும்; பிரபுவுக்குக் கௌரவம் வேண்டும்; சிப்பாய்க்குச் சண்டை வேண்டும்; வியாபாரிக்குப் பணம் வேண்டும்; விவசாயிக்குச் சமாதானம் வேண்டும்; தொழிலாளிக்கு வேலை வேண்டும்; ஓவியக்காரனுக்கு அழகு வேண்டும்; பெண்ணுக்கு முழு உலகமும் வேண்டும்''.

அருந்ததி பெண் தானே! எனவே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த நோக்கோடு ரஷ்யப் பழமொழிக்கு இலக்கியமானாள்......

'மணம் செய்யும் பொழுதும் மாத்திரை சாப்பிடும் பொழுதும் ரொம்ப அதிகம் சிந்திக்கக் கூடாது'என்பதாலோ என்னவோ அவசரப்பட்டு அருந்ததியைக் கைப்பிடித்தோம் என்று பல முறை பொன்மொழியார் சிந்தித்தார்......சிந்திக்கிறார்....

பாராட்டு விழா நடத்தியவர்கள் நன்றியுரை கூறப் பொன்மொழியாரை அழைத்தபொழுது தான் பழைய சிந்தனையிலிருந்து விடுபட்டார்.

வீடு திரும்பும் பொழுது அதே சிந்தனைகள்......கையில் மாலையுடன் டாக்சியிலிருந்து பாராட்டு வாழ்த்திதழைத் தூக்கிக் கொண்டு இறங்கினார். உள்ளே அவர் கண்டகாட்சி......

துரும்பாய்த் தேய்ந்தாலும் சந்தனக் கட்டை மணம் மாறாது என்பது போல அருந்ததி பொன்மொழியார் மனைவி என்பதை உறுதிப்படுத்தியது.

(தொடரும்)

வேளாண்மை, தொழிற்சாலைகளுக்கு நீர் ஊற்று கண்டுபிடிக்க வேண்டுமா?

புதிதாகக் கிணறு வெட்டவும், குழாய்க் கிணறு அமைக்கவும், வேண்டுமானால் மணிக்கு 1,000 முதல் 2,500 காலன் தண்ணீர் கொடுக்கக் கூடிய நீர் ஊற்று உள்ள இடத்தைக் கண்டுபிடித்துக் கொடுக்கவும், எவ்வளவு ஆழத்தில் தண்ணீர் கிடைக்கும் என்பதைக் கூறவும் கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

எஸ். பி. பிரேம்சந்தர ராவ், பி.எஸ்சி.
5, முதல் தெரு, சேத் காலனி,
எழும்பூர், சென்னை-8.
தொலைபேசி எண் : 84728

பிரேம்சந்தர ராவ் அவர்கள் ஆந்திரப் பிரதேச அரசு, தென் இரயில்வே ஆகியவைகளின் அலுவல் பற்றிய நீர் ஊற்று நிபுணராவார்.

வெண்பாப் போட்டி-12

ஈற்றடி :

காவிரியைக் காத்திடுவோம் காண் !

முடிவு நாள் : 11—7—1971
பரிசு ஓராண்டு 'தமிழரசு'
அன்பளிப்பு
வெண்பா அனுப்ப வேண்டிய
முகவரி :—
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

முதலும் முடிவும்

பொழுது விடிந்தும் தலையைத் தூக்காமலே படுத்திருந்த ராகவனுக்கு ஒரே எரிச்சலாக இருந்தது. விடிந்திருக்கும் பொழுது மாதக் கடைசியில் முதல் தேதியை எட்டிப்பிடிக்கும் வரையிலும் சமாளிக்க வேண்டிய செலவுகள் என்னென்ன என்பதெல்லாம் கண்களைத் திறந்ததும் நினைவுக்கு வரும்போது, உள்ளம் குளிரவா செய்யும் ?

போர்வையை உதறிவிட்டுக், கட்டிலிலேயே உட்கார்ந்து கொண்டான் ராகவன்.

ஜன்னல் வழியாக வெளியே பார்க்கும்போது, முதலில் அந்தக் காட்சிதானா கண்ணில் பட வேண்டும்?

இந்த வீட்டிலே சம்பாதித்துப் போடுபவன், இங்கே பல் துலக்காமல் உட்கார்ந்திருக்கும் போது, வழிநடையில் கால்நீட்டிப் பாங்காக அமர்ந்து, ஆவிபறக்கும் இட்டலிகளை ரசித்து உண்கிறாள் வேலைக்காரி ரெங்கம்மாள்.

இவளைக் கண்டால் ராகவனுக்குக் கட்டோடு பிடிக்காது. யாரையுமே மரியாதையோடு பேசவே ரெங்கம்மாளுக்குத் தெரியாது. இவள் மீது கமலத்துக்கு அவ்வளவு பிரியம். உண்பது எதையும் இவளுக்குக் கொடுக்காமல் இருக்க மாட்டாள்.

எதற்கும் ஒரு வரைமுறை இருக்க வேண்டாமா ?

'' கமலம்மா . . . ஐயா என்ன எந்திரிச்சு கட்டில்லேயே குந்தி இருக்காரு? நேரமாகலேயோ? '' என்று இவன் காது கேட்கவே கேட்கிறாள்.

இவளுக்கென்ன அக்கறை? வேலைக்காரி எதைப் பேசவேண்டுமென்ற அளவு இல்லையா? முதலில் இந்தச் சனியனை ஒழித்துக்கட்ட வேண்டும்.

ராகவன் பற்களைக் கடித்துக் கொண்டான்.

அப்போது, ' என்ன அப்படியே உட்கார்ந்திட்டீங்க ' என்று கேட்டுக் கொண்டே கமலமும் அறைக்குள் நுழைந்தாள்.

'' காலையிலே ரெங்கம்மா சொல்லித்தானா நான் எழுந்திருக்கணும். வர வர ரொம்ப உச்சிக்குப்போருப்பிலே இருக்கு'' என்றான் ராகவன் கோபத்தை உள்ளடக்கிக்கொண்டு.

'' என்னிக்கும் தான் ரெங்கம்மா பேசறா '' என்றாள் கமலம்.

''இதுக்கு முதல்லே முடிவு கட்டியாகணும் ''

'' எதுக்கு ? ''

'' உனக்கும், இந்த ரெங்கம்மாளுக்கும் இருக்கும் உறவுக்கு'' என்று தணிவான குரலில் சொல்லி விட்டு எழுந்தான் ராகவன்.

'' கண்ணைத் திறந்ததுமே இதைத்தான் ஆரம்பிக்கணுமா?'' என்று சொல்லிக் கொண்டே பின்னால் வந்தாள் கமலம்.

அவன் சொன்னது, குழாயடியில் நின்ற ரெங்கம்மாளுக்குக் கேட்டிருக்க வேண்டும்; அவள் அங்கிருந்தே ஆரம்பித்தாள்.

'' காலங்காத்தாலே கண்ணைத் தொறந்ததுமே ஐயா என்ன துர்வாச முனியாட்டமா நிக்கிறாரு? பல்லு தேய்க்காட்டியும் பரவாயில்லை. காப்பியைக் கொடும்மா கமலம் '' என்று ரெங்கம்மாள் சொன்னதைக் கேட்டதும் ராகவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

''இந்தா ரெங்கம்மா –நீ வேலைக்காரியா லட்சணமா இருந்தா இரு. இல்லை, இப்பவே நின்னுக்கோ'' என்று சொல்லி, தைரியமாகவே அவளுக்கு முன் பாகப்போய் நின்றான்.

'' ஐயா .. போகட்டும் போ! உன் வீட்டு வேலை இல்லையின்னா, நான் செத்தா பூடுவேன்? என்னமோத்தான் அலட்டிக்கிறே! இந்தப் பொண்ணு முகத்துக்குத் தான் இங்கே வந்து நிக்கிறேனுக்கும்'' என்றாள் ரெங்கம்மாள் நீட்டி முழக்கி.

'' ரெங்கம்மா .. பேசாமத் தான் இருமே. காலையிலே உன்னோட பெரிய வம்பாப் போச்சு '' என்று இடையிலே புகுந்து அலுத்துக்கொண்டாள் கமலம்.

'' நீ யாருக்காகவும் இங்கே வந்து நிக்க வேணும். முதல்தேதி வந்து சம்பளத்தை வாங்கிக்கிட்டுப் போ'' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான் ராகவன்.

'' நீயும் எத்தனையோ வாட்டி இந்த

மாதிரித்தான் சொல்லிக் கிட்டே இருக்கே'' என்று சொல்லி விட்டு, அவனது சொல்லைப் பொருட்டாகக் கொள்ளாமலே, காய்கறிப் பையை எடுத்துக் கொண்டு கடைக்குப் போய் விட்டாள் ரெங்கம்மாள்.

அவள் தலைமறைந்ததும், ஆங் காரத்தோடு கமலத்தின் மீது பாய்ந்தான் ராகவன்.

'' எல்லாம் நீ கொடுக்கிற இடம்தான். நாளையிலிருந்து ரெங்கம்மா இங்கே வர வேண்டாம். கண்டிப்பாகச் சொல்லிப்போடு '' என்றான் கொதிப்புடன்.

'' அதான் நீங்களே சொல்லிட் டிங்களே— என்னமோ பாசத் தோட பழகுறா. நாலு மாசமா ரெங்கம்மாளுக்குச் சம்பளமே கொடுக்கலே. அதை மறந்திட் டிங்க '' என்று சொல்லி அடுத்த பானத்தைத் தூக்கிப் போட்டாள் கமலம்.

அத்தோடு பாத் ரூமிற்குள் நுழைந்து விட்டான் ராகவன்.

மனது கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது.

அவளுக்குக் கொடுக்க வேண்டிய பணம் தள்ளியேதான் போய் விட்டது. வரும் சம்பளத் தில் அவளுக்குக் கொடுத்து விட்டால், வேறெதில் வெட்டு விழ முடியும்?

முதல் தேதிக்கு இன்னும் நான்கு நாட்கள் இருக்குபோது இதென்ன கவலை? இப்போது வீட்டுக்கும் கைச் செலவுக்குமாக பத்து ரூபாய்களுக்கு மேலாக வேண்டுமே, யாரிடம் கேட்பது?

ராகவன் தலையில் வெந்நீரைக் கொட்டிக் கொண்டான்.

அவன், குளித்து விட்டுவெளியே வந்த போது, சரியாகத் தபால் காரனும் '' சார் தந்தி '' என்று சொல்லிக் கொண்டே படியேறி வந்து நின்றான்.

''. தந்தியா ?'' ராகவனுக்குத் திகைப்பாக இருந்தது.

இந்த நேரத்தில் எது வந்து நிற்கப் போகிறதோ?

கமலமும் படபடப்புடன் பக் கத்தில் வந்தாள்.

ராகவன் அவசரத்துடனே தந்தியைப் பிரித்தான்.

தூத்துக்குடியில் அவனது தாத்தா—தனது எண்பத்தியேழா வது வயதில் காலமாகி இருந்தார்.

'' என்னங்க ? '' என்று கலவ ரத்துடன் கேட்டாள் கமலம்.

'' தாத்தா— போய்ச்சேர்ந் திட்டாராம். நாம எப்ப குழந் தைகளையும் இழுத்துக்கொண்டு தூத்துக்குடிக்குப் போய்ச் சேர்றது '' என்று கவலையோடு சொன்னான்.

கமலத்துக்கு அழுகை அழுகை யாக வந்தது.

ராகவனின் கண்கள் கலங்கின.

தாத்தாவுக்காக அல்ல. 'உட னடியாகப் புறப்படவேண்டுமே, ஆகவேண்டிய செலவுகள் எவ்வ ளவு, அதற்கு என்ன செய்வது, என்ற கவலைதான் முன்னுக்கு நின்றது.

'' என்னங்க— திகைச்சுப் போய் நின்னுட்டீங்களே! இப் பவே வண்டியிருக்கா ?'' என்று பெட்டிக்குள் பணத்தை வைத் திருப்பவளைப் போலக் கேட்டு, அப்போதே புறப்பட ஆயத்த மாகி நின்றாள் கமலம்.

'' வண்டி இருக்கு. அந்தா இந்தான்னு குறைந்தது இருநூறு ரூபாயாவது வேணுமே'' என்று கவலையுடன் சொன்னான் ராகவன். குளித்தவுடன் இருந்த பசி அடங்கிப் போய்விட்டது அவ னுக்கு.

'' யாரு கிட்டேயாவது வாங் குங்க '' என்றாள் கமலம்.

ராகவன் சோர்வுடன் நாற்காலி யில் உட்கார்ந்து விட்டான்.

யாரிடம் கேட்பது? பத்துப் பதினைந்து புரட்டுவதென்பதே திகைப்பாக இருந்தபோது, மார்தக் கடைசியில் நூற்றுக்கணக்கில் யாரிடம் கைமாற்றாக வாங்க முடியும் ?

நினைத்து, நினைத்துப் பார்த்த பொழுது, அவனுக்கு நம்பிக்கை ஏற்பட வில்லை.

தூத்துக்குடியில் அவனது உற வினர்களும் செழிப்பாக இல்லை: எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு, பெரிய இழவுக்கென அங்கே போகும்போது, இருக்கும் தரித்திரத்தைக் காட்டிக் கொண் டிருக்க முடியுமா ?

திடீரென்று அவ்வளவு பணத் துக்கு எங்கே போவது?

''என்னங்க இப்படி உட் கார்ந்திட்டிங்க?'' என்று கேட் டுக்கொண்டே பக்கத்தில் வந்து நின்றாள் கமலம்

ராகவன் ஏறிட்டுப் பார்த் தான்.

அவனது பார்வை, அவளது கழுத்தில் சுருண்டு கிடந்த தாலிச் சரட்டின் மீது பதிந்தது.

கழுத்து நிறையவே போட் டிருந்தாள். ஒவ்வொன்றாக பேங்கிலும், மார்வாடி கடையி லும் அடைக்கலம் புகுந்துள்ளன. எஞ்சி இருப்பது இது ஒன்று தான், தாலியோடு கோத்த பொற்சரடு. தாலியை ஒதுக்கி னால், நான்கு பவுன்களாவது தேறும். இருநூறுக்கு மேலேயே கிடைக்கும். அவசரத்துக்கு மார் வாடியிடமே வாங்க வேண்டியது தான்!

''பேசாம இருந்தா எப்படி'' என்று கமலமே ஆரம்பித்தாள்.

''வேறே ஒரு வழியும் தோணலே கமலம்''—அவன் தொடர்ந்தான்.

''அப்படின்னா''

''அவசரத்துக்கு, இருக்கிற சங்கலியை வைச்சுத்தான் பணம் வாங்கணும்.''

கமலம் ஒன்றும் சொல்லாமல் தலை குனிந்து கொண்டாள்.

'இத்தனை காலத்துக்குப் பிறகு சொந்த ஊருக்கு வெறுங் கழுத்தோடவா போறது?' என்பதை நினைத்தாலும் வெளி யிட்டுச் சொல்லவில்லை.'

''என்ன கமலம்?'' என்றான் அவன் மேலும்.

அவள் ஏறிட்டுப் பார்த்தாள்.

''கழட்டித்தாரேன்'' என்று மட்டுமே சொல்லிவிட்டுத் திரும்பினாள்.

ராகவன் அப்படியே அமர்ந் திருந்தான்.

கமலத்தின் மீது அவன் உயிரையே வைத்திருக்கிறான். அதையொன்றும் குறைத்து மதிப்பிட முடியாது. 'அவளுக் குப் பொன் அணிகளாகப் பூட்டிப் பார்க்க வேண்டும்' என்பது அவனது அடங்காத ஆசை.

என்ன செய்வது?

சிக்கனமாக வாழ்க்கையை வகுத்துக்கொள்ள அவனும் அடிக்கடி முயற்சிப்பதுண்டு. எப்படி யெப்படியோ இடை யிடையே செலவுகள் வந்து விடுகின்றனவே!

ராகவன் திரும்பிப்பார்த்தான்.

படுக்கையறையில், பெட்டியை முன்னால் தூக்கி வைத்து, கமலம் எதையோ தேடிக் கொண்டிருந்தாள்.

சங்கிலி கழுத்திலேயே இருக்கும்போது, அங்கே எதைத் தேடுகிறாள்?

பொறுமை இழந்த ராக வன், 'என்ன கமலம்?' என்று கேட்டுக்கொண்டே, அவளுக்குப் பக்கமாகச் சென்றான்.

குனிந்திருந்த கமலம், நிமிர்ந்து கணவனைப் பார்த்

தாள். அவள் விழிகள் நீரில் மூழ்கி இருந்தன.

''தாலியைக் கோத்துக் கட்டிக்க மஞ்சள் கயிறு வேண்டாமா ? அதைத்தான் தேடி எடுத்தேன்'' என்று சொல்லி விட்டு எழுந்தாள் கமலம்.

ராகவனுக்கு நெஞ்சு நடுங்கியது. ஒன்றும் சொல்லாமலே திரும்பி முன் கட்டுக்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்தான்.

அதற்குள் காய்கறிப் பையோடு ரெங்கம்மாளும் வந்து விட்டாள்.

ராகவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

காலையில் கண் திறந்ததும் இவள் முகத்தில் தானே விழித்தான்! உடனடியாக, நெடுந். தூரப் பயணம் நேர்ந்திருக்கிறது.

ரெங்கம்மாளும் விறைப்பாகவே அவனைக் கடந்து வீட்டிற்குள்ளே போய்விட்டாள்.

இவளுக்கு, கமலம் சொல்ல வேண்டியதைச் சொல்லுவதில் சிறிது நேரம்தான் கழிந்திருக்கும்; உள்ளிருந்து ரெங்கம்மாளின் குரல் கேட்டது.

''நல்ல பொண்ணு நீ! வெள்ளிக்கிழமையும் அதுவுமாகத் தாலிச் சரட்டைக் கழட்டுவியா? நல்லா பொழச்சிங்க போங்க!'' என்று சொல்லி, கமலத்தை அவனுக்கு முன்னல் இழுத்துவந்து விட்டாள் ரெங்கம்மாள்.

எப்போதுமே, இந்த அறிவு கெட்டவளுக்குத்தான் சந்தர்ப்பமே தெரியாதே!

''எங்க பாடு-நாங்க என்னமோ செய்யிருேம்! உன் வேலை எதுவோ அதைப் பாரு'' என்று எரிச்சலோடு சொன்னுன் ராகவன்.

''இந்தக் கோபந்தானே மிச்சமாகி இருக்கு உனக்கு? இந்த மாதிரிச் சமயத்துக்கு வேணும்ன்னு.... அப்பப்ப கொஞ்சமாணும் சேர்த்து வச்சிருக்கணும். எவ்வளவு வந்தாலும் உன்னுடை ஆட்ட பாட்டமெல்லாம் பத்துத் தேதியோட தீர்ந்து போகுதே! நானும் பக்கத்திலே தானே இருக்கேன்!'' என்று மேலும் முழக்கினுள் ரெங்கம்மாள்.

''ரெங்கம்மாள் நீ பேசாமத் தான் இருமே. இப்ப அவசரமா இருநூறு ரூபா வேணுமே, அவசரத்துக்கு வேறே என்ன செய்யறது?'' என்ற கமலம் சங்கிலியைப் பிரிக்க ஆரம்பித்தாள்.

ரெங்கம்மாள் அவளது கையைப் பிடித்துக் கொண்டு,

''சங்கிலியைப் போட்டுக் கோம்மா. ரெண்டு நூறு தானே இப்ப வேணும்?'' என்று கேட்டாள்.

கமலம் வியப்புடன் தலையசைத்தாள்.

''நீங்க புறப்படுங்க. கொஞ்ச நேரத்திலே பணம் கொண்டாந்து தாரேன்.''

ராகவன் பரபரப்புடன் திரும்பினுன். ரெங்கம்மாளிடம் இவ்வளவு பணம் இருக்க முடியுமா? கேலி செய்கிருளா?

''என்னய்யா பாக்குறே? உன்னைப்போல், நாளை வேணும் பிறகு வேணும்ன்னு நினைக்காம வர்றதையெல்லாம் உதறிட்டு நின்னு, இப்ப அவசரத்துக்கு மொத்தமா வந்து நிக்குமா? நாலு வீட்டுலே வேலை செய்யிறேன். எப்படியும் ''ரெண்டு வீட்டுப் பணத்தை மாசா மாசம் தபாலாபீசிலே போட்டுக்கிட்டே வாரேன். அதிலே இருந்துதான் இப்பப் பணத்தை எடுக்கணும்'' என்று, மேலும் சொன்னுள் ரெங்கம்மாள்.

ராகவன் வியப்போடு அவளைப் பார்த்தான்.

ஒன்றும் தெரியாதவள் என்றிருக்க, இவனை ஒன்றும் தெரியாதவனுக்கி விட்டாளே!

''உனக்காவது முடியுது! எங்களாலே முடியலையே! இப்படித்தான் ஏதாவது ஒரு செலவு வந்துசேருது'' என்ருள் கமலம்.

''செலவு வரத்தாம்மா செய்யும். சீட்டுப்போடுற மாதிரி, மாசத்துக்கு இவ்வளவுன்னு, அதையும் ஒரு செலவா நினைச்சுத்தான் சேர்த்துவைக்கணும். சட்டுன்னு புறப்படுங்க; தாமதிக்கப்படாது. நான் இப்ப வந்திருவேன்'' என்று சொல்லிவிட்டு அவசரத்துடனே போய் விட்டாள் ரெங்கம்மாள்.

* * *

வீட்டு வாசலிலிருந்து டாக்சி புறப்பட்டது.

கமலம் திரும்பிப்பார்த்தாள். ரெங்கம்மாள் வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவளது கண்கள் கலங்கின.

''ரெங்கம்மா ஏன் என் மேலே இவ்வளவு பாசமா இருக்கா தெரியுமா?'' என்று கேட்டாள்.

ராகவன் திரும்பினுன்.

''அதுக்குத் தனியா வேறே காரணம் இருக்கா?'' என்ருன்.

''என் வயசிலே ரெங்கம்மாளுக்கு ஒரு மகள் இருந்தாளாம். கட்டிக் கொடுக்கிறதுக்கு முன்னுலேயே செத்துப்போயிட்டாளாம். நான் அந்தப் பொண்ணுட்டமே இருக்கேனும். அதான் ரெங்கம்மாளுக்கு என் மேலே இத்தனை பாசம்'' என்ற கமலம் குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

ராகவனது கண்களும் கலங்கின.

நின்று கொண்டே தூங்கும் யானைகள்

ஆப்பிரிக்கக் காடுகளிலுள்ள யானைகள் நின்று கொண்டே தூங்குவது வழக்கம். இந்திய யானைகள் அப்படியல்ல. பிற விலங்குகளைப் போல் படுத்தபடி உறங்கும்.

ஆப்பிரிக்க யானைகள் இந்திய யானைகளைவிடப் பெரியவை, உயரமானவை. அதோடுஅவற்றிற்கு இந்திய யானைகளை விடக் காதுகள் மிகப் பெரியவை. ஆனுல் ஆப்பிரிக்க யானைகளை விட இந்திய யானைகளைப்பிடித்துப் பழக்குவது எளிது.

யானை ஒரு நாளைக்கு சுமார் 200 லிட்டர் (100 படி) தண்ணீர் குடிக்கும்.

மறுபடியும் உன்னை வந்த மாஸ்கோ மங்கையா

''சார்! மாஸ்கோவிலிருந்து உங்களுக்கு 'டிரங்கால்' வந்திருக்கு! ஐயா, உங்களைக் கூப்பிடுகிருர்!'' என்று கூறிக்கொண்டே ஓடி வந்தார் கடை நிலை ஊழியர் செல்லையா.

'' எனக்கா! மாஸ்கோவிலிருந்தா ?'' என்று கேட்டுக் கொண்டே நாற்காலியை விட்டு எழுந்து ஓடினேன்.

மாஸ்கோவிலிருந்து எனக்கு 'டிரங்கால்' வந்திருக்கு என்று செல்லையா கூறியதைக் கேட்டவுடனே அலுவலகத்தில் இருந்த அத்தனை ஊழியர்களும் என்னவோ, ஏதோ, என்ற ஆச்சரியத்துடன் என்னைப் பின் தொடர்ந்து வந்தனர். அலுவலரின் கையில் இருந்த 'ரிசீவரை' வாங்கி '' இளங்கோ ஸ்பீக்கிங் '' என்றேன்.

'' குட்மார்னிங் மிஸ்டர் இளங்கோ! மிஸ் வாலண்டினு ஸ்பீக்கிங். ஐ ஹோப் யூ வில் ரிமெம்பர் மீ!'' என்ற குரல் கேட்டது.

வாலண்டினு என்பது யார் என்ற நினைவு எனக்கு உடனே வரவில்லையாதலின், சற்று யோசித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய மௌனத்தை அறிந்த அந்த மாது மீண்டும் "மிஸ் வாலண்டினு, புரொபசர் ஆப் எக்கனுமிக்ஸ், மாஸ்கோ யுனிவர்சிட்டி, ஸ்பீக்கிங்" என்று கூறினுர்.

'புரொபசர்' என்ற வார்த்தையைக் கேட்டவுடனேயே எனக்கு அவரைப் பற்றிய நினைவு வந்துவிட்டதால், "குட்மார்னிங் டாக்டர்! டூ யூ வாண்ட் எனி ஹெல்ப் ஃப்ரம் மீ, டாக்டர்?" என்று கேட்டேன்.

"எஸ்! தேங் யூ! வீ வாண்ட் டு டேஸ்ட் தி மோஸ்ட் டெலிஷியஸ் புரூட்ஸ் ஆப் யுவர் தமில் நாட், பர்ட்டிகுலர்லி மேங்கோஸ்! வீ பைவ் மெம்பர்ஸ் ஆர் கமிங் டு மெட்ராஸ் ஆன் டொண்டியத், மே 1971. வீ வில் பி வித் யூ பார் எபௌட் டென் டேஸ். வில் யூ பிளீஸ் மேக் நெசசரி அரேன்ஞ்மெண்ட் டு டேஸ்ட் ஆல் வெரைட்டீஸ் ஆப் புரூட்ஸ் அண்டு டு விசிட் சம் புரூட் கார்டன்ஸ்?" என்று கூறினுர்.

"எஸ் டாக்டர்!" என்று பதிலளித்தேன்.

"ஐ வில் ரைட் எ டிடெய்ல்டு லெட்டர் டுமாரோ, தேங் யூ வெரி மச்" என்று கூறிமுடித்துவிட்டார்.

ரிசீவரை வைத்துவிட்டுத் திரும்பினேன். எல்லாரும் என் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

"உன் முகத்தில் ஏனிப்படி வியர்த்துக் கொட்டுகிறது? யார் பேசியது?" என்று கேட்டார் அலுவலர்.

கைக்குட்டையை எடுத்துத் துடைத்துக் கொண்டே "மிஸ் வாலண்டினு.. இல்லை.... இல்லை! டாக்டர் வாலண்டினு பேசினுர்கள்" என்றேன்.

"மிஸ் என்கிருய்; டாக்டர் என்கிருய்; என்ன உளறுகிருய்? யாரந்த வாலண்டினு? உனக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம்? என்று கேட்டு விட்டுத் தனக்கே உரிய குறும்புத்தனத்துடன் என்னை நோக்கினுர் அலுவலர்.

என்னைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்த அலுவலகத் தோழர்களும், தோழியர்களும் அலுவலர் கேட்டதை ஆமோதிப்பது போல் என்னைக் குறும்புத்தனமாகவே நோக்கினர்.

"சார், டாக்டர் வாலண்டினு மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றுகிருர். அவர்களும், மற்றும் நான்கு பேரும் 20-ஆம் தேதி சென்னை வருகிருர்களாம். தமிழ்நாட்டின் எல்லா வகையான பழங்களையும்— அதுவும் குறிப்பாக மாம்பழங்களைச் சுவைத்துப் பார்க்கவும், பழத் தோட்டங்களைப் பார்வையிடவும் அவர்களுக்கு ஆசையாம். ஒரு பத்து நாள் தமிழ்நாட்டில் தங்கப் போகிருர்களாம். அதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லி இருக்கிருர்கள். நாளைக்கு விவரமாக லெட்டர் எழுதுவதாகச் சொல்லி விட்டு ரிசீவரை வைத்து விட்டார்கள். மாதக் கடைசியில்-கையில் காசில்லாத நேரத்தில் வருகிருர்களே என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். நீங்கள் எல்லோரும் என்னைக் கிண்டல் செய்கிறீர்களே!" என்றேன்.

"ப்பூ! இவ்வளவுதானு சமாச்சாரம்?" என்ருர் அலுவலர்.

"அது சரி, உன்னை அவர்களுக்கு எப்படித் தெரியும்?" என்று ரெங்கனுதன் கேட்டார்.

"நல்ல பாயிண்டான கேள்வியப்பா!" என்று கூறிவிட்டு அலுவலர் என்னைப் பார்த்தார்.

"மூன்று ஆண்டுகளுக்கு முன்பு! தேனும்பேட்டையில் நடைபெற்ற பொருட்காட்சிக்கு அந்த அம்மையார் வந்திருந்தார்கள். நம்ம துறையின் சார்பில் ஏற்பாடு செய்திருந்த அரங்கத்தைப் பார்வையிட்டு விட்டு என்னிடம் பல கேள்விகளைக் கேட்டார். அக்கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறி விளக்கினேன். கடைசியாக என்னிடம் அந்த அம்மையார் பழங்களைப் பற்றிக் கேட்டார். அதற்கும் பதிலளித்தேன். "தற்பொழுது மாம்பழம் கிடைக்காது என்ருர்களே, இந்த மாம்பழங்கள் எப்படிக் கிடைத்தன!" என்ருர். 'இது ஆப் சீசன் வெரைட்டி" (off-season) என்று கூறி விளக்கினேன். "ஒரு மாம்பழம் விலைக்குக் கொடுப்பீர்களா?" என்று கேட்டார். "மாம்பழங்கள் விற்பனைக்கு அல்ல; பார்வைக்காகவே!" என்றேன். அதன்பின் அந்த அம்மையார் எனக்கு நன்றி சொல்லிவிட்டு எனது முகவரியையும் பெற்றுக் கொண்டுபார்வையாளர் குறிப்புப் புத்தகத்தில் ஏதோ எழுதிவிட்டு, அடுத்த அரங்கத்திற்குச் சென்று விட்டார். சற்று நேரத்திற்குப் பின்பு அந்த அம்மையார் என்ன எழுதியிருக்கிருர் என்ற ஆர்வத்துடன் பார்வையாளர் குறிப்புப் புத்தகத்தைத் திறந்து பார்த்தேன். நம்ம அரங்கத்தைப் பற்றி மிகவும் பிரமாதமாகப் புகழ்ந்தும் நான் கொடுத்த விளக்கங்களைப் பாராட்டியும் எழுதி, கையெழுத்துப் போட்டிருந்தார். முகவரியைப் பார்த்தவுடன் தான் அந்த அம்மையார் ஒரு டாக்டர், பேராசிரியர் என்று தெரிந்து கொண்டேன். அந்த அம்மையார் ரஷியாவிலிருந்து வந்தவர் என்பதை அறிந்தவுடன், அவருக்கு ஒரு மாம்பழம் கொடுக்க முடியவில்லையே என்று நினைத்து வருந்தினேன். அந்த அம்மையார் தான் என் முகவரியைப் பத்திரமாக வைத்திருந்து, இன்று தொலைபேசியின் மூலம் என்னுடன் தொடர்பு கொண்டுள்ளார்" என்று விளக்கினேன்.

"இளங்கோ! பணம் இல்லை என்று கவலைப்படாதே! வெளிநாட்டுக்காரர்கள் உனக்குச் செலவு வைக்க மாட்டார்கள். நம்ம இயக்குநர் அவர்களிடம் சொல்லி 'ஆன் டியூட்டி" யிலேயே நீ அவர்களுடன் செல்ல அனுமதி வாங்கித் தருகின்றேன். ஆனுல் நீ அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் தயக்கமின்றிப் பதிலளிக்க வேண்டும். நீ சரியாகப் பதில் கூறவில்லையெனில், அவர்கள் உன்னைப் பற்றியும், நமது துறையைப் பற்றியும், நமது நாட்டைப்பற்றியும் குறைவாக 'நினைத்து விடுவார்கள். மாம்பழங்களின் பெருமை மாஸ்கோவில் பரவினுல் விரைவில் ரஷியாவுக்கு நம் நாட்டு மாம்பழங்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு ஏற்படும். அதனுல் நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணி கிடைக்கும். எனவே, நீ மேற்கொள்ள விருக்கும் பொறுப்பு மிக முக்கியமானது. அதை மனத்தில் வைத்து, முன் கூட்டியே தயாராகிக் கொள்!" என்ருர்.

"ஆகட்டும் சார்" என்றேன்.

மூன்றுநாள் கழித்து மாஸ்கோவிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அந்த அம்மையார் தன்னுடன் மனைஇயல் பேராசிரியர் டாக்டர் செவட்லானு, அயல் நாட்டு வர்த்தக இயக்குநர் டாக்டர் மேரி, பிரபல மருத்துவர் குமாரி எலினு, தோட்டக்கலை ஆராய்ச்சி மாணவி குமாரி புளு ஐ ஆகியோர் வருவதாகவும் என்னென்ன செய்யவேண்டும் என்பதையும் விளக்கி எழுதியிருந்ததுடன், இதுபற்றிச் சென்னையிலுள்ள ரஷிய தூதரகத்திற்குத் தபால் எழுதியுள்ளதாகவும், அவர்கள் இது பற்றித் தொடர்பு கொள்வார்கள் என்றும் எழுதியிருந்தார்.

அன்று மாலையே ரஷிய தூதரக அலுவலர் ஒருவர் என்னைச் சந்தித்து, டாக்டர் வாலண்டினு குழுவினருக்காக ஏற்பாடுகளைச் செய்தார்.

இருபதாம் தேதி காலை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நானும், ரஷிய தூதரக அலுவலர்களும் இரு கார்களுடன், டில்லியிலிருந்து வரும் விமானத்திற்காகக் காத்திருந்தோம். விமானம் வந்தது. டாக்டர் வாலண்டினு முன்னுல் வந்தார்கள். அவரைத் தொடர்ந்து நான்கு பெண்களும் வந்தார்கள். ரஷிய தூதரக அலுவலர் அவர்கள் ஐவருக்கும் மாலை அணிவித்தார். நான் ஐந்து பேர்களுக்கும் பூச்செண்டுகளைக் கொடுத்தேன்.

டாக்டர் வாலண்டினு, எங்களை ரஷ்யப் பெண்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அறிமுகம் முடிந்து, ரஷிய தூதரகத்திற்கு வந்து கொண்டிருந்தோம். வரும் வழியிலேயே புரோகிராம் பற்றிய பேச்சு எழுந்தது. டாக்டர் வாலண்டினு சில சந்தேகங்களைக் கேட்டார். நான் அவைகளுக்கு விளக்கமளித்தேன். புரோகிராம் படியே தொடரலாம் என்ருர். அதன்பின் அவர்களுக்கென்று ஏற்பாடு செய்திருந்த பிரபல ஓட்டலுக்குச் சென்று அவர்களைத் தங்கச்செய்தோம். "நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்; நான் அலுவலகத்திற்குச் செல்கிறேன்; நாளை காலை 8 மணிக்கு வந்து விடுகின்றேன்; சரியாக 9 மணிக்கு நாம் புறப்படுகிருேம்" என்றேன்.

மறுநாள் காலை எட்டு மணிக்குப் புறப்பட்டோம். ரஷிய தூதரக அலுவலர்கள் "விஸ் யூ ஹேப்பி ஜெர்னி" என்று வாழ்த்துக் கூறி அனுப்பி வைத்தனர். பின் வண்டியில் பெட்டி படுக்கைகளை வைத்துவிட்டு, முன் வண்டியில் 6 பேர்களுமே அமர்ந்து சென்ருேம்.

வேலூரில் ருமானி மாம்பழம்



சாப்பிட்டுவிட்டு, கோட்டையையும் பார்த்துவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம். சற்று நேரத்திற்குப் பின், "எவ்வளவு காலமாக இந்தியாவில் மா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது? வரலாற்றுச் சான்றுகள் உள்ளனவா?" என்று டாக்டர் மேரி கேட்டார்.

"முத்தமிழ் நாட்டின் முக்கனிகளில் ஒன்ருன மா, பழங்களின் மன்னனுகவும் விளங்குகின்றது. டி. கான்டோலி (Candolle) என்ற ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி 4,000 ஆண்டுகளாகவே இந்தியாவில் மா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கி.மு. 327-ஆம் ஆண்டில் பேரரசன் அலெக்சாந்தர் சிந்துவெளி பள்ளத்தாக்கில் மாந்தோப்புகளைக் கண்டதாக வரலாறு கூறுகிறது. கி.மு. 110-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது என்று கருதப்படும் 'பர்கட்' கல்தூணில் காணப்படும் விவரங்களும், மா சாகுபடி பற்றிக் குறிப்பிடுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களிலும், வடமொழி இலக்கியங்களிலும், 'ரிக்' வேதத்திலும் மாம்பழங்களின் சிறப்புப் பற்றிச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

'பாகியான்', 'யுவான்சுவாங்' என்ற சீன யாத்திரிகர்களும் மா பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இந்தியாவில் வெளியே உள்ள மக்களுக்கு மா பற்றித் தெரிவதற்கு 'யுவான்சுவாங்' தான் காரணம் என்ருல் மிகையல்ல.

மொகலாயப் பேரரசர்களின் காலத்திலேயே மா சாகுபடி மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. அவர்களே பெரிய பெரிய மாந்தோட்டங்களை ஏற்படுத்திச் சிறந்த ரகங்களை நடும் பழக்கத்தைத் தூண்டினர்.

பேரரசர் அக்பர் (கி.பி. 1556 முதல் 1605) 'தர்பாங்கா' அருகில் 1,00,000 மாங்கன்றுகளை நட்டார். அந்த மாந் தோட்டத்தை 300 ஆண்டுகளுக்குப் பிறகு பார்வையிட்ட 'சார்லஸ் மேரிஷ் (Charles Maries) என்பவர் அங்கிருந்த மரங்களில் சில, நன்கு காய்க்கும் நிலையில் இருந்தது கண்டு வியந்து குறிப்பிட்டுள்ளார்.

அக்பரின் காலத்தில் எழுதப்பட்ட 'அயின்-ஈ-அக்பரி' என்ற நூலில் (கி.பி. 1590) மாவின் வகைகள், குணங்கள் பற்றிய விளக்கங்கள் நிறையக் காணப்படுகின்றன. இதனுல் 16-ஆம் நூற்ருண்டிற்கு முன்பே, இந்திய மக்களுக்கு மா சாகுபடியும், வெவ்வேறு மா வகைகளின் குணங்களும் தெள்ளத் தெளியத் தெரிந்திருக்கின்றன என்பது தெளிவாகிறது" என்றேன்.

"மா வெளிநாடுகளுக்கு எப்பொழுது பரவியது? எந்த நாட்டில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது?" என்று கேட்டார் டாக்டர் செவட்லானு.

16-6—8எ

''பதினாறும் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர்களால், தூரக் கிழக்கு நாடுகளுக்குக் கடல் வழி கண்டு பிடிக்கப்பட்டபின்பே, மேற்கத்திய நாடுகளுக்கு மா பரவியுள்ளது. முதலில் போர்ச்சு கீசியர்கள் கோவாவிலிருந்து தென் ஆப்பிரிக்காவிற்கு மாம் பழங்களை ஏற்றுமதி செய்து வந்துள்ளனர். அதன்பின் அங்கி ருந்து கி.பி. 1700-ஆம் ஆண்டு வாக்கில் பிரேசில் நாட்டிற்கும், பிறகு 40 ஆண்டுகள் கழித்து பார்படாஷ் நாட்டிற்கும் மாம் பழங்கள் போர்ச்சுகீசியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

''ஸ்பானிஸ் கடற்பயணிகள் மாம்பழங்களை இந்தியாவிலிருந்து மணிலாவிற்குக் கொண்டு வந்த னர். அவர்களே பிலிப்பைன்சு நாட்டிலிருந்து மாவை பதினே ழாம் நூற்றாண்டில் மெக்சிகோ விற்குக் கொண்டு சென்றனர். மெக்சிகோவிலிருந்து 1809-ல் ஹவாய் தீவுக்கும், 1861-ல் புளோரிடாவுக்கும், 1880-ல் கலிபோர்னியாவுக்கும் மா பரவி யது.

''தற்பொழுது இந்தியா, பர்மா, இந்தோனேசியா, ஜாவா, தாய் லாந்து, மலேசியா, சிலோன், பிலிப்பைன்சு முதலிய தென் கிழக்கு ஆசிய நாடுகளிலும், எகிப்து, இஸ்ரேல், தென் ஆப் ரிக்கா, மெக்சிகோ, புளோரிடா, கலிபோர்னியா, குயின்ஸ்லாந்து ஆகிய மேற்கத்திய நாடுகளிலும் மா சாகுபடி செய்யப்பட்டு வரு கிறது.

''ஆனால், இந்தியாவில்தான் பெரும்பரப்பிலும், வணிக முறை யிலும் மா சாகுபடி செய்யப் பட்டு வருகின்றது.''

''மாவில் எத்தனை வகைகள் உள்ளன? தமிழ்நாட்டில் என் னென்ன வகைகள் முக்கியமாகச் சாகுபடி செய்யப்படுகின்றன?'' என்று கேட்டார் தோட்டக் கலை ஆராய்ச்சி மாணவியான குமாரி நீலக்கண்ணி ('மிஸ் புளூ ஐ' அவர்களைத்தான் நான் குமாரி நீலக்கண்ணி என்று கூப் பிட்டு வந்தேன்).

''தென் இந்தியாவில் 350-க் கும் மேலான மா வகைகள் சாகு படி செய்யப்படுவதாக ஆராய்ச் சியாளர்கள் கூறுகிறார்கள்; ஆனால் எங்கள் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பெங்களூரா, பங்கன பள்ளி, நீலம், அல்பான் சோ, ருமானி, என்ற 5 ரகங் களுமே வணிக முறையில் சாகு படி செய்வதற்குச் சிறந்தவை என்று வேளாண்மைத்துறை பரிந்துரைக்கிறது. ஆனால், சுவை கருதி, பீட்டர், மல்கோவா, ஹிமாயுதின், பாதிரி, பஞ்சவர் ணம் என்ற ஐந்து சிறப்பு வகை களையும் (choice varieties) சாகுபடி செய்யப் பரிந்துரைக்கப் படுகிறது. அத்துடன் கே.ஓ. 7/5, கே.ஓ. 9/3, கே. ஓ. 11/13 என்ற மூன்று பண்பகக் கலப்பு வகைகளும் (Hybrids) தமிழ் நாட்டிற்கு ஏற்றதாகப் பரிந்துரை செய்யப்படுகிறது'' என்று கூறி னேன்.

''தமிழ்நாட்டிற்கு ஏற்றதா கப் பரிந்துரைக்கப்படும் 13 ரகங்களையும் எங்குப் பார்க்க லாம்?'' என்று மீண்டும் கேட் டார் குமாரி நீலக்கண்ணி.

''பரிந்துரைக்கப்படும் 13 ரகங்களில் 10 ரகங்களை இன் னும் சில நிமிடங்களில் பார்க்க லாம்; நீலம், பாதிரி, பஞ்சவர் ணம் என்ற 3 ரகங்களையும் வேறு இடத்தில் காண்பிக்கின்றேன்'', என்று கூறி முடிப்பதற்கும், சேலத்திலிருந்து 20 மைல் தூரத்தில் உள்ள என்னுடைய நண்பனுக்குச் சொந்தமான மாந்தோட்டத்தை அடைவதற் கும் சரியாக இருந்தது.

எங்கள் வருகைக்காக எதிர் பார்த்து என் நண்பன் மாந் தோட்டத்து வாசலிலேயே காத்திருந்தான். ரஷியப் பெண் களைப் பார்ப்பதற்காக அங்கு ஒரு பெரிய கூட்டமே கூடியிருந் தது. காரை நிறுத்தச் சொல்லி, எல்லாரும் இறங்கினோம். என் நண்பனை ரஷியப் பெண்களுக்கு அறிமுகப்படுத்திவைத்தேன். என் நண்பன் எங்களை மகிழ்ச்சியுடன் மாந்தோப்பிற்கு அழைத்துச் சென்றான். ஒரு பெரிய மரத்தின் அடியில் ஒரு பெரிய மேசையைப் போட்டு அதைச் சுற்றியும் பத்து நாற்காலிகளைப் பரப்பி வைத்திருந்தான். அந்தத் தோட் டத்தில் உள்ள 10 வகை மாம் பழங்களையும்தனித்தனித் தட்டில் நிரப்பி வைத்திருந்தான். அத் துடன் நான் முன்பே எழுதி யிருந்தபடி என் நண்பன் ஒவ் வொரு வகை மாம்பழத்தையும் தனித்தனியே துண்டு செய்து, தனித்தனித் தட்டுகளில் வைத் திருந்தான்.

''பத்துவகை மாம்பழங்கள் உள்ளன, சாப்பிடுங்கள்'' என்று என் நண்பன் கூறினான். நான் ஒவ்வொரு வகையினுடைய பெய ரையும், அதன் குணங்களையும் கூறினேன்.

அந்த மாம்பழங்களைக் கண்ட ரஷியப் பெண்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். மாம் பழங்களை ஒவ்வொன்றாகப் புரட் டிப் பார்த்தனர். மூக்கின் அரு கில் கொண்டு சென்று முகர்ந்து பார்த்தனர். அதன்பின் ஒவ் வொரு வகை மாம்பழத்தையும் தனித் தனியே சுவைத்து மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

''விச் வெரைட்டி ஈஸ் டு பி தி பெஸ்ட்?'' என்று கேட்டேன்.

''ஆல் ஆர் ஈக்வல் டு பி பெஸ்ட்!'' என்று அனைவரும் ஒருமுகமாகக் கூறினர்.

ஏறத்தாழ ஆளுக்கு 4 பழம் அளவுக்கு சாப்பிட்டிருந்தும் அவர்களால் எந்த வகைப்பழம் சிறந்தது என்று முடிவு செய்ய முடியவில்லை.

''வீ மஸ்ட் ஈட் சம்மோர் புருட்ஸ்! தென் ஒன்லி, வீ கேன் டிசைட் தி பெஸ்ட்'' என்றார் டாக்டர் செவட்லானா.

அப்பொழுது ஒரு சிறுவன் மாம்பழத்தைக் கடித்துத் தின்று கொண்டிருந்ததைப் பார்த்த குமாரி மஞ்சளழகி (மிஸ் எலினா) அந்தக் காட்சியைக் குமாரி நீலக் கண்ணிக்குக் காட்டினார். உடனே குமாரி நீலக்கண்ணி ஒரு மாம்பழத்தை எடுத்துக் கடித்துத் தின்ன ஆரம்பித்தார். அதைக்கண்ட மற்ற நால்வரும் அதுபோலவே மாம்பழத்தைக் கடித்துத் தின்ன ஆரம்பித்தனர். மாம்பழச்சாறு அவர்களுடைய வாயிலிருந்தும், கையிலிருந்தும் ஒழுகியது. கையில் வடியும் சாற்றை நக்கிச் சுவைப்பதில் இனிமை கண்டு கொண்டிருந் தனர்.

''பிளீஸ் டோண்ட் டேக் டு மச் ஆப் மேங்கோஸ் அட் எ டைம்! இட் வில் ஸ்பாயில் யுவர் ஹெல்த்!'' என்றேன்.

''டோண்ட் ஒர்ரி மிஸ்டர் இளங்கோ! வீ ஆர் ஹேவிங் எ டாக்டர்'' என்று டாக்டர் வாலண்டினா கூறினார்.

''மன்னிக்கவும்! இந்த மாந் தோப்பு ஒரு சிறந்த மாதிரித் தோட்டமாகும். இத் தோட் டத்திற்குப் பல தடவை முதல் பரிசு கிடைத்துள்ளது. மாம்பழ விளைச்சல் போட்டியில் கலந்து கொண்டு அதிக மகசூல் விளைவித்ததற்காக என் நண்பன் முதல் பரிசும் பெற்றுள்ளான். எனவே, இந்தத் தோட்டத்தைப் பார்வையிடுங்கள்'' என்றேன்.



மாந்தோப்பின் உள்ளே புகுந்து ஒவ்வொரு வகையை யும் குறிப்பிட்டு விளக்கினேன். அவ்வாறு கூறிக்கொண்டு வரு கையில் குமாரி மஞ்சளழகி ''எங்கள் நாட்டில் மா கிடை யாதே! மா சாகுபடி செய் வதற்கு ஏற்ற கால நிலை என்ன?'' என்று கேட்டார்.

"குளிர் நாடுகளில் மா வளராது. மா ஒரு வெப்ப மண்டலப் பயிர். கோடை காலத்தில் 105 முதல் 120 டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலை இருக்கும் வெப்ப நாடுகளில் மட்டுமே மா நன்கு பயிராகும். மா மரங்கள் பூக்கும் காலத்திலும், காய் பெருத்துப் பழுக்கும் காலத்திலும் மழை பெய்யக் கூடாது.' மா நன்கு வளர்ந்து பலன்தர ஜூன் அக்டோபர், மாதங்களில் மழை இருக்க வேண்டும்.

" மாம்பழத்தில் உள்ள விதைகளை நட்டுத்தான் மாமரம் வளர்க்கின்றீர்களா ?" என்று கேட்டார் டாக்டர் செவட்லாளு.

" சிலர் மாங்கொட்டைகளை நட்டுத்தான் மாமரம் வளர்க்கின்றனர். ஆனல் அம்மாதிரிச் செய்யக் கூடாது என்று வேளாண்மைத்துறை அறிவுரை கூறி வருகிறது. ஏனெனில், மாங்கொட்டைகளை நட்டு, கன்றுகளை வளர்த்து, உற்பத்தி செய்யும் மாமரங்கள் காய்க்க நீண்ட காலம் ஆகும் ; காய்ப்பும் குறைவாகவே இருக்கும் ; அத்துடன் ஆண்டுதோறும் ஒரே மாதிரியாகச் காய்க்காது; கிடைக்கும் பழங்களும் தரமானவைகளாக இருக்காது" என்றேன்.

" பின் எப்படி மாவில் இனப்பெருக்கம் (Propagation) செய்கின்றீர்கள் ?" எனக் குமாரி நீலக்கண்ணி கேட்டார்.

" விரைவாகப் பலன் பெறவும், நிறைய மகசூல் பெறவும் ஒட்டுச் செடிகளையே நடுமாறு வேளாண்மைத்துறை பரிந்துரை செய்கிறது. ஒட்டுச் செடிகளைத். தயாரிக்கப் பல முளைக்கருவுள்ள (Polyem bryony) மாவகைகளின் நாற்றுகள் வேர்ச்செடிகளாகப் (Root stocks) பயன்படுத்தப்படுகின்றன. ஓலூர், பாபக்காய், சந்திகாரன் போன்ற மாவகைகளில் முளைக் கருக்கள் உள்ளன. இவ்வகை விதைகளை நட்டால், பலமுளைகள் தோன்றி வளருகின்றன. ஆனல் அம்முளைகளில் ஒன்றே ஒன்றுதான் பால் சேர்க்கையினல் (Sexual reproduction) தோன்றுகிறது. கருவை ஒட்டிய மற்றம் பாகங்களிலிருந்து மற்ற முளைகள் தோன்றுவதால், அவைகள் தாய்ச் செடியைப் போலவேஎல்லாக் குணநலன்களையும் கொண்டிருக்கும். அம்முளைகள் பால்சேர்க்கையினல் உண்டாகும் முளையைவிட வீரியமாக வளரும். வீரியமற்ற-வளர்ச்சி குன்றிய கன்றுகளை அகற்றிவிட்டால், பால் சேர்க்கையினல் தோன்றும் கன்றுகள் அகற்றப்பட்டுவிடும். மீதியுள்ள கன்றுகள் ஒரே மாதிரியான குணநலன்களையும், வீரிய வளர்ச்சியையும் கொண்டிருப்பதால், அவைகளை வேர்ச்செடிகளாகக் கொண்டு அமைக்கப்படும் ஒட்டுச் செடிகள் விரைவாகவும், ஒரே மாதிரியான தரமுடைய மரங்களாகவும் வளர்ந்து நிறைய மகசூல் கொடுக்கும். இந்த வேர்ச் செடிகளின் மீது நிறைய மகசூல் தருவதுடன், சிறந்த குணநலன் கொண்ட, தாய் மரங்களைத் தேர்ந்தெடுத்துக் ஒட்டுக் கட்டப்படுகிறது. ஒட்டுக் கட்டுவதற்குப் பக்க ஒட்டு முறையும் (Side grafting), நெருக்கஇணை ஒட்டு முறையும் (Inarching) பயன்படுத்தப்படுகிறது. இம்மாதிரித் தயாரிக்கப்பட்ட 1 அல்லது $1\frac{1}{2}$ ஆண்டு வயதுடைய ஒட்டுச் செடிகளையே நடுமாறு வேளாண்மைத் துறை பரிந்துரைக்கிறது. உழவர்கள் தங்களுக்குத் தேவையான ஒட்டு மாஞ்செடிகளை, வேளாண்மைத் துறையிலிருந்து அல்லது வேளாண்மைத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட நர்சரிகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்" என்று தெளிவு படுத்தினேன்.

" ஒட்டுமாஞ்செடிகளை எப்படி நட்டுப் பராமரிப்பது ?" என்றார் டாக்டர் வாலண்டினு.

" மாந்தோட்டம் அமைக்கவிருக்கும் நிலத்தில் 35 அடி × 35 அடி அல்லது 40 அடி × 40 அடி இடைவெளி விட்டு 3 அடி × 3 அடி × 3 அடி அளவுள்ள குழிகளைத் தோண்ட வேண்டும். பின்பு அக்குழிகள் ஒரு மாத காலத்திற்கு ஆறப் போடப்படுகின்றன. அக்குழிகளில் தீய நுண் கிருமிகள் இருப்பின், அவை ஒட்டு மாஞ்செடிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும். இத்தீய நுண்கிருமிகளை அழிக்க, அக்குழிகளில் காய்ந்த இலை, சருகுகளைப் போட்டுத் தீயிடுதல் நல்லது.

"மே மாதத்தில் அக்குழிகளில் மக்கிய தொழு உரம் 75 கிலோ கிலோ, சாம்பல் 4 கிலோ, எலும்புத்தூள் 3 கிலோ, மணல், செம்மண் ஆகியவைகளைக் கலந்து நிரப்ப வேண்டும். பின்பு ஓரிரு முறை நன்ருகத் தண்ணீர் கட்ட வேண்டும்.

"ஒட்டு மாஞ்செடிகளை ஜூலை—செம்டம்பர் மாதங்களில் நடுவது நல்லது. நடும்பொழுது, ஒட்டுப் போட்ட பாகம் தரை மட்டத்திலிருந்து 15 செ.மீ. உயரத்தில் இருக்குமாறு நடுவது அவசியமாகும். செடிகளை நட்ட பிறகு தண்ணீர் பாய்ச்சவும். ஒவ்வொரு செடிக்கும் ஆதரவாக ஒரு குச்சியை நட்டு, செடியைக் குச்சியுடன் சேர்த்துக் கட்டவேண்டும். ஒட்டுக் கட்டிய பாகத்தில் செடியில் காயம் ஏற்படாமல் கத்தியால் நேராகக் கீறிவிடவும். இவ்வாறு செய்யாவிட்டால், ஒட்டு கட்டிய பாகம் இறுக்கமடைந்து கோடு கோடாகப் பள்ளம் ஏ பட்டுவிடும். அதனல் ஒட்டுச் செடியின் வளர்ச்சி தடைப்படும் அல்லது ஒட்டுக் கட்டிய இடத்தில் முறிவு ஏற்படும். இளஞ் செடிகளுக்கு நிழல் அளிப்பது அவசியம். வேர் செடிகளிலிருந்து வளரும் கிளைகளை அவ்வப்போது அகற்றிவிடவேண்டும்."

" மாங்கன்றுகளுக்கு இரசாயன உரமிடவேண்டாமா ?" என்று கேட்டார் மிஸ் புளு ஐ.

" உரமிடவேண்டியது மிகவும் அவசியமாகும். ஒரு ஆண்டு வயதுள்ள செடிக்கு மக்கிய தொழு எரு-10 கிலோ. அமோனியம் சல்பேட்—0.5 கிலோ. எலும்புத் தூள்—1.0 கிலோ. சூப்பர்பாஸ்பேட்—0.5 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாசு 0·5 கிலோ வீதம் இடவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக 5 கிலோ தொழு உரம், 0·5 கிலோ அமோனியம் சல்பேட், 0·5 கிலோ எலும்புத்தூள், 0·25 கிலோ சூப்பர்பாஸ்பேட், 0·25 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாசு அளித்து வரவேண் வேண்டும்.

நன்ருக வளர்ந்த பெரிய மரம் ஒவ்வொன்றுக்கும் ஆண்டு தோறும்,

		கிலோ.
மக்கிய தொழு எரு	..	50
அமோனியம் சல்பேட்	..	5
எலும்புத்தூள்	..	5
சூப்பர்பாஸ்பேட்	..	2·5
மியூரியேட் ஆப் பொட்டாசு.	..	2·5

வீதம் இடவேண்டும்.

அம்மோனியம் சல்பேட் முழுவதையும் மியூரியேட் ஆப் பொட்டாசில் பாதியளவையும் ஜூன் மாதத்தில் வைத்துவிட வேண்டும். மீதி உரங்களை அக்டோபர் மாதத்தில் வைத்து விட வேண்டும். அப்பொழுது, என் நண்பன் "சில மரங்கள் ஆண்டுதோறும் தொடர்ந்துப் பலனளிக்காமல் மாறி மாறிப் பலன் தருகின்றனவே அதை எப்படிப் போக்குவது?" என்று கேட்டான்.

அவ்வகை மரம் ஒவ்வொன்றுக்கும் ஆண்டுதோறும் 90 கிலோ மக்கிய தொழு எரு, 1·90 கிலோ ஆமணக்குப் பிண்ணக்கு 4·50 கிலோ எலும்புத்தூள், 2·25 கிலோ அமோனியம் சல்பேட், 13·50 கிலோ சால்பல் தூள் இட்டால் ஆண்டுதோறும் தொடர்ந்து பலனளிக்கச் செய்யலாம். அது போல் செய்து பார்க்கவும்" என்றேன்.

"இந்த மாமரங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யப்பட்ட அறிகுறியே தென்படவில்லை. நீர்ப்பாசனம் தேவையில்லையா?" என்றார் டாக்டர் செவட்லாளு.

பொதுவாக மாஞ்செடிகளுக்கு நட்ட ஆரம்ப காலத்தில் மட்டுமே நீர்ப்பாசனம் தேவைப்படுகிறது. முதல் இரு ஆண்டுக்காலம் வரை வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சப்பட வேண்டும். அவ்வாறு தண்ணீர் பாய்ச்சும் பொழுது, செடியின் அடித்தண்டிலும், ஒட்டுக் கட்டிய பாகத்திலும் தண்ணீர் படாமல் செய்ய வேண்டும். அதன்பிறகு, பெரி வாக நீர் பாய்ச்சுவது இல் தண்ணீர் பாய்ச்சுவதற்கு வச யுள்ள இடங்களில் மரங்க பூக்கும் பொழுதும், காய்க வளர்ச்சி அடையும்பொழுது தண்ணீர் பாய்ச்சலாம். இ வாறு செய்தால், மாமர களின் காய்ப்பு அதிகமாவதுட பழங்களும் பெரியதாக ஆகி றன" என்றேன்.

"மாந்தோப்பிற்குச் செய் வேண்டிய பின்செய் நேர்த் முறைகள் யாவை?" என் கேட்டார் டாக்டர் மேரி.

மே-ஜூன் மாதங்களிலும் செப்டம்பர்-அக்டோபர் மாத களிலும் மழைக்குப் பின் ம மரங்களின் இடைவெளி உழுதுவிட வேண்டும் அல்ல கொத்திவிட வேண்டும். ம மரங்கள் காய்க்கத் தொடங்கு வரை அவைகளின் இடைவெ களில் நிலக்கடலை, தட்டை பயறு, கத்தரி, வெண்டை அவரை, சனப்பை முதலியவை களை ஊடு பயிராகச் சாகுப செய்யலாம். மாமரங்க காய்ப்புக்கு வந்தபின் ஊடு பயிர் சாகுபடியை நிறுத்திவிட வேண்டும். கம்பு, சோளப் போன்ற தானிய வகைகளை இளந்தோப்புகளில் பயிர்செய் தால், அவைகள் நிலத்தில் உள்ள சத்துக்களை இழந்து விடுமாதலின், அவைகளைப் பயிரிடக் கூடாது.

"மாங்கன்றுகள் நட்ட எத்தனை ஆண்டில் காய்க்கத் தொடங்கும்? எத்தனை ஆண்டில் நிறையக் காய்க்கும்?" என்று கேட்டார் மிஸ் புளு ஐ.

"ஒட்டு மாஞ் செடிகள் 2 அல்லது 3 ஆண்டுகளிலேயே பூத்துக் காய்க்கக்கூடும். ஆனல் நட்டு 5 ஆண்டுகள் ஆகும் வரை, இளம் மரங்களைக் காய் பிடிப்பதற்கு விடக்கூடாது. 5 ஆண்டிற்குள் காய்க்க விட்டால் மரங்களின் வளர்ச்சி குன்றி, பிற்காலத்தில் நிறைய மகசூல் கொடுக்காது. எனவே, 5 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றும் பூங்கொத்துகளை அகற்றிவிட வேண்டும். நட்ட 5 ஆண்டுகளுக்குப் பின்புதான், மாமரங்களைக் காய்ப்புக்கு விடவேண்டும். மாமரங்கள் நட்ட 12-வது ஆண்டிலிருந்து நல்ல மகசூல் கொடுக்கும்" என்று கூறினேன்.

அறைக்குள்ளே டெலிவிஷன் செட்டை வைத்துப் பார்ப்பதால் கண் பார்வை கெடாமல் இருக்க வேண்டுமென்ருல் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி இங்கிலாந்து மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் யோசனை கூறியுள்ளனர்.

டெலிவிஷன் பெட்டியிலிருந்து குறைந்தது 8 அடி (2.5 மீட்டர்) தூரத்தில் உட்கார்ந்துதான் காட்சிகளைக் காண வேண்டும்.

இருட்டறையில் இருந்து பார்க்காமல், வெளிச்சமான அறையில் இருந்து பார்க்க வேண்டும்!

சிறிய மேஜை விளக்கு ஒன்றை டெலிவிஷன் செட் மீது வைக்கலாம் ;

டெலிவிஷன் செட்டில் ஏதேனும் சரி (அட்ஜஸ்ட்) செய்ய வேண்டும் என்ருல் ஒரு கண்ணை மூடிக்கொண்டு செய்ய வேண்டும். அதுவும் இமைகளை அழுத்தி மூடாமல், கையைக் கொண்டு கண்ணை மூடிக்கொள்ள வேண்டும்.

48 ஆண்டுகள் வாழும் 'வால்வு'

1923-ஆம் ஆண்டில், அதாவது 48 ஆண்டுகளுக்கு முன்பு, தயாரிக்கபட்ட ஒரு ரேடியோ வால்வ், சிறிதுகூடச் சக்தி குன்ருமல் இப்போதுதான் தயாரான ' வால்வ் ' போல் உறுதியுடன் இருக்கிறது.

" முல்லார்டு கம்பெனி " என்ற இங்கிலாந்து நாட்டு நிறுவனம் தயாரித்தது இந்த ரேடியோ வால்வ். 1923-ல் மாதிரிக்காக இந்த வால்வை இந்த நிறுவனம் தயாரித்து, பார்வைக்காக வைத்தது. 48 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அதனைச் சோதித்துப் பார்த்ததில், இன்றைக்குத் தயாரான வால்வ் போலவே நன்கு இயங்குகிறது.

ரேடியோவில் இதனைப் பயன்படுத்தவில்லை என்ருலும், செய்தது செய்தபடியே 48 ஆண்டுகளுக்குப் பிறகும் இருப்பது விந்தையல்லவா !

''ஒவ்வொரு மரமும் எத்தனை காய்கள் கொடுக்கும்? ஒரு ஏக்கரில் எவ்வளவு பழம் கிடைக்கும்? ஒரு ஏக்கர் மா பயிரிடச் செலவு என்ன? வரவு என்ன?'' என்று கேட்டார் பொருளாதாரப் பேராசிரியரான டாக்டர் வாலண்டினா.

''ஒவ்வொரு மரமும் பத்தாவது ஆண்டுவரை, ஆண்டுதோறும் 500 முதல் 600 பழங்களைக் கொடுக்கும். ஒரு ஏக்கர் மா 5,000 முதல் 10,000 கிலோ வரை பழங்களைக் கொடுக்கக் கூடும்.

வேளாண்மைத்துறை பரிந்துரைக்கும் முறைப்படி ஒரு ஏக்கரில் மா சாகுபடி செய்ய முதல் 5 ஆண்டுகளுக்கு ரூபாய் 5,120, அதன்பின் 5 ஆண்டுகளுக்கு ரூ. 2,000-ம் ஆக மொத்தம் ரூ. 7,120 செலவு ஆகும்.

முதல் 5 ஆண்டுவரை ஊடு பயிர் சாகுபடி செய்வதன் மூலம் ரூ. 2,500-ம், அதன்பின் 5 ஆண்டுகளில் கிடைக்கும் பழங்களை விற்பதன்மூலம் ரூ. 5,600ம் ஆக மொத்தம் ரூ. 8,100 வருமானம் கிடைக்கக்கூடும். செலவு ரூ. 7,120 போக, லாபம் ரூ. 980 கிடைக்கலாம்.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 2,500 வருமானம் கிடைக்கும். ஆனால் செலவு ரூ. 500 மட்டுமே ஆகக் கூடும். எனவே பத்தாண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொரு ஏக்கர் மாந்தோப்பும் ரூபாய் 2,000 லாபம் கொடுக்கும்.

எல்லா வேலைகளுக்கும் செலவு செய்வதாகவே கணக்கிட்டுச் சொல்லியுள்ளேன். ஆனால் உழவர்கள் பலர் 10 ஆண்டுகளுக்கு ரூபாய் 3,000 மட்டுமே செலவு செய்து, ரூபாய் 3,000 நிகர லாபம் பெற்றுள்ளனர்.

பத்தாண்டுகளுக்குப் பின் ஒவ்வொரு மரத்திலிருந்தும் அதிகமான பழங்கள் கிடைக்கும். சில மரங்கள் ஆண்டிற்கு 3,000 பழங்கள் கொடுத்துள்ளதற்கும் சான்றுகள் உள்ளன என்றேன்.

உடனே அந்த அம்மையார் என் நண்பனைப் பார்த்து, ''எத்தனை ஏக்கரில் மா சாகுபடி செய்கிறீர்கள்? என்ன செலவு? லாபம் என்ன?'' என்றார்.

''20 ஏக்கரில் மா சாகுபடி செய்கிறேன். அவைகளுக்குத் தற்பொழுது ஆண்டிற்கு ரூபாய் 8,000 செலவு செய்கின்றேன். ஆண்டுதோறும் 50,000 ரூபாய்க்குக் குறையாமல் நிகர லாபம் கிடைக்கிறது'' என்று நண்பன் சொன்னான்.

அதன்பின் அவர்கள் வேறு விளக்கம் கேட்காததால் ''புறப்படுவோமா?'' என்றேன். அவர்களும் ''சரி'' என்றனர்.

என் நண்பன் ஒரு கூடை நிறைய மாம்பழங்களைக் கொண்டு வந்து காரில் வைத்தான். அதைக் கண்ட டாக்டர் வாலண்டினா, ஒரு நூறு ரூபாய் நோட்டை என் நண்பனிடம் கொடுக்க வந்தார். என் நண்பன் மறுத்துவிட்டு ''யூ ஆர் மை கெஸ்ட்'' என்று கூறிவிட்டான். அதைக் கேட்ட உடனே மிஸ் வாலண்டினாவும், மற்றவர்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்து அவனது கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு விடை பெற்றுக் கொண்டனர்.

''சேலத்தில் மதிய உணவு சாப்பிடுகின்றீர்களா?'' என்றேன். அவர்கள் ''வேண்டாம்'' என்று கூறிவிடவே சேலம் கடைவீதியைச் சுற்றிக் காண்பித்துவிட்டு அங்கு ஜஹாங்கீர் என்ற மாம்பழத்தில் ஒரு டசனையும், ஒரு டசன் ஸ்பூன்களையும் வாங்கிக்கொண்டு புறப்பட்டோம். எங்கள் கார் கோயம்புத்தூரை நோக்கி விரைந்தது. வழியில் ஸ்பூனைக் கொண்டு மாம்பழம் சாப்பிடும் முறையைக் கற்றுக் கொடுத்தேன். ஐஸ்கிரீம் சாப்பிடுவதுபோல மாம்பழத்தைச் சாப்பிட்டு மகிழ்ந்தனர்.

ஊத்துக்குளி மாதுளை மிகவும் புகழ்பெற்றது என்று கூறி 2 டசன் மாதுளைகளை வாங்கி அவர்களுக்குக் கொடுத்தேன். கோவையில் இரவு உணவை முடித்துக் கொண்டு உடனே ஊட்டிக்குப் புறப்பட்டு விட்டோம். ஏனெனில் மறு நாள் ஊட்டியில் பூக்காட்சி இருந்தது. மறுநாள் ஊட்டியில் நடைபெற்ற பூக்காட்சிகளுக்கு சென்றோம். எனக்கு 'ஊட்டியின் குளிர் தாக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு ஊட்டியின் குளிர் மிகவும் ஏற்றதாக இருந்ததால் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர். அவர்கள் பார்க்க வேண்டிய இடங்களையெல்லாம் காலையிலேயே காண்பித்துவிட்டு, பூக்காட்சிக்குச் சென்றோம். " பூக்காட்சியைத் தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் திறந்து வைத்து உரையாற்றினார். எண்ணற்ற வண்ண நறுமலர்களைக்கண்ட மகிழ்ச்சியில் அவர்கள் ஓடியும் ஆடியும் விளையாட ஆரம்பித்து விட்டனர். ''உங்கள் விருப்பப்படி சுற்றிவிட்டு வாருங்கள்'' என்று கூறிவிட்டு நான் காரிலேயே தங்கிவிட்டேன்.

அன்று ஊட்டியிலேயே தங்கிவிட்டு மறுநாள், காலை புறப்பட்டு கூனூர், கல்லார், பர்லியார் பழ ஆராய்ச்சி நிலையங்களைப் பார்த்துவிட்டு, கோவை வேளாண்மைக் கல்லூரி சென்றோம். அங்குப் பல இடங்களைப் பார்த்துவிட்டு அடுத்த நாள் கொடைக்கானல் புறப்பட்டோம், கொடைக்கானலில் ஒருநாள் தங்கிவிட்டு மறுநாள் திண்டுக்கல்லில் திராட்சை சாப்பிட்டுவிட்டு மதுரை, குற்றாலம் ஆகிய இடங்களுக்குச் சென்றோம்.

திட்டமிட்டபடி பத்தாவது நாள் சென்னை வந்து சேர்ந்தோம். எனக்கு ஒரு பெரிய பொறுப்பு முடிந்தது என்று நிம்மதி ஏற்பட்டது.

மீதியிருந்த பணம் 625 ரூபாயும் கொடுத்து ''நான் விடைபெற்றுக்கொள்ளட்டுமா?'' என்றேன்.

என்னை விட்டுப் பிரிய அவர்களுக்கு மனமே இல்லை. எல்லார் கண்களும் கலங்கின. மிஸ் புளு ஐ கண்களில் நீர்த்துளிகள் மல்கின. ''மிஸ்டர் இளங்கோ! உங்களுக்கு மிகவும் நன்றி. உங்களை வெகு விரைவில் ரஷியாவுக்கு அழைக்கின்றோம். நீங்கள் அவசியம் வரவேண்டும். எங்களுக்கு மாம்பழம், மாம்பழச் சாறு, ஊறுகாய் போன்றவைகளை உடனே அனுப்பிவைக்கவும். அதன்பின் இங்கிருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்ய ஆவன செய்கிறோம்'' என்றனர்.

''கண்டிப்பாகச் செய்கிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

மாஸ்கோவிலிருந்து மாம்பழம் சாப்பிட வந்த மங்கையர்கள் பிரிய மனமின்றி விடை கொடுத்து அனுப்பினர்.

கேளுங்கள் கொடுக்கப்படும்!

வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்படவேண்டும்

அம்பாசமுத்திரம்-14 என்ற நெல் பயிரிடும் முறையை விளக்கிக் கூற முடியுமா ?

—ஆறுமுகராயர், திருநெல்வேலி.

அம்பாசமுத்திரம் 14 என்ற நெல்லுக்கு 'பெண்ணை' என்ற பெயரும் உண்டு. 'பெண்ணை' நெல்லின் சாகுபடிக் குறிப்புகள் ஏப்ரல் . 16-ஆம் தேதிய 'தமிழரசு' இதழில் 'நெல்லைக்கு ஏற்ற கண்ணல்லவா, பெண்ணை நெல் அல்லவா?' என்ற தலைப்பில் 12, 13, 14-ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளன. தயவு செய்து அந்த இதழைப் படியுங்கள்.

நிலவள வங்கியில் கடன் பெறுவதற்கு யாரை அணுகவேண்டும் ?

—ராவுத்தர்,
லெப்பைக்குடிக்காடு.

உங்கள் வட்டாரக் கூட்டுறவு வளர்ச்சி அலுவலரை அணுகி விசாரித்தால், கடன் பெறுவதற்கு எப்படி விண்ணப்பிக்க வேண்டும், என்னென்ன சான்றிதழ்கள் வாங்கி அனுப்ப வேண்டும் என்ற விவரங்களையெல்லாம் தெரிவிப்பார்.

எஸ். ஏ. 1. ஆமணக்குப் பயிரிடச் சிறந்த பட்டம் எது ? விதைகளை எங்கிருந்து பெறலாம் ?

—சுப்பிரமணியம், வேலூர்.

'எஸ்.ஏ. 1' ஆமணக்குப் பயிரிடச் சிறந்த பட்டம் ஜூன்-ஜூலை மாதம் ஆகும்.

'எஸ்.ஏ. 1' ஆமணக்கு விதைகள் உங்கள் அருகில் உள்ள வேளாண்மைக் கிடங்குகளில் கிடைக்கக்கூடும். அவ்வாறு கிடைக்காவிட்டால் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

''உதவி எண்ணெய்வித்து நிபுணர்,
ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், சேலம்.''

'காவேரி' ரக நெல்லை குறுவை அல்லது கார் பட்டமாக ஆவணி மாதம் நாற்று விட்டுப் புரட்டாசி மாதம் நடவு செய்யலாமா ? தயவு செய்து விவரம் கூறவும். நாற்று விடுவது எப்போது ?

கோ. ஆறுமுகம்,
சாத்தம்பாடி.

'காவேரி' ரக நெல்லை, குறுவை அல்லது கார் பட்டத்தில் சாகுபடி செய்யலாம். ஆனால் குறுவை அல்லது கார் பட்டம் என்பது வைகாசி-ஆனி (மே-ஜூன்) முதல் ஆவணி-புரட்டாசி (ஆகஸ்ட்—செப்டம்பர்) வரை உள்ள காலத்தையே குறிக்கும். எனவே தாங்கள் ஆவணி மாதத்தில் நாற்று விட்டுப் புரட்டாசி மாதத்தில் நடவு செய்யக்கூடாது. குறுவை அறுவடை புரட்டாசியில் முடிந்துவிடும். அறுவடை செய்ய வேண்டிய காலத்தில் நடவு செய்வதென்பது காலங்கடந்த செயல் மட்டுமல்ல, பயனற்ற செயலுமாகும். எனவே காவேரி நெல் சாகுபடி செய்ய விரும்பினால், ஆனி மாதத்திற்குள் நாற்று விட்டு விடுங்கள். காவேரி நெல் பற்றிய சாகுபடிக் குறிப்புகளை அறிய மே 16, 1971 'தமிழரசு' இதழின் 21, 22, 23 பக்கங்களைப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எங்கள் மூன்று ஏக்கர் நிலத்தில், வருகிற ஜூன் மாதத்தில் விவசாய கம்பு நடவு செய்ய நினைத்துள்ளேன். அடுத்து, கருணை நெல் நடவு செய்யலாமா என்பதையும் நடவு செய்யும் முறையையும் விளக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

எம். அருணாசலம்,
விருத்தாசலம்.

எச்.பி. கம்பு ரகத்தையே தாங்கள் விவசாய கம்பு என்று குறிப்பிடுகின்றீர்கள் என நினைக்கின்றோம். அந்தக் கம்பினை ஜூன்மாதத்தில் நடவு செய்தால் அது அனேகமாக ஆகஸ்ட் மாத இறுதியில் அல்லது செப்டம்பர் மாதத்தில் அறுவடைக்கு வரும். அதன்பின் 'கருணை' நெல் சாகுபடி செய்வதற்கு ஏற்றதல்ல. செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற உயர் விளைச்சல் ரகம் ஐ.ஆர். 5, கோ.-25 நீண்ட நாள் வயதுடையது. செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் கார்த்திகைச் சம்பா (ஏ.எஸ்.டி. 5), ஒட்டுக்கிச்சிலி (ஏ.எஸ்.டி. 11), கோ.-32 போன்று பொறுக்கு நெல் வகைகளையும் பயிரிடலாம்.

சென்னையில் நல்ல பக்குவமான இடத்தில் காய்கறி விதை வியாபாரத்திற்குக் குறைந்த வாடகையில் கடையும், வீடும் கொடுத்தால் நான் அங்கு வந்து காய்கறி விதை வியாபாரம் செய்ய நினைக்கின்றேன். 16—5—71 தமிழரசு பத்திரிகையைப் பார்த்ததில் 'வீடு உண்டு வேறு என்ன வேண்டும் ? ' என்ற கேள்வியும் பதிலும் என்னை இதை எழுதத் தூண்டியது. எனது பணியை ஏற்றுக் கொண்டு தகுதியான இடத்தை அளித்து நல்லது செய்வீர்களென்று நம்புகின்றேன். எனது விண்ணப்பம் நியாயமானது என்று தாங்கள் கருதினால் தங்களால் முடிந்ததைச் செய்யும்படி, பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

—கே. ஆர். எஸ். கோபாலன்:
செயங்கொண்டம்:

தங்களுக்குத் 'தமிழரசு' சார்பில் உதவமுடியாமைக்கு வருந்துகின்றோம். தங்களுக்குக் குறைந்த வாடகையில் கடையோ அல்லது வீடோ கிடைக்க வேண்டுமானால், குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்களுக்கு ஒரு மனு அனுப்பிவைக்கவும். குடிசை மாற்று வாரிய விதிமுறைகள் அனுமதிக்குமானால், தங்கள் கோரிக்கைகள் நிறைவேறலாம்.

ஆண்டு முழுவதும் பயிரிடுவதற்கு ஏற்ற ஒரு புதிய தண்டுக்கீரை ரகம் வந்துள்ளதாகக் கேள்விப்பட்டேன். அதன் பெயர் என்ன ? அதன் விதை எங்குக் கிடைக்கும் ? அதன் சாகுபடி முறைகளைக் கூறவும்.

மு. இளஞ்சேரன்,
மதுரை.

தாங்கள் கேள்விப்பட்ட புதிய ரக தண்டுக் கீரைக்கு 'கோ.-1 தண்டுக்கீரை' என்று பெயர். இந்த ரகத்தை ஆண்டு முழுவதும், எப்பொழுது வேண்டுமானாலும் பயிரிடலாம். இந்த ரகம் விரைவாக வளர்ந்து அதிக மகசூல் தரக் கூடியது. நாட்டு ரகத் தண்டுக்கீரை வகைகளை விட 50 சத அளவு அதிக மகசூல் அளிக்கும். ஒரு ஏக்கரிலிருந்து விதைத்த 7 வாரங்களுக்குள் 8,000 கிலோ கீரைகளும், இளந் தண்டுகளும் கிடைக்கும். இந்த ரகத் தண்டுக்கீரையின் இலைகள் கரும் பச்சையாகவும், மொத்தமாகவும், சதைப்பற்று மிகுந்ததாகவும், சுவை மிக்கதாகவும் இருக்கும். குறுகிய வயது காரணமாக இந்த ரகத்தைப் பயன்படுத்தி ஒரே ஆண்டில் தொடர்ந்து 5 அல்லது 6 தடவை பயிர் செய்யலாம். இந்த ரகத்தை இலைப்புள்ளி நோயும், அந்துப் பூச்சியும் அதிகமாகத் தாக்காது.

கோ.-1 தண்டுக்கீரை விதையை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்; அல்லது கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைக்கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றும் ''காய்கறி நுண்ணறிஞர்'' அவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

கோ.-1 தண்டுக்கீரை சாகுபடி செய்ய ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எருவிட்டு 4 முறை நன்கு உழுது விட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 200 கிலோ 3-ஆம் நெம்பர் தரப்படுத்தப் பட்ட கலவை உரத்தையோ, அல்லது அமோனியம் சல்பேட் 50 கிலோ, சூப்பர்பாஸ்பேட் 120 கிலோ, 'மியூரியேட் ஆப் பொட்டாஷ் 24 கிலோ ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். அதன்பின் முளைக் கீரையாகப் பயன்படுத்துவதற்கென்றால் நிலத்தை 80 சென்டி மீட்டர்×80 சென்டி மீட்டர் (2 அடி 8 அங்குலம்×2 அடி 8 அங்குலம்) அளவுள்ள பாத்திகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். அப்பாத்திகளில்

கோ 1. தண்டுக்கீரை

விதைகளைத் தெளித்து விதைக்க வேண்டும். தண்டுக் கீரையாக வளரவிட்டுப் பயன்படுத்துவதென்றால் நிலத்தில் 45 சென்டி மீட்டர் ($1\frac{1}{2}$ அடி) இடைவெளிக்கு ஒரு பார் வீதம் அமைக்கவும். பார்களின் சரிவில் விதைகளை வரிசையாக விதைக்கலாம்.

ஒரு ஏக்கர் தண்டுக்கீரை விதைக்க ஒரு கிலோ விதை வேண்டும். விதையுடன் 10 மடங்கு சிறு மணலைக் கலந்து விதைப்பது சிறந்த முறையாகும். விதைக்கப்பட்ட கீரை விதைகளை எறும்பு இழுத்துச் சென்று தின்று விடாமல் தடுக்க பி.எச்.சி. 10 சத மருந்துத் தூளை விதைப் பாத்திகளில் தூவுதல் நல்லது. விதைகளை விதைத்த உடன் தண்ணீர் பாய்ச்சுதல் வேண்டும். அதன்பின் 5 அல்லது 7 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. களைகள் தோன்றினால் அவ்வப்போது அகற்றிவிட வேண்டும்.

மூன்று வாரம் கழித்து நெருக்கமாக இருக்கும் கீரைச் செடிகளை அகற்றிவிடவேண்டும். அவ்வாறு அகற்றப்படும் செடிகளை முளைக்கீரையாகப் பயன்படுத்தலாம்.

தண்டுக்கீரையில் தோன்றும் இலை தின்னும் கம்பளிப் புழுக்களையும், இதர பூச்சிகளையும் கட்டுப்படுத்த மாலத்தியான் 0·05 சதம் (1 மில்லி லிட்டர் மாலத்தியான் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவேண்டும். இலைப்புள்ளி, மற்றும் ஏதேனும் நோய் தோன்றுவதைத் தடுக்க "டைத்தேன் இஸட்-78" (1 கிலோ மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும். மருந்து தெளித்த 15 நாட்களுக்குள் கீரைத் தண்டுகளைப் பிடுங்கிச் சமையலுக்குப் பயன்படுத்தக்கூடாது. மருந்து தெளிக்கப்பட்ட கீரைத் தண்டுகளைத் தண்ணீரில் கழுவிய பின் விற்பனை செய்வதே சிறந்தது.

கோ.-1 தண்டுக்கீரையை விதைத்த 15 முதல் 20 நாட்களில் முளைக்கீரையாக அறுவடை செய்யலாம். விதைத்த 6 முதல் 7 வாரங்களுக்குப் பிறகு தண்டுக் கீரையாக அறுவடை செய்யலாம்.

எஸ். ஏ. 1 துவரையை மானாவாரியாகப் பயிரிடலாமா ? அதற்கு ஏற்ற பருவம் எது ? ஏக்கருக்கு எவ்வளவு மகசூல் கொடுக்கும் ?

ந. முத்துக் கவுண்டர்,
ஆத்தூர்.

எஸ்.ஏ. 1 (S. A.1) துவரையை ஜூன், ஜூலை மாதங்களில் மானாவாரியாக விதைக்கலாம். ஏக்கருக்குச் சராசரியாக 500 கிலோ மகசூல் கிடைக்கும்.



ஆக்குவதும் அழிப்பதும் உங்கள் கையில்

பம்ப்-செட் வைத்திருந்தால் மட்டும் போதாது. அமோக விளைச்சலுக்கு முறைப்படி நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். அதற்கு உங்கள் பம்ப்-செட் எந்த சமயத்திலும் சீராக இயங்கும் வண்ணம் இருக்க வேண்டும். உங்கள் மோட்டாரை ஸ்டார்டர் நன்கு பாதுகாத்தால்தான், பம்ப்-செட் எந்த விதமான தொல்லையும் இல்லாமல் சரிவர இயங்கும்.

இந்த உண்மையை உணர்ந்து, அதன் அடிப்படையில் லார்ஸன் டுப்ரோ ஸ்டார்-டெல்டா ஸ்டார்டர் தயாரிக்கப்படுகிறது. இதன் பித்தானை அழுத்தியவுடனே மோட்டார் தானாக இயங்கத் தொடங்குகிறது. இளையோர், முதியோர் யாவரும் இதை இயக்கலாம். ஒவ்வொரு ஸ்டார்டருக்கும் மூன்று கான்டாக்டர்கள் உள்ளன. அவை உறுதியான தூய வெள்ளி கான்டாக்ட்கள் கொண்டவை. இதனால் மோட்டார் சட்டென்று தானாக இயங்குவது எளிதாகிறது. எங்கள் ஸ்டார் டெல்டா ஸடார்டர் உங்கள் மோட்டாருக்கு பூரண பாதுகாப்பு அளிக்கும்

ஸ்விட்ச்கியர் டிவிஷன்

லார்ஸன் அண்டு டுப்ரோ லிமிடெட்

தபால் பெட்டி 278, பம்பாய்-1 • தபால் பெட்டி 619, கல்கத்தா-16 • தபால் பெட்டி 323, புது டில்லி-1 • பை தபால் 5247, மதராஸ்-2,



வட சென்னையிலே வளரும் படகு!

சென்னை மாநகரின் கடற்கரையையொட்டி அமைந்துள்ள இராயபுரத்தில் நீண்ட நெடுஞ் சாலையாக அமைந்துள்ளது சூரியநாராயணச் செட்டிதெரு. 5-6-1971 மாலை 6-00 மணி அளவில் 8-ஆம் எண்ணுள்ள இல்லம் விழாக்கோலம் பூண்டு விளங்கியது. குழல்விளக்குகள் தம் முழு ஒளியை விழா நடக்கும் இடம்வரை பரப்பிக்கொண்டிருந்தன. இனிய நாதஸ்வர இசை, வருவோரையெல்லாம் வரவேற்றுக்கொண்டிருந்தது. விழா மேடையின் அருகே இரு மீன் விசைப்படகுகள் வண்ண விளக்குகளால் அணிசெய்யப்பட்டுக்காண்பவர் அனைவரையும் கவர்ந்து கொண்டிருந்தன. மேடையின் முன்னால் அமர்ந்திருந்த மக்கள் வெள்ளம் எதையோ ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தது. ஒருசில நிமிடங்கள் சென்றிருக்கும், அமர்ந்திருந்தவர்கள் அனைவரும் எழுந்து தங்களுடைய பார்வையை ஒரே பக்கம் திருப்பினார்கள். அவர்தம் முகத்திலே ஒருவகை மலர்ச்சி ; மகிழ்ச்சி. மேடை நோக்கி வந்துகொண்டிருந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்களையும், அரிசனநலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களையும் அவர் தம் கண்கள் கண்டன.

ஆம்! அன்று தமிழக முதல்வர், அரிசனநல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையாரின் தலைமையில், சிந்தனைச்சிற்பி மா. சிங்காரவேலர் அவர்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள படகு கட்டும் துறையைத் திறந்துவைத்தார்கள். மீன் துறை இயக்குநர் திரு தயாப் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

முதல் முதல், சென்னை மெரினா கடற்கரையில், 1955-ஆம் ஆண்டு ஒரு சிறு படகுகட்டும் துறையைத் தமிழக அரசு ஆரம்பித்தது, முதலில்சிறுபடகு கட்டும் துறையாகத் தொடங்கியிருந்தாலும் நாளடைவில் அதன் வளர்ச்சி பெருகிக் கொண்டே வந்தது. சென்னை மெரினாவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மீன்விசைப் படகுகள் கட்டும் துறையில் முதன் முதலில் 25 அடி நீளமுள்ள படகுகள் கட்டப்பட்டன. பின்னர் 30, 32, 36, 38 அடிகள் நீளம் கொண்ட விசைப் படகுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. சென்னை மெரினாவைத் தவிர, இராயபுரத்தில் படகுகட்டும் துறை ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. மீன்துறையினரின் ஆரம்ப எண்ணம், இராயபுரத்தில் படகுத்துறை கட்டிவிட்டு மெரினாவை மூடிவிடுவது என்பதேயாகும். ஆனால், மீனவப் பெருங்குடியினரின் வேண்டுதலாலும் வற்புறுத்தலாலும் இரண்டும் இயங்கலாயின. தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னை மாநகரை எழில்மிக்க நகரமாக மாற்றி அமைக்க வேண்டும்; சென்னையை அழகுபடுத்தி அதை ஓர் உல்லாச நகராகவும், இந்திய துணைக்கண்டத்தில் ஒரு தலை சிறந்த நகரமாகவும் அமைத்திட வேண்டும் என்ற சீரிய பணிகளில் தமிழ்நாடு அரசுஈடுபட்டுச்செயல்படத் துவங்கியது; எனவே மெரினா படகு கட்டும் துறையை மூடிவிட வேண்டும் என்று வற்புறுத்தியது. தமிழக அரசு மட்டுமின்றிச் சென்னை மாநகராட்சியும் இதனையே விரும்பிற்று; ஆதலால் மீன் துறையினர் சிந்தனைச் சிற்பி மா. சிங்காரவேலர் பெயரில் சென்னை இராயபுரத்தில் படகு கட்டும் துறையினை அமைத்தார்கள். இந்தப் படகுகட்டும் துறைக்கு அனாதை ஆசிரமம் அருகிலுள்ள நிலம் ஒதுக்கப்பட்டது. இந்தப் படகு கட்டும் துறை ஏறக்குறைய 4·75 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள இந்த இரு படகு கட்டும் துறைகளைத்தவிர, நாகைப்பட்டினம், மண்டபம் ஆகியஇருஇடங்களிலும்இத்துறைகள் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள நான்குபடகுகட்டும்துறைகளிலும் சேர்ந்து ஆண்டுக்குச் சுமார் 200 விசைப் படகுகள் வீதம் கட்டப்படுகின்றன. நடப்பு ஆண்டில் கட்டப்பட விருக்கிற 208 படகுகளையும்சேர்த்துமொத்தம் 1,500 படகுகள் உள்ளன. இந்தியாவிலேயே மொத்தம் 8,000 விசைப் படகுகள்தான் உள்ளன. சென்னையிலுள்ள இரண்டு படகுத்துறைகளிலும் சேர்ந்து சுமார் 150 ஊழியர்கள் வேலைசெய்கிறார்கள். முப்பது அடி நீளம் கொண்ட ஒரு படகு கட்டுவதற்குச் சுமார் ரூபாய் 55,000 வரை செலவாகிறது. முப்பத்திரண்டு அடி நீளத்துக்குச் சுமார் ரூபாய் 65 ஆயிரமும் முப்பத்தாறுஅடி நீளம் கொண்ட படகுக்குச் சுமார் ரூபாய் 1,12,000-மும் செலவாகின்றன. முப்பத்தியாறு அடி நீளம் கொண்ட படகு தனியார்களுக்கு மட்டும் தள்ளுபடியின்றிக் கொடுக்கப்படுகிறது.

தற்பொழுது மீன் பிடி விசைப் படகுகளுக்காகக் கட்டப்படும் படகுகளுக்கு அரசாங்கம்தான் பொருள்உதவிஅளித்துவருகிறது. மரம், இரும்பு ஆகியவற்றைக் கொண்டு படகுகள் கட்டுவதால் அவை துருப்பிடித்து நாளடைவில் கெட்டுவிடுகின்றன என்பதற்காக தற்பொழுது 'ஃபெரோ சிமிண்ட் படகுகள்' (Ferro Cement Boats) கட்ட ஆரம்பித்துள்ளனர். இப்பொழுது 15 அடி நீளம் கொண்ட சிமெண்ட் படகு ஒன்று கட்டப்பட்டுள்ளது. தவிர 32, 36 அடி நீளத்திலும் கட்டத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதற்கு அரசும் அனுமதி அளித்துள்ளது. இதைப் போன்ற சிமெண்ட் படகுகள் அமெரிக்காவில் உள்ளன. இந்தியாவிலேயே முதன் முதலில் இதுபோன்ற சிமெண்ட் படகுகள் கட்டப்படுவது தமிழ்நாட்டில்தான் என

எண்ணும்போது நாம் பெருமிதம் அடைகிறோம்.

தமிழக அரசு மீனவர்களுக்கு வேண்டிய விசைப்படகுகளைத் தவணை முறையிலும் உதவித் தொகை முறையிலும் (Subsidy cum hire purchase) கொடுக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மூன்று மீனவர்கள் கொண்ட குழுவுக்கு ஒரு விசைப் படகு வீதம் கொடுக்கப்படுகிறது. மீனவச் சமுதாயத்தினருக்கு 'விசைப் படகுகள் அளித்தல், அவர்கள் மீன்பிடிப்பதற்கு வேண்டிய நைலான் போன்ற பொருட்களைத் தவணை முறையில் கொடுத்தல் இது போன்ற செயல்களைக் காணும் பொழுது தமிழ்நாடு அரசு பாட்டாளி மக்களுக்கும் மீனவச் சமுதாயத்தினருக்கும் பாடுபடுகிறது என்பது தெள்ளத் தெளிவாகிறது. சிங்காரவேலர் படகுகட்டும் துறையைத் திறந்து வைத்துத் தமிழக முதல்வர் அவர்கள் உரை நிகழ்த்துகையில், '' மீனவர்களுடைய துயரம் எத்தகையது ; அவர்களுடைய வாழ்வு எத்தகைய பயங்கரமானது என்பதையெல்லாம் உணர்ந்து, அந்தச் சமுதாயத்தினரை மேம்படுத்த எந்த அளவுக்குத் திட்டங்கள் தீட்ட வேண்டுமோ அந்த அளவுக்குத் திட்டங்கள் தீட்டி முன்னேற்றி வருகிறது, தமிழ்நாடு அரசு '' எனப் பலத்த கரவொலிக்கிடையில் கூறினர். மேலும் பேசுகையில், '' மேலை நாடுகளில் மீன் பிடிப்பதற்காக அளிக்கப்படும் படகுகள் ஆழ் கடலில் மீன் பிடித்து, அங்கேயே குளிர்பதனப் படுத்தி—ஏற்றுமதி செய்கின்ற அளவுக்குச் செப்பமுற அமைந்துள்ளன. அதுபோன்று நம் நாட்டிலும் ஏற்படவேண்டும். அதற்கு—தொழிலுக்காக உதவி செய்துவரும் வணிக வங்கிகள் இதனையும் தொழிலாகக் கொண்டு கடன் உதவி அளிக்க முன்வர.வேண்டும், தமிழ் நாடு அரசின் சார்பில் இதற்கு உதவும்படி வேண்டுகிறேன்'' என்றும் கூறினர்கள். இவற்றின் வாயிலாகத்தான் தமிழக முதல்வர் அத்தொழிலின் மீது கொண்டுள்ள பற்றும் அச் சமுதாயத்தின் முன்னேற்றத்தில் தமிழக அரசு காட்டும் அக்கறையும் வெளிப்படுகின்றன.

மீன் பிடிக்கும் தொழில், வேளாண்மைத்தொழில் போன்று முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய ஒரு தொழில். ஆரம்பத்தில் தமிழகத்தில் சுமார் 80 ஆயிரம் டன் வரையில் மீன்கள் பிடிக்கப்பட்டு ஏற்றுமதியும் செய்யப்பட்டன. ஆனல்இன்று சுமார் 3 லட்சம் டன்கள் வரை மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மீன்கள் ஏற்றுமதியில் சுமார் 2½ கோடி ரூபாய் வரையில் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. எனவே இத்தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது நியாயமானதாகும்.

விசைப் படகு—சில விவரங்கள்

மீன் பிடிப்பதற்காக, விசைப் படகுகளைக் கட்டி, மீனவர்களுக்கு வழங்குவதற்கெனத் தமிழக அரசு திட்டம் ஒன்றினைச் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும், படகு அமைப்பின் விலையில் 25 சதவீதமும், என்சின்கள் விலையில் 50 சத வீதமும் மீனவர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மீதித்தொகை கடனுகக் கருதப்பட்டுத் தவணை முறையில் வசூல் செய்யப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 400 விசைப் படகுகளைக் கட்டிமுடிப்பதெனத் திட்டமிடப்பட்டது. அத்துடன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் திட்டமிடப்பட்டுக் கட்டி முடிக்கப் படாத 54 விசைப் படகுகளையும் மூன்ருவதுஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டது.

மூன்ருவதுஐந்தாண்டுத்திட்டத்தின் முதல் நான்காண்டுகளில் (1961–65-ஆம் ஆண்டுகளில்) கட்டிமுடிக்கப்பட்ட விசைப்படகுகள் 231. 1965–66-ஆம் ஆண்டில் கட்டிமுடிக்கப்பட்ட விசைப் படகுகள் 143.

இத்திட்டத்தின் கீழ் 1966–67-ஆம் ஆண்டில் 143 விசைப் படகுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1967–68-ஆம் ஆண்டில் 195 விசைப்படகுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1968–69-ஆம் ஆண்டில் 104 விசைப் படகுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1969–70-ஆம் ஆண்டில் 145 விசைப்படகுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1970–71-ஆம் ஆண்டிலும் 145 விசைப் படகுகள் கட்டி முடிக்கப்பட்டன.

நடப்பு ஆண்டில் (1971–72-ஆம் ஆண்டில்) 208 விசைப் படகுகள் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தற்போது 1,500 விசைப் படகுகள் உள்ளன. இதைத் தவிர 30,000 கட்டுமரங்களையும், தோணிகளையும் தமிழகத்து மீனவப் பெருமக்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்துகின்றனர்.

நாளைய தலைமுறை

கதையும் பாட்டும் படிப்பதால்
கல்வி யறிவு சேருமே !
எதையும் கேட்டுப் பார்ப்பதால்
இயற்கை யறிவு கூடுமே !

—நாரா. நாச்சியப்பன்.

அண்டவெளி 50,000,000,000,000 ஆண்டுகளுக்கு முன்னல் பிறந்தது என்று அறிஞர்கள் கூறுகிருர்கள்.

அப்போது ஹைட்ரஜன், ஆக்சிஜன், இரும்பு, செம்பு, கந்தகம், தங்கம் போன்ற இந்தப் பொருள்களெல்லாம் எந்த மூலப்பொருள்களினுல் ஆக்கப்பட்டிருக்கிறதோ அந்த புரோட்டான், எலெக்ட்ரான், நியூட்ரான் என்ற அடிப்படைப் பொருள்கள் இருந்தன. அப்போதைய உஷ்ணம் மிக மிக அதிகம்; அதிக அமுக்கம். அந்த நிலையில் ஓர்அரை மணி நேரத்தில் பல சேர்க்கைகள் நிகழ்ந்து நாம் இன்று காணும் 92 மூலப் பொருள்களைத் தோற்றுவித்தன.

இவை அனைத்தும் அப்படியே குழம்பாய், கூழாய் இருந்தன. இந்தக்கூழ்தன்னைத்தானேசுற்றிக் கொண்டிருந்தது. காலப் போக்கில் இந்தக் கூழ் சுருங்க ஆரம்பித்தது. சுருங்கச் சுருங்கச் சுழலும் வேகம் அதிகமாகிறது. வேகம் அதிகமாக ஆக உருண்டை வடிவமான கூழ் தட்டையாகிச் சிறுசிறு தூசிக் கூட்டங்களைத் தன்னைச்சுற்றிப் பரப்பியது. இத்தூசிக் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து நட்சத்திரமாகத் தோன்றின. இது தான் அண்டவெளி தோன்றிய கதை.

சூரியனிலிருந்து சூரிய குடும்பம் எப்படித் தோன்றியது? சூரியனுடைய எடையில் 745-ல் ஒரு பாகத்தினுல் சூரியனைச் சுற்றி வரும் மற்றெல்லாப் பொருள்களும் செய்யப்பட்டிருக்கின்றன. சூரியன் நமது பூமியை விட 13,000,000 பங்கு அளவில் பெரியது. சூரிய கோளத்தின் வெளிப்புற உஷ்ணம் சுமார் 6,000°செ. அதன் உள்ளேயோ இலட்சக் கணக்கான டிகிரி உஷ்ணம்.

சூரியனில் 50 பாகத்திற்குமேல் ஹைட்ரஜனும் பாதிக்குக் குறைவாக ஹீலியம் என்ற வாயுவும் குறைந்த அளவில், மற்றப் பொருள்களும் இருக்கின்றன. பூமியில் அதிகம் பிராணவாயுவும், சிலிகான் என்ற மணல் பொருளும் பல்வேறு தனிப் பொருள்களும் இருக்கின்றன.

ஹைட்ரஜன் குண்டு வெடித்தால் என்ன மாறுதல் நேருகிறதோ, அதேபோல் சூரியனுள் தினம் ஹைட்ரஜன் குண்டு வெடித்து ஹீலியம் என்ற பொருளாக மாறுகிறது. அப்போது வெளிப்படும் சக்தியைத்தான் நாம் சூரியவெளிச்சமாகத் தினமும் பெறுகிறோம்.

சூரியன் மீது பெரிய 'விண்கொள்ளி' அல்லது மற்றோர் சூரியன் வீழ்ந்து, மோதி, அதனுல் சூரியன் சிதறிக் கிரகங்கள் உண்டாயின என்று பஃபன் என்பவர் கூறினர்.

லாப்லாஸ் என்பவர் சூரியனைச் சுற்றிரு வாயுமண்டலம் இருக்கிறது, சூரியனின் சுழற்சியால் அது தட்டையாகிச் சூரியனைச்சுற்றி வளையமாகப் பொருளை விட்டுச் செல்கிறது; நாளடைவில் இவ் வளையங்கள் உடைபட்டுத் தனித்து கிரகங்களாகின்றன" என்று கூறினர்.

லாப்லாஸ் கொள்கையே சரியானதென்று கருதுகின்றனர்.

எப்படி சூரியனிலிருந்து பூமி தோன்றியதோ, அதேபோல் பூமியிலிருந்து சந்திரன் பிறந்தது. ஒரு காலத்தில் சந்திரன் பூமியிலிருந்து துண்டித்துக்கொண்டு ஓடிவிட்டது. அது கிளம்பிய இடத்தை இன்னும் பூமியின் மீது பள்ளமாகக் காணலாம். அந்தப் பள்

குழந்தைகள் பகுதி நாளைய தலைமுறை என்ற தலைப்பில் இந்த இதழிலிருந்து தொடங்குகிறது. சிறுவர்களுக்கான இப் பகுதி வளரும் பயிர்களுக்கு அறிவு விருந்தளிக்கும் பகுதியாகும்.

ளத்தில் இப்போது தண்ணீர் நிரம்பி பசிபிக் மகாசமுத்திரமாகக் காட்சி தருகிறது.

இதுவரையில் பூலோகம், தேவலோகம், பாதாள லோகம், ஈரேழுலோகங்கள் என்பதெல்லாம் வெறும் கதை என்பதையும் அண்டவெளி அமைப்பையும் பற்றி அறிந்து கொண்டோம்.

நமது பூமியின் எதிர்காலமென்ன? சூரியனின் எதிர்காலமென்ன? இதைப் பற்றி அறிந்து கொள்ள நாம் சோதிடர்களிடம் போக வேண்டியதில்லை. விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

சூரியனில் ஹைட்ரஜன் என்ற எரி பொருள்கள் இணைந்து சக்தி தருகின்றன. இதிலிருக்கும் ஹைட்ரஜன் எவ்வளவு நாளைக்கு வரும்? ஹைட்ரஜன் குறையக் குறைய மிகுந்துள்ளது வேகமாக எரியும். ஆகவே சூரியன் போகப் போக மிக அதிக ஒளியுடனும் உஷ்ணத்துடனும் எரியும். அப்போது பூமி மண் சூட்டையும், ஒரு நாள் தண்ணீரெல்லாம் நீராவியாக மாறி நிற்கும். அந்தச் சூட்டில் மனிதன் வாழ முடியாது.

சூரியனின் அந்தியக் காலம் சாதாரண இறப்பு அல்ல. இறக்கு முன் அது வெடித்துச் சிதறிப் பூவாணமாகப் போகும்.

அது என்று ஏற்படும்? பயப்பட வேண்டியதில்லை. அதற்கு இன்னும் 5,000,000,000 ஆண்டுகள் இருக்கின்றன.

அதற்குள் நமது அறிவு முன்னேறி நாம் வெளி மண்டலங்களுக்குப் போவதைச் சகஜமாக மேற்கொண்டிருக்கலாம். அப்படியொரு முடிவு வருமுன்பு மக்கள் இனம் பத்திரமாக வேறு கிரகத்திற்குக் குடியேறி விடலாம்!

ஈன்ற தாயைப் போற்றல் செய்யா
    இழிந்தோன் தன்னை சாடிடு !—பெற்ற
ஞான்று முதலாய்த் தன்னை மறந்த
    நல்லாள் புகழே பாடிடு !

வாயைக் கட்டி வயிற்றை யொட்டி
    வளர்ப்புக் கலையைக் கற்றவள் !—ஒரு
நோய்வ ராமல் நொடியுங் காக்கும்
    நோட்டம் நிரம்பப் பெற்றவள் !

வாழப் புகுந்த காலந் தொட்டு
    வரம்பு கொண்டே வாழ்ந்தவள் !—உனை
ஈழ நாட்டுத் தமிழ னென்றே
    எடுத்தெ டுத்தே மோந்தவள் !

கோழிச் சேவல் கூவும் முன்னே
    குடும்பம் செய்ய முனைபவள் !—அது
பாழுங் குடிலைப் போன்றிட் டாலும்
    பளிங்கு செய்யும் வினையவள்!

நாடு காக்கக் கணவர் செல்ல
    நலமாய் மகிழ்ந்து விடுப்பவள் !—நீ
ஏடு தூக்கிப் பள்ளி செல்ல
    எழுத்துப் பயிற்சி கொடுப்பவள் !

கோயில் குளங்கள் சுற்றி னாலும்
    கொழுநன் தன்னையே மதிப்பவள் !—ஒரு
பாயில் லாமல் வாழ்ந்த போதும்
    பண்பை நெஞ்சில் பதிப்பவள் !

வரவு செலவு கணக்கு வைத்து
    வரம்பு காக்கும் முறையினள் !—முழு
இரவுங் கூட விழித் திருந்தே
    இல்லம் பேணும் நிறையினள் !

தலைவன் தந்த பொருளைப் பேணித்
    தனித்த கொடியை உயர்த்துவாள் !—கடல்
அலையைப் போல விருந்து வரினும்
    அன்பு விழவை அயர்த்துவாள் !

முன்னை மரபின் முறைகள் தேர்ந்து
    முயன்று பணிகள் ஆற்றுவாள் !—நாம்
அன்னை மாண்பை உணரா விட்டால்
    ஆரே நம்மைப் போற்றுவார் !



'சமையல்கலை' என்பது வளர்ந்துவரும் உலகத்தில் எவ்வளவு முன்னேற்றங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வருகிறது!

'சமையல் இயல்'—தொழில் நுட்பக் கல்வியாகவும் மாறியுள்ளது. பட்டப்படிப்புகளும் ஏற்பட்டுள்ளன.

மனித இனத்தின் வளர்ச்சியும் தேவையும் விரைவான போக்குவரத்தும் உலகத்தைச் சுருக்குவதால் ஒவ்வொரு நாட்டின் உணவு, பழக்க வழக்கங்களும் மற்ற நாடுகளுக்குப் பரவிவருகின்றன.

அந்தந்த நாட்டு உணவு முறைகள் அந்தந்த நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு அயல் நாடுகளில் கிடைக்கும்பொழுது அவர்கள் மிகவும் சுவரப்படுகிறார்கள்.

மற்றவர்களைக் கவர உலக அளவில் உணவு முறைகளைத் தயார் செய்வதை நாம் அறியாவிட்டாலும் நம் நாட்டு அளவில் உணவு வகைகளைச் செய்யும் முறைகளை அறிந்து கொள்வது பயனளிக்கும்.

காமோன் தோக்லா

இது வடநாட்டில் வழக்கிலுள்ள உணவு வகையாகும்.

தேவையான பொருள்கள் :

கடலைப் பருப்பு		200 கிராம்.
உளுத்தம் பருப்பு.		75 கிராம்.
இஞ்சி	..	10 கிராம்.
பச்சை மிளகாய்.		10 கிராம்.
எண்ணெய்	..	100 கிராம்.
பெருங்காயம்	..	5 கிராம்.
சர்க்கரை	..	10 கிராம்
சோடா-பை-கார்பனேட்டு		½ தேக்கரண்டி.
உப்பு	..	10 அல்லது 15 கிராம்.
மஞ்சள்பொடி.		½ தேக்கரண்டி

தாளிக்கத் தேவையானவை

எண்ணெய்	..	50 கிராம்.
கடுகு	..	5 கிராம்.
தேங்காய்	..	115 கிராம்.
கொத்தமல்லிக் கீரை.		30 கிராம்.

செய்யும் முறை :

கடலைப்பருப்பையும் உளுத்தம் பருப்பையும் சேர்த்து ஆறு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின்னர் ஆட்டுக் கல்லில் நன்முக ஆட்டவேண்டும்.

நன்முக அரைத்த மாவுடன் இஞ்சி, பச்சை மிளகாய், உப்பு, பெருங்காயம், சோடா-பை-கார்பனேட்டு, சர்க்கரை முதலிய வற்றைச் சேர்க்க வேண்டும்.

நூறு கிராம் எண்ணெய்யை அடுப்பில் வைத்து நன்முகச் சூடாக்கியவுடன் கலந்து வைத்திருக்கும் மாவுக் கலவையுடன் கலந்து 12 மணி நேரம் வைத்திருக்க வேண்டும்.

பின்பு கொதிக்க வைத்து, கொதி வந்தவுடன் நெய் பூசிய தட்டில் விடலாம்.

தாளிக்க வேண்டும் என்று நினைத்தால் தாளிக்க வேண்டிய பொருள்களை எடுத்து, வழக்கம் போல் தாளித்த சமைத்த பொருள்களுடன் சேர்த்துவிடலாம்.

தேங்காய் துறுவல், கொத்தமல்லி இலை. முதலியவைகளையும் கடைசியில் சேர்த்துக் கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள அளவில் செய்தால் நான்கு பேர் சாப்பிடலாம்.

பட்டாணிச் சட்டினி

பட்டாணிச் சட்டினி செய்வது மிகச் சுலபமானது. நான்கு நபர்களுக்குப்பட்டாணிச்சட்டினி செய்யத் தேவையான பொருள்கள் :—

வறுத்த பட்டாணி—55 கிராம்.
உப்பு—சுவைக்கு ஏற்றபடி.
மிளகாய்வற்றல்—2 கிராம்.
நறுக்கிய இஞ்சி—3 கிராம்.
எலுமிச்சம் பழச்சாறு—2 அல்லது 3 துளிகள்.

செய்யும் முறை :

முதலில் மிளகாய் வற்றலை வதக்கிக் கொண்டு வழக்கம் போல எல்லாப் பொருள்களையும் சேர்த்து அரைக்க வேண்டும். அவ்வளவுதான் பட்டாணிச் சட்டினி தயாராகிவிடும்.

உருளைக் கிழங்கு பரோட்டா

உருளைக்கிழங்கு பரோட்டா ஓர் ஆளுக்குத் தேவையான அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

உருளைக்கிழங்கு—100 கிராம்.
பச்சை மிளகாய்—2 கிராம்.
இஞ்சி—2 கிராம்.
கொத்தமல்லி இலை—2 கிராம்
உப்பு—5 கிராம்.
கோதுமை மாவு—25 கிராம்.

செய்யும் முறை :

உருளைக் கிழங்கை வேக வைத்துத் தோலை உரிக்கவும்.

பச்சை மிளகாய், இஞ்சி, கொத்தமல்லி இலை முதலிய வற்றை நன்றாக அரைத்துக் கொள்ளவும்.

உப்பையும் போடவும்.

கோதுமை மாவில், தண்ணீரை விட்டுப் பிசைந்து கொள்ளவும்.

கோதுமை மாவையும், உருளைக்கிழங்குக் கலவையையும் தனித்தனியாகப் பந்துபோல் செய்து கொள்ளவும்.

உருளைக்கிழங்குக் கலவையில் கோதுமை மாவுப் பந்தையும் சேர்த்துக் கொள்ளவும்.

சப்பாத்தி மாதிரி இட்டுக் கொண்டு சூடான தோசைக் கல்லில் வாட்டிக் கொள்ளவும்.

மேலே சொன்ன அளவு ஒரு நபருக்குத்தான். எத்தனை பேருக்கு வேண்டுமோ அத்தனை

தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2

மடங்கு தேவையான பொருளைப் பயன்படுத்தவும்.

வெண்டைக்காய் மசாலா

நான்கு பேருக்கு வெண்டைக்காய் மசாலா செய்வதற்குத் தேவையான பொருள்கள் :

வெண்டைக்காய்—450 கிராம்.

உப்பு—1 தேக்கரண்டி.

மஞ்சள்பொடி—½ தேக்கரண்டி.

மிளகாய்ப் பொடி—½ தேக்கரண்டி.

பச்சை மிளகாய்—2.

கொத்தமல்லித் தூள்—1 தேக்கரண்டி.

எண்ணெய்—55 கிராம்.

முதலில் வெண்டைக்காயைச் சிறுசிறு துண்டங்களாக நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாயை நறுக்கிக் கொள்ளவும்.

எண்ணெய்யைச் சூடாக்கி வெண்டைக்காயையும் மசாலாவையும் கலந்து கிளறிவிட்டுப் பாத்திரத்தை மூடவும்.

ஏறத்தாழ 25 நிமிடங்கள் வரை வதக்க வேண்டும்.

—அஞ்சலு

பறவைகள் பல விதம்

இந்தியாவைப் போல் வேறு எந்த நாட்டிலும் வகை வகையான பறவைகளும் விலங்குகளும் கிடையாது. ஆப்பிரிக்கக் காடுகளில் கூட விலங்குகளின் எண்ணிக்கை ஏராளமானதாக உண்டே யொழிய பலதரப்பட்ட வகைகள் (Species) குறைவுதான்.

இந்தியாவில் மொத்தம் 100 கோடி சதுர மைல் நிலப் பரப்பு உள்ளது. 500 வகையான விலங்குகளும் 2,041 வகையான பறவைகளும் இங்கு உள்ளன.

இந்தியாவை விட நாலு மடங்கு (400 கோடி சதுர மைல்) பரப்பளவு உள்ளது கனடா. ஆனால் அங்கு 200 வகை விலங்குகளும், 500 வகைப் பறவைகளுமே உண்டு.

இந்தியாவின், பூகோள, தட்ப வெப்ப நிலையே இதற்குக் காரணம்.

எட்டு இலட்சம்

இந்தியத் துணைக்கண்டத்தில் மொத்தம் 8 லட்சம் தொலைபேசிகள் உள்ளன.

இவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் ஒரு லட்சத்து 15 ஆயிரம் தொலைபேசிகள் உள்ளன. அவற்றில் சென்னையில் மட்டும் 66,425 தொலைபேசிகளும், பிற பகுதிகளில் 48,896ம் உள்ளன.

கோவை நகரில் உள்ள தொலைபேசிகள் 8,643 ; மதுரையில் 6,286 ; திருச்சியில் 3,843 ; சேலத்தில் 3,833 உள்ளன.

இங்கிலாந்து நாட்டில் மொத்தம் ஒரு கோடியே 30 லட்சம் தொலைபேசிகள் உள்ளன.

அமெரிக்காவில் 10 கோடியே 38 லட்சம்தொலைபேசிகள் உள்ளன. ஜப்பானில் 1 கோடியே 82 லட்சமும், சோவியத் நாட்டில் 91 லட்சமும் உள்ளன.



ஜி. குழந்தைவேலு, பி.எஸ்சி.

புள்ளி விவரங்கள் (Statistics) என்பதின் ஆங்கிலச் சொல்லுக்கு முதற் சொல், அரசு (State) என்பதாகும். "Status" என்ற இலத்தீன் வார்த்தையை அடிப்படையாகக் கொண்டுதான் "Statistica" என்ற இத்தாலிய மொழியைத் தழுவி முடிவில் "Statistics" என்று உருப்பெற்றது. அரசு என்பதன் அடிப்படையிலிருந்து இந்தச் சொல் பிறந்ததன் காரணம், முதன் முதலில் அரசாங்கங்கள் புள்ளி விவரங்களைச் சேகரித்துப் பயன்படுத்தியமையேயாகும். அரசாட்சி முறை வளர்ச்சியுறாத காலத்தில்கூட, ஒவ்வொரு கூட்டத்தின் தலைவனும் சில புள்ளி விவரங்களைச் சேகரிப்பதில் அக்கறை காட்டினான். ஏசுநாதரின் பிறப்பின்போது ஒரு கணக்கெடுப்பு நடந்ததாக விவிலிய நூல் நமக்கு அறிவிக்கின்றது. மேலும் எகிப்திலுள்ள பிரமிட்டுகளைக் கட்டுவதற்கு முன்பே அந்நாட்டில் கிடைக்கக்கூடிய உழைப்பு, தேவையான பொருள் முதலியவைகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டன என்பதற்கு ஆதாரம் இருக்கிறது.

நாகரிகம் வளர வளர புள்ளி விவரங்களும் வளர்ந்தன. அரசாங்கம், மக்களைப்பற்றிய பல புள்ளி விவரங்களைத் தொகுத்தது. மக்கள் பிறப்பு, இறப்பு திருமணம் முதலியவற்றைப் பற்றிய புள்ளி விவரங்கள் சேர்க்கப்பட்டன. வாணிகப் பெருக்கத்துக்கு ஆக்கம் அளிக்கக்கூடிய புள்ளி விவரங்களைப் பிரான்சு, இங்கிலாந்து, பிரசியா ஆகிய நாடுகள் சேர்த்து வெளியிட்டன. மேலும் இன்று வரி விதிக்கவும், வாணிபம் பெருக்கவும், படை திரட்டவும் மட்டுமா புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன ? மக்களது கல்வி நிலை என்ன, நாணயப் பெருக்கமும், புழக்கமும் எந்நிலையில் உள்ளன, மக்களது வருமானம் எப்படி உள்ளது, விலைவாசிகளின் உயர்வு, உணவு உற்பத்தியின் அளவு, மக்கள் தொகை அதிகரிப்பு, குடும்பக் கட்டுப்பாடு—இப்படிப் பல நிலைகளில், பல துறைகளிலும் புள்ளி விவரங்கள் தொகுக்கப்பட்டு அவற்றிற்கேற்ப அரசின் திட்டங்களும், கொள்கைகளும் வகுக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் பல்துறை அலுவலகங்களில் புள்ளியியலுக்கும் இன்று சிறந்த இடம் உண்டு. மேலும் இந்திய புள்ளிவிவர நிறுவனம்(Indian Statistical Institute) இந்திய அரசாங்கப் பொருளாதாரப் புள்ளி விவர இயக்குநர் துறை, மாநில அரசாங்கப் புள்ளியியல் துறை, மாவட்ட நிலை என்றெல்லாம் வளர்ந்து இன்னும் ஒவ்வொரு நிலையிலும், குறிப்பாக நமது மாநிலத்தில் சிறப்பானதோர் அம்சமாக வட்ட நிலைகளிலும் (Taluk level) அதன் வளர்ச்சி பெருகி வருகின்றது. இன்னும் பல்வேறு நிலையிலும் அதன் வளர்ச்சி நாளுக்கு நாள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்ந்து வருகின்றதென்றால் அது மிகையாகாது. சுருங்கச் சொன்னால் ஓர் உடலுக்குக், கண்ணும் காதும் எவ்வளவு முக்கியமோ அதுபோல அரசாங்கத்திற்குப் புள்ளி விவரங்கள் கண்ணாகவும், காதாகவும் இருந்து பயன்பட்டு வருகின்றன.

(Statistics are the ears and eyes of the Government.)

அமெரிக்கா, இரஷ்யா முதலிய நாடுகளிலெல்லாம் புள்ளி விவரங்களின் வளர்ச்சி தற்போது மிகவும் உச்ச நிலையிலுள்ளது. இப்போது நம்முடைய மத்திய, மாநில அரசுகளும் புள்ளி விவரத் துறை வளர்ச்சியில் மிகவும் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகின்றன. மேலும் நாம் வகுக்கும் திட்டங்களுக்கெல்லாம் மூல காரணமாகப் புள்ளி விவரங்கள் இருந்து வருகின்றன. எனவே திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமானால் புள்ளி விவரங்களின் தரம் அவசியம் உயர வேண்டும். புள்ளி விவரங்கள் பிழையுறுமாயின், புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படுகின்ற திட்டங்களும் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறுமல் போக நேரிடும். எனவேதான் நமது மாநில அரசு, புள்ளி விவரங்களின் தரத்தை உயர்த்தவும், புள்ளியியல் துறையை நல்ல சிறந்த முறையில் விரிவாக்கவும் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

தற்போது புள்ளியியல் தனித்துறையாக வளர்ச்சி பெற்றுப் பல்வேறு கலை, அறிவியல் ஆராய்ச்சிகளுக்கும் உதவி வருகின்றது. புள்ளி விவரங்களைக் கட்டுரையாளர் ஒருவர் கையாளும்போது நமது கருத்து அக்கட்டுரையின் பால் ஈர்க்கப்படுகிறது. மழை பொழிந்தாற் போலப் புள்ளி விவரங்களைப் பேச்சாளர், அள்ளி வீசும் போது மயங்கும் மக்கள், அவை உண்மையானவையா அல்லது பேச்சாளர் கற்பனையில் தோன்றியவையா என்று கூட ஆராய்வதில்லை. அந்த அளவிற்குப் புள்ளி விவரங்களுக்கு ஒரு கவர்ச்சி இருக்கிறது.



புள்ளி விவரங்களைக் கையாளாதவர்கள் இல்லை என்றே கூறி விடலாம். பொருளாதாரம், அரசியல், மன இயல், பொறியியல், கல்வி இயல், மருத்துவம், பௌதிகம், இரசாயனம், வான இயல், மற்றும் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டவர்களது ஆராய்ச்சிக்கும் புள்ளி விவரங்கள் பயன்படுகின்றன. பெருமளவில் பொருள்களைத் தோற்றுவிக்கும் தொழிற்சாலைகள் தங்கள் தயாரிப்புகளது தரம் குன்றாது பாதுகாக்க (Quality Control) புள்ளி விவரங்களையே நாடுகின்றன. இவைகள் மட்டும்தானா? நாட்டின் நலனுக்காகத் திட்டமிடும் அரசியலார், தொழிலைப் பெருக்க விழையும் தொழிலதிபர், மனித உயிர்க்குப் பணத்தால் பாதுகாப்பு அளிக்கும் இன்சூரன்ஸ் நிலையத்தினர், காலத்தை முன்கூட்டியே அறிவிக்கும் கால ஆராய்ச்சி நிபுணர்கள்—இவர்கள் எல்லாரும் புள்ளி விவரங்களைப் பெரும் அளவில் பயன்படுத்துபவர்கள்.

நம்மால் காண முடியாத தொலைவிலுள்ளவற்றைத் தொலைநோக்கி காட்டுகிறது. நம் எண்ண வரம்புக்கு மேற்பட்டுள்ள எண்ணிக்கைகளைத் தொகுத்துப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. புள்ளி விவரங்களை ஒரு நாட்டின் படத்துக்கு ஒப்பிடலாம். படத்தில் (map) எல்லாச் செய்திகளையும் குறித்தல் முடியாது. முக்கியமான சாலைகள், ஆறு, மலை, நகர் போன்ற ஒரு சில செய்திகளையே படத்தில் குறித்துக் காட்டலாம். ஓர் ஊரில் உள்ள மக்களது பண்பைப்பற்றியோ, இயற்கைக் காட்சிகளைப் பற்றியோ படத்தில் குறிக்க இயலாது. அக்குறிப்புகள் இல்லை என்பதனால் படத்தின் மதிப்பும், உபயோகமும் குறைவதுமில்லை. புள்ளி விவரங்கள் தெரிவிக்கும் செய்திகள், சில புள்ளி விவரங்களைக் காணும் போது, தனிப்பட்ட மனிதர்களது பண்பைக் காண முடியாது. இருப்பினும் அவற்றின் வரம்புக்குட்பட்டு புள்ளி விவரங்கள் பயன் அளிக்கின்றன.

புள்ளி விவரங்களைத் தொகுக்கும்போது பலவிதமான தற்காப்புக்களோடு சேகரிக்க வேண்டும். எடுத்துக் காட்டாக மழைக்கும், பயிர் வளத்துக்கும் உள்ள தொடர்பைப் பல நிலங்களில் கணக்கெடுப்பதாக வைத்துக் கொள்வோம். அந்தப் புள்ளி விவரங்களிலிருந்து ஒரு முடிவுக்கு வருமுன், மண்ணின் தரம், உரம், வெப்பம், காற்று போன்ற பல சூழ்நிலைகளையும் எண்ணியே முடிவு காண வேண்டும். இல்லையேல் முடிவு பிழையுறும்.

புள்ளி விவரங்களை மூன்று முறைகளில் தொகுக்கலாம். (1) புள்ளி விவர ஆய்வாளரே, தொடர்புடைய ஒவ்வொருவரையும் நேரில் கண்டு புள்ளி விவரச் செய்திகளைத் தொகுத்தல் நேர் முறையாகும். இது மிகவும் சிறப்பான முறையாகும். இருப்பினும் குறுகிய காலத்தில் பலரைச் சந்தித்துப் புள்ளி விவரங்கள் சேகரித்தல் இயலாத காரியம். (2) புள்ளி விவர ஆய்வாளர், புள்ளி விவரத்தைத் தொகுக்கும் வேலையைத்தானே நேரில் செய்யாது, அவர் சார்பாகத் திறமை மிக்க சில பிரதிநிதிகள் மூலமாகச் செய்யும் முறை களமுறை (Field method) ஆகும். இது மக்கள் கணக்கீடு (Census) போன்ற புள்ளியியல் ஆய்வுகளில் பயன்படுகின்றன. (3) கேள்வித்தாளைத் தனிப்பட்டோர்க்கு அஞ்சல் மூலம் அனுப்பிப் பதில் பெறுதல்தான் அஞ்சல் முறை (Postal method) ஆகும். ஆனால் இதில் பதில் அனுப்புவோர் போதிய அக்கறை காட்டுவதில்லை. எனவே புள்ளி விவரம் சேகரிக்க நாளாகும்.

பலருக்குப் புள்ளி விவர எண்கள் பேசும் செய்தியைக் கேட்கப்பொறுமையோ, ஆவலோ இருப்பதில்லை. கவர்ச்சியற்ற புள்ளி விவர எண்களைச் சுவைபட வழங்கும் முறை ஒன்று உள்ளது. படங்களின் துணையோடு புள்ளி விவரச் செய்திகளை விளக்குவது தான் அம்முறை. கசப்பு மருந்தைப் பொதி மருந்தாக (Capsule) வழங்குவதற்கு ஒப்பாகும் இம்முறை. கற்றலில் கேட்டலே நன்று! எண்களை நாம் கற்று ஆய்ந்து அறியும் கருத்தினைவிடப் படங்கள் கூறும் செய்தியே கவர்ச்சி வாய்ந்தது. மனத்திரையில் நிலைத்து நிற்கக் கூடியது. எண்களைப் பயில்கிறோம். படத்தினைப் பார்க்கிறோம். காட்சியினால் அறியும் செய்தியை எளிதில் மறவோம். அதுவும் எண்கள் கூறும் செய்தியில் சிக்கலுண்டு. படம் தரும் காட்சியே தெளிவுடையது; சுருக்கமானது. எனவே, மக்களுக்குப் புள்ளி விவரச் செய்திகளைத் தெரிவிக்கப் படங்கள் மிகச் சிறந்தவை. புள்ளி விவரப் படங்கள் வரைபடமாகவோ (Graphs) வடிவ உருவப் படங்களாகவோ (Geometrical Figures) இருக்கும்.

இனி, புள்ளி விவர அளவைகளைக் காண்போம். ஓர் ஆய்வுக்காகப் புள்ளி விவரங்கள் திரட்டப்படுகின்றன. கிடைப்பது ஒரு புள்ளி விவரத் திரள். அதனின்று உடனடியாக எந்த முடிவுக்கும் வர முடியாது. எனவே அந்தத் திரளை ஒழுங்கு செய்கிறோம்; பாகுபாடு செய்கின்றோம். பட்டியல் அமைக்கின்றோம். இதன் மூலமாகச் சில செய்திகள் சிறிது சிறிதாக உருவம் பெறுகின்றன. புள்ளி விவரப் படங்கள் அமைக்கின்றோம். மேலும் பல செய்திகள் புலனாகின்றன. மேலும் ஆராய வேண்டி, மையச் சார்பு அளவைகளின் கீழ் கூட்டுச் சராசரி, பெருக்குச் சராசரி, இசைச் சராசரி (Harmonic Mean) அரைமம் (Median) போன்ற அளவைகளையும், சிதறல் (Dispersion) அளவைகளின் கீழ், நிரை (Range), சராசரி விலக்கம், திட்ட விலக்கம் (Standard Deviation) ஆகிய

அளவைகளையும் கோட்ட அளவைகள் (Measures of skewness) போன்ற அளவைகளின் துணை கொண்டு, புள்ளி விவரங்களிலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வர வாய்ப்புண்டு. கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் யாவும் ஒரு மைய அளவைச் சார்ந்து அமைந்திருக்கின்றன. இந்த அளவைகளுக்குப் பொதுவான பெயர், மையச் சார்பு அளவைகள் என்பதாம். இந்த மைய அளவையின் இரு புறத்திலும் கூடுதலாகவோ, குறைவாகவோ மற்ற குறிப்புகள் எந்த வரம்புக்குள் சிதறி இருக்கின்றன என்பது பற்றிக் கணிக்கும் அளவைகளைச் சிதறல் அளவைகள் என்று கூறுகிறோம். மைய அளவுக்கு இருபுறமும் உள்ள குறிப்புகள் ஒரே சீராகப் பரவியுள்ளனவா என ஆராய்கின்றோம். இந்த இருவித இசைவின் திறத்தைக் கணிக்கும் அளவைகளைக் கோட்ட அளவைகள் என்கின்றோம்.

புள்ளி விவரங்கள் பேசுமா என்ற வினாவுக்கு, பேசும் என்ற பதில் கட்டாயம் கிடைக்கும். மிகப் பெரிய அளவில் உள்ள புள்ளி விவரங்களை எண்ண வரம்புக்கு உட்படுத்துவதுதான் புள்ளி இயலின் சிறப்பு. சராசரி போன்ற புள்ளி விவர அளவைகளைக் கணக்கிடுவதன் மூலம் புள்ளி விவரங்களைப் பேச வைக்க முடியும். அவை கூறும் செய்திகளிலிருந்து நமக்கு வேண்டிய முடிவுகளை வகுக்க இயலும். நாட்டின் மக்கள் கணக்கீட்டுப் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு பல முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டபோது அதில் பங்கு கொண்டு உழைத்த புள்ளி விவர நிபுணர்கள் பலர், புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு பேசிய பேச்சு புறக்கணிக்கப்பட முடியாத பேச்சாகும்.



எனவேதான், மதிப்புக்குரிய நமது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி போன்ற தலைவர்களெல்லாம், புள்ளி விவரங்களின் தரத்தை உயர்த்தவேண்டி உண்மையான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டுமென்று பேசி வருகின்றார்கள். அப்போதுதான் நம்முடைய நாட்டின் இயற்கை வளத்தையும், பொருளாதாரத்தையும் ஆராய்ந்து, விஞ்ஞான ரீதியிலான பொருளாதார சோஷலிஸ சமுதாயத்தை நிறுவ முடியும்.

புள்ளி விவரங்கள் பேசும் என்று முன்பு சொன்னோம். இப்போது சில புள்ளி விவரங்கள் என்ன சொல்லுகின்றன என்று பார்ப்போம். அகில இந்திய ரீதியில் கீழுள்ள சில புள்ளி விவரங்கள் ருசிகரமானவை; தமிழ் நாட்டின் சில சாதனைகள் சிந்திக்கத் தக்கவையாகும்.

இந்தியாவின் பரப்பு சுமார் 13,30,000 சதுர மைல்களாகும். (820 மில்லியன் அல்லது 82 கோடி ஏக்கர்கள்) அவற்றில் பயிர் செய்யும் பரப்பு சுமார் 330 மில்லியன் ஏக்கர்கள். இது மொத்தப் பரப்பில் 40 சத வீதமாகும்; 20 சத வீதம் பாசனம் பெறுகின்றது. இந்தியாவில் ஒருவரிடம் சராசரியாக உள்ள நிலத்தின் அளவு 1.5 ஏக்கர் என்றால், பயிரிடத் தகுந்த பரப்பு ஒரு ஏக்கர்; ஒருவர் பயிரிடும் நிகரப் பரப்பு 0.7 ஏக்கராகும்.

பயிரிடத் தக்க நிலம் (Culturable waste) இன்னும் 2.4 மில்லியன் ஹெக்டர்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்படாமலும், நடப்பு தரிசு (Current Fallows) 0.9 மில்லியன் ஹெக்டர்களும் உள்ளன என்பது கவனிக்கத் தக்கதாகும்.

தமிழ் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகை 1951-ல் 20·8 சத வீதம், 1961-ல் 31·4 சத வீதம்; தற்போது (1971-ல்) இது 39·39 சதவீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வெண்ணிக்கை அகில இந்தியா (29·35) சதவீதத்தை விட 10·04 சத வீதம் அதிகமாகும். தமிழக அரசு தனது மொத்த வருமானத்தில் ஏறக்குறைய 4-ல் ஒரு பங்கினைக் கல்வியின் வளர்ச்சிக்கெனச் செலவிடும் நோக்கம்



—நமது நாட்டின் செல்வமாம் குழந்தைகள் — இளைஞர்களின் வாழ்வு ஒளிமயமாக இருக்க வேண்டுமென்பதற்காக அல்லவா!

1961-ல், 5,600 ஆக இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1969-70-ல் 7,551 ஆக உயர்ந் துள்ளதும், அத் தொழிற்சாலை களில் பணிபுரிவோர் தொகை [illegible] லட்சம் பேர்களிலிருந்து 4·[illegible] லட்சம் பேர்களாக (அதாவது 38·5 சத வீதம் வேலை வாய்ப்பு உயர்வு) உயர்ந்திருக்கும் சாதனையைத் தான் மறுக்க இயலுமா!

1960-61-ல் ஒருவரின் தல வருமானம் (per capit income) ரூ. 355 ஆகவும் 1966-67-ல் ரூ. 527 ஆகவு இருந்தநிலைமாறி, 1969-70 ஆ ஆண்டில் ரூ. 622 ஆகவும் உயர் துள்ளதைப் பார்க்கும்போது சென்ற இரண்டு மூன்று ஆண் களில் மட்டும் சுமார் ரூ. 100 அ வுக்கு உயர்ந்துள்ளதாகத் தெரி வருகின்றது. அதன் பொரு என்ன? மக்களின் வாழ்க்கை தரம் உயர்ந்துகொண்டே வ கிறது என்பது நன்றாக விளங் கிறது அல்லவா!

எனவே, புள்ளி விவரங்க நம் எண்ணத்தை ஒரு வரம்புக் (Food for thought) உட்படுத் கின்றன. ஆகவே, ந றாகச் சிந்தித்துச் செயல் கின்றோம். அதனால் திட் வகுக்கின்றோம். அலுவல ளோடு, பொது மக்களும் துழைத்து, அரசு வகுத்தி திட்டங்களுக்கெல்லாம் உ நாடி போன்ற புள்ளி விவ களின் தரத்தை உயர்த்த புள்ளியியல் அளிக்கும் உண் களைப் புரிந்துகொண்டு மக்க வாழ்க்கைத் தரம் உயரவும் ப படுவோம்.



கருணையை நம்பினோர் கைவிடப்பட்டார்!

அன்புள்ள மணி,

' கருணையை நம்பினோர் கைவிடப் படார்! எனவே கருணையை நம்பு'! இதுதான் நான் உனக்குக்கூறும் அறிவுரை.

'' என்னடா இவன்! நிலத்தை விற்பதற்கு யோசனை கேட்டால் ''கருணையை நம்பினோர் கைவிடப் படார்!'' எனவே கருணையை நம்பு! என்று எழுதுகிறானே! கருணை என்று யாரைக் கூறுகி றான்? நமது முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களைக் கூறுகிறானோ? எனக்கும் கலைஞர் கருணாநிதிக்கும் என்ன தொடர்பு? ஒருவேளை கருணை நெல்லைப் பற்றிக் கூறுகின்றானோ? என்ற கேள்விகள் உன் மனத்தில் பிறக்கின்றன அல்லவா? அப்படிப்பட்ட கேள்விகள் உன் மனத்தில் தோன்ற வேண்டும் என்பதற்காகவே நான் இவ் வாறு எழுதினேன்.

கலைஞர் கருணாநிதி அவர் களையே நம்பு என்று கூறி யுள்ளதாக நீ நினைத்துக் கொண் டாலும் சரி, அல்லது ' கருணை' நெல்லை நம்பு என்று கூறியுள்ள தாக நீ நினைத்துக் கொண்டா லும் சரி இரண்டு கருத்துமே பொருத்தமுடையவைதான்.

காலமெல்லாம் உழைத்து, உருக்குலைந்து, ஓடாகி, கூனி, குறுகிப்போன ஏழை உழவர்கள் ஏற்றமுற்று நிமிர்ந்து நடக்க வேண்டும்! குழி விழுந்து ஒளி யிழந்துபோன ஏழை உழவர் களின் கண்களிலே ஒளி பிறக்க வேண்டும்! வயிற்றுக்கும் வாய்க் கும் பற்றாத நிலையிலே வாழ்ந்து வரும் எண்ணற்ற ஏழை உழவர் களின் வாழ்விலே வளம் சேர்க்க வேண்டும்! இருண்டு போன

அவர்களின் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலம் பிறக்க வேண்டும் என்பதற்காகத்தான் நமது தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். ஏழை உழவர்களின் வருவாயைப் பெருக்கிடவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் வேண்டிப் பல சலுகைகளையும், மானியங்களையும், கடனுதவிகளையும் அளித்து மிகு பயன் தரும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!" என்ற பேரறிஞர் அண்ணாவின் இலட்சியம் நிறைவேற, சமுதாயத்தின் அடித்தளத்திலே மிதிபட்டு, நசுங்கி, நடைப்பிணமாக வாழ்ந்து வரும் எளிய மக்களின் வாழ்வை வளம்படுத்த வேண்டும் என்பதற்காகவே நமது கலைஞர் அவர்கள் அரும்பாடுபட்டு வருகிறார்.

நமது கலைஞர் அவர்களது அரும் முயற்சியால் பிச்சைக்காரர்களுக்கும், தொழுநோயாளிகளுக்கும் கூட மறுவாழ்வு பிறக்கப்போகிறது என்பதை நினைக்கும்போது, உணவு உற்பத்தியைப் பெருக்க ஓயாது உழைக்கும் உழவர் பெருமக்களின் வாழ்விலும் ஒளிமயமான எதிர்காலம் பிறக்கப் போகிறது என்பதில் ஐயம் வேண்டாம்.

காவிரி ஆறு அளித்த வீரமும் தீரமும் அன்று கரிகால் சோழனை காவிரி யாற்றுக்குக் கரையெடுக்க வைத்தது. அதே காவிரி ஆறு அளித்த வீரமும், தீரமும் இன்று நமது கலைஞரை காவிரியாற்றை நவீன மயமாக்கும் அரும் பெரும் முயற்சியில் ஈடுபட வைத்துள்ளது. இம்முயற்சி வெற்றி பெறப் போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை! விரைவிலேயே வரவிருக்கிறது! அதன்பின் தஞ்சை மாவட்டத்தில் முப்போகமும் தப்பாமல் சாகுபடி செய்ய முடியும்.

அப்பொழுது "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது" என்ற பழமொழி வழக்கொழிந்து போய்விடும்! "மேழி பிடிக்கும் கை மேதினி ஆளும் கை!" என்ற புதுமொழி நிலைத்து விடும்.

எனவே, காவிரியாற்று நீர் பாயும் நிலங் கொண்ட நீ 'கலைஞர் கருணாநிதி அவர்களை நம்பினோர் கைவிடப்படார்!' எனவே கருணாவை நம்பு!' என்றே நான் கூறியுள்ளதாகக் கருதிக்கொண்டாலும், அது சிறப்பான பொருத்த முடையதாகவே அமையும்.

அதுபோலவே, 'கருணா நெல்லை நம்பினோர் கைவிடப்படார்! எனவே, கருணாவை நம்பு!' என்றே நான் கூறியுள்ளதாக நீ நினைத்துக் கொண்டாலும் அதுவும் சிறப்பான பொருத்த முடையதாகவே இருக்கும்.

எவ்வாறு நம் கலைஞர் தன்னை நம்பிய தமிழ் நாட்டுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வருகிறாரோ அதுபோலவே, கலைஞர் கருணாநிதி அவர்களது பெயரின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள 'கருணா' என்ற நெல்லும் உழவர் பெருமக்களின் வருவாயைப் பெருக்கி வாழ்க்கையைச் செழிக்கச் செய்யும்.

சென்ற ஆண்டு ஆடுதுறை-27 நெல்லை 10 ஏக்கரில் பயிரிட்டிருந்ததாகவும், அது அறுவடை சமயத்திலே சாய்ந்து விழுந்து விட்டதாகவும், அப்பொழுது பெய்த மழையினால் கதிர்கள் நீரில் மூழ்கி மணிகள் முளைத்துப் பெருஞ் சேதம் ஏற்பட்டு விட்டதாகவும், அதற்குப் பிறகே, நிலத்தை விற்று விட்டுத் தஞ்சாவூர் சென்று வியாபாரம் அல்லது தொழிலில் இறங்க வேண்டும்" என்ற முடிவுக்கு வந்து விட்டதாகவும் எழுதியுள்ளாய்.

"மூட்டைப் பூச்சிக்குப் பயந்து யாரோ ஒருவன் வீட்டையே கொளுத்தினானும்" அதுபோல் உள்ளது உன்னுடைய முடிவு.

உன் முடிவை நீ முன்னால் தெரிவித்திருந்தால் நான் உனக்கு ஓர் அறை கொடுத்திருப்பேன். நல்லவேளை தப்பித்துக் கொண்டாய்!

நண்பன் தவறான பாதையில் செல்லுகிறான் என்றால் அவனை அடித்தாவது திருத்த வேண்டும் என்ற கொள்கையுடையவன் நான் என்பது உனக்குத் தெரியும். எனவே நான் இவ்வாறு எழுதுவதைத் தவறாக நினைக்க மாட்டாய் என நினைக்கிறேன்.

நண்பன் துன்பப்படும் பொழுது, அவன் துன்பத்தைத் துடைக்க வேண்டியது நல்ல நண்பனின் கடமையாகும். ஒருவனுடைய ஆடை அவிழ்ந்து விடும்போது, தானாகவே இயங்கி அந்த ஆடையைப் பற்றி இழுத்து மீண்டும் இடுப்பில் சரியாகக் கட்டுவதற்கு உதவும் கைகளைப் போல நட்பு இருக்க வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை நட்புக்கு இலக்கணம் வகுத்துள்ளார். அதையும் நான் மறந்து விடவில்லை. உன் இடுக்கண் துடைக்க என்னால் ஆன உதவிகளைச் செய்கின்றேன். உனக்கு உள்ள கடன் 1000 ரூபாயையும் அடைக்கப் பணம் கொடுத்து உதவுகின்றேன். ஆனால் நீ இரு நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

"என்ன நிபந்தனையோ? தெரியவில்லையே! நிலத்தை எழுதிக் கேட்கிறானோ?" என்றெல்லாம் நீ நினைப்பது எனக்குத் தெரிகிறது.

பணத்திற்கு ஈடு கேட்கும் பண்பு கொண்டவனல்ல நான். நான்



சொல்லும் நிபந்தனைகள் என்னவென்றால், ஒன்று —நிலத்தை விற்றுவிடக் கூடாது என்பது; மற்றொன்று— இந்த ஆண்டில் ஆடுதுறை-27 நெல்லுக்குப் பதில் 'கருணா' நெல் பயிரிட வேண்டும் என்பது.



இந்த நிபந்தனைகளை விதிப்பதற்குக் காரணம், நீயும் என்னைப்போல் முன்னேற வேண்டும் என்பதுதான். ஐந்து ஏக்கர் நிலமுடைய நான் சென்ற ஆண்டு குறுவைப் பட்டத்தில் 5 ஏக்கரிலும் கருணா நெல் பயிரிட்டு, அதன் பின் தாளடியில் ஐ.ஆர். 5 பயிரிட்டு அறுவடை செய்தபின், மக்காச் சோளம் பயிரிட்டு ஒரே ஆண்டில் ரூபாய் 15,000 லாபம் எடுத்துள்ளேன். அதிலிருந்து ரூபாய் 10,000 முன்பணம் கட்டித் தவணை முறையில் ஒரு டிராக்டரும் வாங்கியுள்ளேன். இன்னொரு வடிமுனைக் குழாய்க் கிணறும், அமைக்கத் திட்டமிட்டுள்ளேன். என்னைப் போல் நீயும் பாடுபட்டு முன்னுக்கு வரவேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே தான் இரு நிபந்தனைகள் விதித்து உள்ளேன்.

இவ்விரு நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டால் உடனே பதில் எழுது. நான் பணத்துடன் அங்கு வந்து சேருகின்றேன். கருணா நெல்லின் சிறப்பு, சாகுபடி செய்யும் முறை ஆகியவைகளையும் கீழே எழுதியுள்ளேன். நீ படித்துப் பயனடைய வேண்டும்.

கருணாவின் சிறப்புகள்

ஆடுதுறை-27-யும், ஐ.ஆர்.8-யும் கரு இணைப்புச் செய்து உருவாக்கப்பட்டதே 'கருணா'. கருணா பயிர் குட்டையானது; செங்குத்தானது; ஐ.ஆர்.-8 நெல்லைப்போன்றது.

சுமாரான தூர்கட்டும் திறனுடையது; வளரும் பயிரின் நிறம் நல்ல கரும்பச்சையாக இருக்கும்.

தஞ்சை மாவட்டத்தில் ஐ.ஆர்-8 நெல்லிற்குப் பரிந்துரைக்கப்படும், ஏக்கருக்கு 50 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து என்ற விகிதத்திலும், ஆடுதுறை-27 நெல்லிற்குப் பரிந்துரைக்கப்படும், ஏக்கருக்கு 28 கிலோ தழைச்சத்து, 21 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து என்ற விகிதத்திலும் கருணா நெல்லிற்கு இரசாயன உரமிடலாம். இரண்டு அளவிலும் நல்ல மகசூல் கொடுக்கிறது.

மழையிலும் கருணா சாய்வதில்லை. கருணாவின் கதிர் ஆடுதுறை-27 போலவே தொங்கும்.

அரிசி வெண்மையாக இருக்கும்; நெல்லில் 72·6 சதம் அரிசி கிடைக்கும். கருணா அரிசியில் 10·58 சதம் புரதச் சத்து உள்ளது.

கருணா நெல் சாதாரணமாக ஏக்கருக்கு 2 டன் மகசூலுக்குக் குறையாமல் கொடுக்கும். ஆடுதுறை-27 நெல்லை விட ஏக்கருக்கு 600 கிலோ மகசூல் கூடுதலாகக் கிடைக்கும். ஐ.ஆர்-8 நெல்லிற்குப் பரிந்துரைக்கப்படும் அளவில் இரசாயன உரமிட்டு, தீவிர சாகுபடித் திட்ட அலுவலர்கள் கூறிய முறைப்படி கருணா பயிரிட்டதில் எனக்கு ஏக்கருக்கு 3,400 கிலோ வீதம் மகசூல் கிடைத்துள்ளது.

கருணா சாகுபடி குறிப்புகள் :

வயது—108 நாட்கள்.

விதைக்கும் பருவம்—ஜூன் 15-ஆம் தேதியிலிருந்து ஜூலை 15-ஆம் தேதிக்குள் (ஆனி மாதம் 1-ஆம் நாளிலிருந்து 31-ஆம் நாளுக்குள்) நாற்று விடுவதே சிறந்தது. மழைக்கு முன் அறுவடை செய்ய ஆனி 16-ஆம் நாளுக்குள் (ஜூன் 30-க்குள்) நாற்று விட்டு விடுவது நல்லது.

விதையளவு.—ஒரு ஏக்கர் நடவு செய்ய 18 கிலோ விதையை நாற்று விடவேண்டும்.

விதையுடன் மருந்து கலக்குதல்.—ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கரிம பாதரசக் கலவை மருந்து (அக்ரசான் அல்லது செரசான்) வீதம் கலந்து, பின் விதைக்கவும்.

நாற்றங்கால் தயாரித்தல்.—ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 சென்ட் நிலத்தில் நாற்று விட வேண்டும். பன்னிரண்டு சென்ட் நிலப்பரப்புக்கு 2 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு அல்லது ஒரு வண்டி தழை எரு இட வேண்டும். நாற்றங்காலை இருப்புக் கலப்பையால் நன்கு உழுது சேறுக்குவது நல்லது.

பயிர்ப்பாதுகாப்பு.— ஒரு ஏக்கருக்கு ஒரு தடவை மருந்து தெளிக்க பாரத்தியான் 200 மில்லி அல்லது என்ட்ரின் 400 மில்லி அல்லது பெனிட்ரோதியான் 250 மில்லி அல்லது பாஸ்பாமிடான் 110 மில்லி அல்லது என்டோசல்பான் 300 மில்லி பூச்சி கொல்லி மருந்தையும், சீராம் 200 கிராம் அல்லது டைத்தேன் இசட் 78-ல் 400 கிராம் அல்லது சினப் 400 கிராம் பூஞ்சாள மருந்தையும் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கையினால் இயக்கும் தெளிப்பானால் தெளிக்கலாம்.

இதுவரை கூறப்பட்டு வந்த நல்ல முறைகளை மேற்கொண்டு சாகுபடி செய்தால் நீயும் என்னைப்போல் ஏக்கருக்கு 3,400 கிலோ மகசூல் எடுக்க முடியும் என்பது திண்ணம். எனவே தயவுசெய்து நிலத்தை விற்கும் நினைவை விடு! "கருணாவை நம்பினோர் கைவிடப்படார்! கருணாவை நம்பு!"

உன் அன்பு,
மாணிக்கம்.



வெண்பாப் போட்டி

10. ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு !

● வங்கத்தின் சிங்கம் வலிமை ரகுமானுர்
தங்கச் சுதந்திரத்தைத் தாவென்ருர்—அங்கவர்கள்
ஆறெனப் பாய்ச்சும் குருதியே யாகியாவுக் (கு)
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—பி. எம். பக்கீர் முகம்மது, திருநெல்வேலி-5

எப்பாலார் வாழ்வுக்கும் ஏற்ற வழிவகைகள்
முப்பாலால் சொன்னனே மூதறிஞன்—அப்புலவன்
கூறிய செந்நா கொடுத்த திருக்குறளே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வாவாசியண்ணன், திருப்பனந்தாள்.

அண்ணு அறிஞர் அருந்தமிழில் வரைந்திட்ட
பண்ணெழுகும் நூல்கள் பலகாலம்—எண்ணியெண்ணி
ஏறுபோல் நம்தமிழர் எழுந்துநம்மை நாமாள
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—சோம. சிவப்பிரகாசம், நாச்சியாபுரம்.

நெஞ்சத்தைப் பண்டுத்தி நேர்மை வழிசென்று
வஞ்சமற்று வாழ மறுப்பதேன் ?—நஞ்சுணர்வால்
வேறுபட்டு மாய்கின்ருர் வெற்றுக்கோ மானிடர்க்கே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ந. செனுர்த்தனன், அரக்கோணம்.

செந்தமிழில் வள்ளுவனுர் செய்த திருக்குறளை
இந்தமண்ணில் வாழ்மக்கள் எல்லார்க்கும்—சொந்தமெனக்
கூறற்குக் காரணம் கூர்ந்தாய்வோர் காண்பரே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ஐ. அப்துல்காதர், எருமப்பட்டி.

சொல்வளமும் ஆய்வதற்குச் சோராப் பொருள்வளமும்
பல்வளமும் உண்டாக்கும் பார்தனிலே—இல்லாத
வேறறிவை இங்கே விளம்புவதேன் கல்விதான்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—காங்கேயன், வெங்கல்பாளையம்.

வள்ளுவரின் நேரியநல் வண்குறளும், ராமலிங்க
வள்ளல் அருட்பாவின் வாய்மொழியும்—அள்ளுசுவை
ஊறுமணி வாசகமும் உற்றதிரு மந்திரமும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வெண்ணெய் வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

சித்தர் பதினெண்மர் சீர்திருத்த நோக்குடைய
புத்தர் குறள்சோதி பூங்குன்றன்—தத்துவத்தைக்
கூறும் பெரியாரின் அண்ணுவின் கொள்கையெல்லாம்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ப. நாரண துரைக்கண்ணன், விழுப்புரம்.

ஏழ்மை நிலையினரும் ஏற்றநிறை கல்விபெறும்
வாழ்வை வளர்த்துயர்த்தும் வாழைதான்!—தாழ்வுணர் வாய்த்
தேறிநின்ற எத்தரைத் தீய்த்ததமிழ் நல்லரசே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு !

—எழிற்கோவன், ஒசூர்.

எங்கும் புகழ்மணக்கும் ஏற்றமிகு செந்தமிழின்
சங்க இலக்கியங்கள் தாம்என்றும்—செங்கதிர்போல்
மாறு இருளகற்றும் மாந்தரினை வாழவைக்கும் !
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வித்துவான் ஆ. சுப்புலட்சுமி, சென்னை-8.

பெரியாரின் பேச்சுயர்வும், பேரறிஞர் அண்ணு
நெறிமாருச் சொல்லும், நினைவும்,—அறிவான்ருேர்
பாரறியப் போற்றும் பசுந்தமிழர் ஆட்சியுந்தான்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ந. விசுவநாதன், திருச்சி-1.

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு பி. எம். பக்கீர் முகம்மது,
35, சின்னத் தெரு, மேலப்பாளையம்,
திருநெல்வேலி—5.

935

வீறுகொண்டு வென்றிகண்ட வீரத்தமிழ் மரபின்
பேறுபெற்ற பொய்யா மொழிப்புலவன்—ஊறின்றிக்
கூறுகின்ற பைந்தமிழ்தான் கூறலாம் இவ்வுலகில்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—சௌ. மதார் மைதீன், பொட்டல்புதூர்.

அப்பா ! மகனே ! அறம்பொருளின் பங்கூறும்
முப்பாலே என்றும் மொழிந்திடுவாய் !—ஒப்பேதும்
கூற இயலாக் குறள்தாமே என்றென்றும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—நெல்லை. ஆ. கணபதி, சென்னை-15.

தெய்வத் திருமறையாம் தேனூர் அருமொழியாம்
வையம் புகழும் வழிமுறையாம்—மென்மைநிதம்
ஊறுகின்ற ஊற்றும் திருக்குறளே நம்மவர்க்(கு)
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—செந்தமிழ் சிற்பி, சென்னை-5.

பத்தெட்டு மேல்கீழும் பாங்குடைய காப்பியமும்
முத்தென்ன ஆன்றோர்கள் முன்னாலும்—சத்தென்ன
நேரறிந்த சொற்களுடன் நேர்மையுமோர் வாய்மொழியும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—சடையப்பன், திருவெண்ணெய் நல்லூர்.

இத்தரையில் எத்தனையோ முத்தமிழ்ப் புத்தகங்கள்
கொத்தாகப் பூத்துக் குவிந்தாலும்—முத்தமிழ்த்
தேறலாம், வள்ளுவரின் தெய்வத் திருக்குறளே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—தொ. வளவன், புதுக்குளம்.

பொய்யென்னும் தீயில் புரளல் ; பிறர்க்கின்னா
செய்யல் ; முடங்கல் ; சினங்கொள்ளல்,—கைநீளல் ;
வேறொருவர் இல்லாளை வெஃகல் ; இவைதானா
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு ?

—விசாலாட்சி, மதுரை-11.

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடிகண் உள்ளவென வள்ளுவர்செய்—தண்டமிழே
வேறறிவு கொள்ள வெளிநாடு செல்வோர்க்கும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—புலவர். சோ. பா. வேதாரண்யம்.

சிந்தனையை ஊக்கிச் செயற்றிறத்தை உண்டாக்கும்
நந்தமிழில் நற்றெளிவும் நற்பண்பும்—விந்தைமிகு
பேரறிவை மாந்தர் பெறுகின்ற கல்வியொன்றே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—புலவர். ந. அ. அண்ணாமலை, நத்தம்.

கற்றலும் காண்டலும் கேட்டலும் கற்றபடி
நிற்றலும் நெஞ்சத் துணிவிலும்—சுற்றமெனக்
கூறறிவைக் கொள்ளுதலும் கொண்டால் இவையென்றும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—அ. ஆறுமுகம், எம்.ஏ., பி.டி., இலப்பைக்குடிக்காடு

போர்அறிவு காட்டும் புறப்பாட்டு ! நல்லறச்
சீர்காட்டும் தேன்குறள்! சங்கத்தின்—பேர்புகழைக்
கூறிய பேரறிஞர், கொள்கைக்'கோ' நம்அண்ணா
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—அ. சி. மணியன், அம்மையப்பன்

நன்றி மறவாமல் நன்றல்ல தென்னுமை (ல்)
அன்பின் குழவி அருள்நயந்தே—ஒன்றொரு
மாறுவணம் வாழ்ந்தார்சொல் மாண்பிலரை முன்னேற்று
மாறறி(வு) ஊட்டுகின்ற ஆறு.

—எழில்மாறன், நரிக்கல்பட்டி.

மலைபோல் மனம்படைத்த மாந்தராய் மாறிக்
கொலைகளவு செய்தாலும் ஓர்நாள்—நிலைகலங்க
ஆறாத் துயரால் அவர்நெஞ்சம் வாட்டுமதே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வெண்ணிகர், புதுவை.

பேருலகில் நந்தமிழைப் பெற்றியுறச் செய்திடவே
கூரறிவு சான்ற குணக்குன்றும்—பேரறிஞர்
கூறியதோர் நல்வழியே, கொள்கை நலஞ்சேர்ந்த
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—சி. இரத்தினவேலனர், சென்னை-19.

நமக்குத் தொழில்நா நிலம்போற்றும் ஆட்சி
சுமக்கும் பழியோதான் சொல்லில்—எமக்கேதான்
வேறு வினையிலையோ என்னுது காப்பதுவே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வெ. கிருட்டிணமூர்த்தி, சிவகாசி.

மண்புகழ வாழ்ந்து மறைந்ததமிழ் மாமேதை
அண்ணாவின் நூல்கள் அனைத்துமே—தண்டமிழ்த்
தேறல் அருவியெனச் செப்பிடுவர் ; ஆயினவை
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—இமஹுப் ஜான், எருமப்பட்டி.

இல்லையென்ற சொல்லே இலையாக்கி இவ்வுலகில்
எல்லாரும் எல்லாமும் பெற்றிடவே—பல்வளம்
ஆறதனை இந்நிலத்தில் ஓடச்செய் ! அஃதன்றோ
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—அ. சுந்தரேசன், கண்ணமங்கலம்.

நாடா வளம்பெருக்கி நம்நாட்டை மேல்நாட்டார்
தேடும் பொருளாக்கித் தேசமெல்லாம்—நாடிடவே
மாறுக் கலையுணர்வை மக்களிடம் தூண்டுவதே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ச. வீரப்பன், போதுபட்டி.

எல்லா உயிரினும் ஏற்றமுற்று மக்களுயிர்
நல்வாழ்வு வாழ்வதுவும் நானிலத்தே—கல்வியினால்
ஆறறிந்து விண்ணேகி அம்புலியை ஆய்வதுவும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—பெ. அண்ணாமலை, சென்னை-1.

புத்தொளிர் விஞ்ஞானம் பூத்துள்ள பூமலர்கள்
மெத்த விளையுதுபார் மேல்நாட்டில்—இத்தனையும்
தேறிடவே நம்முடைய தேமதுரத் தமிழன்றோ
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—முல்லைதாசன், சின்னாளப்பட்டி.

விண்வெளியை ஆளுவதும் வெண்மதியைக் கிட்டுவதும்
எண்ணரிய முன்னேற்றம் எய்துவதும்-தண்டமிழா !
தேறரிய தெய்வச் செயலன்று தேறுகநீ.
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—புலவர் ந. ஜாபர், சித்தையன்கோட்டை.

குடும்ப நலம்பேணிக் கொஞ்சுதமிழ் காத்து
வடுவில்லாப் பண்போடு வாழ்ந்து—கடுகியே
ஆறறியா மக்கட்கும் ஆறமைத்து வாழ்தலேநம்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வித்துவான் மு. சன்னாசி, ஆத்தூர்.

எந்நாளுந் தில்லியுடன் இன்னுற வேநிலவத்
தன்னாட்சி கோரும் தமிழ்நாட்டா—ரின்குரலைக்
கூறறிந்து கூறுகின்ற கொள்கைக் கலைஞரே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—குழ. அண்ணாமலை, கோவை.

எல்லாரும் இன்பங்கள் ஏற்றுநனி துய்த்தற்குப்
பல்வளங்கள் காணுதற்குப் பாடுபட்டார்—நல்லறங்கள்
கூறியிங்(கு) ஆளவந்தார் கொண்ட திருக்குறளே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வ. இராசசேகரன், பி.ஏ., சென்னை-7.

இத்தமிழ் நாட்டில் இனியதமிழ் கற்பவர்க்கே
எத்துணையோ நன்மைகள் ஏற்படுமே—சத்தியத்தில்
மாறியே செல்லாமல் மாண்புயர்த்தும் நந்தமிழே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வி. மு. உலகநாதன், சென்னை-7.

முத்தமிழோ முக்கனியின் சாறு ; குறளதில்
தித்திக்கும் தேனாறு ; தேனாற்றில்—நித்தமும்
முத்தெடுக்கும் நற்பேறு வேறெது! முப்பாலே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—மு. பூங்கோவன், சென்னை-1.

சந்திரனில் கால்வைத்தும் ; சாவிக்குப் பொட்டுவைக்கும்
விந்தை மனிதரை யென்செயலாம் ?—எந்தமிழா
மாறிவரும் மன்பதையில் விஞ்ஞானம் ஒன்றேதான்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—சோலை. இளம்பரிதி, சேயாறு.

திக்கனைத்தும் ஏவல்செயும் செல்வர்களும் சீர்நிலையைத்
தக்ககல்வி ஒன்றாலே தானடைவர்—மக்களெல்லாம்
தேறுதற்கு ஏற்ற தெளிநூல்கள் கற்கஅஃதே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—எம். முருகவேள், கவரப்பட்டு.

அள்ளுதோறும் அள்ளுதோறும் ஆவல் மிகுந்தெழத்
தெள்ளுதமி ழால்வடித்துத் தந்ததிரு—வள்ளுவனின்
பேரறிவுப் பெட்டகமாய்ப் பேணும் திருக்குறளே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—கு. பிரான்சிஸ், சென்னை-11

93

அண்ணல் மகாத்மா அளித்த அறிவுரையும்
அண்ணன் அறிஞனவன் அந்நாளில்—மண்வாழ
ஆறுதனின் ஒட்டமெனத் தந்த தமிழுரையும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—செ. சுந்தரவதனம், சென்னை-35.

அன்பின் திருவுருவே ! ஆழ்ந்தகன்ற பேரொளியே !
என்பும் பிறர்க்களிக்கும் எம்தலைவா—மன்னுபுகழ்ப்
பேறுபெற்ற பொன்னாட்டின் பேரறிஞர் அண்ணா நீ
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—புலவர் ப. பெருமாள் பெங்களூர்-17.

யாரென்ன சொன்னாலும் யாரென்று பாராமல்
சீரிருப்பின் கொள்ளும் சிறப்பதுவும்—ஆர்வமுறக்
கூறும் கருத்துக்களைக் கூர்த்தமதி ஆய்வதுவும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

நூலெல்லாம் நூலல்ல ; நுண்புலனால் வான்குறளை
நாளெல்லாம் ஆராய்ந்து நன்குணர்ந்து—காலமெல்லாம்
மாறு(து); அதன்வழியாய்ச் செல்லுதலே கல்வியாம்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு .

—இரா. தியாகராசன், பனையடிங்க குத்தகை.

காரிருளை நீக்கிக் களிப்பு தனையாக்கிப்
பாரினிலே நன்மை பரப்பிடவே—சீரணியின்
மாறெதுவு மில்லா வகையான நற்றொண்டும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—து. சுப்பராயலு, பி. ஏ., பெரியகுளம்.

தமிழ்த்தாயின் மூத்தமகன் தம்பியர்கள் கோடி
இமிழ்கடல்சூழ் நல்லுலகே ஏத்த—தமிழினிய
ஆறறிவும் ஒருருவாய் ஆனஅண்ணா சொல்லெல்லாம்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—என். சி. கிருஷ்ணசாமி, பொன்மலை

நெஞ்சைப் பிளக்கின்ற நீள்வறுமைத் துன்பத்தில்
பஞ்சையாய் வாடிடுவோர் பாடகற்றி—அஞ்சலென
வீறுடனே காக்கின்ற மேன்மையுறு பண்பொருவர்க்(கு)
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—ஜி. வி. அர்த்தநாரி, வேலூர்.

பழமையெனும் சேற்றில் படுத்துப் புரண்டே
வடிவிழந்த வாழ்வில் வழுக்கிக்—குழைந்துநிதம்
ஊறித் திளைத்தல் ஒழிக்கும் முதல்வர்சொல்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—கா. நாகேஸ்வரன், திருத்தணி.

அண்ணல்நம் காந்தி அறவழியைப் பின்பற்றி
கண்ணியமாய்த் தன்கடமை தாமாற்றி—விண்ணடைந்த
பேரறிஞர் அண்ணாவின் பேரரசே மக்களுக்(கு)
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வை. நடராசன், திருமலைராயன்பட்டி.

மக்களையே காணமல் வாழ்ந்தவனைப் பேசென்றால்
விக்கலல்லால் வேறென் விளம்புவான்—மிக்குயர்ந்த
ஆறறிந்து மக்களொடு வாழுமுறை கூறுவதே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு .

—பாளை. மி. நோயல். நெல்லை-2.

அறிவியல் நூலும் ; அறநெறியும் ; நெஞ்சில்
குறட்கருத்தும் நீங்காது கொண்டு ;—பிறர்போற்றும்
பேறுபல காணப் பகுத்தறியும் நன்னூலும்
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—மு. வில்லவன், திண்டுக்கல்.

மண்ணிலே வாழ்பவர் மாய்வதைக் கண்டவன்
விண்ணிலே தங்க விரும்பினான்—எண்ணியதை
வேறறிவால் பெற்றதல்ல விஞ்ஞானம் என்பதே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி
நல்லறிவு பெற்றிருந்த நற்றமிழில்—வல்லோர்கள்
தேறிய நூல்களில் தீந்தமிழ்க் காப்பியமே
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு.

—இரா. தேன்மொழியான், தாராபுரம்.

மதியால் மதிமிதித்த மாந்தரிங்குத் தீய
சதிபுரிந்து போரிட்டுஞ் சாவார்—அதற்கேதோ
கூறிடுவார் சாக்குகளும் கூச்சமின்றி ; ஈண்டிதுவோ
ஆறறிவு ஊட்டுகின்ற ஆறு ?

—தமிழ்க்கீரன், தர்மபுரி.

மாணவர் அரங்கம்

அந்த நாள் வருமோ?

தமிழ் நாட்டின் நெற்களஞ்சிய மாம் தஞ்சை மாவட்டத்தில் வங்கக் கடலோரம் அமைந்துள்ளது அதிராம்பட்டினம். 'எம்மதமும் சம்மதமே' என்னும் முதுமொழிக்கேற்ப அவ்வூரில் எல்லாச் சமயத்தவர்களும் வாழ்கின்றனர். அவர்கள் கல்வியறிவில் சிறப்புற வேண்டி, காதிர்மொகைதீன் என்னும் நல்லார் ஒருவர் தன் நினைவில் ஒரு கல்லூரியினை நிறுவியுள்ளார். அதன் தோற்றப் பொலிவும், அமைந்துள்ள இடமும் தென்றல் வீசும் சரித்திரப் புகழ் வாய்ந்தவை. அதில் பயிலும் மாணவர்களும், பயிற்சிதரும் ஆசிரியர்களும் தமிழ் நாட்டின் பல் வேறுபட்ட இடங்களைச் சேர்ந்தவர்கள். எனவே பல்வேறுபட்ட செய்திகளையும், கருத்துக்களையும், நிகழ்ச்சிகளையும் அங்கு ஒருமித்த முறையில் பெற இயலுகின்றது. எனவே வந்தோரை வாழவைக்கும் அக்கல்லூரியினை மறத்தல் இயலாத செயலாகும்.

இவ்விதச் சிறப்புகளையும் பெற்ற அக்கல்லூரியில் பயிலும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது. அந்த நாள் முதல் என் கல்லூரி வாழ்க்கையும் தொடங்கியது. அன்றொருநாள் என் பொருளாதாரப் பேராசிரியர் என் பிரிவு மாணவர்கள் அனைவரையும் மறுநாள் காலை ஏழு மணிக்குக் கல்லூரிக்கு வரும்படி பணித்தார். நாங்களும் காரணத்தை வினவினோம். அவரும், அருகிலுள்ள கிராமத்திற்குச் சென்று, அங்குள்ள மக்களுக்கு நவீனச் சாகுபடி முறையினைப் புகட்டியும், பொருளாதாரப் புள்ளி விவரங்களையும் (Socio-Economic Survey) சேகரித்து வர வேண்டும் என்றார்.

அவ்வாறே நாங்கள் அனைவரும் மறுநாள் கிளம்பி, அருகிலுள்ள கிராமத்தினை அடைந்தோம். பின், மக்களைக் காண வேண்டி, எங்களுக்குள் சில பிரிவுகளாகப் பிரிந்து சென்றோம். அங்கு வாழ் பாமர மக்களில் பலர், எங்களைக்கண்டு அஞ்சி மறைந்து விட்டனர். சிலர் ஓடி விட்டனர். ஒரு சிலரே ஊரில் மிஞ்சினர். அவர்களிடம் அதன் காரணத்தை வினவியபோது, எங்களை அரசாங்க அலுவலர்கள் என்றும், நெல் கொள் முதல் செய்ய வந்துள்ளனர் என்றும் அவர்கள் நினைத்து அவ்வாறு செய்தனர் என்று கூறினர். பல தாய்மார்கள் தம் குடும்ப அங்கத்தினர்களின் எண்ணிக்கையினைக் கூடச் சரியானபடி கூற வில்லை. அங்குள்ளோரின் வருட வருமானம், செலவு ஆகியவற்றைக் கேட்டபோது எல்லோரும் கடனுளியே என்றும் கூறினர்.

பின் நாங்களும் வேண்டியவற்றைச் சேகரித்துக் கொண்டு, அவர்களின் தேவையினையும், குடும்பக் கட்டுப்பாடு, நவீன சாகுபடி, நவீன உரமிடுதல், முறைகளை அவர்களுக்கு விளக்கிக் கூறிவிட்டு மகிழ்வுடன் வீடு திரும்பிய அந்த நாள் மீண்டும் வந்திடாதோ!

—மு. கிருட்டிணன்

3
6
1971
பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்
40
பிச்சைக்காரர்
மறுவாழ்வு
பிறந்தநாள்
முதல்வரை இல்லத்தில் வாழ்த்த வந்தோர் பணம் தந்து மாலையிட்டனர்
ஆளுநர்
இல்லம் நாடி வந்த சின்னஞ் சிறு கடைக்காரர்களிடம் முதல்வர் துண்டு ஏந்திப் பணம் பெற்றார்.

பிச்சைக்காரர் நல் வாழ்வு நிதிக்காக பரிசுச் சீட்டு கிடைக்கும்
பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதி திரட்டும் திட்டத்தினைத் துவக்கி வைத்தார்.
பிச்சைக்காரர் நல் வாழ்வு நிதி அட்டைகள் கிடைக்கும்.
சென்னை மாநகர ஷெரீப், மேயர் ஆகியோரடங்கிய நகர மக்கள் குழுவினர் தனக்கு வழங்கிய 1 லட்சரூபாயை முதல்வர், பிச்சைக் காரர் மறுவாழ்வு நிதியில் சேர்த்துக் கொண்டார்.
கலைஞர் வாழ்க!
உங்கள் வாழ்வு மலர இதோ 5 லட்சம்!
5 லட்சரூபாய்
முதல்வர் பிறந்தநாளான 3-6-71 அன்று ஒருநாளில் மட்டும் பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதிக்கு ஏறத்தாழ 5 லட்சரூபாய் கிட்டிற்று.
"இன்னும் 5 ஆண்டுகளி தமிழகத்தில் பிச்சைக் காரர்களே இல்லையெனும் நிலையினை ஏற்படுத்துவோ என முதல்வர் சூளுரைத்தார்.

பார்த்தோம் படித்தோம்

பயண இலக்கியம்

அயல்நாடான நெதர்லாந்து நாட்டுக்குள் நீலக்கடல் புகுந்து அதை விழுங்கிய செய்தியை, தமிழகத்தை முன்பொருமுறை இமிழ்கடல் இரையாக்கிக் கொண்ட செய்தியுடன் இணைத்து எழுதியிருக்கும் முதல்வரின் பயணக்கட்டுரையில் இலக்கிய மணம் கமழ்கிறது.

—எஸ். சுப்பையா, மதுரை.

ஒருமைப்பாட்டு உண(ர்)வோ ?

தமிழரசு இதழில் கலைஞர் அவர்களுடைய படமும், " சிற்றூர் " கவிதையும் பார்த்தும், படித்தும் ரசித்தேன். ஆனால் "மகளிர் பகுதி "யில் சமையல் குறிப்பு பற்றித்தரப்படுகின்ற ... களை நான் தவருமல் ஒவ்வொரு இதழிலும் கண்டு வருகின்றேன். அவை ஒரே வடநாட்டு உணவுப் பொருள்களாகவே காட்சி அளிக்கின்றன. இனி வரும் இதழ்களில் தமிழ் நாட்டின் வழக்கில் உள்ள சில உணவுப் பொருள்பற்றி வெளியிடுமாறு மகளிர் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

-எல். மங்கள குமாரி, எம்.எஸ்சி.
சென்னை-33.

அன்னையர் முன்னேற்றம் !

குடும்பநலப் பிரச்சாரம் மாபெரும் வெற்றியை எட்டிப் பிடித்திருக்கிறது என்னும் செய்தியை " சிகிச்சையின்றித் திரும்பிச் செல்லோம் " என்ற கட்டுரை தெரிவித்திருக்கிறது. அன்னைக்குலம் இந்தக் காலத்தில் வெகுவாக முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைக் கட்டுரை தெரிவிக்கிறது

—கே. ஜெயராமன், தர்மபுரி.

கோரிக்கையை நிறைவேற்றுக !

' தமிழரசு ' வெண்பாப் போட்டியினைத் தொடங்கியது, என் போன்ற இளங்கவிஞர்களை ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காகத்தான் என்று நான் கருதுகிறேன். எத்தனையோ கவிஞர்கள் தங்களுடைய வெண்பாக்கள் இடம்பெறவில்லையே என்ற ஏக்கத்தால் எத்தனையோ கடிதங்கள் ஆசிரியருக்கு அனுப்பியிருக்கிருர்கள். நானே நான்காவது தடவையாக இக்கடிதத்தை எழுதுகிறேன். எங்கள் கோரிக்கை—வெண்பாப் போட்டிக்கு அதிகப் பக்கங்கள் ஒதுக்க வேண்டுமென்பதே! எங்களின் கோரிக்கையினை விரைவில் நிறைவேற்றி வைப்பீர்களா?

—புலவர் சீராமுலு, காரைக்கால்

ஆயிரமும் லட்சமும்

"நமது நிலை'—இலவச இணைப்பைத் தந்திருக்கும் தமிழரசுக்கு ஆயிரக் கணக்கில் நன்றி தெரிவிக்கலாம் என்று தான் தோன்றுகிறது. இத்தகைய இணைப்பை ஒவ்வொரு இதழிலும் கொடுத்தால் லட்சக் கணக்கில் நன்றி தெரிவிப்போம்.

—ஏ. ஆர். சீதாபதி, தென்காசி.

சிற்றூருக்குப் பாராட்டு

சிற்றூரை நேரில் சென்று பார்ப்பது" போன்ற உணர்வே ஏற்பட்டது, அந்தக் கவிதையைப் படிக்கும்போது! வாழ்க சிற்றூர்.

—எம். மோகன சுந்தரம்,
திருப்பூர்.

பாராட்ட அறியோம் !

கிராம மக்களின் நல்வாழ்விற்காக நடமாடும் மருத்துவமனைகளை ஏற்படுத்தி, கிராம மக்களுக்கு வேண்டிய பல சிகிச்சைகளைச் சீரிய முறையில் அரசு செய்து வருகிறது என்பதை ' மக்களை நாடி வரும் மருத்துவமனை ' என்ற கட்டுரை எடுத்துக் காட்டுகிறது. ஏழை கிராம மக்களுக்கு உதவுவது மட்டுமல்லாமல், மருத்துவக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்களுக்கும், இளம் மருத்துவர்களுக்கும் கிராம மக்களைப் பற்றியும், கிராமச் சூழ்நிலைகளைப் பற்றியும் இத்திட்டம் விளக்குகிறது. மருத்துவ வசதி அளிப்பது மட்டுமின்றி, பொதுச்சுகாதாரம், தொற்றுநோய்களைத் தடுக்கும் முறை போன்றவற்றையும் இத்திட்டம் காட்டுகிறது. ஏழை கிராம மக்களுக்குச் சேவை செய்து வரும் இந்த அரசின் திட்டத்தினை எப்படிப் பாராட்டுவது என எனக்குத் தோன்றவில்லை.

—என். அப்பர்சுந்தரம், கிளியூர்

குறுமிளகின் பெரும்புகழ் !

நாகை மருத்துவர் நாராயணசாமி தம்முடைய " ஐந்தறைப் பெட்டியில் அருமை அமிழ்தம் " என்ற கட்டுரையில் மிளகைப் பற்றியும், அதன் வகைகள், உபயோகம் போன்றவைகளைப் பற்றியும், பலநோய்களுக்கு அது அளிக்கின்ற சிகிச்சையினையும் வாசகர்களுக்கு எளியமுறையில் விளக்கியிருக்கிருர். மருத்துவருக்கு வாசகர்கள் சார்பில் என் நன்றி.

—எஸ். நடராசன், சீர்காழி.

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1

பதிவு எண். M 8657



பிச்சைக்காரர்

மறுவாழ்வு நிதிக்காக

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் வாரி வழங்கிடும் ஏராளப் பரிசுகள்! மொத்தப் பரிசுத் தொகை:

38 லட்சம் ரூபாய். 3333 பரிசுகள்

ஜூன் 3ல் முதல்வர் பிறந்த நாளில் 33வது குலுக்கல் துவக்கம்

சிறப்புப் பரிசுகள்: ஒரு முதற் பரிசு 10 லட்சம் ரூபாய்

- ஒரு இரண்டாவது பரிசு 2 லட்சம் ரூபாய் • ஒரு மூன்றாவது பரிசு 1 லட்சம் ரூபாய்
- 30 நான்காவது பரிசுகள் (ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபாய்) ... 3 லட்சம் ரூபாய்

100 பேருக்கு ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 5000 ரூபாய்
100 பேருக்கு ஆறாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 3000 ரூபாய்
100 பேருக்கு ஏழாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 2000 ரூபாய்
1000 பேருக்கு எட்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 1000 ரூபாய்
2000 பேருக்கு ஒன்பதாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 100 ரூபாய்

துவக்கம் ஜூன் 3 குலுக்கல்: 12-7-1971

இதுவரை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் உருவாக்கிய லட்சாதிபதிகள் எண்ணிக்கை: 245

வாங்குங்கள் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9.
10 வரிசைகள் வெளியிடப்பட்டுள்ளது
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு, சென்னை-2

10 வரிசைகள்
இவ்வளவு பரிசுகளுக்கும்
உரிய சீட்டு
ஒன்றின் விலை ரூ 1/- தான்

செலவு ஒரு ரூபாய்

வரவோ பல லட்ச ரூபாய்